மெமோரியல்

மலர் 7 2004



MEMORIAL

VOL VII

மெமோறியல்

மலர் 7



168வது ஆண்டு நிறைவு

யா/ மானிப்பாய் மெமோறியல் கல்லூரி
மானிப்பாய்

12-06-2004

கல்லூரிக்கீதம்

இராகம் : மத்தியமாவதி தாளம்: ஏகம்

பல்லவி

வாழ்க மெமோறியல் வாழிய வாழிய
வாழிய வேயென வாழ்த்திடுவோம்

அனுபல்லவி

பாவலராய் நாவலராய்
பாரினிலே மேலவராய்
பண்பும் கலையமுதும் என்றும் எமக்களிக்கும்
இன்பத்தாயின் பாதமே என்றும் மனதுள் வைத்து
வாழ்த்திடுவோம் வாழ்த்திடுவோம்

சரணங்கள்

அன்பாய் இலக்கணமும் இன்பமாய் இலக்கியமும்
பைம்பொன் தமிழ்மொழியும் எண்கண் கணிதமுடன்
முத்தமிழும் சித்திரமும்
கைத்தொழிலும் ஆங்கிலமும்
பூதப்பௌதீகமும் விஞ்ஞானம் பிறமொழியும்
பொங்குங் கலைக் கோயிலென் றெங்கும் முரசொலிக்க
வாழ்த்திடுவோம் வாழ்த்திடுவோம்

எழுத்தாரறிவிப்பாரோ அவரே யிறைவனென்று
மனம் வாக்குக் காயத்தாலே தினமே துதித்திடுவோம்
மான மொடு வீரமுடன்
தேசமதைக் காத்திடவே
மக்கள் சுதந்திரத்தைப் பேணும் கல்வியறிவைத்
தந்தே தயைபுரியும் எம்தாய் பாதம் பணிந்து
வாழ்த்திடுவோம் வாழ்த்திடுவோம்

கலையே தவததாயென்று தினமே கணமாகிலும்
அலையா மனத்திருத்தி அவள் பாதமே நினைந்து
தேமதுர தேன் பொழியும்
பாக்களினால் பாடியே நாம்
சித்தம் சுத்தமுடன் மெய்பக்தி பணிவொடு நம்
அன்னை பெருமைக் கொரு பின்னம் வராமல் காத்து
வாழ்த்திடுவோம் வாழ்த்திடுவோம்

இயற்றி மெட்டமைத்தவர் திரு. ஐயாக்கண்ணுதேசிகர்



எமது பாடசாலையின்

பிரார்த்தனைக் கூடங்கள்



யாழ்/ மானிப்பாய் மெமோரியல்
கல்லூரி மலர்
2001 - 2003

காப்பாளர்

திரு. அ. மு. அருணாசலம் (அதிபர் இ.அ.சே. தரம் –1)

மலர் ஆசிரியர்

திரு. நா. பாலகிருஷ்ணன்

மலர்க்குழு

திரு. சி. சண்முகநாதன் (உபஅதிபர்) தலைவர்
திரு இ.யோ. லெஸ்லி (செயலாளர்)
திரு. த. சிவஞானம் (பொருளாளர்)
திரு. க. சிவனேசன்
திரு. சொ. ஜெயவீரசிங்கம்
திருமதி வி.ஜே. பை. மூர்த்தி
திருமதி ப. முருகதாஸ்
செல்வி சி. சிற்றம்பலம்
திருமதி ம. இளமுருகன்
திருமதி சு. அருள்வதனன்
திருமதி ப. உதயகுமார்

ஆலோசகர் குழு

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
பழைய மாணவர் சங்கம்
பாடசாலை நலன் விரும்பிகள்
புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தினர்

யா/ மானிப்பாய் மெமோறியல் கல்லூரி

மானிப்பாய்

168வது ஆண்டு நிறைவு மலர் வெளியீடு

பரிசளிப்பு விழா ~ 2004

இடம்	:	கல்லூரி அரங்கு
காலம்	:	30-10-2004 சனிக்கிழமை
நேரம்	:	பி.ப. 2.30 மணி
தலைவர்	:	திரு. அ.மு. அருணாசலம் (அதிபர்)
முதன்மை விருந்தினர்	:	திரு. ப. விக்கினேஸ்வரன் வலயக் கல்விப்பணிப்பாளர், யாழ் வலயம்.
விசேட விருந்தினர்	:	திரு. க. அருண் ஆசிரியர் தமிழீழக் கல்விக்கழக துணைப்பொறுப்பாளர் தமிழீழம்
சிறப்பு விருந்தினர்	:	திரு. க. தனபாலசிங்கம் கோட்டக் கல்விப்பணிப்பாளர், சண்டிலிப்பாய்
மலர் வெளியீடும் வெளியீட்டுரையும்	:	சைவப் புலவர் திரு. சு. செல்லத்துரை
மலர் ஆய்வுரை	:	"செஞ்சொற்செல்வர்" திரு. ஆறு. திருமுருகன்
பரிசு வழங்கல்	:	திருமதி தவமணி விக்கினேஸ்வரன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்,
பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள்.
யா/ மானிப்பாய் மெமோறியல் கல்லூரி

OUR PRINCIPAL



MR.A.M. ARUNASALAM SLPS.I



சமர்ப்பணம்

மானிப்பாய் மெமோறியல் அன்னையின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியவராக திகழ்ந்தவர் அமரர் வே. சுந்தரதாஸ் அவர்கள். அன்னையின் மடியில் ஆசிரியராக, உப அதிபராக இருந்து அதிபராக கடமையாற்றிய காலங்கள் எமது கல்லூரியின் சுந்தரதாஸ் யுகமாகவே அமைந்திருந்தன. சாதி, மத சமுதாய நெரிசல்களை உடைத்தெறிந்து சமத்துவத்தை ஏற்படுத்திய உத்தம சீலராகத் திகழ்ந்து, இப் பாரெல்லாம் பரந்து வாழும் அன்னையின் புதல்வர்களுக்கு அறிவுச் செல்வத்தோடு நிலையான புகழையும் ஏற்படுத்திக் கொடுத்த கடமை வீரராக திகழ்ந்திருந்ததோடு முயற்சி திருவினையாக்கும் என்ற பொன்மொழிக்கு உரம் ஊட்டும் வகையில் முயற்சி செய் அதற்கு பயிற்சி கொடு அது உனக்கு உயர்ச்சி தரும் என்ற தத்துவ சித்தாந்தத்தை மாணவர் அகங்களில் ஆழமாகப் பதித்து நிறைவான வாழ்வு என்ற எம் அன்னையின் மகுட வாக்கியத்துக்கு உயிர் கொடுத்து வாழ வைத்த உத்தமர். கடல் கடந்து சென்றிருந்த வேளையிலும், தம் கனவிலும் நினைவிலும் எம் மெமோறியல் அன்னையின் உயர்ச்சியையே நோக்காகக் கொண்டு இறுதிவரை உதவிய வள்ளல் பெரு மகன் **அமரர் சுந்தரதாஸ்** ஐயா அவர்களுக்கு இன்றலர்ந்த மெமோறியல் மலர் - 7 என்னும் இப் பொன்மலர் சமர்ப்பணம்.

எமோரியல் அன்னையின் இதய அஞ்சலிகள்

1. எமது கல்லூரியின் பழைய மாணவனும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபரும் பிரபல கல்விமானுமான அமரர் A.A. போல்

2. எமது கல்லூரியின் பகுதிநேர ஆங்கில ஆசிரியராக கண்ணியத்துடனும், கடமை உணர்வுடனும், பணியாற்றிய ஓய்வு பெற்ற அமரர் இராஜநாயகம்

3. மானிப்பாயை பிறப்பிடமாகக் கொண்டவரும் எமது கல்லூரியின் பழைய மாணவியும், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினருமான தவமணி குணராசா

4. 18-05-2003ல் இறைபதமடைந்த எமது கல்லூரியின் தரம் 10 மாணவன் அஜந்தன்

5. வலிகாமம் கல்வி வலைய காரியாலய ஊழியராக கடமையாற்றி இறைவனடி சேர்ந்த உதயன் (வசந்தன்)

ஆகியோருக்கு எமது

இதயபூர்வமான அஞ்சலிகளைத்

தெரிவித்துக் கொள்கின்றோம்.

சமர்ப்பணம்



அமரர்

வேலுப்பிள்ளை சுந்தரதாஸ்

அதிபர்

1979 - 1983





கலைக்காக வாழ்ந்து காட்டிய

இசை மேதை கவிமாமணிக்கு

எமது கண்ணீர்ப் பூக்கள்

மகாவித்துவான் வீரமணி ஐயாவின் இழப்பு தமிழ் கலையுலகம் சந்தித்திருக்கும் பதிலீடு இல்லாத பெரும் இழப்பாகும். இந் நாட்டில் இசையையும், பரதக்கலை யையும் உன்னதமான தரத்தை நோக்கி வளர்ப்பதற்கு அயராது உழைத்த கலைக்குரியவராக அவர் விளங்கினார். அண்மையில் இலங்கைக்கு வந்த அடையார் இலட்சு – மணன் அவர் இந்நாட்டின் பரதநடன வளர்ச்சியையும் தர உன்னதங்களையும் கண்டு பாராட்டிய வேளை அந்த பெரும் பணியில் ஒன்றிணைந்து உழைத்தவர்களுள் தலைமகனாக பணியாற்றிய பெரும் பங்கு ஐயா அவர்களுக்கு உண்டு. கலைக்காக வாழ்தல், கலைஞர்களை ஊக்குவித்தல், கலை வாழ்க்கைக்கும் சமூக வாழ்க்கைக்கும் இடையே வேறுபாடு காணாது இன்புறுதல் முதலான பணிகளை அகமும், புறமும் மலர ஐயா அவர்கள் மேற்கொண்டு வந்தார்கள். தமிழ்மொழியில் பெருந்தொகையானதும் தரமானதுமான கீர்த்தனைகளை பல்வேறு அபூர்வ ராகங்களில் அமைத்துத் தந்த பெருமையும் ஐயாவுக்கு உரியதாகும். தமிழில் நாட்டியம் வளர்வதற்கு பலமான அடித்தளத்தை அமைத்து பல மாணவர்களை உருவாக்கியதோடு நாட்டிய நாடகங்களையும் ஆழ்ந்த மரபுகளை அடியொற்றி வளர்த்துக் கொண்டதோடு விடுதலைக் கனவோடும் கலைத்தாகத்தோடும் இறுதிவரை உழைத்த இயல் இசை வாரிதி ஐயாவின் நினைவுகள் கலை உலகினால் மறக்கப்பட முடியாத பதிவுகளாகும்.

கலைப்பேரசு அமரர் ஏ.ரி. பொன்னுத்துரைக்கு

எமது இதய அஞ்சலிகள்

குரும்பசிட்டி மண்ணிலே பிறந்து அந்த மண்ணுக்கே உரிய கிராமிய பண்பாட்டுப் பழக்கவழக்கங்களோடு வளர்ந்து 1958ம் ஆண்டு பட்டதாரிப்பட்டத்துடன் காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரியில் தனது முதலாவது ஆசிரியத் தொழிலை ஆரம்பித்த காலத்திலிருந்து பாடசாலைகளில் நாட்கக் கல்வி பற்றி அரசு சிந்திக்காத காலத்திலேயே மாணவர்களுக்கு இடையே நாடகப் போட்டிகளை வைத்து நாடகக்கலையை வளர்த்துக் கொண்ட பெருமைக்குரியவர் அமரர் ஏ.ரி. பொன்னுத்துரை. இவர் பல நாடகங்களை எழுதியும், நடித்தும் புகழ் பெற்றவர். குமணன், நிறைகுடம், தாளக்காவடி, இராமாயண சோகங்கள் பத்தாயிரம் என பல சமூக இதிகாச நாடகங்களில் நடித்துப் பெருமை சேர்த்தவராக அமைந்திருக்கிறார். சிறு பாத்திரமாக இருந்தாலும் கனகச்சிதமாக செய்து முடிக்கும் ஆற்றல் மிக்க கலைஞராக ஏ.ரி பொன்னத்துரை ஐயா அவர்கள் திகழ்ந்திருக்கின்றார்



வானொலி நாடகங்கள் பல எழுதியும் நடித்தும் பெருமை சேர்த்தவராக ஏ.ரீ. பொன்னுத்துரை திகழ்ந்திருக்கின்றார். கலையரசு சொர்ணலிங்கம், (தழந்தை ம. சண்முகலிங்கம், விமலா சின்னத்தம்பி, ஏ.ரீ. பொன்னுத்துரை என ''சானா''வின் ஏற்பாட்டில் 5,6. நாடகங்களை வானொலிக்காக பதிவு செய்தனர். ஆனால் இந் நாடகங்கள் எல்லாவற்றிலும் ஏ.ரீ. பொன்னுத்துரையின் பங்களிப்பு அதிகமாக காணப்பட்டிருக்கின்றது. இவ்வாறு இறுதி மூச்சு வரை நாடகக் கலைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட வராக ஏ.ரீ. பொன்னுத்துரை வாழ்ந்திருக்கின்றார். அவரது ஆழ்ந்து அடங்கிய சுபாவமும், எவரையும் உயர்த்தி மதிக்கும் பண்பும் அளவிட முடியாதவை. இத்தகு மனிதப் பண்புகளோடு வாழ்ந்து இறைவனடி சேர்ந்த கலைப் பேரரசு அமரர் ஏ.ரீ. பொன்னுத்துரையின் இழப்பு கலையுலகம் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.



அளவையூர் நாதஸ்வரகான கலாநிதி, கலாசூரி

அமரர் என். கே. பத்மநாதனுக்கு எமது இதய அஞ்சலிகள்

பண்டு தொட்டு தமிழர் பண்பாட்டுடன் இரண்டறக் கலந் திருந்து வந்ததே இசை ஆகும். இத்தகைய இசையையும், அதன் நுண்மையைத் தெளிவுபடுத்தும் கர்நாடக சங்கீதக் கலையை அன்று முதல் இன்று வரை பாதுகாத்த கம்பீர வாத்தியம் நாதஸ்வரம். இதனை இராஜவாத்தியம் எனப் போற்றிப் புகழ்ந்தனர். இத்தகைய இராஜவாத்தியத்தை தனக்கே உரித்தாக்கிக் கொண்டவர் அமரர் என். கே. பத்மநாதன். இசையினால் எல்லா உள்ளங்களையும் இசைய வைக்க முடியும் என்பதை நிரூபித்து காட்டிய இசை மேதையாகும். நீண்ட பாரம்பரிய இசைக் குடும்பத்தில் பிறந்து குருகுல மரபில் இசையைப் பயின்று அவ் இசை மூலம் நாட்டைப் பெருமைப்படுத்தி ஏனைய நாட்டு மக்களையும் தலைவணங்க வைத்த இசை மேதையாக இசைச்சக்கரவர்த்தியாக, கலாசூரியாக, இசைக்கலாநிதியாக பல சிறப்புக்களோடு இசையை வாழவைத்த பெருமைக்குரிய அமரர் பத்மநாதனின் கலைத் தொண்டு காலத்தால் அழியாத ஓர் வரலாற்றுக் காவியமாகும்.

மனதால் உத்தமர் மதியால் வித்தகராக விளங்கிய அமரர் ஆ. மகாலிங்கம் (பிரதேச செயலர்)



சிறந்த நிர்வாகியாக அதுவும் நேர்மையான அதிகாரியாக சிறந்த குடும்பத் தலைவனாக எல்லோர்க்கும் நண்பனாக அதற்கும் மேலாக நல்ல மனித நேயமுள்ள கலைஞனாக வாழ்ந்து மறைந்து போன ஆறுமுகம் மகாலிங்கத்தின் மறைவு ஈடு செய்ய முடியாத ஓர் இழப்பாகும்.

கல்விப்புலத்திலே பல்லாண்டு காலம் சேவையாற்றிய இவர் நெடுந்தீவு, நல்லூர், உடுவில் ஆகிய இடங்களில் பிரதேச செயலாளராக பதவி வகித்து நீங்காத இடத்தைப் பெற்றிருந்தார். தன் சமூகத்தின் பால் மாறாத பற்றுக் கொண்ட அமரர் மகாலிங்கம் தமிழ்மொழியின் மீதும் இந்துசமயத்தின் மீதும் தீவிர பற்றுக் கொண்டு அல்லும் பகலும் அதற்காக உழைத்து உத்தமராக வாழ்ந்து 2001ல் இறைவனடி சேர்ந்த அவரது ஆத்மா சாந்தியடைய எமது இதய அஞ்சலிகள்.

வழிமாறியல் மலரில் சொரிந்து கொண்ட மகரந்தங்கள்

ஆசிச் செய்திகள்	i
தூரிகை முனையில் மலர் ஆசிரியரின் சிந்தனைத் துளிகள்	xxvii
அதிபர் அறிக்கை	xxxii
கல்லூரி ஆசிரியர்கள்	xlii
சுந்தரதாஸின் சுந்தர நினைவலைகள்	xliv
தமிழர் பார்வையில் சுவாமி விவேகாநந்தர்	01
தனியார் கல்வி முறைமையும் பாடசாலைகளும் - ஓர் அறிமுகம்	03
பாடசாலை மாணவர் - ஆசிரியர்களுக்கான ''கல்விச் செயற்திட்டப் பிரயோகங்கள்	09
மானிப்பாய் மெமோறியல் ஆரம்பப் பாடசாலை 165வது கல்லூரித்தினம் நினைவுப் பேருரை	14
கல்வியில் அழகியலின் அவசியம்	19
பாடசாலை நூலகங்களின் முக்கியத்துவம்	22
மானியூர் மருதடியானின் மாண்புமிகு பெருமை	24
கல்வியே கருந்தனம்	27
செவிசாய்ப்போமா?	29
கேள்விக் கோட்பாடு	31
நாய்க்குட்டி	38
உள ஒழுக்காற்று	39
பரதம் பிறந்த கதை	40
தமிழர் தோற்கருவிகள்	41
குழந்தை இலக்கியம்	45
தாய்மையே இறைவனின் முதல் வடிவம்	49
Origins of Football	50
புகைத்தலும் அதன் பாதிப்புக்களும்	52
ஒப்புரவாளர் பேராசிரியர் கலாநிதி பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் மணிவிழாச் சிறப்புமலர்	54
யாழ் நூலக எரிப்பும், எனது தாயாரின் மரணமும்.....	61
ஒலிம்பிக் 2000	64
ஈழத்து இலக்கிய புனைகதைத்துறையில் மறுமலர்ச்சி	67
மட்டக்களப்பு மான்மியம் நூல் வரலாறு	75
என் அன்னை அவள்	79
நவீனத்துவமும் அதனால் ஏற்பட்ட அரசியல் பொருளாதார பண்பாட்டு மாற்றங்கள்	80
பகவத்கீதை வழங்கும் கர்மயோகக் கோட்பாடு	85
தமிழ் இலக்கிய நூல்களில் கீழ்க்கணக்கு நூல் பற்றிய கருத்துக்கள்	87
எமது அறிவுக் களஞ்சியம் நூல்களே	89
வங்கி நடவடிக்கைகளில் கணனிப் பயன்பாடு	90
இசையின் பெருமை	92
கலையும் விஞ்ஞானமும்	94
அவைக்காற்றுக் கலை	95
உதயம் எப்போது	96
அன்றே கண்ட மெஞ்ஞானம்	97
திருவள்ளுவர்	99
சர்வதேசரீதியில் பெண்களும் அவர்களின் சமூகப்பணிகளும்	101

இசைக்கலை பெறும் முக்கியத்துவம் 103
மகிழ்ச்சியான வாழ்விற்கு சாரணியம் வித்திடுகின்றது 105
விஞ்ஞானம் என்னும் சாபவாதிகாரி 107
எமது சூழலைப் பாதுகாப்போம் 110
ஓவியர்கள் வரிசையில்.... 111
இணையம் 116
உலகை உலுக்கும் உக்கிர நோய் சார்ஸ் 118
இலங்கையில் உல்லாசப் பிரயாணத்தின் முக்கியத்துவம் 122
ஆரம்பக் கல்வியும் அதன் முக்கியத்துவமும் 124
மிதிவெடியில் இருந்து பாதுகாப்புப் பெறல் 127
உலகமயமாக்கமும் அபிவிருத்தி அடைந்து வரும்
நாடுகளில் (LDC) அதன் தாக்கமும் 128
எரிமலை பற்றிய சில தகவல்கள் 133
இலங்கையின் தோற்றம் 135
பூகம்பம் எப்படி ஏற்படுகின்றது 136
சமயவாழ்வு 137
நட்பு 138
நெப்போலியனின் தாய்ப்பாசம் 139
கல்வியின் உறைவிடங்கள் பெற்றோர், ஆசிரியர் 140
பொது அறிவுத் துளிகள் 141
மெமோரியல் அன்னையவள் காருண்யம் 142
சமாதான ஊற்று 143
காலைக்காட்சி 144
காலத்தையும் மாற்றலாமே? 145
தாயன்பு செய் 147
ஈராறு வீட்டுக்குறிப்புகள் 148
உங்களுக்குத் தெரியுமா? 149
கண்ணை நம்பாதே 150
இலங்கை ஓவியர்கள் 152
அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றுவனாகும் 153
தித்திக்கும் திருவாசகம் 159
தெரிந்து கொள்ளுங்கள் 161
திருட்டுப் போன கத்தரிக்காய் 162
கண்டுபிடித்தவர்கள் யார் 163
மாணவ சமுதாயத்தினரிடையே பொது அறிவின் முக்கியத்துவம் 164
நூலகம் ஒரு மனிதனை முழு மனிதனாக ஆக்குகின்றது 167
சுவாமி ஞானப்பிரகாசர் 168
நியூட்டனின் இயக்க விதிகள் 170
விஞ்ஞான விளக்கம் 171
Do you know these words 172
சுவாமி விவேகாநந்தர் 173
தர்மம் தலை காக்கும் 175
'அ' முதல் 'ஔ' வரை வாழ்க்கைக்கு உகந்த பொன் மொழிகள் 178
இயற்கை 179
சமாதானம் தேடி வரும் 179
எங்கள் பாடசாலை 180
பொது அறிவு 181
கருநாகமும் கஸ்டகாலமும் 182
பெற்றோரைப் பேணி அவர் பெருமை சொல்வோம் 183
வள்ளுவன் புவி நோக்கி மீண்டும் காலடி வைத்தால் 185

தமிழ் அன்னையின் தவிப்பு	187
வீதி விதிகள்	187
வண்ண வண்ண மலர்கள்	188
முக்கோணியின் பரம்பலைத் துணிவோம்	189
கம்பனின் கவிச்சிறப்பு	190
அம்மா பாருங்கள் அங்கே	191
எங்கள் ஸ்தாபகர்	192
புண்படப் பேசாதே	193
பலசாலி எறும்புகள்	194
றோசாப்பூ	194
சொர்க்கத்துக்குச் சுருக்க வழி	195
தங்கத் தமிழ்த் தாயே	195
எனது அன்னை தந்தை	196
மலரே	196
நவீன விஞ்ஞானத்தில் கணனிக் கல்வியின் முக்கியத்துவம்	197
அன்பு	199
விற்றமின்கள்	200
ரோஜா	200
முரண்பாடுகள்	201
மரமும் மாடும்	201
மனித வாழ்வில் கணனி	202
உயிர் காத்த அன்னை	203
அர்த்தமற்ற நட்பு	204
ஏட்டிலும் வீட்டிலும்	204
நாளை மலரும் பூக்கள்	204
கல்வியின் சிறப்பு	205
வாழைமரம்	205
இயற்கை	205
மீனவனின் வாழ்க்கை	206
ஆதியும் நீரே அந்தமும் நீரே	206
நாடும் சமாதானமும்	207
காலம் மாறிப் போச்சு	207
நான் செய்த நன்றிக்கடன்	208
பறவையைக் கண்டான் விமானம் படைத்தான்	208
பிறருக்கு உதவி செய்வோம்	209
வேடனும் பாம்பும்	210
நீர் ஓர் இயற்கை வளம்	211
நாட்டில் வாழும் நாங்கள்	211
பறவைகள் அழகானது எப்படி?	212
தொப்பிப்பாடல்	212
தாய் அன்பு	213
யாழ் நகரம் மாநகரம்	213
ஏழையின் அப்பிள்	213
சுவாமி விபுலாநந்தர்	214
வண்ணத் தாமரை	214
வசந்தம் சென்றது	215
விஞ்ஞானம் சார்ந்த உரையாடல்	215
நான் விரும்பம் ஆசிரியர்	215
நான் கண்ட வீதி விபத்து	216
சிரிக்கும் பூக்கள்	216

தித்திக்கும் மாங்கனி	217
எமது கடமை	217
எனது தாய் மொழி	217
அதோ பட்டம் பறக்கிறது	218
வினாமாலை	218
குருவி	218
வீடு	218
பாசமிகு பறவை	219
நிலா	219
ஒளவைப் பாட்டியின் பாடல்கள்	219
பறவைகள்	219
புத்தகம்	219
வானத்தில் நிலா	220
அன்பு நிறைந்த அம்மா	220
பூப்போன்ற பூனைக்குட்டி	220
ஒற்றுமை	221
பள்ளிப் பாடல்	221
கிறிஸ்து பிறப்பு	221
வண்ணத்துப் பூச்சியே	221
அம்மா	221
பந்து	221
Computer	222
The Morning Scene in our Village	222
An Accident	223
The Visitors	224
A Wonderful Dream	224
Our Sportsmeet	225
Our Country	225
An Unforgetable Experience in my life	226
My First Day at School	226
An Accident	227
My First Speech	227
Seasons	228
Environment	228
Uses of Trees	229
The Happiest day in my life	229
Animals and Transport	230
The Bible	230
A Trip to the Hill Country	231
My Ambition	231
Leonardo Davinci	232
Our Country and Peace	232
Coconut tree	232
Thai Pongal	233
Mother	233
மன்ற அறிக்கைகள்	234
இல்ல அறிக்கைகள்	256
பரிசு பெறுவோர் விபரம்	262
நன்றி	282

வலைமறியல் மலரில் சொரிந்து கொண்ட மகரந்தங்கள்

ஆசிச் செய்திகள்	i
தூரிகை முனையில் மலர் ஆசிரியரின் சிந்தனைத் துளிகள்	xxvii
அதிபர் அறிக்கை	xxxii
கல்லூரி ஆசிரியர்கள்	xlii
சுந்தரதாஸின் சுந்தர நினைவலைகள்	xliv
தமிழர் பார்வையில் சுவாமி விவேகாநந்தர்	01
தனியார் கல்வி முறைமையும் பாடசாலைகளும் - ஓர் அறிமுகம்	03
பாடசாலை மாணவர் - ஆசிரியர்களுக்கான ''கல்விச் செயற்திட்டப் பிரயோகங்கள்	09
மானிப்பாய் மெமோறியல் ஆரம்பப் பாடசாலை 165வது கல்லூரித்தினம் நினைவுப் பேருரை	14
கல்வியில் அழகியலின் அவசியம்	19
பாடசாலை நூலகங்களின் முக்கியத்துவம்	22
மானியூர் மருதடியானின் மாண்புமிகு பெருமை	24
கல்வியே கருந்தனம்	27
செவிசாய்ப்போமா?	29
கேள்விக் கோட்பாடு	31
நாய்க்குட்டி	38
உள ஒழுக்காற்று	39
பரதம் பிறந்த கதை	40
தமிழர் தோற்கருவிகள்	41
குழந்தை இலக்கியம்	45
தாய்மையே இறைவனின் முதல் வடிவம்	49
Origins of Football	50
புகைத்தலும் அதன் பாதிப்புக்களும்	52
ஒப்புரவாளர் பேராசிரியர் க்லாநிதி பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் மணிவிழாச் சிறப்புமலர்	54
யாழ் நூலக எரிப்பும், எனது தாயாரின் மரணமும்.....	61
ஒலிம்பிக் 2000	64
ஈழத்து இலக்கிய புனைகதைத்துறையில் மறுமலர்ச்சி	67
மட்டக்களப்பு மான்மியம் நூல் வரலாறு	75
என் அன்னை அவள்	79
நவீனத்துவமும் அதனால் ஏற்பட்ட அரசியல் பொருளாதார பண்பாட்டு மாற்றங்கள்	80
பகவத்கீதை வழங்கும் கர்மயோகக் கோட்பாடு	85
தமிழ் இலக்கிய நூல்களில் கீழ்க்கணக்கு நூல் பற்றிய கருத்துக்கள்	87
எமது அறிவுக் களஞ்சியம் நூல்களே	89
வங்கி நடவடிக்கைகளில் கணனிப் பயன்பாடு	90
இசையின் பெருமை	92
கலையும் விஞ்ஞானமும்	94
அவைக்காற்றுக் கலை	95
உதயம் எப்போது	96
அன்றே கண்ட மெஞ்ஞானம்	97
திருவள்ளுவர்	99
சர்வதேசரீதியில் பெண்களும் அவர்களின் சமூகப்பணிகளும்	101

இசைக்கலை பெறும் முக்கியத்துவம் 103
மகிழ்ச்சியான வாழ்விற்கு சாரணியம் வித்திடுகின்றது 105
விஞ்ஞானம் என்னும் சர்வாதிகாரி 107
எமது சூழலைப் பாதுகாப்போம் 110
ஓவியர்கள் வரிசையில்.... 111
இணையம் 116
உலகை உலுக்கும் உக்கிர நோய் சார்ஸ் 118
இலங்கையில் உல்லாசப் பிரயாணத்தின் முக்கியத்துவம் 122
ஆரம்பக் கல்வியும் அதன் முக்கியத்துவமும் 124
மிதிவெடியில் இருந்து பாதுகாப்புப் பெறல் 127
உலகமயமாக்கமும் அபிவிருத்தி அடைந்து வரும்
நாடுகளில் (LDC) அதன் தாக்கமும் 128
எரிமலை பற்றிய சில தகவல்கள் 133
இலங்கையின் தோற்றம் 135
பூகம்பம் எப்படி ஏற்படுகின்றது 136
சமயவாழ்வு 137
நட்பு 138
நெப்போலியனின் தாய்ப்பாசம் 139
கல்வியின் உறைவிடங்கள் பெற்றோர், ஆசிரியர் 140
பொது அறிவுத் துளிகள் 141
மெமோரியல் அன்னையவள் காருண்யம் 142
சமாதான ஊற்று 143
காலைக்காட்சி 144
காலத்தையும் மாற்றலாமே? 145
தாயன்பு செய் 147
ஈராறு வீட்டுக்குறிப்புகள் 148
உங்களுக்குத் தெரியுமா? 149
கண்ணை நம்பாதே 150
இலங்கை ஓவியர்கள் 152
அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றுவனாகும் 153
தித்திக்கும் திருவாசகம் 159
தெரிந்து கொள்ளுங்கள் 161
திருட்டுப் போன கத்தரிக்காய் 162
கண்டுபிடித்தவர்கள் யார் 163
மானவ சமுதாயத்தினரிடையே பொது அறிவின் முக்கியத்துவம் 164
நூலகம் ஒரு மனிதனை முழு மனிதனாக ஆக்குகின்றது 167
சுவாமி ஞானப்பிரகாசர் 168
நியூட்டனின் இயக்க விதிகள் 170
விஞ்ஞான விளக்கம் 171
Do you know these words 172
சுவாமி விவேகாநந்தர் 173
தர்மம் தலை காக்கும் 175
'அ' முதல் 'ஔ' வரை வாழ்க்கைக்கு உகந்த பொன் மொழிகள் 178
இயற்கை 179
சமாதானம் தேடி வரும் 179
எங்கள் பாடசாலை 180
பொது அறிவு 181
கருநாகமும் கஸ்டகாலமும் 182
பெற்றோரைப் பேணி அவர் பெருமை சொல்வோம் 183
வள்ளுவன் புலி நோக்கி மீண்டும் காலடி வைத்தால் 185

தமிழ் அன்னையின் தவிப்பு	187
வீதி விதிகள்	187
வண்ண வண்ண மலர்கள்	188
முக்கோணியின் பரம்பலைத் துணிவோம்	189
கம்பனின் கவிச்சிறப்பு	190
அம்மா பாருங்கள் அங்கே	191
எங்கள் ஸ்தாபகர்	192
புண்படப் பேசாதே	193
பலசாலி எறும்புகள்	194
றோசாப்பூ	194
சொர்க்கத்துக்குச் சுருக்க வழி	195
தங்கத் தமிழ்த் தாயே	195
எனது அன்னை தந்தை	196
மலரே	196
நவீன விஞ்ஞானத்தில் கணனிக் கல்வியின் முக்கியத்துவம்	197
அன்பு	199
விற்றமின்கள்	200
ரோஜா	200
முரண்பாடுகள்	201
மரமும் மாடும்	201
மனித வாழ்வில் கணனி	202
உயிர் காத்த அன்னை	203
அர்த்தமற்ற நட்பு	204
ஏட்டிலும் வீட்டிலும்	204
நாளை மலரும் பூக்கள்	204
கல்வியின் சிறப்பு	205
வாழைமரம்	205
இயற்கை	205
மீனவனின் வாழ்க்கை	206
ஆதியும் நீரே அந்தமும் நீரே	206
நாடும் சமாதானமும்	207
காலம் மாறிப் போச்சு	207
நான் செய்த நன்றிக்கடன்	208
பறவையைக் கண்டான் விமானம் படைத்தான்	208
பிறருக்கு உதவி செய்வோம்	209
வேடனும் பாம்பும்	210
நீர் ஓர் இயற்கை வளம்	211
நாட்டில் வாழும் நாங்கள்	211
பறவைகள் அழகானது எப்படி?	212
தொப்பிப்பாடல்	212
தாய் அன்பு	213
யாழ் நகரம் மாநகரம்	213
ஏழையின் அப்பில்	213
சுவாமி விபுலாநந்தர்	214
வண்ணத் தாமரை	214
வசந்தம் சென்றது	215
விஞ்ஞானம் சார்ந்த உரையாடல்	215
நான் விரும்பம் ஆசிரியர்	215
நான் கண்ட வீதி விபத்து	216
சிரிக்கும் பூக்கள்	216

தித்திக்கும் மாங்கனி	217
எமது கடமை	217
எனது தாய் மொழி	217
அதோ பட்டம் பறக்கிறது	218
வினாமாலை	218
குருவி	218
வீடு	218
பாசமிகு பறவை	219
நிலா	219
ஒளவைப் பாட்டியின் பாடல்கள்	219
பறவைகள்	219
புத்தகம்	219
வானத்தில் நிலா	220
அன்பு நிறைந்த அம்மா	220
பூப்போன்ற பூனைக்குட்டி	220
ஒற்றுமை	221
பள்ளிப் பாடல்	221
கிறிஸ்து பிறப்பு	221
வண்ணத்துப் பூச்சியே	221
அம்மா	221
பந்து	221
Computer	222
The Morning Scene in our Village	222
An Accident	223
The Visitors	224
A Wonderful Dream	224
Our Sportsmeet	225
Our Country	225
An Unforgetable Experience in my life	226
My First Day at School	226
An Accident	227
My First Speech	227
Seasons	228
Environment	228
Uses of Trees	229
The Happiest day in my life	229
Animals and Transport	230
The Bible	230
A Trip to the Hill Country	231
My Ambition	231
Leonardo Davinci	232
Our Country and Peace	232
Coconut tree	232
Thai Pongal	233
Mother	233
மன்ற அறிக்கைகள்	234
இல்ல அறிக்கைகள்	256
பரிசு பெறுவோர் விபரம்	262
நன்றி	282

நல்லை
திருஞானசம்பந்தர் ஆதீனம்
அருளாசிச் செய்தி



அன்புசால் பெருந்தகையீர்,

யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையினது 168வது ஆண்டு விழாவினை சிறப்பிக்கும் முகமாக பாடசாலையின் பரிசளிப்பு விழா வின் போது வெளிவருகின்ற மெமோறியல் – 7 மலரின் வருகையினையிட்டு பெருமகிழ்ச்சியடை கின்றோம்.

இப்பாடசாலை 168 ஆண்டுகளாக உயரிய கல்விப்பணியினை செவ்வனே ஆற்றிவருவதென்பது போற்றுதற் குரிய தாகும். தன் கல்வி வரலாற்றில் உருவாக்கிய பல கல்வியியலாளர்கள், சான்றோர்கள் பலர் உலகெங்கும் சிறப்புற்று விளங்கி வருகின்றமை கண்கூடு.

ஒரு கட்டடத்திற்கு அத்திவாரம் எவ்வளவு முக்கியமானதோ அதேபோல் ஒவ்வொரு மனிதனதும் நிறைவான வாழ்வுக்கும் கல்வி யறிவு மிக அவசியமானதாகும். எப்படியும் வாழலாம் என்பதை விடுத்து இப்படித தான் வாழவேண்டும் என்ற நெறிபிறழா அறவழி இட்டுச் செல்வது கல்வியாகும்.

இவ்வாறான கல்விப் பெருஞ்செல்வத்தை அள்ளிவழங் கும் மெமோறியல் பாடசாலையின் வளர்ச்சியில் தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக. மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் பணி பல்லாண்டு காலம் தொடரவும் வெளிவரும் மலர் சிறப்புற வெளி வரவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள்
2வது குருமகா சந்நிதானம

தென் இந்தியத் திருச்சபை அருளாசிச் செய்தி



மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை – மெமோறியல் மலர் – 7 என்ற நூலை வெளியிட இருப்பதாக அறிந்து மகிழ்ச்சி யடைந்தேன்.

மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நான் கல்வி கற்கவில்லை. ஆனால் மெமோறியல் ஆங்கில பாடசாலை பற்றிய நினைவுகள் எப்போதும் இனிமையாகவே இருக்கின்றன. ஏனெனில் நான் பிறந்த பொழுது (1940) எனது இளமைப் பராயத்தில் மெமோறியல் பாடசாலை பற்றிய கதைகளைக் கூறுவார்கள். இப்பொழுதும் மானிப்பாய், நவாலி முதலிய இடங்களில் உள்ள சில முதியோர் தாம் எம் பெற்றோரிடம் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் படித்ததாகக் கூறுவர்.

சென்ற வருடம் நான் மகாகவி பாரதியார் படித்த திருநெல்வேலி இந்துக் கல்லூரிக்கு சென்றிருந்தேன். அப்பாடசாலையின் ஆசிரியர் ஓய்வு அறையில் மூன்று பேருடைய படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. அவையாவன புதுமைப்பித்தன் வ.உ.சி. மகாவி பாரதியார். பழைய மாணவர்களின் சாதனைகளே கல்லூரிக்கு பெருமை தேடித் தருவன.

மெமோறியல் ஆங்கில பாடசாலையை உருவாக்கிய பெருமக்கள் அநேகம். திரு. தம்பையா ஆணல்ட், புறோக்கர் முத்துத்தம்பி, பேரறிஞர் ஜே. வி. செல்லையா, சுவாமி ஞானப்பிரகாசர், முதலியார் கனகசபை. இராசவாசல் முதலியார். சி. தியாகராஜா, திரு ஜே.ஜி இராஜகுலேந்திரன், பேராயர் சபாபதி குலேந்திரன், உயர்திரு ஹன்டி பேரின்பநாயகம் போன்ற பெரியார்கள் இப்பாடசாலையின் பழைய மாணவர்கள்.

இங்கு அதிபர்களாக அமர்ந்தவர்களும் மிகச் சிறந்த குணாசீலங்களைக் கொண்டு விளங்கினார்கள். ஆரம்பகால அதிபர்களில் திரு. வேலாயுதர், திரு. பொன்னையா ஸ்ரோங், திரு. திருவிளங்கம், திரு. வயிரவநாதர் பேஜ், திரு. ஏ. எம். நத்தானியேல், திரு ரி.ஜி. தொமஸ்

(கேரளம்), திரு. ஸ்கடர் மாணிக்கவாசகம், திரு. ஜே. எஸ். நவரத்தினம், திரு. எஸ். பி. இராஜரத்தினம், திரு எஸ். வி. அழகரட்ணம் ஆகியோர் முக்கியமானவர்கள்.

திரு எஸ். வி. அழகரட்ணம் அதிபராக இருந்தபொழுதுதான் பாடசாலை அரசினரால் சுவீகரிக்கப்பட்டது. இவர் 1943ம் ஆண்டு அதிபர் பதவியேற்றார். திரு. ஜே.வி. செல்லையா அவர்கள் தமது காலத்தில் அதிபராகவிருந்த திரு. வயிரவநாதர் பேஜ் அவர்களைப் பற்றி ஒரு பிரசித்தி பெற்ற மாணவன் பின்வருமாறு கூறியதாக கூறியுள்ளனர்.

If. Mr. Page had been in a school in England his place would be by the side of such famous Head masters like Arnold and Thring.

இன்று மொமோறியல் ஆங்கில பாடசாலையின் அதிபர் பதவியை அலங்கரிக் கும் திரு. அ. மூ. அருணாசலம் அவர்கள் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் பெருமையை உணர்ந்து அதற்கேற்ப பாடசாலையை நடாத்த வேண்டும் என்ற வாஞ்சை கொண்டவர். அவருடைய நிர்வாகம் சிறந்ததென பணிக்கப்பட்டுள்ளது. அவருக்கு என்னுடைய வாழ்த்துக் களை தெரிவத்துக் கொள்கிறேன்.

இந்த மலரை வெளியிடும் திரு. நா. பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் மற்றும் ஆர்வலர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதி. வண. கலாநிதி எஸ். ஜெபநேசன்
பேராயர் தென் இந்திய திருச்சபை

அறியாச் செல்வம் கல்விச் செல்வமே.....

ஆசிச்செய்தி



1836ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க மிஷனரிமாரின் ஞாபகார்த்தமாக எமது மண்ணில் ஆரம்பிக்கப்பட்ட மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை வெளியிடும் 'மெமோறியல் மலர் 7' என்னும் மலருக்கு ஆசி நல்குவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் கல்வி என்பது மிகவும் இன்றியமையாத ஒன்று. கல்வி செல்வமாகின்றது. இதனால் சிறந்த மாணவச் சமுதாயத்தையும், அறிவியல் உலகத்தையும் உருவாக்கும் பொறுப்பு பாடசாலைகளிலும் கற்பிக்கும் ஆசிரியர்களிலும் தங்கியிருக்கின்றது. மாணவ மாணவிகளை ஒழுக்கசீலர்களாகவும், பண்பாளர்களாகவும், கொண்டு இப்பாடசாலை விளங்குகின்றது. இவ்வாறு திகழ்வதற்குக் காரணம் ஒரு தலைசிறந்த அதிபரையும், ஆசிரியர்களையும் இப்பாடசாலை கொண்டுள்ளதே. இவர்களின் முயற்சியினாலேயே ''மெமோறியல் மலர் 7'' என்னும் சஞ்சிகை வெளிவருகின்றது.

இவ்வாறு மாணவர்களை முன்னேற்றப்பாதையில் வழிநடத்திச் சென்று ஓய்வுபெறும் அதிபரைப் பாராட்டுவதோடு புதிதாகப் பொறுப் பெடுக்கும் அதிபரும். தொடர்ந்து நற்பணியாற்றி கல்லூரி வளர இறை யாசீரை வேண்டுகின்றோம்.

இறைபணியில் இணையும் உங்கள் ஆயர்
பேரருள்திரு தோமஸ்சவுந்தரநாயகம்
யாழ். ஆயர்.

இன்றுபோல் என்றும் வாழ்க

அருளாசிச் செய்தி



ஒரு மனிதனுக்குத் தேவையான அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகை புருஷ தத்துவங்கள். இவைகளில் அறமே மேன்மையுற்று விளங்குகின்றது. ஒரு மனிதனை மனிதனாக்குவது அறம். இன்றைய உலகிலே காம, குரோதங் களினாலே மனிதன் மிருகமாகிக் கொண்டு வரு கிறான். அவ்வகை மிருகமாக மனிதன் மாறி விடாமல் காப்பது பாடசாலைகள், இப்பாடசாலை களிலே ஒழுக்கம், பண்பு என்பன போதிக்கப்படுகின்றன. இவைகளைப் பின்பற்றி வருகின்ற வளர்கின்ற பாடசாலை மாணவர்கள் எதிர்காலத்தில் முழுமனிதனாக சிறப்புடன் வாழ்கின்றார்கள். இப்படிப்பட்ட ஒழுக்கம், பண்பு, தர்மம் முதலியவற்றைப் போதித்து அவ்வழியே மாணவர்களை நடக்கச் செய்து தலை சிறந்த பாடசாலையாக விளங்குவது மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை. இப்பாடசாலை மாணவர்கள் ஆசானிடத்திலும், பெரியோர்களிடத்திலும், குருவினிடத்தும், இறைவனிடத்தும் மதிப்பும் மரியாதையும் வைத்திருப்பதை நாம் இன்றும் காணலாம். இது இப்பாடசாலைக்கே உரித்தான சிறப்பம்சம். இப்பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பாடுபடுகின்ற கண்டிப்பான ஆனால் அன்பான அதிபர், ஆசிரிய, ஆசிரியைகள் இதன் காரணமாக வருடாவருடம் கிடைக்கப் பெறுகின்ற சிறப்பான பெறுபேறுகள் இவை இப்பாடசாலையின் சிறந்த வளர்ச்சியைக் காட்டுகின்றது. மேலும் பாடசாலைச் சமூகத்தின் ஆதரவில் எழுகின்ற மாடிக்கட்டடங்கள் நாம் நிமிர்ந்து நிற்போம் என்று பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. இதன் விளைவாக வருடம் தோறும் இப்பாடசாலை வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றது. ஆகவே இத்தினத் தில் ஆண்டு விழாவைக் கொண்டாடி ஆண்டுமலரை வெளியிடுகின்ற இவ்வேளையில் இம்மலருக்கு எனது ஆசியைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகிறேன்.

பிரம்மஸ்ரீ ஜெயக்குமாரக் குருக்கள்
மானிப்பாய் மருதடி விநாயகர் திருக்கோவில

சர்வதேச இந்துமத குருபீடாதிபதியின் அருளாசிச் செய்தி



"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு"என்ற வள்ளுவரின் வாக்கிற்கு அமைவாக யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் கல்லூரிச் சஞ்சிகை வெளியீடான "மெமோறியல் மலர் –7" என்னும் சிறப்பிதழிற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இக் கல்லூரியானது கடந்த 166 வருடங் களுக்கு முன் நல்ல மனமுடையோரின் நற்சிந் தனையுடனும் நல்நோக்குடனும் தெய்வ பக்தியுடனும் ஆரம்பிக்கப்பட்ட தின் காரணமாக இன்று பல புத்திஜீவிகளை உருவாக்கிக் கொண்டிருக் கின்றது. அந்த வகையிலே நமது முன்னோர்கள் நாட்டுப்பற்று, மக்கள் பற்று, தெய்வப்பற்று ஆகியனவற்றை நாம் இன்றைய கால கட்டத்தில் நினைவுகூறுவதுடன் அப்பெரியோர்களுக்கு கடமைப்பட்டவர்களாகவுள்ளோம்.

இக் கல்லூரியிலே படித்த மாணவர்கள் பலர் யாழ்ப்பாணத் திலும், கொழும்பிலும், வெளிநாடுகளிலும் பெரும் உத்தியோகத்தில் பதவி வகித்து எமது பாடசாலைக்கு பெரும் புகழை ஈட்டி வருகின்றார்கள். "துறை யிருக்கும், ஓடம் வரும் போகும்" அது போல் இக்கல்லூரி வளர்ச்சி யடைந்து வருவது அதிபர்களுடைய முயற்சியும் சக ஆசிரியர்களுடைய உதவிகளும் காரணமாக அமைகின்றது. ஒரு கல்லூரி சகல நிலைகளிலும் உயர்ந்து சிறந்து விளங்க வேண்டுமென்றால் அங்குள்ள அதிபரின் சட்டம், ஒழுங்கு, கடமைப்பாடு. அமைந்த நிர்வாகக் கட்டமைப்பு மிகமிக அவசியம். இந்த வகையில் இக் கல்லூரி நிர்வாகம் வெகு சிறப்பாக நெறிப்படுத்தி வருவதால் நல்ல ஒழுக்கமான மாணவச் சமுதாயத்தை உருவாக்கி மேலும் நல்ல பிரஜைகளாக்கி நாட்டிற்கு உதவ வேண்டும்.

இந்த மலரினை வெளியிடுவதற்கு பெரும் முயற்சி எடுக்கின்ற திரு. அ. மு. அருணாச்சலம் அதிபர் அவர்களும், ஆசிரியர்களும் பாராட்டப்பட வேண்டியதுடன் மேலும் சிறப்புற அம்பாளின் கிருபையுடன் எனது மனமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து இவ்விழா சிறக்க, அதிபர், ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள் வாழ, நாடு சிறக்க என்னுடைய நல்லாசிகளைத் தெரிவித்தக் கொள்கின்றேன்.

கிரியாகலாப முக்தாமணி சிவஸ்ரீ ச. மஹேஸ்வரக்குருக்கள்
சர்வதேச இந்துமத குருபீடாதிபதி
யாழ் பல்கலைக்கழக முதவை உறுப்பினர்

ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான அருளாசிச் செய்தி



"கண்ணுடையர் என்போர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்"

எனவே ஞானக்கண்ணைத் திறப்பதனால் தான் ஊனக் கண்ணின் பெருமை பேசப்படுகிறது. யாழ்ப்பாண மக்களின் அறிவுக்கண்ணின் பயன்பாடு அனைவரும் அறிந்ததே. இதற்கு உயிர் நாடியாக விளங்குவது கல்வியாகும். நன் மாணாக்கர் பலரை உருவாக்கி இந்த மண்ணுக்கு உதவிய கல்வி நிலையங்களில் யாழ் மெமோறியல் பாடசால முன்னணி வகிக்கிறது. நூற்றி அறுபத்தெட்டு (168) ஆண்டுகளாக பணியாற்றி முதன்மையான இடத்தை இக்கல்லூரி பெறுகிறது. இந்த முதன்மைக்கெல்லாம் காரணம் தெய்வபக்தியும் குருபக்தியும் நிறைந்த மாணவர்களை உருவாக்கிவிட்டமையாகும். நான் பல தடவைகளில் இக் கல்லூரிக்கு சென்றிருக்கிறேன். அதிபரும், ஆசிரியர்களும், பெற்றோர் களும் இணைந்து ஆற்றுகின்ற கல்வித் தொண்டைக் கண்காணித் திருக்கிறேன்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற பாரம்பரியம் மாணவர்களிடையே நன்கு பேணப்படுகிறது. தற்போதைய அதிபர் திரு. அ.மு. அருணாசலம் அவர்கள் எம்மால் பெரிதும் மதிக்கப்படுபவர். நல்லன நினைத்து நல்லதைச் செய்பவர். இதனால் இக்கல்லூரியில் தனித் துவமான பாரம்பரியம் பேணப்படுகிறது. எனவே மெமோறியல் மலருக்கு ஆசிச்செய்தி அனுப்புவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், மேலும் இக்கல்லூரியைத் வாழ்த்தி அதிபரையும் ஆசிரியர்களையும் மாணவர்களையும் நலன் விரும்பிகளையும் பாராட்டி அமைகின்றேன்

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி
தலைவர்
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பளை

செஞ்சொற் செல்வரின்
ஆசியுரை



மானிப்பாய் திருவூரில் மகிமை மிக்க பாட சாலையாக விளங்குவது மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை. கல்வி, சீரிய ஒழுக்கம், கடவுள் பக்தி என்பவற்றை கற்கும் காலத்தில் நித்திய கடனாக வழக்கப்படுத்திவரும் பாடசாலை என்ற தனித் துவம் இப்பாடசாலைக்கு உண்டு. புகழ் பூத்த அதிபர் வரிசையில் தன் ஆளுமையால் இன்று பெருமை பெற்ற ஒருவனாக இப்பாடசாலை முதல்வர் ஸ்ரீமான் அருணாசலம் விளங்குகிறார். அவரது ஆற்றுப்படுத்தலில் ஆசிரியர்களும் மாணவர்களும் நற்பேறு பெற்று பாடசாலை மிளிர உதவுகின்றனர். யாழ். மாவட்ட வரலாற்றில் ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்றிய உன்னத பாடசாலையாக மானிப்பாய் மெமோறியல் பாடசாலைக்கு நீண்ட பெருமையுண்டு. அப்பெருமை இன்றும் நின்று நிலைக்கின்றது.

வயிற்றுக்குச் சோறிட வேண்டும்
வாழும் மனிதர்களுக்கெல்லாம்
பயிற்றிப் பல கல்விதந்து
பாரினை உயர்த்திட வேண்டும்.

என்றான் மகாகவி பாரதி.

நாடு செழிப்பதற்கு நல்ல கல்வி வேண்டும். நல்ல கல்வியே நல்ல மனிதர்களை உருவாக்கும். மெமோறியல் மேன்மையான பிரஜைகளை இம் மண்ணுக்கு வழங்கும் புனிதமான கல்வி ஆலயம், இப்பாடசாலையை வாழ்த்துகின்றேன். வணங்குகின்றேன். எனது இனிய நல்லாசிகளைக் கூறி பிராத்தித்து அமைகின்றேன்.

ஆறு. திருமுருகன

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் அருளாசிச் செய்தி



இற்றைக்கு சுமார் 170 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்கா மிஷனறிமாரின் ஞாபகார்த்தமாக உருவாக்கப்பட்ட ஒரு பாடசாலையாகும் இப்பாட சாலையில் ஆண்டுதோறும் வெளிவரும் மெமோறி யல் மலர் இப்பாடசாலையின் வரலாற்றையும், சாதனைகளையும் வெளிக்கொண்டுவரும் ஆவண மாகும். இம் மலரை வெளியிடுவதையிட்டு பெரு மகிழ்வடைவதுடன் இப்பாடசாலை மென்மேலும் உயர்வடைந்து பல சான்றோர்களையும், அறிஞர்களையும் உருவாக்க உறுதுணையாக இருக்க வேண்டும் என வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

இப்பாடசாலை தலை சிறந்த அதிபர் ஒருவரையும், ஆசிரியர் களையும் கொண்டு இப்பிரதேசத்தின் முன்னோடிப் பாடசாலையாகத் திகழ்ந்தது. நன்மாணாக்கர்களை உருவாக்க முன்நின்று செயற்படு வதுடன் இப்பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கும், சமூக வளர்ச்சிக்கும் அடித்தளமிடும் செயற்பாட்டிற்கு எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆ.சுப்பிரமணியசர்மா
பிரதேச செயலாளர்,
பிரதேசசெயலகம்,
சண்டிலிப்பாய்.

வடக்கு கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளரின் ஆசிச்செய்தி

யாழ்ப்பாணத்தில் மிஷனரிமாரின் வருகையை தொடர்ந்து மறுமலர்ச்சி ஒன்று புதிய பரிமாணத்தை நோக்கியதாக முன்னெடுக்கப் பட்டது. இவ்வாறான மாற்றங்கள் மானிப்பாய் உடுவில், வட்டுக்கோட்டை போன்ற பகுதிகளிலே முதலில் செயல்படுத்தப்பட்டது. இதன் விளைவாக தோற்றம் பெற்ற பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை இன்று 168ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பது எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை தொடர்ச்சியான தனது கல்விச் செயற்பாடுகளினூடாக, ஒரு ஆளுமையுள்ள சமுதாயத்தை உருவாக்கி வந்துள்ளமைக்கு கடந்த 168 ஆண்டுகளாக இப்பாடசாலை யின் வரலாற்றில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய அதிபர்களினதும், ஆசிரியர்களினதும் அர்ப்பணிபபுடனான சேவையே காரணமாகும்.

அந்த வகையில் மிகச் சிறப்பான செயற்பாடுகளினூடாக வளர்ந்து வரும் மானிப்பாய் மெமொறியல் ஆங்கிலப் பாடசாலையின் 168வது ஆண்டு விழா நிகழ்வுகளும். அது தொடர்பாக வெளியீடப்படும் "மெமோறியல் மலர் – 7" ஆண்டு மலரும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

இ. விசாகலிங்கம்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடக்கு கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

"ஆங்கிலக் கல்வி வளர்ச்சியின் அடித்தளமாக திகழ்ந்த கல்விக்கூடம்"

ஆசிச்செய்தி



ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் இன்று சகல தரப்பினராலும் உணரப்படுகின்ற வேளையில் சுமார் 175 ஆண்டுகளுக்கு முன்பே மிசனரிமார்கள் தமது மதப் பிரசாரத்துடன் ஆங்கிலக் கல்விப் போதனைகளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தனர்.

ஐரோப்பியர்களின் வருகையுடன் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிகளில் ஆங்கிலமொழி மூலம் பாடசாலைகள் உருவாக்கப்பட்டதன் காரணமாக அன்று யாழ்ப்பாண மக்கள் கல்வியிலும் அரச நிறுவனங்களிலும் உயர் நிலையில் இருந்தமையைக் காணமுடிகின்றது.

அந்த வகையில் தோற்றம்பெற்ற பாடசாலைகளில் ஒன்றாக மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை மானிப்பாய் பிரதேசத்தின் ஆங்கிலக்கல்வி வளர்ச்சிக்கு அடித்தளம் இட்டிருந்தது. அதன் தொடர்ச்சியான கற்பித்தல் மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் இன்னும் அக்கல்லூரியில் பேணப்பட்டு வருவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

பிரதேச மட்டத்தில் பாடசாலைகளை அபிவிருத்தியடையச் செய்யும் நோக்கில் மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலையும் (நவோதயத்திட்டம்) தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டுவரும் வேளையில் தனது 168ஆவது ஆண்டு விழாவையும் பரிசளிப்பு விழாவையும் சிறப்புற கொண்டாட நடவடிக்கை எடுத்துவருவது பொருத்தமான ஒன்றாகும்.

168ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில் மெமோறியல் – 7 என்ற சிறப்பு மலரையும் வெளியிட முன்வந்திருக்கும் மானிப்பாய் மெமோறியல் கல்விச்சமூகத்திற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் வளர்ச்சியில் அயராது உழைத்துவரும் அதிபரையும் அவருக்கு உறுதுணையாக இருந்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றிவரும் ஆசிரியர்களையும் பாராட்டுகின்றேன்.

மானிப்பாய் மெமோறியல் ஆண்டு விழாவும் பரிசளிப்பு வைபவமும் மெமோறியல் மலர் வெளியீடும் சிறப்புற நடைபெற என் ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆர். தியாகலிங்கம்,
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு கிழக்கு மாகாணம், திருகோணமலை.

வடக்கு கிழக்கு மாகாண மேலகிக கல்விப்பணிப்பாளரின் ஆசிச்செய்தி



நீண்டதொரு கல்விப் பயணத்தினைக் கொண்ட யா / மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை ''மெமோறியல் மலர் – 7'' என்ற சஞ்சிகையினை வெளியிடப்போகும் செய்தி கேட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

வரலாற்றுப் பெருமைமிக்க இக் கல்லூரி 19ஆம் நூற் றாண்டில் ஆரம்பிக்கப்பட்டு 168 ஆண்டு விழாவின் பரிசளிப்பு வைபவத்தின் போது இம் மலர் வெளிவரவுள்ளது. இக் கல்லூரியில் கடைமையாற்றிய, ஆற்றுகின்ற, அதிபர்கள், ஆசிரியர்கள், துணைபோன கல்விச் சமூகத்தினர் ஆகியோரின் அற்பணிப்புகளினால் கற்று வெளியேறிய கல்விமான்கள் உலகளாவிய ரீதியில் வியாபித்துள்ளனர்.

அத்துடன் ,பற்றுணர்வுமிக்க விழுமியம் நிறைந்த பிரஜைகளை இன்னும் உருவாக்கி வருவதில் உறுதியாக உள்ளது.

இக்கல்லூரியின் அண்மைக்கால வரலாறுபற்றி நினைத்த போது பின்வரும் விடயங்கள் மனப்பதிவில் இருந்து மீண்டெழுந்து வருகின்றன.

- ❑ ஆயிரக்கணக்கான மாணவச் செல்வங்களின் கல்வி அபிலாசைகளை நிறைவேற்றும் களமாகத் திகழ்கின்றமை.
- ❑ ஆளுமைச் சிறப்பால் சமூக விழுமியங்களை மாணவர் மனதில் பதிய வைத்து நடைமுறைப்படுத்தி வருகின்றமை.
- ❑ ''**DSD**'' செயற்திட்டத்தின் கீழ் கல்லூரியை வளப்படுத்த முனைந்தமை.
- ❑ வருமானம் குறைந்த மக்களின் மைந்தர்களின் கல்வித் தேவையினை நிறைவு செய்து அனைவரையும் விழிப்படையச் செய்தமை.

❑ இடம்பெயர்ந்த வேளையில் தென்மராட்சி வலய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு முகம் கோணாது களம் அமைத்துக் கொடுத்தமை.

❑ பாடசாலையை விட்டுச் சென்ற மாணவர்களின் தொழில் திறன் விருத்திக்கு களம் அமைத்துக் கொடுத்தமை.

❑ S.D.S., O.B.A. ஆகியவற்றினூடாக கல்லூரிக்கும் சமூகத்திற்குமிடையில் நல்ல உறவை ஏற்படுத்தியமை.

❑ இன்னும் பல சிறப்புகள் உள.

❑ வெளிவரும் கல்லூரிச் சஞ்சிகையில் கல்லூரியின் சிறப்புக்கள் இடம் பெறும் என நினைக்கின்றேன். அரும் பெரும் இவ்வரலாற்று, முயற்சியை பாராட்டி, வாழ்த்தி, ஆசீர்வதித்து இக்கல்லூரிச் சமூகத்தைப் பெருமையோடு பார்க்கின்றேன்.

வீ. இராசையா
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்.
வட கிழக்கு மாகாணம்.

மாணவர்களின் நிறைவான கல்வியின் கலங்கரைவிளக்கம்"

ஆசிச்செய்தி



யாழ். மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் 168ஆவது வருடாந்த பரிசளிப்பு வைபவத்தினையொட்டி வெளிவரும் இம்மலருக்கு, ஆசியுரை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ். குடாநாட்டில் பல அனர்த்தங்கள் இடம்பெற்று, மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிப்புள்ளாகி இருந்த நிலையிலும், இக்கல்விக் கூடத்தை மீண்டும் இயங்கவைத்து பரிசளிப்பு வைபவத்தையும் நாடாத்துவதையிட்டு நாம் பெருமையடைகின்றோம். இப்பரிசு நாள் சிறப்புற நடைபெற எனது வாழ்த்துக்கள்.

மானிப்பாய் பிரதேசத்தில் வசதிகுறைந்த மாணவர்களின் கல்விக் கூடமாக இருந்து வளர்ச்சி பெற்ற மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, இன்று தரம் 1 பாடசாலையாக வளர்ச்சிபெற்று நல்ல கட்டுக் கோப்புடன் இயங்கிவருகின்றது. ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத் திற்கும் அங்கு கடமையாற்றும் அதிபரதும் சக ஆசிரியர்களினதும் கூட்டுச் செயற்பாடுகள் முக்கிய காரணமாக அமைகின்றது என்பதற்கு மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்துவரும் அதிபர் திரு. அ.மு. அருணாசலம் அவர்களினதும் அவருக்கு பக்கபலமாக நின்று பணிசெய்துவரும் சக ஆசிரியர்களும் பெற்றோர்களும் பாராட்டிற்கு உரியவர்கள் மாணவர்களை சமூகப்பொருத்தப்பாடுடைய நற்பிரசைகளாக வளர்த்தெடுப்பதில் இவர்களது பங்கும் பணியும் தனித்துவமானது.

இப்பாடசாலை மேலும் வளர்ச்சிபெற்று இப்பிரதேச மாணவர்களின் நிறைவான கல்விக்குப் பக்கபலமாக இருக்க வேண்டுமென மனமார வாழ்த்துகின்றேன்.

இ. சிவானந்தன்,
சிரேஷ்ட உதவிச் செயலாளர்.
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு கிழக்கு மாகாணம்,

முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண

கல்விப்பணிப்பாளரின்

ஆசிச்செய்தி



ஐரோப்பியர் வருகையுடன் இலங்கையின் அரசியல், பொருளாதார நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்களை விட கல்வி முறையில் ஏற்பட்ட விளைவுகள் இலங்கையர்களில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியமையை மறக்க முடியாது.

இலங்கையில் சுயபாஷை கல்வித் திட்டம் அறிமுகமாகும்வரை யாழ்ப்பாணப் பிரதேசங்களில் ஆங்கிலக் கல்வி கற்றவர்களின் வீதம் ஒப்பீட்டளவில் ஏனைய பிரதேசங்களை விட உயர்வாக இருந்தமைக்கு ஐரோப்பியர்களினால் உருவாக்கப்பட்ட பாடசாலை அமைப்பு முறைகளே உந்து சக்தியாக இருந்து வந்துள்ளன.

அந்த வகையில் மானிப்பாய், வட்டுக்கோட்டைப் பிரதேசங்களில் மிஷனரிமார்களினதும், திருச்சபையினரினதும் முயற்சிகளின் விளைவாக ஆங்கில கல்விப் பாரம்பரியம் ஒன்று வளர்ச்சி பெற்று வந்தது. அதன் வளர்ச்சியை இன்று மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் செயற்பாடுகள் எடுத்துக்காட்டுகின்றன.

நீண்டதொரு கல்விப் பாரம்பரியத்தைப் பேணிவரும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை இன்றும் அந்தப் பாரம்பரியத்தைப் பேணிவருவதற்கு அதிபர் மற்றும் ஆசிரியர்களின் உழைப்பே அடித்தளமாக விளங்குகின்றது.

கல்வித் துறையிலும், கலை, பண்பாட்டு, விளையாட்டுத்துறைகளிலும் தனது முத்திரையைப் பதித்து வரும் இப்பாடசாலை தனது 168 வது ஆண்டு விழாவுடன், பரிசளிப்பு வைபத்தையும், ''மெமோறியல் மலர் – 7'' ஏன்ற மலரையும் வெளியிட்டு வைப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

இம்முயற்சியில் முன்னின்று உழைத்து வரும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விச் சமூகத்தினரைப் பாராட்டுகின்றேன்.

''மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவும் மெமோறியல் மலர் – 7 வெளியீட்டு விழாவும் சிறக்க வாழ்த்துகின்றேன்''.

எஸ். மகாலிங்கம்
முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடக்கு கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

"எங்கு திரும்பினும் நினைவுகளால் நிரம்பி நிற்கும் நிறைகுடம்"

வலயக் கல்விப்பணிப்பாளரின் ஆசிச்செய்தி



மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையிலிருந்து மலரப்போகும் மெமோறியல் மலர் – 7க்கான ஆசியுரை வழங்குவதில் நிறைவடைகின்றேன். நிறைவான மனிதர்களின் தலைமையில் வளர்ந்த மெமோறியல் ஆங்கில பாடசாலையின் இன்றைய தலைமைத்துவம் இணைந்த நல் ஆசிரியத் துவங்கள் பண்புமிகு மாணவர்கள். தொடர்பறாத பழைய மாணவர்கள் வல்லமைமிகு பா.அ.சங்கம் எங்கு திரும்பினும் நினைவுகளால் நிரம்பிநிற்கும். இங்கு உருவாகும் மலரின் வாசம் உயர்ந்துள்ள அதிபருக்குச் சமர்ப்பணமாய் உலகிற்குக் கலைப் பொக்கிஷமாய் அமைய வாழ்த்துகின்றேன்.

திருமதி றெஜினா இருதயநாதன்
வலயக் கல்விப்பணிப்பாளர்
வலிகாமம்.

"அறிவு சார் பொக்கிசங்களின் உரைகல்"

கோட்டக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



தனக்கே உரித்தான சிறப்பான பாரம்பரியங்களுடன் கடந்த 168 வருடங்களாக மானிப்பாயிலும் அதனைச் சூழ உள்ள பெரும் பகுதியிலும் கல்விப் பணியாற்றி சமூக முன்னேற்றத்திற்கு பெரும் தொண்டாற்றி வரும் நிறுவனமாக மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை விளங்கிவருகின்றது. மாணவர்களும் ஆசிரியர்களும் ஏனைய பெரியோர்களும் பயன்பெறும் வகையில் அறிவுசார் பொக்கிசங்களாக பல மலர்களை வெளியிட்ட மெமோறியல் அன்னை தனது ஏழாவது மலரை வெளியிட முனைந்து நிற்பது பெரு மகிழ்ச்சிக்குரிய அம்சமாகும்.

ஒன்றரை நூற்றாண்டுக்கு முன்பு இப்பாடசாலையை ஸ்தாபித்த அமெரிக்க மிசனறிமாரும் பிற்காலத்தில் இதை வளர்த்தெடுத்த தென்னிந்திய திருச்சபைக்கும் அண்மைக்காலத்தில் இப் பாடசாலையின் துரித வளர்ச்சிக்கு ஊன்றுகோலக விளங்கிய தலைசிறந்த அதிபர்களுக்கும் அர்ப்பணிப்பும் சேவை மனப்பாங்கும் உள்ள இன்றைய ஆசிரியர்களுக்கும் ஏனைய கல்விச் சமூகத்தவருக்கும் நாம் என்றென்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் ஒரு பாடசாலையைச் சகல வளங்களும் கொண்ட உயர் பாடசாலையாக்கும் கல்வி அமைச்சின் திட்டத்திற்கு அமைய இப்பாடசாலை தெரிவு செய்யப்பட்டிருப்பது. ஒவ்வொருவருக்கும் மனநிறைவை அளிக்கும் செய்தியாகும். இச் சந்தர்ப்பத்தில் தனது அயராத முயற்சியினால் தனது காலத்தில் பாடசாலையின் வளாகத்தை இரண்டு மடங்கிலும் பெரிதாக விரிவடையச் செய்து அரசின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அடித்தளமிட்ட அதிபர் திரு. அ.மு. அருணாசலம் அவர்கள் மானிப்பாய் வாழ் மக்களின் இதயங்களில் என்றென்றும் வாழ்வார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. மாணவராக, ஆசிரியராக, உபஅதிபராக 40 வருடங்களுக்கு மேல் மெமோறியல் அன்னையின் பிள்ளையாக அயராது ஊக்கமுடன்

உழைத்துவரும் அதிபர் திரு. அ.மு. அருணாசலம் இவ்வருடம் சேவையில் இருந்து ஓவ்வு பெற இருப்பது மெமோரியல் கல்விச் சமூகத்திற்கு பெரும் துயராக அமையப்போகின்ற வேளையில் தனது இறுதிக் காலம் வரையும் மெமோரியல் அன்னையின் வளர்ச்சியிலேயே தனது முழு நோக்கத்தையும் செலவிடுவார் என்ற உண்மை நம் எல்லோருக்கும் ஆறுதல் அளிக்கின்றது.

கற்றல் கற்பித்தல் துறையிலும் இணை பாடவிதான செயற் பாட்டாலும் மாணவர் ஒழுக்கத்திலும் தனக்கே உரித்தான சிறந்த பாரம் பரியங்களுடன் தொடர்ச்சியாக வளர்ந்துவரும் இப்பாடசாலை எமது மெமோரியல் என்ற உணர்வுடன் சேவையாற்றிவரும் தற்போதைய ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரால் மேலும் வளம் பெற்று வளர மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன்.

க. தனபாலசிங்கம்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
சண்டிலிப்பாய்.

யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரின் ஆசிச்செய்தி

கல்வியை கண்ணாகக் கொண்டு விளங்கும் யாழ் தீபகற்பத்தில் யாழ். மானிப்பாய் மெமோறியல் கல்லூரி தனது 168வது அகவையினை பூர்த்தி செய்து கல்வி உலகில் தனக்கென தனியான தோர் முத்திரை பதித்து நிற்பது பெருமைக்குரிய விடயமாகும். அதனையொட்டி வெளிவரும் "மெமோறியல் மலர் – 7" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

ஒவ்வோராண்டும் உயர்கல்விக்காக வெளியேறிக் கொண் டிருக்கும் மாணவர்களின் வரலாறே பாடசாலையின் வரலாறாக மிளர் கின்றது. காலத்தின் கடுவேகத்திலும் தன் கோலத்தின் எழில் சிறிதும் குன்றாது நீண்டதொரு வரலாற்றையும் சிறப்பான கல்விப் பாரம்பரியத் தையும் புகட்டி வரும் இப்பாடசாலையின் செயற்பாடுகள் கல்வி உலகிற்கு ஒரு முன்னுதாரணமாக விளங்கும்.

பாடசாலையில் வெறுமனே ஏட்டுக்கல்வியை மட்டும் போதிப்ப துடன் நின்றுவிடாது ஒழுக்கம், கட்டுப்பாடு, நேர்மை கொண்ட உயரிய நடத்தையுள்ள பிரஜைகளை உருவாக்கும் நிறுவனமாகவும் திகழ்வதும் பாடசாலையின் உருவாக்க அர்ப்பணிப்புடன் செயலாற்றும் அதிபர், ஆசிரியர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

பாடசாலையானது தனது கல்விச் செயற்பாடுகளினூடாக எமக் கென தனியான ஒரு தேசம் உருவாக்கப்படுவதற்கும் அதனைக் கட்டி யெழுப்பவதற்கும் கடந்த காலங்களைப் போன்று தொடர்ந்து முழு மையாக உழைக்கவேண்டும் என வேண்டிநிற்கின்றேன்.

செ. கஜேந்திரன்
பாராளுமன்ற உறுப்பினர்

யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரின் ஆசிச்செய்தி



கல்விச் செல்வத்தின் மேன்மையையும் அதன் தொன்மையையும் கட்டிக்காத்து நிற்கும் பெருமைக்குச் சொந்தமான யாழ் மண்ணின் மேற்குப் பிரதேசமான மானிப்பாய் நகரில் இருந்து கல்விச்சேவை புரியும் அதனிலும் மேலாக ஆங்கிலக் கல்வியை முன்னெடுக்கும் யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் அளப்பரிய பணி போற்றுதற்குரியதே.

168ஆண்டுகள் தொடர்ச்சியாக கல்விப்பணியாற்றும் இந்தப் பாடசாலைக்கும் அதன் வளர்ச்சிக்கம் பெரும் பங்காற்றும் அத்துணை நெஞ்சங்களும் ஆசிக்குரியோரே.

அந்த வகையில் மக்கள் சேவையில் என்னையும் இணைத்துக் கொண்டவன் என்ற வகையில் இப்பணி மென்மேலும் சிறக்க ஒத்துழைப்பு வழங்கும் பணியும் எனக்குண்டு. எனவே பண்பாடு, ஒழுக்கம் போன்ற கண்ணியமான பண்புகளுடன் பாடசாலை விளங்க பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உழைத்திட உறுதி பேணுவதாக அது அமையட்டும்.

நன்றி வணக்கம்.

என்றும் மக்கள் சேவையில்

நடராஜா இரவிராஜ்

பாராளுமன்ற உறுப்பினர் - யாழ் மாவட்டம்

நிர்வாக செயலாளர்

தமிழர் விடுதலை கூட்டணி

யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரின் ஆசிச்செய்தி

யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் 168 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளிவரவுள்ள "மெமோறியல் மலர் –7" இற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு கொள்கின்றேன்.

அறிவூட்டும் கல்விச் சமூகம் சார்ந்த நிறுவனம் ஒன்று தனது வரலாற்றுப் பதிவுகளின் ஊடாக தன் சேவைகளையும், செயற்பாடு களையும், வெளிக்கொணருவதும், அறிவுத் தேடுதலின் ஈடுபடுவோர்க்கு அறிவியல்சார் விடயங்களை கிடைக்கச் செய்வதும் புதிய பல படைப் பாளிகளுக்கு புத்தூக்கம் ஏற்படுத்தி புதுமைகளை தேட வழி செய்தலும் காலத்தின் சிறப்புப் பணியாக கருதுகிறேன்.

அந்த வகையில் மெமோறியல் மலர் –7 காலத்தின் பதிவாகவும் சேவையின் வெளிப்பாடாகவும் வெளிவருவது மகிழ்வினைத் தருவதுடன் தமிழர் தாயகத்தின் அறிவியல் சார் சமூகத்தின் உருவாக்கத்திற்கும் சிறந்த தேசியப்பற்று மிக்க தலைமைகளின் தோற்றத்திற்கும் இம் மலர் வழி செய்யும்.

இவ் வேளையில் இம் மலர் வெளிவருவதற்கு, வல்ல நல்ல காப்பாளரின் கண்காணிப்பில் உழைத்த அனைவருக்கும் வாயார வாழ்த்தி, மலர் அழகுடனும் சிறப்புடனும் வெளிவர இறையருளை வேண்டி நல்லாசியினை தெரிவித்து மகிழ்வடைகின்றேன்.

நன்றி.

கி. சிவநேசன்
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ் தேர்தல் மாவட்டம்

"சிறந்த மாணவர்களை உருவாக்கும் உயர் கல்விக்கூடம்"

ஆசிச்செய்தி



"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" நீதி 1:7

ஒரு பாடசாலையின் வெற்றிக்குப் பல காரணங்கள் உண்டு. பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என்று பட்டியல் நீண்டு கொண்டுபோகும். மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் வளர்ச்சியை 1986ம் ஆண்டு முதல் அவதானித்ததை நான் எழுதுகிறேன். அதிபர் அ.மு. அருணாச்சலம் அவர்களுடன் 1986ஆம் ஆண்டு நட்பு ஏற்பட்டது. அந்த நாட்களிலிருந்து பாடசாலையின் வளர்ச்சியைக் காண்கிறேன்.

இந்த பாடசாலை பல சிறந்த மாணவர்களை உருவாக்கி இருக்கின்றது. அவர்களில் சிலர் எமது ஆலயத்திலும் பல பொறுப்புள்ள பதவிகளை வகிக்கின்றார்கள். இதற்கு காரணம் அதிபர் அருணாச்சலம் அவர்களின் கடினஉழைப்பு அவர் தனது நேரம், சுகம், சக்தி அனைத்தையும் இதற்காகத் தியாகம் செய்திருக்கின்றார். பல கசப்பான அனுபவங்களைச் சந்தித்த போதும் தனது பாடசாலையை விட்டு போகாமல் பாடுபட்டார். உண்மையாக உழைப்பவர் ஒருவர் தான் உயிரோடு இருக்கும்போதே சேவையின் பலனை காண்பது அரிது. ஆனால் திரு. அ.மு. அருணாச்சலம் அவர்கள் தமது வாழ்க்கையில் இலக்கை கண்டுவிட்டார்.

அவருடைய உழைப்பு பாராட்டப்பட வேண்டியது. அவருடைய சேவை தொடர்ந்து எமது பிள்ளைகளுக்குத் தேவைப்படுகின்றது. சகல ஆசீர்வாதங்களாலும் ஆசீர்வதிக்கின்ற கர்த்தராகிய இயேசுதாமே இவரையும் பாடசாலையையும் ஆசீர்வதிப்பாராக.

வணபிதா. லெஸ்லி ஜெ. மத்தியூஸ
கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்
கொக்குவில்

ஆசியுரை



மானிப்பாய் மெமோறியல் கல்லூரி 'மெமோறியல் மலர் 7'க்கு ஆசியுரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். இக்கல்லூரி மேன்மேலும் பல்துறைகளிலும் வளர்ச்சியுற்று எமது மக்களுக்கு சேவை செய்ய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

சாதாரண மக்கள் கூட கல்வியைப் பெறும் நிலை இன்று உருவாகியுள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால் எமது சிறார்களுக்கு எவ்வகையான கல்வி, போதிக்கப்பட வேண்டும் என்பதில் பெற்றோர் கூடிய கவனம் செலுத்தத் தவறிவிடுகிறார்கள். நாம் கற்கும் கல்வி நமது வாழ்வுக்கு ஊதியம் பெற்றுத்தருவதற்காக அமையாமல் நல்ல வாழ்க்கை வாழ அது வழி சமைப்பதாக அமைதல் வேண்டும். கல்வியின் இறுதி இலக்கு ஒழுக்கம், பணிவு எனலாம். பகவான் பாபா கூறுகிறார். "Science without morality and Commerce without Principles is not only bad but Positively dang erous" என கூறுகிறார். எனவே இன்றைய அவசியம் எமது சிறார்களுக்கு ஏனைய கல்வியுடன் சேர்த்து ஆன்மீகக் கல்வியும் ஊட்டப்பட வேண்டும். நல் ஒழுக்கங்கள் நல் இலட்சியங்கள், கொள்கைகள் பிஞ்சு மனதில் பதியுமாறு ஊட்டப்படல் வேண்டும்.

இக்கல்லூரி இவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டு இளம் தலைமுறையினரை உத்தம தலைவர்களாக மாற்ற வேண்டும் என பிரார்த்தித்து இக்கல்லூரி சிறப்புடன் பொலிய ஆசி கூறுகிறேன்.

கி. வசந்தசேனன்
சட்டத்தரணி
பழைய மாணவர் சங்க காப்பாளர்

உப அதிபரின்
வாழ்த்துச் செய்தி



யா / மானிப்பாய் மெமோறியல் கல்லூரியின் 168வது ஆண்டு நிறைவையொட்டி மெமோறியல் மலர் 7 என்னும் சஞ்சிகையானது எனது பணி மெமோறியல் தாயின் மடியில் தொடர்ந்திருக்கும் இவ் வேளையில் வெளிவருவதையிட்டு மட்டற்ற மகிழ்சியடைகின்றேன்.

மெமோறியல் கல்லூரியை அனுபவமும் திறமையும் மிக்க அதிபர்கள் பலர் வழி நடத்தி வந்தமை யாவரும் அறிந்த ஒரு விடயமாகும். அப்படிப்பட்ட அதிபர்களில் ஒருவரான அமரர் இ.சுந்தர்தாஸ் அவர்கள் இக்கல்லூரியை வழிநடத்தும் காலத்திலே அவரது முயற்சியால் நான் இக் கல்லூரியில் 1983ஆம் ஆண்டு காலடி எடுத்து வைத்தேன். அமரர் அவர்கள் இக் கல்லூரியின் வளர்ச்சிக்காக கல்வி, ஒழுக்கம், கட்டுப்பாடு மற்றும் இணைக் கலைப் பாடங்கள் போன்ற துறைகளில் எடுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கையால் எமது மெமோறியல் தாயின் பெயர் யாழ். குடாநாட்டில் மட்டுமல்ல தென்னிலங்கையிலும் கொடிகட்டிப்பறந்து கொண்டிருக்கின்றது. அமரர் அவர்கள் எம்மை விட்டு பிரிந்து சென்றாலும் அவரது பணியை அவரது துணைவியார் திருமதி ருக்மணி சுந்தரதாஸ் அவர்கள் தொடர்ந்து ஆற்றிவருவது நாம் செய்த பெரும் பாக்கியமாகவே கருதுகின்றோம்.

அமரர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் இடையில் வெளிநாடு சென்றதை தொடர்ந்து.. திரு.க.பொன்னுத்துரை அவர்கள் இக் கல்லூரியை தன்னால் இயன்றவரை சிறப்பாக வழி நடத்தி வந்தார் அவரைத் தொடர்ந்து இன்றைய அதிபரான திரு.அ.மு. அருணாசலம் அவர்கள் மெமோறியல் தாயைப் பொறுப்பேற்றுக் கொண்டார். அவரது காலத்தில் எமது கல்லூரி மிக வேகமாக சகல துறைகளிலும் வளர்ச்சியடைந்து சண்டிலிப்பாய் கோட்டத்தில் ஒரு முதன்மைப் பாடசாலையாக முன்னேறிவருகின்றது. எமது கல்லூரி தற்போது பௌதீக வளம் நிறைந்ததாக காணப்படுவதற்கு காரணகர்த்தாவாக அமைந்தவர் எமது இன்றைய அதிபராகும். அதிபர் அவர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை மாணவர் சங்கம், ஆசிரியர் சங்கம், ஆகியவற்றின் ஒத்துழைப்புடனேயே இக் கல்லூரியின் வளர்ச்சிக்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

கல்வியில் 2000ஆம் ஆண்டு கலைத்துறை மாணவன் ஒருவன் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதன்மை இடம் பெற்றதை தொடர்ந்து 2003ஆம் ஆண்டு க.பொ.த.(சா.த) பரீட்சையில் ஒரு மாணவன் சகல பாடத்திலும் "A" தர சித்தி பெற்றமையும் எமது மெமோரியல் கல்லூரியின் சாதனைகளாகும். விளையாட்டுத் துறையிலும் மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர். மாணவர்கள் இவ்வாறு மேலும் சாதனை படைக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

மேலும் மெமோரியல் 7 மலருக்கு நல்ல பல ஆக்கங்களை தந்துதவி இம் மலர் சிறப்பாக வெளிவர உழைத்த அனைத்து உள்ளங்களையும் வாழ்த்தி இக்கல்லூரி என்றும் ஒளிவிட்டு பிரகாசிக்க எல்லாம் வல்ல நடராஜப் பெருமானையும், யேசு பிரானையும் பணிந்து விடைபெறுகின்றேன்.

நன்றி.

சி.சண்முகநாதன்
உபஅதிபர்

இணை உப அதிபரின்
வாழ்த்துச் செய்தி



யாழ் மானிப்பாய் மெமோறிய[illegible] கல்லூரி 168 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மெமோறியல் மலர் 7 என்னும் சஞ்சிகை வெளியிடுவது பெருமகிழ்ச்சியைத் தருகின்றது.

எமது கல்லூரி கடந்த காலங்களில் ஆற்றலும் ஆர்வமும் செயற்திறனும் மிக்க அதிபர்களால் வழிநடத்தப்பட்டு வந்தமை யாவரும் அறிந்ததே.

ஒவ்வொரு அதிபரும் அவரவர் காலப்பகுதியில் கல்லூரியில் பல்வேறுபட்ட சாதனைகள் நிலைபெற செயலாற்றியுள்ளனர். தற்போதைய அதிபர் திரு. அ.மு. அருணாசலம் அவர்கள் கல்லூரி பௌதீக வளங்களைப் பெருமளவில் பெற்று துரித வளர்ச்சி அடைவதற்கும், மாணவர்கள் கல்வித்தரத்தில் சிறந்த பெறுபேற்றை அடைவதற்கும், இணைக்கலைப் பாடவிதானத்தில் பல்வேறுபட்ட சாதனைகளைப் பெறுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தமை கண்கூடு.

1997 ஆம் ஆண்டுக்குப் பின் துரிதவளர்ச்சிக்கு பக்கபலமாக உபஅதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் ஆகியோர் நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் இணைக்கலைப் பாடவிதானத்தில் கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம், தேசியம் ஆகிய மட்டங்களில் பங்கு கொண்டு கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர். இதையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதுடன் இனிவரும் காலங்களிலும் எமது கல்லூரியின் புகழ் மேன்மேலும் பிரகாசிக்க வேண்டும் என இறை வனைப் பிரார்த்தித்து இச்சஞ்சிகை வெளிவர அயராது உழைத்த அனைத்து உள்ளங்களையும் மனமார வாழ்த்தி எனது வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

வி.ஜெ.பை. மூர்த்தி
இணை உபஅதிபர்

தூரிகையின் முனையில் துவண்டெழுந்த மலர் ஆசிரியரின் சிந்தனைத் துளிகள



என் அன்புக்குரிய இனிய நெஞ்சங்களே உங்கள் அனைவருக்கும் என் இனிய வணக்கங்கள் பல.

எமது மெமோறியல் அன்னையின் மெமோறியல் – 7 என்னும் அன்புச் செல்வமானது அரும்பாகி, மொட்டாகி இன்று மலர்ந்து உங்கள் கைகளில் தவழ்வதற்கு மறை பொருளாக நின்று அருள்பாலித்த மருதடியானின் ஞானக் கண் பார்வையும் தில்லைக் கூத்தன் நடராஜப் பெருமானின் நல் அருளுமே காரணமாதலால் அக்குல தெய்வங்களின் பாதார விந்தங்களைப் பணிந்து கொண்டு எனது தூரிகை உங்களோடு உறவாடிக் கொள்ள முனைகின்றது.

மெமோறியல் அன்னையின் கடந்த இரு தசாப்தங்களுக்கிடையே நான்கு மலர்கள் வெளிவந்துள்ளபோதும், இந்நான்காவது மெமோறியல் – 7 மலர் ஒரு வரலாற்றப்பதிவாக அமையும் என்பது எனது நீண்டகால அனுபவத்தின் கருத்தாகும். இத்தகைய எதிர் காலத்து வரலாற்றுப் பதிவாக அமையப்போகும் இம் மலரின் பத்திரிகை தர்மத்துக்கு ஒத்த பணியை என்னிடம் வழங்க வேண்டும். எனக் கருதிய உள்ளத்துக்கும் குறிப்பாக மலர்க்குழுவுக்கும் எமது கல்லூரியின் அதிபர் திரு. அ.மு. அருணாசலம் அவர்கட்கும் எனது உளம் நிறைந்த நன்றியைக் கூறிக்கொள்வதில் மகிழ்சியடைகின்றேன்.

இம் மெமோறியல் – 7 என்னும் சஞ்சிகையானது பல்வேறு சிறப்புக்களை தாங்கி முன்னைய சஞ்சிகைகளின் கட்டமைப்பு மாதிரியில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு வளமாக வெளிவர வேண்டும் என்ற ஆதங்க உணர்வின் பல்வேறு நோக்கிலும் வெற்றியடைந்திருப்பதை நீங்கள் உய்த்துணர்ந்து கொள்வீர்கள் என்பதில் ஐயத் துக்கிடமில்லாத வகையில் அதன் அமைப்பும் தொகுப்பும் அமைந் திருக்கின்றது. மேலும் எமது இம் மலரில் பீடாதிபதிகள, துறைசார் தலைவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்களது பயன் தரு ஆக்கங்களும் எமது கல்லூரியினதும் மாணவர்களினதும் செயற்திறன்களை வெளிப்

படுத்தும் புகைப்படங்கள் பல்வேறு வரலாற்றுக் குறிப்புக்கள் பாடசாலை புனரமைப்புத் தோற்றம் என்பன அழகுபடுத்தும் வர்ணங்களாக மட்டுமல்லாது மகரந்தங்களாகவும் அமைந்து விளங்குகின்றன.

பாடசாலைச் சஞ்சிகையானது வெறுமனே கட்டுரைகளுடனும், கதைகளுடனும் வெளிவராது பாடசாலையின் செயற்பாடுகளை பெருமளவில் தாங்கிவர வேண்டும் என்ற குறிக்கோளை நிறைவு செய்யும் வகையில் எமது மெமோறியல் மலர் 7 இல் பாடசாலையின் செயற்பாடுகள், மாணவர்களது சாதனைகள் கல்வி வளர்ச்சியின் முன்னேற்றங்கள் பரீட்சைப் பெறுபேறுகள் என்பன அறிக்கைப்படுத்தப்பட்டு வரைபடங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

மெமோறியல் மலர் 7 சிறப்பாக வெளிவருவதற்கு பல உள்ளங்கள் எமக்கு அவ்வவ் சந்தர்ப்பங்களில் உதவியிருக்கின்றன. குறிப்பாக இம் மலர் சிறந்த முறையில் வெளியிடுவதற்கு தனது முழுமையான பங்களிப்பை நல்கிய புனித வளன் அச்சக முகாமையாளர் வணக்கத்திற்குரிய ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாருக்கும், ஏனைய பணியாளர்களுக்கும் எனது உளம் கனிந்த நன்றிகளைக் கூறிக்கொள்வதோடு எமக்குத் தேவையான வழி காட்டல்களையும், ஆலோசனைகளையும் அவ்வப் போது வழங்கி எனது பணி சிறப்புற உதவிய எமது பாடசாலை அதிபர் திரு. அ.மு. அருணாசலம் அவர்கட்கும் கட்டுரைகள், கவிதைகள் போன்றவற்றை சேகரித்தும் ஒழுங்குபடுத்தியும், திருத்தங்களைச் செய்தும் வழிகாட்டி உதவிய திருமதி சந்திரா யோகேஸ் வரன் அவர்கட்கும் எனது விசேஷ நன்றியறிதலை தெரிவித்துக் கொள்வதோடு மேலும் எனக்கு பல வழிகளிலும் பக்க பலமாக நின்று செயலாற்றிய மலர் குழுவுக்கும், மலர் சிறக்க மனம் உவந்து சிறந்த நல் ஆசியுரைகளை வழங்கிய சமயப் பெரியார்க்கும், ஏனைய கல்வி அறிவு சார் பெருந்தகைகளுக்கும் மலர் ஆசிரியன் என்ற வகையில் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். இவ்வாறான நிறைவுகளுடன் வெளிவரும் மெமோறியல் 7 மலர் நல்லோர் உள்ளங்களில் எல்லாம் ஒளிவீசி நிற்கும் என்ற நம்பிக்கையுடன் அனைவருக்கும் கரம் கூப்பி அன்புதனில் சிரம் தாழ்த்தி செலுத்துகின்றேன். நன்றி பல நன்றி.

அன்புடன்
நா. பாலகிருஷ்ணன்
(N.பாலா)
மலர் ஆசிரியர்

பெருஞ்சொற் செல்வர்

ஆறுதிருமுருகன் அவர்களுக்கு

27–07–2003 ஆம் திகதி சேந்தன் வழங்கிய

வாழ்த்துக்கவி

1. சமயம் சமூகம் சாற்றுநற் கல்வி
எமதுபண் பொழுக்கம் யாவுமே மேலாய்
அமைய வேபணி ஆற்றிடு மேன்மையால்
சிமயம் போலச் சிறந்திடு செல்வரே

2. தருமந் தெரிந்து மேற்சைவந் தெளிந்து
அருளார் அறநெறி ஆழம் அறிந்து
திருவும் கல்வியுஞ் சீருந் தேங்கிஇவ்
இருநிலம் ஏத்திட ஏறென வாழ்கவே

3. வேத ஆகம விளையுள் புக்குமேல்
காதல் ஆகி கருத்தினை ஆராய்ந்து
நீதி ஆனவை நெஞ்சுறப் பதியவே
ஓதச் செய்திடும் ஓர் பெருங் குன்றமே

4. முன்னம் பல்புல வோர்கள் மணந்துமே.
கன்னி ஆகவே களித்திடு கன்னியை
நின்னல் ஆக்கிய பெருமையை நினைந்து
இன்னும் வாழ்கென ஏத்துவ சாலுமே

5. கஞ்ச மலருறை கலைமகள் கண்ணருள்
விஞ்சு வித்தகமே மேலெழப் பொருள்நயம்
அஞ்சல் இன்றி அவையினை ஈத்திடும்
செஞ்சொற் செல்வநீ சீர்பெற வாழ்கவே.

பண்டிதர் சி. கார்த்திக்கேசு "சேந்தன்"

எங்கள் தாயவள் கொடியிது

(கொடியேற்றப் பாடல்)

ஏறுதுபார் கொடி ஏறுது பார்
ஏறுதுபார் கொடி ஏறுது பார் - இங்கு
ஏறுதுபார் கொடி ஏறுது பார் - தமிழ்
ஈழத்தின் வேதனை தீர்த்த கொடி - எட்டுத்
திக்கிலும் மானத்தை சேர்த்த கொடி
காலத்தை வென்றுமே நின்ற கொடி - புலி
காட்டிய பாதையில் சென்ற கொடி - (ஏறுது பார்)

செக்க நிறத்திலே ... ... வேங்கை நடுவிலே
சீறிடும் கொடியிது - தமிழ்
மக்களைக் காத்தநம் - மானமாவீரரை
வாழ்த்திடும் கொடியிது - புலி
வீரத்தின் கொடியிது - மா
வீரனின் கொடியிது - (ஏறுது பார்)

எத்தனை எத்தனை வேங்கைகள் ரத்தத்தில்
ஏறிய கொடியிது பெரும்
சத்திய வேள்வியில் செத்தவர் மீதினில்
சாற்றிய கொடியிது தமிழ்
ஈழத்தின் கொடியிது - புலி
ஏந்திய கொடியிது - (ஏறுது பார்)

சாதிகள் சண்டைகள் சாயத்து விழுத்திய
சாதனைக் கொடியிது - சங்கு
ஊதி முழங்கிட ஊர்மனையாவிலும்
உலவிய கொடியிது - சம
தர்மத்தின் கொடியிது - எங்கள்
தாயவள் கொடியிது - (ஏறுது பார்)

ஆயிர மாயிரம் பேரென வேங்கைகள்
ஆக்கிய கொடியிது - பிர
பாகரன் என்றிடும் காவிய நாயகன்
போற்றிடும் கொடியிது தமிழ்த்
தேசத்தின் கொடியிது எங்கள்
தேசியக் கொடியிது. - (ஏறுது பார்)

கனிஷ்ட பிரிவு அதிபரின் அறிக்கை



ஒரு மாணவனின் கல்வி வளர்ச்சிக்கு உறுதியாக இருப்பது ஆரம்பக்கல்வி. ஆரம்பக் கல்வியில் இடும் அத்திவாரமே ஒரு மாணவனை வளமான மாணவனாக்கும். அந்த வகையில் எமது கல்லூரியின் ஆரம்பப்பிரிவு பெரும் பணியாற்றி வருகின்றது. எமது கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களில் 90% வீதமானவர்கள் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள மாணவர்கள் எனவே அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு கூடிய கவனம் எடுப்பது எங்கள் கடைமை அதற்கமைய தரம் ஒன்றில் இருந்து தரம் 5வரை உள்ள இளஞ்சிறார்களின் கல்வி வளர்சிக்கு கனிஷ்ட பிரிவு ஆசிரியர்கள் அரும்பாடுபட்டு வருகின்றார்கள்.

பாடத்திட்டத்திற்கு புறம்பாக எழுத்தறிவூட்டற் பயிற்சி, விசேட வகுப்புக்கள், தரம் 5 புலைமைப் பரிசிற் பரீட்சை வகுப்புக்கள் என்பன பாடசாலை நேரம் நிறைவுற்றதும் மேலதிகமாக நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாக மாணவர்கள் மேல் வகுப்புக்களில் இடர்பாடுகளின்றி கல்வியை நல்ல முறையில் தொடர முடிகின்றது. எமது பாடசாலையில் ஆசிரிய ஆளணி தளபாட வசதிகள் குறைந்த நிலையிலும் எமது சிறார் களுக்கு கல்வி வீருத்தி செய்யப்பட்டு வருகின்றது.

இளம் சிறார்களுக்கு குழந்தை இலக்கிய மன்றம் மூலம் கவின்கலை வளர்ச்சிக்கும் உதவுகின்றது. வருடாவருடம் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு என தனியானதொரு விளையாட்டுப் போட்டியை நடாத்தி வருகின்றோம். இம் மாணவர்களது வளர்ச்சிக்கு ஆசிரியர்கள் அரும்பெரும் பாடுபட்டு தங்களை அர்ப்பணித்து வருகின்றார்கள். கனிஷ்ட பிரிவு மாணவர்களின் வளர்ச்சிக்கு அதிபர் திரு.அ.மு. அருணாசலம் அவர்கள் பேருதவி புரிந்து கனிஷ்ட பிரிவு வளர்ச்சிக்கு உதவி வருகின்றார்.

K. சிவநேசன்
கனிஸ்ட பிரிவு அதிபர்

அதிபர் அறிக்கை

மதிப்பார்ந்த முதன்மை விருந்தினர் அவர்களே!
வணக்கத்துக்குரிய சமயகுருமார்களே,
சிறப்பு விருந்தினர்களே,
விசேட, கௌரவ விருந்தினர்களே,
முன்னாள் அதிபர், ஆசிரியர்களே,
சகோதர பாடசாலை அதிபர்களே,
மாணவர்களே,
பெற்றோர்களே,
பழைய மாணவர்களே,
நலன் விரும்பிகளே,

'கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக' எனும் தெய்வப்புலவரின் குறளமுதந்தரும் நோக்கையும் (Vision), கல்வியின் பயன் வாழ்வாங்கு வாழுதல் 'நிறைவாழ்வு' (Abundant life) எனும் மகுட வாசகத்தை (Mission)யும் கொண்டு கல்விப்பணியாற்றிவரும் எமது மெமோறியல் அன்னையின் 168வது ஆண்டுநிறைவு, மெமோறியல் மலர் –7 வெளியீடு, பெற்றோர் தினம், வருடாந்தப் பரிசளிப்பு ஆகியன ஒன்றிணைந்த இம்மாண்புறு விழாவுக்கு வருகை தந்துள்ள தங்கள் அனைவருக்கும் எனது இனிய வந்தனங்கள்!

இன்றைய முதன்மை விருந்தினர் அவர்களே,

பண்பாட்டின் உறைவிடமான காரைநகர் தந்த மைந்தன், வலிகாமம் கல்விப் புலத்தைச் செழிக்க வைத்த செம்மல், மெமோறியல் அன்னை மேல் தாளாத பற்றாளன், தன்னம்பிக்கையுடன் உறுதி கொண்டுழைத்து மிளிர்ந்த பேராளன், நல்லாசானாய் நிர்வாகத்திறன் கொண்ட அதிபராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராக, உழைத்து வலிகாகமக் கல்விப்புலத்தில் முன்னுதாரணமாக திகழ்ந்த நற்குரு, யாழ் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் உயர்திரு ப. விக்கினேஸ்வரன் அவர்களே, தங்கள் நேரடியானதும் மானசீகமானதும் ஆன ஆசிகளும் வழிகாட்டல்களும் இன்றைய மெமோறியல் அன்னையின் வளர்ச்சிக்கும், புகழுக்கும் காரணமாக அமைந்தன என்பதை நன்றியுடன் தெரிவித்து, அகமகிழ்ந்து இருகரம் கூப்பி வரவேற்கின்றோம்.

துணைவரின் சேவைகள் எம் மாணவர்களும் சமூகமும் பெற்றுக் கொள்ள அருந்துணை ஆற்றிவரும் இன்றைய முதன்மை விருந்தினரின் துணைவி திருமதி தவமணி விக்கினேஸ்வரன் அவர்களே! உள்ளத்தே தூய்மை கொண்ட தங்கள் கரங்களால், எம் மாணவர்கள் பரிசு பெறக் கிடைத்தமையையிட்டு மகிழ்வுற்று இன்முகம் கொண்டு தங்களை வரவேற்கிறோம்.

தமிழர் தம் முதுபெரும் சொத்தாம் கல்வியை தரங் குன்றா நிலையில் பேணி தமிழீழ மாணவர் பெற வழிகாட்டி அனுதினமும், அயராது உழைத்து வரும் தமிழீழக

கல்விக் கழகத்துணைப் பொறுப்பாளர் அன்பு மிகு அருண் ஆசிரியர் அவர்களே! தமிழ்த் தேசியத்தில் காலனாம் தலைவர் வே. பிரபாகரனின் தீர்க்கதரிசன வடிவமைப்பின் உறுப்பினரான தாங்கள் சார்ந்த கழகம், திரு. வே. இளங்குமரன் அவர்களது தலைமையில் கடந்த ஒன்றரைத் தசாப்தங்கட்கு மேலாக, பல்வேறு இடர்கள் மத்தியிலும் ஆற்றிவரும் பணிகள், ஈழத் தமிழர் தம் வரலாற்றின் பதிவுகளாகும். விசேடமாக, வலிகாம இடப் பெயர்வு (1995 – 10 – 30)க்கு முன் தமிழர் கல்விக்கழக வழிகாட்டல்கள், எமது பாட சாலையின் வளர்ச்சியின் உச்சக் கோட்டை தொட்டுநின்றது. விசேடமாக க. பொ. த. பரீட்சைகள் தமிழீழத்திலே செவ்வனே நடாத்த முடியாத நிலையிருந்த போது அப்பரீட்சைக்குச் சற்றும் தரம் குறையாத நிலையில் அதையொத்த பரீட்சையொன்றைப் பலமுறை நடாத்தி, எம் மாணவர்களும் கல்வியில் உயர வழிகாட்டிய பெருந்தகை தாங்கள். வன்னிப் பெருநிலப்பரப்பு, மாணவர்களது கல்வியின் மேம்பாட்டுக்காக காலங்காலமாக, துயரின் மத்தியிலும் பணியாற்றிய செம்மல் தாங்கள். ஒரு தசாப்த காலத்தின் பின் எமது பாடசாலையின் இப்புனிதமான விழாவிற் கலந்து கொண்டு சிறப்பிப்பது கண்டு மெமோறியலாள் பேருவகையடைகிறாள். இன்தமிழில் வந்தனம் கூறி வரவேற்கிறோம் வருக!

சண்டிலிப்பாய்க் கல்விக்கோட்ட கல்விப்பணிப்பாளர் திரு. க. தனபாலசிங்கம் அவர்களே, தங்கள் கடமை சார்ந்த அன்பான அரவணைப்பும் வழிகாட்டலும், மெமோறியல் வளர்ச்சிக்கு பெருந்துணையாகின. 'கல்வியே கருத்தனம்' என்பதை சமூகத்திற்கு உணர்த்தும் உள்ளங்கொண்ட தங்களை இவ்விழாவுக்கு வருக என வரவேற்று மகிழ்கிறோம்.

'மெமோறியல் மலர் 7' வெளியீட்டுரை நிகழ்த்தி தெய்வீக மணங்கமழ வெளியிடு செய்து வைக்க வருகை தந்துள்ள கலாபூசணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை ஐயா அவர்களே! சைவப்பணியும், சமூகப்பணியும், தங்கள் சீரிய, கல்விப் பணியும், கலைத் துறைப்பணியும் நாடளாவிய நிலையில் மதிக்கப்பெற்று, சான்றோர்களால் தலைநகரில் 'கலாபூசணம்' விருது பெறவைத்ததை அறிந்து, மகிழ்ந்து, உளந்திறந்து பாராட்டி வாழ்த்தி வணங்குகிறோம். நிறைவாழ்வு பெற்று வாழ்க என வாழ்த்துகிறோம். நல்லா சானாய், முதுபெரும் மனிதனாய் எமக்கு வழிகாட்டிய தங்களை நன்றியுடன் வரவேற்பதில் மகிழ்வடைகிறோம்.

சைவத் திருவும், செம்மனமும் கொண்ட செஞ்சொற்செல்வர் உயர்திரு ஆறு. திருமுகன் அவர்களே! மெமோறியலன்னையின் புனித நிகழ்வுகளில் தவறாமல் கலந்து கொண்டு ஆசி வழங்கிய பெருந்தகையே. இன்றைய நன்னாளில் 'மெமோறியல் மலர் – 7' தங்கள் திருவுள்ளத்தால், மணம் கமழ நாம் நுகர கிடைத்த வாய்ப்புக்கு மகிழ்ச்சியடைகிறோம். தங்களை வருக வருக என்று வரவேற்பதில் பேருவகை அடைகிறோம்.

எமது பாடசாலை வளர்ச்சிக்கு தங்கள் சேவைக்காலத்தில் அயராது உழைத்த முன்னாள் அதிபர், ஆசிரியர்களே, மெமோறியலாளின் மடிமண்ணில் கல்வி பயிலத் தவழும் மாணவச் செல்வங்களே! உங்களனைவரையும் வரவேற்பதில் மகிழ்வடைகிறோம்.

மெமோறியல் கல்லூரியின் துரித வளர்ச்சிக்கு அத்திவாரம் இடுவதற்கு மனம், வாக்கு தூய்மையுடன், வறுமையிலும் செம்மையுடன், சிறுதுளி பெருவெள்ளமென, கிள்ளியும், அள்ளியும், மனவளம், பொருள்வளம், வாரி வழங்கும் என் இதயத்தில் என்றும் நிறைந்த இனிய பெற்றோரே, பழைய மாணவர்களே! நலன் விரும்பிகளே, தங்கள் அனைவரையும் நன்றியுடன் வரவேற்கிறோம்.

எமது பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு அறிக்கையை இன்று வாசித்தளிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். 2000ம் கல்வியாண்டு நிறைவு வரையான காலப் பகுதிக்குரிய அறிக்கையும், பாடசாலை வரலாறும் 12–06–2001ம் வருடம் வெளியான 'மெமோறியல் மலர் – 6' சஞ்சிகையில் இடம் பெற்றுள்ளன. தொடர்ச்சியாக, அறிக்கைகள் பாடசாலை வரலாற்றாவணமாகின்றபடியால் 1–1–2001 தொடக்கம் 31–12–2003ம் வருடம் வரையான கல்லூரிச் செயற்பாடுகள் பிரதான ஆவணக் குறிப்புகளாக இங்கு தரப்படுகின்றன. 12–06–2004ம் ஆண்டு நடைபெறவேண்டிய இந்நிகழ்வு தவிர்க்க முடியாத சில காரணங்களால், பின்தள்ளப்பட்டு இன்று நடைபெறுகிறது. இதன் காரணமாகவும், 02–11–2004ல் அதிபராகிய நான் சேவையிலிருந்து ஓய்வு பெற விருப்பதனாலும், உரிய பரிசளிப்பு அறிக்கைக் காலத்திற்கு அப்பாலும் சென்று சில முக்கிய பாடசாலை நிகழ்வுகளை மட்டும் அறிக்கைப்படுத்தி ஆவணப்படுத்த முயன்றுள்ளேன். வரன்முறை தவறிய செயற்பாடாயினும், ஆவண முக்கியத்துவம் கருதி, அனைவரும் ஏற்றுக் கொள்வார்களென்று திடமாக நம்புகிறேன்.

ஒழுக்கம்

அறிவையும், ஆன்மீகத்தையும் தேடுபவர்கள் இன்று ஆதங்கப்படுவது சர்வதேசரீதியில் காணப்படும் ஒழுக்கயீனம் பற்றியதாகும். ''மனிதனாக வாழ விரும்பும் எவரும் ஒழுக்கத்தைக் கைவிடார். ஆனால் இன்று இளந்தலைமுறைகள் ஒழுக்கத்தை கைநழுவ விட்டு இடர்படுவது கண்டு வேதனையடையாதோர் எவருமிலர். மேலை நாட்டு நாகரிக மோகம், ஊடகங்களின் தீர்க்கதரிசனமற்ற செயற்பாடுகள், எம்மண்ணில் பெரும்பாலானோர் கடின உழைப்பைக் கைவிட்டு, வெளிநாட்டுப் பணத்தை நம்பி வாழுதல் போன்ற இன்னோரன்ன காரணிகள் இன்றைய சமுதாயச் சீர்கேட்டுக்கு காரணமாகின்றது. இத்தகைய மூரண்பாட்டுக் கோலங்களுடாக எதிர்நீச்சல் அடித்தும், போராடியும் பகீரதப் பிரயத்தனங்களிடையேதான் பாடசாலைகளில் ஒழுக்கத்தைப் பேணும் கடின நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆயினும், எம்மாணவர்கள் மெமோறியலின் விழுமியங்களுக்கு அமைவாக, ஒழுக்கம் பேணிவருவது மகிழ்வு தருகிறது. இதற்காக தம்மை அர்ப்பணித்து உழைக்கும் ஒழுக்காற்றுதுறை ஆசிரியர்கட்கும், மாணவர் தலைவர்கள், சிரேஷ்ட மாணவ தலைவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

பாடசாலையின் வளங்கள்

எமது பாடசாலையின் அன்றைய மாணவர் தொகை 1189 ஆகும். தரம் 1 தொடக்கம் 13 வரை வகுப்புப் பிரிவுகள் 36 உள்ளன. ஆயினும் வகுப்பறைகள் 24 மட்டுமே உண்டு. இவையும் அரை நூற்றாண்டு காலக் கட்டிடங்களே (G.E.P.II) ஜி.ஈ.பீ. திட்டத்தின் கீழ் 2001ம் வருடம் 70` x 25` விஸ்தீரணமுடைய இரண்டு மாடிக்கட்டிடம்

ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை பூர்த்தியாக்கப்படவில்லை. 'பேஜ்' மண்டபமும் எட்டு வகுப்பறைகளுடனான பிரதான கட்டிடமும் பழமைச் சுமை தாங்காது இடிந்து விழும் நிலையில் உள்ளன. ஆயினும் அவற்றுளுள் 16 வகுப்பு மாணவர்கள் தஞ்சமடைந்து கற்கின்றனர். விஞ்ஞானகூடத் தொகுதிக் கட்டிடம் (6அறைகளுடன்) பாவனைக குதவாததாக ஒதுக்கப்பட்டு அழிக்கப்படும் நிலையிலுள்ளது. சுந்தரதாஸ் மண்டபம் கீழ்த்தளம் இரண்டு வகுப்புகளுடன் 2000 வருடம் வரை இயங்கியது. இது தினைக்களத்தால் கட்புல செவிப்புல கூடமாக (Muti media Centre) மாற்றப்பட்டுள்ளது. 2003ல் இதுவும் இடவசதிக்குறைவு காரணமாக (I.C.T) தகவல் தொழிநுட்ப கூடமாக மாற்றப்பட்டுள்ளது. கட்புல செவிப்புல சாதனகூடம் இயங்க முடியாமல் மூடங்கிக் கிடக்கிறது. இக்கட்டிடத்தின் மேல்மாடி 2002 வரை இரண்டு வகுப்பறைகளுடன் இயங்கியது. விஞ்ஞான ஆய்வுகூடத் தேவை கருதி இதுவும் மாற்றப் பட்டது. இவைகளின் அடிப்படையில் துரித வளர்ச்சியடையும் எமது பாடசாலைக்கு அடுத்த ஐந்தாண்டுகளிற்கு பின்னதாக உபயோகத்தில் இருக்கக் கூடிய பௌதீக வளமாக கீழ்க் குறிப்பிடப்பட்ட கட்டிட வளங்கள் மிக அவசியம் என்பதை சுட்டிக்காட்டி, மிகவிரைவில் இவற்றை நிவர்த்தி செய்ய, மேலதிகாரிகளும், பாடசாலைச் சமூகமும் உடன் விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டுகிறேன்.

1. 70` x 25` இருமாடிக்கட்டிடம் ஒன்று
   - கீழ்த்தளம் 60` x 25 அடி நூலகம்
   - மேற்றளம் 60` x 25 அடி கட்புல செவிப்புல சாதன கூடம்

2. 110 x 25` இருமாடிக்கட்டிடம் ஒன்று
   - கீழ்த்தளம் 40` x 20` விஞ்ஞான ஆய்வு கூடம்
   - 20 x 20` சங்கீத அறை
   - 20 x 20` நடன அறை
   - 20 x 20` சித்திர கூடம்

3. 120` x 25` இருமாடிக்கட்டிடம் (இருதளங்களும்)
   - 20` x 20` 6 வகுப்பறைகள்
   - பொதுக்கூட்ட மண்டபம்

4. 130` x 25` இருமாடிக்கட்டிடம்
   - கீழ்த்தளம் 20` x 20` 6 வகுப்பறைகள்
   - மேற்றளம் 120 x 20` ஒன்றுகூடல் மண்டபம்

5. 70` x 25` இருமாடிக்கட்டிடம்
   - கீழ்த்தளம் 20` x 20` 3 வகுப்பறைகள்
   - மேற்றளம் 20` x 20` 3 வகுப்பறைகள்

மேற்கூறியவை அனைத்தும் புதிய கட்டிடமாக அமைதல் வேண்டும். 8 வகுப்றைப் பிரதான மண்டபம் இருமாடி கொண்ட கட்டிடமாகப் புனரமைக்கப்பட்டு வகுப்பறைகள் புதுப்பிக்கப்பட வேண்டும்.

உபயோகத்திலுள்ள அழகரட்ணம் மண்டபம் அதே அமைப்பில், 3 மாடிக் கட்டடிமாக, மாற்றப்பட்டு, பாடசாலை நிருவாகப் பிரிவுக்குட்பட்ட ஆசிரியர் தங்கு மறை வசதிகளுடன் மாற்றம் செய்யப்படுதல் வேண்டும்.

இத்தகைய ஒரு அமைப்பின் பின்பே ஓரளவாவது, பௌதீகவள நிறைவுடன் பாடசாலை இயங்க முடியும்.

தளபாடங்கள்

நீண்டகாலமாக, பாடசாலையின் தளபாடத் தேவைகள் நிறைவு செய்யப் படாமையால் உயர் வகுப்பு மாணவர்கள் உட்பட பெரும்பாலான மாணவர்கள் நிலத்திலிருந்தும், நெருங்கியிருந்தும், கற்பது வேதனை தருகிறது. எனவே மேற்பிரிவு (A Type) தளபாடங்கள் குறைந்த பட்சம் 80 மாணவர்கட்கும், நடுத்தரப் பிரிவு (B Type) தளபாடங்கள் 70 மாணவர்கட்கும், கீழ்பிரிவு (C Type) தளபாடங்கள் 50 மாணவர்கட்கும் உடன் நிறைவு செய்யப்பட வேண்டியுள்ளது.

ஆசிரியர் மேசைகள் 30ம், ஆசிரியர் கதிரைகள் 15ம், கரும்பலகைகள் தாங்கி களுடன் 22ம் மிக அவசரமாகவும், அவசியமாகவும் நிறைவு செய்யப்பட வேண்டும்.

சகல தரப்பு பொருட்களையும் பேணிப்பாதுகாக்க உருக்கு அலுமாரிகள், உருக்கு கபினட்டுகள், உருக்கு கோவை அலுமாரிகள் என்பன பல தேவைப்படுகின்றன. பலமுறை மேற்படி குறைபாடுகள் யாவும், உரிய முறைப்படி உரிய அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டப்பட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாதமை கவலை தருகிறது.

நில வளங்கள்

2000 வரை 16 பரப்பு நிலப்பரப்பினுள் வகுப்பறைகளைக் கொண்ட காணியையும், இன்றைய மைதானத்தின் அரைப்பங்கான எட்டு பரப்பையும் உள்ளடக்கியதே எமது நில வளமாகும். 2000த்தில் 5 பரப்புக் காணியை கிரயமாக பழைய மாணவர்கள் பெற்றுத் தந்த குறிப்பு விபரமாக மெமோறில் மலர் – 6ல் வெளியானது. 2001ல் பழையமாணவர் சங்கம் 'ஞானசவுந்தரி' நாடகத்தின் மூலம் நிதி சேகரித்து சுமார் 6,07500/= ரூபா பெறுமதியில் மைதானத்தின் வடகிழக்கு புறமாக 14 பரப்புக் காணியை பெற்றுத் தந்தது. அக்காணியின் உறுதி இல ஈ 550/19/09/2001 பின்பு, முன்னாள் ஆசிரியையும் முன்னாள் அதிபர் சுந்தரதாஸ் அவர்களின் துணைவியும், எமது ப.மா.சங்க கனடா கிளையின் போசகருமான திருமதி உருக்குமணி சுந்தரதாஸ் அவர்களினால், அச்சங்கம் சார்பில், மைதானத்தின் தென்கிழக்குப்புறமாக ரூபா 1,30,000/= செலவில் 1 ½ பரப்புக் காணியும் உறுதி இல 5309 வாங்கித் தரப்பட்டுள்ளது.

மேற்குறித்த காணிக்கு கிழக்கே மேலும் 5 பரப்புக் காணி ரூபா ஐந்து இலட்சம் பெறுமதியில் வாங்கித்தரப்பட்டுள்ளது. இத்தொகையில் ரூபா இரண்டரை இலட்சம் கனடா பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவுடன் திருமதி உ.சுந்தரதாஸ் அவர்களும் ஒரு இலட்சத்து எழுபத்தைந்தாயிரத்தை மெமோறியலின் வரலாற்று நாயகனாக, இடம்

பெறப்போகும், பழைய மாணவன் உடுவிலைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் தேசத்தை வசிப் பிடமாகவும் கொண்ட வள்ளல் மகாராஜா மகாவேந்தனும் மிகுதி 75,000யீரத்தை எமது பழைய மாணவர் சங்கமும் வழங்கியிருந்தது.

விசேடமாக மேலே குறிப்பிட்ட வள்ளல் மகாராஜா மகாவேந்தன் தனது சொந்தப்பணம் 16 இலட்சத்தைச் செலவு செய்து 8¾| பரப்புக் காணியைக் கொள் வனவு செய்து எமக்கு வழங்கியுள்ளார்.

கல்வித்தானம் சிறக்க, இப்பேருதவிகளைச் செய்த மேலே குறிப்பிட்ட நல்ல உள்ளங்கள் அனைத்துக்கும் மெமோறியலின் நன்றிகள்.

தற்போது சுமார் 56¾ பரப்பு விஸ்தீரணத்தை கொண்டுள்ளது, மெமோறியல் வளாகம். மைதானத்தின் எஞ்சியுள்ள பாகம் 8 பரப்பும் திரு. E.F.J. றிச்சேட் என்பவரிடம் இருந்து வருடம் 75 ரூபா குத்தகைக்குப் பெற்று உபயோகிக்கப்படுகிறது. இதனையும், எமது பாடசாலைக்கு நிரந்தர வளமாக்க வேண்டிய பொறுப்பு எமக்குண்டு.

ஆசிரியர் வளம்

2003 ஜூன் மாதக் கணக்கீட்டின் பிரகாரம் ஆசிரிய ஆளணி 46 பேராகும். 2003 டிசம்பர் வரை 32 பேர் கடமையாற்றினோம். நிரந்தரப்பற்றாக்குறை 14 பேர். தினமும் விடுப்புப் பெறும் ஆசிரியர் தொகை சராசரி 7 பேர் மொத்தமாக 21 ஆசிரியர் இன்றி பாட சாலையை இயக்க பக்கபலமாக இருப்பவர்கள் தொண்டராசிரியர்கள், ஆங்கில ஆசிரி யர்கள் 3, விவசாயம் 01, ஆரம்பக்கல்வி 02, உடற்கல்வி 01, தமிழ், சைவம், கிறிஸ்தவம், புவியியல் கற்பிக்கக் கூடிய பொது ஆசிரியர்கள் 08 என இப்பற்றாக்குறை நிவர்த் திக்கப்பட வேண்டும்.

ஏனைய ஆளணி வளம்

நிரந்தர இரவுக்காவலாளி 01, இவருக்கான பதிற்கடமை புரியும் காவலாளி 01, பாடசாலை நூலகர் 01, எழுதுவினைஞர் 01, அலுவலக உதவியாளர் 01 எனும் ஆளணி வெற்றிடங்கள் உடன் நிரப்பப்பட வேண்டும்.

மன்றங்கள்

மாணவர் திறன்களை இனங்கண்டு வளப்படுத்துவதற்கு, பாடசாலைக் கூட்டுறவு விநியோகச் சங்கம், இந்துமா மன்றம், கிறிஸ்தவ மன்றம், முத்தமிழ் மன்றம், கணித விஞ்ஞான மன்றம், வணிக மன்றம், சேவைக்கழகம், சாரணிய குழு, குழந்தை இலக்கியமன்றம் போன்றவை உரிய ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் செயற்பட ஒழுங்கமைப்புகள் உள்ளன.

விளையாட்டுச் செயற்பாடுகள்

பாடசாலை மட்டத்திலும், கோட்ட, வலய, மாவட்ட மட்டங்களிலும் 2001 – 2003 காலப் பகுதிகளில், மாணவர்கள் மெய்வல்லுநர் போட்டிகளிலும் வலைப்பந்து, கூடைப்பந்து, கரப்பந்து உதைபந்து, மென்பந்து போட்டிகளிலும், தவறாமல்

பங்குபற்றுகின்றனர். பல சந்தர்ப்பங்களில், உரிய மட்டங்களில், வெற்றிகள் பெற்றுப் பாராட்டப்பட்டனர். நிரந்தர உடற்கல்வி ஆசிரியர் இல்லாவிடினும், தொண்டர் ஆசிரியராக உடற்கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் திரு. யூட் நிறஞ்சன், செல்வி சரோஜினி ஆசை ஆகிய இருவரதும் அர்ப்பணிப்புகளும், நன்றியோடு பாராட்ட வேண்டியவை. இவ்வறிக்கைக்கு உரிய காலப்பகுதிக்கு அப்பால் – 2004ல் விளையாட்டுத்துறை மேலும் விருத்தியடைந்து, மாகாணமட்டத்துக்கு அப்பால் தேசிய மட்டத்தில் 30 – 09 – 2004ல் 07 மாணவ மாணவியர் பங்கு கொண்டமை, விளையாட்டுத்துறையில் 20 வருடங்களின் பின் மெமோறியலின் சாதனையாகும். மேற்குறிப்பிட்ட இரண்டு உடற்கல்வி ஆசிரியர்களும், செல்வி சிவயோகவதனி சிற்றம்பலமும், திரு இரா. வாசுதேவனும், விசேடமாகப் பாராட்டப்படவேண்டியவர்கள்.

இவர்களது கடமைக்காலங்களுக்கு முன்னதாக உடற்கல்வி – தொண்டராசிரியராகப் பணி செய்த திரு கே. சாம்சன் அவர்களின் அர்ப்பணிப்பும் பாராட்டப்பட வேண்டியதே. மாணவர்களின் ஆர்வத்தை விளையாட்டுத்துறைப்பக்கம் திருப்பி அத்துறையை மேலும் விருத்தி செய்ய, உடற்கல்வி ஆசிரியர்கள் நிரந்தரமானவர்களாக ஒதுக்கப்படவேண்டும். பெற்றோரும் சமூகமும் இத்துறைக்குப் போதிய வசதிகளையும், ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

சமய சமூக நிறுவனங்களோடு இணைந்த செயற்பாடுகள்

பெரும்பாலான மாணவர்கள் பாடசாலைக்குள்ளேயும் வெளியேயும், சமய சமூக நிறுவனங்கள் நடாத்தும் மேற்படி போட்டிகளில் வருடாவருடம் பெருந்தொகையாகப் பங்குபற்றுவது, சிறப்பம்சமாகும். சைவம், கிறிஸ்தவம், நடனம், இசை, நாவன்மை, சித்திரம், நாடகம் எனப் பல போட்டிகளில் கோட்ட, வலய, மாவட்ட, மாகாண மட்டங்களிலும் விசேடமாக தேசியமட்டத்திலும், மெமோறியல் மாணவர்கள் வெற்றியீட்டிச் சாதனை படைத்துள்ளார்கள். மேற்குறித்த மாணவர்களது பெயர்கள் பரிசுப்பட்டியலில் இடம் பெறுவதால் விரிவு அஞ்சித் தவிர்க்கிறோம். ஆயினும் குறிப்பிட்ட சில மாணவர்களது விபரங்கள் கட்டாயமாகக் குறிப்பிடுதல் பொருத்தமென்பதால் இங்கே சுட்டிக் காட்டுகிறேன்.

தரம் 7ல் கற்கும் செல்வி சேனாதிராசா கோபிகா இவ்வறிக்கைக் காலப் பகுதியில் மேற்குறித்த போட்டிகளில் வெற்றியீட்டி, ஒரு தங்கப்பதக்கம், ஒரு வெண் கலப்பதக்கம் ஆகியவற்றையும் பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டு கழகம் நடாத்திய நாடகப் போட்டியில் சிறந்த நடிகைக்கான விருதையும் பெற்றார்.

தரம் 11ல் கற்கும் செல்வி வைஷ்ணவி ஜெயச்சந்திர வைரவமூர்த்தி மேற்குறித்த போட்டிகளில் வெற்றியீட்டி மூன்று தங்கப்பதக்கங்களையும், இரண்டு வெள்ளிப் பதக்கங்களையும் பெற்று, மெமோறியல் அன்னைக்கு பெருமை சேர்த்துள்ளார். தேசிய ரீதியிலும், மாகாணமட்டத்திலும், இவரது திறன்கள் விசேடமாக, பாவோதல், வயலின், நடிப்புகளூடாக வெற்றிகளை ஈட்டச் செய்ததுடன், பலரது பாராட்டுக்களையும் பெற்றது, எமக்குப் பெருமை தருகின்றது. மெமோறியலின் மாணவர் வளங்களுள் சிறந்த வளமாகக் காணப்படுபவர் வைஷ்ணவி.

மேற்குறித்த இருவரையும், இவர்களைப் போன்று பெருமைக்குரியவர்களாகக் கணிக்கப்படும் சகல மாணவர்களையும் வாழ்த்துகிறோம்.

கல்விச் சாதனைகள்

க.பொ.த (உ.த) சா.த. ஆகிய பரீட்சைகளில் 2001, 2002, 2003ம் ஆண்டுகளின் பெறுபேற்று விபரங்களும், தரம் 5 புலமைப்பரிசிற் பரீட்சைப் பெறுபேறுகளும் இச்சஞ் சிகையில் விபரமாக வரைபு வடிவமைக்கப்பட்டுள்ளது. அதனைப் பார்வையிடுவதன் மூலம் கல்விச் செயற்பாடுகளில் வருடா வருடம் தரம் உயர்ந்து செல்வதனை அறிந்து கொள்ளலாம்.

2001 க.பொ. (உ.த) பரீட்சையில் மிகச் சிறப்பான பெறுபேறு பெற்ற மாணவர்களையும், க.பொ.த. (சா.த) பரீட்சையில் மிகச் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களையும், தரம் 5 புலமைப் பரிசிற் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும்,

2002 க.பொ.த. (உ.த) பரீட்சையில் சிறப்பாக சித்தியடைந்த மாணவர்களையும், க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும், தரம் 5 புலமைப்பரிசிற் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும்,

2003 க.பொ.த (உ.த) பரீட்சையில் சிறப்பாக சித்தியடைந்த மாணவர்களையும், க.பொ.த. (சா.த) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும், தரம் 5 புலமைப்பரிசிற் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும்,

2004 தரம் 5 புலமைப்பரிசிற் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் மெமோறியல் அன்னையின் சார்பில் வாழ்த்துகிறேன்.

அறிக்கைக்குரிய காலப்பகுதிக்கு அப்பாலும், சில முக்கிய தகவல்களைத் தர வேண்டியுள்ளது. சண்டிலிப்பாய் பிரதேசத்தின் (Division School Development) நவோதயா திட்டத்தினூடாக எமது பாடசாலை மாண்புமிகு ஜனாதிபதி அவர்களின் நேரடிக்கண்காணிப்பின கீழ் கொண்டுவரப்படுகின்றது. நூலகம், விஞ்ஞான கூடம், கணனிவளநிலை (I.C.T) தகவல் தொழில்நுட்ப நிலையம் ஒன்று 10 கணினிகளுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றது. இவ் வறிக்கை காலப்பகுதிக்குள் திரு.செ. செல்வநேசன், திரு.த. சீவரத்தினம், திரு.க. துரைசிங்கம் ஆகியோர் செயலாளர்களாகவும் திரு. சி. சிவராஜன், திரு. இரா. வாசுதேவன் ஆகியோர் பொருளாளர் ஆகவும் அரும்பணியாற்றியுள்ளார்கள். பாடசாலை வளர்ச்சிக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கிய பெருமை எமது பா.அ.வி. சங்கத்திற்கு உண்டு. மைதானச் சுவர் அமைத்தல் தற்காலிக கொட்டகை அமைத்தல், இதர தேவைகள் யாவற்றுக்கும் தன்னாலான பங்களிப்பினை செய்ததுடன் ஓர் ஒலி பெருக்கித் தொகுதி யையும் தந்துள்ளது. பா.அ.வி. சங்கத்தின் செயற்பாடுகளைப் பட்டியலிட்டால் வீரியும். தவிர்க்கின்றேன்.

பழைய மாணவர்கள் ஆற்றிய பணிகள் மறக்க முடியாதவை வரலாற்றுப் பதிவுகள். சுமார் 30½ பரப்புக் காணியை ஏறக்குறைய 28 இலட்சத்து 37 ஆயிரம் ரூபா செலவில் கொள்வனவு செய்து தந்துள்ளார்கள். இதில் 17,75000 ரூபா பழைய மாணவன் வள்ளல் ம. மகாவேந்தனாலும் மிகுதியில் 682,000 ரூபா எமது தாய்ச்சங்கத்தினாலும் மிகுதி 380,000 ரூபா கனடா பழைய மாணவர் சங்கத்தாலும் உவந்து அளிக்கப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டது. இவற்றுக்கு மேலாக மைதானச் சுவர் எல்லைகள் கட்டவும் மாணவரது கல்வி, இணைச்செயற்பாடுகளின் வளர்ச்சிக்காகவும் பெரும் பங்களிப்புச் செய்துள்ளது.

எமது முன்னாள் ஆசிரியர் திரு. பொன்னையா நாதனின் பேரனும் , சட்டத்தரணி அமரர் காராள சிங்கத்தின் மகனும் சுதுமலையைச் சொந்த இடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட இந்திரன் காராளசிங்கம் எனும் பெருவள்ளல் 60' X 20' கீழ் மாடிக் கட்டடம் ஒன்றைக் தந்துதவினார்கள். RRAN நிதிமூலம் 50' X 20' கீழ் மாடிக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவர்கட்கு எமது நன்றிகள். (RRAN) அன்பளிப்புச் செய்த பூர்த்தியடைந்த கட்டடத்தை G.T.Z. மெருகூட்டி பாவனைக் கேற்றதாகத் தந்துதவிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

எனது சேவைக் காலத்தின் இறுதிப் பரிசளிப்பு அறிக்கை இது. 1980 மார்ச் 15ஆம் திகதி ஆசிரியராக மெமோறியல் அன்னையின் மண்ணில் கால் வைத்தேன். அதிபர்கள் திருமதி சிவானந்தராசன், திருவாளர்கள் வே.சுந்தரதாஸ், வி. பொன்னுத்துரை, ஆகியோருடன் இணைந்து செயற்பட வழிகாட்டினார்கள். தொழிலில் மனங்கவர்ந்த ஆசிரியர்களாக திருமதிகள் ப. பாலசுப்பிரமணியம் இ. வள்ளிபுரம், கோ. அன்னராசா, ப. மகாதேவா, யோ. கமலசிங்கம், திருவாளர்கள் வ. இராதாகிருஷ்ணன், என். செபமாலை, ஜெனப் அசீம், ஜெனாப் ஆயுப் ஆகியோர் என் தொழில் பாதையில் ஊன்றுகோல்கள். 1989இல் அதிபர் பதவி பெற்ற பின் 1995வரை மெமோறியல் வளர்ச்சியின் பொற்காலம் எனலாம். நிருவாகத்திற்கு கிடைத்த உப அதிபர் திருமதி ச.யோகேஸ்வரன், இணை உப அதிபர்கள் திரு.சி. சண்முகநாதன், திரு.ஆ. கல்யாண சுந்தரேசன், கனிஸ்டன் பிரிவு அதிபர் திரு.க. சிவனேசன் கடமைக்காக தம்மை அர்ப்பணித்த காலம் அது. கூடவே, திருவாளர்கள் ச.வீமலராஜன் சொ.ஜெயவீரசிங்கம் பா. சபாரத்தினம், மு.லோகநாதன், சி.சிவராஜன், நா. பாலகிருஷ்ணன், திருமதிகள் யோ. கமலசிங்கம், வி.ஜெ.பை. மூர்த்தி, ப. முருகதாஸ், பா. கலாவேணி, அ.சுகந்தினி, திரு.சி. இராஜரட்ணம், செல்வி சி. சிற்றம்பலம் உட்பட பல ஆசிரியர்கள் இரவு பகல் கண்விழித்து அடக்கமாக மன உறுதி யுடன் பணியாற்றிய காலம் அது, எனது சேவைக் காலத்தில் பணி செய்த தொண்ட ராசிரியர்கள் அனைவரையும் நினைவு கூறுகின்றேன்.

2000இன் பின்னர் உப அதிபராக திரு.சி. சண்முகநாதனும், இணை உப அதிபர்களாக திருமதி வி.ஜெ.பை. மூர்த்தி அவர்களும், திருமதி கமலசிங்கம் அவர்களும் பல்வேறு இடர்கள் மத்தியிலும் நிருவாகத்திற்கு பெருந்துணையாற்றியவர்கள். இன்று வரை என்னோடு பணியாற்றும் எல்லா ஆசிரியர்களும் ஏதோ ஒரு வகையில் மெமோறி யலின் வளர்ச்சிக்கு தம்மை அர்ப்பணித்தவர்களே என்பதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளராக பணியாற்றிய திருவாளர்கள் அமரர் பொ. வரதராஜா, எஸ்.வீ. பரமேஸ்வரன், செ. செல்வநேசன், த. சீவரத்தினம், இரா. வாசுதேவன், ஆகியோரும். பொருளாளராக கடமையாற்றிய திரு.இ. வல்லிபுரம், திருமதி ப. திசைராஜா ஆகியோரும் பாடசாலை வளர்ச்சிக்கு உதவியவர்கள் ஆவர்.

அளப்பரிய பங்களிப்பை எந்நாளும் மெமோறியலுக்கு வழங்கிவரும் பெற்றோர்கள், பழைய மாணவர்களுக்கும் எனது நன்றிகள். விசேடமாக, ப.மா.ச. காப்பளர் சட்டத்தரணி திரு. இரா. வசந்தசேனன், திரு.க.ம. இராஜேந்திரன், திரு.ம. யேசுரட்ணம், திரு.க. திருநாவுக்கரசு, க. துரைசிங்கம், ச. குணரத்தினம், த. ஆனந்தரூபன், பொ. யோகராசா, ச. வில்சன் ஆகியோர் பழைய மாணவர்களுள் முன்மாதிரியானவர்கள்.

மனம் நிறைய மெமோறியல் அன்னைக்கு வேண்டியபோதெல்லாம் வளம் தந்தவர்கள் பெற்றோரும் பழைய மாணவர்களும் ஆவர்.

இவ் விழாவைப் பல சிரமங்கள் மத்தியிலும் நிறைவாக்கிய என் உடன் ஆசிரிய தீபங்களுக்கும், மாணவ முத்துக்களுக்கும், பெற்றோர், பழைய மாணவர்கட்கும் , நலன் விரும்பிகட்கும் என் இதயங் கனிந்த நன்றிகள்.

மலர்க்குழு – மெமோறியல் மலர் 7ஐ வெளியீடு செய்கிறது. மலர் உருவாக்கம் கடினமான பணியாகும். கடின உழைப்பு இம் மலரின் பிரசவம். மலர்க்குழு தாம் தாம் ஆற்றிய பணிகள் அவரவரே அறிவர். மலராசிரியர் திரு.நா. பலாகிருஷ்ணன், செயலாளர் திரு. லெஸ்லி, பொருளாளர் திரு.ச. சிவஞானம், தலைவர் திரு.சி. சண்முகநாதன் ஆகியோருக்கும் எந் நன்றிகள்.

இறதியாக நீண்ட அறிக்கையில் சில வரிகள் வட்டாரக் கல்வியதிகாரி திரு.ச. தனஞ்சயன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.கு. குலசேகரம், திரு.த. துரைசிங்கம், வலயக் கல்விப்பணிப்பாளர் திரு.சி. சிவராஜா, இன்றைய வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.றெ. இருதயநாதன், முன்னைய மாகாணக் கல்விப்பாணிப்பாளர்கள் செல்வி தி. பெரியதம்பி, திரு.க. கந்தசாமி, திரு.இ. சிவானந்தன், இன்றைய மேலதிகக் கல்விப் பணிப்பாளர்கள் திரு.வீ. இராசையா, திருமதி மகாலிங்கம், முன்னாள் வடபிராந்தியக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம்.எம்.மன்சூர், திரு.இரா. சுந்தரலிங்கம் ஆகியோர் என்னை வழிகாட்டி மெமோறியலை வளர்த்த சான்றோர்கள். அவர்கட்கும் ஏனைய கல்விப்புல அதிகாரிகட்கும், என் சகோதர அதிபர்கட்கும் நன்றி கூறி இவ்வறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

30 – 10 – 2004

அ.மு. அருணாசலம்
அதிபர்

STAFF - 2002, 2003, 2004

01. Mr. A.M. Arunasalam	Principal – SLPS – I	
02. Mr. S. Shanmugananthan	Deputy Principal – SLTS - Class – I	
03. Mrs. V.J.B. Moorthy	Co-Deputy Principal – SLTS 2-I	
04. Mr. K. Sivanesan	Primary Head – SLTS – Class – I	
05. Mrs. Y. Kamalasingam	Teacher - SLTS- Class – I	
06. Mrs. C. Yogeswaran	"	SLTS – 2 – I
07. Mrs. P. Sabanathan	"	SLTS – 2 – I
08. Mr. N. Balakrishnan	"	SLTS – 2 – I
09. Mr. S. Jeyaweerasingam	"	SLTS – 2 – I
10. Mr. S. Sivarajan	"	SLTS – 2 – I
11. Mr. S. Rajaratnam	"	SLTS – 2 – I
12. Mrs. J. Varatharajan	"	SLTS – 2 – I
13. Mr. K. Kanageswaran	"	SLTS – 2 – I
14. Mr. K. Kunaratnam	"	SLTS – 2 – I
15. Mr. P. Murugathas	"	SLTS – 2 – I
16. Mr. E. Gnaneswaran	"	SLTS – 2 – II
17. Mr. K. Somaskanthamoorthy	"	SLTS – 2 – II
18. Miss S. Sittampalam	"	SLTS – 2 – II
19. Mr. T. Sivagnanam	"	SLTS – 2 – II
20. Mrs. S. Arulvathanan	"	SLTS – 2 – II
21. Mrs. S. Somanathan	"	SLTS – 2 – II
22. Mrs. P. Uthayakumar	"	SLTS – 2 – II
23. Mrs. M. Naguleswaran	"	SLTS – 2 – II
24. Mr. E.J. Leslie	"	SLTS – 2 – II
25. Mr. R. Vasudevan	"	SLTS – 2 – II
26. Mrs. K. Balakrishnar	"	SLTS – 2 – II
27. Miss R. Pathmanathan	"	SLTS – 2 – II
28. Mrs. V. Kugabalan	"	SLTS – 2 – II
29. Mrs. P. Balasundram	"	SLTS – 2 – II
30. Mrs. M. Elamurugan	"	SLTS – 2 – II
31. Mrs. K. Sivanadarajah	"	SLTS – 2 – II
32. Mrs. K. Meiyappan	"	SLTS – 2 – II
33. Mrs. K. Logathasan	"	SLTS – 2 – II
34. Miss S. Muthulingam	"	SLTS – 2 – II
35. Mrs. S. Ramesh	"	SLTS – 2 – II
36. Mrs. D. Vishnukanthan	"	SLTS – 2 – II
37. Mrs. P. Shanmugarajah	"	SLTS – 3 – I
38. Mr. M. Srithangarajah	"	SLTS – 3 – I
39. Mrs. S. Navaneethakrishnan	"	SLTS – 3 – I
40. Mrs. B. Murugathas	"	SLTS – 3 – I
41. Mrs. S. Nirmalendran	"	SLTS – 3 – I
42. Mrs. T. Thavarajah	"	SLTS – 3 – I
43. Mrs. K. Sarweswarasarma	"	SLTS – 3 – I
44. Miss S. Kumarasamy	"	SLTS – 3 – I
45. Miss T. Karthigesu	"	SLTS – 3 – I
46. Miss J. Murugaiah	"	SLTS – 3 – I
47. Mrs. S. Gowrihasan	"	SLTS – 3 – II
48. Miss S. Sivayogan	"	SLTS – 3 – II

ஆசிரியர் குழாம் 2003 / 2004



சித்திரை @சுறவம் 5008 \ 5004

ஆசிரியர் குழாம் 2002 / 2003



Copyright © 2003 / 2008

Part - Time English Teacher

1. Miss S. Sellathurai

Volunteer Teachers

1. Miss N. Barathy
2. Miss A. Sarojini
3. Miss P. Vijitha
4. Mr. K. Niranjan
5. Mr. R.K. Samson
6. Miss S. Shanmugapria
7. Miss N. Sasikala
8. Miss S. R. Jeyanthiny
9. Miss K. Srithevy
10. Miss I. Reno Antoneshiya
11. Miss G. Deflin
12. Miss A. Subashini
13. Mr. J. Jude Niranjan
14. Mr. M. Priyanthan
15. Mr. K. Arul Jeyaratnam
16. Mr. K. Kaliyugan
17. Mr. S. Chanthiran
18. Mr. I. Ramanan
19. Mrs. P. Arulvanthanar
20. Mr. S. Pushpaharan Dinosan
21. Miss S. Sellathurai
22. Miss J.S. James

Non – Academic Staff

1. Mr. V. Sivananthanathan	- Management Assistant
2. Mr. R. Jegatheeswaran	- Laboratory Assistant
3. Mr. S. Mylvaganam	- Watcher
4. Mr. T. Mahenthiran	- Labourer
5. Mr. P. Kalidasan	- Labourer
6. Mr. S. Tharmapala	- Labourer
7. Mrs. T. Jesu Mariyathasan	- Clerk
8. Mr. T. Mugunthan	- Clerk (Volunteer)
9. Miss C. Kathirgamu	- Typist (Volunteer)

Jaffna National College of Education – Internship Teacher Trainees

1. Miss K. Anushambigai
2. Mr. V. Rameshkumar
3. Mr. K. Eswarakumar
4. Miss G.F. Thushiyanthy
5. Miss T. Vijikala
6. Miss T. Ushananthini
7. Mr. B. Ullasanan

யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின்

புகழ்பூத்த முன்னைநாள் அதிபர்

அமரர்

வேலுப்பிள்ளை சுந்தரதாஸ் அவர்களது

சுந்தர நினைவலைகள்



மடித்துக்கட்டிய ஒரு கை
கடித்துக் கொள்ளும் விரல் நகம்.....
சப்பாத்து சைனிங் கில்
தப்பாமல் முகம் தெரியும்
உடையில்
உள்ளழகின் உருவம் தெரியும்
அந்த - நடையின் நாதமே
எமக்கு தண்டனையின் தழும்புகள்
அந்த சிரிப்புக்குள் சிறையிருக்கும்
சிந்தனைச் சிதறல்கள் .....
இது தான்
சுந்தரதாஸ் எனும் சுடரொளி !
மானி மண்ணின் கல்விக்கு
மாற்றம் காட்டிய மாண்பழகு !
ஏணியாய் பலருக்கு
ஏற்றம் தந்த எழில் !
ஒழுக்க விழுமியத்தின்
ஒப்பற்ற காவலன் !
பழக்கத்தை, பண்பை
விளக்கி வைத்த விளக்கு !
சாதி, மத சாக்கடையின் பேதமற
ஓதி நடந்த வேதகன் !
முயற்சியும் பயிற்சியும்
உடர்ச்சியின் வழியென
உரத்துச் சொன்ன உத்தமன் !
வழிகாட்டலுக்கு வருப்டறை மட்டுமல்ல
தலைமைத்துவமும் தன்னம்பிக்கையும்
விளையாட்டு மைதானத்தில்
விளைவதைக் காட்டிய வித்தகன் !
கடேற் பயிற்சியால்
கண்டோமே கொழும்பு !
மின்னொளியில் கரப்பந்து - இப்போதும்
எம் கண் முன்னே .....
எட்டச் சென்றாலும்
தொட்டுச் சென்ற பணியை
தொடர்ந்திட்ட காவலா,
உன் கடைசி மூச்சு
கனடாவில் கலந்தாலும்
மெமோறியல் மேனியின் மேன்மை
இதயத்தில்
உன் - அங்கம் என்றும்
அழகு வீசும் ...

-மானிப்பாய் மெமோறியல் குடும்பம்-

படரும் நினைவுகளோடு ஒரு பழைய மாணவன்

கு. ரட்ணேஷ்

05-01-2006

துயர் சுமந்த சுந்தரர் நினைவு நாள் 05-01-2002



நினைவுச் சுடரேற்றும்
அமரரின் சகோதரி



துயர் பகிர்வில் பங்குகொண்ட
மெமோறியல் குடும்பத்தினர்



அஞ்சலி உரையாற்றும்
அதிபர் அ. நடராசா



சுடரேற்றும் அதிபர்



சுந்தரர் நினைவுகளில்
பா.அ.ச. செயலர்
திரு. த. சிவரத்தினம்



மலர் தூவும் பழைய மாணவர்கள்
கிராம அலுவலர்கள்
திரு. இராஜயோகன், பொ. யோகராசா





முன்னாள் அதிபர்
அமரர் வே. சுந்தரதாஸ் அவர்கள்

TRIBUTE

To

The late Mr. Velupillai Suntharathas

The Former Principal of

MANIPAY MEMORIAL ENGLISH SCHOOL

2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ஆம் நாள் சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு 39 கிம்பர்கோட் இல் அமைந்துள்ள ஒன்று கூடல் மண்டபத்தில்

மானிப்பாய் மெமோறியலின் முன்நாள் அதிபர்

திரு. வேலுப்பிள்ளை சுந்தரதாஸ்

அவர்களுக்கு

அஞ்சலி

On : Saturday February 02, 2002 At : 6:00 p.m. at the Party Hall of 39 Kimbercroft Court

Master of ceremony : Mrs. Viji Subrakaniam

6:00 - Observing one minute silence / மௌனம் அனுட்டித்தல்

6:15 - Tributes / அஞ்சலி உரைகள்

- Jessie Sinnathurai / ஜெசி சின்னத்துரை (MMESAA / மாமெஆபா அமைப்பு)
- S. Velupillai / எஸ். வேலுப்பிள்ளை (Co Worker / சக ஊழியர்)
- Jayanthy Reynold / ஜெயந்தி றினோல்ட் (MMESAA & Manipay neghbour/ மாமெஆபா அமைப்பு & மானிப்பாயில் அயலவர்)
- T. Yogaratnam / ரீ. யோகரத்தினம் (TSSA / த. பா. வி. கழகம்)
- T. Aravinthan / ரீ அரவிந்தன் (MMESAA / மாமெஆபா அமைப்பு)
- Bala Subramaniam / பாலசுப்பிரமணியம் (MMESAA / மாமெஆபா அமைப்பு)
- Inthi / இந்தி (On behalf of the family / குடும்பத்தவர் சார்பில்)

7:30 - Dinner / இராப்போசனம் (MMESAA / மாமெஆபா கனடா அமைப்பு)

Thank You / நன்றி

Manipay Memorial English School Alumni Association of Canada

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் கனடா அமைப்பு

விழிநீர் சொரிகிறோம்.

விழியொன்றைத் தேடி ...

அமரர்

வேலுப்பிள்ளை சுந்தரதாஸ்

மானிப்பாய் மெமோறியல் அன்னையின் மணிமகுடத்தின் ஒளிவீசும் இரத்தினங்களில் ஒன்றாகத் திகழ்ந்து இறுதிவரை அவ் அன்னைக்காகவே தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஆகுதியாக்கி அந்நிய தேசமாம் கனடாவில் 01-01-2002 திங்கட்கிழமை அமரத்துவம் அடைந்த எமது கல்லூரியின் முன்னாள் புகழ்பூத்த அதிபரும் தற்போதைய மெமோறியல் அன்னையின் அனைத்துலக பழைய மாணவர் சங்கபோஷகருமாகிய

அமரர்

வேலுப்பிள்ளை சுந்தரதாஸ்

விழிநீர் சொரிகிறோம்

வழியொன்றைத்தேடி .....

ஆசிரியர் நல்லுறவு மன்றம்,
மாணவர்கள்,
யா / மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.

மண்ணில் பலர் வாழ்ந்து மறைதல் கண்டோம் - காணினும்
எண்ணற்கரிய சேவையில் - தன்னை
இறுகப் பிணைத்த எம் அதிபர் தம்மைப் பிரிந்து தவிக்கின்றோம்

அறிவோடு அமைதியும், அழகும் தன்னகத்தே
அதிபருக்கே உரிய நெறியதுவும் கொண்ட நேராளர் - கல்விக்
கதிர்பரவ கட்டிடங்கள் கட்டிநம் கல்லூரிக்குயிர் ஈத்த உத்தமர்

ஐயா புதுவருடம் வரும்போது இதுவரையும் - செய்த
பேருதவி போதுமென்று எம்மைவிட்டுப் போனீரோ

எத்தனை வரினும் எத்தனை போகினும்
கற்றவர் காமுறும் கற்றவர் கழிவரேல்
உற்றிடும் துயரழியாது - உம்மைப்
பெற்றிடும் மானிப்பாய் ஊருள்ளவரையும்
உம் நற்புகழ் தானொழியாது

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை
பழைய மாணவர் சங்கம் - கனடா



அஞ்சலிக்கும் ஆசிரியர்
திரு. நா. பாலகிருஷ்ணன்



கண்ணீரே அஞ்சலியாக தீவக
வலய பி.க.ப. திரு.வ.இராதாகிருஷ்ணன்



அஞ்சலி உரையில் ப.மா.ச. உபதலைவர்
திரு. க. திருநாவுக்கரசு

பழைய மாணவர் சங்க கனடா கிளை உறுப்பினர்கள்









திருமதி உருக்குமணி சுந்தரதாஸ்
(எமது முன்னாள் ஆசிரியை)

சுந்தர மெமோரியலை உருவாக்கத்துடித்த அதிபர் அமரர் வேலுப்பிள்ளை சுந்தரதாஸ் அவர்களின் அன்புத் துணைவியார் கனடா ப.மா.சங்கக்கிளையின் பெரும் காவலர்.

பாடசாலைக்கான காணிக் கொள்வனவுக்காக 3,30000/= ரூபாவையும், பாண்ட் இசைக் கருவித் தொகுதியையும் தொலைபேசி இணைப்பையும் பெற்றுத்தந்த பெருந்தகையாளர். மெமோரியல் வரலாற்றில் இடம் பிடித்த பெருமைக் குரியவர்.

நன்றியுடன் வணங்குகிறோம் தாயே!

-மெமோரியல் குடும்பம்



தமிழர் பார்வையில் சுவாமி விவேகானந்தர்

பேராசிரியர் முனைவர் **அ. சண்முகதாஸ்**
தலைவர்
தமிழ்த்துறை - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தமிழ் நாட்டுடனும் தமிழ் மக்களுடனும் சுவாமி விவேகானந்தருக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. சிக்காகோவுக்கு பயண மாவதற்கு முன்னர் தமிழ் நாட்டுக் கன்னி யாகுமரிப் பாறையிலே தியானம் செய்தார். சிக்காகோ மாநாட்டிலிருந்து திரும்பி வரும் போது இலங்கைத் தமிழர்களுக்கும் உரை யாற்றிச் சென்றார். "நமது அடிப்படை" என்னும் பொருளில் 23.10.1897 இல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சுவாமி ஆற்றிய சொற் பொழிவு இன்றும் தமிழ் மக்களாலே நினைவு கூரப்படுகின்றது.

"விஷயமோ மிகவும் பெரியது. நேரம் மிகக் குறைவாகவே உள்ளது. ஒரு சொற் பொழிவில் இந்துக்களின் மதத்தைப் பற்றிய ஒரு முழுமையான ஆராட்சியை நடத்துவது என்பது முடியாதது. எனவே நமது மதத்தின் முக்கிய கருத்துக்களை என்னால் இயன்றளவு எளிய மொழியில் உங்கள் முன் வைக்கிறேன்."

என்று தொடங்கி ஆற்றிய உரை யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்களுக்கு நல்விருந் தாக அமைந்தது.

1892 இல் இராமநாதபுரம் மன்னரு டைய சந்திப்புடன் சுவாமியின் தமிழ்நாட்டுத் தொடர்பு தொடங்குகிறது. சுவாமி எந்த ஒரு தனிப்பட்ட இனத்துக்கும் சொந்தமானவர் என்று நாம் கூறுவது அழகல்ல. ஆனால் நம்முடைய மண்ணிலே வந்து நின்ற வேளையிலே சுவாமியினுடைய மனத்தில் நல்ல பெரும் சிந்தனைகள் தோன்றி, அவை இந்து மக்களின் ஆன்மீக ஈடேற்றத்துக்குத் துணை செய்கின்றன என்பதை அறிந்து அம்மண்ணின் மக்கள் பெருமைப்படுகின்றனர். கன்னியாகுமரிப் பாறை யிலே தியானத்தில் இருந்த வேளை அவர் மனத்திலே உதித்தவை யாவை?

நீலத்திரைக்கடல் ஓரத்திலே குமரி நித்தம் தவம் செய்கிறாள். அவள் முன்னாலே சுவாமி தவத்திலே இருந்தபோது தன்நாடு, தன்சமயம், தன்னைப் போன்ற சந்நியாசிகள் பற்றியெல்லாம் எண்ணுதற்கு வாய்ப்பு ஏற் பட்டது. தன்னுடைய நாட்டின் வறுமை, பல்வேறு பிரிவினைகள் பற்றியெல்லாம் எண்ணினார். சரியான சமயம் மக்களாலே பின்பற்றப்படவில்லை என்று உணர்ந்து கொண் டார். மக்களுக்கு விளங்காத போதனைகளை யும், வெறும் கிரியைகளையும் கூறும் சமயம் மக்களுக்கு வழிகாட்டியாக அமைய முடியாது என்பதை அறிந்து கொண்டார். வெறும் வயிறு சமயத்துக்கு உதவாது என்பதையும் உணர்ந்து கொண்டார். ஒரு வேளைக்கே உண்ணுவதற்கு வழியின்றி வெறும் வயிற்றுடன் இருப்பவனுக்குப் பிரபஞ்சம் பற்றிக் கூறுவதிலே என்ன பயன் என்று சுவாமி எண்ணினார். "நடைமுறைச் சிக்கல்களைப் பற்றி எண்ணாமல் பிரபஞ்சம் பற்றியும் நோன்பு விரதங்கள் பற்றியும் சந்நியா சிகளாகிய நாம் பேசித்திரிவது பொருத்த மானதா? என்று சுவாமி தன்னையே கேட்டுக் கொண்டார்.

மூன்று வேளை உணவுண்டு ஏப்பமிடு பவர்களுக்கும் தாம் உணர்ந்தவர்கள் என்று எண்ணிக்கொண்டு தருக்கித் திரிபவர்களுக்கும் போதனைகள் செய்து நேரத்தை வீணடிப்தை விடுத்து சாதாரணமானவர்களுக்கும் தீண்டாத வர்கள் என ஒதுக்கப்பட்டவர்களுக்கும் கல்வி கற்பித்தால் எவ்வாறு பயனடையதாயிருக்கும் என்று அவர் எண்ணினார். ஓர் ஆண்டுக்குப் பின்னர் சிக்காகோவில் நடைபெறவள்ள

உலகச் சமய மாநாட்டிலே உலகப்புகழ் பெற்ற சொற்பொழிவினை ஆற்றுதற்கு ஓரளவு சிந்தனையைத் தமிழ் நாட்டு மண்ணிலே நின்று சுவாமி பெற்றுக் கொண்டதையிட்டு நாம் பெருமைப்படுகிறோம்.

1892இல் கன்னியாகுமரிப் பாறையிலே தியானத்திலே ஆழ்ந்த சுவாமி விவேகானந்தர் 1893 செம்ரம்பர் 11ஆம் திகதி உலகச் சமய மாநாட்டிலே பேசும்போது ஒரு தீர்க்கதரிசி யாகவும் நாட்டுப் பற்றுடையவராகவும் பேசி னார். உலகச் சமயங்களுக்குள்ளே ஒற்றுமை ஏற்படவேண்டிய தேவையினையும் தீர்க்கதரி சனத்துடன் சுவாமி எடுத்துக் கூறினார். இன்று புலம்பெயர்ந்த இந்து மக்கள் உலகத்தின் பல நாடுகளிலேயும் வாழ்கின்றனர். அந்நாடுகளி லெல்லாம் கிறிஸ்தவ தேவாலயங்கள் மட்டுமே இருந்தன. இன்று அங்கெல்லாம் இந்து ஆலயங்கள் பெருவாரியாகத் தோன்றியுள்ளன. சமய பண்பாட்டு ஒற்றுமைகள் பற்றி அந்த நாடுகளிலே பேசப்படுகிறது.

உலகச் சமய மாநாட்டிலே பேசி விட்டு நாடு திரும்பும் வழியிலே இலங்கை யாழ்ப்பாணத் தமிழர் புண்ணியம் செய்தவர் களாக அவருடைய சொற்பொழிவினைக் கேட் கும் வாய்ப்பினைப் பெற்றனர். "நமது அடிப் படை" என்னும் பொருளிலே உரையாற்றிய சுவாமி சமய விரோதம் பற்றி மிக எளிமையான முறையிலே ஓரிடத்திலே குறிப்பிட்டார். அது வருமாறு:

"உலகத்தில் உள்ள எந்த மதத்துடனும், அது ஏசுவையோ புத்தரையோ முகம்மதுவையோ அல்லது வேறு எந்த மகானையோ வழிபடச் சொன்னாலும் அவற்றுடன் நமக்குச் சண்டை கிடையாது. இந்து அவர்களைப் பார்த்து "வாருங்கள் சகோதரர்களே! நான் உங்க ளுக்கு உதவுகிறேன். ஆனால் என் வழியில் நான் செல்ல நீங்களும் அனுமதிக்க வேண்டும் அது என் இஷ்ட தெய்வம். உங்கள் வழி மிகவும் நல்லதுதான். அதில் சந்தேகமில்லை ஆனால் எனக்கு அது அபாயமானதாக இருக் கலாம். எனக்கு எந்த உணவு நல்லது என் பதை என் அனுபவந்தான் எனக்குச் சொல்ல முடியும். ஒரு பெரிய டாக்டர் பட்டாளம் அதைக் கூற முடியாது. எனவே எனக்கு எது மிக நல்ல பாதை என்பதை நான் என் அனுபவத் திலிருந்து அறிந்து கொள்கிறேன். அதுதான் லட்சியம்; அதுவே இஷ்ட தெய்வம். எனவே தான் கோயிலோ சின்னமோ அல்லது திரு வுருவோ உன்னுள் இருக்கும் தெய்வீகத்தை உணர்ந்து கொள்ள உதவுமானால், நீங்கள் அதனை வைத்துக் கொள்ளுங்கள் என்று நாம் சொல்கிறோம் நீங்கள் விரும்பினால் இருநூறு விக்கிரகங்களை வைத்துக் கொள்ளுங்கள். சில குறிப்பிட்ட விக்கிரகங்களும் வழிபாட்டு முறைகளும் நீங்கள் தெய்வீகத்தை உணர வழி செய்யுமானால் அந்த வழியில் விரைந்து செல்லக் கடவுள் உங்களுக்கு வலிமை தரட்டும். உங்களைக் கடவுளுக்கு அருகே கொண்டு செல்லுமானால், எந்தக் கோயி லையும் எந்த விதமான சடங்குகளையும் தாரா ளமாகப் பின்பற்றுங்கள். ஆனால் அது குறித்துச் சண்டையிடாதீர்கள். சண்டையிடத் தொடங்குகின்ற அந்தக் கணமே, நீங்கள் கடவுளை நோக்கிச் செல்லவில்லை. மிருக நிலை நோக்கிப் பின்னால் செல்கிறீர்கள்".

இவ்வாறு சமயப் பொறை பற்றித் தன் னுரையில் குறிப்பிட்ட சுவாமி அவர்கள் ஒவ் வொரு மனிதனும் ஒவ்வொரு நாடும் பெருமை அடைவதற்கு நன்மை விளைவிக்கும் சக்தி யிலே திடமான நம்பிக்கை கொள்ள வேண்டும்; பொறாமையும் சந்தேகமும் இல்லாதிருக்க வேண்டும்; நல்லவர்களாக இருக்கவும் நன்மை செய்ய முயற்சிக்கும் அனைவருக்கும் ஒத்து ழைப்புத் தரவேண்டும்.

தமிழர் சமூகம் இன்னும் பல பலவீனங்களை உடையதாயுள்ளது. எனவே இளம் வீரத்துறவியான சுவாமி விவேகானந்தர் கூறிய பல போதனைகள் அவர்களுக்கு வழிகாட்டுவனவாக அமையும் என்பதில் ஐய மில்லை. தன்னாட்டுப் பற்றுடையவர்களாகவும், சாதி பேதம் முதலியவற்றிலிருந்து நீங்கியவர் களாகவும், சமயம் மக்களின் சமூக பொருண் மிக நோக்குகளிலே தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்னும் அறிவுடையவர்களாகவும், அச்சமில்லாத இளைஞர் பரம்பரையை உரு வாக்கக் கூடியவர்களாகவும் தமிழர்களை மாற்றுதற்குச் சுவாமியின் போதனைகள் வழிவகுக்கும்.

தனியார் கல்வி முறைமையும் பாடசாலைகளும் - ஓர் அறிமுகம்

மா. சின்னத்தம்பி
M.A.(Econ) M. Phil (Ed)
தலைவர்
கல்வியியற்துறை - யாழ் பல்கலைக்கழகம்

கல்வி என்பது எதிர்காலத்தில் மேற் கொள்ள வேண்டிய சமூகவாழ்க்கைக்குரியவர் களாக பிள்ளைகளை வளர்த்தெடுக்கும் பணி என்ற மூல விளக்கத்தைக் கொண்டிருந்தாலும் அடிப்படையில் மக்கள் ஒவ்வொருவருக்குமான தொழில் இலக்குகளை எளிமையாக எட்டுதற் குதவியாக வழங்கப்படும் அறிவூட்டல் மற்றும் பயிற்சியளித்தல் தொடர்பான செய்முறைகள் கொண்ட சேவையாகவும் இனங்காணப் பட்டுள்ளது.

கீழைத்தேசங்களில் பண்டைய சமூகங் களில் நிலவிய நால்வகை சமூக வகுப்பினரு மாகிய பிராமணர், வைஷியர், சத்திரியர், சூத்திரர் என்போர் சமூக வாழ்வில் மேற் கொள்ள வேண்டியதான தொழில் முறைமைக் குள் பொருத்தமானதொரு கல்வி ஏற்பாட்டி னையே பின்பற்ற வேண்டியிருந்தது. நிலைக் குத்தான தொழில் அசைவு அதன் வழியான சமூக அசைவியக்கம் என்பன எந்த நிலை யிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவோ அதற்கு உதவும் பணியில் கல்வி செயற்பட்டதாகவோ அறிய முடியவில்லை. மேற்குலகிலும் மதபோதகர், அரசர்கள், பிரபுக்கள் போன் றோருக்கான கல்வியிலிருந்து சாதாரண உடல் உழைப்புக்கான கல்வி வேறுபட்டதாகவே இருந்தது 1990களில் சோவியத் யூனியன் உடைவுக்கு முந்திய காலப்பகுதியிலிருந்து விலகி அல்லது விலக்கப்பட்டிருப்போர் அச் சமூகத்தில் காணப்படும் கடைநிலைத் தொழில் களில் இருப்பதும் நோக்கத்தக்கது.

இவ்வாறு கல்வி, தொழில் சார்ந்த மக்களின் அபிலாசைகள் இலக்குகள் என்பவற்றை நோக்கி தன் செயல் வீச்சினை வேகப்படுத்தியபோது கல்விக்கான சமூக விழு மிய மேம்பாடு உருவாக்கும் தகுதியினால் ஏற்பட்டு வந்து சமூகத் தேவையிலும் பார்க்க மிகுதிக் கேள்வி இத் தொழில் சார் விழிப்புணர் வின் அடிப்படையில் ஏற்பட்டு வந்தது இந்த தொழில் வாய்ப்பு என்ற பொருளியல் எண்ணக் கருவுடன் கல்வி என்ற விழுமிய மேம்பாட்டு பணிக்கான தொடர்பு மிக நெருக்கமானதாகிய போது கல்வி தேசிய ரீதியில் ஒரு பொருளா தாரப் பணியாகவும் தனிப்பட்ட குடும்பம் அல்லது தனிநபர் பொறுத்து பொருளாதாரப் பண்டமாகவும் மகிமை பெறலாயிற்று. இது உலகளாவிய எண்ணக்கருவாகவும் ஏற்றுக் கொள்ளப்படலாயிற்று. சந்தைப் பொருளாதாரம் ஒன்றின் வாங்குதல் - விற்றல் - விலை என்ற சந்தைப் பொறிமுறை அம்சங்களுக்குட் பட்டதாக கல்வி மாறிவிட்டது. இந்த வகையி லான கல்வி என்ற பணிக்குறின் அசைவுப் போக்கு தனியார் முறைமையின் பங்குப் பணியைக் கல்வியில் இன்றியமையாத தேவை ஆக்கி உள்ளது.

தனியார் முறைமை:

பூர்வீக கலைவரலாற்றில் தனிப்பட்ட குருவே கல்வியை வழங்குபவராயிருந்தார். குரு தன் வாழ்வுமுறை, சிந்தனை, செயல் எல்லாவற்றிலும் அறிவின் உயர்பீடமாக விளங் கினார். இதனால் கல்வி கற்கும் மாணவரைத் தெரிவு செய்தல், கலைத் திட்டத்தை தீர்மானித் தல், இணைந்த பயிற்சிகளை வழங்குதல் மதிப்பீடு செய்தல் கல்விக்குரிய காலத்தை நிர்ணயித்தல் போன்ற எல்லாவற்றையும்

அவரே தீர்மானித்தார். அறிவூட்டல் திறன் விருத்தி என்பவற்றோடு விழுமிய மேம்பாடு என்பதிலும் குரு வழிகாட்டியாக இருந்தார். மதிநுட்பம் விழுமியம் என்பவற்றினால் மாண வன் சமுகத்தில் முன்மாதிரி மனிதனாக வாழ அக்கல்வி வழிகாட்டியது.

மானிய கால முறைமையிலிருந்து விவசாய சமுதாயம், கைத்தொழில் சமுதாயம் என்பவற்றிலிருந்து தற்போது வர்த்தகம் உள்ளிட்ட சேவைகள் முதன்மை பெறும் சமுகத்திற்குரியதாக சமுக வாழ்வு தகர்ந்து விட்டது. இன்றைய பொருளாதார முறை மையில் கல்வி நிறுவனமயப்படுத்தப்பட்ட தாகவும் மாறிவிட்டது. பெற்றோரின் நிதி வசதிக்கேற்ப தெரிவு செய்யக் கூடிய ஏனைய பண்டங்களை ஒத்ததாகவே கல்வி சார்ந்த முறைக்குட்பட்டு விட்டதால் அவற்றை நிரம்பல் செய்யும் நிறுவனங்களின் வளர்ச்சியும் வேகமடையலாயிற்று.

முடியுடை அரசர்களின் காலத்தில் அறநெறிக்கல்வி தொடர்பான உதவி ஊக்கு வியல்புகள் காணப்பட்டாலும் கூட எல்லோர்க் கும் கல்வி வழங்கும் பொறுப்பு அரசனுடைய தாக இருக்கவில்லை. மேற்கு நாடுகளில் மதம் - அரசு என்பவற்றின் மேலாதிக்க தகுதிகளுக் கேற்ப கல்வி சார்பான முடிவுகளை மேற் கொள்ளும் தகுதி அவர்களிடையே கைமாறி வந்தன. மறுமலர்ச்சிக் காலத்தின் பின் மேற்குலகின் கடலாதிக்கம் குடியேற்ற நாடுகளின் கல்வி தொடர்பான முடிவுகளை மதபீடம், அரசாங்கம் என்ற இருசாராரிடையே கைமாறி வந்தன. எனினும் பாடசாலைகளின் பரம்பல் மதமாற்ற தேவைகளினால் விசையுடையதான போது கல்வி எல்லோர்க்கு முரியதாக தென்பட்டது.

இக்காலகட்டத்தில் பொருளாதார வலு உயர்பதவி வழியான வலு என்ற இரண்டையும் இணைக்கும் வகையில் கல்வி பரிமாணம் பெற்றது. இந்நிலையில் கல்வி "சிறப்பான பிரிவினருக்கு தனித்துவமான தகமைகளை வழங்கும் கல்வி வழங்கும் நிறுவனங்கள் என்ற தோற்றப்பாட்டுடன் தனியார் கல்வி நிறுவனங் கள் தனித் தன்மையுடன் காலூன்றலாயின. சமுகமதிப்பு உயர் பொருளாதார தகுதி என்பனவற்றோடு பிணைக்கப்பட்ட வலு கொண்ட ஊதியம் பொதுத் தொழில்களுக்கும், உயர்கல்விக்குமான நுழைவாயில்களை திறந்து விடும் நிறுவனங்களாக இத் தனியாா கல்வி நிறுவனங்கள் வளர்ந்தன. இந்நிலையில் கிறிஸ்தவ சமயம், மேற்கத்திய பண்பாடு, மொழி, ஊதியம், பொது உயர் தொழிலுக் குரிய கலைத்திட்டம் என்ற பண்புக் கோலங்கள் கொண்டவைகளாக இவை வளர்ந்து உயர்ந்து நிற்கின்றன.

இலங்கை அரசியற் சுதந்திரம் பெறுதற்கான எத்தனங்கள் குடியேற்ற எஜமானர்களுடன் முரண்படுவனவாகவன்றி நட்புறவுடனான விட்டுக் கொடுக்கும் தன்மை கொண்டனவாயிருத்தல் சுதந்திரத்தின்பின் ஒரு தகுந்த காலத்திற்கு பொருளாதார (1960 வரை) துறைகளில் தேசிய இலக்குகள் வலியுறுத்தப்படவில்லை. பொருளாதார இலக்குகள் அரசியல் இலக்குகள் என்பன இலங்கையின் கல்வித்திட்டங்களுக்கு அடிப் படையாக இருந்தமைக்கு விழுமிய மேம்பாடு பற்றிய இலக்கு இருக்கவில்லை என்பதை அண்மைக்கால கல்விச் சீர்திருத்தங்கள் பற்றிய கவனங்கள் வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளன. இந்தப் பிள்ளைகளில் 1960 வரை சுதேசிய கல்வித்திட்டங்கள், செயலூக் கங்கள் பற்றி அக்கறை செலத்தப்படவில்லை. உயர்கல்வி மேற்கு நாடுகளில் வழி காட்டல்களினால் வளர்க்கப்பட வேண்டுமென்ற கருத்து கல்வி வழங்குவோரான பெரியோர் இருசாரரினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. "உயர் சிந்தனையூற்றுக்கள் மேற்குலகில் தான் காணப்படுகின்றன.""உயர் சிந்தனையுடையோர் பொருந்துதற்கான சமூக பொருளாதார முறைமை மேற்குலகில் தான் காணப்படு கின்றது" என்பன போன்ற கருத்துக்கள் இலங்கை சுதந்திரமடைந்து ஐந்து தசாப் தங்கள் முடிவடைந்த இன்றைய நிலையிலும்

எவ்வித கூச்சமுமின்றி ஏற்றுக் கொள்ளப்படும் தேசிய கருத்தாக விளங்குகின்றது. 1930களில் பெருமாற்றம் ஏற்பட்டிராவிடில் மேற்குலக பல்பலைக்கழங்களில் உயர்கல்வி கற்ற முதறிஞர்களின் பணியின் விளைவுகள் இலங்கை கலைவித்தகரது என்ற கருத்தும் உண்டு.

இலங்கை நலன்புரி பணிகளில் சுதந்திரத்திற்கு முன்பிருந்தே காட்டிவரும் நாட்டம் கல்வி ஜனநாயகப்படுத்துவதற்கு உதவியிருப்பதை முழுநிறைவுடன் நினைவூட்ட வேண்டும். 1945இன் இலவசக் கல்வி கட்டாய பாடசாலைவரவு, சுயபாஷை நிலையான கல்வி போன்ற செயற்திட்டங்கள் கல்வியை எல்லோர்க்குமுரியதாக எத்தனித்தன என்பதும் அதன் காரணமாக இலங்கையின் எழுத்தறிவு பிரயோகிப்பதில் அவதானம் போன்றன மேம்பாடடைந்திருந்தன என்பதும் உண்மையே.

ஆயினும் இவ்வியக்கம் சுயதொழில் ஊக்கம் எல்லாத் தொழில்களுக்குமான தொழிற் கண்ணியம் என்பவற்றை ஏற்படுத்து வதற்குப் பதிலாக திட்டமெதுவுமற்ற வழி காட்டல் எதுவுமற்ற உயர்கல்வி நோக்கி காட்டாற்று வேகத்துடன் ஓடும் போட்டி நிலையை மாணவரிடையே ஏற்படுத்தியது. இத்தகைய கவனமற்ற ஆனால் விருப்புமிக்க கல்விசார் செயற்திட்டங்களினதும் அவற்றைத் தொடர்ந்து கல்வி உலகில் ஏற்பட்ட சமநிலை யைப் பாதிக்கும் விருத்திகளும் தான் தனியார் கல்வி முறையை சுதந்திர இலங்கையில் வலுவானதாக்க உதவின.

1970 களில் பல்கலைக்கழகம் கல்வி மேம்பாடு மிக்க தொன்றதாக சமூக மட்டத்தில் உணர்வுபூர்வமாக நோக்கப் படவில்லை. 1970 களில் அறிமுகப்படுத்தப்பட்ட தரப்படுத்தல் முறை க. பொ. த (உயர்தர) கல்விக்கான செயற்கையான சமுதாய கேள் வியை உருவாக்கின. கொழும்பு தலைநகர் தவிர்ந்த மற்றைய உயர் நகரங்களிலும் புறநகர்ப் பகுதிகளிலும் க. பொ. த (உயர்தர) வகுப்பு மாணவர்களுக்கான கல்வியூட்டும் வகையிலேயே முதலில் தனியார் கல்வி நிலையங்கள் வளர்ச்சி பெற்றன. இவை கல்வியை ஒரு பொருளாதாரப் பண்டமாகவும் கல்வி நிலையங்களை பொருளாதார நிலையங்களாகவும் மாற்றிய போது கல்விக்கான போட்டிச் சந்தைமுறை நாட்டின் பல பாகங்களிலும் வளர்ச்சி பெறலாயிற்று தரப்படுத்தலில் பாதிக்கப்பட்டதாக கருதப்பட்ட நிறுவனங்களில் போட்டியில் முன் தள்ளிவிடும் பணியை இக்கல்வி நிறுவனங்கள் மேற் கொள்வதாக கருதப்பட்டபோது தரப்படுத்தல் மூலமாக புதிய சலுகை மாதிரி அனுமதிகள் பெற்ற பிரதேசங்களில் (மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு) போன்ற மாணவருக்கு உயர்கல்வி மீது புதிய நாட்டத்தையும், மிகையான விருப்புணர்வையும் ஏற்படுத்தும் மாதிரியில் இக்கல்வி நிறுவனங்கள் கிளர்ந் தெழலாயின.

இத்தகைய போட்டிநிலை தனியார் கல்விக் கலைகளும் வலுப்பெறத் தொடங்கி யமைக்குக் காரணமாகும். இக்காலத்தில் தனியார் கல்வி ஒரு முறைமையாக வளர்ச்சிய டைதற்கு ஊக்குவியல்பாக நிலவிய காரணங் களைப் பின்வருமாறு கூறலாம்.

1. அரசின் கவனத்திற்கு உட்படுத்தப் படாதிருந்த முன்பள்ளிக் கல்வி பல தனியார் களினதும் சமய நிறுவனங்களாலும் அரசசார் பற்ற நிறுவனங்களாலும் நடாத்தப்பட்டிருந்த நிலையில் அவை தனியார் கல்வி நிறுவனங் களின் அக்கறைக்குட்பட்டதொரு கல்வி மட்டமாகும்.

2. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, புலமைப்பரிசிற்குரியதாக மட்டுமன்றி பெரிய பாடசாலைகளின் அனுமதிக்குமான பரீட்சை யாகவும் துரிதப்படுத்தப்பட்டதால் கிராமியத் துறையில் வகிக்கும் பெற்றோர் தமது பிள்ளை களை நகரின் பெரிய பாடசாலைகளுக்கு நகர்த்திவிடும் பிழை அப்பரீட்சையின் சித்தி பெற்றோர் மட்டத்தில் அந்தஸ்தை உருவாக்கு வதான மாயைப் பெருமையினதும் பிள்ளைகள்

பெற்றோரின் உந்துதலால் தனியார் கல்வி நிறுவனங்களுக்குப் பெருந்தொகையில் புகுந்தமை.

3. க.பொ.த.(சாதாரண) வகுப்புக்களாலே மாணவரின் இடைநிலைக் கல்வியின் தேசிய தராதரத்தை இதனடிப்படையில் ஏன்ன வகுப்பு நிலைகளை விட முக்கியத்துவமுடையதாக கருதியும் பெருந்தொகையான மாணவர் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்கின் றனர். ஒருதடவை சித்தியடையத் தவறியதால் மீண்டும் பரீட்சைக்குத் தோற்றும் மாணவரும் பாடசாலைக்கு பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் நாட்கள் தவிர ஏனைய நாட்களில் பாட சாலைக்கே செல்வதில்லை. அவர்களின் கல்விப் பெறுபேறு பற்றிய வகைகூறல் பெற் றோர், பாடசாலை இருப்பினும் பரீட்சைக்குத் தயார் செய்தல் என்ற ஒரே நோக்குடன் தனியார் கல்வி நிறுவனங்கள் கல்வியூட்டு கின்றன. கல்வி கற்றல், கற்பித்தல் தொடர்பாக கல்வியியலாளர்கள், உதவியியலாளர்கள் போன்றோர் தெரிவித்த கோட்பாடு பற்றி அதிக ஆர்வமெதுவுமின்றி இயன்றளவு குறைந்த பௌதீக வளங்களுடன், இயன்ற வரை கூடுத லான மாணவரை பரீட்சைக்கு வேகமாகத் தயார் செய்யும் வேகாவேகத்துடன் இவை பணியாற்றுகின்றன.

4. க.பொ. த. (உயர்தரம்) வகுப்புக்களில் கற்கை நெறிகளைத் தெரிவு செய்வதில் அசம நிலை காணப்படுகிறது. பல்கலைக்கழக அனு மதி தொடர்பாக பொருத்தப்பாடற்ற போட்டி நிலையை வலுவானதாக்குவதில் கற்கை நெறித் தெரிவுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சரியான பாடசாலை வழிகாட்டல்கள் பெற் றோரின் நிதானமான வழிகாட்டல்கள், பிள்ளை களின் இயலுமை நாட்டம், பெற்றோரின் நிதி வசதி போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொள்ளாது ஒத்த வயது நண்பர்களின் செல்வாக்கு சமூகமட்டத்தில் மரபுவழியாக மதிப்புமிக்கதாக பெற்றோரிடம் காணப்படும் மாயக்கருத்து போன்றவற்றினடிப்படையில் கற்கை நெறிகள் தெரிவு செய்யப்படும் நிலை காணப்படுகிறது. இதனால் மாணவரின் இயலுமைகளுக்கு ஒத்திசைவற்ற கற்கை நெறிகளும் அதிகளவு மாணவர்கள் உள் நுழைவதனால் பய உணர்வு மேலோங்க தனியார் கல்வி நிறுவனத்திற்குச் சென்று குவிகின்றனர்.

அனுமதிக்கப்படும் மாணவர் தொகையை விட பல மடங்கு மாணவர் பரீட்சைக்கு தோற்றும் நிலையில் போட்டி அதிகரிப்பதும் இரண்டாம் மூன்றாம் எத்தனங் களில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் தொகையும் பெருகிச் செல்வது தனியார் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை, கற்பிக்கும் ஆசிரியர் எண்ணிக்கை கல்வி ஊட்டப்படும் நேர அளவு என்பனவும் அதிகரித்துச் செல்கின்றன.

5. பட்டதாரியாக இருத்தல், சமூகமட்டத்தில் உயர்கல்வி கற்றவராக கருதப்படல் அலுவலர் மட்ட அல்லது உயர் தொழில் பெற அடிப்படை யாதல் தொடக்கக் கல்வி பெறுவதற்கு வழிகாட்டல் போன்ற காரணங்களினால் அதிகம் விரும்பப்படுகின்றது.

பட்டதாரியாக இருத்தல் தொழில் நிலைரீதியான மேல்நோக்கிய வளர்ச்சிக்கும் சம்பள உயர்வுக்கும் உதவுவதாகவிருப்பதால் வெளிவாரிப் பட்டங்களைப் பெறும் நாட்டம் பல்கிப் பெருகியுள்ளது. இதனால் பட்டதாரிக் கல்வியை வழங்கும் செயற்பாட்டிலும் கல்வி நிலையங்கள் வார இறுதி நாட்களில் ஈடு படுகின்றன. முழுநேர உழைப்பாளர் அல்லது பகுதி நேர உழைப்பாளர் அநேகர் இக் கட்டளை அளவுகளிலும் உயர்வடைகின்றன. இதன் காரணமாக இலாபகரமான கல்வி யூட்டலாக இவை அமைகின்றன இப்பட்டதாரிக் கற்கை நெறிகள் காரணமாக தனியார் கல்வி நிலையங்கள் அறிமுகத்துவம் பெற்றுவிட்டன.

6. தகவல் தொழில் நுட்பம் மரபுவழி அரச முறைகள் பாடசாலைகளின் மூலம் நிறைந் நிறைவாக வழங்கப்படாத நிலையில்

அதற்குச் சமுகமட்டத்தில் பெருகிச் செல்லும் கேள்வியை ஈடுசெய்யும் நோக்கில் ஏராளமான தனியார் கல்வி நிறுவனங்கள் ஈடுபடுகின்றன. அவற்றினால் வழங்கப்படும் கல்வியின் தரம் பயன்படுத்தப்படும் கல்வித் துணைச் சாத னங்கள் ஆசிரியர்களின் தராதரம் என்பன தொடர்பாக அவற்றிடையே பாரிய தராதர வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆயினும் இத்தகைய கல்வி நிறுவனங்கள் பெருகுவதற்கு இவை பெருந்துணை புரிகின்றன.

7. தொழிற் பயிற்சி நெறிகள் இரண்டாம் மூன்றாம் நிலைத் தொழில் வாய்ப்புக்கள் பெறுவதற்கும் பாடசாலை இடைவிலகி நடுத்தர தாழ்வருமான குடும்பத்துப் பிள்ளைகளுக்கு பயிற்சியளிக்கும் வகையில் ஈடுபடுகின்றன. இவை நகரங்களிலே வளர்ச்சி அடைந் துள்ளன.

சர்வதேசரீதியில் தொழில் வாய்ப்பு பெறுவதற்கும் உள்நாட்டில் செயற்படும் வெளிநாட்டு நிறுவனங்களை முன்னணி தொழில் நிறுவனங்கள் போன்றவற்றில் தொழில் பெறுவதற்குரிய தகுதியை வழங்கும் வகையில் வெளிநாட்டு நிறுவனங்கள் பல்கலைக்கழகங்கள் என்பவற்றினால் சர்வ தேசரீதியாக நடாத்தப்படும் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு கல்வியூட்டும் பணியில் தரமான கல்வி நிறுவனங்கள் பல கொழும்பு மாநகரில் செயற்படுகின்றன. ஏனைய நகரங்கள் சிலவற்றிலும் இவ்வாறு சில இயங்குகின்ற ஏனைய நகரங்கள் சிலவற்றிலும் இவ்வாறு சில இயங்குகின்ற போதிலும் அவை குறிப்பிடத்தக்கவையா யில்லை. உயர்வருமானம் கொண்ட பெற்றோரின் பிள்ளைகளுக்குரிய கல்வியாக விளங்கும் இக்கற்கை நெறிகள் மாணவரைப் பொறுத்து செலவுடையனவாகவும் கல்வி நிறுவனங்களைப் பொறுத்து அதிக இலாப கரமானவையுமாக காணப்படுகின்றன.

இவ்வாறு முன்பள்ளி மட்டத்திலிருந்து பட்டப்படிப்பு தொழில் நுட்ப முறைக்கல்வியால் முகாமைத்துவ தகவல் தொழில்நுட்ப கற்கை நெறிசார் என்ற வீச்சுக் கொண்டதாக பல்வேறு கற்கை நெறிகள் கற்பிக்கப்படும் கல்வி நிலைகளின் ஊடாக தனியார் கல்வி நிலையங்கள் வளர்ச்சி பெற்றுள்ளன.

அரசாங்க பாடசாலைகளை தொழில் நுட்ப கல்வி நிறுவனங்கள் அரச பல்கலைக் கழகங்கள் என்பவற்றினால் உள்வாங்கப்பட முடியாத பிள்ளைகள் கற்பிக்கப்படாத கற்கை நெறிகள் என்பவற்றை இலக்கு வைத்து உரு வாக்கப்பட்டு வளர்ச்சி பெற்று நிறுவனங்களாக இவை காணப்படுகின்றன. இந்த வகையில் இவற்றின் முதலீட்டின் அளவு ஈடுபட்டுள்ள முயற்சியாண்மையாளர் தொகை உருவாக் கப்படும் வேலைவாய்ப்புக்களின் அமைப்பு பயனாளிகளின் எண்ணிக்கை இவற்றைப் பேணி வரும் உட்கட்டமைப்புத் துறைகளின் விளை வாக இவற்றின் பரிணாமப் பெறுமதியின் அளவு என்பவற்றினடிப்படையில் கல்வி தொழில் துறை யாக தனியார் கல்விமுறைமை வளர்ச்சி யடைந்துள்ளது.

பாடசாலை முறைமைக்குச் சமாந் தரமாக ஆனால் பெருமளவிற்கு அதே பாட சாலை முறைமையின் மானிட உள்ளீடுகளான மாணவரை அடிப்படையாகக் கொண்டே சிறு நகரங்கள் உபகரணங்கள் கிராமங்கள் தோறும் இக்கல்வி நிறுவனங்கள் வளர்ச்சியடைகின்றன.

பெருந்தொகையான மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு கிரமமாக தினமும் காலையும் மாலையும் விடுமுறை தினங்களும் ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர் களிடமும் செல்லும் போக்கு காணப்படுகிறது. பெற்றோர் சீத்தகைய வருமான மட்டத்திற் குரியவராக இருப்பினும் தம்பிள்ளைகளை தனியார் கல்வி நிறுவனங்களுக்கு செல்வதற்கு உதவ வேண்டிய தன்மையில் சமூக நிலை மாற்றம் பெற்றுள்ளது. இதனால் பாடசாலை மாணவர் பாடசாலை விட்டு மீளவும் பரீட் சைக்குத் தோற்றுவோர் போன்ற பல தரப்பினரும் இந்நிறுவனங்களுக்கு வாரத்தின்

எல்லா நாட்களிலும் ஏதோ ஒரு நேர அளவிற்கு சென்று கல்வி கற்கின்றார்கள். இவ்வாறு "கல்வி கற்றல்" என்ற செயற்பாடு தனியார் கல்வி நிறுவனங்களின் ஒளிவீச்சிற்கு உட்பட்டே இருக்க முடியும் என்ற கருத்தும் உணர்வும் வலுவடைய அது கல்விசார் நம்பிக்கை நடத்தை, நாட்டம், பழக்கம் என்பவற்றில் பெரிய பாதிப்பை ஏற்படுத்திய போது தனியார் கல்விக்கலாசாரமாக அது வெளித்தோற்றம் பெற்றுள்ளது.

இந்த பிள்ளைகளில் கல்வி சமூக வியாபார துறையாகவும் கலாசார வியாபாரத் துறையாகவும் வளர்ச்சி பெறலாயிற்று உலகமயமாக்கல் செய்முறைகளினடிப் படையில் கல்வி சமூகத்துறை என்ற தோற்றப் பாட்டை விடவும் பொருளாதாரத் துறை என்று கருதப்படல் பொருத்தமுடையதாக உலக வங்கி கருதுகிறது. உலகவர்த்தக நிறுவனத் தின் நிபந்தனைகளில் "மதிநுட்ப சொத்துரிமை" பற்றிய தகுதிப் பண்பு விளக்கங்கள் கல்வியின் சர்வதேச பரம்பலுக்கு பொருளாதார தகுதியை வலுவாக வழங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய சர்வதேச கருத்தும் வளர்ச்சி நிலை களினதும் இலங்கையினதும் தாக்க விளை வுகளை உருவாக்கியுள்ளன.

அறிந்ததை விட குறைவாகப் பேசுங்கள்
காட்டுவதை விட அதிகமாக வைத்திருங்கள்



கல்லின் மது உளி விழும்போது
கல் கலங்கினால் சிலை உருவாகுமோ



விழுந்தாலும் அருவியாக விழவேண்டும்
தேங்கினால் சாக்கடையாகி விடுவீர்கள்

பாடசாலை மாணவர் - ஆசிரியர்களுக்கான "கல்விச் செயற்திட்டப் பிரயோகங்கள்"

பாலசுப்பிரமணியம் தனபாலன்
B.A.(Cey), PGDE (merit) M. Phil in Education
உப பீடாதிபதி (கல்வியும் தர மேம்பாடும்)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

பாடசாலை மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளில் உரிய தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பல்வேறு கற்றல் - கற்பித்தல் - கணிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றன. செயற் திட்டங்கள், குழுச்செயற்பாடுகள், ஒப்படைகள், களச்சுற்றுலாக்கள், வெளிக்கள ஆய்வுகள், கண்காட்சிகள் என்பவை இவற்றில் முக்கிய மாகின்றன. இவை பாடசாலையின் உயிர்த் துடிப்பான கற்றல் - கற்பித்தல் செயன் முறைகளை வினைத்திறன் மிக்கதாக்கி மேலும் விருத்தி செய்வதற்கான அபிவிருத்தியின் முன் மாதிரிகளாகவுள்ளன. ஆரம்பக் கல்வித் தரங் களில் இருந்தே கலைத்திட்டச் செயற் பாடுகளில் புத்தாக்க ஆய்வுத்திறன்கள் கண்டு பிடிப்புக்கள், பிரச்சினை தீர்த்தல் என்பவற்றிற்கு மிகக்கூடுதல் அக்கறை செலுத்தப்படுகின்றது.

பாடநூல்களின் மூலமான மேற்கொள் ளப்படும் கல்விச் செயற்பாடுகளுடன் சேகரிப் பூக்கம், செயன்முறைக்கற்கை, அறிக்கை செய்யும் திறன், சுயதிறனாற்றல், ஆய்வு ஈடுபாடு, முகாமைத்துவத்திறன், கற்கக்கற்றல், தொடர்பாடல் தேர்ச்சிகள், தலைமைத்துவம் என்பவற்றைப் பயிற்றுவிப்பதற்காகத் தற்போது கல்விச் செயற்திட்டங்கள் (Educational Projects) மூலமான கற்கைகள் அறிமுகப் படுத்தப்படுகின்றன. மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளிலும், ஆசிரியர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போதும் கல்விச் செயற்திட்டங்கள் இன்று முன்னிலைப் படுத்தப்படுகின்றன. சர்வதேச கல்வியிய லாளர்களும் இன்று செயற்திட்டமுறைக் கற்றலுக்கு முக்கியத்துவம் கொடுத்து வரு கின்றார்கள்.

இந்நிலையில் தற்போது பெரும்பாலும் எமது பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தேசிய கல்வியியல் கல்லூரிகள், தொழில் நுட்பக் கல்லூரிகளில் செயற்திட்டப் பிரயோ கங்கள்; கற்கை நோக்கத்திற்காகப் புள்ளியைப் பெற்றால் போதும் அல்லது செயற்திட்டத்தைச் சமர்ப்பித்தால் போதும் என்ற அக்கறையீனம் நிலவுவதாக விமர்சிக்கப்படுகின்றது. கற்றல் விருத்தி நோக்கைக் கருதாது ஒரு தலைப் பைத் தேடி அல்லது நீண்ட ஆய்வுக்கட்டுரைத் தலைப்பைக் கொண்டு கல்விச் செயற்திட்டம் ஒன்றைச் செய்ய முனைவது பொதுவாக இன்று அனைவரும் விடும் பெரும் தவறாகவுள்ளது.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர் கள், தொழில் செய்வோர், உயர் கல்வி கற்போர் உண்மையில் செயற்திட்டம் ஒன்றைச் செய்யும் முறை பற்றி மிகக்குறைந்த அறிவுடன் அல்லது எவ்வித தெளிவும் அற்ற நிலையில் காணப்படுகின்றனர். மற்றும் மாணவர்கள் செயற்திட்டத்தைத் தமது ஆக்கத்திறன், ஆர்வம், ஈடுபாடு கொண்டு; அனுபவித்துச் செய்வதற்கு மாறாக அதனை ஆசிரியர் களினால் சுமத்தப்படும் சுமையாக கருதி அதிலிருந்து விடுபடுவதற்கான ஒரு செயற் பாட்டைச் செய்து அறிக்கையைச் சமர்ப்பிக் கின்ற நிலை மிகமோசமானது. மேலும் செயற் திட்டங்கள் தழுவல்களாக, மாற்றீடுகளாக, பார்த்து எழுதப்பட்டவையாக, மொழி பெயர்ப் புக்களாக மாணவர்களினால் சமர்ப்பிக்கப் படுகின்ற மிகத் தவறான நிலையுமுள்ளது. இவ்வாறான நிலைகளை உடனடியாக மாற்ற வேண்டியுள்ளது. விஞ்ஞான ரீதியான ஆய்வுச் சிந்தனையை - செயற்பாட்டை விருத்தியாக்கும் ஒரு கற்றல் தொழில் நுட்பமாக செயற்திட்டம்

உள்ளதை அனைவர்க்கும் உணர்த்த வேண்டியுள்ளது.

கல்விச் செயற்திட்டங்களை இனம் காணல்:

ஒரு கல்விச் செயல்திட்டம் என்பது பிரச்சினைத் தீர்வுக்கு அடிப்படையாக அமையும் எளிதான ஒரு முறையாகும். இங்கு பிரச்சினை என்ற சொல் ஒரு விசேட பொருளாகவே கையாளப்படுகின்றது. இதைத் தெளிவாகக் கூறுவதாயின் யாதேனும் ஒரு கல்விக் குறிக்கோளை அடைந்து கொள்வதற்கு இடையூறாக ஒரு தடை ஏற்படுமிடத்து அத்தடை பிரச்சினை எனப்படுகிறது. இப் பிரச்சினைகளை ஆய்வு செய்து தீர்வுகளைக் காணவே செயற்திட்டங்கள் வழி காட்டுகின்றன. கல்விச் செயற்திட்டங்களைத் திட்டமிடவும், இனம் காணப்பட்ட செயற்திட்டங்களை வெற்றிகரமாக அமுலாக்கவும் இன்றியமையாத திறன்களை மாணவர்கள் பெற ஆசிரியர்கள் சரியான வழிகளைக் காட்ட வேண்டியுள்ளது. பாடசாலைக் கலைத்திட்டத்தில்; செயற்திட்டங்களின் நோக்கங்கள், செயற்திட்டம் ஒன்றைச் சரியாகச் செய்து முடிக்க, திட்டமிட கீழ் குறிப்பிட்ட படிமுறைகள் வழிகாட்டுகின்றன.

1. சூழ்நிலைகளைப் பகுத்தாராய்ந்து நிலமைகளைப் புரிந்து கொள்ளல்
2. சூழ் நிலைகளினூடாக தகவல்களினூடு நிலமைகள் - பிரச்சினைகளை இனம் காணல் அல்லது அடையாளம் காணல்.
3. பல்வேறு தரவுப் பகுப்பாய்வுகளினூடாக பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான செயன் முறைகளைக் காணல்.
4. பிரச்சினை தீர்வுக்கான வழிகளை அமுல் நடாத்தல்.
5. மாற்றங்களைக் கண்காணித்து, அவதானித்து மதிப்பிடல், அறிக்கைப்படுத்தல்.

ஒரு செயற்திட்டமானது விசேட குறிக்கோள்கள் (SP. objective), செயற்பாடுகள் (Activities), உள்ளீடுகள் (In Puts), வெளியீடுகள் (Out Puts) ஆகிய விடயங்களின் சேர்க்கை வாயிலாகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் கைக்கொள்ளும் ஒரு தொகுதியாகவுள்ளது. ஒரு பிரச்சினைக்கு ஏதுவான விசேட காரணத்தின் நிமித்தம் உத்தேசத் தீர்வினை அடைந்து கொள்வதற்காகக் குறிப்பிட்ட பல செயற்பாடுகளை இனம் கண்டு, விளைதிறன் பொருந்திய ஒரு வெளியீட்டை நோக்கி நகர்தல் ஒரு செயற்திட்டம் வாயிலாக ஆற்றப்படுகின்றது. இவ்வாறாக ஆற்றப்படும் கல்விச் செயற்திட்டம் பின்வரும் வினாக்களினூடாக உயிர்ப்பும் பெறும்;

- இச்செயற்திட்டம் எவ் உள்ளடக்கத்தைப்பற்றி நிற்கின்றது? எங்கு? எந்த முறையில் இதை மேற்கொள்வது?
- அடையப்பட வேண்டிய குறிக்கோள்கள் யாவை? குறிக்கோள்களை அடைய என்ன செய்ய வேண்டும்? யார் எந்தச் செயலைச் செய்வது? யாரிடம் உதவி பெறலாம்? தேவைப்படும் வளங்கள் எவை? எவ்வளவு காலத்தில் முடிக்கலாம்.
- எதிர்ப்பார்க்கப்படும் பெறுபேறுகள் எவை? எவ்வாறு முன்னேற்றத்தை அல்லது பெறுபேறுகளை மதிப்பிடலாம்? தரவுகளை எவ்வாறு பகுப்பாய்வு செய்யலாம்? செயற்திட்ட அறிக்கையை எவ்வாறு தயாரிக்கலாம்?

ஆகிய வினாக்களினூடாக செயற்திட்ட வடிவமைப்பை (Project Design) ஏற்படுத்திக் கொள்ளலாம்.

கல்விச் செயற்திட்ட அடைவுகள்

சரியான வழிகாட்டலினூடாக கல்விச் செயற்திட்டம் ஒன்றை சுயமாக ஒரு மாணவன் செய்து முடிக்கின்ற போது அவனிடம் பின்வரும் அடைவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1. கல்வி, பாடம் தொடர்பான பிரச்சினைகளை கண்டுபிடித்து அடையாளம் கண்டு தீர்வு காணும் பண்பு - முயற்சியை ஏற்படுத்தல்
2. நேர கால வரையறை, திட்டமிடும் திறன், தொடர்பாடல் தேர்ச்சி, விஞ்ஞான ரீதியான செயற்பாட்டு முகாமைத்துவ (Performance Management) திறன்கள் விருத்தியாக்கல்.

3. தேடல் ஊக்கத்தையும், கற்கக் கற்றல் தேர்ச்சியும், வாசிப்புப் பழக்கத்தையும். மனிதர்களுக்கிடையேயான இடை வினை விருத்தி ஊக்கலையும் ஏற் படுத்தல்.
4. குழுவுணர்வு, பரஸ்பர நன்மை, ஒத்துழைப்பு, அபிவிருத்தி, ஆளுமை, மனித விழுமியப்பண்புகள் வளர ஏதுவாக்கல்.
5. மொழி விருத்தி, அறிக்கை செய்து சமர்ப்பிக்கும் திறன் விருத்தி படைப் பாற்றலையும் ஆக்கத் திறனையும் பெற வைத்தல்.

இவ் அடைவுகளினூடாக மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்குகள் விருத்தி யடையும். சிறந்த அனுபவக் கல்வியையும், தனித்துவமான ஆற்றல்களையும் அளிக்கும். இதுவே இன்றைய மாணவர்களுக்கான செயற் பாட்டு அடிப்படையிலான கல்வியாகவுள்ளது. இது மாணாக்கர் எதிர்கால உலகின் சவால் களைச் சமாளித்து உயர்வு பெறும் திறன் களையும் வளர்க்கும். இவ்வகையில் செயல் திட்ட முறைக் கற்றல் மிகுந்த பயனுடைய தாகவுள்ளது. மாணவர் பாடசாலையிலும், பாடசாலைகளுக்கு வெளியிலும் சமூகத்திற்குச் சென்று தமது செயற்திட்ட நோக்கங்களிற்கு அமைய செயற்படும் போது சமூகமும் பயன டையும்.

கல்விச் செயற்திட்ட முகாமைத்துவம்

தெரிவு செய்யப்பட்ட குறிக்கோளினை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிறுவனத்தைச் சேர்ந்த அனைவரையும் வழிப்படுத்தும் செயன் முறையை முகாமைத்துவம் எனலாம். ஆசிரி யரின் வழிகாட்டலில் ஒரு செயற் திட்டத்தை மாணவன் இனம் கண்டு அதைச் செய்து முடிக்கும் வரை அவரை ஆசிரியர் முகா மைப்படுத்துதல்; குறிப்பிட்ட செயற்திட்டத்தை செய்பவரையே ஒரு முகாமையாளரின் பாத்திர மேற்று செயற்பட வழிகாட்டி, முகாமையா ளராக்கி அவரை வெற்றியாளர் ஆக்குத லையே கல்விச் செயற்திட்ட முகாமை குறித்து நிற்கின்றது. திட்டமிடல், ஒழுங்கமைத்தல், வழிப்படுத்தல், கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் என்ற வகையில் செயற்திட்ட முகாமைச் செயற்பாடுகள் உள்ளன.



இவ்வாறாக செயற்திட்ட முகாமைச் சுற்று. ஓர் மாணவனின் பொறுப்பான செயற் திட்டப்பணியினை நிறைவேற்ற சரியாக வழிகாட்டும். மேலும் இதன் ஒவ்வொரு படியும் ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிக்க முடியா தவாறு இணைந்து காணப்படுகின்றன. மேற்படி கல்விச் செயற்திட்ட சுற்றுவட்ட நடுவில்; கண்காணிப்பு (Monitoring) என்ற ஒரு எண்ணக்கரு உண்டு. இதன்கீழ் அனைத்துப்படி முறைகள் தோறும் குறிக்கோள்கள் நிறை வேற்றப்படுகின்றனவா? செயற்பாடுகள், உள் ளீடுகள், வெளியீடுகள் என்பன விதந்துரைக்கப் பட்டபடி நிகழ்த்தப்படுகின்றதா எனவும் அறிய முடியும். இதனூடாகச் செயற்திட்டத் தேர்ச்சி களை அளவிட்டு நோக்கிப் பிழைகளை நிவர்த்தி செய்ய முடியும். மேலும் செயற்திட்ட செயற்பாட்டைக் குறித்த காலத்தில் முடிக்க முறையான கான்ட் பட (Ghant Chart) முறை மையும் உதவும்.

கல்விச் செயற்திட்ட அறிக்கை

செயற்திட்டத்தைத் திட்டமிடல், அமுல் படுத்தல் போலவே அறிக்கை தயாரித்தலும் மிகுந்த முக்கியத்துவமுடையது. இதுவே கல்விச் செயற்திட்டத்தின் முழுச்செயற்பாடு களையும் விபரிக்கவல்லது. இது முறையாகத் தயாரிக்கப்பட வேண்டும். இவ்வகையில் இதன் கட்டமைப்புக்கூறுகள் பின்வருமாறு உள்ளன.

1. செயற்திட்டதின் தலைப்பு

2. அறிமுகமும் பின்னணியும் - குறித்த செயற்திட்டச் சூழல், சமூகப்பின்னணி கள், நிலைமைகள் வேறு முக்கிய விடயங்கள் அடங்கலாம்.

3. நோக்கம் - செயற்திட்டப் பிரச்சினை களுக்குரிய தீர்வுகளே அதன் நோக் கங்களாகின்றன. மேலும் இச் செயற் திட்டத்தைத் தெரிவு செய்தமைக்கான காரணங்களையும் இயம்பலாம்.

4. செயற்திட்டச் செயல் முறைகள் - பயன்படுத்தப்படும் தகவல் சேகரிப்புக் கள், உபகரணங்கள், கடைப்பிடித்த நடவடிக்கைகள், பரிசோதனைகள், அவதானிப்புக்கள், நடைமுறைகள், தீர்வுகளுக்கான முயற்சிகள்.

5. தகவல் சேகரிப்பு - தகவல் சேகரிப்பு முறையியல்களான முதனிலைத் தகவல்கள், (நேரடி உரையாடல்கள், வினாக்கொத்து) இரண்டாம் நிலைத் தகவல்களான (அலுவலகப்பதிவேடு ஆவணங்களின் விபரங்கள்) மூன்றாம் நிலைத் தரவுகளான (நூல்கள், சஞ்சி கைகள் பெறப்படுகின்ற வர்ணச் சேக ரித்தல், தகவல்களை ஒழுங்கமைத்தல்

6. தரவு நிரற்படுத்தல் - பகுப்பாய்வு - தீர்வுகள்; புள்ளிவிபரங்கள், உசாத் துணைகள், அட்டவணைகள், படங் கள், வரைபுகள் என்ற வகையில் செயற்திட்டத்திற்கு ஏற்ப தரவுகளை நிரற்படுத்தி பிரச்சினைகளை இனம் காணல். தீர்வுகளை முன்மொழிதல் பெறுபேற்றுக்கருத்தாடல்கள்.

7. செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் - தீர்வுக்கான செயற்திட்ட முன் மொழி வுகளை நடைமுறைப்படுத்தல். தொடர் செயல் முறைகள் பற்றிய விளக் கங்கள் செயற்பாட்டு அபிவிருத்திகள் தொடர்பான விபரங்கள், வரை படங்கள், விளக்கங்கள்.

8. முடிவும்- விதந்துரைகளும் - நிறைவுரை - செயற்திட்ட முடிவுகள் தொடர்பான சாராம்சம், பின்விளை வுகள், அபிவிருத்தித்திறன் முறைகள்.

இவ்வாறான மாதிரியில் செயற்திட்ட அறிக்கையைத் தயாரிக்கலாம். இதில் மேலும் சேர்க்க வேண்டிய விடயங்களையும் சேர்க்க லாம். இதற்கான பல்வேறு வகையான ஒழுக்க நெறித் தகுதிப் பிரமாணங்கள் ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் ஏற்றாற் போல உள்ளன. மாணவர் கல்வி சார் அபிவிருத்திக்கு உதவும்

செயற்திட்ட முறையியல்களைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். எம்மிடமுள்ள கல்வி என்ற ஒளித்திரை வாயிலாக வகுப்பறை - பாடசாலை - சமூகம் பூராகவும் வியாபித்துள்ள இருளினை அகற்றுவதற்காக ஒவ்வொரு மாண வர்களையும் செயற்திட்ட கல்வி முறையினூடு ஒளிரும் தீபங்களாக்குவோமாக.

உசாவிய துணை நூல்கள், சர்வதேச வலைப்பின்னல் முகவரிகள்:

1. Raguragavan – G – Organisational Planning – An Approach to Strategie Management – United Publication
-Colombo – 1996

2. Kveard Kand Morris – G- Effective School management – Harper and Row Publishers
-London – 1985

3. Sagor – R- Guiding School Improvement with Action – Research – 2000
http// w w w . ascd. Org/ reading room / books/ Sagor oo book htmt.

4. Lemlech. J.K. Classroom Management; Methods and techniques.
- London - 1988

திடீரெனக் கருத்து மாறுவது என்பது ஆபத்தானது ஆனால் குருட்டுத்தனமான பழைய கொள்கையைப் பின்பற்றிக் கொண்டிருப்பதை விட அது அவ்வளவு அபாயமானதல்ல.



மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை 165வது கல்லூரித்தினம் நினைவுப் பேருரை

165வது பரிசுத்தின விழாவில் ஆற்றிய உரை

சைவப் புலவர் சு. செல்லத்துரை
ஓய்வு பெற்ற அதிபர்
இளவாலை
12- 06- 2001

நிறைவாழ்வுக் கல்வி

விழாத் தலைவர் அவர்களே, ஆசிவழங்க வந்திருக்கும் குருமார்களே, பாடசாலையின் அதிபர் அவர்களே, முதன்மை விருந்தினர் அவர்களே, ஆசிரிய ஆசிரியை களே, அன்பான மாணவச்செல்வங்களே தங்கள் அனைவருக்கும் எனது அன்பு வணக்கம்.

இந்த இளங்காலைப் பொழுதினிலே, மனோரம்மியமான, சூழலிலே மெமோறியல் அன்னையின் மடியிலே இருந்துகொண்டு அன் னையின் 165வது அகவையைக் கொண்டாடி மகிழும் வாய்ப்புப் பெற்ற நாம் உண்மையில் பாக்கியசாலிகளே.

முதலில், கல்லூரித் தினத்தை ஏன் கொண்டாடவேண்டும் என்பதைச் சிந்திக்க வேண்டும். இப்பாடசாலையை நிறுவிய அமெரிக்க மிசனரிமாரின் நோக்கம், இலட்சியம் என்ன என்பதை அறிய வேண்டும். என்ன சூழ்நிலையில் எதற்காக நிறுவினார்கள் என்பதை நினைக்க வேண்டும். அவர்களின் இலட்சியப்பாதையில் பாடசாலையை முன் னெடுத்துச் செல்ல வேண்டியதன் இன்றியமை யாமையை நாம் உணர வேண்டும் என்பதற் காகவே ஆண்டு தோறும் இந்தவிழா நடை பெறுகின்றது.

ஆண்டு தோறும் புதிது புதிதாக வந்து சேரும் புதிய மாணவர்களும், பெற்றோர்களும் புதிய ஆசிரியர்களும் இவ்விழாவின் மூலம் இதனை அறியும் வாய்ப்பு உண்டாகும். வழி தவறாமல், சோம்பி இராமல் இலட்சியப் பாதையில் கல்விச்சமூகம் தம் பணியை முன்னெடுத்துச் செல்வதற்கு உந்து சக்தியாக இவ்விழா அமைகிறது.

இற்றைக்கு 165 ஆண்டுகளுக்கு முன்பு அன்றைய வசதிகள், வாய்ப்புகள் மிகக் குறைந்த காலச் சூழ்நிலையில் மிகுந்த அர்ப்பணிப்புடன் தூர நோக்குடன் சில மாணவரைக் கொண்டு ஆங்கில பாடசாலை யாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இரு மொழிப் பாடசாலையாக இன்று சண்டிலிப்பாய்க் கல்விக்கோட்டத்திலே மிக அதிக மாணவர் களையுடைய பாடசாலையாக மலர்ந்து புகழ்பரப்புவதை எல்லோரும் அறிவர்.

ஆங்கில பாடசாலை

அன்று ஏன் ஆங்கில பாடசாலையாக ஆரம்பித்தார்கள் என்பதைச் சிந்திக்கும் போது தான், அவர்களின் தூரநோக்குத் தெரிகிறது. பாரதி சொன்னான்

> "புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
> பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
> மெத்த வளருது மேற்கே - அந்த
> மேன்மைக்கலைகள் தமிழினில்
> இல்லை.....
> சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்
> செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு
> சேர்ப்பீர்..."

என்று தமிழர்கள் ஒரு மூலையில் முடங்கிக்கிடக்காமல் உலகளாவிய மட்டத்தில் தம் கல்வியைப் பெறவேண்டும். அதற்கு ஆங்கில மொழிக் கல்வியே அவசியமானது

என்ற உயரிய நோக்குடன் தான் இப் பாடசாலையை உருவாக்கினர். இன்று உலக ளாவிய மட்டத்தில் பரந்து வாழும் நம்மவர்க்கு இந்நோக்கம் எவ்வளவு உபகாரமானது என்பதைப் பிரத்தியட்சமாகக் காணமுடிகிறது.

எல்லோருக்கும் கல்வி

வசதியற்ற ஏழைகள் கல்வி பெற வாய்ப்பற்றிருந்த காலத்தில் ஓலைக்கொட்டி லில், மண் நிலத்தில் இருந்து கல்வி புகட்டப்பட்டது. வசதிமிக்கவர்க்குத்தான் கல்வி என்ற நிலையை மாற்றி எல்லோருக்கும் கல்வி என்றிருந்த உயர்ந்த இலட்சியத்தை அன்றி லிருந்து இன்றுவரை இப்பாடசாலை முன்னெடுத்துச் செல்கிறது.

திறமை மிக்க மாணவரை வடிகட்டி யெடுத்து அவர்களின் பெறுபேற்றைப் பெரிதாகக் காட்டிப் பெருமை கொள்ளும் மாயை நிறைந்த கல்விச்சமூகத்தில் கல்வி யென வந்தவர் எவராயினும் அவர்க்கு நிறை வாழ்வுக்கல்வியை வழங்கித் தலைநிமிர்ந்து வாழவைக்கும் இப்பாடசாலைப் பாரம்பரியம் போற்றப்படவேண்டியது.

நிறைவாழ்வு - இலட்சியவாக்கு

இப் பாடசாலையின் இலட்சியவாக்கு "நிறைவாழ்வு" (ABUNDANT LIFE) என்பது, மாணவரின் பரீட்சைப் பெறுபேறு மட்டும் திருப்தி யாக இருப்பது உண்மையான கல்வியின் நோக்கமல்ல. மாணவனின் வாழ்க்கை நிறை வானதாயிருப்பதற்குரிய திறன்கள் எல்லா வற்றின் பெறுபேறும் திருப்தியாக இருக்க வேண்டும். கல்வி மாணவனை முழுமனித னாக்க வேண்டுமென்ற உயர் இலட்சியம் வெறும் வாக்காக மட்டுமன்றி வாழ்வாக மலர வைக்கும் கல்விச் செயற்பாடுகள் உறுதியுடன் இங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அடையாள நெடுங்கதவு

கம்பன் தன்னை ஆதரித்த சடையப்ப வள்ளலின் ஊரினைச் சொல்லும் போது, "அடையா நெடுங்கதவும் அஞ்சலென்ற சொல்லும் உடையான் சடையப்பனூர்"

என்பது போல, மெமோறியல் அடை யாள நெடுங்கதவும் அஞ்சலென்ற சொல்லும் உடையதாய் விளங்குவதைப் பிரத்தியட்ச மாகக் காண்கிறோம். ஏழை மாணவர் கல்வி கேட்டுவந்தாலென்ன, இடம் பெயர்ந்தோர் ஒதுக்கிடம் கேளாமலே வந்தாலென்ன, புலம் பெயர்ந்த பாடசாலைகள் தஞ்சம் கோரி வந்தாலென்ன, கல்விப்புலம் போட்டிகள், விழாக்கள், கருத்தரங்குகள் நடத்த இடம் தேடி வந்தாலென்ன, சமூக சேவை மன்றங்கள் தங்கள் செயற்பாடுகளுக்கு களம் தேடி வந்தாலென்ன இல்லையென்னாது எல்லோருக் கும் உதவிக்கரம் நீட்டும் மெமோறியலின் பண்பு மெச்சத்தக்கது என்பதை நான் சொல்லாமலே விளங்கும். சாங்கப்பலகை போல்விரிந்து ஆதரிக்கும் இயல்பு பாடசாலை சமுதாயத்தின் மையம் என்பதை சொல்வடிவில் காணவைக்கிறது.

யாழ்ப்பாண சமுதாயத்தின் இன்றையநிலை

"யாழ்ப்பாணம் தமிழ்ப் பண்பாட்டின் விளைநிலம், கல்வியே அதன் மூலவளம், பாரிற் சிறந்தது யாழ்ப்பாணம்" என்ற பெருமையெல்லாம் பொய்யாய்ப் பழங்கதை யாய்ப் போய்க்கொண்டிருப்பதையும், வேதனை நிறைந்த புதியதோர் சமுதாய உருவாக்கம் நடந்துகொண்டிருப்பதையும் கண்டுகொண்டிருக் கிறோம். போர் அனர்த்தங்களாலும், ஈடுசெய்ய முடியாத இழப்புக்களாலும், இடம்பெயர்வு களாலும், நிலைகுலைந்துள்ள மக்கள் செய்வதறியாது தெறிகெட்டுப் போயுள்ளனர். இவ்வேளையில் "நெய்குடம் உடைந்தது நாய்க்கு வேட்டை" என்பது போல தமிழர் வாழ்வைச் சீர்குலைக்கக் காத்திருந்த தீய சக்திகள் துணைகொண்டு சமூகசீரழிவுகள் தலையெடுத்துள்ளன. தடுப்பாரின்றி, எடுத் துரைப்பாரின்றிப் பொய்யும், களவும் அங்கீ காரம் பெற்றுவிட்டன. எல்லோருக்கும் எல்லாம் சொந்தம், வன்முறையால் எதையும் சாதிக் கலாம் என்ற அவலநிலை தோன்றியுள்ளது.

போர் நிறைந்த சங்ககாலத்தைத் தொடர்ந்து வந்த சங்கமருவிய காலம் போல நெறி பிறழ்ந்து அறந்திரும்பி மக்கள் அவலப் படுகிறார்கள். சங்கமருவிய கால அவலத்தை நீக்கி மக்களை நெறிப்படுத்த அறநூல்கள் தோன்றின வான் புகழ் வள்ளுவரின் திருக் குறளும் ஒளவையாரின் அறநெறி நூல்களும் சமண முனிவர்களின் நாலடியாரும் தோன்றி மக்களை நல்வழிப்படுத்தின. ஆனால் இன்றும் அந்த அறநூல்கள் எல்லாம் நூல்களாக இருக்கின்றனவேயன்றி, அவற்றைப் பயன் படுத்தி - அழிவுற்றுப் பாழடையும் சமூகத்தை நல்வழிப்படுத்த ஆளின்றி அவலம் தொடர் கிறது.

ஆளில்லா வீட்டுப் பொருட்களை எவரும் எடுக்கலாம், பகிரங்கச் சந்தையில் விற்கலாம், வானோங்கி வளர்ந்து வரும் மரங்களைத் தறிக்கலாம், விற்கலாம் வீதியில் விரும்பியபடி செல்லலாம் அடுத்தவரைப் பற்றிய அக்கறை தேவையில்லை மூலைமுடுக் கெல்லாம் மினி சினிமா பார்க்கலாம், வீதி தோறும் மதுக்கடைகளில் மிதக்கலாம் இப்படியே சொல்லக் கூசும் சீரழிவுகள் கொஞ்சமல்ல.

அந்நிய மோகத்துக்கு அடிமையாகி மக்கள் தம் பண்பாட்டுப் பெயர்களையே மறந்து பொருள்புரியாத தம்மினத்தையோ, பண்பாட்டையோ, மொழியையோ மதத்தையோ அறிய முடியாத அந்நியப் பெயர்களை வளரும் பிள்ளைகளுக்கு வைத்து அவர்கள் தம் பெயரையே சரியாக எழுதமுடியாது அவலப் படுவதை என்னென்பது.

பாரிய அர்ப்பணிப்புடன் உயரிய இலட்சிய நோக்குடன் உருவாக்கப்பட்ட பண்பாட்டு நிலைக்களங்களான பாடசாலை களின் பெயர்களையே மாற்றுகின்ற போலித் தனம் நிறுவியவரின் அர்ப்பணிப்பு எத்தகையது மாற்றுபவரின் அர்ப்பணிப்பு எத்தகையது என்பதைச் சிந்தியாது எங்கள் பண்பாட்டுக் கருவூலங்களான சைவப்பிரகாச வித்தியாலயம் இந்துக்கல்லூரியாகவும், சைவமகாசன வித்தியாலயம் மத்திய கல்லூரியாகவும் திருஞானசம்பந்தர் மகா வித்தியாலயம் மத்திய கல்லூரியாகவும் மாற்றப்படும் போலி மயக்கங்கள் நிறைந்த சூழ்நிலை.

சைவசமயம் இந்து சமயமாகவும், சைவக் குருமார் இந்துக்குருமாராகவும் இப்படியே எல்லாம் மாறும்காலம் எங்கள் தமிழினத்தின் சைவ சமயத்தின் கருவூலங் களை சிதைத்து எங்கள் இருப்புக்களை குலைத்து நாம் யார் என்ற அடையாளமே இல்லாமற் செய்யும் சீர் கெட்ட சமுதாய உருவாக்கம் நடக்கிறது.

தன் உழைப்பை மறந்து தன்னம் பிக்கை இழந்து மானத்தை மறந்து அந்நிய ரிடம் கையேந்தி வாழும் அவலநிலை. ஈந்து உவந்த நாம் இன்று இரந்து மகிழும் இழிநிலை யைத் தொடர விடலாமா? இதனைத் தடுத்து நிறுத்தி அறவழிச் சமுதாயத்தை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பைக் கல்விச் சமூகம் தட்டிக் கழிக்க முடியாது விழித்துச் செயற்படவேண்டும்.

கல்வியின் நோக்கம்

கல்விச் சிந்தனையாளர்கள் கல்வியின் நோக்கம் "உன்னதமான சமுதாயத்துக்குப் பொருத்தப்பாடுடையவனாக மாணவனை உருவாக்குதல்" எனக் காலா காலமாகச் சொல்லிவருகிறார்கள். இந்த நோக்கமே இன்று ஈடாட்டம் கண்டுள்ளது. உன்னதமான சமு தாயம் ஒன்று இருக்கிறதா? இருந்தாலல்லவோ மாணவன் அதற்குப் பொருத்தப்பாடுடைய வனாகலாம். எங்கள் கல்வி உன்னதமான சமுதாயத்தை உருவாக்கத் தவறிவிட்டது. உத்தியோகத்தரை மட்டும் தான் உருவாக்க முடிந்திருக்கிறது. அதுவே உண்மை.

ஆதலால் "கல்வியின் நோக்கம்" ஒரு உன்னதமான சமுதாயத்தை உருவாக்கும் வல்லமை படைத்த மாணவர்களை உரு வாக்குதல் எனக் கொள்ள வேண்டும். வளர்ந்து வரும் இளங்குருத்துக்களான மாணவச் செல்வங்களை அறநெறி திரும்பா வாழ்விற்கு வழிப்படுத்த வேண்டும். இளமையில் கல்வி

சிலையில் மேல் எழுத்து. ஆதலால் இன்றைய மாணவர்களை நாளைய முழு மனிதர்களாக நிறை வாழ்விற்குத் தகுதியானவர்களாக வளர்த்தெடுக்க வேண்டும்.

பார்த்துக் கற்றல்

மாணவர்கள் கேட்டுக் கற்றலிலும் பார்க்கப் பார்த்துக் கற்றல் மூலமாகவே செயற்பாட்டுக் கல்வியைப் பன்மடங்கு அதிகமாகப் பெறுகிறார்கள். ஆதலால் சமூகப் பொறுப்புடைய ஆசிரியர்களும், கல்விப்புலம் சார்ந்த அதிகாரிகளும், பெற்றோர்களும் சமூக முன்னோடிகளும் ஒழுங்கான வாழ்வு வாழ்ந்து காட்ட வேண்டும். சொல்லும் வாக்கும், வாழும் வாழ்வும் ஒரே மாதிரியாக, இப்படித்தான் வாழவேண்டும் என்பதை வாழ்ந்து காட்ட வேண்டும். வெறும் போதனையாளர்களாக இல்லாமல் சாதனையாளர்களாக நாம் வாழ்ந்தால் வளரும் பிள்ளைகள் அவ்வழிவருவர், நாம் சொல்வதை, நம்புவதிலும் பார்க்க நாம் செய்வதையே இந்த உலகம் நம்பும் என்ற உண்மை நினைவிற்கொள்ள வேண்டும்.

கல்வி அழகே உண்மை அழகு

நமது உடலழகும், உடையழகும் உண்மையழகா? உண்மையான அழகு எதுவென நாலடியார் எனும் அறநூல் கூறுகிறது.

"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல- நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவுநிலைமையால்
கல்வியழகே அழகு"

என்பது அப்பாடல். தன்னுடைய மனச்சாட்சியின் படிதான் நடுவுநிலைமை தவறாதவன் என்று எவனொருவன் தன்னைத்தான் துணிகின்றானோ அவனிடம் உள்ள கல்வியழகே உண்மையான கல்வி அழகாகும். பட்டங்கள், பதவிகளால் மட்டும் ஒருவர் கல்விமானாக இருந்தால் அது போலியே. நடுவுநிலைமை தவறாத வாழ்வுக்குரிய கல்வியாளராகக் கல்விச் சமூகம் மலர வேண்டும். அவர்களுடைய வாழ்வே நிறைவாழ்வு ஆகும். அந்த நிறைவாழ்வுக்கு எம்மை இட்டுச் செல்வதே மெமோறியலின் உண்மை இலட்சியம் என்பதை அவர்களின் "நிறைவாழ்வு" எனும் இலட்சியவாக்கு நினைவுபடுத்திக் கொண்டிருத்தல் சிறப்பான செய்திகளாகும்.

வாழு வாழவை

ஒரு காலத்தில் "வாழு வாழவிடு" என்பதே மனித வாழ்வின் இலட்சியமாக இருந்தது. தான் வாழ வேண்டும் அதுபோல் மற்றவரின் வாழ்வுக்குத் தடையாக இல்லாமல் மற்றவரையும் வாழ விடவேண்டும் என்றிருந்த நிலை மாறி இன்று "வாழு வாழவை" என்று சிந்திக்க வேண்டியுள்ளது ஏனெனில் வாழத்தெரியாத மக்கள் தொகையே அதிகம். ஆதலால் வாழத் தெரிந்தவர்கள் மற்றவர்களையும் வாழவைக்க வேண்டும். பிறர்க்கு பகாரிகளாக மாறி பிறருக்கு உதவ வேண்டும்.

வாழத்தெரிந்தோர் யார்? வள்ளுவர் அழகாக அறுதியிட்டுச் சொல்லுவார்.

கற்க, கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக.

என்ற பொன்னான குறளின் மூலம் நாம் கற்றபடி வாழ்ந்து காட்ட வேண்டும் அப்படி வாழ்ந்து காட்டினால் தான் மற்றவரையும் வாழவைக்க முடியும்.

தான் மட்டும் எல்லாம் நிறைவாகப் பெற்றிருந்தால் மட்டும் போதாது தான் வாழும் சமூகமும் எல்லாநிறைவும் பெற்றிருந்தால்தான் நிம்மதியாக, மகிழ்வாக வாழமுடியும் இல்லையேல் சமூகம் வாழவிடாது.

ஆசிரியர் பொறுப்பு

உள்ளத்தால் பொய்யாது வாக்கும் வாழ்வும் ஒன்றாய் வாழ்ந்து காட்ட வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுக்கே முதன்மையானது ஏனெனில் மாணாக்கர்கள் ஆசிரியர்களைத் தான் தங்கள் நம்பிக்கைகுரிய வழிகாட்டிகளாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்கள் சொல்வதையும் செய்வதையும் நூறு வீதம் சரியானதென நம்பியே கல்வி பயில்கின்றனர். ஆதலால் உன்னதமான சமூதாயத்தை உரு

வாக்கி முன்னெடுக்கவல்ல மாணவர்களை உருவாக்கும் பணியே இன்று அவசியமும் அவசரமுமானதாகும்.

கல்விப்புலத்தைச் சார்ந்த அதிகாரி களும் இதனைத் தட்டிக் கழிக்க முடியாது. தாம் தயாரிக்கும் கல்வித் திட்டம் யாருக்கு? எந்த நிலையில் இருப்பவர்களை எந்த நிலைக்குக் கொண்டுவருவதற்குத் தயாரிக் கின்றோம் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். நோயாளியின் நிலையறிந்து வைத்தியர் மருந்து கொடுப்பது போல இன்றைய மாணவரின் நிலை அறிந்து அதற் கேற்ற கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக் கப்பட வேண்டும். எங்கோ, யாருக்கோ ஆக்கப்பட்டதை அப்படியே இங்கு செயற்படுத்த நினைப்பது தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளும் பொறுப்பற்ற - நிறைவற்ற செயற் பாடாகவே முடியும். அதே போன்று பெற் றோரும் தம் பொறுப்பைத் தட்டிக்கழிக்க முடியாது. நிறைவாழ்வு பெற்றோருக்கல்ல பிள்ளைகளுக்கே என்று அலட்சியமாய் இருக்காமல் தாமும் சீரான வாழ்வு வாழ்ந்து காட்ட வேண்டும். "தம் பொருள் என் பதம் மக்கள் மறந்தால் வாழ்வில் மிஞ்சுவது அவலமே" என்பதை மறந்து விடக்கூடாது. மறந்தால் வாழ்வில் மிஞ்சுவது அவலமே.

அன்பான மாணவச் செல்வங்களே, உங்கள் மத்தியில் இருந்து எதிர்காலத்தில் மலரவுள்ள பல டாக்டர்களை, எஞ்சினியர் களைப், பேராசிரியர்களை, சமூகசேவையாளர் களை, அரசியல்வாதிகளை, உழைப்பாளி களைக் காண்கின்றோம். நீங்கள் தான் எங்கள் எதிர்காலம். உங்கள் கையில் தான் எங்கள் எதிர்காலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நீங்கள் தான் நிறைவாழ்வு வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைக்கப் போகின்றீர்கள். உயர்ந்த கல்வி யையும், நல்லொழுக்கத்தையும் வாழ்க்கைத் திறன்களையும் பெறும் வாய்ப்பு உங்களுக்கு மட்டும் தான் உண்டு.

நீங்கள் எந்தப் பதவிக்கு வந்தாலும் அறநெறிதவறாது அதை வருமானம் பெறும் தொழிலாக மட்டும் கொள்ளாமல் நிறைவான வாழ்வாக, மற்றவரையும் வாழவைக்கும் நிறைவாழ்வாகக் கொள்ள வேண்டும். அதற்கு உங்களைத் தயார்ப்படுத்தும் அரும் பெரும் வாய்ப்பான பாடசாலைப் பருவத்தை மீண்டும் கிடைக்காத இந்த வாய்ப்பை பயன்படுத்திப் பெருமை பெறுவீர்களாக என வாழ்த்து கின்றேன்.

கல்விச் சமூகத்தைச் சேர்ந்த எல் லோரும் காலத்தின் கட்டாய தேவை அறிந்து சிந்தித்துத், தெளிந்து வரலாறு எம்மைப் பழிக்கா வண்ணம் நம் பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல் நல்லதோர் உன்னத சமுதா யத்தைஉருவாக்க முயல்வோமாமாக.

நல்லதைச் சிந்திக்க வாய்ப்பளித்த மெமோறியல் கல்விச் சமூகத்தை நன்றிப் பெருக்குடன் பாராட்டி, வாழ்த்தி விடை பெறுகிறேன். நன்றி.

வயிராறச் சாப்பிட்டவனுக்கு
பசியோடிருப்பவனின் சோர்வு
சோம்பேறித்தனமானதாகத் தான் தோன்றும்

கல்வியில் அழகியலின் அவசியம்

திரு. க. ரட்ணேஸ்வரன்
கல்வியியலாளர்
நுண்கலைத்துறை யாழ். தே.க.கல்.

அழகியலை வெறும் அழகுக்காக தேடிய காலம் மறைந்து கல்விக்காக அழகியலை நாடுகின்ற காலம் இன்று மேலோங்கி நிற்கின்றது. அழகியல் மூலம் அறிவியல், ஆத்மீகப் பண்புகள், உள இயக்கம், என்பனவற்றை உயர்ந்த முறையில்அடைய முடியுமென்பது கலை வல்லுநர்கள் கருத்தாகவுள்ளது. மனிதனின் தனித்துவ ஆற்றல்களை சமமாக விருத்தி செய்தல் கல்வியின் பரந்த நோக்கமென கல்வியியலாளர்கள் கருதுகின்றனர். கற்றல் சமநிலையுடன் அபிவிருத்தி பெற வேண்டுமாயின் தனி மனிதனின் **அறிதல், மனஎழுச்சி, உள இயக்கம்** என்பன பூரணமடைய வேண்டும். அழகியல் கல்விமூலம் இவ்வாறான ஆளுமை அபிவிருத்திகளைர் நிறைவு செய்ய முடியுமென்பது அறிவியலாளர்களின் கருத்தாகும்.

- **அறிதல்** என்பது, பிள்ளைகள் அறிந்து கொள்ளும் தகவல் திரட்டாகும்.
- **உளவியக்கம்** என்பது, கற்றல் நடவடிக்கையின் போது மாணவன் பெறும் பல்வேறு திறன்கள், ஆற்றல்கள், வல்லமைகள் போன்றன.
- **மன எழுச்சி** என்பது மாணவரிடத்தே விருத்தி செய்யப்படும் மனப்பாங்குகள், நற்குணங்கள், பழக்கவழக்கங்கள் அறநெறிகள் போன்றனவாகும்.

கல்விச் செயற்பாட்டுப்பரப்புகள் மூலம் இம்மூன்று பரப்புகளிலும் சம அளவிலான விருத்தி ஏற்படுத்த வேண்டும் எனினும் இம்மூன்று பரப்பிலும் எல்லாப்பாடங்களிலும் சம அளவிலான பங்களிப்பினை வழங்க முடியாது. சில பரப்புகளுக்கு கூடிய பங்களிப்பினையும் சில பரப்பில் குறைந்தளவு பங்களிப்பையுமே வழங்க முடிகின்றது. அழகியல் பாடத்தின் மூலம் மன எழுச்சி தொடர்பாகவே கூடிய பங்களிப்பை வழங்க முடிகின்றது.

அழகியல் கல்வியின் பிரதான நோக்கமாக பின்வருபவை கொள்ளப்படுகின்றன.

1. இரசித்தல்
2. மனப்பாங்கு விருத்தி
3. ஆக்க வெளிப்பாட்டுத்திறன்
4. ஆக்க பூர்வமான சிந்தனை விருத்தி

அ) இரசித்தல்:-

"யாதேனும் ஒரு நிகழ்வு புலன் உறுப்புகளை வருடுவதால் ஒருவருக்குள் ஏற்படும் மானசீகமான திருப்தி இரசித்தல் ஆகும்". இது ஒரு மானசீகமான தொழிற்பாடாகும். இதனைச் சொற்களால் விளங்குதல் கடினமானதாகும்.

உதாரணமாக ஆரம்ப வகுப்பொன்றில் ஒரு பாடலைப் பாடிய அனுபவத்தை எண்ணிப் பார்க்கலாம். பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்த பிள்ளைகள் பலரும் பலவித இரசனை அனுபவத்தை வெளிக்காட்டுபவர்களாக இருப்பார்கள். சிலர் நன்றாக காது கொடுத்துக் கேட்பார்கள், சிலர் தாளத்திற்குக் கைதட்டுவார்கள், சிலர் அந்தப்பாடலுடன் இணைவார்கள், சிலர் பாடலுக்கேற்ப தலையினால் அசைவுகளை வெளிப்படுத்துவர், சிலர் பலவித சைகைகள் மூலம் இரசனை உணர்வை வெளிப்படுத்துவர், சிலர் பேசாமல் அமைதியாக இருப்பர். அந்த அமைதியும் இரசனை வெளிப் பாட்டில் ஒரு முறை என்பதை மறக்கக் கூடாது

இவ்வாறு பல்வேறுபட்ட அழகியல் பரப்புகளூடாக பலவித வெளிபாடுகள் மூலமாக இரசனை அனுபவங்களை வெளிப்படுத்த முடியும்.

இரு தனி நபர்களின் இரசித்தல் முறைகள் வெவ்வேறு வகைப்படும் பொருள்

அம்சத்தின் தன்மையில் மட்டுமல்லாது அதனை ரசனைக்குட்படுத்தும் தனியாளின் முன் அனுபவமும், அளவும், தன்மையும் இரசித்தலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

உதாரணமாக "மலர்கள்" எனும் தலைப்பில் ஒருபாடலை பாடும் பிள்ளையை எண்ணிப்பார்த்தால் மலர்களோடு தன்னை இணைத்து வாழும் பிள்ளையின் இரசனைத் தன்மையும் ஏனைய பிள்ளைகளின் இரசனைத் தன்மையும் வேறுபடும்.

இரசனை தொடர்பான மன எழுச்சிப் பரப்பினை விபரிக்கும் போது 'கிரதோன்' என்ற கல்வியியலாளர் சேமிப்பு நிகழும் விதத்தினையும் அது மனதில் பதியும் முறையினையும் 5 நிலைகளில் எடுத்துக் காட்டுகின்றார்.

1. கிரகித்தல்
2. வெளிப்படுத்தல்
3. மதிப்பிடல்
4. அமைத்தல்
5. தன்வயமாதல்

ஏதாவது ஒரு ரசித்தல் தொழிற் பாட்டினை அறிந்து கொள்ளும் நிலையில் தொடங்கி அதன் மூலமான வெளிப்பாடு, அதனை மதிப்பிடல், அமைப்பு ரீதியாக கட்டியெழுப்பல், அது தன் வயமாதல் ஆகிய 5 நிலை வரை இத் தொழிற்பாடு செல்கின்றது.

இரசனை ஒருவரது வற்புறுத்தலால் ஏற்படுவதன்று ஒருவரால் இன்னொருவரை வற்புறுத்தி இரசிக்கச் செய்ய முடியாது. ஒருவரின் ஆரம்ப கட்டத்திலிருந்தே இதற்கு வழிகாட்ட வேண்டும். இதற்காக

1. புலன்களின் அனுபவ மட்டத்தை கருத்திற் கொண்டு முடிந்தளவு உயர் கலை ஆக்கங்களில் ஈடுபட சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும்.
2. உயர்ந்த கலையாக்கங்கள் பற்றிய அறிமுறையை தெளிவாக அளித்தல்
3. கலைப் படைப்புகளின் இலட்சணங்களை அறிய, உணர வாய்ப்பினை ஏற்படுத்தல்.
4. கலை ஆக்கங்களின் கருப்பொருளைத் தெரிந்து கொள்ள உதவுதல்.
5. கலையோடு இணைந்த சமூக, கலாசார, பண்புகளை மதிப்பீடு செய்வதில் ஈடுபடுத்தல்.

ஆ) மனப்பாங்கு விருத்தி :-

சமூகத்தில் தனி நபராகவும் குழுவாகவும் வாழும் போது ஏற்படுகின்ற தொடர்பினை மிகச் சிறப்பாக அமைத்துக் கொள்ள மனப்பாங்கு அவசியமாகும். இனத்தினதும், சமூகத்தினதும் எதிர்காலம் பெருமளவு ஒவ்வொரு தனி நபருள்ளும் உருவாக்கப் பட்டுள்ள மனப்பாங்கின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும். சமூக எத்தனத்தின் வெற்றி தனி நபரிலும் பொது ஒத்துழைப்பிலும் தங்கியிருக்கும். பலவித கருத்து வேறுபாடுகளுக்குள் ஒத்து வருதல் ஒரு குறிக்கோளை நோக்கி கூட்டாகவும் நல்லெண்ணத்துடனும் முன்னேறுவதற்காகத் தொழில்பாட்டினை அமைத்தல் ஒவ்வொருவரது திறமைகளையும் மதித்தல் தலைமைதாங்குதல், விமர்சனங்களைச் சகித்துக் கொள்ளல் போன்ற சிறந்த மனப்பாங்குகள் பல தனி நபரினுள் விருத்தி செய்வது அழகியல் கல்வி மூலமாக மிக எளிதாகச் செய்ய முடியும்.

பலவித திறமைகளைப் போல குறைபாடுகளும் நிறைந்துள்ள எமது சமூகத்தில் பொது வேலைகளில் ஈடுபட திறமை வாய்ந்த தலைமைத்துவம் அவசியம். போரின் கொடுமைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் பல்வேறு காயங்களை ஆற்றுதற்கும், மாற்றுதற்கும் அழகியல் எனும் அருமருந்து அவசியமாகின்றது. தொடங்கும் ஆற்றல் எதிர்கால தூரதரிசனம் தொடர்புபடுத்தும் ஆற்றல் எனும் தலைமைத்துவ ஆற்றல்களை வளப்படுத்துவதற்கு அழகியல் எனும் பாடப்பரப்பு வளம்மிக்க நிலமாகும்.

மனிதன், மனிதனின் மீது அனுதாபப் பார்வையை செலுத்துவானால் அத்தகைய மனித சமூகமொன்றில் வாழ்தல் ஆறுதலளிக்கும். எமது சமூகத்திலும் கருத்துக்களால் வெல்ல வேண்டிய பல்வேறு விடயங்களுக்காக ஆயுதங்கள் அநாகரிகம் புரிவதை நாம் கண்டு

கொண்டு வாழ்கின்றோம். எல்லா மனிதருள்ளும் காருண்யம் போன்ற மனித விழுமியங்களை மதிக்கின்ற, அதை வளர்க்கின்ற தேவை இன்று அவசியமாகின்றது. மனிதப்பண்புகளையும் நற்குணங்களையும் விருத்தி செய்ய அழகியல் கல்வியின் ஆதரவு அவசியமாகின்றது.

இ) ஆக்க வெளிப்பாட்டுத்திறன் :-

தன்முன்னுள்ள பிரச்சினைக்குத் தேவையான மூலப் பொருளைத்தேடி அவற்றை உற்சாகமாக பயன்படுத்திக்கொள்ளும் ஆற்றலை ஆக்கத்திறன் என அழைக்கலாம். உயர் இரசனைத் தன்மையும், சிறந்த மனப்பாங்கும் அபிவிருத்தியடைந்துள்ள ஒருவரை புதிதாக ஏதாவது ஆக்கத் தூண்டுதல் கடினமானதல்ல ஆரம்பகாலத்திலிருந்தே ஆக்கத்திறன் அபிவிருத்தியடைந்து வந்தால் எதிர்காலத்தில் தமது வாழ்க்கைப் பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்வதற்கும் அது சக்தி வாய்ந்த அடித்தளமாக அமையும்.

ஈ) ஆக்கபூர்வமான சிந்தனை வளர்ச்சி

கலைஞன் சாதாரண மனிதனைப் போலல்லாது வேறு ஒரு கோணத்திலே எதையும் பார்க்கின்றான். சாதாரண கண்ணுக்குப் புலப்படாத விசேட அம்சங்களை கலைஞன் அங்கே காண்பதற்கு இதுவே விசேட காரணமாகும். அதிலே புதுமை இருக்கும்.

தனது உள்ளத்தை நெருடிய வாழ்க்கை அனுபவங்களை இரசிக உள்ளங்களில் தோற்றுவித்தலே எல்லாக் கலைஞனின் நோக்கமாக உள்ளது. இதற்காக அவன் பலவித ஊடகங்களையும் நுட்ப முறைகளையும் பயன் படுத்திக் கொள்கின்றான். அம் மூலங்கள் நுட்ப முறைகள் என்பனவற்றில் வேறுபாடுகள் தன்மைகள் என்பவற்றிற்கேற்ப பலவகை காணப்படுகிறது. இது ஒரு சித்திரமாக, அல்லது சிற்பமாக, அல்லது ஒரு இசையாக, அல்லது ஒரு நாடகமாக இருக்கலாம். எதுவாக இருப்பினும் ஆக்கபூர்வமான ஒன்றை உருவாக்குவதிலே "ஆக்கபூர்வ சிந்தனை" எனலாம்.

சூழலில் பெற்றுக் கொள்ளப்படும் அனுபவம், இரசிப்பு அவதானிப்பு வாய்ப்புப் பார்த்தலும் பிரயோகமும் புதிய ஆக்கத்தின் அடிப்படையாகும். இவ்விதமாக ஆக்கத்திற்கான கருப்பொருள் மனதில் தோற்றம் பெறுகின்றது. இக் கருப்பொருள் வழிமுறை, நுட்ப முறை. ஆற்றல் போன்றவற்றினால் ஆக்கமாக மாறும் போது ஏற்படும் உளத் தொழிற்பாடுகளை ஆக்கபூர்வமான சிந்தனை எனக் குறிப்பிடலாம்.

ஆகவே மனிதத்துவத்தை மதித்து அதைப் பேணி வளர்க்கின்ற அழகுக் கலையாக அழகியல் காண்பப்படுகின்றது. மனிதப் பண்பியல்புகளை, உயர்ந்த விழுமியங்களை அழகியல் கல்வி மூலம் ஏற்படுத்தி உயர்ந்த நாகரிக மாற்றங்களுடாக சிறந்த மானிடர்களை உருவாக்குவது அழகியல் கல்வியாகும்.

ஆதாரம்:- சங்கேதம்
அழகியலும் ஆக்கத் தொழிற்பாடும்.

ஒரு பெண் தாழ்ந்த குரலில் பேசினால் அவள் அதையே அடைய விரும்புகிறாள்

- பொட்டோமக் நியூஸ் -

பாடசாலை நூலகங்களின் முக்கியத்துவம்

சமூகஜோதி
கா.கணேசதாசன் J.P
ஓய்வு பெற்ற ஆசிரியர்.

ஒரு பாடசாலையின் இருதயம் அதன் நூல் நிலையம் தான். கவனமாகத் தெரிவு செய்யப்பட்டு நன்றாக உபயோகிக்கப்படும் நல்ல நூல்களை அந்த நூலகம் தன்னகத்தே கொண்டிருக்குமாயின் உண்மையில் அங்கே தான் கல்வி சிறப்பாக வளரும். என்று உறுதியாக கூறமுடியும்.

பாடசாலை நூலகங்களின் முக்கியத்துவத்தை அபிவிருத்தி அடைந்த நாடுகள் கூட தற்பொழுது உணர்ந்துள்ளன. நூலகமானது கற்றலுக்கு மிகவும் முக்கியமான ஒரு சாதனம் என்று கொள்ளப்பட்டு சகல பாடசாலைகளிலும் 'நூலக வாரம்' கொண்டாடப்பட்டு நூலகங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை எமது நாடும் மேற்கொண்டு வருகின்றது. இதற்கிடையில் ஆசிய நாடுகளில் நூலக வளர்ச்சிக்காக யுனெஸ்கோ நிறுவனமும் மிகவும் முக்கிய பங்கு எடுத்துள்ளது.

1960ம் ஆண்டு பாடசாலை நூலகம் சம்பந்தமான முதலாவது சட்டம் ஆக்கப்பட்டது. 1967ல் இலங்கைக் கல்வி நூற்றாண்டை யொட்டி அனேகமான பாடசாலைகளில் பாடசாலை நூலகங்கள் உருவாக்கப்பட்டன.

கடந்த காலத்தில் வாழ்ந்தவன் தன் எதிர்காலச் சந்ததியினருக்கு சேகரித்து வைத்துவிட்டுச் சென்ற அறிவின் பொக்கிஷமே நூல்களாகும். எதிர்கால சந்ததியினர் கல்வி அறிவு பெறறு சந்தோஷமாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும் என்பதே அவர்களது நல்ல எண்ணமாகும்.

மனிதனை உயர்த்துவது பணமன்று, பதவியன்று, குலமன்று, பருமனன்று, உயர மன்று, அறிவு ஒன்றுதான் மனிதனை உயர்த்தும். 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்றார் திருவள்ளுவர். ஒருவர் கற்ற நூலின் அளவுதான் நுண்ணறிவின் அளவு ஆகும். நல்ல நூல்களைக் கற்குந் தோறும்அறிவு நுணுகி நலம் எய்தும் இறைவன் கற்றவர் விழுங்கும் கற்பகக்கனி, கல்லாமனத்துடன் நில்லாத் தன்மையல்லவா? பிழைகள் இன்ன இன்ன என்று நமக்கு உபதேசிக்க வந்த பட்டினத்து அடிகளார் தலையாய பிழை கல்லாப்பிழை என்றார். உலகில் மக்கள் செய்யும் பிழைகளுக் கெல்லாம் தலையாய பிழை அறிவு நூல்களைக் கல்லாததேயாகும். வாசிப்பதால் மனிதன் பூரணத்துவம் அடைவான்.

படிக்க விரும்பும் நூல் ஒன்றை எல்லோராலும் விலைக்கு வாங்கிப் படிக்க இயலாதல்லவா? ஆகவே பாடசாலை நூலகத்தைப் பயன்படுத்துவதால் பணச் செலவுகளின்றி கல்வியைக் கற்றுக் கொள்ள மாணவர்களுக்கு வாய்ப்பு ஏற்படும்.

வாழ்க்கையின் ஆரம்பத்திலிருந்து ஒரு மாணவன் தன் அடிப்படை கற்றுக் கொள்வதற்குப் பாடசாலையையே பயன்படுத்துகின்றான். இம் மாணவன் சிறந்த முறையில் கல்வியைக் கற்று வெளியேறுவதற்கு பாடசாலை நூலகம் ஒரு ஏணியாக உதவும் என்பதில் ஐயமில்லை.

கடந்த காலங்களில் நூல்களை மனனம் செய்தல் மட்டுமே படித்தல் என்று கருதப்பட்டது. ஆனால் தற்போது விரிவான முறையில் இலகுவாகக் கற்றுக்கொள்வதற்கு கற்புல செவிப்புல சாதனங்களைப் பயன் படுத்தலாம். தொலைக்காட்சிப் பெட்டிகள்,

கணனிகள், மைக்றோபிக்ஸ், மைக்குறோபிலிம், போன்ற சாதனங்களை ஒரு தனி மனிதனால் கொள்வனவு செய்ய முடியாது. இதனை அவதானிக்கின்ற போது ஒரு பாடசாலை நூலகத்தின் முக்கியத்துவம் எவ்வண்ணம் மாணவர்கட்கு உதவுகிறது என்பதை உணரக் கூடியதாக உள்ளது.

நூலகங்கள் மாணவர்களை வகுப் பறையின் எல்லைக்கப்பாலும் கொண்டு செல் கின்றன. அங்கு காணப்படுகின்ற சித்திரங்கள், நூல்கள் துண்டுப்பிரசுரங்கள் புதினப் பத்திரி கைகள் போன்றன அவர்களுக்கு வெளியுலகைக் காட்டிக் கொடுக்கின்றன. அதனால் அவர்கள் கற்றுக்கொண்டிருக்கின்ற போதே அயல் நாட்டாரின் நடைமுறைகள், பழக்க வழக்கங்கள், அரசியல், சமய, கலை, கலாசார, சமூக நடவடிக்கைகளை அறிந்து தங்களுக்குள்ளே ஒரு அறிவுப் பொக்கிஷத்தை கட்டிக் கொள் கின்றனர்.

மாணவர்கள் ஓய்வு நேரங்களில் வாசித்துப் பயன்பெறக் கூடிய தரமான நூல்களை வழங்குவதன் மூலம் பாடசாலைக்கு வெளியிலும் கல்வியை வளர்த்தல் பாடசாலை நூலகங்களாகும்.

மேலும் சனநாயகப் பண்புகள் பிறர் உரிமைகளை மதிக்கும் தன்மை பொறுப் புணர்ச்சி என்பனவற்றை சகல மாணவர் களும் நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் விளக்கம் பெறுவார்கள்.

பாடசாலை நூலகம் சிறப்பாக நடப்ப தற்கு நூலகத்துறையில் நன்கு கற்றறிந்த நூலகர் ஒருவர் நூலகத்திற்கு நியமிக்கப்படுவது கட்டாயமாகும். அவர் மிகவும் பரந்த மனப் பான்மையுடன் மாணவர்களை நூலகத்துடன் தொடர்பை ஏற்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் அங்கு நூற் குவியல் மட்டுமே காணமுடியும் என்பதில் ஐயமில்லை.

மாணவர்கள் கல்வி வளர்ச்சியில் மாத்திரமல்ல ஒழுக்கம் சட்டதிட்டங் களுக்குக் கட்டுப்பட்டு நடத்தல்,அவசியமான நூல்களைத் தெரிதல், நூல்களைப் பாவிக்கும் முறை போன்ற நல்ல நடவடிக்கைகளை கற்றுக்கொள்ளவும் சுயமாகத் தேடிக் கற்றுக்கொள்ளவும் நூலகம் வாய்ப்பளிக்கின்றது. அது மட்டுமல்லாமல் பாடசாலையை விட்டு வெளியேறிய பின்பும் பொது நூலகங்கள், பல்கலைக்கழக நூலகங்கள், விசேட நூலகங்கள் போன்ற வற்றைப் பயன் கொள்ளவும் பாடசாலை நூலகம் ஒரு பயிற்சிக்களமாக அமையும் என்று சொன்னால் அது மிகையாகாது.

எனவே பாடசாலையின் இதயம் நூல்நிலையம் என்பதற்கிணங்க ஒவ்வொரு பாடசாலையிலும், ஒரு நூல் நிலையத்தை அமைத்து மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கமும் உற்சாகமும் வழங்குவதற்கு சகல பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர் கள் அதிபர்கள் கல்விமான்கள் அரசியல் வாதிகள் நலன் விரும்பிகள் போன்றோர் முன்னின்று, உழைத்தல் அவசியமாகும்.

'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'

ஒரு பெண் கூறும் "இல்லை, ஆம்" என்ற
சொல்லினூடே ஒரு ஊசிகூட புகுமுடியாது

- ஸெர்வன்ரஸ் -



மானியூர் மருதடியானின் மாண்புமிகு பெருமை

திரு. இரா. வாசுதேவன்
கணித ஆசிரியர்
பாடசாலைக் கோயில் பிரதமகுரு

வண்ணமயில் வேலனுக்கு முன்னவனே - மானி
கன்னகர் மருதடியின் மன்னவனே
மஹாவித்வான் நா. விரமணிஜயர்

இலங்கை மணித்திருநாட்டின் வட புலத்தே யாழ்ப்பாணத்தின் கண்ணே மானியூரில் வயலும் வயல்சார்ந்த மருத நிலத்தின் கண்ணே மருதஞ்சோலை சூழ அர்ச்சுனதரு என்னும் மருதமரத்தடியில் தன்னை நாடிவரும் மெய்யன்பர்களின் வினைகளை வேரறுத்த வண்ணம் கொலு வீற்றிருக்கிறார் மருதடி விநாயகர்.

ஆலயத்தின் தோற்றம்

மருதடி விநாயகர் ஆலயம் யோக நிஷ்டை கைவந்த சிவயோகி ஒருவரால் ஸ்தாபிக்கப்பட்டு அவரால் பூஜிக்கப்பட்டு வந்ததாக ஐதீகம் உள்ளது. இந்தச் சிவயோகி விநாயகர் தற்போது கோயில் கொண்டெழுந் தருளி இருக்கும் கர்ப்பக் கிரஹத்தை ஸ்தானமாகக் கொண்டு மருதடியானை உபாசனா மூர்த்தியாகத் தம்முள் இருத்தி ஞான சாதனங்களை மேற்கொண்டார் எனக் கூறப்படுகின்றது. இவ்வாறு ஞானயோகத்தை மேற்கொண்ட மகான் மருதடி விநாயகரின் திருப்பாதங்களில் சமாதி அடைந்தபின்னர் இவரது சமாதியினை ஸ்தானமாகக் கொண்டு மருதடி விநாயகர் ஆலயம் அமைக்கப்பட்டது. மகான்களின் சமாதி உள்ள ஆலயங்களில் தெய்வசாநித்யமும் புலன்கள் இறைவனை நோக்கி ஒருமுகப்படும் தன்மையும் அதிகமாக காணப்படுகின்றது. இதனை உறுதி செய்வது போல் மருதடியானை நாடிவரும் அடியார்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடலாம். மருதடி விநாயகர் ஆலயம் கி.பி 14ம் நூற்றாண்டில் ஸ்தாபிக்கப்பட்டதாக யாழ்ப்பாணத்தின் புராதன ஆதாரங்கள் கூறுகின்றன.

கி.பி. 17ம் நூற்றாண்டில் போர்த்துக் கேயர் யாழ்ப்பாணத்தை கைப்பற்றி தமது கத்தோலிக்க மதத்தை பரப்புவதற்காக அழிக்கப்பட்ட சைவ ஆலயங்களில் மருதடி விநாயகர் ஆலயமும் ஒன்று. பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் 1716ம் ஆண்டில் மீள அமைக்கப்பட்டது.

ஆலய அமைப்பு முறை

பெரும்பாலான சைவ ஆலயங்களில் கிழக்கு நோக்கி மூலஸ்தானம் அமைந்திருக் கும். ஆனால் எம் பெருமானின் கோயிலில் மேற்கு நோக்கிய மூலஸ்தானத்தைக் கொண்டு சிவாகமப் பிரமாணத்திற்கமைய அமைக்கப் பட்டுள்ளது. கர்ப்பக்கிரகத்தின் வேதிகையானது துவிதளசுந்தர விமானத்தைக் கொண்டது. அத்துடன் கிழக்கு வாயிலிலும் பிரதான வாயிலிலும் ராஜகோபுரங்கள் அமைக்கப் பட்டுள்ளன. கோயிலில் கருவறை, அர்த்த மண்டபம், மஹாமண்டபம் என்பவை நன்கு அழகூட்டப்பட்ட சலவைக்கற்களால் அமைக்கப் பட்டுள்ன. மருதடி விநாயகர் ஆலயத்தின் பரிவார தெய்வங்களாக விஷாலாட்சிசமேத விஸ்வநாத சுவாமியும், சிவகாமிசமேத சிவசிதம்பரேஸ்வரரும், வள்ளி தேவசேனா சமேத முத்துக்குமாரசுவாமியும், நவக்கிரகங் களும், வைரவர் சந்நிதியும், நால்வர் சந்நிதியும், பஞ்சமுக விக்னேஸ்வர சந்நிதியும் உள்ளன. இவற்றை விட மூலஸ்தானத்திற்கு கிழக்கே ஸ்தல விருட்சமான அர்சுனதரு

என்னும் மருதமரத்தின் கீழ் எம் பெருமான் வீற்றிருக்கின்றார். மேற்கு வாயிற் கோபுரத்தின் தென்புறம் மணிக்கூட்டுக் கோபுரம் அமைந் துள்ளது. கோயிலின் வெளிவீதியில் ஆலயத் தின் தீர்த்தக் குளமான பிள்ளையார் குளமும், தீர்த்த மண்டபம், தேர் இருக்கை மண்டபம், அன்னதான மண்டபம் அமைந்துள்ளன.

ஆலயத்தின் நித்திய, நைமித்திய கிரியைகள்

மருதடி விநாயகப் பெருமானிற்கு தினந்தோறும் உசாக்காலப் பூஜை, உச்சிக் காலப் பூஜை, சாயரட்சைப்பூசை ஆகிய மூன்று காலப்பூஜைகள் நியமம் வழுவாது நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு வருடமும் தமிழிற்கு பங்குனிமாதம் முதல் நாளில் பிரம்மோற்சவ ஆரம்பக்கிரியையான முகூர்த்தக்கால் நாட்டலும் உற்சவப்பத்திரிகை வாசித்தலும் மிகச் சிறப்பாக நடைபெறும். மருதடி விநாயகப் பெருமானிற்கு மகோற்சவம் பதினெட்டுத் தினங்கள் மிகவும் கோலாகலமாக நடை பெறும். சித்திரை வருடப்பிறப்பைத் தேர்த்திரு விழாவாகக் கொண்டு பதினாறு நாட்களுக்கு முன்னர் கொடியேற்றம் இடம்பெறும். பிரம் மேற்சவ காலத்தை நிர்ணயிக்கும் வகைகளில் ''சௌரம்'' மருதடியில் கடைப் பிடிக்கப் படுகிறது. சூரியன் ஒரு ராசியை விட்டு அடுத்த ராசிக்கு செல்லுகின்ற காலம் சங்கிராந்தி எனப்படும். இந் நாளை இறுதி நாளாகக் கொண்டு அமைவது சௌரமாச உற்சவம் எனப்படும். சௌரமாச உற்சவம் பிராஜா விருத்தியை கொடுக்கும் என்று ஆகமங்கள் கூறுகின்றன. மகோற்சவ காலத்தில் ஏழாம் திருவிழாவன்று கைலாசவாகனத்திலும் பத்தாம் திருவிழாவன்று மின்விளக்குகளால் அலங் கரிக்கப்பட்ட மிக அழகிய மஞ்சத்திலும் எம் பெருமான் ஆரோகணிப்பார். சித்திரை வருடப்பிறப்பன்று எம்பெருமானிற்கு இரதோற் சவம். பஞ்சமுக விநாயகர் அழகிய கலை அம்சங்கள் நிறைந்த சித்திரத் தேர்மீதேறி வலம் வரும் போது யாழ்ப்பாணத்தின் பல்பாகங களிலும் இருந்து தன்னை நாடி வந்திருக்கும் பெருந்திரளான மெய்யடியார்களின் வினை களை வேரோடு அறுத்து இஷ்ட சித்திகளை வழங்குவார். யாழ்ப்பாணத்தில் உள்ள தேர் களில் காலத்தினால் முற்பட்டது மருதடியானின் சித்திரத்தேரே என்பது நிதர்சனம். சித்திரை வருடப்பிறப்பிற்கு அடுத்தநாள் தீர்த்தோற்சவம் நடைபெறும். மருதடி விநாயகர் கோயிலில் பிரம்மோற்சவத்தை விட முக்கியமான விரத தினங்களிலும் திருவிழாக்கள் நடைபெறு கின்றன. இவற்றுள் மாதந்தோறும் வரும் பூர்வபட்ச சதுர்த்தி, நவராத்திரி விநாயக ஷஷ்டி, சர்வாலயதீபம், திருவெம்பாவை என்பவை குறிப்பிடத்தக்கவை.

ஆலயத்தின் சமூக சேவைகள்

ஆலயங்கள் வழிபாட்டுடன் மட்டும் நின்றுவிடாது சமூகப்பணிகளிலும் ஈடுபடுதல் இன்றைய காலகட்டத்தில் இன்றியமையாதது என்பதற்கேற்ப இவ்வாலயத்தில் ஒவ்வொரு சதுர்த்தி உற்சவத்தின் போது விசேட சமய சொற் பொழிவுகள் நடாத்தப் பெற்று வரு கின்றன. இதன் மூலம் பல சமய, சமூக உண்மைகளை மக்களுக்கு தெளிவாக விளக்க முடிகிற்து.

மேலும் இவ் ஆலயத்தில்அறநெறிப் பாடசாலை ,ஒன்று இயங்குகிறது. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சுமார் இருநூறு மாணவர்களைக் கொண்டு இது இயங்குகிறது. மாணவர்களுடைய தரத்திற்கேற்ப மூன்று பிரிவுகளாக இது பிரிக்கப்பட்டு சிறந்த முறை யில் நடாத்தப்படுகிறது. தரம்மிக்க அதிபர், ஆசிரியர்களை இது கொண்டுள்ளதோடு இந்து கலாசார அமைச்சின் அங்கீகாரத்தையும் பல உதவிகளையும் இது பெற்றுள்ளது. இப் பாட சாலை மாணவர்கள் போட்டிகளில் அதாவது பேச்சுப் போட்டி, பண்ணிசைப் போட்டி, கோலப் போட்டி எனபவற்றில் பங்குபற்றி முதலாம் பரிசில்களைப் பெற்றுக் கொண்டமை குறிப் பிடத்தக்கது.

புத்தக வெளியீடு

ஆலயத்தின் சமூக வளர்ச்சியை முன்னிட்டு வருடந்தோறும் அரிய நூல்கள் பல வெளியிடப்பட்டு வருகின்றன. முதலாவது 'அறநெறிச் சிந்தனை' நூலும், 'நவமலர்' நூலும் 'மருதடியான் மலர் - 01', 'மருதடியான் மலர் - 02' என்ற நூல்களையும் வெளியிட்டு சமூகத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி வருகிறது.

இசை நாடா வெளியீடு

மருதடியான் மீது கொண்ட அபரிதமான பக்தியால் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் மஹாவித்வான் நா. வீரமணிஐயர், அராலியூர் சி. பரமேஸ்வர சர்மா போன்றோர் பாமாலைகள் தொடுத்துள்ளனர். இதில் அராலியூர் சி. பரமேஸ்வர சர்மா மருதடியான் மீது பாடிய திருப்பள்ளியெழுச்சி இசை நாடாவாக உருவாக்கம் பெற்று தினந்தோறும் அதிகாலையில் உஷத்காலப்பூஜைக்கு முன்பாக ஒலித்த வண்ணம் உள்ளது. இதே போல் இணுவையூர் இயல் இசை வாரிதி நா. வீரமணி ஐயர் அவர்கள் மருதடியான் மீது பாடிய 108 பாமலர்களில் முதல் 8 மலர்களும் மருதடியான் ஓங்காரம் என்னும் பெயரில் இசைத்தட்டாகவும் இசைக் குறுந்தட்டாகவும் வெளியாகி மருதடியான் அன்பர்களின் இல்லங்களில் ஒலித்த வண்ணம் உள்ளன. இந்த இசை நாடாக்கள் யாழ் மண்ணில் புகழ் பூத்த இசைக்கலைஞர்களாலேயே ஆக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

எதிர்கால வளர்ச்சி

காலத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு ஆலயம் பிரமாண்டமான முறையில் புனர்நிர்மாணம் செய்யப்பட இருக்கிறது. இதற்கென இந்தியச் சிற்பிகள் இங்கு வரவழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நாள் தோறும் வேலை செய்தவண்ணம் இருக்கிறார்கள். புனர்நிர்மாணபணி முடிவடைந்த பின் யாழ்ப்பாணத்தில் தலை சிறந்த கோயிலாக கலையம்சம் மிக்க ஆலயமாக மருதடியான் ஆலயம் அமையும் என்பது திண்ணம். இதற்கு மருதடியான் என்றென்னும் துணையிருப்பாராக

மனிதன் எந்த அளவுக்கு உயர்கிறானோ அந்த அளவுக்குத் தக்கபடி அவன் கடுமையான சோதனைகளையும் கடந்து சென்றாக வேண்டும்.

--சுவாமி விவேகானந்தர்--

மன ஒருமையுடன் இறைவன் மலரடியை நினைக்கிற உத்தமர்களுடன் உறவு கொள்ள வேண்டும்.
உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசுவோருடன் உறவு கொள்ளக் கூடாது.

– இராமலிங்க சுவாமி–

இதயம் கனிந்த வாழ்த்துக்கள்



சமூக சேவைக்காகப் பாராட்டுப் பெறும்
ப.மா.ச. காப்பாளரும் சட்டத்தரணியுமான
திரு. இரா. வசந்தசேனன் தம்பதிகள்



மெமோறியல் குடும்பத்தின் வள்ளல்
திரு. A. A. பேஜ் அவர்கள்



75வது அகவை காணும்
மூதறிஞர் சொக்கன் அவர்கள்

இதயம் கனிந்த வாழ்த்துக்கள்



எமது கல்லூரியில் ஆசிரியப் பணியில்
வெள்ளி விழா கண்ட
திருமதி யோ. கமலசிங்கம் ஆசிரியை



கௌரவம் கிடைத்து பாராட்டுப் பெற்ற
சைவப்புலவர் த. செல்லத்துரை அவர்கள்

கல்வியே கருந்தனம்

புத்தொளி ந. சிவபாதம்

வாழ்க்கை என்பது இருவகை. பொருளே நோக்கமாக வாழும் உலக வாழ்க்கை ஒன்று, தெளிவே நோக்கமாக வாழும் அருள் வாழ்க்கை மற்றொன்று கல்வி இவ்விருவகை வாழ்க்கைக்கும் பொது. கல்வி அறிவிருந்தால் பொருளையும் தேடலாம், அருளையும் தேடலாம் என்பது எமது முன்னோர் வகுத்த வழியாகும்.

இரு வேறுலகத் தியற்கை, திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு என்பது.

புறநானூறு புகட்டும் பாடமாகும்.

வாக்குண்டாம் என்ற பாடலில் ஔவையார் கல்வியைப் பற்றிக் குறிப்பிடு கின்றார். "வாக்குண்டாம் (கல்வி அறிவு) நல்ல மனமுண்டாம்- மாமலராள் நோக்குண்டாம்" என்பதனால் அக்கல்வி அறிவைக் கொண்டு தெளிவையும் பெறலாம். திருமகள் நலத் தையும் பெறலாம் எனக் குறிப்பிடுகின்றார்.

ஒருவனுக்கு கல்வியின் முக்கியத்துவம் பற்றி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே புறநானூறு எடுத்துக்காட்டி நிற்கின்றது. பாண் டியன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ஆசிரியன், கல்வி அதன் பயன் எனப் பின்வரும் பாடலில் படம் பிடித்துக்காட்டுகின்றார்.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிள்ளை நிலை முனியாது கற்றல் நன்றே, பிறப்போரன்ன உடன் வயிற்றுள்ளும் சிறப்பின் பாலால் தாயுமனம் திரியும்; ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும் மூத்தோன் வருக என்னாது அவருள் அறிவுடையோனாறு அரசுஞ் செல்லும்; வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்; கீழ்ப்பா லொருவன் கற்பின் மேற்பா லொருவனும் அவன் கட்படுமே.

வயதில் இளையனானாலும் அவன் கல்வி அறிவுடையவனாக இருந்தால் அவனுக்கே முதலிடம் கொடுப்பார். என்பது இப் பாடலால் தெளிவாகின்றது.

கல்வி பற்றி ஔவையார் கூறும் போது கல்வி என்பது பிறர்க்குப் பயன்படுகின்ற திறமையும், பிறர் குறிப்பை அறிந்துகொள்கின்ற திறமையுமாகும் என்றார்.

கவையாகிக் கொம்பாகிக்
காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்
-சபை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான்
குறிப்பறிய
மாட்டா தவன்நல் மரம்.

இப்பாடல் தரும் தகவலின் படி கல்வி கற்காத ஒருவன் காட்டிலுள்ள மரத்திலும் குறைவானவன் என்பதாகும்.

திருவள்ளுவரோ கல்வி அறிவு இல்லாத வரை விலங்குகளோடு ஒப்பிடு கின்றார். கல்விச் செல்வம் காலத்தால் அழி யாதது. அந்தச் செல்வம் காட்டில் பாறைக் கடியில் சுரங்கத்திலே இருக்கும் தங்கக் கட்டி களாக இருக்கக்கூடாது எடுத்துப் பயன்படுத்திப் பளபளப்புள்ள நல்ல ஒளியுள்ள தங்கமாக ஆக்க வேண்டும் என்றார் அறிஞர் அண்ணா. வாழ்க்கைக்குப் பயிற்சி பெறுவது தான் தக்க கல்வியின் நோக்கம் என்றார் வில்மார்ட் என்ற அறிஞர். கல்வி என்பது தெரியாததைத் தெரியச் செய்வதன்று; ஒழுக்கத்தையும் ஒழுகச் செய்வதேயாகும் என்றார் ரஸ்கின் என்ற இன்னோரு அறிஞர்.

ஓர் அரசனையும் குற்றங்கள் நீங்கும் வண்ணம் கற்றுயர்ந்த சான்றோனையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் அரசனிலும் சான்றோனே உயர்ந்தவன். அரசனுக்குப் பெயரும், புகழும், மதிப்புமெல்லாம் தன் நாட்டில் மட்டுமே உண்டு. சான்றோனுக்கோ சென்ற நாட்டிலெல்லாம் சிறப்புக்கிட்டும்.

மன்னனும் மாசறக் கற்றோனும்
சீர்தூக்கில்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன்-
மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லைக்
கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம்ஞ் சிறப்பு

இது ஔவையார் கருத்தாகும்.

நாலடியார் பண்டைத்தமிழ் நூலாகும். நாலடியார் நல்ல கருத்துக்களை நமக்குத் தந்து நிற்கின்றது.

குஞ்சி யழகும் கொடுந்தானைக்
கோட்டழகும்
மஞ்ச எழகு மழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவு
நிலைமையால்
கல்வி யழகே யழகு.

ஆண் பெண் அனைவரும் அழகாகவே இருக்க விரும்புகிறார்கள். அதற்காகத் தம்மை பல விதமாகவும் அலங்கரிக்கிறார்கள். ஆனால் எத்தகைய அலங்காரங்களையும் காட்டிலும் கல்வி கற்று விளங்கும் அழகே அழகு என்று எடுத்துக் காட்டுகிறது நாலடியார்.

தெய்வத் திருவள்ளுவரின் கருத்து பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

கற்றால் மட்டும் போதாது கற்றறிந்த அறிவை நன்கு பயன்படுத்தி அதன் வழி - நல்வழி - நிற்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

கல்வி பற்றி பழந்தமிழ் நூல்களும் அறிஞர்களும் எடுத்துக்காட்டியவற்றைப் படித்தறிவோம்.

பிச்சைபுக் காயினும் கற்றல் மிகவினிது
நற்சபையிற் கைகொடுத்தல் சாலவும்
முன்னினிது
~இனியவை நாற்பது

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே
~ வெள்ளிவேற்கை

இளமையிற் கல்; வித்தை விரும்பு
~ஆத்திசூடி

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்
தகும்

கைப் பொருள் தன்னில் மெய்ப்
பொருள் கல்வி
~கொன்றை வேந்தன

கல்வியின் ஊங்கு இல்லை
சிற்றுயிர்க் குற்ற துணை
~நீதி நெறி

கல்வி என்பது வாழ்க்கை
~சோக்கிரட்டீஸ்

மனிதனிடம் மறைந்து கிடக்கும்
பரிபூரணத்துவத்தை
வெளிப்படுத்துவதே கல்வி
~சுவாமி விவேகானந்தர்

கல்வி ஒருவனை நல்ல மனிதப்
பண்புடையவனாகவும்
நற்குடிமகனாகவும் ஆக்க வேண்டும்.
~ரூசோ

அறிந்ததிலிருந்து அறியாததற்குச்
சென்று
விளங்கிக் கொள்ள வைத்தல்
கல்வியாகும்.
~கேபர்ட் ஸ்ஸன்சர்

கல்வியே கருத்தனம் கல்வியே மனித மேம்பாட்டுக்கு வழிகாட்டி. கல்வியினால் காணும் பெறுபேறு ஒழுக்கமாகும். எமக்கு கல்விதான் மூலதனம். ஒழுக்கத்தை பேண கல்வி அவசியமாகும்.

செவி சாய்ப்போமா?

திருமதி ப. முருகதாஸ்
சீரேஸ்ட ஆசிரியை (கணிதம்)

பிள்ளையின் இயல்பான விருத்திக்கு அச்சுறுத்தலாக என்றும் விளங்கும் நிலமை களில் நடுநாயமாக விளங்குவது குடும்ப மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் காணப்படும் அவல நிலையே. வாழ்க்கையில் சொற்ப காலமோ நீண்ட காலமோ தம் தேக உள ஆரோக்கியத்துக்கு ஆபத்தை உண்டாக்க கூடிய பல தரப்பட்ட இன்னல்களுக்கு இலக் கான சிறுவர் குழுக்கள் மிகவும் சிரமப்பட்ட சிறுவர்களாக முனகிக்கொண்டு இருக்கிறார் கள். இவர்களது முனகல்கள் மோசமான நிலைகள் வெளிச் சமூகத்திற்கு தெரிய வாய்ப்பில்லை.

தெருக்களில் பிழைப்பை நடாத்தி விட்டு இரவில் வீடு செல்லும் சிறார்கள், பெரிய வர்களின் பாதுகாப்பில்லாமல் சித்திரவதை களைச் சந்திக்கும் பிள்ளைகள், அகதிநிலை யில் சொல்லொணாத் துயரத்தைச் சுமக்கும் சிறார்கள், ஊனமுற்றதால் இம்சிக்கப்பட்டு விடுதிகளில் தங்க விடப்பட்ட சிறார்கள், கல்விகற்க வேண்டிய பருவத்தே தொழில் செய்து பிழைக்கும் பால்ய உழைப்பாளிகள் வறுமையில் வதங்கும் பிள்ளைகள், நெடுங் காலம் நீடித்த உள் நாட்டு போரினால் விரக்தி யடைந்த பிள்ளை, தாயை இழந்து சிற்றன்னை யின் கொடுமையில் சிக்கித் தவிக்கும் பிள்ளை இவ்வாறெல்லாம் அவலப்படும் இந்தப் பிள்ளை களுக்கு இன்று சமூதாயம் எவ்வாறு முகம் கொடுக்கிறது.

அடிமைக் கூலிகள் போல இம்சைக் கும், ஏமாற்றுக்கும், பாகுபாட்டுக்கும், உள்ளாக் கப்படுகின்ற ஒவ்வொரு பிள்ளையினதும் அவலக்குரல் எத்தனை இதயங்களுக்கு கேட்கிறன்றது? வயதுக்கேற்றவாறான துயரின் குணங்குறிகள் பற்றிக் கொள்வது வழக்கம். இதனால் பிள்ளைகளின் விருத்தியும் அன்றாட நடவடிக்கைகளும் பாதிப்படையும்.

உதாரணமாக பேசும் திறனை இழத்தல், எதிலும் மனம் படியாமை, உச்ச சஞ்சல உணர்வு என்பனவும், வளர்ந்த பிள்ளை களானால் மனச் சோர்வு சில சமயங் களில் தற்கொலை பற்றிய நினைவுகள் என்பனவும் ஏற்படலாம். இத்தகைய பிள்ளைகள் தமக் குரிய உதவியைப் பெறாதபட்சத்தில் பாட சாலைக்குச் செல்வதை நிறுத்திக் கொள் வார்கள். பிள்ளைகள் தந்தையை இழக்கும் போது அல்லது அனாதைகள் ஆகும்போது ஏற்படும் நிலைக்குலைவினால் உண்டாகும் மனச்சஞ்சலம் பிள்ளையின் உளவியல் வளர்ச்சியில் பரரதூரமான பாதிப்புக்களை விளைவிக்கின்றது.

உள்ளத்தால் துயருற்ற இப் பிள்ளை களை செவிசாய்க்க வேண்டியது சமூதாயத்தில் உள்ள ஒவ்வொருவரதும் கடமையாகும். பிள்ளையின் புனர்வாழ்வுச் செயற்றிட்டங்களை மேற்கொள்ள நம்பிக்கையான உறவை ஏற்படுத்தி மேம்படுத்தி ஆரோக்கியமான செவிசாய்த்தல் மிக அவசியம்.

பிள்ளையின் உணர்ச்சிக் கொந் தளிப்பை ஆக்க பூர்வமான முறையில் வெளியேற்றுவதற்கு வாய்ப்புண்டாக்கும் வகை யில் பிள்ளை சொல்வதை பொறுமையாகக் கேட்க வேண்டும். பிள்ளை தான் ஒரு தனியாள் எனும் எண்ணத்தைப் போக்கும் வரிசையில் உரையாட வேண்டும். பொறுமை வெட்கம்

துயர் ஆகியன உள்ள சிறு பிள்ளைகள் சொற்களைத் தேடுவதற்கும், தம் எண்ணத்தை வெயிடுவதற்கும் தயக்கம் காட்டும் போது அப் பிள்ளையின் அசைவுகள், பல கதைகளை நம் மனக்கண்ணிலே நிறுத்தும். பிள்ளையின் இந்த உக்கிரமான உணர்வுகளை நசுக்காமல் நாமும் பகிர்ந்து கொண்டு ஆதரவு அளிக்கும் பாங்கான உரையாடலில் ஈடுபடும் போது பிள் ளையும் பயங்கரமான மன விறைப்பில் இருந்து ஓரளவு நிவாரணம் பெறும். ஒருவராவது தன்னைப் புரிந்து கொண்டாரே என்று அப்பிள்ளை நிம்மதியடைவதுடன் தனிமை உணர்வில் இருந்து விடுபட்டு ஆறுதலடையும்.

பிள்ளை வளர்ச்சியடைவதற்கு ஒரு புதிய தளத்தை ஒரு தொடக்க முனையை பிள்ளைக்கு வழங்கி பெரியவர்கள் மீது மீண்டும் நம்பிக்கை துளிர்ப்பதற்கு உதவலாம். பிள்ளையின் உணர்ச்சிகளை கிளறி விடாமலும் இரகசியம் பேணவேண்டியதும் மிக முக்கிய மானது. பிள்ளையின் கரத்தைப் பற்றி அதற்கு ஆறுதல் கொடுக்கும் போது பிள்ளை தன் சுமைகளை இறக்கி வைக்க முற்படும் எனவே திட்டமிட்ட செவிசாய்த்தல் நல்ல வெற்றியைக் கொடுக்கும்.

பிள்ளை சுறுசுறுப்பாக இருத்தல், சக பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுதல், ஏனைய பிள்ளைகளுடன் தொடர்பு கொள் ளுதல் ஆகியவற்றின் பாங்கு வலியுறுத் தப்படும்போது பிள்ளை மீண்டும் புத்துணர்வு பெறும். அதனது தேவைகள் நிறைவேற்றப் படும்போது, புறக்கணிப்பின்றி அரவணைப்பு கிட்டும் போது அப் பிள்ளையின். சமூக வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படும். இதற்கு நிச்சயம் தேவைப்படுவது ஆரோக்கியமான உரையாடலும் பொறுமையான செவிசாய்த் தலுமே என்று உறுதியாகக் கூறலாம்.

செவி சாய்க்கும் போது பிள்ளையின் குறிப்பறிந்து உரையாடலை வளர்க்கலாம். இடை நிறுத்தலாம் மன உணர்வுகளுக்கு வடிகால் அமைத்துக் கொடுக்க முயல வேண்டும். சிறுவர் உரிமைகளை மதித்து உரையாடலுக்குப் போதுமான அளவு கால வரையறையை வகுத்துக்கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும். ஒரு போதும் பிள்ளையை அழ வைத்துவிட்டுப் போகாமல் அப்பிள்ளை எடுக்கும் பிரயாசைகளுக்கு ஆக்க பூர்வ ஒத்துழைப்பு வழங்கும் வகையில் திட்டமிட்டு உரையாட வேண்டும். உரையாடல் மூலம் பிள்ளைகளுடன் உறவாடினால் பிள்ளை தன் உணர்வுகளைப் புரிந்து கொள்ளவும் தன்னை புரிந்து கொள்ளவும் உதவ முடியும். பிள் ளையை யதார்த்த பூர்வ அறிவுக்கு கொண்டு வர முயல்வதனால் சிறந்த பிரஜையாக உருவாக்கவும் முடியும்.

எதிர் காலத்தின் மூலாதாரமான பிள்ளையின் முன்னேற்றத்தை புறக்கணித்தால் மற்றெல்லா மூல வளங்களையும் விருத்தி செய்தல் அர்த்தமற்றதாகி விடும். பிள்ளைப் பருவம் வளர்ச்சிக்கான சாத்தியப்பாடு உச்ச நிலையில் இருக்கும் கால்ம் வாய்ப்பு விரய மாகாமல் அல்லது புறக்கணிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

நியாயமாகவும் நாணயமாகவும் நடந்து கொள்ளும் மனிதர்களிடமுள்ள ஒரேயொரு குறை எல்லாவற்றையும் நம்பிவிடும் ஏமாளியாக அவர்கள் இருப்பதுதான்

சிரேஷ்ட மாணவர் தலைவர்கள் / மாணவர் தலைவர்கள்



சிரேஷ்ட மாணவர் தலைவர்கள் 2001/2002



மாணவர் தலைவர்கள் 2002/2003



மாணவர் தலைவர்கள் தினம் சத்தியப்பிரமாணம்
2003/2004



மாணவர் தலைவர்கள் தினம் 2001/2002
வலய ஆங்கில உ.க.ப. திரு.V.M. முத்துராசா

இல்ல மெய்வல்லுனர் போட்டி



ஆண்கள் வீதி ஓட்டப் போட்டி



பாண்ட் அணிவகுப்பு



கல்லூரி துடுப்பாட்ட அணி

சாரணியம்



ஆண் சாரணியர் குழு



பெண் சாரணியர் குழு



குருளைச் சாரணர்

கேள்விக் கோட்பாடு
(THE THEORY OF DEMAND)

மு. சிறிதங்கராசா
ஆசிரியர்

சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் கோட்பாடானது பேராசிரியர் அல்பிரட் மார்ஷல் என்பவரினால் குறைந்து செல்லும் எல்லைப் பயன் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு கேள்விக் கோட்பாடு அறிமுகப் படுத்தப்பட்டது. அதாவது நுகர்வோன் விருப்பு, நடத்தை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பொருளுக்கான கேள்வி தீர்மானிக்கப் படுவதை விளங்குவதாக கேள்விக் கோட்பாடு விளக்கப்படுகின்றது.

வரைவிலக்கணம்

கேள்வி விதி என்பது குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட விலையில் விருப்பம் உச்சபயன் அடிப்படையில் நுகர்வோ னால் கொள்வனவு செய்யத் தயாராகவுள்ள பொருட்கள் அளவே கேள்வி எனப்படும்.

கேள்வி விதி
(The law of Demand)

கேள்வி என்பது ஒரு பண்டத்தின் விலை மட்டும் மாறும் போது அதன் கேள்வித் தொகையும் மாறும் என்பதை விளக்குவது கேள்வி விதியாகும். அதாவது ஒரு பொருளின் விலை குறையும் போது அதிகளவு பொருளி னையும் கொள்வனவு செய்யும் நிலையே கேள்வி விதி எனலாம். விலைக்கும் தொகைக் குமிடையில் தலைகீழ்ப்படுத்தப்பட்ட எதிரான தொடர்பு இருப்பதைக் குறிக்கும்.

கேள்வியை நிர்ணயிக்கும் காரணிகள்

குறிப்பிட்ட ஒரு பண்டத்தின் கேள்வி யானது பல காரணிகளால் தீர்மானிக்கப் படுகின்றன.

1. குறித்த பொருளின் விலை
2. ஏனைய பொருளின் விலை
3. நுகர்வோன் வருமானம்
4. நுகர்வோன் சுவை
5. காலநிலை
6. கடந்தகால கேள்வி
7. தகவல் விளம்பரங்கள்
8. நுகர்வோன் எதிர்பார்க்கை
9. அரசாங்க கொள்கை மாற்றம்

கேள்வி சார்பு

ஒரு பண்டத்தின் கேள்வித் தொகைக் கும் அக்கேள்வித் தொகையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுக்கும் இடையிலான தொடர்பினையும் கணிதரீதியாக விளக்குவது கேள்விச் சார்பு தொழிற்பாடு எனலாம். பண்டத் தின் கேள்விச் சார்பு தொழிற்பாட்டினை பின் வருமாறு எழுதலாம்.

$$QDx = f\{Px, (P_1 ... P_{n-x}), Y, T, W, E, GP, K, INF\}$$

QDx	- x பொருளின் கேள்வி அளவு
F	- தொழிற்பாடு
Px	- x பொருளின் விலை
$(P_1 - P_{n-x})$	- ஏனைய பொருட்களின் விலை (x பொருள் தவிர்ந்த)
Y	- நுகர்வோன் வருமானம்
T	- நுகர்வோன் சுவை
W	- காலநிலை
E	- நுகர்வோன் எதிர்பார்க்கை
GP	- அரசாங்க கொள்கை மாற்றம்
K	- கடந்த கால கேள்வி
INF	- தகவல் விளம்பரங்கள்

கேள்வி வளையி
(Demand Curve)

குறித்த ஒரு நேரத்தில் குறித்த ஒரு பண்டத்தின் விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் மாறாத நிலையில் பல்வேறு விலைமட்டங்களில் கேட்கப்படும் கேள்வித் தொகைகளைக் காட்டுவதே கேள்வி வளையி யாகும். இக்கேள்வி வளையியானது விலைக் கும் தொகைக்குமிடையில் எதிரான தொடர் பினைக் காட்டுகின்றது. இது மேலிருந்து கீழாகவும் இடமிருந்து வலமாகவும் செல் கின்றது.

கேள்வி வளையியினை பின்வரும் கேள்வி அட்டவணையினை அடிப்படையாகக் கொண்டு வரையலாம்.

விலை (P) ரூபா	கேள்வித் தொகை(Q)
20	250
15	500
10	750



வரைபடத்தில் காட்டப்பட்டவாறு விலை 20/= வாக இருக்கும்போது கேள்வித்தொகை 250 அலகாகவும் விலை 15/= வாக குறையும்போது கேள்வித்தொகை 500 அலகாக அதிகரிப் பதையும் விளக்குகின்றது. இதுவே கேள்வி விதி என அழைக்கப்படுகின்றது.

புறநடைக்கேள்வி
(Exceptional Demand)

கேள்வி விதிக்கு மாறான விதத்தில் பண்டமொன்றின் கேள்வி செயற்படும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றது. இதனைப் புறநடைக்கேள்வியென அழைக்கப்படும்.

புறநடைக்கேள்வி என்னும்போது குறிப்பிட்ட ஒரு நேரத்தில் குறிப்பிட்ட ஒரு பொருளின் விலை அதிகரிக்கும்போது கேள்வித் தொகை அதிகமாகவும் விலை குறையும் போது கேள்வித்தொகை குறைவாகவும் காண்பதுதல் புறநடைக்கேள்வி எனலாம். புறநடைக்கேள்வியினை விளக்கும் வளையி பின்வருமாறு காணப்படும். இது சாதாரண கேள்விக் கோட்டிற்கு எதிர்மாறான தாகக் காணப்படும்.



புறநடைக் கேள்வி நிலவும் சந்தர்ப்பங்களாவன:

1. ஒரு பண்டத்தின் தரம் விலையினால் மதிக்கப்படும் போது அதாவது விலை உயர்ந்த பொருள் தரமானவை என மதிக்கப்படும் நிலை.
2. சமூக அந்தஸ்து / தகுதி கருதி கொள்வனவு செய்யும் நிலை.
3. நுகர்வோன் எதிர்பார்ப்புக்கள் எதிர்காலத் தில் மேலும் விலை அதிகரிக்கும் என எதிர்பார்த்து விலை அதிகரிக்கும் போது அதிக அளவு கொள்வனவு செய்தல்

4. தீவிர பழக்கவழக்கங்களுக்கு உட்பட்ட அடிமைப்படுத்தப்பட்ட பண்டங்கள்.

கேள்விச் சமன்பாடு
(Demand of Equation)

கேள்வித் தொழிற்பாட்டினை சமன்பாட்டு வடிவில் குறிப்பிடுதல் கேள்விச் சமன்பாடு எனலாம்.

$QD = a - bp$

QD - கேள்வித் தொகை

a - கேள்விக்கோடு கிடையச்சை வெட்டும் புள்ளி

b - கேள்விக் கோட்டின் சரிவு

p - விலை

மேலுள்ள அட்டவணையினை அடிப்படையாகக் கொண்டு கேள்விச் சமன்பாடு பின்வருமாறு பெறப்படும்.

$$b = \frac{\triangle Q}{\triangle p} = \frac{250}{5} = 50$$

$\triangle Q$ - கேள்வித் தொகை மாற்றம்

$\triangle p$ - விலை மாற்றம்

$b = 50$ என கொண்டு பிரதியிடல்

$QD = a - bp$

$750 = a - 50x\ 10$

$750 = a - 500$

$750 + 500 = a$

$1250 = a$

$Qd = 1250 - 50p$

கேள்வி மாற்றம்
(Change of Demand)

கேள்வி மாற்றம் என்பது குறித்த ஒரு காலப்பகுதியில் குறிப்பிட்ட ஒரு பொருளுக்கு விலை தவிர்ந்த ஏனைய காரணிகளின் மாற்றம் காரணமாக கேள்விக்கோட்டில் ஏற்படும் மாற்றம் கேள்வி மாற்றம்எனலாம். அதாவது குறிப்பிட்ட பொருளின் விலை தவிர்ந்த கேள்வியை நிர்ணயிக்கும் ஏனைய காரணிகளின் மாற்றங்களினால் கேள்விக் கோட்டில் ஏற்படுகின்ற இடப்பக்க, வலப்பக்க நகர்வுகளே கேள்வி மாற்றம் எனலாம். இது இரு பிரிவாகப் பிரித்து நோக்கப்படும்.

1. கேள்வி கூடுதல்
2. கேள்வி குறைதல்

குறித்த பண்டத்தின் விலை மாறாதபோது கேள்வியை நிர்ணயிக்கும் ஏனைய காரணிகளின் சாதகமான மாற்றம் காரணமாக கேள்வி அதிகரித்தல் கேள்வி கூடுதல் எனலாம். இதனை கேள்விக்கோடு வலது புற நகர்வின் ஊடாக காட்டப்படும்.



வரைபடத்தில் கேள்விக் கோடானது Dயில் இருந்து D_1 ஆக மாற்றமடையும் போது கேள்வித்தொகை Qவில் இருந்து Q_1 ஆக அதிகரிக்கின்றது. இது கேள்வி கூடுதல் எனலாம்.

மாறாக கேள்வி குறைதல் என்பது குறித்த பண்டத்தின் விலை மாறாத போது கேள்வியை நிர்ணயிக்கும் ஏனைய காரணிகளின் பாதகமான மாற்றம் காரணமாக கேள்வி குறைதல் கேள்வி குறைதல் எனலாம். இதனை கேள்விக், கோட்டின் இடதுபுற நகர்வின் மூலம் காட்டமுடியும். வரைபடத்தில் கேள்விக் கோடானது Dல் இருந்து D_2வாக இடதுபுறம் நோக்கி நகரும்போது கேள்வித் தொகையானது Qவில் இருந்து Q_2 ஆகக் குறைவடைகின்றது. இது கேள்வி குறைதல் எனலாம்.

கேள்வித் தொகை மாற்றம்
(Change of Quantity Demand)

குறிப்பிட்ட ஒரு பண்டத்தின் கேள்வியைத் திர்மானிக்கும் ஏனைய காரணிகள் மாறாத நிலையில் விலையில் மட்டும் மாற்றம்

ஏற்படுகின்ற போது கேள்வித் தொகையில் ஏற்படும் மாற்றம் கேள்வித் தொகைமாற்றம் எனலாம். இது பின்வரும் இரு பிரிவுகளாகப் பிரித்து நோக்கப்படும்.

1. கேள்வி நீட்டம்
2. கேள்வி ஒடுக்கம்

குறிப்பிட்ட ஒரு பண்டத்தின் விலை குறையும் போது அப்பண்டத்தின் கேள்வித்தொகை அதிகரித்தல் கேள்வி நீட்டம் என அழைக்கப்படும்.



வரைபடத்தில் விலை Pயில் இருந்து P_1 ஆகக் குறையும்பொது கேள்வித் தொகை Qவில் இருந்து Q_1 ஆக அதிகரித்தல் கேள்வி நீட்டம் என அழைக்கப்படும் அதாவது Aயில் இருந்து Bக்கான நகர்வு கேள்வி நீட்டம் எனப்படும்.

குறிப்பிட்ட பண்டத்தின் விலை கூடும் போது அப்பண்டத்தின் கேள்வித் தொகை குறைதல் கேள்வி ஒடுக்கமென அழைக்கப் படும். படத்தில் Pயில் இருந்து P_2 வாக அதிகரிக்கும்போது கேள்வித்தொகை Qவில் இருந்து Q_2வாகக் குறைதல் கேள்வி ஒடுக்கம் எனப்படும். அதாவது Aயில் இருந்து Cக்கான நகர்வு கேள்வி ஒடுக்கம் எனப்படும்.

இவ்விரு எண்ணக்கருக்களும் ஒரு கேள்விக் கோட்டின் வெவ்வேறு புள்ளி களுக்கிடையிலான அசைவை எடுத்துக் காட்டு வதாகும்.

பண்டமொன்றின் கேள்விக்கோடு வலதுபுறம் அசைவதற்கான காரணங்கள்

1. பிரதியீட்டுப் பண்டம் ஒன்றின் விலை அதிகரித்தல்
   உ-ம் தேயிலை - கோப்பி
2. இணைப்புப் பண்டம் ஒன்றின் விலை வீழ்ச்சியடைதல்
   உ-ம் ரயர் - ரியூப்
3. நுகர்வோன் வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு
4. எதிர்காலத்தில் பண்டத்தின் விலை அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பு
5. சுவை, நாகரிகம், பழக்க வழக்கம் என்பன கொள்வனவுக்கு சாதகமாக இருத்தல்
6. சனத்தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பு
7. விளம்பரங்களும், விற்பனை மேம்படுத்தல் களும் அதிக அளவில் செயற்படல்.
8. அரச சட்டம் இப்பொருள் கொள்வனவிற்க சாதகமாக அமைதல்
9. காலநிலை இப்பொருள் கொள்வனவிற்கு சாதகமாக அமைதல்.

பண்டமொன்றின் கேள்விக்கோடு இடப்புறம் அசைவதற்கான காரணங்கள்

1. பிரதியீட்டுப் பண்டம் ஒன்றின் விலை விழ்ச்சியடைதல்
2. இணைப்புப் பண்டம் ஒன்றின் விலை அதிகரித்தல்
3. நுகர்வோன் வருமானத்தில் ஏற்பட்ட குறைவு
4. சுவை, நாகரிகம், பழக்கவழக்கம் என்பன கொள்வனவிற்குப் பாதகமாக இருத்தல்.
5. சனத்தொகையில் ஏற்பட்ட குறைவு
6. எதிர்காலத்தில் பண்டத்தின் விலை குறையும் என்ற எதிர்பார்ப்பு
7. விளம்பரங்களும், விற்பனை மேம்படுத்தல் களும் குறைக்கப்படுதல்
8. அரசாங்க சட்டம் இப்பொருள் கொள்வன விற்குப் பாதகமாக அமைதல்.
9. காலநிலை இப்பொருள் கொள்வனவிற்கு பாதகமாக அமைதல்.

தனிநபர் கேள்வியும் சந்தைக்கேள்வியும் (Individual Demamd - Market Demand)

தனிநபர் கேள்வி என்பது சந்தை யொன்றில் குறித்த ஒரு நேரத்தில் பண்ட மொன்று தொடர்பாக காணப்படும் ஒவ்வொரு விலைமட்டங்களிலும் தனிப்பட்ட ஒவ்வொரு நுகர்வோராலும் கொள்வனவு செய்யத்தயாராக வுள்ள அளவு தனியார் கேள்வி ஆகும்.

சந்தைக்கேள்வி என்பது குறித்தவொரு நேரத்தில் சந்தையொன்றில் குறிப்பிட்டவொரு பண்டம் ஒன்று தொடர்பாகக் காணப்படும் பல்வேறு விலைமட்டங்களிலும் சந்தையிலுள்ள மொத்த நுகர்வோராலும் கொள்வனவு செய்யத் தயாராகவுள்ள அளவு சந்தைக் கேள்வியாகும். அதாவது தனிநபர் கேள்விகளின் மொத்த கூட்டுத்தொகையே சந்தைக் கேள்வியாகும்.

விலை	நுகர்வோர் கேள்வி A+ B + C + D	விலை	சந்தைக்கேள்வி
5.00	25+15+10+5	5.00	55
10.00	20+12+8+3	10.00	43

(உ-ம்) சமன்பாடு

$Q_{DA} = 25 - 5p$

$Q_{DB} = 20$ n- $8p$

$Q_{DC} = 30 - 10p$

(A+B+C) $QD = 75 - 23p$ => சந்தைக்கேள்வி

கேள்வியின் வகைகள் (Types of Demand)

ஒரு பண்டத்தின் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகளில் மிக முக்கிய மானதாக கருதப்படும் குறிப்பிட்ட பொருளின் விலை மாற்றம் ஏனைய பொருட்களின் விலைமாற்றம் நுகர்வோனின் வருமான மாற்றம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கேள்வியை 3 பிரிவாக பிரிக்கலாம்.

1. விலைக் கேள்வி
2. குறுக்குக் கேள்வி
3. வருமானக் கேள்வி

1. விலைக்கேள்வி (Price of Demand)

இது சாதாரண கேள்வியின் மற்றொரு பெயராக விலைக்கேள்வி அமையும். அதாவது குறிப்பிட்ட ஒரு பண்டத்தினது கேள்வித் தொகையானது அதே பண்டத்தின் விலை மாற்றத்தினால் தீர்மானிக்கப்படும்போது அதனை விலைக்கேள்வி என்பர். குறித்த பொருளின் விலைமாற்றங்களுக்கும் அதன் கேள்வித் தொகை மாற்றங்களுக்கும் இடையில் எதிரான தலைகீழ் தொடர்பு காணப்படும். பின்வரும் வரைபடத்தில் விலைகேள்விக்கோடு காட்டப்பட்டுள்ளது.



2. குறுக்கு கேள்வி (Cross Demand)

குறிப்பிட்ட ஒரு பண்டத்தின் கேள்வி யளவானது அதனோடு தொடர்புடைய மற்றுமோர் பண்டத்தின் விலை மாற்றத்தினால் கேள்வி தீர்மானிக்கப்படும் போது அதனை குறுக்கு கேள்வி எனலாம். இங்கு குறித்த பண்டங்களின் விலைமாற்றங்களுக்கும் அதனோடு தொடர்புடைய மற்றைய பண்டங் களின் கேள்வி அளவு மாற்றங்களுக்கும் இடையில் காணக்கூடிய தொடர்புகளை அடிப் படையாகக் கொண்டு குறுக்கு கேள்வியை மூன்று பிரிவாக பிரிக்கலாம்.

1. நேர் தொடர்பு குறுக்கு கேள்வி
2. எதிர் தொடர்பு குறுக்கு கேள்வி
3. பூச்சிய தொடர்பு குறுக்கு கேள்வி

I. நேர்த் தொடர்புக் குறுக்கு கேள்வி

குறிப்பிட்ட பண்டங்களின் விலை மாற்றங்களும் அதனோடு தொடர்புபடும் மற்றைய பண்டமொன்றின் கேள்வித் தொகை மாற்றங்களுக்கும் இடையில் நேர்த்தொடர்பு காணப்படும். இதனை நேர்த்தொடர்பு குறுக்கு கேள்வி எனலாம்.

இதனை இவ் வரைபடத்தின் மூலம் விளக்கலாம்.



X பொருளின் விலை அதிகரிக்கும்பொது Y பொருளின் கேள்வி அதிகரிப்பதையும் மாறாக x பொருளின் விலை குறையும் போது Y பொருளின் கேள்வி குறைவதையும் காணலாம் இது பிரதியீட்டுப் பொருளுக்கு இடம்பெறும்.

II. எதிர்த் தொடர்புக் குறுக்கு கேள்வி

குறிப்பிட்ட ஒரு பண்டங்களின் விலை மாற்றங்களும் அதனோடு தொடர்புடைய மற்றைய பண்டமொன்றின் கேள்வி மாற்றங் களுக்கும் இடையில் எதிரான தொடர்பு காணப் படும் போது எதிர்த்தொடர்பு குறுக்கு கேள்வி எனலாம்.



வரைபடத்தில் X பொருளின் விலை அதிகரிக் கும்போது Y பொருளின் கேள்வி குறை வடையும் X பொருளின் விலை குறையும் போது Y பொருளின் கேள்வி அதிகரிப்பதையும் காட்டுகின்றது. இது இணைப்புப் பொருளுக்கு காணப்படும்.

III. பூச்சியத் தொடர்புக் குறுக்கு கேள்வி

குறிப்பிட்ட ஒரு பண்டத்தினுடைய விலை கூடும்போது அல்லது குறையும் போது மற்றைய பண்டமொன்றின் கேள்வியானது எவ்வித மாற்றமும் இன்றிக் காணப்படுமாயின் அது பூச்சியத் தொடர்பு குறுக்கு கேள்வியென அழைக்கப்படும்.



வரைபடத்தில் X பொருளின் விலை கூடும் போது அல்லது குறையும்போது Y பொருளின் கேள்வி எவ்வித மாற்றமும் இல்லாமல் காணப்படும். இது இரு பண்டங்களுக்கும் இடையில் தொடர்பற்ற தன்மை காணப்படும் போது இக் கேள்வி காணப்படும்.

உ- ம் அரிசி - புடவை

3. வருமானக் கேள்வி (Income Demand)

குறிப்பிட்ட ஒரு நுகர்வோனது வருமானத்தில் ஏற்படும் மாற்றமானது அவனால் கொள்வனவு செய்யப்படும் பண்டங்களின் கேள்வி அளவுகளில் மாற்றங்களினை ஏற்படுத்தும்போது அதனை வருமானக் கேள்வி என அழைப்பர். இங்கு நுகர்வோனது வருமான மட்டங்களுக்கும் பண்டங்களின் அளவுகளுக்கும் இடையில் காணப்படுகின்ற தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டு வருமான கேள்வியை 3 பிரிவாக பிரிக்கலாம்.

1. நேர்த்தொடர்பு வருமானக் கேள்வி
2. எதிர்தொடர்பு வருமானக் கேள்வி
3. பூச்சியதொடர்பு வருமானக் கேள்வி

1. நேர்த்தொடர்பு வருமானக் கேள்வி

குறிப்பிட்ட ஒரு நுகர்வோனது வருமான மாற்றங்களுக்கும் பண்டமொன்றின் கேள்விமாற்றங்களுக்கும் இடையில் நோரான தொடர்பு காணப்படுதல் நேர்த் தொடாபு வருமானக் கேள்வி என்பர்.



வரைபடத்தில் வருமானம் அதிகரிக்கும் போது கேள்வி அதிகரிப்பதையும் வருமானம் குறையும் போது கேள்வி குறைவதையும் காணலாம். இவ்வாறான தொடர்பு உயர்ந்த தரமுடைய பொருட்களுக்கு காணப்படும்.

2. எதிர்தொடர்பு வருமான கேள்வி

குறிப்பிட்ட ஒரு நுகர்வோனது வருமான மாற்றங்களுக்கும் பண்டமொன்றின் கேள்வி அளவு மாற்றங்களுக்கும் இடையில் எதிர்த்தொடர்பு காணப்படும்போது அதனை எதிர்த் தொடர்பு வருமான கேள்வி என்பர்.



வரைபடத்தில் நுகர்வோனது வருமானம் அதிகரிக்கும்போது கேள்வி குறைவதையும் வருமானம் குறையும்போது கேள்வி அதிகரிப்பதையும் காணலாம். இவ்வகையான கேள்வியானது இழிவுப் பண்டங்களுக்கு காணப்படும்.

3. பூச்சிய தொடர்பு வருமானக் கேள்வி

குறிப்பிட்ட ஒரு நுகர்வோனது வருமான மட்டமானது குறிப்பிட்ட ஒரு எல்லைக்கு அப்பால் அதிகரிக்கும்போது ஒரு பண்டத்தின் கேள்வியானது எந்தவித மாற்றமுமின்றி காணப்படுமாயின் அதனைப் பூச்சியத் தொடர்பு வருமானக் கேள்வி என்பர். இங்கு வருமானம் கூடினாலும் அல்லது குறைந்தாலும் எந்தவித மாற்றமும் இன்றி இருக்கும் நிலையினைக் குறிக்கும்.



வரைபடத்தில் நுகர்வோனது வருமானம் அதிகரிக்கும் போது அல்லது குறையும் போது கேள்வித் தொகை மாற்றமில்லாத நிலையைக் குறிக்கின்றது. இக் கேள்வியானது அத்தியாவசியப் பொருட்களுக்கு காணப்படும்.

உசாத்துணை நூல்கள்

i. பொருளியல் I — K. அமிர்தலிங்கம், S. சந்திரசேகரம்
ii. பொருளியல் I — A. சண்முகலிங்கம்
iii. Micro Economics - ALLEN R. THOMPSON

நாய்க்குட்டி

(குறியீட்டுக் கதை)

ஈ. ஜே. லெஸ்லி
ஆசிரியர்

சிறுமி ஒருத்தியிருந்தாள். அவள் சிறிய **நாய்க்குட்டி** ஒன்றைச் செல்லமாக வளர்த்து வந்தாள். அவள் தினமும் நாய்க் குட்டிக்கு உணவூட்டுவாள். அவள் ஊட்டும் பிரதான உணவுகளில் ஒன்று **மீனெண்நெய்.**

முதலில் அவள் நாய்க்குட்டியை தன் மடி மீது வசதியாக வைத்துக்கொள்வாள். பின் தன் ஒரு கையினால் அதன் வாயை அகலத் திறப்பாள். பின் மீனெண்நெயைக் **கரண்டி** ஒன்றில் விட்டு நாய்க்குட்டிக்கு பருக்குவாள். அநேகமான சந்தர்ப்பங்களில் நாய்க்குட்டி திமிறும் மீனெண்நெய் நிலத்தில் சிந்தும் அப்போதெல்லாம் அவள் நாய்க் குட்டி மீது செல்லமாக கோவிப்பாள். சில சமயங்களில் பொறுமையிழந்து அதை அடிக்கவும் செய் வாள். இச் செயல்கள் எல்லாம் வழக்கமாகிப் போயின.

ஒரு முறை இப்படித்தான் நாய்க்குட்டி மீனெண்நெய் பருக்கப்படும் போது திமிறியது. மீனெண்நெய் நிலத்தில் சிந்தியது. சிறுமியின் பிடி தளரவே நாய்க்குட்டி நிலத்திற்குத் தாவியது.

அப்போது அவள் ஓர் அதிசயத்தைக் கண்டாள். அது என்னவெனில் நாய்க்குட்டி **நிலத்தில் சிந்திக் கிடந்த** மீனெண்நெயை விரும்பிச் சுவைத்துக் கொண்டிருந்ததையே. அவளால் தன் கண்களையே நம்ப முடிய வில்லை. ஆயினும் அவளின் நீண்ட நாள் புதிருக்கு விடை ஒன்றுக்கு கிடைத்திருந்தது. இப்போது அவன்கையில் கரண்டி இல்லை அதை வீசியெறிந்து விட்டாள்.

"ஏனெனில் நாய்க்குட்டி வெறுத்தது
மீனெண்நெய்யை அல்ல அது
பருக்கப்பட்ட முறையே"
(ஆசிரியர்களுக்கு இக் கதை சமர்ப்பணம்.)

TEACHING IS NOTHING, BUT CREATING INTEREST IN THE SUBJECT

ஒரு கொள்கையில் ஈடுபாடுள்ள 1000 பேரைவிட
அக் கொள்கையில் நம்பிக்கையுள்ள ஒருவனே
சிறந்த சமூக சக்தி ஆகின்றான்

கல்லூரி கட்டடங்கள்



சுந்தரதாஸ் மண்டபம்



பேஜ் மண்டபம்



இந்திரன் காராளசிங்கம் மண்டபம்



RAAN அன்பளிப்புக் கட்டடம்



மெமோறியல் மலர் VII வெளியீடு முதன்மை விருந்தினர்
துணை வேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை



165வது கல்லூரித் தினம் - 2001



பழைய மாணவர் சங்கக் கூட்டத்தில் அதிபர்



ப.மா.ச நடாத்திய நிதி சேகரிப்பு நிகழ்வு
"ஞானசௌந்தரி" நாடகம் 2001

உள ஒழுக்காற்று

ஆ. சறோஜினி
உடற் கல்வி ஆசிரியர்

பாடசாலையில் செய்யப்படும் அநேக உடற்கல்வி, விளையாட்டுச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவது உடலுறுப்புக்களின் அசைவுகளின் மூலமாகும்.

கதி - சக்தி - மாறுமியல்பு - நரம்பு-தசை, ஒருங்கிசைவு, நெகிழ்தகவு, எதிர்த்தாக்க வேகம் ஆகிய அம்சங்கள் விளையாட்டு வீரர்களிடம் விருத்தி செய்தல் நடைபெறும்.

எனினும் போட்டியாளர் ஒருவர் தாம் தீர்மானித்த எல்லையை நோக்கி செல்லும் போது மேற்கூறிய திறன்கள் அனைத்தையும் அபிவிருத்தி செய்வதற்கு அவரிடம் கடுமை யான உள ஒழுக்காற்று ஏற்படுத்தப்படல் வேண்டும்.

- நன்னடத்தைகள்
- குணாதிசயங்கள்
- பழக்கவழக்கங்கள்

அற்ற போட்டியாளன் ஒருவன் எத்தைகைய அடைவு மட்டம் ஒன்றை அண்மித்த போதிலும் அவனை உண்மையான ஆளுமையுடன் கூடிய மனித னொருவனென சமுதாயம் ஏற்றுக்கொள் வதில்லை.

- பயிற்சி நடவடிக்கைகளின் போதும்
- நிகழ்ச்சிக்குச் சமுகமளிக்கும் போதும்
- போட்டிகளின் போதும்

உள ஒழுக்காற்று என்னும் எண்ணக் கருவுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படல் வேண்டும்.

அதே போன்று போட்டியாளனொருவன் தனிப்போட்டிக்குச் சமுகமளிக்கும் போதும், குழுப்போட்டிக்குச் சமுகமளிக்கும் போதும் திடமான உள ஒழுக்காற்றுடன் ஈடுபடுதல் முக்கியமானதாகும்.

- தமது பிரத்தியேக நடத்தைக்கோலம்
- குழுவொன்றின் அங்கத்தவராக பிரதிநிதித்துவம் செய்தல்
- சிலவேளை குழுவின் தலைவராக பிரதிநிதித்துவம் செய்தல்
- விளையாட்டு விதிமுறைகளுக்கு மதிப்பளித்தல்
- நிகழ்ச்சி, போட்டி நடாத்தும் அதிகாரிகளுக்கு மதிப்பளித்தல்
- வெற்றி, தோல்வியைச் சமமாகத் தாங்கிக்கொள்ளல்.

என்பவற்றை விருத்தி செய்வதற்கு போட்டியாளரிடம் உள ஒழுக்காற்றை விருத்தி யான நிலையில் பேணல் அவசியமாகும்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து வரும் விளையாட்டுச் செயற்பாடுகளில் உள ஒழுகாற்று என்னும் எண்ணக்கருவுக்கு முக்கிய இடம் கிடைக்காவிட்டாலும் ஆசிய, தூரகிழக்கு நாடுகளில் நடைபெறும் விளையாட்டுச் செயற் பாடுகளில் பிரதான அம்சமாக ஒழுக்கம் முக்கிய இடத்தை எடுக்கின்றது.

உதாரணமாக கராத்தே ஜூடோ போன்ற உடற்பாதுகாப்பு சண்டைமுறைகளில் பயிற்சியின் போது கடுமையான உடல் ஒழுக்காற்று அபிவிருத்தி செய்யப்படுவது காணக்கூடியதாய் உள்ளது.

பரதம் பிறந்த கதை

திருமதி சர்மிளா கௌரிஹாசன்
(நாட்டியக் கலைமணி - நாட்டியக் கலா வித்தகர்)

புராண வரலாற்றில் பரத நாட்டியம் உருவான கதை பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. திரேதாயுகத்தில் மனிதர்களின் வாழ்க்கை மிகவும் கடினமானதாக இருந்தது. அவர்களின் மகிழ்ச்சி என்பது கஞ்சத்தனமாய் இருப்பது அடுத்தவர்களின் கஷ்டத்தினால் ஏற்படும் குரூர சந்தோஷம் மற்றவர்களைத் துன்புறுத்தி அதன் மூலம் கிடைக்கும் இன்பம் சிற்றின்பத்தில் அதிக நாட்டம் கொள்ளுதல் என கீழ் நோக்கிய வாழ்க்கையாக இருந்தது.

மனிதர்களின் இன்பம் என்பது பேராசை, குரூரம் ஆகியவற்றில் அடங்கி இருந்தது. வாழ்க்கை வரைமுறை அற்றதாக இருந்தது மனிதர்களின் இந்த வாழ்க்கை முறை தொடர்வதை பற்றி தேவர்கள் கவலை கொண்டனர். இதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்ய விரும்பினார்கள்.

தேவர்கள் அனைவரும் கூடி ஆலோசித்தனர். வேதம் என்பதில் வாழ்வின் அனைத்து நெறி முறைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அது பிராமணர்கள் என ஒரு சாராரின் கைகளில் சென்று விட்டதாலும் அனைவரும் புரிந்து கொள்ள இயலாதபடி அது ஒரு ஆழமான தளத்தையும் ரகசியமானதாகவும் ஆக்கிவிட்டிருந்தது. எனவே அவற்றை எளிமைப்படுத்தி மக்களையும் நெறி வழிப்படுத்த இவ் வேதங்கள் பயன்பட வேண்டும் என்றும் தேவர்கள் எண்ணினார்கள். எனவே இந்திரன் மூலம் பிரம்மா தலைமையில் இந்தப் பொறுப்பை நிறைவேற்றும்படி ஒப்படைத்தனர்.

அதில் வாழ்வின் நெறி முறைகளைச் சுட்டிக்காட்டும்படி நான்கு வேதங்களிலும் உள்ள சிலச்சில விஷயங்களைத் தொகுத்து அதை நிகழ்கலையாக ஆக்கி அதன் மூலம் மக்களை நெறிப்படுத்தலாம் என்று தீர்மானிக்கப் பட்டது. அதை ஐந்தாவது வேதம் எனச் செய்தனர். நான்கு வேதங்களில் இருந்தும் சாராம்சங்கள் எடுக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டன.

அவை முறையே ரி வேதத்தில் இருந்து வார்த்தைகள் மற்றும் பேச்சு சாம வேதத்தில் இருந்து, சங்கீதம், யசூர் வேதத்தில் இருந்து உணர்வுகளை வெளிப்படுத்தும் முறை அதர்வண வேதத்தில் இருந்து அழகியல் உணர்வு ஆகியவற்றைத் திரட்டி ஐந்தாவது வேதமாக ஆக்கினார் பிரம்மா.

இப்படி தயார் செய்யப்பட்ட ஐந்தாவது வேதத்தை வெறும் சொற்களாக அல்லாமல் புரிந்து கொண்டு நிகழ்கலை ஆக்கும் பொறுப்பை மானிடனிடம் ஒப்படைக்க எண்ணினார். அதனால் அதை அவர் பரத முனிவரிடம் ஒப்படைத்தார்.

பரத முனி தன்னுடைய 100 சிஷ்யர்களுக்கும் அந்த ஐந்தாவது வேதத்தைக் கற்றுத்தந்தார். ஆண்களால் மட்டும் எல்லாவித உணர்வுகளையும் வெளிப்படுத்த இயலாது என்று எண்ணிய பிரம்மா சில மென் உணர்வுகளை வெளிப்படுத்த 24 அப்சர ஐந்தாவது வேதம் கலையாக நடித்துக் காட்டப்பட வேண்டும் அல்லவா? அதை இந்திரன் கொடி விழா நாளன்று திரிபுர தகனம் என்ற கதையை எடுத்துக் கொண்டு ஐந்தாவது வேதத்தின் அடிப்படையில் அதைத் தயாரித்து நிகழ்கலையாக நிகழ்த்தினார்கள்.

இது சிவபெருமான் புன்னகை புரிந்த கொண்டே நெற்றிக்கண்ணைத் திறந்து மூன்று

அரக்கர்களை எரித்த கதை அதே நிகழ்ச் சியை இரண்டாம் முறையாக சிவபெருமான் முன்பாக நிகழ்த்தினார்கள். அதைப் பார்த்த சிவபெருமான் இதில் நாடக முறையுடன் தாண் டவ முறையையும் இணைத்தால் இருக்கும் என அபிப்பிராயப்பட்டார் இதவும் சரியானதுதான என எண்ணம் கொண்ட பரத முனி சிவபெருமா னின் சீடரான தாண்டு என்பவரிடம் தாண்டவ மும் நளின அசைவுகளைப் பார்வதியிடமும் பயின்றார். அதன்பின் அதுமெல்ல மெல்ல மற்றவர்களையும் சென்றடைந்தது.

தமிழர் தோற் கருவிகள்

திருமதி காதம்பரி சர்வேஸ்வரசர்மா
இசை ஆசிரியை

இயற்றமிழின் இலக்கிய் இலக்கணங் கள் அவற்றைக் கற்று அறிந்த அறிஞர் களையே இன்றுத்தும். ஆனால் இசையோ கற்றவர், மற்றவர், விலங்குகள், பறவைகள் ஆக எல்லா உயிரினங்களையும் இன்பம் அடையச் செய்யும். வண்டுகள் இசைபாட மலர்கள் மலர்ந்தன. இசைக்கு பாம்பு அடங்கி ஆடியது. பரிக்கோல், குத்துக் கோல் கொண்டு பாகனால் அடக்க முடியாத யானைகள் இசைக்கு அடங்கி மண்டியிட்டன. திணைக் கதிரை தின்ன பசியோடு வந்த யானை கூட கெரில்லையைக் காத்து நின்ற பெண்ணின் குறிஞ்சிப் பண்ணை கேட்டு மயங்கி பசியையும் மறந்து திணையை உண்ணாமல் நின்றது. கண்ணன் ஊதிய குழலிசைக்குப் பசுக்கள் வசப்பட்டன. இனிய இசையைக் கேட்டு அசுணமா இன்புற்று மயங்கி நிற்கும். இன்னாத இசையாகிய பறையொலியைக் கேட்டு மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்துவிடும் என்ற செய்தியும் அசுணமா இசையின் வயப்படும் தன்மையை உறுதிப்படுத்துகின்றது.

வண்டிமாடும், ஏற்றக்காளைகளும் கூட தெம்மாங்கு ஏற்றப்பாட்டு முதலிய இசைப் பாக்களை கேட்டுத் தங்கள் வேலையை வருத்தம் இல்லாமல் செய்வதும் இசையின் பெருமைக்கு எடுத்துக்காட்டே. அன்னையின் தாலாட்டைக் கேட்டு குழந்தைகள் அழுகை ஓய்ந்து உறங்குகின்றன. நோய் கண்டு வருந்துகின்றவர்களும் இசையால் நோய் நீங்கிக் குணம் அடைவர் என்ற செய்தியும் இசையின் பெருமையே.

"காட்டில் விலங்கறியும் கைக் குழந்தை
தானறியும்
பாட்டின் சுவையதனை பாம்பறியும்"

இறைவனே இசையின் வடிவமாய் இருப்பவன் இசையை விரும்புபவன், இசையை கேட்டு மகிழும் ஆர்வத்தால் தான் கம்பளர், அசுவதரர் என்ற இசைவல்ல கந்தருவர் இருவரைத் தன் காதுகளில் குழைகளாக வைத்துக் கொண்டுள்ளார். இசையை விரும்பும் இறைவனை ஆழ்வார்களும், நாயன்மார்களும் இசையாலேயே பாடி பேறு பெற்றுள்ளனர். பழங்காலத்திலேயே தமிழர்கள் முத்தமிழைச் சங்கங்கள் வைத்து ஆய்ந்தனர். இயற்றமிழ், நாடகத்தமிழ் இவற்றைப் போலவே இசைத் தமிழும் ஆராயப்பட்டது. இசைப்பயிற்சியும் சிறந்து விளங்கியது. இசைவாணர் பலர் இசைக்கலையை வளர்த்தனர். பல நூல்களை யாத்தனர்.

இசையை இசைப்பதற்கும், இசைக்கு மேலும் செறிவூட்டவும் பலவகைக் கருவிகள் துணைக்கருவிகளாகப் பயன்படுத்தப் பெற்றன. இசைக்குத் துணைக் கருவிகளாக இருந்த அக்கருவிகளே இசைக்கருவிகள். இசையில் பல புதிய பாணிகள் தோன்றியதே இசைக் கருவிகளால் தான் என்றால் மிகையாகாது. கோயில்களில் இறைவழிபாட்டில் முக்கியமாக இடம் பெறும் இசை இசைக்கருவிகளின் துணையால் கேட்போரை வயப்படுத்தியுள்ளது.

500 இசைக்கருவிகளுக்கும் மேலாக இந்தியாவில் இருக்கின்றனவாம். இவற்றில் நம் தமிழ்நாட்டு நூல்களில் கூறப்படுவன. அவை யொழிய வழக்கில் உள்ளன. இவையெல்லாம் ஏறக்குறைய 250 இசைக்கருவிகள் என்று அறிகிறோம். இத்தகைய இசைக்கருவிகளை இசைக்கும் தரத்திற்கும் ஏற்ப வகைப்படுத்தியது தமிழரின் தனிச் சிறப்பு என்றே கூற வேண்டும். தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சற்கருவி என நான்கு வகையாகவும் மிடற்றுக் கருவியும் சேர்த்து 5 எனவும் வகைப் படுத்தியுள்ளனர். இக்கருவிகளைப் பற்றிய செய்திகளையும் விளக்கங்களையும் பஞ்சமர பிலும் அதன் உரையிலும் பார்க்கக் காணலாம். சிலப்பதிகாரத்தின் உரையாசிரியராகிய அடி யார்க்கு நல்லார் இசைக்கருவிகளான யாழ், குழல், தண்ணுமை முதலிய கருவிகளின் விளக்கங்களையும் தெளிவாகக் கூறியுள்ளார்.

நரம்புக் கருவியாகிய யாழும், துளைக் கருவியாகிய குழலும் தனித்து இருந்து இசையை அளிக்கும் தனிப் பெருமை கொண்டவை.

"குழலினிது யாழினிது என்பார் தம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்"

என்றார் வள்ளுவப் பெருந்தகை. தாளம் - லயம் அதாவது ஒரு நிலையில் தம்மை நிலைப்படுத்தும் தன்மை இசையைப் பாடும் பொழுது அந்த இசைக்குரிய காலப் பிரமாணங்களை நிர்ணயிப்பது தாளமேயாகும். அந்தத் தாளம் முறை மாறினால் இசை மாறும். அதாவது இசை கெடும். எனவே இசைக்குத் தாளம் முக்கியமானது தாளத்தை உயிரென்றே இசை அறிஞர்கள் கூறினர்.

தோல் போர்த்தப்பட்ட கருவிகள் தோற்கருவிகள். இசையின் உயிராக கருதப் படும் தோற்கருவிகள் பயன்பட்ட வகைகள் பல. அவற்றை நாம் ஆய்ந்து அறியும் பொழுது செய்தி அறிவிக்கவும் தோற் கருவிகள் பயன்பட்டன எனத் தெரிகின்றது. தந்தி மூலம் செய்தி அனுப்பும் முறையை கண்டுபிடிப்பதற்கு முன்பே மனிதன் மிக விரைந்து ஓடும் மனிதனைவிட, குதிரையை விட, ஒலி இன்னும் மிக விரைந்து செல்லும் தன்மையுடையது என்பதை அறிந்திருந்தான். பறை அல்லது டாம் இவற்றில் அடிக்கும் குறியீடுகள் (Codes) மூலம் செய்திகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்பினர். ஒவ்வொரு குறியீட்டைக் குறிக்கவும் ஒவ்வொருவகையாக அடித்தனர். வெகுதொலைவில் உள்ள மலையுச்சியில் ஒருவன் இவ்வாறு பறை யறைந்து செய்தி அறிவிப்பான். அடுத்த மலையிலுள்ளவன் அதைக் கேட்டு அவனுக்கு மறுமொழியாக குறியீட்டு முறையில் பதில்ப் பறை அறைவான். அடுத்த மலையில் உள்ள வனுக்கு அதே போல் செய்தினை குறியீட்டின் மூலம் அனுப்புவான். இவ்வாறு தொடர்ந்து அனுப்பப்படும் செய்தி பல நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள மக்களை சென்றடைந்தது.

இசைக்கு உதவியாக இசை நிகழ்ச்சி களில் இக்கருவிகள் பயன்பட்டன. கோயில் களில் இறைவழிபாடு நடைபெறும் போது ஒரு மாட்டின் முதுகில், யானையின் முதுகில் நாலு சக்கர வண்டியில் 'நகரா' என்ற கருவியை வைத்து ஒரு பையன் அதை முழங்கிச் செல்லு வான். தொடர்ந்து இறைவன் பவனி வருவார். இறைவனை வழிபட வாசலில் நீர் தெளித்து கோலம் போட்டுத் தேங்காய் பழத்துடன் தயா ராய் இருக்கும் மக்கள் இந்நகரா ஒலியைக் கேட்டு இறைவன் பவனி வருதலை அறிந்து

வெளிவருவர். முறைப்படி வழிபட்டு அருள் பெறுவர். போர்ப்பறைகளாகவும் சில தோற் கருவிகள் பயன்பட்டன. போர் நிகழப் போவதை அறிவிக்க, வீரர்களை போரில் கலந்து கொள் ளுமாறு அழைத்து ஏவ, போர் நிறுத்தத்தை அறிவிக்க இப்படிப் பல வகைகளில் போர்க் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டன.

அரசாணையை மக்களுக்கு இவை அறிவிக்கும் வெள்ளம் பெருகிவருதல், அதைத் தடுக்க ஆட்கள் தேவை என்பன போன்ற செய்திகளையும், சாவைப்பற்றிய செய்திகளும், சொல்லப்பட்டன. துக்கச் செய்தியொன்று அறிவிக்க அடிக்கப்படும் ஒலியே ஒரு வகை யாக இருக்கும். அவ்வகை ஒலியைக் கேட்ட மக்கள் செய்தி அறிந்து அந்த இல்லத்திற்கச் சென்று துக்கத்தால் செயலற்று இருப்பவர் களை ஆறுதல் கூறித் தேற்றுவர். உடனிருந்து மற்றவற்றையும் கவனித்து உதவுவர். இவை யெல்லாம் நம் பண்பாட்டை அறிவிக்க உதவு வதை நாம் குறித்தே ஆக வேண்டும்.

இந்த வகையெல்லாம் பண்டைய மக்களால் வளர்ச்சி பெற்ற பயன்படுத்தப்பட்ட தோற்கருவிகளில் கையால் முழங்கப்படுபவை ஒருவகை. குச்சிகள் கொண்டு தாக்கி முழக்கப்படுபவை மற்றொருவகை. டமாரம் போன்றவை கையாலும் குச்சிகள் கொண்டும் முழங்கப்படுபவை வேறொருவகை. தவில் போன்றவை ஒருபக்கம் அடித்துத் தாக்கு வதாலும் மறுபக்கம் தடவி உராய்வதாலும் முழங்குவன ஒருவகை. பெருமாள் மாடு வாத்தியம் போன்றவை இந்தப் பலவகையில் முழங்கப்படும் தோற்கருவிகளை ஒரு முக முடைய கருவிகள் என்றும் மற்றவை பல முகமுடைய கருவிகள் என்றும் பிரித்துக் கூறலாம். உடுக்கை, பஞ்சமுக வாத்தியம் போன்று தோல் மட்டும் பரப்பப்பட்ட சமமான முகமுடைய (Plain face) கருவிகள் என்றும் மூன்று வளையங்களாக அடுக்கித் தோல் பரப்பப்பட்ட மையமுடைய வெவ்வேறு வகை யான முகமுடைய (Complex faces) கருவிகள் என்றும் அவற்றை வகைப்படுத்தலாம். நூல்களிலும், வழக்காற்றிலுமாக நமக்கு கிடைத்த தோற்கருவிகள் பல அவை:

அடக்கம், அந்தரி, அமுத குண்டலி, அரிப்பறை, ஆகுளி ஆமந்திகை, ஆவஞ்சி, உடல் உடுக்கை, உறுமி, எல்லரி, ஏறங்கோள், ஒரு வாய்க்கோதை, கஞ்சிரா, கண்விடுதூம்பு. கணப்பறை, கண்டிகை, கரடிகை, கல்லல், கல்லகு, கல்லவடத்திரள் கொட்டு, கோட் பாறை, சந்திரவளையம், டமாரம், தக்கை, தகுணித்தம், தட்டை, தடாரி, தண்டோல், துந்துபி, தூரியம், தொண்டகச்சிறுபறை, தோலக், நகரி, நிசானம், படவம், படலிகை, படம்பை, பதலை, பறை, பாகம், பூமாடு வாத்தியம், பெரும்பறை, பெல்ஜியக் கண்ணாடி, மத்தளம், மிருதங்கம், முரசு, முருகு, முழவு, மேளம், மொந்தை, விரலேறு, ஜமலிகா என்பனவாகும். 'பஞ்சமரபு' என்ற இசை நூலிலும், உரையிலுமாக மேற் கூறிய கருவிகளில் 34 கருவிகள் கூறப்பெற்றுள்ளன. இவற்றின் வகை, முறைமை இவற்றிற்குரிய தெய்வம் ஆகிய செய்திகளும் அதில் கூறப் பெற்றுள்ளன.

தோற்கருவிகளுள் முக்கியமாக 'முரசு' பயன்பட்டு வந்த செய்திகளைப் பண்டைய இலக்கியங்களில் பரவலாகக் காணலாம். அரசனுடைய வெற்றிச் சின்னங்களில் முரசு ஒன்றாகும். கொடியை எப்படிப் பாதுகாப் பார்களோ அப்படியே முரசையும் பாதுகாப்பது வழக்கமாகும். அரண்மனையில் தெய்வ வழிபாட்டுக்குரிய பெருமையுடன் தனியிடத்தே கட்டிலமைத்து முரசை வைத்து வழிபட்டு வந்தார்கள். இந்த முரசு வைத்து வழிபடும் கட்டில் முரசுக்கட்டில் எனப் பெற்றது. முரசுகட்டிலுக்கு எந்த விதமான அவமரி யாதையும் செய்யக் கூடாது என்பதும் செய்ப வர் கடும் தண்டனைக்கு ஆளாவர் என்ற செய் தியும் புற நானூற்றில் மோசிகீரனார் பாடலிலிருந்து தெரிய வருகிறது. பகை நாட்டரசனை வென்று அவன் காவல் மரத்தை வெட்டி அதனின்றும் செய்த முரசை வெற்றி முரசென்று கூறுவார்கள். எட்டு வகையான

மங்கலப் பொருள்களில் ஒன்றாகவும் தலைவனின் தசாங்கங்களில் ஒன்றாகவும் முரசு விளங்குகின்றது. தரும புத்திரனின் கொடியின் சின்னமே முரசுதான். இசைக் கருவிகளை கொடியில் சின்னமாக பண்டைக் காலத்தில மைப்பது வழக்கம் போலும் இராவணனின் கொடியின் சின்னம் வீணை. வெற்றியை முழக்க முரசு முழங்குவது மரபு.

"வெற்றி எட்டுத்திக்கு மெட்டக் கொட்டு முரசே
வீரம் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே"
என முழங்குகிறார் பாரதியார்.

திருச்செந்தூரில் இறைவனுக்கு உச்சிக் காலக் பூசை முடிந்த பின்பே கட்டப்பொம்மன் உணவு கொள்வது வழக்கமாம். திருச்செந்தூரி லிருந்து பாஞ்சாலங்குறிஞ்சி வரை பல இடங் களில் மேடையமைத்து முரசமைத்து, பூசை முடிந்தவுடன் முரசை அறையைச் செய்து விரைவில் செய்தியறிந்தானாம். பிறகுதான் உணவு உண்டதாகக் கூறப்படுகிறது. திரு மலைநாயக்கரும், ஸ்ரீவில்லி புத்தூரிலிருந்து மதுரைக்கு இவ்வாறு முரசு மண்டபம் அமைத்து ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாளுக்குப் பூசை முடிந்த பிறகு செய்தியை அறிந்தே உணவு கொண்டதாகவும் தெரிகிறது. நகரா மண்டபம் என்பது இந்த வகையான் மண்டபம் போலும்.

ஊழிக்காலத்தில் இறைவன் ஆடிய தாண்டவத்தை ஊழிக்கூத்து என்பர். அவ்விதம் கூத்தாடிய போது இறைவன் தம் கரத்துள்ள டமருகத்தை ஒலித்தாராம். அந்த டமருகத்தி லிருந்து பிறந்த ஒலியிலிருந்தே பின்னர் உயிரினங்கள் தோன்றின என்று புராணங்கள் கூறும் இதிலிருந்து உலகம் தோன்றிய போதே உடுக்கையும் தோன்றியது என்பது தெரிகிறது. உடுக்கை என்பதே முதற் தோற்கருவியோ என்பது அறிஞர்கள் ஆய்வுக்குரியது.

இறைவன் தாண்டவம் புரிகையில் நந்தித் தேவர் மத்தளம் வாசித்ததாக ஒரு வழக்கம் உண்டு.

"குடமுழா நந்தீசனை வாசகனாக் கொண்டார்"

என்கிறது தேவாரம். எனவே இசைக் கும் நாட்டியத்துக்கும் மத்தளம் துணைக்கருவி என்பது புலனாகிறது. உடுக்கை மத்தளம் போன்ற பழங்கருவிகள் நாளடைவில் பல வகைத் தோற்கருவிகளாக வளர்ச்சியடைந்து மக்களின் வாழ்க்கையில் பல வகையில் தொடர்பு கொண்டுள்ளன என்றுகூட கருத இட முண்டு என்பதும் ஆய்வுக்குரியது.

எல்லாமே முன்பு கூறப்பட்ட விடயங்கள் தான்
ஆனால் யாருமே அவற்றைக் கேட்காததனாலேயே
மீண்டும் பின்னாலே சென்று முதலிலிருந்து அவற்றை
கூற வேண்டியுள்ளது

குழந்தை இலக்கியம்

நா. பாலகிருஷ்ணன்
"தமிழ்" ஆசிரியர்

சமூகத்தின் தவிர்க்க முடியாத தேவை களை ஒட்டியே இலக்கியங்கள் தோன்று கின்றன. மக்களின் தேவை விருப்பு, ஆர்வம் என்பன ஏதோ ஒரு வகையில் புதிய புதிய இலக்கிய வடிவங்களைத் தோற்றுவிக்கின்றன. இந்த வகையில் பண்டுதொட்டே பயின்று வந்த இலக்கிய வகைகளுள் குழந்தை இலக்கியமும் ஒன்றாகும் குழந்தை இலக்கியம் தமிழில் எப்போது தோன்றியது என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. தமிழில் குழந்தை இலக்கியம் தொல்காப்பியர் காலத்திலேயே வழங்கி வந்துள்ளது என்பர்.

தொல்காப்பிய பொருள் அதிகாரத்தில் வரும்

"பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருண்மர பில்லாப்
பொய்ம் மொழியானும்
பொருளோடு புணர்ந்த
நகைமொழி யானுமென்
நுரை வகை நடையே
நான்கென மொழிய"

என்ற சூத்திரத்திற்கு உரை எழுதிய பேராசிரியர் பொருண் மரபில்லாப் பொய் மொழியானும் என்னும் ஒரு தொடருக்கு பின் வருமாறு உரை கூறுவார்.

''ஒரு பொருளின்றிப் பொய்ப்படத் தொடர்ந்து சொல்லுவன. அவை ஓர் யானை யும் குரீஅயும் தம்முள்நட்பாடி இன்னுழிச் சென்று இன்னவாறு செய்தனவென்று அவற்றுக் கியையாப் பொய்படத் தொடர் நிலையான் ஒருவனுழை ஒருவன் கற்று வரலாற்று முறையான்" வருகின்றன.

இவ்வுரைப் பகுதியை ஆதாரமாகக் கொண்டு தொல்காப்பியர் காலத்திலே குழந் தைக் கதைகள் வழங்கி வருகின்றன. என்று கூறுவர். தமிழில் குழந்தை இலக்கியம், சிறுவர் இலக்கியம் என்னும் தொடர்கள் ஒரு பொரு ளையே குறித்து நிற்கின்றன. மேலைத்தேயங் கள் போலத் தமிழில் குழந்தை இலக்கியம் நுண்மையாகப் பகுக்கப்பட்டு ஆக்கவோ ஆரா யவோ படவில்லை ''தமிழில் சிறுவர் இலக் கியம் என்று சிறப்பாக குறிப்பிடக்கூடியது ஒப்பீட்டு அளவில் மிகக் குறைவு" என்று பேராசிரியர் கைலாசபதி குறிப்பிட்டு இருப்பது மனங்கொள்ளத்தக்கது. தொல்காப்பியர் காலத்திலேயே குழந்தை இலக்கியம் தமிழில் வழங்கி வந்தது என்பதை பலரும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தமிழில் குழந்தை இலக்கியம் என்று பெரும்பாலோர் குழந்தைக் கவிதைகளையே கருதுவர். இலக்கியம் எனில் கவிதைதான் என்ற இறுக்கமான பாரம்பரியத்தின் விளை பொருளாக இது அமைந்து இருக்கலாம். பொது வாக குழந்தை இலக்கியம் என்னும் போது குழந்தைக் கவிதைகள், குழந்தைக் கதைகள், குழந்தைகளுக்கான நாவல்கள் என்பன யாவும் அடங்கும்.

'குழந்தை இலக்கிய வகைக்குள் குழந்தைகளுக்கான சினிமாக்கள், குழந்தை களுக்கான வானொலி நிகழ்ச்சிகள், குழந்தை களுக்கான சித்திரங்கள் என்பனவற்றையும் சிலர் அடக்கி ஆராய்வார்.

குழந்தை இலக்கிய வளர்ச்சியில் சினிமா, வானொலி, பத்திரிகைகள் என்பன குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கின்றன என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

தமிழ் மொழியில் முதன் முதலிலே தோன்றிய இலக்கியம் கவிதையே அதுவும்

வாய்மொழியாகத் தோன்றியது என்பது இன்று ஐயத்துக்கு இடம் இன்றி நிறுவப்பட்டது. குழந்தை மனம் இசையால் மிக இலகுவாக ஈர்க்கப்படும். அழுகின்ற குழந்தையை தாய் தாலாட்டி தூங்க வைப்பதை நாம் இன்றும் காண்கிறோம். இசையால் இசைவுபட்ட குழந்தை காலப்போக்கில் இலகுவான ஒத்திசைவு உள்ள பாடல்களை வாய்விட்டு பாடுவதையும் நாம் அவதானிக்கலாம். குழந்தைகளுக்கான பெரியவர்களால் பாடப்பட்ட பாடல்களும், குழந்தைகளே கூடிக்குலவி பாடுவதுமான இருவகையான குழந்தைப் பாடல்கள் நாட்டார் வழக்கில் வழங்கி வருகின்றன. இலகுவான மென்மையான இழுமென் ஓசையுள்ள பாடல்களை குழந்தைகள் மிக இலகுவாக பாடத் தொடங்கி விடுவர்.

தமிழ் இலக்கியப்பரப்பில் தோன்றிய குழந்தைப் பாடல்களும் நாடோடிப் பாடல்களே நாட்டுப்புற அல்லது நாட்டார் இலக்கிய அடியாக மேலே கிளம்பிய எழுத்து இலக்கியங்களையும் குழந்தைகளுக்குரியன முதியோருக்குரியன என்று பகுப்பாய்வு செய்யக்கூடிய வகையிலேயே அமைந்துள்ளன.

நமது கல்விப் பாரம்பரியத்திலே இரு வகையான கல்வி மரபுகள் உண்டு. ஒன்று மரபுரீதியான திண்ணைப்பள்ளிக்கூட மரபு, மற்றையது நிறுவனரீதியான பாடசாலைகள் இந்த இரண்டு அமைப்புக்களுக்குள்ளும் சிறுவர்கள் தம் ஆரம்பக் கல்வியை கற்று வந்தனர். இவ்விரண்டு அமைப்புக்குள்ளும் சிறுவர்களுக்கு ஆரம்பத்தில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, வெற்றிவேற்கை போன்ற நீதி நூல்களே போதிக்கப்பட்டன. சிறுவர்களுக்கு பொருள் விளங்காத போதும் இவற்றின் புறத் தோற்றம் பற்றி இவை சிறுவர் இலக்கியம் என்றே அழைக்கப்பட்டன. தமிழில் கவிதை, பாடல், செய்யுள் என்னும் பதப் பிரயோகங்களும் ஒரு பொருளையே கருதி வந்துள்ளமையையும் அவதானிக்கலாம். சிறுவர்களுக்கு மனப்பயிற்சியை ஏற்படுத்தும் வகையில் ஔவையாரால் அருளிச் செய்யப்பட்ட ஆத்திசூடியை ஆற்றல் வாய்ந்த மகாகவியான பாரதியார் கூடப் பின்பற்றியமை கவனிக்கத்தக்கது. தமிழ் இலக்கிய வரலாற்றில் முதன் முதலில் தோன்றிய குழந்தை இலக்கியங்கள் மேற்காட்டியவையே என்று பூவண்ணன், டாக்டர் முத்துச் சண்முகன் முதலியோர் சுட்டிக் காட்டி உள்ளனர்.

குழந்தைக் கவிதைகளை வசதி கருதி நாம் இரண்டு பெரும் பிரிவாகப் பிரித்து பார்க்கலாம். ஒன்று தனிப்பாடல்கள் மற்றையது கதைப்பாடல்கள் இந்த இரண்டு வகையுள்ளும் தனிப்பாடல்களே பெருமளவில் வெளிவந்துள்ளன. இவற்றுள் குழந்தைகள் காணும் காட்சிகள், நிகழ்ச்சிகள் விருப்பு வெறுப்பு என்பன அடங்குகின்றன.

தமிழ் கூறும் நல்லுலகிலே முதன் முயற்சியாக சிறுவர் பாடல் என்ற உணர்வோடு 1935ம் ஆண்டு க.ச. அருணந்தி அவர்களால் தொகுக்கப்பட்ட பிள்ளைப்பாட்டினையே குறிப்பிட வேண்டும் பாடசாலைகளின் தேவைகளைக் கருத்திற் கொண்டு அருணந்தி அவர்களால் தொகுக்கப்பட்ட பிள்ளைப்பாட்டு மூலம் பல நல்ல குழந்தைக் கவிஞர்கள் உருவாகினர். நவாலியூர் சோமசுந்தரப்புலவர், பிதாம்பரன், பஞ்சாட்சர ஐயர், ஜே. எல் ஆழ்வாப்பிள்ளை, க. சின்னத்தம்பி முதலியோர் குறிப்பிடக்கூடியவர்கள். இக் குழந்தைக் கவிஞர்கள் அனைவரும் ஆசிரியர்களாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

குழந்தை இலக்கிய வரலாற்று க.ச. அருணந்தி அவர்களால் தொகுக்கப்பட்ட பிள்ளைப்பாட்டிற்கு தனியான ஒரு முக்கியத்துவம் உண்டு.

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கை எண்ணற்ற குழந்தைக் கவிஞர்களை ஈன்றெடுத்து. அந்த கவிஞர்களின் குழந்தைப் பாடல்களை அப்போதே ஒன்று திரட்டி கே. எஸ். அருணந்தி என்பவர் பிள்ளைப்பாட்டு என்ற பெயரில் வெளியிட்டார்.

குழந்தை இலக்கியம் கொடிகட்டிப் பறக்கும் நம் நாட்டில் 1970 இல் தான் அப்படிப்பட்ட குழந்தைக் கவிதைத் தொகுதி வெளிவந் துள்ளது. என்று பூவண்ணன் குறிப்பிடுவது மனங் கொள்ளத்தக்கது.

ஈழத்து குழந்தை கவிஞர்களுள் சோமசுந்தரப் புலவர், மு. நல்லதம்பி, அல்வை யூர் செல்லையா, பண்டிதர் க. வீரகத்தி, இ. நாகராஜன், வேந்தனார், அம்பிகைபாகன், சத்தியசீலன் அமிர்தநாதன், ஸீபைர், சரயாகையூம், கோசுதா முதலியோர் குறிப்பிடக் கூடியவர்கள்.

தமிழ்நாட்டுக் குழந்தைக் கவிஞர் களாக தமிழ் கவிதை வரலாற்றின் மையப் புள்ளியாகவும் திருப்புமுனையாகவும் அமைந்த பாரதியார் தொடங்கி அவர் பரம்பரையினரான பாரதிதாசன் , கவிமணி, கம்பதாசன், அழ. வள்ளியப்பா போன்ற நூற்றுக்கணக்கான குழந்தைக் கவிஞர்களை சுட்டிக் காட்டலாம். அழ. வள்ளியப்பாவிற்கு குழந்தைக் கவிஞர் என்ற நிலையான பெயர் அவரின் பங்களிப் பினைக் காட்டுகின்றது எனலாம்.

குழந்தைகளுக்கு பரிச்சயமான இனிய அழகிய சொற்களையும் நிகழ்ச்சிகளையும் மனங்கொண்டு எழுந்த குழந்தைக் கவிதைகள் தமிழில் பெருமளவு இல்லை என்பதை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும் ஈழத்து குழந்தைக் கவிதைகளுள் ஆடிப்பிறப்பு, கத்தரிவெருளி போன்றனவும் வேந்தனாரின் அம்மாவும், கவிஞர் செல்லையாவின் இளம்பிறையும். இ. நாகராஜனின் பட்டுச் சட்டையும், க. வீரகத்தி யின் பலூனும் அவை பிறந்த நாட் தொடக்கம் குழந்தைகளால் படிக்கப்படுவதையும் இலக்கிய விமர்சகர்களால் பாராட்டப்படுவதையும் அவ தானிக்கலாம்.

வகை மாதிரிக்கு கவிஞர் செல்லையா கவிதை

அம்மா வெளியே வா அம்மா
அழகாய் மேலே பாரம்மா
சும்மா இருந்த சந்திரனை
துண்டாய் வெட்டினதாரம்மா

என்ற இளம்பிறைப் பாடலைச் சுட்டிக் காட்டலாம்.

குழந்தைக் கவிதைகளுள் இன்னொரு வகையானவை கதைப்பாடல்கள் ஆகும். பெரும்பாலான கதைப்பாடல்கள் குழந்தை களின் மனதில் நீதியை நிலைநிறுத்துவன வாகவே அமைந்துள்ளன. ஆர்வத்துடன் படிப்பதையும் கேட்பதையும் காணலாம். கதைப் பாடல்களில் கருத்துக்களிலும் பார்க்க நிகழ்ச்சி களும் காட்சி வர்ணனைகளுமே இயல்பாய் இடம் பெற வேண்டும் என்று பேராசிரியர் கைலாசபதி குறிப்பிட்டுள்ளார். இந்தவகையில் தாடி அறுந்த வேடன், பவளக்கொடி, கொழுக் கட்டைப் பொன்னன் போன்ற கதைப்பாடல் களைச் சிறப்பானவை எனக் குறிப்பிடலாம். பிள்ளைப்பாட்டில் இடம்பெறும் கரவெட்டி க. சின்னத்தம்பி இயற்றிய

தேசஞ் சுற்றிப் பார்ப்பதற்கே
சென்ற தொரு சீமான்
செத்தது போல் கிடந்ததொரு
சிறு குரங்கைக் கண்டான்
சிறு குரங்கைக் கண்டான்

என்று தொடங்கும் கதைப்பாடல் குண்டுடுக்கி, குடுகுடுக்கி என்ற குறவஞ்சிப் பாட்டின் இசை தழுவிச் சிறப்பாக அமைந் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குழந்தைப் பாடல்கள் அழகான பொருத்தமான பாடல்களுடன் பெரிய எழுத்துக் களில் அச்சிட வேண்டிய அவசியமுடையவை. பாட்டுக்கு ஏற்ற படமும், இசையும் குழந்தை களை இலகுவில் கவர்ந்து குதூகலிக்கச் செய்யும்.

குழந்தைகளுக்கான கதைகள் தமிழில் மிக அருந்தலாகவே காணப்படுகின்றன. ஈழத்தில் குழந்தைக் கதைகள் எழுதியவர் களாக ஆறுமுகநாவலர் குமாரசாமிப்புலவர். அழகசுந்தரதேசிகர், சேர் நடராஜன் முதலியோ ரைச் சுட்டிக் காட்டலாம். இவர்கள் எழுதிய கதைகள் பாடநூல்களின் தேவவையை ஒட்டியே அமைந்தமையால் குழந்தைகளின்

உள உணர்வுகளை எந்தளவிற்கு பாதித்தன என்பது ஆராய்வதற்குரியது. தமிழ் நாட்டில் பாரதியாரில் இருந்து பூவண்ணன் வரை குழந்தைக் கதைகள் எழுதியுள்ளனர். குழந் தைக்கதை எழுத்தாளர்கள் பூவண்ணனுக்கு குறிப்பிடக்கூடிய முக்கியத்துவம் உண்டு. தமிழில் பெரும்பாலான குழந்தைக் கதைகள், குழந்தை, சிறுவர், இளைஞர் போன்ற பாகு பாடு இன்றியே எழுதப்பட்டுள்ளமையே அவ தானிக்கலாம்.

சித்திரக் கதைகள் ஈழத்தில் பெரு மளவில் வெளிவரவில்லை. குறிப்பாக தப்பி யோடிய தோழர்கள், பாடசாலைக்குச் சென்ற யானை, குரங்கின் தீர்ப்பு போன்ற விரல் விட்டு எண்ணக் கூடியனவையே வெளி வந்துள்ளன. தமிழ் நாட்டில் ஓரளவு சித்திரக் கதைகள் வெளி வந்துள்ளன. இவற்றுள் பெரும்பாலான வீரசாகசங்கள் நிரம்பியனவாகவும், விடுப்பார் வத்தை தூண்டுபவையாகவும் அதி அற்புத மாயாஜாலங்கள் பொருந்திய கதைகளாகவுமே காணப்படுகின்றன. ஒப்பீட்டு அடிப்படையில் தமிழில் சித்திரக் கதைகள் மிகமிக குறை வாகவே காணப்படுகின்றன.

குழந்தைகளுக்கான நாவல்களும் தமிழில் குறிப்பிடக் கூடிய அளவிற்கு இல்லை என்றே கருதலாம். ஈழத்தில் க. நவசோதி எழுதிய ஓடிப் போனவள் என்ற நாவலைச் சுட்டிக் காட்டலாம். குழந்தை இலக்கியம் பரப்பில் சிறுவர் நாவல்கள் சுயசரிதைகளாக அமைந்தமையையும் அவதானிக்கலாம். பத்திரிகைகளில் தொடர்ந்து வெளிவரும் பாங்கிலேயே சில நாவல்கள் இழுபட்டு போவதையும் அவதானிக்கலாம்.

குழந்தைகளுக்கான நாடகங்களும் அவ்வாறே அமைந்துள்ளன. குழந்தைகள் படிப்பதற்கும், குழந்தைகள் நடிப்பதற்கும் என்று இருவகையான நாடகங்கள் அமைந்துள்ளன. பாடநூல்களில் இடம் பெறும் நாடகங்கள் இரண்டு நிலையிலும் பயன்படுத்தப்படுவதும் கண்கூடு. சர்வதேச குழந்தைகள் ஆண்டினை ஒட்டி குழந்தை மா. சண்முகலிங்கம் தயாரித்த கூடி விளையாடு பாப்பா என்னும் நாடகம் குழந் தைகளுக்கான நாடக வரலாற்றில் குறிப்பிடக்கூடிய முக்கியத்தவம் வாய்ந்தது. லவகுசா, வீரசிவாஜி போன்ற புராணவரலாற்று நாடகங்கள் குழந்தைகளுக்காக அமைக்கப் பட்ட போதும் அவை எதிர்பார்த்த வெற்றியை பெற்றனவா என்பது ஆய்வுக்கு உரியதே.

குழந்தை இலக்கியத்தை செழுமைப் படுத்த இன்று ஏற்ற கருவியாக பயன்படுவன பத்திரிகைகளும், வானொலியும், தொலைக் காட்சியுமே எனலாம். குழந்தைகளுக் கென்றே வெளிவரும் பத்திரிகைகள் மேல் நாடுகளில் மிகமிக அதிகமாகும். தமிழில் அம்புலிமாமா, பாலமித்திரா போன்றவை விதந்தோதக் கூடியவை ஈழத்தில் பொதுவாக இலக்கியப் பத்திரிகைகள் போலவே பல சிறுவர் சஞ்சிகை களும் தோன்றி மறைந்துள்ளன. கண்ணன், கரும்பு, கண்மணி முதலியவை இவ்வகையுள் அடங்கக்கூடியவை.

தமிழில் குழந்தை இலக்கியம் சிறப்புற அமைய அவர்களின் உள்ளம், வயது, சூழல் என்பவற்றை விஞ்ஞான ரீதியாக அறிந்து, அளந்து கவிதை, கதை, நாடகம் என்பன படைக்கப்பட வேண்டும்.

மிக அற்புதமான விடயங்களைப் பற்றி மிக அதிகமாக அறிந்து கொள்பவனே நிபுணன் ஆகின்றான்



திரு. மகாராஜா மகாவேந்தன்

(உடுவில்-சுவிஸ்) பழைய மாணவர்

பதினேழு இலட்சத்து எழுபைத்தையாயிரம் கொடுத்து பாடசாலைக்கு 10பரப்பு காணி பெற்றுத்தந்த வள்ளல்

தாய்மையே இறைவனின் முதல் வடிவம்

திருமதி நவநீதகிருஷ்ணன்
ஆசிரியை

"தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்"

உயிர்களைப் பக்குவப்படுத்தி முத்தியை வழங்கும் நிலையில் இறைவன் முதலில் எடுக்கும் வடிவம் தாய் வடிவமாகும். அதாவது குழந்தையைப் பெற்றுப் பாலூட்டித் தாலாட்டித் தொட்டிலில் வளர்த்தி பின்பு சிறிது வளர்ந்த அன்று விளையாட விட்டுப் பின்நின்று பார்த்து மகிழ்பவள் தாய். எவை எவை எப்பொழுது தேவை என அறிந்து கொடுத்து வளர்ப்பது மட்டுமன்றி அமைதியாக உறங்க வைப்பவளும் தாய். இதே நிலையிலேயே இறைவனும் தாயாக நின்று ஆன்ம கோடிகளைப் பேணி எடுத்து பிறவிப் பிணியில் இருந்து விடுவிக்கின்றான் என்பது முடிவு. இறைநிலையில் இது ஓர் உயர்ந்த தத்துவமாகும்.

உலக வாழ்க்கைக்கு ஜீவ ஒளியாகப் பெண்குலமே அமைய வேண்டும். தர்மம், சத்தியம், தாய்மை, பொறுமை, கருணை கற்பு தன்னம்பிக்கை, தன்னடக்கம் ஆகியவை அனைத்தும் பெண்குலத்துக்குப் பெருமை தருவன. பிறந்த இடத்துக்கும் புகுந்த இடத்துக்கும் பெருமையைத் தேடிக் கொடுக்கும் கடமை பெண்களுக்கே உண்டு.

தாய்மைக்கே தனியுரிமை கொடுத்துப் பேணும் சமயம் இந்துமதம். இதனாலேயே சாக்தம் எனும் ஓர் பிரிவும் ஏற்பட்டது. சைவம் அம்மை அப்பனாகப் பேசி நிற்க, சாக்தம் எல்லாம் அம்மையின் உறவாகவே இணைந்து விடுகின்றது.

தாய்மையருள் மீள்கண் பார்வை போல் இரட்சிப்பது. அருளே உமையாகவும் அறிவே சிவமாகவும் இவ்வுலகை இயக்கி நிற்கும் நிலையைச் சைவத்திருமுறைகளில் பரக்கக் காணலாம்.

ஐந்தொழில் இயக்கத்தை ஏற்படுத்தும் திருக்கூத்துக்கு தாளம் போடுபவள் பராசக்தி அம்மையின் தாள லயம் குன்றினால் அப்பனின் தாண்டவம் தடுமாறி உலகே தாறுமாறாகி விடும். இதனால் எம்பெருமான் அம்மையின் பக்கம் நோக்கி அமைதியாக ஆடுகின்றான். சங்க காலத்திலும் பெண்மக்கள் திருவிளக் கேற்றி, மலர் தூவி, நெல் தூவி கோலமிட்டு வழிபட்டமைக்குச் சான்று உள்ளன. அக நானூறில் தை நீராடி பாவை நோன்பு அனுட்டித்தும், குரவைக் கூத்தாடி முருகனை பூசித்தும் வழிபட்டுள்ளனர்.

சைவத்தின் பெருமையிலும் வளர்ச்சியிலும் பெண்கள் பெரும் பங்கு பெற்றுள்ளமையை எடுத்துக் காட்டுமுகமாகப் பூம்பாவையை எழுப்பிய இடத்திலும் ஞானசம்பந்தர் வேண்டுதலைக் காண்கின்றோம்.

மேலும் பக்தி நெறியிலும் பெண்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர். மணிவாசகர் கூற்றொன்றில் கன்னியர்கள் தமக்கு கிடைக்கப் பெறும் கணவன்மார் சில தொண்டர்களாகவே அமைய வேண்டுமென்று பிரார்த்தனை செய்கின்றனர். எடுத்துக்காட்டாக காரைக் காலம்மையார் வாழ்வில் இறைபக்தியுடன் செயற்பட்டதால் கண்வனே "தெய்வம்" என அம்மையை அழைத்து மதிக்கும் நிலையை அடைந்தார். மங்கயற்கரசியாரும் இவ்வழியில் நின்று நாட்டை மேலோங்கச் செய்தவர்.

தம்மைப்பேணி, தம் கணவனைப் பேணி சைவத்தைப் பேணி, ஆத்மீகத்தை வளர்த்தவர்கள் பெண்கள், பெண் பிறந்தார் யாவரும் இத்தகைய பணிகளிலும் முன் நின்று நாட்டை நலமடையச் செய்ய வேண்டும்.

ORIGINS OF FOOTBALL

Mr. M. D. Thambirajah
Retd. National Soccer Coach
Ministry of Sports - Sri Lanka

To know and appreciate the growth and development of football in Sri Lanka, it is necessary that one should know the history of the game itself.

A few countries have a claim to the origins of the gamely, China, Greece, Italy and England. As early as 200 Bc, the Chinese played a game with a leather ball. Using both feet mostly to keep the object under control. The Greeks enjoyed a similar sport which was called Episkyres while the Romans used an improvised ball in a game called Harpustam However, it is medieval England that gave the sport a methodical and meaningful out look. Though using the in flated bladder of an ox as the sphere to begin with. In fact Association foot ball as it is now called, had, had its beginnings in England.

With the naval superiority of England in all its splendour and the English domination of the seven seas in full fury, the British sailors carried the game of football to the lands they conquered. With almost national farvour. A look at the origins of football in Countries that today. Show world class skills at the game, reveals the English influence at the source of development. It is the British who introduced the game to the America. Europe and Asia, through their battalions regiments and brigades.

NORTHERN PROVINCE

Almost at the same time when British planters, technocrats and civil servicemen were spreading the gospel of foot ball in the western. Central and southern provinces the north too, came under their spell with a flourish of football activity amongst the local populace. School leavers and young Government servants were grouping together to form football clubs, so early as the mid 30 s in fact on 8th November 1939 to be exact the Jaffna. Fa was formed with Mr. W.G. Spener, District judge, as Chairman. This historic meeting was held at the YMCA hall in Jaffna and Mr. R.E. Rajanayagam was elected Hony Secretary. The original football clubs that were members of this Association were the YMCA. Police Sc, St. Anthony's Sc, Bosco Sc, Karainagar Sc and Subhas Sc.

With the view of catering to other major sports in the North in addition to football, another sports body was Forman was the distinguished civil servant and Govern-

ment Agent. However it was the football section that flourished Mr. P.R. Motha an eminent educationist who headed that flourishded the football section. Organized and conducted three premier competitions. The football clubs affiliated to the Jaffna sports Association were victorious Sc YMCA Sc Gurunagar Sc. Orient Sc St. Mary's Sc. St. Nicholas Sc. Subhas Sc. Shamrock Sc. Ariyalai Sc and Madura Bhavan Sc.

Not very long after these two sports bodies were amalgamated for the betterment of sports and its young sportsmen. Meanwhile the Jaffna football Association had changed its name to the Jaffna Football League, which remains intact to this day some of the devoted and dedicated men who contributed to the growth and development of football in the North in the last decade were the late V.K. Arumu-gam, Dr. J.P.C. Phillips, E.K.Kumariah, T.Sabalingam, E.Canagalingam, A.S. Gunaratnam, and M. Jeevaratnam to name a few. The late Mr. V.K. Arumugam and Dr. J.P.C. Phillips were gluttons for work and spent both their wealth and energy for the cause of football Some of the bright stars of the North who won national recognition in the last quarter century were S. Anthonypillai, M. Francis, R. Siritharan, M. Sivaratnam, S. Vadiveswaran, Gonsales, M.Dasan and T.Mariyadas, Mr. David Thambirajah turned out to be one of our best coaches.

Football in the Northern peninsula is as football in Sri Lanka and always remained active and vibrant until the outbreak of ethnic violence in 1983

மனித மூளை மிக விநோதமானது. மனிதன் பிறந்த உடனே அது வேலை செய்யத் தொடங்கி விடுகின்றது. ஆனால் அவன் எப்போது பொது மேடையில் பேச ஆரம்பிக்கின்றானோ அப்போது மூளை வேலை செய்வதை நிறுத்தி விடுகிறது.

-டிரடன்-



புகைத்தலும் அதன் பாதிப்புக்களும்

திருமதி தாரணி விஷ்ணுகாந்தன்
விஞ்ஞான ஆசிரியை

இன்று உலகளாவிய ரீதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வரும் செயற்பாடாக புகைத்தல் விளங்குகின்றது. இது இரு வழிகளில் நடைபெறுகின்றது.

1. சிகரெட் பாவித்தல்
2. சுருட்டு பாவித்தல்

இவற்றில் 3000ற்கு மேற்பட்ட தீங்கு விளைவிக்கக்கூடிய பதார்த்தங்கள் காணப் படுகின்றன. அவற்றுள் 3 பதார்த்தங்கள் மிக அதிகமான தாக்கத்தை ஏற்படுத்த வல்லன. அவையாவன.

(1) நிகொட்டின் (Nicotin)

இதயத்துடிப்பு வேகத்தை அதிகரிப்பது எ பாவிப்பவர்களை மேலும் மேலும் பாவிக்கத்தூண்டி அடிமையாக்கக் கூடியது. அத்துடன் உடலை தளர்ச்சியடையச் செய்யவும் கூடியது. இந் நிக்கொட்டின் பல விதமான பூச்சி கொல்லிகள் தயாரிப்பில் பயன் படுத் தப் படுகின் றது என் பதும் குறிப்பிடத்தக்கது.

(2) தார்

இது புகைக்கும்போது உருவாகும் மற்றொரு பதார்த்தம் ஆகும். இது நுரையீரலை அடைந்து அதன் மேற்பரப்பில் படிவடைகின்றது. தொடர்ந்து நுரையீரல் நோய்களை உருவாக்க ஆரம்பிக்கும்.

(3) காபனோர் ஒட்சைட்டு (co)

புகைக்கும் போது உருவாகும் இவ்வாயு உடலிற்கு நச்சுத்தன்மையை ஏற்படுத்தக்கூடியது.

புகைத்தலால் நுரையீரலிற்கேற்படும் பாதிப்புக்கள்

- புகைத்தலால் உருவாகும் தார் நுரையீரல் சுவர்களில் படிவடைந்து அதன் நோய் எதிர்ப்பு சக்தியை குறைக்கின்றது. இதனால் புகைப்பிடிப்பவர்கள் அடிக்கடி நுரை யீரல் நோய்களிற்கு ஆளாகின்றனர்.
- அத்துடன் இது மிக முக்கியமான நுரையீரல் புற்றுநோயை ஏற்படுத்துகின்றது. இது உடலிற்கு மிக ஆபத்தானதுடன் இதிலிருந்து பூரணமாகக் குணமடைவதும் மிகக் கடினமனதாகும். மரணத்தை ஏற்படுத்துகின்ற புற்றுநோய்களில் நுரையீரல் புற்றுநோயே அதிகமாகக் காணப்படுகின்றது.
- இது தவிர நுரையீரலின் வளியை உள்ளிருக்கும் ஆற்றலும் தொடர்ச்சியாகக் குறைவடைந்து உடலில் ஒட்சிசன் அளவு குறைவடையத் தொடங்கும்

குருதிச் சுற்றோட்டத் தொகுதியில் ஏற்படும் பாதிப்பு

- இதயத்துடிப்பு வேகத்தை அதிகரிக் கின்றது. இது நாளடைவில் இதயத்தை செயலிழக்கச் செய்துவிடும்.
- காபனோர் ஒட்சைட் குருதியில் கலப்பதால் குருதியில் ஒட்சிசனை காவும் தன்மை குறைவடைகின்றது. இதனால் புகைப்பவர்கள் இலகுவில் களைப்படையக் கூடிய நிலையை அடைவர்.
- புகைத்தலிலுள்ள வேறு பதார்த்தங்கள் குருதிக்கலன்களில் அடைப்பை ஏற்படுத்துவ தால் சில வேளைகளில் கை, கால் முதலான

அவயவங்களை இழக்க வேண்டிய நிலைமை யும் ஏற்படுகின்றது.

புகைத்தலின் வேறு பாதிப்புக்கள்

- புகைத்தல் வாய், தொண்டை, களம் மற்றும் சிறுநீர்ப்பை போன்ற பகுதிகளில் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடியது.
- இது பல் மற்றும் உதடுகளில் நிற மாற்றத்தை உருவாக்கி அருகிலிருப்பவர் களிற்கு அருவருப்பை ஏற்படுத்தும்.
- வாயிலிருந்து துர்நாற்றம் உருவாகு வதற்கு காரணமாகின்றது.

புகைத்தலானது பாவிப்பவர்களை மட்டுமல்லாது அருகில் இருப்பவர்களையும் பாதிக்கக்கூடியது. புகைத்தலில் உருவாகும் பதார்த்தங்களை அருகிலிருப்பவர்கள் விரும் பாமலே உள்ளெடுக்க நேரிடும் இதனால் அவரும், மேற்கூறிய பாதிப்புக்கள் அனைத் தையும் அடையக் கூடிய தன்மையும் காணப் படுகின்றது.

பல வேளைகளில் புகைப்பவர்களை விட அருகில் இருப்பவர்களே அதிகம் பாதிப்புறவும் நேரிடுகின்றது. ஏனெனில் சிகரெட்டில் காணப்படும் வடிப்பான் (Filter) சில பதார்த்தங்களை வடிகட்டியே உடலினுள் புகையை விடுகின்றது. ஆனால் புகைக்கும் போது வெளியில் எரியும் புகையானது வடிகட்டப் படாது விடப்படுகின்றது. எனவே அருகிலிருந்து சுவாசிப்பவர்கள் புகைப்பவரை விட அதிக பாதிப்பிற்கு உள்ளாகின்றனர்.

இவ்வாறு கர்ப்பிணித் தாய்மார் புகையை உள்ளெடுக்கும் போது அவர்களின் கருவிலே வளரும் குழந்தையும் பாதிப் புறுகின்றது. கருப்பையிலே குழந்தை இறக்கும் சந்தர்ப்பமும் ஏற்படுகின்றது. அத்துடன் குழந்தை குறைபாட்டுடன் பிறப்பதற்கும், நிறை குறைவாகப் பிறப்பதற்கும் காரணமாகின்றது. இவற்றோடு குழந்தையின் பிறப்பின் பின்னர் வளர்ச்சி வேகத்தையும் குறைத்துவிடுகின்றது. இதனால் ஓர் குறைபாடுடைய சமுதாயம் உருவாக புகைத்தல் வழிசமைத்துவிடுகிறது.

புகைத்தல் ஆரம்பத்தில் ஒரு பொழுது போக்காக இளைஞர், யுவதிகளிடம் ஆரம்பித் தாலும் அதிலுள்ள நிக்கொட்டின் பதார்த்தம் மீண்டும் மீண்டும் புகைப்பிடிக்க தூண்டுகின்றது. புகைப்பிடிக்கும் போது அவர்களிற்கு ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டதும் அது நீண்ட நேரம் நீடித்து மீண்டும் ஒரு தடவை புகைப்பிடிக்க தூண்டும். அத்துடன் புத்துணர்ச்சியை ஏற்படுத் தக்கூடிய நிக்கொட்டினின் அளவு நாளுக்கு நாள் அதிகரிக்கும். இதனால் புகைப்பிடிக்கும் அளவும் நாளுக்கு நாள் அதிகரிக்கும் தொடர்ந்து உடல் பாதிப்பு ஏற்பட்டு இறுதியில் மரணத்தை தோற்றுவிக்கும்

மனவலிமை இல்லாதவர்கள்
சந்தர்ப்பங்களுக்கு காத்திருக்கிறார்கள்
மனவலிமை உள்ளவர்கள்
சந்தர்ப்பங்களை உண்டாக்கிக்
கொள்கிறார்கள்

ஒப்புரவாளர் பேராசிரியர் கலாநிதி பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் மணிவிழாச் சிறப்பு மலர்

நன்றி - உதயன் பத்திரிகை

கலாநிதி என். சண்முகலிங்கன்

வாழ்வும் பணியும்

எங்கள் பண்பாட்டின் உயர் தனி ஆளுமையாய், காலம் எங்களுக்குத் தந்த உன்னதமாய், துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் தரிசனம் எங்களுக்கு வாய்த்திருக்கின்றது.

அறிவுத்துணிவும் ஆற்றலின் உறுதியும்

அறிவுத்துணிவு, ஆற்றலின் உறுதி, அயராஉழைப்பு, அனைத்தையும் நம்பிக்கை யுடன் எதிர்கொள்ளும் நேர் சிந்தனை, அனை வரிடத்தும் நிறைவான அன்பு -

எங்கள் துணைவேந்தரின் ஆளுமை முழுமைக்கான அடிப்படைகளாய் நெஞ்சில் நிறையும் பண்புகள் அவை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புவியியல் துறை பேராசிரியராக உலகளந்த அவரின் கல்வி ஞானம், தொடரும் காலவெளி யிடை கலைப்பீடாதிபதி, துணைவேந்தர் என்னும் பாத்திரங்களின் வழி பல பயனான கனிகளை எங்கள் சமுதாயத்துக்காய் தரும்.

மிக நெருக்கடியான ஒரு காலச் சூழலிலே அழிவுக் குவியல்களில் இருந்து ஆக்கம் காணும் எங்கள் சமூகத்தின் எழுச்சியிலே துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் பங்கும் பணியும் அளவிலாதது. அந்த ஆற்றலைப் போற்றவே இந்த அறுபதாம் ஆண்டு நிறைவு மணிவிழா மங்கலம்.

இளமையில் வாய்த்த சமூக மயமாக்கம்

பேராசிரியர் பொன். பாலசுந்தரம் பிள்ளை அவர்களின் ஆளுமை முழுமைக்கான அடிப்படைகளை, இளமைக்காலம் முதல் அவருக்கு வாய்த்த சமூக மயமாக்கல் சூழல்களிடையே காணமுடியும்.

யாழ்ப்பாணத்தில் மரபுவழிக் கிராமம் வேலணை, அங்கு நம்பண்பாட்டின் விழுது களாய் விளங்கிய ஆசிரிய பண்டிதர் பொன்னுத் துரை - ஆசிரியை நாகரத்தினம் தம்பதிகளின் இரண்டாவது புதல்வனாக 1941 ஏப்ரல் 29ம் திகதி பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் தோற்றம் நாகேஸ்வரி, கல்யாணசுந்தரம், கமலாதேவி , விமலேந்திரன், பாலேந்திரன், விமலாதேவி, யோகேந்திரன், ரவீந்திரன், புவனேந்திரன், நிர்மலாதேவி, வத்சலாதேவி என பதினொரு சகோதரர்களுடனான அன்புப் பிணைப்பால் பாலசுந்தரம்பிள்ளையின் பிள்ளைப்பருவம் அழகாய் அமையும்.

அப்பா - அம்மா தந்த ஆசிரிய விழு மிய சூழலும், அன்புக் கனிவும், சகோதரங் களுடனான கூட்டு வாழ்வுப் பயிற்சியும் துணை வேந்தருக்கு வாய்த்த ஆரம்பப் பள்ளிகள் எனலாம். அர்ப்பணிப்புடனான சமூக மேம்பாட்டு அக்கறை என தந்தை வழி தனயன் கண்ட பண்புகள் பல.

ஊர்காவற்றுறைக் கிராமச் சூழலி லேயே கரம்பன் சண்முகநாத வித்தியாசாலை

யிலும் (1946 - 1949) புனித அந்தோனியார் கல்லூரியிலும் (1950 - 1953) ஆரம்பக் கல்வி அமைந்தது சிறந்தது. தொடரும் கனிஸ்ட உயர்தரக் கல்விக் களமாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (1954 - 1960) விளங்கியது.

நல்ல பல ஆசிரியர்களின் அன்பும் வழிகாட்டலும் யாழ். இந்துக்கல்லூரி அனுபவ மாய் மேலும் செழுமை தரும். எட்டாம் வகுப்பு முதல் பல்கலைக்கழகப் புகுமுகம் வரை புவியி யலுக்கான முதல்பரிசு பொன். பாலசுந்தரம் பிள்ளைக்காகும். இந்தப் புவியியற்றுறை அறிவும் ஆர்வமும் தனக்கு அன்று வாய்த்த புவியியல் ஆசிரியர்களான திரு. எம். பி. செல்வரத்தினம், திரு. வி. மகாதேவா ஆகிய ஆசிரியர்களின் வழியது என்றவாறே பேரா சிரியர் இன்றும் தன்னை வழிப்படுத்திய ஆசான் களை நன்றியுடன் நினைவு கூர்வார். பேராசிரியரின் இளமைக்கால சமூக, மன வெழுச்சி, வளர்ச்சியிலே விடுதி ஆசிரியராகப் பணிபுரிந்த திரு. கே. எஸ். சுப்பிரமணியம் மற்றும் க. சிவராமலிங்கம் மாஸ்டர் கம்யூனிஸ்ட கார்த்திகேசன் மாஸ்டர் என நீளும் ஆசிரிய குழாத்தின் அன்பும் அரவணைப்பும் என்றும் குன்றாது கிடைக்கும்.

மிக இளவயதிலேயே விடுதி வாழ்க்கை சுயமாக முடிவுகளை எடுக்கும் துணைவேந்தரின் தற்துணிவுக்கான பயிற்சிக் களமாக இந்தக் காலம் அமைந்திருக்க வேண்டும். அவ்வாறே கூட்டு வாழ்வின் நலன் களை மேலும் உரமாக உணரவைத்த கால மும் ஆகலாம்.

பல்கலைக்கழகக் கல்வி

பேராசிரியர் பல்கலைக்கழகக் கல்வி பேராதனையில் அமைந்த இலங்கைப் பல்கலைக்கழகத்து அமையப் பெறும் (1961 - 1965) புவியில் இவரது சிறப்புக் கலைத் தேர்வாகும். பேராசிரியர்கள் குலரத்தினம், செல்வநாயகம், பண்டிதரத்ன ஆகியோரின் வழிகாட்டலிலே புவியில் அறிவு வளர்ச்சி பெறும்.

இந்த காலப் பகுதியிலேயே இவரின் வாழ்க்கைத் துணைக்கான தேர்வும் நிகழும், பேராதனைப் பல்கலைக்கழகத்து தமிழைச் சிறப்புக் கலையாகத் தேர்ந்து கற்ற இராஜ லஷ்மியுடனான மணவாழ்வின் கனிகளாக ஜனகன், ஜயந்தி, முரளீதரன் என மூன்று குழந்தைச் செல்வங்கள் அர்த்தம் சேர்க்கும்.

பட்டப்படிப்பினைத் தொடந்து 1965 முதல் பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே இளநிலை விரிவுரையாளராக இவரது ஆசிரியப் பணி தொடங்கும். 1972 இல் உயர் பட்டப் படிப்பினை ஐக்கிய இராச்சியத்தின் புகழ்பூத்த டர்ஹம் (Durham) பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளும் வாய்ப்பு கைவசமாகும். தற் போது அபடீன் பல்கலைக்கழகத்து பேராசி ரியராக விளங்கும் பி.டி. கிளாக் (Prof. B.D. Clark), பேராசிரியர் ஜோன் கிளாக் (Prof. John Clarlke) ஆகியோரின் வழிகாட்டலில் நகரப் புவியியல் கலாநிதிப் பட்ட ஆய்வு அனுபவம் கிடைக்கும் ''வடபகுதியில் மைய இடங்களில் படிமுறையாக்கம்" (The Hierachy of Central Places in Northern Ceylon) என்பது ஆய்வுப் பொருளாகும். கலாநிதிப் பட்டத் தினைத் தொடர்ந்து பேராதனையில் முதுநிலை விரிவுரையாளர்ப் பணி தொடரும். அடுத்த கட்டமாக மிக இளவயதிலே 1980இல் எங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியிற் துறைப் பேராசிரியராக இவரது அறிவும் ஆற்றலும் எங்களுக்காகும்.

ஆசிரிய வாண்மையும் ஆய்வும் ஆர்வமும்

பேராசிரியரின் ஆசிரிய வாண்மை யிலே, பலஇளைய புவியில் ஆறிவுக் குழந் தைகள் வளர்ச்சி பெறும். அவரது ஆய்வுத் திறத்தாலே எங்கள் பிரதேசம் பற்றிய புதிய புதிய அறிவு வெளிச்சங்கள் எம்வசமாகும்.

ஆங்கிலத்திலும் தமிழிலும் அவர் முன் வைத்த ஆய்வுக் கட்டுரைகள், உலக ஆய்வு

அரங்கங்களிலும், உள்ளூர் ஆய்வுப் படங் களிலும் முதன்மைபெறும். இந்த வகையில் இலங்கையின் ''பிரதேச பிரச்சினைகளும் பிர தேச திட்டமிடலும்" (Regional Problems and Regional Planning in Sri Lanka) என்ற தலைப்பில் 1986 இல் ஜேர்மனிய டிரைய பல்கலைக்கழகத்தில் (University of Trier) எங்கள் பேராசிரியர் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரை இன்றைய சமூக மேம்பாடு, சமூகத் திட்டமிடல் ஆய்வறிவுப் புலன்களில் சிறந்த வழிகாட்டியாகக் கொள்ளப்படும்.

வட தீவுகளிலிருந்து குமண கிராமம் வரை ஆழத் தரிசித்த அனுபவ ஞானமே எங்கள் போராசிரியரின் அறிவுப் பலமாகும். இன்றைய எங்கள் அரசியலின் மையநிலைப் பிரச்சினைகளாக குடியேற்றத் திட்டங்கள், அவற்றின் வழியான குடித்தொகை - பண்பாட்டு மாற்றங்களை விளங்கிக் கொள்ளுதலில் பேராசிரியரின் அரசியல், புவியில் சார் கட்டுரைகள் பெரிதும் துணையாவன. இந்த வகையில் திருகோணமலையின் புவிசார் அரசியல் இனத்துவ முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தும் பேராசிரியரின் Trincomalee, geo. Politics, ethnic dimension and development Potential எனும் ஆய்வோடு மிகுந்த கால முக்கியத்துவம் பெறுவது.

இவ்வாறாக சுதேச எல்லைகளைத் தெரிந்த, தெளிந்த இவரின் புவியில் ஞானம், உலக எல்லைகள் வரை நீள்வது, சர்வதேச விவகாரம் அவரது ஆர்வப் பரப்பாகும். இன்றைய உலகின் நெருக்கடிகளை, இட அமைவுசார், இன அமைவுசார் பிரச்சினை களை நேரடியான அனுபவ அவதானமாகத் தரும் அவரின் வல்லமையை அவர் கலந்து கொள்ளும் எங்கள் ஆய்வரங்குகள் பலவற்றி லும் காணமுடியும். பல்வெறு பல்கலைக்கழக கடமைகள் இடையேயும் ஒரு நடமாடும் நூலகமாக, அறிவுப் பகிர்வுக்கான களமாக பேராசிரியர் அவர்களின் கருத்தரங்குகள் நிறைந்த பயன் விளைவித்தன.

செயற்படும் அறிவும், உயர் கல்வி மேம்பாடும்

அறிவு என்பது செய்படும் அறிவாக வேண்டும் என்பது இன்றைய கல்வியியல் இலக்கு, பேராசிரியரின் கல்வி நிர்வாகப் பணிகளிடையே தன் அர்த்தங்களைக் காணும். ஏறத்தாழ பத்து ஆண்டுகால புவியில் துறைத் தலைமைப் பொறுப்பு (1981 - 1991) தொடர்ந்து இரண்டு தடவைகளில் கலைப்பீடாதிபதியாகத் தெரிவு (1991 - 1997) பல தடவைகளில் பதில் துணைவேந்தராகவும் பின் 1997 முதல் இன்று வரை இரு தடவைகள் துணைவேந்தராகவும் முதன்மைத் தேர்வு பேராசிரியரின் செயல் வீரத்தின் ஆக்க களங்களாய் இந்த நிர்வாகப் பதவிகள் அனைத்துமே சிறப்புப் பெறும். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் சிறந்த ஒரு கல்விப் புலமாக புவியில்துறை கண்ட வளர்ச்சி யிலிருந்து இலங்கைப் பல்கலைக்கழகங்களின் இன்றைய கலைப்பீடங்களுக்கெல்லாம் எடுத் துக்காட்டாக யாழ். பல்கலைக்கழக கலைப பீடம் காட்டும் மேம்பாடுகள் வரை எங்கள் பேராசிரியரின் தடங்கள் பதிவு பெறுவன.

இன்றை உயர் கல்விச் சீர்திருத்தங்கள் அவாவிநிற்கும் பல அடிப்படை, மாற்றங்களை அன்றே தீர்க்கதரிசனத்துடன் யாழ். பல்கலைக் கழகம் காண உந்து சக்தியாக இருந்தவர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை. இன் றைய எங்கள் காலத்தின் ஆதார சுருதிகளை உணர்ந்த பேராசிரியரின் ஆளுமை வழிகாட்ட லில், ஒருங்கிணைந்த ,செயற்பாட்டில், பண் பாட்டின் செழுமைக்கான கற்கைநெறிகள் பலவும் எங்கள் பல்கலைக்கழகத்தில் விரிவான இடத்தினைப் பெறும். அவ்வாறே பண்பாட்டினை அறிவின் வழி புதுக்கும் புத்தம்புது கல்வி நெறிகளும்.

எங்கள் பண்பாட்டின் தனித்துவ அடை யாளங்களான இசையும், நடனமும் இராமநாதன் நுண்கலைக்கழக மேம்பாட்டின் வழி உறுதியான தளத்தினையும் உயர்வி னையும் பெறுதலில் எங்கள் பேராசிரியரின் பங்கும் பணியும் குறிப்பிடத்தக்கன. அவ்வாறே

சித்திரமும் வடிவமைப்பும் புதிய கலை வரவாகும். மரபுவழிச் சித்தாந்த சிந்தனைகளுக்கான களங்களும் பிரிவுபெறும். சமாந்தரமாக புத்தம்புது அறிவுகளும் எங்கள் வசமாகும்.

இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றிலே, நீண்டகாலமாக உணரப்பட்ட சமூகவியல் கல்வி தமிழில் கைவசமாகும். கூடவே உளவியல், மனைப்பொருளியல், மானிடவியல் என புதிய அறிவுக் குழந்தைகள் எங்கள் அறிவுப் புலத்து வரவுகளாகும்.

மட்டுப்படுத்தப்பட்ட பல்கலைக்கழக கல்வி வாய்ப்புக்களை மேலும் இன ரீதியாகத் தடைசெய்யும் தரப்படுத்தல் முதலாய பாராபட்ச நிலைமைகளில் தளர்ந்துபோன எம் இளைஞர்களின் உயர் கல்விக்கென வெளிவாரிப் பட்டப்படிப்பு வசதியினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பித்ததிலும் எங்கள் பேராசிரியர் துணையாய் விளங்கியவர். தன் கலைப்பீடப் பணிகளோடு வெளிவாரிப் பட்டப் படிப்பு இணைப்பாளராகவும் தொடக்கப் பணிகளை நெறிப்படுத்தியவர்.

இவ்வாறே பல்கலைக்கழக சுவர்களுக்கு அப்பால் பல்வேறு வாழ்க்கை நிலைமைகளினாலும் கல்வி வாய்ப்புக்களை இழந்து போனவர்களின் அறிவுக் களமாகப் புறநிலைப் படிப்புகள் அலகினை ஆரம்பித்த பேராசிரியரின் முயற்சியும் இன்று தேசம் தழுவியதாக விரிவு பெறும். இந்த வகையில் தொழிலாளர்களின் மேம்பாட்டுக்கென தொடங்கப்பட்ட கற்கை நெறியும் இன்று புதிய வளர்ச்சி நிலைகளை எய்தும்.

புதிய கல்வி நெறிகளைப் பொலவே புதிய துறைகளின் தோற்றத்துக்கும் பீடங்களின் வரவுக்கும் துணைவேந்தர் எடுத்த முயற்சிகளை அண்மைய தன் வாழ்த்துச் செய்தியிலே முன்னாள் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் விதந்து குறிப்பிடுவார். இந்த வகையில் அரசறிவியல் - சமூகவியல்துறை, முகாமைத்துவ - வர்த்தக பீடம், உயர் பட்டப்படிப்புக்கள் பீடம் என்பன பல்கலைக்கழக மேம்பாட்டின் புதிய வெளிப்பாடுகள் ஆகும். உயர் பட்டப்படிப்புகள் பீடம் இன்று பல்கலைக்கழகத்தின் உயர் ஆய்வுக் களமாக விளங்குவதுடன் புதிய பல் கற்கை நெறிகளுக்கும் களமாகும். அண்மையில் வடிவம் பெற்ற பண்பாட்டியல் முதுமாணி (M.A. in Cultural Studies) கற்கைநெறியின் தோற்றத்திலும் எங்கள் துணைவேந்தரின் ஆர்வமும் வழிகாட்டலும் உடனிருக்கும்.

இவற்றினை விட உடலியல்துறை கல்வி அலகு (Physical Education Unit), மீன்பிடித் துறை கற்கைக்கான மேம்பாட்டு மையம் (Centre for Development of Fisheries) எனும் பேராசிரியரின் நெடுநாளையக் கனவுகளும் இன்று மெய்ப்படும். பழைய மாணவர் சங்கம், பழைய மாணவர் செயலகம் (Alumni Association, Alumin office) மாணவர்களுக்கான வழிகாட்டல் அமைப்பு (Career Guidance Office), ஆசிரிய மேம்பாட்டு மையம் (Staff Development Centre) என பல்கலைக்கழக மேம்பாட்டுக்கான புதிய அமைப்புக்களை உருவாக்கி எதிர்கால மேம்பாட்டுக்கு வழிசமைத்தலிலும் பேராசிரியரின் திட்டமிடல் திறன் புலப்படும்.

பல்கலைக்கழக உட்கட்டமைப்பு, சூழல் அழகு என்பவற்றின் மேம்பாட்டிலும் எங்கள் பேராசிரியரின் அர்ப்பணிப்புப் பணிகளும் அளவிடமுடியாதவை. போரின் கொடுமுகத்தில் ஆழப் புதைத்த கண்ணிவெடிகளுக்கு அஞ்சாமல் அறிவுத்துணிவோடு பல்கலைக்கழகத்தையும் அது சார்ந்த பிரதேசத்தையும் எங்கள் எதிர்கால நம்பிக்கைக்கான சின்னமாக்கியதில் எங்களின் இன்றைய சமூக வரலாற்றில் சிறப்பான இடம்பெறுகின்றார். ஒவ்வொரு புத்தாக்கப்படி முறையிலும் உடனிருந்து நெறிப்படுத்தல். தினமும் காலையில் வளாகத்தின் சூழல் அழகை - தூய்மையை

உறுதிப்படுத்திய பின்னரே துணை வேந்தர் அலுவலகக் கடமைகள் ஆரம்பமாகும். சுத்திகரிப்புத் தொழிலாளரில் இருந்து கட்டடக் கலைப் பொறியியலாளர் வரை துணை வேந்தரின் நேரடி உற்சாகப்படுத்தலில் தம் கடமைகளில் நிறைவினைக் காணமுடிகின்றது. புனர்வாழ்வு, புதுவாழ்வு எனும் நம்பிக்கையுடன் புத்தம் புதிய உள்ளகக் கட்டமைப்புகள், துணைவேந்தரின் அயராத முயற்சியினால் நீண்ட காலத்துக்குப் பின் எங்கள் வசமாகும். கைலாசபதி கலையரங்கின் வலப்புறத்தில் மொழி பண்பாட்டுத் துறைக்கான புதிய கட்டடத் தொகுதி, இராமநாதன் நுண்கலைக்கழக புதிய அமைப்புகள், வித்தியானந்தன் நூலகத்தின் முழுமையாக்கம், மருத்துவபீட கலையரங்கம் என பற்பல புத்தகப் பணிகள்.

பல்கலைக்கழகம் என்பது மாணவர் களுக்கானது. அவர்களின் அறிவு - உள - பண்பாட்டு விருத்திக்கானது என்னும் துணை வேந்தரின் கொள்கை உறுதிப்பாட்டினை எங்கள் மாணவத் தலைவர் துணைவேந் தருக்கான அன்மைய தன்வாழ்த்து ஒன்றின் கருப்பொருள் ஆக்குவார். மாணவர் வளர்ச்சி என்பது வகுப்பறைக் கற்றலுடன் முடிந்து விடாதது. இதன் வழி உடல், உள மேம் பாட்டுக் களமாக வளமானதொரு விளையாட்டு மைதானம் துணைவேந்தரின் நேரடிக் கண்காணிப்பில் தயாராகும். மாணவர்களின் ஒன்றிணைந்த அடைவினைக்கான மைய நிலையமாக மாணவர் கட்டடத் தொகுதி (Student Complex) வடிவம் பெறும்.

மாணவர்களின் தேசிய - பண்பாட்டு உணர்வின் வழியான செயற்பாடுகளை. நிலவும் சூழல் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு உரியமுறையில் வழிப்படுத்தும் ஒரு தந்தையாகவும் துணைவேந்தரின் செயற் பாடுகள் மாணவர் நெஞ்சங்களிலும் சமூக மனங்களிலும் இடம் பெறும்.

காலத்துக்கு ஒவ்வக் காரியமாற்றிய பெருந்தகை

குறிஞ்சி மலர் காலத்துக்கு ஒருமுறை பூப்பதுபோல் மனிதர்களிலும் சிலர் மகத் தானவர்களாக விளங்குகிறார்கள். யாழ்ப் பாணப் பல்கலைக்கழக வரலாற்றில் தனது அதீத சிந்தனையால் சாதனைகள் படைத்தவர் ஒப்புரவாளர், பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை அவர்கள். இப்பெருமகனாருக்கு அகவை அறுபது நிறைவு பெறும் வேளை சமூகம் அகமகிழ்நது வாழ்த்தி போற்றுகின்றது. சாதிக்கமுடியாத பல காரியங்களைச் சாதித்து எளிமையானவராக, கருணை உள்ளம் படைத்தவராக, கடமை வீரராகத் திகழும் இவரை, கற்றோரும் மற்றோரும் யாழ்ப் பாணத்து கலங்கரைவிளக்காகப் போற்றி மகிழ்கின்றனர், சைவத் தமிழ்ப் பண்டிதர் பொன்னுத்துரை குடும்பம் வேலணைத் திரு வூரில் பலருக்குக் கல்வி கொடுத்த குடும்பம் என்றால் மிகையாகாது. நல்லாசிரியர் குடும்பத்தில் தோன்றிய மைந்தன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பல வருடங்கள் விடுதிச் சாலையில் தங்கி கல்விமேன்மை பெற்றவர். இந்துக் கல்லூரி மாணவனாக கற்கும் காலத் தில் மிகப்பெரிய மண்டபமாகிய குமாரசுவாமி மண்டபம் கட்டப்பட்டது. அம்மண்டபப் பணி விடுதிச்சாலை மாணவரின் சிரமதானப் பணி யினால் பெரும்பகுதி நிறைவேற்றப்பட்டது. சிரமதானப் பணிக்குத் தலைமைதாங்கிய இளைஞர்களுள் ஒருவரே இன்றைய துணை வேந்தர். கல்லூரி வாழ்வில் ஆளுமைமிக்க தலைமகனாக அன்று திகழ்ந்து பல ஆசிரியர் களின் பாராட்டினைப் பெற்றார். தனது பல்கலைக்கழகக் கல்வியில் சிறந்த பெறுபேறு பெற்று புவியியலாளனாகத் தன் வியத்தகு ஆய்வுகளை மேற்கொண்டு கல்வி உலகில் தன்னை நிலைநாட்டினார். மிகுந்த ஞாபக சக்தியுடைய இவரது ஆற்றலைக் கண்டு வியக்காதவர்கள் ஒருவரும் இல்லை. கடவுள் அவருக்குக் கொடுத்த பேறுகளில் ஒன்று அற்புதமான ஞாபகசக்தி. பல்கலைக்கழக விரி வுரையாளராக, பேராசிரியராக கலைப்பீடாதி பதியாக உயர்வுபெற்ற இத்திருமகன் இக்

கட்டான காலகட்டத்தில் தூர்ந்துபோய், ஓய்ந்துபோய் இருந்த பல்கலைக்கழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று பரிணமிக்கச் செய்தமையை கல்விச் சமூகம் என்றும் மறக்க இயலாது. இவரது காலத்தில் பல்கலைக் கழகமும் சமூகமும் ஒன்றிணைக்கப்பட்ட சரித்திரத்தை என்றும் வரலாறு எடுத்துரைக்கும். ஆயிரக்கணக்கான மாணவர்களை பல்கலைக் கழகப் பட்டத்தினைப் பெறுவதற்குப் புதியபுதிய வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்த இப் பெருமகன் பலரது நன்றிக்குரியவராக விளங்கு கின்றார். கல்வியில் பெரியவராக விளங்கும் பேராசிரியரை இன்று யாழ்ப்பாண சமூகம் பெருமதிப்புக் கொடுத்து விழாக்கள் எடுத்துக் கௌரவிப்பதற்கு காரணம் அவரிடம் நிரம்பி யிருக்கும் மனிதநேயப் பண்பும், காலத்துக்கு ஒவ்வக் காரியமாற்றும் திறனுமேயாகும். எவரையும் இன்முகத்தோடு உபசரித்து வரவேற்கும் இயல்பு கொண்ட பேராசிரியர் பல்கலைக்கழகத்துக்கு வெளியேயும் பலரது உள்ளத்தில் வாழ்த்தப்படுகின்றவராக விளங்கு கின்றார். எவரது வேண்டுகோளையும் உதா சீனம் செய்யாது எந்தவொரு கிராமத்து விழா விலும் கலந்துகொண்டு சமூகத் தொடர்பை வலுப்படுத்தியி சரித்திர நாயகனாக இவர் விளங்குவதை யாவரும் ஒப்புக்கொள்வர். மிகுந்த கல்விப் புலமைமிக்க இவர்சபை அறிந்து பேசும் ஆற்றல், அனுபவம் மிக்கவர். வள்ளுவப் பெருந்தகைப் புலமையாளனின் இலக்கணத்தை எழுத்துரைக்கின்ற போது ''உவப்பத் தலைகூடி உள்ளப் பிரிதல் அனைத்தே புலவர் தொழில்'' எனக் கூறினார் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அவர்கள். எந்த அவையில் உரையாற்றினாலும் புதிய சிந்தனைகளை எடுத்துரைத்து மீண்டும் இவரைக் காணும், கேட்கும் ஆவலை ஏற் படுத்துகின்ற தன்மையில் தன் சிந்தனைகளை எடுத்துரைத்தார். எங்கு இவர் பேசுகின்ற போதிலும் பேச்சில் வரலாற்றுத் தரவுகள் யாவும் எடுத்துரைப்பார். இவரது ஆய்வுக் கட்டுரைகளைக் கற்றவர்கள் இவரின் ஆழமான அறிவியற் சிந்தனைகளை உணருகின்ற பேறு பெற்றனர். 30 ஆண்டுகளுக்கு முன்பு திருக் கேதீஸ்வரக் கும்பாபிஷேக சிறப்பு மலரில் இவர் எழுதிய சனத்தொகை ஆய்வு பற்றிய கட்டுரை இவரது தீர்க்கதரிசனத்தை எடுத்துரைத்து உள்ளது. அக்கட்டுரையில் இலங்கையில் இந்துக் குடித்தொகைக்கு ஏற்பட்டுவரும் பாதிப் பைப் பற்றி எச்சரிக்கையாக சில செய்திகளை விளக்கியிருந்தார். ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந் தத்தின் கீழ் பல லட்சம் இந்தியத் தமிழர்கள் வெளியேற்றப்படுவது இந்து மக்களின் தொகையில் வீழ்ச்சிக்கு வித்திடும் என்பதனை தனது கட்டுரையில் பல்வேறு கோணங்களில் சுட்டிக் காட்டியுள்ளார். மேலும் ஒரு கட்டு ரையில் 60களுக்கு முன்பு தென்னி லங்கையில் பிரதேசரீதியாக இந்துக்களின் சனத்தொகை யையும் அறுபதுகளின் பின் அவற்றில் ஏற்பட்ட மாறுதல்களையும் விளக்கி இந்துக்களே, இந்துநிறுவனங்களே இதில் எச்சரிக்கையாக இருங்கள் என இவா விடுத்த வேண்டுகோள் இவரது தீர்க்கதரிசன திறனை விளக்குகிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்திற்காக தொண்டு செய்தவர்களை இனங்கண்டு கௌரவிக்க வேண்டுமென கடந்த பல வருடங்களாக பலரும் குரல் கொடுத்தனர். பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் துணைவேந்தராகப் பதவியேற்று ஓரிருவருடங் களுள்ளே பல மூத்தோரை பல்கலைக்கழக ரீதியில் கௌரவித்து பெருமை பெற்றார். அன்னை சிவத்தமிழ்ச் செல்வி முதல், தொண்டி னால் உயர்ந்த மில்க்வைற் கனகராசா வரை பல்துறை சார்ந்த பலரை பல்கலைக்கழக அவையில் தொடந்து கௌரவப்பட்டங்கள் வழங்கி சமுதாய உணர்வுக்கு மதிப்புக் கொடுக்க சரித்திரநாயகனாக இப்பெருந்தகை திகழ்கின்றார். இவரை வாழ்த்துவதால் விழா எடுத்துப் போற்றுவதால் இச்சமூகம் பெருமை கொள்வதோடு எதிர்காலத்தில் தலைமை வகிக் கும் தகுதிபெறும் அனைவரும் மனித நேயப் பண்பு உடையவர்களாக, மக்களை நேசிக் கின்றவர்களாக தம்மை ஆற்றுப்படுத்துவதற்கு பேராசிரியரின் விழா உதவும் என்பதில் ஐயமில்லை.

செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்
உபதலைவர்
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மணிவிழாச்சபை

மணிமகுடம் சூட்டும் மணிவிழா

யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழக வர லாற்றில் எதிர்பாராத பல புதிய திருப்பங்களை நிகழ்த்திக் காட்டிய அற்புத வேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்.

துணைவேந்தர் சிந்தனையாளராக, சித்தாந்தியாக நான்கு சுவர்களுக்குள் சிக்கிக் கிடக்கும் கலாசார மரபுகளைத் தகர்த்து பல்கலைக்கழகம் அது சார்ந்த சமூகத்தின் தேவைகளையும் அபிலாஷைகளையம் பூர்த்தி செய்து சமூகத்தை வழிநடத்தும் நிறுவனமாக இயங்க வேண்டும் என்பதற்கு ஏற்ப மக்கள் மத்தியில் இறங்கி வந்து சமூகத்தை வழி நடத்தும் உதாரண புருஷனாக விளங்கினார்.

தமிழரின் மிகப்பெரிய பொக்கிஷமான பாரம்பரிய கலைகளுக்கு, வழமையின் முதிர்ச்சியோடு நவீனத்துவத்தின் சிறப்புகளை ஒருங்கிணைத்து நுண்கலைமாமணிப்பட்டம் கொடுத்ததுடன் தென்னாசியக் கலைகளுக்கு கேந்திரம் அமைத்துக் கலைஞர்களின் வாழ் வில் ஒளியேற்றி வைத்தமை கலைஞர் களுக்குக் கிடைத்த மிகப்பெரிய பேறாகும்.

துணைவேந்தராக சமூக சேவகராக, தொண்டு நிறுவனங்களில் போஷகராக, சித்தாந்தியாக, சமாதான நீதிவானாக என்றும் மக்கள் தொண்டில் அர்ப்பணிப்பாளராக, கல்வி மானாக, பக்திமானாக பல்துறைகளில் விற் பன்னராக பல்முகம் காட்டி ஜொலிக்கும் வைரத்துக்கு உதாரண புருஷனாக பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் என்றும் மக்கள் மனதில் ஒளிவீசிப் பிரகாசிக்க வாழ்த்து கின்றோம்.

ந. யோகராஜன் (SLTES) JP
பிரதி பிராந்தியப் பணிப்பாளர்
தொழில்நுட்பக் கல்வித் திணைக்களம்
பணிப்பாளர்,
தென் ஆசிய கலைகள்
மற்றும் கலாசார நிலையம்.

உலகப் பொருட்கள் எதன் மீதும் ஆசை
கொள்ளாதே துயரங்களுக்கெல்லாம் காரணம்
அவைதான் மறந்துவிடாதே



உன் நாவுக்கு அஞ்சு ஏனெனில்
அது குறிதவறிய அம்பாகும்



வள்ளல்

உயர்திரு. இந்திரன் காராளசிங்கம்



யாழ் நூலக எரிப்பும், எனது தாயாரின் மரணமும் பேனாவின் ஊற்றை வற்ற வைத்து விட்டன!

அ.செ. முருகானந்தம்

நன்றி: சரிநிகர் ஒக். 01 – ஒக். 14, 1998

உங்கள் ஆரம்பகால இலக்கிய ஈடுபாடு பற்றி கொஞ்சம் கூறுங்கள்?

மகாஜனாக் கல்லூரியில் மாணவனாக இருந்த காலத்திலேயே நான் இலக்கியத்தில் ஈடுபாடு கொள்ள ஆரம்பித்தேன் அ.ந. கந்தசாமி, மகாகவி, கதிரேசன்பிள்ளை மாஸ்டர் ஆகியோர் எனது இலக்கிய நண்பர்களாக விளங்கினர். சோ. சிவபாதசுந்தரம் நிர்வாக ஆசிரியராகவும் இருந்த காலப்பகுதியில் எழுத்துலகில் புதியவர்களை ஊக்குவிக்கும் முகமாக இளைஞர்களுக்காக இரண்டு பக்கங்களை ஒதுக்கியிருந்தார்கள். ஈழகேசரி இளைஞர் சங்கம் ஒன்றையும் ஆரம்பித்த நான் ஈழகேசரியில் 1941ல் உதவியாசிரியராக இணைந்து கொண்டேன். இதேவேளை நானும் வரதர் ந. கந்தசாமி ஆகியோரும் ஒன்று சேர்ந்து ஒரு சங்கத்தை ஆரம்பித்திருந்தோம். அதன பெயர் மறுமலர்ச்சிச் சங்கத்தினுடைய இதழாக 'மறுமலர்ச்சி' சஞ்சிகை வெளிவந்தது. ஆரம்பத்தில் அதில் என்னுடன் வரதர், அ. ந. கந்தசாமி ஆகியோர் சேர்ந்து பணி யாற்றினர். பின்னர் பஞ்சாட்சரசர்மா அதில் இணைந்து கொண்டார். சு.வேயும் எங்களுட னிருந்தார். இன்று யாழ்ப்பாணத்தில் பிரகாசித் துக் கொண்டிருக்கும் எழுத்தாளர்களில் பெரும்பாலானோர் அன்று அதில் எழுதினார்கள்.

பத்திரிகையில் சமகாலத்து நிகழ்வுகள் பற்றிய அலசல்கள் பலவற்றை நீங்கள் எழுதியிருப்பீர்கள் அவற்றிற்குப் புறம் பாக சிறுகதை; நாவல் போன்ற படைப் பிலக்கியத்துறையிலும் நீங்கள் ஈடுபாடு காட்டி வந்திருக்கிறீர்கள். ஏறத்தாழ எத்தனை சிறுகதைகள் எழுதியிருப் பீர்கள்?

ஈழநாடு பத்திரிகையில் சேர்ந்தபின் ஏராளமான சிறுகதைகள் எழுதியிருக்கிறேன் அவற்றை என்னால் கணக்கிட முடியாது.

நாவல்கள்?

புகையில் தெரிந்த முகம், யாத்திரிகன், இதுவும் ஈழநாட்டில் தொடர்ந்து வந்தது. ''ஜெயந்தி'' இது முற்றுப்பெறாத ஒரு குறு நாவல். என்றாலும் கூட, அதனை அந்தள விலேயே முழுமையாகக் கொள்ள முடியும். அதற்கான பண்பை அக்குறுநாவல் கொண் டிருந்தது. இவற்றைத் தவிர, பத்திரிகைக்குத் தேவையான போது எல்லாம் ஏராளமான விடயங்களை எழுதியுள்ளேன். தொடர்ந்து ஒரே எழுத்துத் தான்.

உங்களுக்கு கவிதையில் நாட்டம் இருக்கவில்லையா?

இல்லை. எனக்கு அதில் அதிகளவு ஈடுபாடு இருந்ததில்லை. ஈழநாட்டிற்கு வரும் கவிதைகளை, பிரசுரிப்பதோடு எனது பணி முடிவடைந்து விடும். க.இ. சரவணமுத்து, பஞ்சாட்சரசர்மா ஆகியோர் அப்போது கவிதைகளை எழுதி வந்தனர்.

யாழ்ப்பாணத்தில் வெளியான பத்திரிகைகளில் தான் பெரும் பாலான உங்களது எழுத்துக்கள் வெளிவந்திருக்கின்றன?

ஓம். ஈழகேசரி, ஈழநாடு, மறுமலர்ச்சி ஆகியவற்றிலேயே எனது படைப்புக்கள் வெளிவந்தன.

வீரகேசரியிலும், சுதந்திரனிலும் நான் பணியாற்றியிருக்கிறேன், சுதந்திரனில் 1949 -

50ல் சிவநாயகம் அவர்கள் ஆசிரியராக இருந்தபோது பணியாற்றியிருக்கிறேன். அ.ந. கந்தசாமி, தாளையடி சபாரத்தினம், சில்லையூர் செல்வராஜன், கே. கணேஸ், கி. பாக்கியநாதன் ஆகியோர் அப்போது சுதந்திரனில் எழுதி வந்தனர். வானொலிக்காகவும் நிறைய எழுதியிருக்கிறேன். நாவற்குழியூர் நடராசன், சிவபாதசுந்தரம் போன்ற இலக்கிய நண்பர்கள் தான் அங்கும் இருந்தார்கள். இது தவிர முற்போக்கு எழுத்தாளர்களான கணேஸ், இராமநாதன் போன்றோரோடும் எனக்கு நல்ல தொடர்பிருந்தது. அவர்கள் வெளியிட்ட 'பாரதி' என்ற சஞ்சிகையிலும் நான் எழுதியிருக்கிறேன்.

தமிழகத்து எழுத்தாளர்களுடனான உங்கள் தொடர்பு எவ்வாறிருந்தது?

பெரிதாக தொடர்பிருக்கவில்லை. நாங்கள் எங்களுக்கென்றொரு பத்திரிகையைத் தொடங்கி எழுதி வந்ததால் அந்தத் தொடர்பு பற்றி அக்கறை காட்டவில்லை.

இன்று வளர்ந்து வந்துள்ள தமிழ் தேசியம் என்ற அம்சம் உங்கள் எழுத்துக்களில் ஊடுபரவாக இருந்துள்ளதா?

அப்படிக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. நான் அதில் ஈடுபாடு காட்டவில்லை. பெருமளவில் மிதவாதியாகவே இருந்தேன். சுதந்திரனில் கூட அந்தளவுக்குப் போக வில்லை. சமஷ்டிக் கட்சிக்காக வேலை செய்யவில்லை.

அதை ஒரு கட்சி விசுவாசமாகப் பார்க்கிறீர்களா?

அவர்கள் மொஸ்கோ சார்பானவர்களாக இருந்தார்கள். ரஷ்யாவில் பழைய எழுத்தாளர்களைப் பின்பற்றித் தான் ரஷ்ஷிய இலக்கியம் வளர்ந்தது. அந்த ரஷ்ஷிய எழுத்தாளர்களைப் பின்பற்றித் தான் முற்போக்கு எழுத்தாளர்கள் எழுதினார்கள். எனக்குக் கூட தல்ஸ்தோயை நன்றாகப் பிடிக்கும்.

யாழ் இலக்கிய வட்டத்துடன் எந்தளவிலான தொடர்பு இருந்தது?

கனகசெந்திநாதனுடன் நல்ல தொடர்பு இருந்தது. அவர்களது கூட்டங்களில் எல்லாம் போய்ப் பேசியிருக்கிறேன்.

மறுமலர்ச்சி, இதழின் இணையாசிரியர் பதவியிலிருந்தும்; நீங்கள் இடைநடுவிலேயே நீங்கிக் கொண்டதாகத் தெரிகிறது. ஏதும் பிரச்சினை காரணமாகவா?

இல்லையில்லை. சுகவீனம் காரண மாக. எனது தாய்மாமனார் அழைத்ததின் பேரில் திருகோணமலை சென்று தங்க நேரிட்டது. அதனால் தொடர்ந்து பணிபுரிய முடியவில்லை. எனினும், மறுமலர்ச்சிக்காக எனது விடயதானம் தொடர்ந்தது. அதன் சந்தா சேகரிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டேன். எனவே அதனுடன் தொடர்பு விட்டுப் போக வில்லை.

திருகோணமலையிலிருந்தும் நீங்கள் பத்திரிகை ஒன்றைக் கொண்டு வந்ததாக அறிகிறோம்?

ஓமோம். சும்மாவிருக்க சோம்பலாகவும் பொழுது போக்கில்லாமலும்' இருந்தது. எனக்குள்ளிருக்கும் பத்திரிகையாளனும் என்னை அரித்துக் கொண்டேயிருந்தான். எனவே 'எரிமலை' என்னும் பத்திரிகையை தாழையடி சபாரத்தினத்தை இணையாசிரி யராகக் கொண்டு ஆரம்பித்தேன். திருகோண மலையை மையமாகக் 'கொண்டு முதலில் வெளிவந்த பத்திரிகை இதுவாகத்தானிருக்கும் என்பது என் எண்ணம்.

எரிமலை எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

'மறுமலர்ச்சி'யை விட்டு வந்து நான் திருகோணமலையில் தங்கியிருந்த காலம் தான். அநேகமாக 1947ம் ஆண்டாயிருக்கலாம். (உண்மையில் 'மறுமலர்ச்சி கதைகள்' என்ற தலைப்பில் அண்மையில் வெளிவந்த நூலில் முன்னரையின்படி 1948ம் ஆண்டு தை மாதம்

வெளிவந்த 'மறுமலர்ச்சி'யின் 18வது இதழிலிருந்து ச. பஞ்சாட்சரசர்மா அ.செ. மு. வுக்குப் பதிலாக இணையாசிரியராகப் பொறுப்பேற்றிருந்தார் என்ற குறிப்பிலிருந்து அ.செ.மு. மறுமலர்ச்சி இதழ் 17வது இதழின் வரையிலும் பணியாற்றியிருக்கிறார். எனவே 'எரிமலை' வெளிவரத் தொடங்கிய காலம் 1948ம் ஆண்டின் முற்பகுதியாக இருக்கலாம்)

"எரிமலை" எத்தனை இதழ்கள் வரையில் வெளிவந்தது? வாசகர் மத்தியில் அதனுடைய தாக்கம் எவ்வாறிருந்தது?

அதிகமில்லை ஒரு ஐந்து அல்லது ஆறு இதழ்கள் மட்டுந்தான் வெளிவந்திருக்கும். மாமத்திற்கு இரண்டாக போதிய ஆதரவிருந்தும் திருகோணமலையில் அதற்கு நல்ல வர வேற்பும் ஒத்துழைப்புமிருந்ததும், நிதிப்பற்றாக் குறைதான் அது நின்று போக காரணமாயிற்று. சிறந்த அச்சகம் ஏதும் இல்லாததால் அச்சு நேர்த்தியும் இல்லை. வாசகர்களின் மத்தியில் அதன் தாக்கம் பற்றி குறிப்பிட அதிகம் இல்லை. தொடர்ந்து வெளிவந்திருந்தால் அவ்வாறான தாக்கம் ஏதும் ஏற்பட்டிருக்கலாம்.

நீங்கள் படைப்பாளி என்ற வகையில் ஏராளமான சிறுகதைகளையும்; குறிப்பிடத்தக்க குறுநாவல்களையும் நெடுங்கதைகளையும் எழுதியிருக்கிறீர்கள். இதில் நீங்கள் எதில் உங்களை அதிகம் அடையாளம்காணப்பட வேண்டும் என விரும்புவீர்கள்?

இரண்டிலுந்தான்.

பத்திரிகைத்துறையில் நீங்கள் பல வேறு பத்திரிகைகளில் பணிபுரிந்திருக்கிறீர்கள் இதில் எந்தப் பத்திரிகையில் பணியாற்றியதை சிறப்பான காலமாக கருதுகிறீர்கள்?

'ஈழநாடு' பத்திரிகையில் பணியாற்றிய காலத்தைதான். 1963லிருந்து 4 வருடங்கள் அதன் ஆசிரியபீடத்தில் பணியாற்றியுள்ளேன். அதன் பிறகு தொடர்ச்சியாக 15 வருடங்கள் 'ஈழநாடு' பத்திரிகைக்கு தொடர்ந்து விடய தானியாக இருந்து வந்துள்ளேன். பிரசுரத்துக் கான சிறுகதைகளின் தரம் கண்டு தேர்வு செய்பவனாகவும் இருந்துள்ளேன். 'யாத்ரீகன்' 'ஜீவபூமி', ஜயந்தி என்னும் தொடர் நாவல்களை எழுதியுள்ளேன். அதிலே ஜயந்தி சிங்கள நாட்டின் வாழ்புலத்தைப் பின்னணி யாகக் கொண்டது. 'ஜயந்தி' என்பது அதில் வரும் சிங்களப் பெள் பாத்திரத்தின் பெயர் என்பது குறிப்பிடத்தக்கது.

உங்களுடைய எழுத்துப்பணியை எப்போது கைவிட்டீர்கள்?

1981ல் 'ஈழநாடு எரிக்கப்பட்டதுடன் எழுத்துப்பணியைக் கைவிட்டேன். அதன் பிறகு இலக்கிய உறவுகளெல்லாம் விடுபட்டுப் போய்விட்டன. அத்தோடு 85ல் எனது தாயாரும் காலமாகிவிட்டார். அதற்குப் பிறகு எனது பேனா ஊற்றெடுக்கவில்லை.

உனக்கு தடைகளும் சோதனை வேதனைகளும்
சொந்தமாக்கப்பட்டதென்றால் அவையெல்லாம்
நாளைய உனது சுகவாழ்வுக்காகத்தான்

ஒலிம்பிக் – 2000
விழாவை முழுமையாக கண்டு ரசித்தேன்
ஈழத்தமிழ் மகன் திரு. சுந்தரதாஸ்பார்வையில். . .

நன்றி: உதயன் கார்த்திகை 10, 2000



ஒலிம்பிக் நிகழ்ச்சிகளை இரு கிழமைகளும் காலை மாலை முழுமையாகப் பார்த்து ரசிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஒரு பெரிய பாக்கியமாகக் கருதுகிறேன். இதையொட்டி நான் செப்ரம்பர் மாதம் 10ம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 6ம் திகதி வரைக்கும் முதல் 5 நாட்களும் நியூ சிலாந்திலும் மற்றைய எல்லா நாட்களையும் சிட்னியில் செலவளித்தேன்.

உலகத்திலேயே மிகப்பெரிய விளையாட்டு நிகழ்ச்சிகளான 27வது சிட்னி 2000 ஒலிம்பிக் இம்முறை அவுஸ்திரேலியா நாட்டின் கிழக்குத் திசையில் உள்ள சிட்னி மாநகரத்தில் செப்ரம்பர் 15ம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 1ம் திகதி வரைக்கும் நடந்து முடிந்தது. அவுஸ்திரேலியா பல்லின, பல் கலாசார, மிகமிக சிநேகபூர்வமுள்ள நாற்பது லட்சம் மக்களைக் கொண்டுள்ள ஓர் அழகான, தொழிற்கலை, விஞ்ஞான முன்னேற்றமுள்ள ஓர் நாடு ஆகும்.

பதினாறு நாட்கள் நடந்தேறிய ஒலிம்பிக் விளையாட்டுக்கள் கடந்த எட்டு வருடங்களாக தயார் செய்யப்பட்டதொன்று. 41 விதமான விளையாட்டுக்களில் 77 நாடுகள் பங்குபற்றி பல விளையாட்டரங்குகளில் நிகழ்த்தி முடித்துள்ளார்கள். உதைபந்தாட்டம் மட்டுமே 6 மைதானங்களில் நடைபெற்றது. ஒலிம்பிக் மைதானப்பரப்பில் மாத்திரம் 11 விளையாட்டு அரங்கங்கள் தயாரிக்கப்பட்டு இருந்தன.

திறப்பு விழா, வைபவம் (opening ceremony) உண்மையில் நம்பமுடியாத ஒரு கண்கொள்ளாக் காட்சி. இந்த நிகழ்ச்சியை ஒழுங்கு செய்து, நடைமுறைப்படுத்தி, பழங்குடி மகளான Aborigine Cathy Freeman ஐக் கொண்டு ஒலிம்பிக் தீவட்டியை ஒளியூட்டி வித்ததும் அவுஸ்திரேலியா நாட்டையும், சிட்னி ஒலிம்பிக்கையும் முழு உலகமும் மெச்சத்தக்க ஒரு ஒப்பற்ற உயர்ந்த ஸ்தானத்திற்கு தள்ளிவிட்டது.

சிட்னியில் இருந்த இரு கிழமைகளில் நான் மெய்வல்லுனர் நிகழ்ச்சிகள் எல்லா வற்றையும் கண்டு களித்தேன். மற்றைய நேரங்களில் வலைப்பந்தாட்டம், மேசைப் பந்தாட்டம், மற்போர், கலாரூபமான உடற் பயிற்சி, பேஸ்போல், கடற்கரை கைப்பந்தட்டம், காற்பந்தாட்டம், வளைகோல் பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களை பார்வையிடும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொண்டேன்.

மெய்வல்லுனர், மற்றைய போட்டிகள் நடந்த அரங்கத்தின் ஒழுங்குமுறையைப் பற்றி சில குறிப்புகள் கூறாமல் இருக்க முடியாது. 47,000 விருப்பந்தொண்டர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். நம்பமுடியாத ஒன்றுதான். ஆனால் முற்றிலும் உண்மை. இந்த விருப்பத் தொண்டர்கள் நான்கு விதமான உடுப்பு அணிந்திருந்தார்கள். உடுப்பின் வலது

சட்டைக்கை மஞ்சள் நிறமென்றால் அவர்கள் பார்வையாளர்களின் சேவையென்பதும். சிவப்பு நிறமென்றால் மருத்துவ சேவையென்பதும். ஊதா நிறமென்றால் போக்குவரத்துச் சேவை யென்றும், குருத்துப் பச்சை நிறமென்றால் பாதுகாப்பு சேவை என்பதும், விளையாட்டரங் கத்திற்கு வருகை தரும் மக்களுக்கு அறிவுறுத் தியுள்ளார்கள்.

அடுத்த பாராட்டிற்கு அமைந்த விடயம் அமைப்பாளர்களின் போக்குவரத்து ஒழுங்கு முறை. பார்வையாளர்களாக வந்திருக்கும் ஏறக்குறைய 2000,000 பெயர்களை 30 நிமிடங்களில் நாளாந்தம் அப்புறப்படுத்தியது. இம்முறை அவுஸ்திரேலியா ஒலிம்பிக்கின் விளையாட்டுக்கள் எல்லாவற்றையும் மிகவும் திறமையாகவும், நேரம் தவறாமல் நிகழ்ச்சி களை நடாத்தியும், பிரச்சினைகள் நிகழ விடா மல் இருந்த சூழலிலும், முழு உலகமும் வியக் கும் முறையில் இதற்கு பொறுப்பான குழுக்கள் இயங்கி வெற்றிகரமர்க செயற்பட்டார்கள். 2004இல் நடைபெறும் ஏதன்ஸ் நகருக்கு இது ஒரு பெரும் சவாலாக உருவாகியுள்ளது.

சிறீலங்களாவிற்கு கிடைத்த ஒரே யோரு வெண்கலப் பதக்கம் 200 மீற்றர் ஒட்டத்தில் மூன்றாம் இடத்தைத் தட்டிக்கொண்ட சுசாந்திகா ஜயசிங்காவைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஏனென்றால் 1948ஆம் ஆண்டு இலங்கைக்கு வெண்கலப் பதக்கம் பெற்றுத் தந்த டங்கள் வயிற்றுக்குப் (Ducan White) பிறகு நடந்தேறிய வெள்ளி இதுதான்.

மெய்வல்லுனர் போட்டியில் எமது மனதைக் கவர்ந்தவர்கள்

(1) கத்தி வீரிமன் பார்வையாளர் களின் ஏகோபித்த கரகோஷ வரவேற்பைப் பெற்ற வீராங்கனை. ஒலிம்பிக் தீவட்டிக்கு ஒளிவிளக்கேற்றி, தங்கப்பதக்கமும் பெற்ற முதல் வீரர் என்ற பட்டத்தையும் பெற்றுள்ளார். பல சாதனைகளுக்கு சொந்தமான இந்தப் பழங்குடி மகன் 400மீ ஒட்டத்தில் உலகத்தில் முதன்மை இடத்தை வைத்திருப்பவர்.

(2) மரியன் யோன்ஸ் இவ் விராங்கனை 100மீ, 200மீ, 4x400 அஞ்சல் ஓட்டங்களில் தங்கப் பதக்கத்தையும், நீளம் பாய்தலில், 4x100 ம் அஞ்சல் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கங்களையும் பெற்ற படியால் ஆகக்கூடிய வெற்றிகளை ஈட்டிய வீரர் என்ற புகழைத் தட்டிக் கொண்டார்.

(3) மைக்கல் யோன்சன் இவர் ஒரு கோடீஸ்வரர். 13 உலக ஒலிம்பிக்ஸ் தங்கப் பதக்கங்களையும் தனதாக்கிக் கொண்டவர். யெசி ஒன்ஸ், கான் லூயிஸ், இற்குப் பின்பு சிறந்த சிறு தொலைவு ஓட்டவீரர் எனப் பெயர் பெற்றவர். இவர் உடம்பை நேராக வைத்துக்



கொண்டு புன்சிரிப்புடன் ஓடும் பாணியை யெசி ஒன்ஸ் போல் ஓடுகின்றார் எனக் கூறிக் கொண்டார்கள்.

(4) மொறிஸ் கிறீன் 100மீ ஓட்டத்தில் தங்கப் பதக்கம் பெற்று அதிவேகமாக உலகத்தில் ஓடும் வீரர் என்ற பெயரைத் தட்டிக் கொண்டவர். இவர் நடக்கும் போது வாய்க்குள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டும், உடம்பை ஒருவிதமாக அசைத்துக் கொண்டும் நடப்பதும் ஒரு தனியழகு.

பதக்கங்கள் பெற்ற விபரம்

நாடு	தங்கம்	வெள்ளி	வெண்கலம்	மொத்தம்
அமெரிக்கா	35	22	30	90
ரஷ்யா	28	24	25	77
சீனா	28	16	15	59
அவுஸ்திரேலியா	16	24	16	56
இங்கிலாந்து	09	20	06	25
கனடா	02	02	08	12
இந்தியா	-	-	01	01
சிறீலங்கா	-	-	01	01

77 நாடுகள் பங்குபற்றிய இந்த ஒலிம்பிக்கில் அளிக்கப்பட்ட தங்கப்பதக்கங்கள் 277, வெள்ளிப் பதக்கங்கள் 275, வெண்கலப் பதக்கங்கள் 298 எல்லாமாக 850 பதக்கங்கள். மூடுவிழா வைபவம் பிர்த்தியேகமாக 45 நிமிடங்கள் நடந்த வியக்கத்தகுந்த வாண வேடிக்கையையும், மிகுதி நேரம் நடந்த பல்வகை சங்கீத நிகழ்ச்சிகளும் மனத்தில் அகலாத விடயங்களாகும். இவ்விழா ஒக்டோபர் 1ம் திகதி மாலை 8 மணி தொடக்கம் 11 மணி வரைக்கும் நடந்தேறியது. ஒலிம்பிக் தீவட்டி உத்தியோகபூர்வமாக மாலை 9.15 மணிக்கு அணைக்கப்பட்டது. 2004 ஒலிம்பிக்கை மறக்க வேண்டாம்.



ஈழத்து இலக்கிய புனைகதைத் துறையில் மறுமலர்ச்சி சிறுகதைகள்

வெளியீட்டுரை

எமது கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சினால் பண்பாட்டலுவல்களுக்கான முன்றாண்டுக்கால செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டது யாவரும் அறிந்த விடயம். அச் செயல் திட்டங்களில் கல்வி, பண்பாட்டுத்துறைகள் சார்ந்த நூல்கள் வெளியிடுதலும், எமது பண்பாட்டுக் கருவூலங்களை ஆவணப்படுத்தலும் உள்ளடங்கியிருந்தன. கல்வி, கலை, இலக்கியம், பண்பாடுசார்ந்த பல்வேறுநூல்களை நாம் ஏற்கனவே வெளியிட்டுள்ளோம். அவ்வரிசையிலே இப்போது நாம் வெளியிடுகின்ற 'மறுமலர்ச்சிச் சிறுகதைகள்' நூலும் ஒன்றாகும். எனினும் இதிலுள்ள சிறப்பு என்னவெனில் இது சிறந்த சிறுகதைகளின் தொகுப்பாயிருக்கும் அதே தருணம் எமது ஈழத்தமிழிலக்கிய வரலாற்றின் முக்கியமான காலகட்டத்தின் ஆவணமாகவும் அமைந்திருப்பதுதான்.

முற்போக்கு, நற்போக்கு எனப் பல விதமான போக்குகளின் வரவிற்கு முன்னரே இலக்கிய நோக்கோடு சில இளைஞர்களால் தொடக்கப்பட்ட 'மறுமலர்ச்சி' இதழும் அக்கால கட்டத்தின் ஒரு புதிய போக்காகத் தொடங்கிய தேதான். பழந்தமிழ் இலக்கியப் படைப்புக்களே இலக்கியமெனப் பாராட்டிநின்ற சூழலில் நவீன இலக்கிய வடிவங்களான சிறுகதை, நவீன கவிதைகள் என்பவையும் இலக்கியங்கள் தானெனப் பலரும் ஏற்றுக் கொண்டு பணிபுரியத் தொடங்கியவர்களின் ஒரு முன்மலர்விற்குப் பெயர்தான் 'மறுமலர்ச்சி' என்பதாகும். ஈழத்தின் இதழியல் வளர்ச்சியில் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட இதழ்களுக்கும் முக்கியமான பங்குண்டு. பத்திரிகைக்கான முழு அம்சங்களையும் தாங்கி வெளிவந்த 'ஈழகேசரி' அதிலே முன்னிற்பதாகும். 'ஈழகேசரி' நாட்டின் ஏனைய பாகங்களில் வெளிவந்த பத்திரிகைகள் போலல்லாமல் தான் சார்ந்த பிரதேசத்தின், அப்போதைய சிந்தனையாளர் மட்டத்தில் செல்வாக்கு செலுத்திய யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் என்ற அரசியல் அமைப்பின் சிந்தனைகளைப் பிரதிபலித்தது மட்டுமன்றி தான் சார்ந்த சூழலினைப் பிரதிபலிக்கும் படைப்புக்களையும் அறிமுகம் செய்தது. எனவே பின்னாளில் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த பல இதழ்களுக்கும் ஒரு முன்னோடியாகவும் அமைந்தது. (பின்னால் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த பத்திரிகைகள் பலவும் ஈழநாடு, ஈழமுரசு எனப் பெயர் கொண்டு அமைவது ஏதோ ஒரு தொடர்ச்சியாகவே என விளங்கிக் கொள்ளலாமா?) எனவே அக்கால கட்டத்தின் ஈழகேசரியின் சிந்தனைகளும், அதிலே வெளிவந்த இலக்கியப் படைப்புகளும் ஆவணப் படுத்தலை கோரிநிற்கின்றன.

இதன் பின்னால் வெளிவந்த 'மறுமலர்ச்சி'யின் தோற்றத்திற்கு தமிழகத்தின் பல்வேறுபடைப்பாளிகளின் ஆக்கங்களும், அங்கு வெளிவந்த மணிக்கொடி, கிராம ஊழியன், கலைமகள் போன்ற சஞ்சிகைகளும் ஊக்கிகளாகத் தொழிற்பட்டிருக்கலாம். எனினும் அதற்கான சிந்தனை, நடைமுறைச் சாத்தியம், இலக்கிய வெளியீட்டின் தேவை ஆகியவற்றிற்கான முன் சூழலை ஈழகேசரிதான் ஏற்படுத்தியது என்பதை நாம் மறுக்கக்கூடாது.

ஆயினும் 'ஈழகேசரி'யிலும் வேறுபட்ட 'மறு மலர்ச்சி' ஈழத்துக்கேயுரித்தான கலை இலக் கியப் போக்கின் புதிய உந்துதலின் வெளிக் காட்டலாகவும், 'கலைச்செல்வி' போன்ற யாழ்ப்பாணத்து இலக்கிய இதழ்களின் தொடர் வரவுகளுக்கான முன்தொடக்கமாகவும் இருந் தது என்பதையும் மறக்கக்கூடாது. எனவே இம் மறுமலர்ச்சிக் காலகட்டம் ஆய்விற்கும் ஆவணப்படுத்தலுக்கும் உரியது ஆகிறது. (கலைச்செல்வி எனப்படும் இலக்கிய இதழும் அவ்வாறே தான். 'மறுமலர்ச்சி'யின் ஆசிரியராக இருந்த அ.செ.மு. பின்னால் திருகோண மலையில் தாழையடி சபாரெத்தினத்துடன் இணை ஆசிரியராகவிருந்து வெளிக்கொண்டு வந்த 'எரிமலை' இதழும் அவ்வாறே ஆய்விற் கும் ஆவணப்படுத்தலுக்கும் உள்ளாக்கப்பட வேண்டும்)

'மறுமலர்ச்சி'க்கு எவ்வளவு வயதா கிறது? இலங்கையின் சுதந்திரத்திற்கு எவ்வளவு வயதாகிறதோ அதைவிட இரண்டு வயது அதிகமாகிறது. 52 வயது. (மறுமலர்ச்சி இதழ் பிறந்தது - 1946 பங்குனி மாதம்) வயது என்பது இங்கு வெறுமனே பெருமைபாராட்டும் ஒன்றாகக் கணிக்கப்படுதற்கல்ல. 'மறுமலர்ச்சி'க் காலகட்டத்தின் சிறுகதைகளை மையமாக வைத்து இன்றைய எமது சிறுகதைகளின் காலத்தை ஒப்பீடு செய்து கணித்துக் கொள் வதற்கான ஒரு காலகட்டமாகக் கருதுவதே தக்கது. இன்றைய காலகட்டத்தில் நின்று நாம் 'மறுமலர்ச்சி'க் காலகட்டத்தை நோக்கும்போது இரண்டிற்கும் இடைநின்ற காலகட்டங்களை யும் அவதானிக்கின்றோம். இந்த அவதானங் கள் எம்மைப் புடமிடுவதற்கான சந்தர்ப்பங் களை நல்குகின்றன. சில வேளைகளில் வளர்ச்சி என்ற பெயரில் நாம் கட்டிவைத்திருக் கும் போலியான கட்டுமானங்களை தகர்க்கவும் செய்யலாம். போதாமைகளை உணர்த்தவும் செய்யலாம். போலித்தனங்களை உதறவும் செய்யலாம். எவ்வாறெனினும் எமது பழைய வற்றை ஆவணப்படுத்தி மீளாய்வு செய்வ தென்பது எம்மைப் புடமிடுதலுக்கு இட்டுச் செல் லும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

இந்தத் தொகுதியில் முதலாவதாக அமைந்துள்ள அ.செ.மு.வின் இரண்டு சிறுகதைகளையும் மாதிரிக்கு உரைத்துப் பார்த்தால் ஓர் உண்மை புலப்படும். இரண்டு சிறுகதைகளுமே இன்றைய எமது வாழ்நிலை யோடும், காலகட்டத்தோடும் பொருந்திப் போகிறது. இது ஒன்றும் யதேச்சையானதல்ல. ஒரு கலைஞனின் தீட்சண்யமான பார்வை தனது காலகட்ட நிகழ்வுகளினூடு பாய்ச்சப் பட்டால் அது காலநீட்சி கொண்டு காலத்தை ஊடுருவி நிலைக்கும் என்பதற்கு ஓர் உதாரண மாகும். 'பழையதும் புதியதும்' என்ற அவரது கதையில் மாட்டுவண்டில்யுகம் போய் மோட்டார் வண்டியுகம் வந்த காலத்தில் மாட்டுவண்டில் கள் ஓரம் கட்டப்படுவது குறிக்கப்படுகிறது. பின்னர் இரண்டாவது உலக யுத்தம் ஆரம்ப மாகி, எரிபொருட்களின் வரத்துக் குறைந்து விட மோட்டார் வண்டிகள் ஓரம் கட்டப்பட்டு மாட்டுவண்டில்கள் மீண்டும் முன்னணிக்கு வந்துவிடுகின்றன. இது இன்றைய போர்க்காலச் சூழலில் யாழ்ப்பாணத்தில், வன்னியில் மாட்டு வண்டியுகம் மீளத்திரும்பியதை நம் நினைவுக்கு கொண்டு வருகின்றது.

அதே 'பழையதும் புதியது'மில் கார்த்திகேசு எனும் பாத்திரம் (கார்த்திகேசுவா கார்த்திகேசுவினூடாக அ.செ.மு வா) பேசுகிறது. ''உலகம் கீழ்மேலாகப் புரண்டு கொண்டு வருகிறது தம்பி. அதில் எல்லாம் எனக்குக் கவலையில்லை. மரம் வளருகிற துக்குக் காவோலைகள் விழுந்து புதிதாக வரும் குருத்தோலைகளுக்கு இடம் விட்டுக் கொடுக்க வேண்டியதுதான். ஆனால் ஒன்று, காவோலைகள் விழுந்த பிற்பாடும் அவை இருந்த அடையாளமாக மரத்தில் வரைகள் இருக்கோ இல்லையோ அது போல காலம் எப்படி எப்படியோ மாறிவிட்ட போதிலும் மனிதன் வாழ்ந்த வாழ்க்கைத் தழும்புகள் இலேசில் அவன் மனத்தைவிட்டு மறைந்து போகிற தில்லை". நாம் புதிய நூற்றாண்டை நெருங்கி நிற்கும் இத்தருணத்தில் கழிந்து செல்லும் 20களின் தழும்புகள் எம்மில் இல்லையா? அவற்றின் உறுத்தல்களில் இருந்தும், உணர்த்

தல்களிலிருந்தும் நாம் விடுபடமுடியுமா? முடியாது. எனவே அவற்றை ஞாபகங்கொள் கிறோம். ஆவணம் செய்கிறோம். அந்த ஞாப கங்களும், ஆவணங்களும் புதிய வளர்ச்சிப் படிகளில் எம்மை இட்டுச் செல்வனவாகுக.

இந்த ஆவணப்பணிகளில் தன்னை ஈடுபடுத்தி இம் மறுமலர்ச்சிச் சிறுகதைகளை தொகுத்துத் தந்த செங்கை ஆழியான் க. குணராசாவிற்கும் அணிந்துரை வழங்கிய மறுமலர்ச்சியின் இணையாசிரியர்களில் ஒருவரான வரதர்க்கும் எனது நன்றிகளைத் தெரிவிப்பதோடு மேற்கொண்டும் இவ்வாறான பல்வேறு ஆக்கங்களில் இவர்கள் போன்றோ ரையும், மற்றும் இலக்கிய ஆர்வலர்களையும் ஆய்வாளர்களையும் ஈடுபடுமாறு அழைக் கிறேன் அவற்றை வெளியிட நாம் எப்போதும் தயாராயிருக்கிறோம்.

சுந்தரம் டிவகலாலா
செயலாளர்
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு - கிழக்கு மாகாணம்,
திருகோணமலை

முன்னுரை

1943ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இலக்கிய ஆர்வம் மிக்க இளம் எழுத்தாளர்கள் சிலர் ஒன்றிணைந்து 'தமிழிலக்கிய மறு மலர்ச்சிச் சங்கம்' என்ற பெயரில் எழுத்தாளர் சங்கம் ஒன்றினை நிறுவிக் கொண்டனர். இலங்கையில் உருவாக்கப்பட்ட முதலாவது எழுத்தாளர் சங்கம் இதுவெனலாம். இந்தச் சங்கத்தை உருவாக்கவேண்டுமென்ற எண் ணத்தை யாழ்ப்பாண இந்துக் கல்லூரி ஆசிரிய ராகவிருந்த அமரர் வை. ஏரம்பமூர்த்தியும் (ஈழத்துறைவன்), அமரர் இரசிகமணி கனக செந்திநாதனும் முன்னெடுத்தனர். இவர்களோடு அசெமு (அ.செ. முருகானந்தன்), திசவ(தி.ச. வரதராசன்), ககாம (க.கா.மதியாபரணம்), கசெந (க.செ.நடராஜன்), சபச (ச. பஞ்சாட்சர சர்மா), அநக (அ.ந.கந்தசாமி) முதலானோரும் இணைந்து கொண்டனர். மறுமலர்ச்சிச் சங்கம் கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டு ''மறு மலர்ச்சி" என்ற பெயரில் சஞ்சிகையொன்றை வெளியிடுவதெனவும் தீர்மானித்தது.

ஆரம்பத்தில் மறுமலர்ச்சி ஒரு கையெழுத்துப் பத்திரிகையாக நடாத்தப்பட்டது. 1946ஆம் ஆண்டு பங்குனி மாதம் தொடக்கம் பார்வதி அச்சகத்தில் அச்சேற்றப்பட்டு மாத சஞ்சிகையாக வெளிவரத் தொடங்கியது. மறு மலர்ச்சி வெளியீட்டாளராக அமரர் க. செ. நடராஜனும், ஆசிரியர்களாக அ. செ. முரு கானந்தனும், தி.ச. வரதராசனும் பொறுப்பேற் றிருந்தனர். 1948ஆம் ஆண்டு தைமாத்தில் வெளிவந்த பத்தொன்பதாவது இதழிலிருந்து இருபத்திநான்காவது இதழ்வரை அ.செ. முரு கானந்தனுக்குப் பதிலாக திரு ச. பஞ்சாட்சர சர்மா, வரதரோடு ஆசிரியராக விளங்கி யுள்ளார். சராசரி 32 பக்கங்களைக் கொண்ட தாக 1946 பங்குனி மாதத்திலிருந்து 1948 ஐப்பசி மாதம் வரை மொத்தமாக 24 இதழ்கள் வெளிவந்துள்ளன.

மறுமலர்ச்சிச் சஞ்சிகையின் வரலாற் றில் மறுமலர்ச்சிச் சங்க உறுப்பினர்களிடையே ஏற்பட்ட அபிப்பிராய முரண்பாடு, நீதிமன்றம் வரை சென்ற சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது. தமிழிலக்கிய மறுமலர்ச்சிச் சங்கத்தை தாபிப் பதில் முன்நின்றுழைத்தவரான வை. ஏரம்ப மூர்த்தி சார்பானவர்களுக்கும் 'மறுமலர்ச்சி'ச் சஞ்சிகை ஆசிரியர்கள் சார்பானவர்களுக்கும் இடையே ''யாருக்கு மறுமலர்ச்சி சொந்தம்" என்ற பிரச்சினை தோன்றியது. இப்பிரச்சினை நீதிமன்றம்வரை சென்றது. மறுமலர்ச்சியை அச்சிட்ட பார்வதி அச்சகம் நீதிமன்றக் கட் டளைப்படி சிலகாலம் இயங்காது தடுத்து வைக்கப்பட்டது. எனினும், வழக்கில் ஏரம்ப மூர்த்தி பக்கம் தோல்வி கண்டது அவர்கள் மறுமலர்ச்சிச் சங்கத்திலிருந்து விலகிக் கொண்டனர்.

எவ்வாறாயினும் மறுமலர்ச்சி ஏடு தனது குறுகிய காலத்தில் ஈழத்து இலக்கியப் பரப்பில் சாதித்தவை மிகமிக அதிகமாகும்.

புதிய பல எழுத்தாளர்கள் உருவாகினர். மறுமலர்ச்சி ஏட்டில் இலங்கையர்கோன் சோ. நடராஜன், அ.செ. முருகானந்தன், நாவற் குழியூர் நடராஜன், சம்பந்தன், பொ.கிருஷ்ணன், வல்லிக்கண்ணன், து. உருத்திரமூர்த்தி (மஹா கவி), க.வேலுப்பிள்ளை, யாழ்ப்பாணன், சொக்கன், இ. சுப்பிரமணியம், ச. பஞ்சாட்சர சர்மா, அ.வி. மயில்வாகனன், க.சி. குலரத் தினம், சு. இராஜநாயகன் முதலியார் குல சபாநாதன், கு. பெரியதம்பி, பா. கதி ராயித்தேவி, பத்மாதுரைராஜா, மா. பீதாம்பரன், நடனம் (தி. நடனசபாபதிசர்மா) பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை, கா.பொ. இரத்தினம், கார்த்திகேயன், பண்டிதர் பொ. கிருஷ்ண பிள்ளை, சுயா, புரட்சிதாசன், சு. வித்தி யானந்தன், பண்டித தர்மரத்தினதேரோ, வித்து வான் வேந்தனார், சோ. தியாகராஜன் முதலானோர் எழுதியுள்ளனர்.

தமிழகத்தில் சிறுகதைத்துறைக்கு மணிக்கொடி எப்படி புத்தூக்கம் அளித்ததோ அதேபோல ஈழத்தில் சிறுகதைத் துறைக்கு மறுமலர்ச்சி புதியதொரு உத்வேகத்தை அளித் துள்ளது. உலகளாவிய தரத்திற்கு மறுமலர்ச் சிச் சிறுகதைகள் அமையாவிட்டாலும் அவை வெளிவந்த காலகட்டத்தில் சிறு கதையின் வடிவத்தையும் செழுமையையும் புரிந்து கொண்டு படைக்கப்பட்ட இலக்கிய ஆக்கங் களாக உள்ளன. ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்கு மறுமலர்ச்சிக் கதைகள் அடித் தளமாக அமைந்தன. வெளிவந்த 24 இதழ் களில் 52 சிறுகதைகள் வெளிவந்துள்ளன. இச் சிறுகதைகளில் 25 கதைகள் தரமும் தகுதி யும் கருதி இத்தொகுதியில் தெரிந்தெடுத்துச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஈழத்துச் சிறுகதை இலக்கியத்தின் முன்னோடி எழுத்தாளர்களில் இருவரான சம்பந்தன், இலங்கையர்கோன் ஆகியோரின் சிறுகதைகள் இத்தொகுதியிலிடம் பிடித் துள்ளன. அமரர் க. திருஞானசம்பந்தன் (சம்பந்தன்) இருபதுக்கு மேற்பட்ட சிறுகதைகள் எழுதியுள்ளார். கலைமகள், கிராம ஊழியன், மறுமலர்ச்சி, ஈழகேசரி முதலான சஞ்சிகை களில் அவை வெளிவந்துள்ளன. இவரது சிறுகதைத்தொகுதி ஒன்று அண்மையில் வெளிவந்துள்ளது. 'சாகுந்தலகாவியம்' சம்பந் தரின் கவித்துவத்திற்குச் சான்று, வீதி மனிதன் என்பன சம்பந்தரின் சிறப்பான சிறுகதைகளாம்.

இலங்கையர்கோன் சரித்திர, புராண, சமூகச் சிறுகதைகள் பலவற்றைப் படைத்துள் ளார். வெள்ளிப்பாதசரம் இவருக்குப் புகழ் சேர்த்த சிறுகதையாகும். வஞ்சம், தந்தைமனம், கடற்கரைக் கிளிஞ்சல், சங்கரவாகம் என்பன இவரது சிறந்த கதைகளாகக் கணிக்கப்பட்டு வருகின்றன. இவரது சிறுகதைகளின் தொகுப்பு 'வெள்ளிப்பாதசரம்' என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது.

மறுமலர்ச்சி எழுத்தாளர்களான அ.செ. முருகானந்தன், வரதர், சு. இராஜ நாயகன், கு. பெரியதம்பி ஆகியோரின் சிறுகதைகள் இத் தொகுதியிலுள்ளன. அ.செ.முருகானந் தனின் சிறுகதைகள் 'மனிதமாடு' என்ற தொகுப்பாக வெளிவந்துள்ளன. இவரது சிறுகதைகளில் வண்டிச் சவாரி, மனிதமாடு என்பன சிறப்பானவை. புகையில் தெரிந்த முகம் என்ற குறுநாவலும் நூலாக வெளிவந்து பெரும் பாராட்டைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. யாத்திரை இவர் எழுதிய ஒரு நாவலாகும்.

மறுமலர்ச்சிச் சஞ்சிகையைத் தக்க வாறு பயன்படுத்தித் தனது படைப்புக்களைத் தந்தவர் வரதராவார். இச்சஞ்சிகையில் சிறுகதைகளோடு மூன்று குறுநாவல்களையும் இவர் எழுதியுள்ளார். கற்பு, வீரம், வெறி என்பன இவரது சிறந்த சிறுகதைகளாகும். 'கயமை மயக்கம்' என்ற தலைப்பில் இவரது சிறுகதைகள் தொகுதியாக வெளிவந்துள்ளன. இத்தொகுதி பின்னர் 'வரதர் கதைகள்' என்ற பெயரில் தமிழ்நாட்டில் வெளியிடப்பட்டது. இவர் எழுதி அண்மையில் வெளிவந்த மலரும் நினைவுகள் (தீ வாத்தியார்) புனைகதை சாராத்துறையில் சிறப்பான ஓர் ஆக்கமாகும்.

ஈழத்தின் முன்னோடிச் சிறுகதை எழுத் தாளரான சம்பந்தனைக் குருவாக மதித்து எழுத்துலகில் புகுந்தவர் சு. இராஜநாயகன் ஆவார். மறுமலர்ச்சிச் சஞ்சிகை நடாத்திய சிறுகதைப்போட்டியில் முதற்பரிசில் பெற்றுக் கொண்டதன் மூலம் தன்னை ஆக்கவிலக்கிய கர்த்தாவாக இனங்காட்டிக் கொண்டவர். இவர் எழுதிய 'பிரயாணி' சிறந்த ஒரு நாவலாகும். சிற்பி தொகுத்த ஈழத்துச் சிறுகதைகள் என்ற தொகுப்பில் இவரது ''அவன்'' இடம் பெற்றுள்ளது.

மறுமலர்ச்சிச் சஞ்சிகை நடாத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசினைப் பெற்றதன் மூலம் எழுத்துலகிற்கு அறிமுகமான கு.பெரியதம்பி அதனைத் தொடர்ந்து மறு மலர்ச்சியில் அம்மான்மகள், குழந்தை எப்படிப் பிறக்கிறது?. காதலோ காதல், எட்டாப்பழம், மனமாற்றம், வீண்வதந்தி ஆகிய ஆறு சிறு கதைகளை எழுதியுள்ளார். அவை கனதி யானவை. மறுமலர்ச்சியில் அதிக சிறுகதைகள் எழுதிய பெருமை இவருக்கேயுரியது. விமர்சகர் கணிப்பில் அகப்படவில்லையென்பது விசனத் திற்குரியது.

தாழையடி சபாரெத்தினத்தின் இரண்டு சிறுகதைகள் இத்தொகுதியில் இடம் பிடித் துள்ளன. இவரது குருவின் சதி என்ற சிறுகதை 'கல்கி' நடாத்திய சிறுகதைப் போட்டியில் பரிசில் பெற்றது. மூத்த எழுத்தாளர் சொக் கனின் ஆரம்பகாலக் கதையொன்று இத் தொகுதியிலிடம் கொண்டுள்ளது. மறு மலர்ச சிக் காலத்திலிருந்து இன்றுவரை தொடர்ந்து எழுதிவரும் ஆக்கவிலக்கிய கர்த்தா சொக்க னாவார். 'கடல்' என்ற தொகுதியாகச் சொக்கன் சிறுகதைகள் வெளிவந்துள்ளன. சு. வேலுப்பிள்ளை அவர்களின் இரண்டு உருவகக் கதைகள் இத்தொகுப்பிலிடம் பெற்றுள்ளன. மணற்கோயில், வெறுங்கோயில், பாற்காவடி, மண்வாசனை என்பன இவரின் சிறந்த படைப்புக்கள். இவரது சிறுகதைகள் 'மண் வாசனை' என்ற தலைப்பில் தொகுதியாக வெளிவந்துள்ளன.

ஈழத்தின் தலைசிறந்த கவிஞர்களாகத் தம்மை இனங்காட்டிக் கொண்ட இருவரின் சிறுகதைகள் இத்தொகுதியிலுள்ளன. நாவற் குழியூர் நடராஜன் எழுதிய ஒரேயொரு சிறு கதையான ''சாயை'', மஹாகவி து. உருத்திர மூர்த்தி எழுதிய ஒரேயொரு சிறுகதையான ''தூக்கணாங்குருவிக்கூடு''என்பன அவையாம்.

மறுமலர்ச்சிச் சஞ்சிகையில் நடனம், வே. சுப்பிரமணியம், எஸ். ஸ்ரீநிவாசன், இ. பொன்னுத்துரை, வல்லிக்கண்ணன் ஆகியோர் ஒவ்வொரு சிறுகதை எழுதியுள்ளனர். இவர் களில் வல்லிக்கண்ணன் தமிழுலகம் நன்கு அறிந்த தமிழ் எழுத்தாளர், ஏனையோர் மறுமலர்ச்சிச் சிறுகதைகளுக்குப் பின்னர் தொடர்ந்து எழுதினார்களா என்பது தெரிய வில்லை.

இத்தொகுதியிலிடம் கொண்டுள்ள 25 சிறுகதைகளும் நாம் வந்த பாதையைத் திரும்பிப்பார்க்க உதவுகின்றன. சிறுகதை இலக்கியத் துறைக்கு மறுமலர்ச்சிச் சஞ்சிகை ஏற்படுத்திய புத்தூக்கம் 1946-1948 காலகட்டத் திலும் அதன் பின்னரும் மிக முக்கிய பணி யாகும். மறுமலர்ச்சிச் சஞ்சிகையில் எழுதிய புனைகதை ஆசிரியர்களான வரதர், அ.செ.மு., சொக்கன், சு.வே. இராஜநாயகன், தாழையடி சபாரத்தினம் ஆகியோர் தொடர்ந்து எழுதி ஈழத்துச் சிறுகதைத் துறையில் தமது பதிவுகளைச் செய்துள்ளனர்.

மறுமலர்ச்சிக் காலகட்டத்துச் சிறுகதை களில் சிறப்பானவையென நான் கருதியவை இச்சிறுகதைத் தொகுதியிலிடம் பெற்றுள்ளன. இவற்றை எழுதிய காலகட்டம் 1946/1948 என்பதையும், எழுதியவர்கள் தமது இளம் வயதில் இவற்றை ஆக்கியுள்ளனர் என்ப தையும் இச்சிறுகதைத்தொகுதியைப் படிப் பவர்கள் நினைவிற் கொள்ளல் வேண்டும்.

வடக்கு- கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு இந்தத் தொகுதியினை வெளியிடு

கின்றது. மறுமலர்ச்சி சிறுகதைகள் தொகுதி யாக வெளிவர வேண்டுமென ஆவலோடு விரும்பிய கல்வியமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா இத்தொகுதியை வெளி யிடுவதன் மூலம் இலக்கியப்பணியொன்றி னைச் செய்தவராகிறார். இது அவரதும் எங்களதும் குருவும், தமிழிலக்கிய மறுமலர்ச் சிச் சங்கத்தின் தாபகருமான அமரர் வை. ஏரம்பமூர்த்திக்கு செலுத்தும் அர்ப்பணமாகும்.

மறுமலர்ச்சி சஞ்சிகைகளின் தொகுப் பொன்றினை அதன் ஆசிரியர்களில் ஒருவராக விளங்கிய ச. பஞ்சாட்சரசர்மா வைத்திருக் கின்றார். 1995 வலிகாமம் இடப்பெயர்விற்கு முன்னர் அதனைப் படித்துப்பார்க்கும் அரிய வாய்ப்பு அவரின் மகன் கோப்பாய் சிவம் மூலம் கிடைத்தது. இடப்பெயர்வின் பின்னர் ச. பஞ்சாட் சரசர்மாவின் அரிய நூல்கள் பலவும் அழிந்து போயின. சேதமடைந்த நூல்களினுள் மறு மலர்ச்சித் தொகுதியை எடுத்துப் பேணிப் பாது காத்து இச்சிறுகதைகளைத் தொகுப்பதற்கு உதவியவர் திரு. கிருஷ்ணாநந்தசர்மா ஆவார். ஆக இந்த மூவரும் நன்றிக்குரியவர்கள்.

காலத்தின் தேவையொன்று இச்சிறு கதைத்தொகுதி மூலம் நிறைவேறுகின்றதெனில் அதன் பெருமை சுந்தரம் டிவகலாலா விற்குரியதே.

செங்கை ஆழியான் க. குணராசா
பதிவாளர்
யாழ் பல்கலைக்கழகம்
30-10-1997

அணிந்துரை

மறுமலர்ச்சிக்காலம்
அதை நினைத்தாலே இனிக்கிறது!
நெஞ்சுக்குள்ளே ஒரு உற்சாகம் பொங்கு கின்றது.!

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பது களின் முற்பகுதி - தமிழ் நாட்டில் மணிக் கொடியின் மணம் வீசிய காலம்.

தமிழ்நாட்டிலிருந்து வந்த கலை மகளும் ஆனந்தவிகடனும் யாழ்ப்பாண இலக் கிய வாசகர்களின் ரசனைக்குப் புதிய தீனி போட்ட காலம்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் இலக்கியச் சிந்தனைகள் புதுமணம் பரப்பிய காலம். நவாலியூர். சோமசுந்தரப் புலவர்,

''ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப் பனங்கட்டிக் கூழும்குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம்
தோழர்களே''

என்று யாழ்ப்பாண மண்ணின் மணங் கமழும் கவிதைகளை புதிய சந்தங்களில் பாடிய காலம்.

சம்பந்தன், சி. வைத்தியலிங்கம் 'இலங்கையர்கோன்' என்ற மூன்று யாழ்ப் பாணத்து இளைஞர்கள் கலைமகளில் சிறு கதைகள் எழுதத் தொடங்கியிருந்த காலம்.

ஈழகேசரிப் பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் சோ. சிவபாதசுந்தரம் என்ற புதுமை நிறைந்த இளைஞர் அமர்ந்திருந்து ஈழத்துத் தமிழ் இளைஞர்களை புதிய இலக்கியப் பாதையில் வழிகாட்டிய காலம்.

இளைஞர்களின் பயிற்சிக்காக கல்வி அனுபந்தம் என்ற இதழை வெளியிட்டு, 'ஈழ கேசரி இளைஞர் சங்கம் என்ற அமைப்பையும் நடத்திற்று.

ஈழகேசரி இளைஞர் சங்கத்தில் உறுப் பினராக இருந்த சிலரும், வேறு சில இலக்கிய நண்பர்களும் சேர்ந்து நடத்தியது தான் ''தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்".

13-06-1943ல் இந்தச் சங்கத்தின் ஆரம்பக்கூட்டம், யாழ்ப்பாணம் கன்னாதிட்டி யிலிருந்த திரு. ரேவதி குப்புசாமி என்ற சிற்பக் கலைஞனின் வீட்டு விறாந்தையிலே நடை பெற்றது.

இப்படி ஒரு இலக்கியசங்கத்தை நிறுவ வேண்டுமென்று சிந்தித்து, ஈழகேசரி இளைஞர் சங்கத்தின் மூலம் அறிமுகமான அ.செ. முருகானந்தன், அ.ந. கந்தசாமி, து. உருத்திர மூர்த்தி. கனக. செந்திநாதன், ச. பஞ்சாட்சரசர்மா, நாவற்குழியூர் நடராஜன் முதலியவர்களுக்கும் கடிதங்கள் எழுதி அவர்கள் மூலமாக இன்னும் சில இலக்கிய நண்பர்களையும் சேர்த்து அந்தச் சங்கத்துக்குப் பிள்ளையார் சுழி போட்டவன் பதினெட்டு வயதான ஒரு கிராமப்புறத்து இளைஞன் இது நடந்து ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு இதை எழுபத்துமூன்று வயதில் 'அந்தக் காலத்தின்' நெஞ்சு நிறைந்த நினைவுகளுடன் இதை எழுதுகிறான் - எழுதுகிறேன்.

ஒரு கதைபோல நினைவிலிருக்கிறது. அன்றைய கூட்டத்துக்குச் சுமார் (15-20) பேர் கூடியிருந்தோம்.

எல்லாரும் இளைஞர்கள். இலட்சிய வாதிகள் ஒவ்வொருவருக்கும் சுயசிந்தனை உண்டு. தாம் கருதியதே சரியென்று வாதாடும் மூர்க்கத்தனமும் உண்டு.

சங்கத்துக்குப் பெயர் சூட்டுவதிலேயே 'சண்டை' வந்துவிட்டது!

ஏதோ, நான் பெற்ற பிள்ளை என்ற மாதிரியான எண்ணத்தில் சங்கத்துக்கான பெயரையும் நான் ஏற்கனவே தீர்மானித்து வைத்திருந்தேன்.''

''புதுமைப்பித்தர்கள் சங்கம்!''

புதுமை விரும்பிகளான என்னுடைய நண்பர்களுக்கும் இந்தப் பெயர் மிகப் பிடித்திருந்தது.

ஆனால் சபையில் கூடியிருந்த பெரும் பான்மையினருக்கு இந்தப் பெயர் பிடிக்க வில்லை. முக்கியமாக ''பித்தர்கள்'' என்ற சொல் பிடிக்கவில்லை.

திருவாளர்கள் ஏரம்பமூர்த்தி, ஓட்டு மடம் பொன்னுத்துரை என்ற இரு இளைஞர் களை எதிர்ப்பாளர் பக்கத்தில் நினை விருக்கிறது.

ஏரம்பமூர்த்தி என்றவர் பிற்காலத்தில் ஏரம்பமூர்த்திமாஸ்டர் என்று யாழ்/இந்துக் கல்லூரியின் சிறந்த ஆசிரியராக இருந்தவர். பல இளைஞர்களை இலக்கிய வழியில் நடத்தியவர். நல்ல எழுத்தாளர், சிறந்த ஓவியக் கலைஞரும் கூட.

ஏரம்பமூர்த்தி மாஸ்டரும் அவரைச் சேர்ந்த பலரும் சங்கத்துக்கு ஒரு கண்ணிய மான பெயர் இருக்க வேண்டுமென்றும் புதுமைப்பித்தர்கள் என்ற பெயர் பெரியவர் களால் மதிக்கப்படமாட்டாதென்றும் மற்றவர்கள் பகிடி பண்ணக்கூடியதென்றும் எடுத்துக் கூறினார்கள்.

கடைசியில் ''தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்'' என்ற கண்ணியமான பெயரே சங்கத்துக்குச் சூட்டப்பட்டது.

சங்க உத்தியோகத்தர்கள் தெரிவு நடந்தபோது நான் பத்திராதிபர் ஆகத் தெரிவு செய்யப்பட்டேன்.

பத்திரிகை என்றால் கையெழுத்துப் பத்திரிகையின் பெயர் 'மறுமலர்ச்சி' என்று தீர்மானிக்கப்பட்டது.

நண்பர்களிடம் விஷயதானங்களைப் பெற்று அவைகளைச் சஞ்சிகைவடிவில் திரும்ப எழுதி ஓவியங்களும் வரைந்து நண்பர் களிடையே மாற்றி மாற்றி வாசித்தோம்.

கையெழுத்துச் சஞ்சிகையிலிருந்து என்னுடைய கனவு மேலே எழுந்தது.

எப்படியோ -

எப்படியோ அந்தக் கனவு நனவாயிற்று!

1946ஆம் ஆண்டு பங்குனி மாதத்து 'மறுமலர்ச்சி'யின் முதல் பிரதி அச்சுவாகனமேறி வெளிவந்தது!

நான் நாவற்குழியூர் நடராசன். பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா, இ. சரவணமுத்து (சாரதா) - நாங்கள் கொஞ்சக்காலம் பட்டபாடும் அதிகம், பட்ட குதூகலமும் அதிகம். அதிகம்!

பழைய மரபுவழி காவியங்கள். கவிதைகள் தான் இலக்கியம் என்று நம்பிக் கொண்டிருந்த படித்தவர்களுக்கு மத்தியிலே, புதிய சிறுகதைகளும் நவீன கவிதைகளும்கூட இலக்கியம்தான் என்று எடுத்துக் காட்டி எழுந்து நின்றது 'மறுமலர்ச்சி'.

பல புதிய இளைஞர்களை எழுத்தாளர்களாக 'மறுமலர்ச்சி' அறிமுகம் செய்து வளர்த்து வைத்தது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே ஈழத்தில் புதிய இலக்கியம் எவ்வாறு சிறந்திருந்தது என்பதை இந்த 'மறுமலர்ச்சிக் கதைகள்' எடுத்துக்காட்டும்.

ஈழத்து இலக்கிய வரலாற்றின் நல்ல தோர் ஆவணம் இது.

இந்நூலின் வெளியீட்டில் பங்கு கொண்ட அனைவரையும் இலக்கிய உலகம் பாராட்டும்.

வரதர்
84/3, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்
01-11-1997

¥¥

வாழ்ந்து கெட்ட மனிதர் சிலர், பேசிக் கெட்ட மனிதரோ பலர், ஆகவே முதலில் காப்பாற்றப்பட வேண்டுவது நாக்கு.

-ஜென்கின்-

பேசாத மொழி உறையில் உள்ள வாள். பேசிவிட்டால் பிறர் கையில் கொடுத்து விடுகின்றாய்.

-குவார்ல்ஸ்-

மட்டக்களப்பு மான்மியம்
நூல் வரலாறு

எவ். எக்ஸ். சி. நடராசா

பதிப்பாசிரியர்
மகாவித்துவான், வித்துவ சிரோமணி
இலக்கியச் செம்மல், கலாசூரி
இலக்கிய கலாநிதி
எவ். எக்ஸ். சி. நடராசா



மண்ணுலகு : 21:07:1911
விண்ணுலகு: 16:03:1997

மட்டக்களப்பின் சரித்திரத்தைக் கூறும் இந்நூல் யாரால் எந்த ஆண்டில் எழுதப்பட்ட தென்ற விபரங்களை நூன்முகத்தானும் மறுமுகத்தானும் அறிந்து கொள்ள முடிய வில்லை. நூலின் போக்கினையும் வாக் கினையும் நோக்குமிடத்து இது பல்லோரால் பற்பல காலங்களில் எழுதிச் சேர்க்கப்பட்ட தென்பது புலனாகின்றது.

மட்டக்களப்பிலே பல தேவாலயங்கள் இருக்கின்றன. இவற்றுட் பல காலத்தால் பழமை யானவை. கொக்கட்டிச் சோலை, மாமாங்கம், மண்டூர், திருக்கோயில், சித் தாண்டி, வெருகல் முதலாம் இடங்களிற் காணப்படும் கோயில்கள் காலத்தால் பெருமை வாய்ந்தவை. திவ்விய தலங்களாகவும் போற்றப் படுகின்றன. இவை கோயில்களிற் செப்பேடுகள் பல இருக்கின்றன. செப்புத் தகடுகளில் கோயில் வரலாறு, பத்ததி நடைமுறை முதலியவற்றை அக்காலத்துப் பெரியவர்கள் எழுதிவைப்பது வழக்கம்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் சரித்திரத்தை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்ட



முதலியார்
திரு. S.O. கனகரத்தினம் M.S.C.
அவர்களின் நற்பணிக்கு
இந்நூலை
உரிமையாக்குகின்றேன்

கோயில் வரலாறுகளும், வழமை களும், பத்ததி நடைமுறைகளும் பெருகப் பெருகப் புதுப்புது மாற்றங்களும் வந்தடைய லாயின. பெருகிய வரலாறுகளைச் சிறிய தகடுகளில் எழுதிவைக்க முடியாமைகண்டு அவற்றை ஏடுகளில் எழுதி வைப்பாராயினர். இவ்வகை ஏடுகள் கோயிலுக்குக் கோயிலுள. இவற்றை வெளியெடுப்பது சாலாக்காரியம். ஏட்டு வடிவத்தில் மட்டக்களப்புச் சரித்திரம் இதுவரை அடங்கிக் கிடந்தது. ஏடுகளும் கோயில்களில் அடங்கிக்கிடந்தன. ஒரு சில விடயங்கள் வெளிவந்தன. ஆங்கிலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் சரித்திரம் எழுதிய முதலியார் திரு.S.O.கனகரத்தினம் M.S.C. அவர்கள் இவ்வகை ஏடுகளிலிருந்து சிலதும் பலதுமான விடயங்களை எழுதிக்காட்டி யுள்ளார். வேறு எவரேனும் இதுவரை நூல் வடிவில் மட்டக்களப்புச் சரித்திரம் எழுதினாரல்லர்.

மட்டக்களப்பு மான்மியம் என்ற இந்த ஏட்டு வடிவ நூல் இதுவரை அச்சேறவில்லை. ஏட்டு வடிவமும் பலருக்குக்கிடைத்தபாடில்லை. ஆகவே இவ்வகை நூலொன்று இருப்பதாகப் பலருக்குத் தெரியாது.

மயில்வாகனப் புலவரால் எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவமாலை எழுந்தகாலத்தே இந்நூலின் ஒரு சில பகுதி எழுதப்பட்டிருக் கலாம் என்று கருத நூலிற் சில பகுதிகள் சான்றுபகருகின்றன. இந்நூலில் ஆதிகாலந் தொட்டு ஒல்லாந்தர் காலம் வரையுள்ள சரித் திரம் கூறப்பட்டிருக்கிறது. ஆங்கிலேயரின் ஆட்சித் தொடக்கமும் ஓதப்பட்டிருக்கிறது.

மகாவம்சத்திற் கூறப்பட்ட பல சங் கதிகள் இந்நூலில் ஒத்திருக்கின்றன. பாலி மொழியில் அடங்கிக்கிடந்த மகாவம்சக் கதைகள் பல இந்நூலகத்தே இருக்கின்றன. மகாவம்சத்துடன் ஒத்துப் போகாத விடையங் களுமிருக்கின்றன. ஆகவே இந்நூல் மகாவம் சத்தை தழுவி எழுதப்பட்டதென்பதற்கு ஆதாரமில்லை. மகாவம்சத்திலுள்ள சரித்திரம் அறிந்தபின்னரே எழுதப்பட்டிருக்குமாயின் முன்பின் முரணின்றி முடிந்திருக்கும்.

விசயனும் அவன் தோழர்களும் தென் மதுரையிலிருந்து பெண்கள் பெற்றனரென்று மகாவம்சம் கூறுகின்றது. இந்நூலோ வடமதுரையிலிருந்து பெற்றதாக நவில்கின்றது.

மகாவம்சத்திற் கூறப்படும் பேரரசர்கள் பற்றியும் இந்நூல் எடுத்துரைக்கின்றிலது. பொலநறுவையில் ஆண்ட வேறு அரசர்களை எடுத்துரைக்கும் இந்நூலில் பராக்கிரமபாகு வைப்பற்றி ஒருவசனமுமில்லை.

ஆடகசவுந்தரியின் சரித்திரம் இந்நூலில் வேறோர் முறையிற் கூறப்பட்டிருக் கின்றது. குளக்கோட்டன் கதை எதுவுமில்லை.

யாழ்ப்பாணப் பகுதியை இந்நூல் நாகதீபம், மணற்றி, மணற்றிடர், மணிபுரம் என்ற பல பண்டைப் பெயர்களால் விரித்துரைக் கின்றது.

இடப்பெயர் வரலாறுகளும் இந்நூலிற் காணப்படுகின்றன. பண்டை நூல்களில் இவ் வகை விபரம் காணுமாறில்லை.

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் இவர் களின் வரலாறுகள் வேண்டிய இடத்திற் காட் டப்பட்டிருக்கின்றன. சில ஆண்டுகள் அரசர் களின் நாமங்கள் மாறுபட்டுமிருக்கின்றன.

பஸ்கோல் முதலியின் சரித்திரம் மட்டக்களப்புப் பகுதியில் பேசப்பட்டுவருகின்றது. இவனின் சரித்திரம் வேறு நூல்களில் இல்லை.

கண்டி அரசர்களைப் பற்றியும் விரித்துரைக்கின்றது காலவரையறை புரியாது அரசர்களை மாறுபடவுங் கூறியுண்டு.

இவ்வகைக் காரணங்களை மனதிற் கொண்டு ஆராயுமிடத்து இந்நூல் வேறோர் நூல்வழி வந்ததன்று என்பது புலனாகும்.

ஆகவே, இந்நூல் மற்று சரித்திர முதநூல்கள் போல் விளங்குகின்றது எனலாம்.

இந்நூலில் பண்டைச்சரித்திரமும் உண்டு ஒல்லாந்தர் வரையுள்ள இக்கால சரித்திரமுமுண்டு. ஆகவே, இது பழமை யானது, புதுமையானது.

மாகாவம்சம் கூறுவதுபோல் சிங்கத் தின் கதையைத் தழுவாது சிங்ககுல இளவ ரசன் வங்கதேசத்து பெண்ணைத் தூக்கிச் சென்று மணமுடித்துப் பிள்ளைகள் பெற்றதாக இந்நூல் விரித்துரைக்கின்றது. ஆகவே. விசயனின் மூதாதைகள் சரித்திரம் தெளிவாக இந்நூலில் எழுதப்பட்டுண்டு.

கலியுக ஆண்டுகளையே இந்நூல் கையாண்டு வந்திருக்கிறது. பழைய நூல்களி லேதான் இவ்வகையாண்டு முறை கையாளப்படும்.

பண்டைக்காலத்தில் இலங்கை திரிசிங்க நாடாகப் பிரிக்கப்பட்ட வரலாறு நவமானமுறையில் தரப்பட்டிருக்கிறது. எல்லாளனும் இவ்வகைப் பிரிவிற் பங்கு கொள்ளுகின்றான்.

ஆடகசவுந்தரியின் ஆட்சியோடு உன்னரசுகிரி என்ற தலைநகரம் தோன்றுகிறது. இது எங்கே இருந்தது என்பது தெளிவாக வில்லை. சதாதீசன் கட்டியதாக கூறப்படும் தீர்க்கவாவி (மகாகந்தக்குளம்)யின் பக்கலில் இருந்ததாக அனுமானிப்பர்சிலர், அனுரதபுரி என்பர் மற்றுஞ் சிலர், கண்டிக்குப் பக்கத்தில் உள்ளதென்பார் வேறு சிலர்.

ஆடகசவுந்தரியை மகாவம்சக் கடைசி அரசனான மகாசேனன் மணம் முடித்தான் என்று இந்நூல் கூறுகின்றது. இவனே கந்தளாய் மின்னேரிக் குளங்களைக் கட்டியவன். யாழ்ப்பாண வைபவமாலையிலும், கோணேசர் கல்வெட்டிலும் கூறப்படும் குளக்கோட்டன் இவன் போலும். இது ஆராய்ச்சிக்குரியது.

பொலநறுவைக்கு இந்நூல் புதுமை யான பெயரை வழங்கியிருக்கின்றது. தோப்பாவை என்கின்றது. இப்பெயர் எவ்வாறா யிற்றோ என்று புலனாகவில்லை.

இந்திய சரித்திரங்கூட இங்கு காட்டப் பட்டிருக்கின்றது. மகமது சூசினி எனபானின் நிர்ப்பாக்கியத்தால் முற்குகக் குடிகள் மூன்று படகுகளில் மட்டக்களப்பில் வந்து குடியேறி னதாக எழுதப்பட்டிருக்கின்றது.

கோவிலார் என்ற சாதிமக்களே பின்னர் கோவியர் எனப்படலாயினர் என்பதற்கு இந்நூல் சான்று பகர்கிறது.

இந்நூலின் வசனநடை, சொற்பிர யோகம் இவற்றை நோக்கும்போது பழமைக் கும், புதுமைக்கும் இடைப்பட்டதாய் அமை கின்றது. வசனநடை பல படியாக வளர்ந்து வந்திருக்கின்றது. கதைசொல்லுவதுபோல நீண்ட வசனங்களும், விளக்கிக்காட்டுவதுபோல் சிறு சிறு வசனங்களும் காணப்படுகின்றன. யாழ்ப்பாண வைபவமாலையின் வசன நடை வேறு: இதன் வசனநடை வேறு. வகுத்தும் தொகுத்தும் காட்டுவது போன்று நூல் நடந்து செல்கின்றது, சொற்பிரயோகங்களும் விசித்திர மானவை. இக்காலத்து வழங்கும் சங்கதச் சொற்களுமுள.

இவையெல்லாவற்றையும் நோக்கு மிடத்து இந்நூல் யாரோ ஒருவரால் மாத்திரம் செய்யப்பட்டதென்று துணிவதற்கில்லை. பல்லோராற் பற்பலகாலங்களிற் செய்யப்பட்ட தென்பதே புலன்ாகின்றது.

இதனை எழுதியவர்கள் யாவரும் உண்மை வரலாறு அறிந்தவர்களாகவே தோற்றப்படுகின்றனர். பண்டைய வரலாறுகளில் அபிப்பிராயபேதம் இருப்பதால் அவைபற்றி உறுதியாக எதுவுஞ் சொல்ல முடியாது.

மாகன் படையெடுத்துவநது இலங் கையை வென்றமை யாவராலும் ஒப்புக்

கொள்ளப்படுகின்றது. இவனின் சரித்திரம் ஆதி யோடந்தமாக விரித்துரைக்கப் பட்டிருக்கின்றது.

போர்த்துக்கீசருக்கு எதிராக, அவர்கள் கோட்டை கட்டும் மட்டக்களப்பில் மூவர் சாதி யினரான சோனகரைக் கண்டி அரசனான செனரதன் குடியேற்றினான். நூலின்படி விமல தருமன் இதனைச்செய்தான் என்றிருக்கின்றது. சங்கதி சரி: அரசனின் நாமம் தவறானது.

1640இல் போர்த்துக்கலுக்கும், ஒல்லாந் துக்குமிடையில் உண்டாய சமாதானம் இந் நூலிற் பேசப்படுகின்றது. நூலின் பக்கம் 63இல் இதுவிரித்துரைக்கப்படுகின்றது.

ஒல்லாந்தர் மட்டக்களப்பை ஆளும் போது அங்கு போடிகளாக நியமிக்கப்பட்ட இருவர் பெயர் கூறுபட்டிருக்கிறது. இவர்களுக் குக் கொடுத்த ஆக்கத்தின் விபரங்கூட வரை யப்பட்டிருக்கின்றது. அனுபந்தத்திலுள்ள ஆக் கத்துடன் ஒப்புநோக்குக. போடிகள் கல்வெட்டும் நோக்குக.

பெரிய கல்வெட்டின் ஈற்றடிகள் குகன் குலத்தோர் தங்கள் குலவரிசையை எடுத் துரைப்பதுபோல் எழுதப்பட்டிருகின்றது.

''**மதிநுதல் ஒல்லாந்த மன்னனே கேளும்**
இதுவே குகன் குகன் குலமென அறிவாமீ''
என்கின்றது.

ஆகவே, இந்நூலும் யாழ்ப்பாண வைபவமாலை நவில்வதுபோல் ஒல்லாந்தரின் தூண்டுதலால் எழுதப்பட்டிருக்கலாமோ என்று நினைக்கவும் இக்குறிப்பு இடந்தருகிறது.

பெரிய கல்வெட்டு, தாதன் கல்வெட்டு, போடி கல்வெட்டு இவையெல்லாம் அகவற் பாவாலானவை. இவையும் வரலாறு கூறுவன. வசனப்பகுதியிலுள்ள சில சம்பவங்கள் செய் யுள் நடையிற் தரப்பட்டிருக்கின்றன. ஆகவே நூல், வசனமும், செய்யுளுமாகச் செய்யப் பட்டிருக்கிறது எனலாம்.

இவ்வண்ணம் பல்லாற்றானுஞ் சிறந்து விளங்கும் இந்நூலை வெளியிட்டுவைக்கும் வாய்ப்பு கிடைத்தமையிட்டுப் பெரிதும் மன மகிழ்ச்சியடைகின்றேன். மட்டக்களப்பு மக்கள் இதனை ஏற்று மேலும் ஆவண ஆராய்ச்சிகள் செய்து திருத்திக்கொள்ள உறுதுணையாக இருப்பார்கள் என்றும் நினைக்கின்றேன்.

இந்நூலை மட்டக்களப்பு மாவட்டத்தின் சரித்திரத்தை ஆங்கிலத்தில் எழுதிக்காட்டிய பெருமகனார் திரு.சின்னத்தம்பி உடையார் கனகரத்தினம் M.S.C. அவர்களுக்கு உரிமை செய்கிறேன்.

சிந்திப்பதற்குச் சில துளிகள்....

- மலருக்கு மணமும் மனிதனுக்கு குணமும் மிக அவசியம்
- உனக்காகப் பொய் சொல்லுபவன் நாளை உனக்கு எதிராகவும் பொய் சொல்லுவான்

கலை நிகழ்வுகள்



முத்தமிழ் விழா 2003



முத்தமிழ் விழா 2004



"ஏழுபிள்ளை நல்லதங்காள்" நாடகத்தில் மாணவர்கள்



ஆரம்ப பிரிவு நாடகக்குழு



"காத்தவராயன் கூத்து"



2003 பரிசளிப்பு விழாவில் கோலாட்டம்

ஒளி விழா நிகழ்வுகளில் முதன்மை விருந்தினர்களாக...



2002ல் வணபிதா கிறிஸ்தோபர் அடிகள்



2003ல் வண. பிதா ரூபன் மரியாம்பிள்ளை அடிகள்



2002ல் சகோதரி அனிற்றா வோட்



2003ல் வண.பிதா ரூபன் மரியாம்பிள்ளை பரிசில் வழங்குகிறார்

என் அன்னை அவள்

-மானியூர் குணா-
யாழ். பல்கலைக்கழகம்

என் அன்னை அவள்
இதயம் நிறைந்தவள்; - என்
மனதைக் கரையவைக்கும்
மகா நினைவுகளை
மலர வைப்பவள்!
அவளுள் நான் பிரவேசித்தேன்.
அவளோ என்னுள்ளே
ஒழுக்கமும் உயர்வும் பிரசவித்தாள்.
எண்ணற்ற எண்ணங்கள்
என்னுள்ளே இன்று
மார்கழி வயலாட்டம்
பசுமையாய் தோன்றிட
காரணம் அவள்.
காதலுடன் கல்வியை நான்
கனிவோடு பெற்றிட
கலங்கரை விளக்காய் நின்று
கனவழி காட்டியவள்.
பல்கலை கற்றிட
படிக்கல்லாய் அமைத்தவள்
ஆளுமை விருத்திக்க
அத்திவாரமிட்டவள்.
வாழ்வு வளம் பெற
வழிபல சொல்லி எனை
வாழ்த்தி வளர்த்தவள்.
இலட்சியக் கனவுகள்
ஏராளம் விதைத்தவள்
''நிறை வாழ்வு'' என்ற
மகுட வாசகத்தை - என்
நெஞ்சமதில் நீளமாய்
பச்சை குத்தியவள்.
உயர்வுகளுக்கெல்லாம்
ஊன்றுகோல் தந்தவள்
சாதி, மதமென்ற
சாக்கடைப் புழுக்களை - என்னுள்
சாகடித்தவள்.
சரித்திரம் புகழ் பெற்ற
சமுத்திரம் அவள் - அவளுள்
மூழ்சி முத்தெடுத்து
முன்னேறி இருப்பவர் பலர்.
முன்னேற இருப்பவரோ
இன்னும் பலர், இன்னும் பலர்.
மொத்தத்தில் அவளென்
மூச்சோடு கலந்தவள்.
உயிருடன் மட்டுமல்ல,
உதிரத்து ஓட்டத்திலும்
ஒன்றித்து விட்டவள்.
மானியம்பதியிலே
மாண்புற விளங்கும்
மேன்மை கொண்ட அவளே - என்
''**மெமோறியல்**'' தாய்!



நவீனத்துவமும் அதனால் ஏற்பட்ட அரசியல் பொருளாதார பண்பாட்டு மாற்றங்களும்

ச. சற்குணராஜா (எமது கல்லூரி மாணவன்)
பல்கலைக்கழகம் - 2ம் வருடம

நவீனம் பற்றிய உலகப் பொதுவான சிந்தனைகளோடு அது பற்றி வரையறை செய்வோமாயின் ஆங்கிலத்திலே Modernity, Modernism Modernizyation, Post Modernism என்னும் பதங்கள் தமிழிலே முறையே நவீனத்துவம், நவீனவாதம், நவீனமயமாக்கல் பின் நவீனத்துவம் என்றவாறு பொருள்படக் காணலாம். இவற்றிற்கிடையேயான பொருளில் அடிப்படையாக நோக்குமிடத்துச் சில வேறுபாடுகள் உள்ளனவாயினும் ''புதுமை'' எனப் பொருள்படும் Modern என்னும் சொல்லை அடியாகக் கொண்டே இவை பிறந்தன எனலாம். இவ்வகையில் நவீனம் என்பது ''வழி வழி வந்த மரபிலிருந்து மாறுபடுதல், புதுமையை நாடிச் செல்லல். பிரக்ஞை பூர்வமாகப் புதுமையை ஏற்றல்'' என்னும் கருத்துப் பண்புகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதை அறியலாம்.

நவீனத்துவம் (Modernity) என்பது அரசியல் பொருளாதார பண்பாட்டு அம்சங்கள் யாவற்றினதும் ஒருவகை மாற்றம் அல்லது வளர்ச்சி நிலையைச் சுட்டி நிற்கின்றது. இந்த நவீனத்துவத்தின் பிரதான பண்புகள் சில்வற்றை நோக்குவோம். கைத்தொழிற் புரட்சிகளினூடாக பொருளாதாரத்திலே சுயநிறைவான வளர்ச்சி, அல்லது குறைந்த பட்சம் உற்பத்தி நுகர்வு ஆகிய இரண்டிலும் கிரமமான அதிகரிப்புக்கும் போதுமான வளர்ச்சி ஏற்பட்டமை. ஆட்சி நிர்வாகத்தில் பொதுமக்கள் ஈடுபடுதல், குறைந்த பட்சம் ஆட்சி மாற்றங்களை வரை யறை செய்வதிலும், தெரிவு செய்வதிலும் ஜனநாயகம் பிரதிநிதித்துவத் தன்மைகள் காணப்பட்டமை. சமயம் செல்வாக்கிழந்து போக கலாசாரத்தில் சமயச் சார்பற்ற அறிவு சார்ந்த கருத்துக்களின் தோற்றம் சமூக உள இயக்கத்தில் தனிமனித சுதந்திரத்தைக் குறிக்கும். சமூக அசைவியகத்தில் அதிகரிப்புப் போன்றவையே நவீனத்துவத்தின் பிரதான பண்புகளாக விளங்குகின்றன.

நவீனமயமாக்கம் (Modernizyation) என்பது மரபு சார்ந்த அம்சங்களை இத்தகைய நவீனத்துவ அளவு கோல்களுக்கேற்ப மாற்றியமைத்தலைக் குறித்து நிற்கின்றது. ஆனால் நவீனவாதம் என்பதோ (Modern-ism) 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் மேலைச் சூழலில் யதார்த்தவாதத்திற்குப் பிந்தித் தோன்றிய ஒரு கலை இலக்கியக் கோட்பாட் டைக் குறிக்கும். குறிப்பாக 18ஆம் நூற்றாண்டின் பின்னர் மதம், கலை, இலக்கியம் ஆகிய துறைகளில் செயற்பட்ட ஓர் இயக்கமே இந்நவீனவாதம் எனலாம். இங்கு 19ஆம் நூற்றாண்டின் பின்னர் தோன்றிய கலை இலக்கியக் கோட்பாட்டின் அடிப்படை அம்சங் களைச் சுட்டுவது பொருத்தமாக அமையும். சுட்டிப்பாக பயன்படுத்தும் ஊடகம் (Media) வடிவம் (Form) என்பவற்றை அவதானித்து உணர்வோடு எழுத்தாக்கம் தோன்றல், எதிர் எதிர் கருத்துக்களை அருகருகே அமைத்தல், வெட்டித் தொகுத்தல், முரண் இரட்டைத் தன்மை என்பவற்றை எழுத்தில் கையாளுதல் மனித ஆளுமையின் சிதைவை இலக்கிய வடிவில் வடித்தல் போன்ற அம்சங்களை கலை இலக்கியக் கோட்பாட்டின் நவீனத்துவக் கருத்தாக எடுத்துக் கூறலாம்.

இவ்விடத்தில் இந்நவீனத்துவத்தின் பணிகள் பற்றி நோக்குமிடத்து பாரம்பரியமான மரபுசார்ந்த கூறுகளை மேற்படி தேவை

களுக்கேற்ப மாற்றி அமைத்துக் கொள்ளுதலை இதன் பிரதான பணி எனச் சுட்டலாம். இது பற்றி சமூக விஞ்ஞானக் கலைக்களஞ்சியம் பின்வருமாறு கூறுகிறது. மரபு ரீதியானவற்றைப் புதுமைக்குக் கீழ்ப்படுத்துவதும் நிலைபேறாக இருக்கின்ற சம்பிரதாய பூர்வமானவற்றைத் தேவைகளுக்கேற்ப மாற்றி அமைத்துக் கொள்வதற்குமான ஒரு மனப் போக்கு" எனக் கூறுகிறது. புதுமையைப் பேணுவதாகவும், புதுமையைப், புரட்சிகரமானவற்றை மேற்கொள்வதாகவும் இந்நவீனம் விளங்குவதைக் காணலாம். அத்துடன் பழமையினை அழியாது பேணுவதற்காக அதனைப் புதுமையோடு இணைத்தலும் இதன் முக்கிய பணியாகின்றது. உதாரணமாக நோக்குமிடத்து பொதுவாக இந்திய மண்ணிலே மதங்கள் மீது நவீனத்துவம் தொழிற்படுகையில் பழமையும் பேணப்படுவது குறிப்பிடத்தக்கது.

காரணமின்றி காரியம் நிகழ்வதில்லை. ஊக்கிகள் ஏதும் இன்றி உருப்பேறும் நிகழ்வதில்லை. இவ்வகையில் இன் நவீனத்துவத்தின் உருப்பேற்றில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் பற்றியும் நோக்கல் அவசியமானதாகும். நவீனத்துவம் என்பது தொடர்ந்து நடைபெறும் ஓர் வளர்ச்சி நிலை ஆகும். எனினும் முதலாளித்துவ சமூக அமைப்பின் தோற்றத்துடன்தான் நவீனத்துவம் பற்றிய பிரச்சனைகள் முதலில் தோற்றம் பெற்றன. என்பதை வரலாறு எடுக்குக் காட்டுகின்றது. இம்முதலாளித்துவ பொருளாதார அடித்தளம் தன் வளர்ச்சிக்கு உதவும் வகையில் சமூக, சமய, அரசியல் பண்பாட்டு நிறுவனங்களை மாற்றியமைக்க வேண்டிய தேவையானது நிர்ப்பந்தங்களைத் தோற்றுவித்தது. இம்மாற்றமானது பாரம்பரிய நிலப்பிரபுத்துவ நிறுவனங்களின் அமைப்புக்களிலிருந்து பெரிதும் வேறுபட்டதாகும். இம் முதலாளித்துவ சமூக அமைப்பானது உருவாக்கிய கோட்பாடுகளாக பின்வருவனவற்றைக் கூறலாம். மத நிறுவனங்களுக்கும் மூடநம்பிக்கைகளுக்கும் எதிரான விஞ்ஞான மனப்பாங்கு தனிமனித சுதந்திரம், அரசியலில் ஜனநாயகக் கோட்பாடு, மக்களிடையே சமத்துவம், பெண்களுக்கு சமவுரிமை, கலை இலக்கியத்தில் சார்பின்மை, புதிய கலை இலக்கிய வடிவங்களின் தோற்றம் என்பனவே அவையாகும். இத்தகு அம்சங்களே நவீனத்துவத்தின் உருப்பேற்றில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளாகின்றன. இக்காரணிகள் நிலபிரபுத்துவப் பண்பாட்டுக்கு எதிரானவையெனினும் இவ்வாறு வளர்ந்த வரலாற்றையே ஐரோப்பிய வரலாற்றில் "மறுமலர்ச்சி" என்பர்.

இத்தகு ஐரோப்பியரின் வருகையானது கீழைத்தேசங்கள் பலவற்றில் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அவர்களோடு கூடவே அச்சியந்திரங்களின் வருகையானது சிறப்பான விடயமாகும். எனினும் இவ்வச்சியந்திங்கள் கி.பி. 1835ஆம் ஆண்டு வரை அரசாங்கம் மட்டுமே வைத்திருக்கக் கூடியதோர் கட்டுப்பாட்டு நிலமை காணப்பட்டது. ஆனால் பிற்பட்ட காலப்பகுதியில் அச்சியந்திரப் பாவனையிலும் சுதந்திரம் பேணப்பட்டது. அதாவது அரசாங்கம் மட்டுமன்றி தனியாரும் அச்சியந்திரங்களை வைத்திருக்கக் கூடிய நிலை ஏற்பட்டது. இதனால் நூல்கள் பல அச்சேற்றப்பட்டமையால் வாசகர் பெருக்கம் ஏற்பட்டது. இவ்வாறு வாசகர் பெருக இலக்கியங்களும் பெருகின.

நவீனத்தினுடைய மற்றுமொரு பண்பாக தேசிய உணர்வில் எழுச்சியைக் குறிப்பிடலாம். உதாரணமாக அந்நியரை வெளியேற்ற இந்தியாவில் இந்திய தேசியம் எழுச்சி பெற்றது. இத்தகு எழுச்சியின் பிரகாரம் அந்நியரை வெளியேற்றும் உணர்வோடு இயக்கங்கள் பல தோன்றின. அவ்வியக்கங்களின் பிரசுரங்களை அச்சியந்திரங்களின் துணை கொண்டு உருவாக்கி வெளியிட்டனர். இவ்வாறு தேசிய இயக்க சூழலின் பின்னணியில் ஏட்டில் இருந்த இலக்கியம் அச்சில் வரும் பொழுது அவ் இலக்கியம் படைப்பாளியிடமிருந்து அந்நியப் படத் தொடங்கியது. ஏட்டில் இருந்த கால கட்டத்தில் அது படைப்பவன், அதை வாசிக்கக் கேட்பவன், வாசிப்பவன் என்ற சிறு வட்டத்துக்குள் இலக்கியம் பயிலப்பட்டது. ஆனால் அச்சு முறையிலே இலக்கியம் மலரும் போது

அவை பரந்த ஒரு வாசகர் கூட்டத்தை நோக்கிச் சென்றன. இது ஒரு வகையில் இலக்கியத்தை முதலாளித்துவம் சார்பாக்குவ தாக இங்கு கருத வேண்டும். அதாவது அச்சியந்திரங்களைக் கொண்டு இலக்கியத்தை அச்சிட்டு விற்பனை செய்து அதையே தொழி லாகக் கொண்டு செயற்படும் நிறுவன அமைப்புக்களும், இதனால் தோற்றம் பெறு கின்றன. இதன் விளைவு பரந்த வாசகர் வட்டம் தோன்ற அதற்குத் தீனி போடுவதற்காகவே இலக்கியங்கள் ஆக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. இலக்கியமானது இந்நிலையில் ஓர் ''நுகர்வு பண்டம்" ஆயிற்று. இவ்வகையிலேயே பத்திரிகைகள், சஞ்சிகைகள், வாசிக்கும் பொழுது அவை பசி தீர்ப்பனபோல் அமையக் காரணம். அவை நுகர்வுத்தன்மையை ஏற்ற மையே! ஆனால் கம்பராமாயணம், மகாபாரதம் போன்றன நுகர்வுத் தன்மை பெறாமை காரணமாக அவை எமது ஓய்வு நேரத்தை உள்வாங்கின.

இவ்வாறு பல்வேறு காரணிகளைக் கொண்டு உருப்பேறடைந்த நவீனத்துவச் சிந்தனைகளை ஆராயும் அதேவேளை உலகப் பொதுவாக அது ஏற்படுத்தும் தாக்கங் களையும் அறிய வேண்டும். கொடுமை விளை விக்கும் பல போர்கள் தோன்றி உயிர்கள் உடலகங்கள், உடமைகள் என பல்வேறு இழப்புக்கள் ஏற்பட்டிருப்பினும் அவற்றாலும் பல புதுமைகள் தோன்றியுள்ளமையை நாம் மறுக்கவோ மறக்கவோ முடியாது என்பது வரலாற்று உண்மை. இவ்வகையில் முத லாவது ஐரோப்பியப் போரினால் விண்ணிற் பறக்கும் விமானங்கள் தோன்றின. இரண்டாவது ஐரோப்பியப் போர் உலகம் பெரும் போராக வெடித்த போதும் நாசங்கள் பல விளைந்த போதும் அணுகுண்டு பிறந்தமையை அடி யாகக் கொண்டு, நீரகக் குண்டுகளும், இராக் கெட்டுக்களும் தோன்றின. இதனால் மனிதன் சந்திரனில் கால வைத்து தன்னாட்டுக் கொடியை ஏற்றினான். விண்ணிலே நடந்தான். மண்ணை மட்டுமன்றி மனிதன் விண்ணையும் ஆளும் வகையில் இன்று இராக்கெட்டுக்கள் பல ஏவப்பட்டு கோள்கள் பலவும் ஆராயப் பட்டுக் கொண்டிருக்கின்றன. போரினைத் தொடர்ந்து பெரும்பாலான நாடுகளில் சோசலிஷ ஆட்சி தோன்றியது. இதனால் உலகின் பாதி மக்கள் செங்கொடியின் கீழ் வந்தனர் எனலாம் இலங்கை, இந்தியா, மலேசியா, சாவகம் போன்ற நாடுகளின் மக்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து விடுபட்டு ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெற்றனர்.

இத்தகு கொடுமையான போரினின்று தான் முற்போக்கு எழுத்தாளர் இயக்கமும் தோன்றியது. புதுமை எழுத்தாளர்கள் பயங் கரமான பாஸிஸத்தையும், நாசகார நாஸிஸத் தையும் எதிர்த்தனர். அவசியம் ஏற்பட்ட போது பேனாவைக் கீழே வைத்துவிட்டு ஆயுதம் ஏந்தி போரிடவும் தவறவில்லை. எண்ணற்ற எழுத் தாளர்கள் இரவும் பகலுமாக மண் வெறி யர்களை எதிர்த்து கதைகள், கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் என இலக்கியங்கள் பலவற்றைப் படைத்தனர். இதனால் பாஸிஸ மும் நாஸிஸமும் வீழ்ந்தது. ஹிட்லரும், முசோலினியும் அழிந்தனர். இவ்வாறு போரிலே எழுத்தாளர்களின் புதுமையான சிந்தனையும், பணியும் மகத்தானதாக விளங்கியதை நாம் காண்கின்றோம். நாட்டின் விடுதலைக்காய் போராடிய இவர்கள் புதுமைவாதிகள். இந்தியாவிலே கவிதாகூர் விடுதலைக்குத் தொண்டாற்றினார். தமிழ்நாட்டுப் புலவன் பார தியோ முற்போக்கு எழுத்தாளனாய் உலகிற்கு வழிகாட்டியாய் எழுந்தான். ''சோவியத் புரட்சி உலகப் புரட்சியாய் மாறும்" எனத் தீர்க்க தரிசனம் கூறினான். 1917ஆம் ஆண்டில் எழுந்த அவனது வாழ்த்து 1947ஆவது ஆண்டில் நிறைவேறியது உலகின் பெரும்பகுதி விடு தலை பெற்ற சோசலிஸ்ட் ஆட்சி மலர்ந்தது.

இவ்வகையில் புதுமை இலக்கிய மானது சென்ற காலச் சிறப்பினை மட்டுமன்றி நிகழ்காலத்தின் நிலையையும் பேச வேண்டும். அத்துடன் வருங்காலத்தின் கண்ணாடியாகவும் துலங்க வேண்டும் என்ற முற்போக்கு எழுத்

தாளர்களின் சிந்தனை நவீன இலக்கியங்கள் பலவற்றின் உருப்பேற்றிற்கு அடிகோலுவதாய் அமைந்தமையை உணரலாம். ''கலைக் காகவே கலை'' என்ற பழமை எழுத்தாளர் களின் பிற்போக்கு கொள்கையைச் சுட்டுப் பொசுக்கி ''வாழ்க்கைக்கே கலை'' என்ற உயரிய சித்தாந்தத்தை தோற்றுவித்ததும் இத்தகு நவீனத்தின் அடிப்படையே. உலகம் இன்றும்கூட இரு பெரும் பிறவாய் நின்று மோதியும் போரிட்டும் வருகின்றது. ஒன்று மக்கள் கூட்டம் - உழைப்பாளர் கூட்டம் - சுதந்திர வாழ்வை விரும்பும் கூட்டம். மற்றொன்று முதலாளித்துவக் கூட்டம் - மக்களை அடிமைப்படுத்தும் சுரண்டற் கூட்டம் - கலையைக் கொலை புரியும் புலைக் கூட்டம் - இந்நிலை போக்கவென புதுமை இலக்கியப் போர் தொடர வேண்டியதை நாம் உணரலாம்.

மேலும் இந்நிலையில் முக்கிய தொடர் பாடற் சாதனமாக உரைநடை வளர்ச்சி பெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். கவர்ணர் ஜெனரல் மெக்காலே என்பவர் ''நவீனமய மாதலின் தொடக்கப் புள்ளி'' இது எனக் கூறியிருப்பதை காணலாம். இவ்வகையில் தொடர்ந்து பார்க்கும் இடத்து தமிழிலே நவீன இலக்கியங்களின் தோற்றப்பாடு 'மணிக்கொடி யுகத்திற்கும்' பிறகுதான் எனலாம். எனினும் தமிழில் நவீனத்துவத்தின் வெளிப்பாடுகளுக்கும் பல காரணிகள் உறுதுணை புரிந்தன. மேலும் முதலாளித்துவ நெருக்கடிகள், தாராளவாதத் துவம் மேற்காட்சி வாதத்தின் வீழ்ச்சி, அறிவியல் கண்டுபிடிப்புக்கள் சனாதனக் கிறிஸ்தவக் கருத்துக்கள் உடைக்கப்படல், பாட்டாளி வர்க்கப்புரட்சி வெற்றி பெறாமை. இரசியாவில் ஸ்ரான்லீசர் எழுச்சி ஒளிப்படப் பிரதியாக்கம் போன்றவற்றால் கலையின் புனிதம் சிதைதல். ஐரோப்பிய சமூகம் ஜனநாயக மயமாதல் போன்றவையும் இத்தகு நவீனத்துவம் உருப்பேறடைய வழிவகுத்ததென்பதை மேற்கத்தைய சமூகத் மற்றும் கலாச்சாரத்தின் உள்ளியக்கத்தினைக் கருத்திற் கொண்டு அறியலாம். ஆனால் உண்மையில் அதுமட்டு மன்றி ஏகாதிபத்திய ஆட்சிப்புலம் மேற்கத்தேய கலாசாரத்தின் மீது ஏற்படுத்திய வெளி அழுத்தங்களும் நவீனத்துவத்தின் தாக்கங்கள் இலக்கியங்களில் அமைய காரணமென்பதும் ஏலவே அறிந்திருக்க வேண்டிய விடயமாகும். இவ்வகையில் சூழலியல் தாக்கங்களால் மையம் சிதறுண்ட மனிதனைப் பிரதிநிதித்துவப படுத்தும் வகையில் நவீன இலக்கியங்கள் அமைகின்றன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க தாகும்.

மேலும் இலக்கிய சிந்தனைகளில் பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் 'நவீன உலகும் இலக்கிய உணர்வும்' என்னும் தலைப்பின் கீழ் நவீன இலக்கியங்களின் போக்குகள் பற்றிய பின்வருமாறு கூறுகின்றார். மேனாட்டு நாகரிக முறைகளையும் இலக்கிய இயக்கங்களையும் போக்குகளையும் அப்படியே பின்பற்ற முனைதல் முதலாவது போக்காகும். மேனாட்டு நாகரிக முறைகள் பண்பாட்டுக் கூறுகள் என்பவற்றை முழுமையாக நிராகரித்து அயலாவற்ற நினைப்பிழந்த அடிகளை விடாப்பிடியுடன் கைக்கொள்ளுதல் இரண் டாவது போக்காகும். அந்நியராட்சியின் விளைவாகவும் மேற்குலகத் தொடர்பாலும் வந்து சேர்ந்த சில பல நாகரிகக் கூறுகளையும் திணைப்பிறந்த பண்பாட்டுக் கூறுகளையும் ஒன்றிணைத்துச் சமரசமும் அமைதியும் காணுதல் மூன்றாவது போக்காகும். பின்பற்றல், மறுத்தல், ஒன்றிணைத்தல் என இம்மூன்று செய்நெறிகளையும் கொண்டதே நவீன தமிழிலக்கிய கதியைப் பாதித்து வழிநடாத்தும் பிரதான போக்குகள் எனக் கருதலாம்'' என அவர் கூறுகிறார்.

நவீன இலக்கியத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக ''ஆய்வறியும் பார்வை'' காணப்படுகிறது. இப் பார்வை படைப்பாளி களுக்கிடையே மாறுபட்டுக் காணப்படும். உதாரணமாக அகலிகை பற்றிய செய்தியை வான்மீகியும், கம்பரும் ஒரு நோக்கில் காண்கின்றனர். ஆனால் புதுமைப்பித்தன் வேறு நோக்கில் பார்க்கிறான் என்பதை அறிகிறோம். ஒரு படைப்பாளியானவன் தனது காலகட்ட

நிலையை அடிப்படையாகக் கொண்டே ஒவ்வொரு படைப்புக்களையும் படைக்கின்றான்.

அடுத்து ''சமூகச்சார்பு'' என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். சமூகம் ஒன்றுண்டு என அதனை உணர்ந்து இலக்கியத்திற்காக எடுத்துக் கொள்ளல். இவற்றைவிட தான் வாழும் சமுதாயத்தின் உயிர்த்துடிப்பான பிரச்சனையை இனம் காண முற்படுதல் என்பன நவீன இலக்கியத்தின் பண்புகளாகும். ஓர் இலக்கியம் சமூகச் சார்போடு படைக்கப் படாவிட்டால் அவ்விலக்கியத்திற்கும் சமூகத் திற்குமிடையே தொடர்பு இருக்காது.

மற்றும் 'தனித்துவம்' என்பது நவீன இலக்கியங்களின் சிறப்பான அம்சமாகும் மரபு இலக்கியங்களைப் பொறுத்தமட்டில் ''பின் பற்றல்'' என்பது சிறப்பிடம் பெறுகிறது. எல்லாம் படைப்பாளியும் பெரும்பாலும் யாரோ ஒரு படைப்பாளியைப் பின்பற்றியே தமது இலக் கியத்தைப் படைப்பார்கள். மரபுச் சட்டத்தின் கீழ் பழைய படைப்புக்கள் அமையும். மர பிலக்கியத்தைப் படைக்கையில் தற்புதுமை கவனிக்கப்படுவதில்லை. உதாரணமாக பிள்ளைத் தமிழ், உலா, அந்தாதி போன்றன மரபுச் சட்டத்துடன் அமைக்கப்பட்டவை. ஆனால் நவீன இலக்கியங்களில் ஒவ்வொரு படைப்பும் தனியே நிற்கும் ஒரு நாவலை வைத்து இன்னொரு நாவல் படைக்க முடியாது. இவ்வகையில் ஓர் இலக்கியம் தனித்தன்மையும் தற்புதுமையும், பொதுமக்கள் நலநாட்டமும் கொண்டிருக்க வேண்டும். மக்கள் மன அழுத்தம் தீர்ப்பனவாக மக்களை மாண்புற உயர்த்துவதாக மக்களால் விரும்பப்படுவதாக இருத்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக பாரதி யாரினுடைய பாஞ்சாலி சபதம் எளிய பதம், எளியநடை, பொதுமக்கள் விரும்பும் மெட்டு என்பன கொண்டு அமைக்கப் பட்டிருக்கக் காணலாம்.

எனவே மேற்கூறிய அனைத்து அம்சங்களையும் தொகுத்து நோக்குமிடத்து நவீனம் பற்றிய உலகம் பொதுவான அம்சங் களையும் அதன் உருப்பேற்றிற்கான அடிப் படைக் காரணிகளையும் அரசியல், பொருளா தார, சமய, சமூக, கலை, கலாசாரங்களில் அது ஏற்படுத்திய தாக்கங்களையும் உணர முடிகிறது. இத்தகைய நவீனப் போக்கும், தன் மையும் இலக்கியங்களில் தாவுகின்றமையும் தமிழ் படைப்புக்களில் அவை தாக்கத்தை ஏற் படுத்துவதையும் அறிகிறோம். நவீனம் பற் றியோ இலக்கியம் பற்றியோ முடிந்த முடிவான வரைவிலக்கணங்களைக் கூறமுடியாதவிடத்தும் அவை பற்றிய தெளிவான ஆணித்தரமான பல கருத்தம்சங்களை ஆராய்ந்தறிகிறோம்.

பெண்களை எப்படியும் அடக்கி விடலாம் ஆனால் அவளது மனோ உணர்ச்சிகளை எந்நாளும் அடக்க முடியாது.

–மகாத்மாகாந்தி–



பகவத்கீதை வழங்கும் கர்மயோக கோட்பாடு

செல்வன் க. ஜெயந்தன்
தரம் 13 கலைப்பிரிவு

இந்து மதத்தின் சிறப்பான இலக்கியமாகக் கருதப்படும் பகவத்கீதை சமயம் தத்துவம் என்ற இரண்டும் சாதாரண மனிதனுக்கு எளிதில் விளக்கிக் கொள்ள்க் கூடிய வகையில் அமைந்த ஓர் சிறப்பு இலக்கியமாகும். இந்து மதத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் அங்கு விளங்க வைக்கப் பட்டிருப்பதாலும் அக் கோட்பாடுகள் எல்லாவற்றுள்ளும் கர்மம் மறுபிறப்புக் கோட்பாட்டிற்கே முக்கியத்துவமான இடம் வழங்கி கருத்துக்களைத் தந்திருத்தலை நோக்க முடிகிறன்றது. பகவத் கீதை வழங்கும் 18 அத்தியாய்ங்களும் கர்மம் அதன் பயன்பாடு விடுதலைக்கான வழிகள் என்பன அடங்கப் பெற்றுக் காணப்படுவதாலேயே அதனைக் கர்மயோகம் என்ற பகுதியாக வகுத்து வைத்துள்ளனர்.

அதாவது அர்ச்சுனன் உடலியல் பற்றுள்ளவனாக போர்க்களத்திற்கு வந்ததும் சஸ்திரிய தர்மத்தைக் கைவிட்டு போர் செய்யாது பின்வாங்கிய அந்தச் சமயத்தில் அவன் கொண்டிருந்த பற்றினைக் களைந்து அவனைப் போர் செய்ய வைக்க முயன்ற கண்ணன், முதற் கண் பற்றும் அதனது விளைவுமே கூற வேண்டியவன் ஆகின்றான். ஆகவே தான் பற்றிய கருத்துக்களை நிறைவாகக் கொண்டு பகவத்கீதை எழுந்துள்ளது எனலாம்.

தனது சேனையினரைக் கண்டு மனமுருகிய அர்ச்சுனன் இவர்கள் தன் பொருட்டு அழியப் போகின்றார்கள் என்பதனை உணர்ந்தவனாக பின் வாங்கும் அர்ச்சுனனுக்கு முதற் கண் உயிர் என்றைக்குமே அழிய மாட்டாத உள் பொருள் ஆனால் உடல் நிலையற்ற அழிவிற்குரிய பொருள் என்பதனை விளங்க வைக்கின்றார். அழியப் போகும் இந்த உடலுக்காக சஸ்திரியனுக்குரிய கடமையை மறப்பது தவறானது ஆகும் என உடலின் நிலையற்ற தன்மையை விளங்க வைக்கின்றான் அதாவது,

''அர்ச்சுனா நீயோ சஸ்திரியன் சஸ்திரியனுக்குரிய இயல்புகளில் ஒன்று தளர்ச்சிடையாத மனநிலை நீ அழியப் போகும் இந்த உடலுக்காக மனம் தளருகிறாய்; இதை நீ இன்று அழித்தால் என்ன அழிக்காவிட்டால் என்ன என்றைக்கோ ஒரு நாள் அழியக் கூடியதே அழியப் போகும் இந்த உடல்களை தர்மத்தின் பொருட்டு நீ அழித்தால் தவறானது அல்ல" எனவும் இவ் உடலம் மூப்பு, பிணி, சாக்காடு எனப்படும் மூன்று நிகழ்வுகளிலிருந்தும் எந்தக் காலமுமே விடுபடப் போவதில்லை. அழியப் போகும் இந்த உடலுக்காக அழியாத உன் கடமைகளை செய்யாதொழித்தல் தர்ம மாகாது என உடலினது நிலையற்ற தன்மையை விளக்கியது மட்டுமன்றி உயிரினது நித்தியத் தன்மையையும் விளங்க வைக்கின்றார்.

அதாவது உடல் அழிந்தாலும் ஆன்மாவுக்கு என்றைக்குமே அழிவு கிடையாது. நீ அதைக் கொல்லேன் என்று எண்ணுவதோ உன் பொருட்டே அது அழியப்படுகின்றது என்று கருதுவதே தவறானதாகும். அது அழிபடுவதுமில்லை. கொல்லப்படுவதுமில்லை உடல் அழிந்த பின்னரும் மீண்டும் ஓர் சாவுடலை அவ் உயிர் நாடுகிறது. அதாவது பாம்பு தன் செட்டையைக் களைந்து விட்டு வேறோர் செட்டையை எடுத்துக் கொள்வது போலவே நைந்துபோன ஆடைகளை களைந்து எறிந்து விட்டு இன்னுமோர் சட்டையை மாற்றிக்

கொள்வது என உடல், உயிர் இரண்டினதும் தன்மைகளை விளக்கி நிலையற்றதாகிய இந்த உடல் மேல் நீ பற்றுக் கொள்வாயானால் கர்ம பந்தத்தால் நீ சிக்குவாய் என்று கூறவும் ''கர்ம பந்தம் என்றால் யாது என விளக்கு வாயாக'' என அர்ச்சுனன் வினாவவும் கர்மம் பற்றிய மேலும் சுலோகங்களாக கண்ணன் வழங்கியிருக்கக் காணுகின்றோம்.

அதாவது கர்மத்தை விளக்க வந்த கண்ணன் அர்ச்சுனனுக்கு வழங்கிய முதலாவது கர்மம் என்ன என்றால் ''அர்ச்சுனா விதிவினை ஊர்'' என கர்மத்தை ஏற்ற இடங்களில் அதற்குத் தகுந்தாற் போல் நாமம் கொண்டு அழைக்கின்றனர். ஆனால் இவை எல்லாவற்றிற்கும் விளக்கம் கேட்பாயானால் ஒரு சொல்லிலேயே என்னால் பதிலளிக்க முடியும். அதாவது எவனொருவன் அழியப் போகும் இந்த உடலிலும் நிலையற்றதாகிய இந்த உலகிலும் பற்று வைத்து ஒழுகுகின் றானோ அவனையே கர்மி என்று குறிப்பிடலாம். ஆக கர்மத்தின் விளக்கமாக கண்ணன் குறிப்பிட்டது உலகியல் பற்றினையே ஆகும்.

இதைக் கூறக் கேட்ட அர்ச்சுனன் கண்ணனை நோக்கி ''உலகியல் பற்றுத்தான் கர்மம் என்றால் உலகில் பிறந்த எந்த ஒரு மனிதனும் கர்மம் ஆற்றாது இருக்க முடியாது'' என தன் கருத்தை வெளிப்படுத்திய பொழுது தொடர்ந்து கண்ணன் கூறுகின்றான் ''ஒரு மனிதன் இந்த உலகில் பிறந்த உடனேயே செயற்பட வேண்டும் என்பதே நியதி செயற்பாட்டை நான் இங்கு குறிப்பிடவில்லை. ஆனால் ஒவ்வொரு செயல்களையும் ஆற்று கின்ற பொழுது அந்த செயல்களில் வரும் வினைகளில். எவன் பற்று வைக்காது செயற் பாடு ஆற்றுகின்றானோ அது கன்மத்தின் பாற்படாத செயலில் துறவு நிலையாகும். இந்நிலையில் நிற்பவனையே கர்மயோகி என குறிப்பிடுகின்றேன்'' என கர்மம், கர்மயோகம் இரண்டும் விளங்கவைக்கப்பட்டுள்ளன. அர்ச்சுனன் கர்மயோகம் பற்றிய வினாவிற்கு விடையளித்த பகவான் கர்மயோகம் அடையும் பலாபலனைக் கூறி வருகின்றார். ''பற்றுக் களோடு கூடி கர்மத்தை ஆற்றுபவன் பிறப்புத் துயரில் முழ்கியவனாக காணப்படுகின்றான். ஆனால் கர்மயோகியோ பிறப்புக்களை அடைய மாட்டான். எவன் தனது பிறப்பைப் பற்றிக் குறிப்பிடுகின்றான். அர்ச்சுனனுக்கு, இதற்கு முன்னும் நான் பல பிறப்புக்களை எடுத்துள்ளேன். இதன் பின்னரும் நான் பல பிறப்புக்களை எடுக்க இருக்கின்றேன். எப்போது தர்மம் அழிந்து அதர்மம் மேலோங்குகின்றதோ அப்பொழுதெல்லாம் நான் பிறந்து கொண்டெ யிருப்பேன். ஆனால் நான் பிறப்புக்களை அறிவேன். நீ பிறப்புக்களை அறிய மாட்டாய். நான் அதர்மத்தை அழிக்கப் பிறக்கின்றேன் என்று சொன்னால் நீ கர்மத்தின் காரணமாக பிறக்கின்றாய் என அறிந்து கொள். என பிறப்புக்கான காரணத்தை விளக்க் வைக்கின் றான். அடுத்த பிறப்பை விளக்கிய கண்ணன் பிறப்பதற்குரிய வழியையும் கூறுகின்றான். அர்ச்சுனா எவனொருவன் உலகில் பற்றைக் கொள்கின்றானோ அவனது பிறப்பானது நிச்சயமானது. ஆகவே நீ உலகியல் பற்றுக் கொள்ளாது பற்றற்ற பொருளின் மேல் பற்றுக் கொள்வதே பிறப்பறுவதற்குரிய வழி முறை யாகும்.

கடினம் என்று பிறர் கூறியதைச் செய்து முடிப்பவன்தான் திறமைசாலி

தமிழ் இலக்கிய நூல்களில் கீழ்க்கணக்கு நூல்களைகளப் பற்றிய கருத்துக்கள்

செல்வி .த. வனிதா
தரம் 13 - 2004 கலைப்பிரிவு

தமிழ் இலக்கிய வரலாற்றில் கி.பி 1ம் நூற்றாண்டு முதல் 3ம் நூற்றாண்டு வரையுள்ள காலம் சங்ககாலம் எனப்படும். இக்காலத்தில் முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என சங்கங்கள் அமைத்து அரசாட்சி செய்து வந்தனர். இச்சங்ககாலமானது இயற்கை நெறிக் காலம் எனவும் முவேந்தர் ஆட்சிக்காலம் என வும் அழைக்கப்பட்டது. இதனை அடுத்து கி.பி. 3ம் நூற்றாண்டு தொடக்கம் 6ம் நூற்றாண் டிற்கு இடைப்பட்ட காலம் சங்கமருவிய காலம் எனவும் இதனை இருண்டகாலம் எனவும் அறநெறிக்காலம் எனவும் அழைக்கப்பட்டது.

இச் சங்கமருவிய காலமானது கி. பி 300ம் ஆண்டு தொடக்கம் 600 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட இக்காலப்பரப்பில் சேர நாட் டையும், சோழச் சிற்றரசுகள் சிலவற்றையும் கைப்பற்றிய களப்பினர் என்ற கொள்ளைக் கூட்டத்தினர் தமிழ்நாட்டு கலைச் செல்வங் களை சூறையாடி வேற்றுநாடுகளுக்கு விற்று பெரும் பொருள்ஈட்டும் நோக்கில் தமிழ் பிர தேசங்களை கைப்பற்றி செயல்படத் தொடங் கினர். இக்காலகட்டத்தில வடநாட்டில் வளர்ச்சி பெற்றிருந்த சமண பௌத்த சமயங்களை தமிழ் நாட்டிலும் பரப்பும் நோக்குடன் சமணத் துறவிகளும் பௌத்த சன்னியாசிகளும் தமிழகத்திற்கு வந்து மன அமைதியற்றிருந்த மக்களுக்கு நிலையாமைக் கருத்துக்களையும், துறவு வாழ்க்கையையும், வற்புறுத்தி சமண பௌத்த சமய கருத்துக்களோடு கூடிய அறவழி இலக்கியங்களை பெருந்தொகை யாகப் படைத்தமையினாலேயே இக் காலத்தை ஓர் அற நெறிக் காலம் எனவும் சிறப்பித்துக் கூறும் வழக்கம் காணப்படுகிறது.

இவ்வாறு எழுச்சி பெற்ற இவ் அறவழி இலக்கியங்களுள்; காப்பிய மரபு தழுவிய இலக்கிய வகைகள் என சிலப்பதிகாரம், மணி மேகலை ஆகிய நூல்கள் அமைகின்றன. இதில் சிலப்பதிகாரம் இல்லறத்தையும், மணிமேகலை துறவறத்தையும் பற்றிய கருத துக்களைக் கூறுகின்றன. இத்தகு இரட்டைக் காப்பியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகாரத்தை மும்மைக் காப்பியம் எனக் குறிப்பிடுவதன் மூலம் மூன்று என்ற சொல்லிற்கு முதன்மை யளிப்பதாக அமைந்து விளங்குகின்றன. அதாவது இக் காப்பியத்தில் வருகின்ற சேர, சோழ, பாண்டிய நாடு மூன்று. கண்ணகி, கோவலன், மாதவி என்னும் பாத்திரங்கள் மூன்று. இன்பம், துன்பம், வீரம் ஆகிய சுவை மூன்று. இயல், இசை, நாடகம் என்னும் தமிழ் மூன்று. புகார்காண்டம், வஞ்சித காண்டம், மதுரைக் காண்டம் என்னும் காண்டங்கள் மூன்று. **"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், , உரைசால் பத்தினியை உயர்ந் தோர் ஏற்றுவர், ஊழ்வினை வந்து உறுத்தும்"** என்ற தத்துவங்கள் மூன்றாக அமைந்து நின்று அறத்தினைப் போதிக்கின்றன. மணிமேகலைக் காப்பியமானது ஓா முற்றிலும் பற்றுக்களிலி ருந்து விடுபட்டு துறவு வாழ்க்கையின் மேன் மையை வலியுறுத்துகின்ற காப்பியமாக அமைந்திருந்தமையால் காப்பிய இலக்கியங் களின் அடிப்படையிலும் இச் சங்கமருவிய காலம் ஓர் அறநெறிக்காலம் எனப்படும்.

காப்பிய இலக்கியங்களை விட மேலும் அச் சங்கமருவிய காலத்தில் தோற்றம் பெற்ற பதினென் கீழ்க் கணக்கு இலக்கியங்களில் அமைந்துள்ள அறவழி இலக்கியங்களுள்

திருக்குறள், நாலடியார், ஆசாரக்கோவை போன்ற அறவழி இலக்கியங்களைத் தொடர்ந்து இன்னா 40, இனியவை 40, ஏலாதி, திரிகடுகம், சிறுபஞ்சமூலம் நான்மணிக்கடிகை, பழமொழி 400, முதுமொழிக்காஞ்சி என்பன அறம், ஆசாரம், நீதி என்னும் கருத்துக்களை இவ் இலக்கியங்கள் சிறப்பித்து நிற்கின்றன. இவ் பதினென் கீழ்க்கணக்கு இலக்கியங்களுள் சில அகத்திணை பற்றியும் புறத்திணை பற்றியும் கூறுகின்றன. அகத்திணை தழுவிய நூல்களாக திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது, ஐந்திணை எழுபது, கைந்நிலை, கார்நாற்பது, என்பன அமைய களவழி நாற்பது என்பன சங்கமருவிய காலத்து புறத்திணை நூலாகக் காணப்படுகின்றன.

திருக்குறளானது 1330 குறட்பாக்கள் 133 அதிகாரங்களில் வகுக்கப்பட்டு முப்பெரும் பிரிவுகளாக தொகுக்கப்பட்ட போது அவற்றின் முதற்பிரிவாக அறத்துப்பால் அமைந்திருப்பது அறத்திற்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவது மட்டுமன்றி வள்ளுவர் காதலைக் கூறுவதானாலும் சரி காமத்தைக் கூறுவதானாலும் சரி அவற்றையெல்லாம் அறவெளிப்படுத்திக் கூறி இருப்பதனாலும் இத் திருக்குறள் அறவழி இலக்கியங்களில் முதன்மை பெறுகின்றன.

இத் திருக்குறளை அடுத்து எழுந்த நாலடியாரானது நான்கு அடிகளாகக் கொண்டது ''ஆலும் வேலும் பல்லுக் குறுதி என்பது போல நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'' என வழங்கும் பழமொழிகள் திருக்குறளோடு நாலடியாரின் சிறப்பைப் புலப்படுத்துவதாகும். நான்கு அடிகளையுடைய வெண்பாக்களாலான நூல் ஆனமையால் நாலடி என்ற சிறப்பு விகுதியாகியது. ''ஆர்'' சேர்ந்து நாலடியார் என்று பெயர் பெறுகின்றது. இவ் நாலடியார் சமண முனிவர்களால் பாடப்பட்டது. இந் நூல் ''செல்வம் சகடக்கால் போல வரும்'' என்றும் செல்வ நிலையாமையை வலியுறுத்துகிறது. ''கல்வி கரையில கற்பவர் நாள் சில'' என்றும் கல்லாரேயாயினும் கற்றவரைச் சேர்ந்து தொழுகின் நல்லறிவு நாளும் தலைப்படுவார்'' என்றும் கல்வியின் சிறப்பையும் அழகையும் கூறுகின்றது.

நான்மணிக்கடிகை, பதினென் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந் நூலை இயற்றியவர் விளம்பிநாகனார் என்னும் நல்லிசைப் புலவராவார் ''விளம்பி'' இவரது ஊரின் பெயர் எனவும் நாகனார் இவரது பெயர் எனவும் கொள்ளப்படுகின்றன. இந் நூலானது நீதி மொழிகளால் அறத்தைப் பேணி நிற்கின்றன. இந் நூல் கடவுள் வாழ்த்து உட்பட நூற்றுஆறு வெண்பாக்கள் கொண்டது. இந் நூல் சிறந்த நடைச் சிறப்பை உடையது. இந்நூலில் உண்மைகளும் மிளர்கின்றன.

இனியவை நாற்பது என்னும் நூலானது அறம், பொருள், இன்பம் பற்றி மெல்லியல் மொழிகளாலான ஐந்தடியில் ஏறாது நாற்பது வெண்பாக்களால் அமைந்த நாற்பது வெண்பாக்கள் உள்ளன. ஒவ்வொரு வெண்பாவிலும் மூன்று கருத்துக்களும் சிலவற்றில் நான்கு கருத்துக்களும் கொண்டு முடிந்துள்ளன. 127 இனிய கருத்துக்கள் இந் நூலில் உள்ளன.

இன்னா நாற்பதின் ஒவ்வொரு வெண்பாக்களிலும் நான்கு இன்னாதவை கூறி நாற்பது வெண்பாவில் இது முடிக்கின்றன. மக்களுக்கு நன்மை பயக்கும் பொது நீதிகளையும் உறுதிப் பொருட்களையும் சுட்டி உணர்த்துவதே இவைகளின் நோக்கம் ஆகும்.

இவை தவிர்ந்த கார் நாற்பது, திணை மொழி ஐம்பது, திணைமாலை 150, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திருகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, சிறு பஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைந்நிலை போன்ற நூல்கள் சங்கமருவிய காலத்தில் எழுந்த பதினென் கீழ்க்கணக்கு இலக்கியங்கள் ஆகும்.

எமது அறிவுக் களஞ்சியம் நூல்களே

செல்வன் .கு. ரமேஸ்குமார்
தரம் 12 கலைப்பிரிவு

நூதன சாலையில்
இல்லாத நூதனம்
சாதனையாகக்
கிடக்குது இங்குதான்!

அறிவுக் களஞ்சியம்
அறிவியல் பெட்டகம்
செறிவாய் இங்குதான்
சேர்ந்து இருக்குது!

காலத்தின் கண்ணாடி
காவிய முதல் நாடி
கோலத்தில் செம்மையாய்
கோலோச்சும் இங்குதான்!

வாசகர் வட்டத்தின்
வசந்தம் பிறப்பது
வந்து நிகழ்வதும்
வளம் பெறும் இந்தச்
சோலை தன்னில்தான்!
நூல் நிலையம்
நூறு இருந்தால்
அறிவியல் வளர்ச்சி
அபரிமிதமாகும்!

ஞானிகள் சொன்ன
ஞானங்கள் முதல் – விஞ்
ஞானிகள் தந்த
ஆய்வுகள் வரையில்
அடுக்கிக் கிடக்கும்
அற்புத புதையல்!

நாடித் தேடி
நாளும் சென்றால்
கூடி வருமே
குறைவிலா ஞானம்!

அமைதிச் சூழலில்
அறிவுக் கடலது
சுமைகள் இன்றியே
சுவைக்கலாம் வாருங்கள்!

ஞானியாய் உங்களை
ஏற்றியே வெற்றியை
நாட்டிட உதவிடும்
நல்லிடம் இதுவன்றோ!

சேருங்கள் சுற்றத்தை
கோருங்கள் அறிவை
வாருங்கள் விதைத்திட
வருங்கால நலனுக்காய்!

அஞ்ஞான இருளினை
அகற்றியே ஒளியினை
மெஞ்ஞான மாகவே
மேன்மையாய்த் தந்திடும்
அறிவியல் கழகமே
அற்புத நூலகம்!

வங்கி நடவடிக்கைகளில் கணணிப் பயன்பாடு

செல்வி சி. சிவசிறி
தரம் 13 வர்த்தகப்பிரிவு

கணணிப் பிரயோகம் எல்லா வகையான துறைகளிலும் பன்முகப்படுத்தப்பட்டு வருவதுடன் ஒவ்வொரு துறைரீதியான அபிவிருத்தியும், மாற்றங்களும் கணணியில் பெருமளவு தங்கியிருப்பதை அவதானிக்கலாம். இலங்கை போன்ற 3ம் உலக நாடுகளில் அபிவிருத்திப் படிமுறை வளர்ச்சி, வளர்ச்சியடைந்து நாடுகளின் அபிவிருத்திப் படிமுறைகளின் வளர்ச்சியில் இருந்து மாறுபட்ட வடிவமாகக் காணப்படுகிறது. நவீன விஞ்ஞான ரீதியில் அமைந்த மாற்றங்கள் உடனுக்குடன் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் புகுத்தப்படாமல் இருப்பதே அவற்றின் பின்தங்கிய தன்மைக்கு ஒரு முக்கிய காரணமாக முன் வைக்கப்படுகின்றது. நவீன விஞ்ஞான ரீதியில் அமைந்த வளர்ச்சிகள் பல்வேறு வடிவங்களில் இனம் காணப்படுகின்ற போதிலும் இந்தியா, இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பெருமளவிற்கு எல்லாத் துறைகளையும் இன்று ஆக்கிரமித்துவரும் ஒரு கருவியாக கணணியும் அவற்றுடன் இணைந்த நடவடிக்கைகளும் அமைகின்றது. கணணிப் பிரயோகம் பல்வேறு துறைகளிலும் பரந்து செல்கின்ற போதிலும் இக்கட்டுரை வங்கித் தொழில் நடவடிக்கைகளில் கணணிப் பயன்பாடு என்பது பற்றி அதிக அக்கறை காட்டியுள்ளது.

வங்கித் தொழில்த்துறை இன்று பெருமளவிற்கு கணணிமயப்படுத்தப்பட்ட ஒரு துறையாக விளங்குகின்றது. வங்கி நடவடிக்கைகள் கணணி இல்லாமல் இயங்க முடியாத நிலையை, இன்றைய வங்கி நடவடிக்கைகளில் அதிகரிப்பு ஏற்படுத்தியுள்ளது. வாடிக்கையாளர்கள் கணக்குகள் யாவும் மின்னியக் கருவிகளால் கையாளப்பட்டுப் பதிவு செய்யப்படுகின்றன. தன்னியக்க கருமபீடங்கள் அதி நவீன மட்டத்தை அடைந்துள்ளதுடன் அவை ஒவ்வொரு வகையிலும் தவறு செய்யக்கூடிய மனிதனை விட மிகவும் சிறப்பாக செயற்படுகின்றது. கணணித் தொழில் நுட்பம் மூலம் வைப்புக்களை ஏற்றல், பணத்தைப் பிழையின்றி மாற்றிக் கொடுத்தல், வாடிக்கையாளரின் கணக்குப் புத்தகங்களைப் புதுப்பித்தல் போன்ற பல்வேறு கருமங்கள் ஆற்றப்படுகின்றன. இலங்கையில் வங்கிகள் யாவும் கணணி மயமாகுவதில் அதிக அக்கறை காட்டுவதுடன், கணணித் தொழில் நுட்பத்திற்கு ஏற்ப உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சியளிக்கப்படுகின்றது. தலைநகரைச் சுற்றியுள்ள பல்வேறு வங்கிகளும் அவற்றின் கிளைகளும் அவற்றின் பல்வேறு நடவடிக்கைகளையும் கணணி மூலமாகவே ஆற்றி வருகின்றன. இதன் மூலமாக் உடனுக்குடன் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறுவதுடன் வாடிக்கையாளர்கள் தமது நேரத்தை வீணாகச் செலவழிக்க வேண்டி இருப்பதில்லை. உலகில் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இலங்கைக்கு அனுப்பப்படும் பணத்தை உரியவர்களின் கணக்கில் வைத்து உள்நாட்டில் பணமாகவோ அல்லது காசோலையாகவோ உடன் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் உரிய நடவடிக்கைகளை கணணி மேற்கொண்டு மாற்றிக் கொடுக்கின்றது. ஒரு வங்கியானது பின்வரும் செயற்பாடுகளைச் செய்கின்றது.

1. வாடிக்கையாளர் வைப்புக்களை ஏற்றுக் கொள்ளல்
   - அ) நடைமுறைக் கணக்கு
   - ஆ) நிலையான வைப்புக் கணக்கு
   - இ) சேமிப்புக் கணக்கு

2. மேலதிக பற்றுக்களை வழங்குதல்

3. கடன்களை வழங்குதல்
   - அ) குறுங்ககாலக் கடன்
   - ஆ) நீண்ட காலக் கடன்

4. உண்டியல்களையும், காசோலைகளையும் கழிவுடன் மாற்றல்

இந்நடவடிக்கைகளை மனித முறையில் ஊழியர்களைக் கொண்டு செய்யும் பொழுது அதிக நேரம் எடுப்பதுடன் செலவும் அதிகமாகக இருப்பதுடன் பிழைகள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன. தற்போது வங்கி நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்படுவதுடன் வாடிக்கையாளர் தொகையும் அதிகமாகக் காணப்படுவதால் இத்தகைய சந்தர்பங்கள் கூடுதலாக உள்ளது. கணணி அறிமுகத்திற்கு வந்த காரணத்தினால் வங்கி நடவடிக்கைகள் கணணிமயப்படுத்தப்பட்டு வந்த காரணத்தினால் விரைவாகவும், இலகுவாகவும் பிழைகளின்றியும் செயற்பாடுகள் ஆற்றப்படுகின்றன. இன்றைய காலத்தில் கணணியின் செயற்பாட்டு வேகம் பல்வேறு வகையான அனுகூலங்களைக் கொடுப்பதுடன் சிக்கனத்தன்மையையும் அளிக்கின்றது. கணணிமயப்படுத்தல் ஆரம்பத்தில் பெருமளவு மூலதனச் செலவினைக் கொடுப்பினும் அதன் பின்னர் உள்ள செயற்பாடுகள் பெருமளவு செலவை மீதப்படுத்தி மூலதனச் செலவை ஈடாக்கிக் கொண்டு சிக்கனத்தைக் கடைப் பிடிக்க உதவுகின்றது.

அழகான பெண் ஓர் இரத்தினம் குணமான பெண் ஓர் பொக்கிஷம்

– நெப்போலியன் –

அடக்கம், உண்மை, கற்பு மூன்றும் பெண்களை பாதுகாக்கும் தேவதைகள்

– வெநாய்டன் –

பெண்ணின் கற்பு கண்ணாடி பாத்திரம் போன்றது

– காண்டேகர் –



இசையின் பெருமை

செல்வி ந. வேலரசி
தரம் 13 கலைப்பிரிவு

கலைகள் யாவும் இறைவனிடமிருந்தே தோன்றிவை. மேலும் இறைவனை அடைவதற்கு ஏற்ற சிறந்த சாதனமும் இசையேயாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் ''ஏழிசையாய் இசையேயாகும்''. என இறைவனை விளிக்கிறார் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளும் ''நாதத்தையே சாரீரமாக உடையவன் இறைவன்'' என தமது கிருதியில் குறிப்பிடுவதோடு சப்தஸ்வரங்களும் இறைவனின் ஐந்து முகங்களிலிருந்தும் பிறந்தன எனவும் குறிப்பிடுகின்றா. இசைக்கு காந்தர்வ வேதம் எனவும் பெயருண்டு. சிவபெருமான கையில் டமருகம், கண்ணபிரான் கையில் குழல், சரஸ்வதி தேவியின் கையில் வீணையும் இருப்பது இசைக் கலையின் தெய்வீகத் தன்மையைப் புலப்படுத்தும்.

இத்தனைச் சிறப்புள்ளும் இசைக் கலையை மனிதன் தனது அறிவினாலும், புத்தி, சாதுர்யத்தினாலும் இன்று காலவரை வளர்த்து வந்திருக்கின்றான். அக்கால பண்பட்ட சமுதாயத் திலிந்து எழுந்தவையே பண் இசை வடிவங்கள் மூங்கிற்கழியினிடத்திலிருந்து இசையை உணர்ந்த மனிதன் நாளடைவில் அதையே ஓர் வாத்தியமாக அமைத்தான். இவ்வாத்தியமே இன்று வழங்கும் புல்லாங் குழல் வாத்தியமாகும். இது ஓர் இயற்கை வாத்தியமாக விளங்குகின்றது. குழலும் யாழும் சங்க காலத்தே சிறப்புற்றிருந்தமையே சங்கப் பாட்டால் அறியக் காணலாம். தெய்வப்புலவர் திருவள்ளுவரும் தமது திருக்குறளில் இவ்விரு வாத்தியங்களையும் குறிப்பிடுவது குறிப்பிடத் தக்கதாகும். இன்று வெளிநாடுகளில் இசையைப் பற்றி ஆராய்ச்சி செய்து இசை மூலம் நோய்கள் தீருவதையும், பயிர்கள் வளர்வ தையும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

தமிழகத்தில் மிகப் பழங்காலத்தி லிருந்தே இராகமுறையைப் பண்முறை என் றும், இராகங்களைப் பண் என்றும் அழைத்து வந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் நெடுங் காலமாக வழங்கி வந்துள்ள இராகங்களின் ஒலி வரலாற்றை ஆராய்வோமாயின் தேவாரப் பாசுரங்கள் தோன்றிய காலத்திற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்த பண்கள் என்று அழைக்கப்பெற்ற இராகங்கள் தமிழ் நாட்டில் வளர்ந்து வந்தமையை அறியலாம். ஸ்ரீதியா கராச சுவாமிகள் , முத்துசுவாமி தீட்ஷிதர், சியாமாசாஸ்திரிகள் முதலான இசை மேதை கள் தமிழகத்தில் மரபுவழியாக வழங்கி வந்த இராக இசை மரபைக் கையாண்டே தங்கள் கிருதிகளை அமைத்துச் சங்கீத உலகிற்கு வழங்கினர். தேவாரப் பாடல்களும் திவ்விய பிரபந்தங்கயும் இந்த அடிப்படை யிலேயே எழுந்தவையாகும்.

'பண்' எனும் பதம் பண்ணுதல் எனும் வினை அடியாகப் பிறந்து பெருந்தானமாகிய நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு அண்ணாக்கி, உதடு, பல், தலை ஆகிய எட்டினாலும் கிரியையாகிய எடுத்தல் (ஆரோகணம்), படுத்தல் (அவரோகணம்) நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கி ஆகிய எட்டினாலும் பண்ணிப்படுத்தலாற் பண் என்னும் பெயராயிற்று. 'பண்' என்பது நிறைந்த நரம்புள்ளது எனவும் ஏழு சுரங்களுமுள்ள சம்பூரண இராகமெனவும் அழைக்கப்படும்.

திருமறைத் தீந்தமிழ்ப் பாடல்கள் ஏனைய பாடல்களைப் போல அல்லாமல் பண்முறையாகவும் நம் முன்னோர் நமக்கு அமைத்துத் தந்தருளியது. நம் முன்னோர் நமக்கு அமைத்துத் தந்தருளியது. நம்மோரால் பெரிதும் போற்றத்தக்கதாகும். இம்முறை, இசைமுறை அல்லது சங்கீதமுறை என அழைக்கப் பெறும். இசையுடன் ஓதி அன்பு செலுத்துவதினால் தான் இறைவன் அருள் செய்வானே? என்று சிலர் வினவலாம். இறை வன் திருவருளைப் பெறுவதற்கு வழிகள் எண்ணிலவாயினும் அவை எல்லாவற்றிலும் மிக வேகமாகக் கொள்ளப்படும் நெற் 'இசைச் சாதனமே' என்பது பெரும்பாலார்க்கும் ஒப்ப முடிந்ததொன்றாகும்.

ஐம்புலன்களையும் அடக்கி மனத்தை இறைவன் பால் ஈடுபடச் செய்து, மக்கள் இறை வன் அருள் பெறுவதற்கு 'இசை முறையை' மேலானதென்று கருதியன்றே நம்மூவர் இறைவன் மீது திருவாய் மலர்ந்த தருளிய தேவாரப் பாக்களைப் பண்முறைப் படுத்தியும், கட்டளை முறைப்படுத்தியம் நமக்கு அமைத்துத் தந்திருக்கின்றார்கள். தேவாரச் செந்தழமிழ்ப் பனுவல்களின் பல் இடங்களிலும் இசையின் சிறப்பு பற்றி பேசப்படுவதைக் கொண்டு பண்ணிசையின் சிறப்பை நாம் அறியலாம். ஒலி வடிவம் ஆகிய நாதத்தை முறையாகவும், கால அளவினதாகவும் அமைத் துப் பாடுவதே 'இசைமுறை' எனப்படும். இம்முறை ஒரு மொழிக்கு மாத்திரம் உரித் துடைடயனவல்ல. பண்முறையில் கண்ட இரா கங்கள் சுருதியைச் சேர்த்தும் அதாவது ஒலி வடிவமாகிய சுரங்களைச் சோத்தும் கட்டளை முறை என்பது கால அளவைச் சோத்தும், அதாவது தாளத்தைச் சேர்த்தும் இருக்கின்றன. இவ்வாறாக பண்ணிசையின் சிறப்பும் பெருமையும் விளங்குகின்றது.

வாழ்வில் எவ்வளவு பணம் சேர்த்தோம்
என்பது முக்கியமல்ல
எத்தனை நல்ல உள்ளங்களை சம்பாதித்தோம்
என்பதேதான் முக்கியம்

உலகம் அழிவதற்கு பெண் காரணமாக இருந்தால் – அவள் ஒருத்தியால்த் தான் உலகத்தை காப்பாற்றவும் முடியும்.

– பீபார்ட் –

கலையும் விஞ்ஞானமும்

செல்வன் ந. கர்சன்
தரம் 13 கலைப்பிரிவு

சமூகத்தில் பல்வகைத்தன்மை கொண்ட கலை வடிவங்கள் காணப்படுவதனால் கலைக்கு யாராலும் சரியான வரைவிலக்கணம் கூற முடியவில்லை. அந்த வகையில் நாமும் கலைக்கு பின்வருமாறு வரைவிலக்கணம் கூறுவோம்.

''ஒரு மனிதனுக்கு ஏதாவது ஒரு வகையில் பயனைத் தரத்தக்கவகையில் இன்னொரு மனிதனால் செய்கையாக மேற்கொள்ளப்படுகின்ற அழகியல் சார்பான செயற்பாடுகளே கலை" எனலாம்.

விஞ்ஞானம் என்றால் ''பரந்துபட்ட அறிவு" என்பதே பொருளாகும் ஆராய்ச்சியினைத் துணைகொண்டு முடிவினைக் கூறுகின்ற இயல்புகளே விஞ்ஞானமாகும். எனவே இவற்றினை மையமாகக் கொண்டு விஞ்ஞானம் என்பதற்கு பின்வருமாறு சரியான வரைவிலக்கணம் கூறலாம். ''ஒழுங்குபடுத்தப்பட்டதும் திருத்தமானதும் திருப்திகரமானதுமான அறிவினைக் கொண்டதே எனலாம்.

கலையும் விஞ்ஞானமும் அழகியல் அறிவியல் என்ற வேறு தளங்களில் சென்றாலும் ஒன்றினது வளர்ச்சிக்கு இன்னொன்று துணை புரிந்துள்ளது. அந்த வகையில் விஞ்ஞானத்தின் பரம்பலுக்கும் கண்டுபிடிப்புக்களை வெளிப்படுத்துவதற்கும் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் அறிவு சார் விடயங்களை வெளிப்படுத்தவும் கலை பொதுவாக அமைந்துள்ளது.

கலையின் வளர்ச்சிக்கு விஞ்ஞானம் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியதாகும். ஒளிப் படக்கருவியின் தோற்றுவாய் தொலைக்காட்சி தோன்றியது இதனால் சினிமா வளர்ச்சியடைந்தது. அத்துடன் சிற்பம், ஓவியம், கட்டிடம், நடனம், நாடகம், இசை போன்றன வளர்ச்சியடைந்தன. மேலும் அச்சியந்திரதத்தின் வருகை பத்திரிகைத்துறைத் தோற்றம் இதனால் இலக்கியம் நாடகமாக வளர்ச்சியடைந்துள்ளது.

அரங்க மூலகங்களான ஒலி, ஒளி, ஒப்பனை போன்றன புதிய வழிகளில் வளர்வதற்கும் விஞ்ஞானம் துணையாக அமைந்ததோடு செய்மதிகளின் தோற்றம் பல்வேறு நாடுகளில் காணப்படுகின்ற கலை வடிவங்களை அந்தந்த நாட்டு மக்கள் தத்தமது இடங்களில் இருந்தபடியே பார்க்க கூடியதாக இருக்கிறது அத்தோடு கணணியின் வருகை அரங்கில் பல புதிய யுக்திகளை தோற்றுவிக்க உதவியது. மேலும் றோபோ மனிதனின் வருகை இன்ரநெட் வருகை போன்ற விஞ்ஞானத்தின் செயற்பாடுகள் கலையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

பணம், பதவி, பட்டத்தைக் கண்டு இறுமாப்புக் கொள்ளாதே

அவைக்காற்றுக் கலை

செல்வி. அனுசகுமாரி
தரம் 13 கலைப்பிரிவு

''தில்லையில் கூத்தனே தென்பாண்டி நாட்டானே'' எனப்படும் கூத்தப் பெருமான் நடராஜர் வடிவிலே திருநடனம் மூலம் ஐந் தொழில்களையும் புரிகிறான். ''உலகம் ஒரு நாடகமேடை அதில் நாம் அனைவரும் நடிகர்கள்'' என்று ஷேக்ஸ்பியர் கூறுகின்றார். இவ்வாறு பல்வேறுபட்ட அறிஞர்கள் ஒவ்வொரு கலைவடிவங்களைப் பற்றியும் பல்வேறு விதமான கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர், பொதுவாக கலைகள் ஆக்கும் கலை, நிகழ்த் தும் கலை, ஆற்றுகைக் கலை என வகைப் படுகிறது. இவற்றுள் கட்டிடக் கலை சிற்பக் கலை, ஓவியக்கலை, இசை, நடனம், நாடகம் போன்ற பல கலைகள் அடங்குகின்றன.

இவற்றுள் இசை, நடனம், நாடகம் போன்ற கலைகள் அவைக்காற்றுக் கலை வடிவங்களாக காணப்படுகின்றன. ''மனிததிறன் வெளிப்பாடே கலை எனப்படுகிறது. கலைகள் பயன்கலை, கவின்கலை என இருவகைப்படும். பயனை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளும் உற்பத்தி சார்பான செயற் பாடே பயன்கலை எனப்படும். ஒரு மனிதனுக்கு கட்புலன் செவிப்புலன் சார்பான கருத்துக்களை வழங்கி அறிவியல் ரீதியான பசியினைப் போக்கி ஆக்க பூர்வமாகச் சிந்திக்கத் தூண்டு கின்ற கலைகள் கவின் கலை எனப்படும். இக்கவின்கலை ஆக்கும்கலை ஆற்றுகைக் கலை என இரு வகைப்படும்.

அந்தவகையில் கலைஞன் ஒருவன் தானே கலைமுதற் பொருளாக மாறிப் படைக்கும் கலைகளே ஆற்றுகைக் கலை களாகும். அதனடிப்டையில் இசை, நடனம், நாடகம் என்பன ஆற்றுகைக் கலை வடிவங் களாக காணப்படுகின்றன. இக் கலைகள் கட்புலக் கலை, செவிப்புலக் கலை, கட்புல செவிப்புலக்கலை என மூன்று வகைப்படுகிறது. இவ் அவைக்காற்றுக் கலையில் நடனம் கட்புல கலையாகவும் இசை செவிப்புலக் கலை யாகவும், நாடகம் கட்புல செவிப்புல கலை யாகவும் காணப்படுகிறது.

இசை, நடனம், நாடகம் என்ற இம் மூன்று கலைவடிவங்களும் மனதிற்கு நிம்மதியையும், ஆத்ம திருப்தியையும் தர வல்லன. இந்த வகையில் ஒரு மனிதனுடைய ஆடல், பாடல், பேச்சு, நடனம் என்பனவற்றை உள்ளடக்கிய கூட்டுக் கலையே நாடகமாகம். ஏனைய கலைகளைப் போலன்றி இவ்வாற்று கைக் கலைகள் நிகழ்த்தும் கணப் பொழு தினிலே அழிந்து விடுகிறது. அனால் எழுத்துரு வடிவம் என்றைக்கும் அழியாதிருக்கும்

இவ் ஆற்றுகைக் கலை வடிவங்கள் பார்வையாளரை உடனெதிரே கொண்டிருக்கும் அந்த வகையில் பார்வையாளர்களும் கலை ஞர்களும் , உடனெதிரே சந்தித்துக் கொள் வார்கள். ஆற்றுகைக்கலை வடிவமான நாடகம் ஒரு கருப்பொருளை மையமாகக் கொண்டு தேவைக்கேற்றவாறு ஏனைய பிற கலைகளை தன்னுள் உள்ளடக்கி அக்கதைப் பொருளை முழுமையாயடையச் செய்து குறிப்பிட்ட ஒரு அரங்கிலே பார்வையாளர் முன்னிலையில் நிகழ்த்திக் காட்டும் செய்கையாகும்.

இந்த அவைக்காற்றுக்கலை வடிவத் தின் மூலம் மாணவர்களின் அறிவு, திறன், மனப் பாங்கு என் பவற்ற வளர்த் துக் கொள்ளலாம்.

கலையின்பம் போன்பமாகும்

உதயம் எப்போது

செல்வன் திலீப்குமார்
தரம் 13 கலைப்பிரிவு

பூலோகம் பிறந்திங்கு
புயலாக மாறிடிச்சு ~ தினம்
சாவுகளும் சச்சரவுகளும்.
கண் முன்னே தோன்றிடிச்சு ~ உயிரை
காவுகின்ற கண்ணியத்தில்
கண்டவனைத் தாக்குகிறோம் ~ பாவம்
ஏவுகின்ற விழியினிலே
வாழ்நாளைப் போக்குகின்றோம்

சந்திரனில் நிலம் வாங்க
சங்கதிகள் நடக்கிறது
வீண் வெளியை விலைபேசும்
மாநாடும் இருக்கிறது ~ இந்த
உலகத்தைப் புதிதாக்கும்
முயற்சிகளை விட்டுவிட்டு ~ கையில்
விலங்குதனைப் பூட்டிக் கொண்டு
பயந்து நாம் தூங்குவதோ?

புயற்காற்றும் பூகம்பமும்
நாடுகளை அழிக்கிறது
வயல் வெளிகள் மழையின்றி ~ எம்
வயல்களை எரிக்கிறது

துன்பங்கள் இல்லாத
வாழ்வொன்று தேவையினி ~ அந்த
இன்பத்தில் நாம் வாழ
இயற்கை தான் வெற்றிக் கனி

உலகத்தில் உயிரனைத்தும்
சமமாகப் பேண வேண்டும் ~ வாழ்வில்
உண்மைதனைப் பேசுகின்ற
பூமிதனைக் காண வேண்டும் ~ புல்லில்
பனித்துளிகள் படர்வது போல
உணர்ச்சிகள் வருவதெப்போ?
மனித உரிமைகளை நாமெல்லாம்
மதிக்கின்ற காலமெப்போ?

வேண்டுமெங்களுக்கு
இனிதான அகிலமொன்று ~ காலத்தை
தாண்டுகின்ற பாதையிலே
யுத்தங்கள் இல்லையென்று நம்மை
தூண்டுகின்ற வாழ்வுதனை
வாஞ்சையுடன் வாழ்வதற்கு
மீண்டும் ஒரு உலகத்தின்
உதயம் எப்போது

மௌனமாக இருக்கத் தெரியாதவனுக்கு
நன்றாக பேசவும் தெரியாது



கல்லூரி கட்டடங்கள்



புதிய இரு மாடிக் கட்டடம்



சேதமடைந்த விஞ்ஞான கூடக் கட்டடத் தொகுதி



தகவல் தொழில் நுட்பக் கூடம்

இதய அஞ்சலிகள்



ஆரம்பக் கல்வி ஆசான்
திரு. க. முத்துசாமி அவர்கள்



ஐந்தாம் வகுப்பு ஆசான்
திரு: நா: பொன்னையா அவர்கள்



முன்னாள் ஆசிரியை
திருமதி க. செல்வரத்தினம்(B.A.)



ப.மா.ச. காப்பாளர்
அமரர் A.C. செபநாயகம்(G.A.)



கல்லூரி நலன்விரும்பி, சமூகசேவையாளன்
W. N. தேவகடாட்சம் அவர்கள்

அன்றே கண்ட மெஞ்ஞானம்

செல்வி தெ. சர்மிளா
தரம் 13 கலைப்பிரிவு

காந்தி சக்தியைப் பற்றி வில்லியம் கில்ப்ட், டி-மெக்னெட் (De - Megnete) என்ற புத்தகத்தில் கி.பி. 1600ல் குறிப்பிடுகிறார். இரும்பை இழுக்கக் கூடிய ஒரு சக்தியைப் பற்றி விபரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நமது இதிகாச இலக்கியமான இராமாயனத்திலேயே காந்தத்தைப் பற்றிய குறிப்பு வருகிறது. கம்பராமாயணத்தில் இப்படி ஒரு குறிப்பு அதைத் தசரதன் குறிப்பிடுகிறான். அதுவும் எப்போது? யுத்தம் முடிந்து, சீதாதேவி அக்கினிப் பிரவேசம் செய்யும் சமயத்தில் தசரதனே அங்கு வந்து வாழ்த்துகிறான். மகனை மார்போடு அணைத்துக் கொள்கிறான். அப்போது தான் தசரதன் சொல்கிறான்.

'' அன்று கேகயன் மகள் கொண்ட
வரம் எனும் அயில்வேல்
இன்று காறும் என் இதயத்திடை
நின்றது இப்பொழுது அகன்றது
உன் குலப்பூண்மன்றல் ஆகும் ஆம்
காந்த மாமணி இன்று வாங்க"

அன்று கையேயி இரண்டு வரங்களை வாங்கிக் கொண்டு இராமனைக் காட்டுக்கு அனுப்பிவிட்ட போது, தசரதன் மார்பில் அம்புகளாக அவை தைத்து விட்டனவாகும். இதயத்தில பாய்ந்த அந்த இரு அம்புகளை, இப்போது மகனை வெற்றித் திருமகனாகப் பார்த்து மார்போடு அணைத்துக் கொள்ளும் போது, இராமனின் காந்த சக்தி கொண்ட பாம்பு கவர்ந்து வெளியே இழுத்துவிட்டதாம்! இரும்பைக் காந்தம் கவருகிறது என்ற ஆகர்ஷண சக்தியை இதிகாசக்திலேயே குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

இரும்புக் கம்பி காந்த சக்தி பரவியுள்ள இடத்தில் சுழன்றால் மின்சாரம் உண்டாகும். இது இன்றைய விஞ்ஞானம். மின்சாரத்தை ''ஜெனரேட்டர்"கள் உற்பத்தி செய்யும் முறை இது தான் காந்தத்தளம் மின்கம்பி இவைகள் வேண்டும். மின்சார உற்பத்திக்கு (Magnetic - Eield) இராமாயணத்தில் வரும் நிகழ்சி இது. இராம - இராவண யுத்தம் நடந்து கொண்டிருக் கிறது. அன்றைய யுத்தம் முடிந்து எல்லோரும் போர்க்களத்திலிருந்து போய்விட்டார்கள். இருள் சூழ்ந்து கொள்கிறது. அந்த இருட்டில் இராமன் பாசறையிலிருந்து புற்பபட்டு வருகிறான். லக்மணன், அங்கதன் ஆகியோர் எங்கே இருக்கிறார்கள் என்பது அந்த இருட்டில் புலப்படவில்லை. விபீஷணன் தீப்பந்தம் ஏற்றிவரப் போகிறான். இராமனுக்கு அதுவரை பொறுக்கப் பொறுமையில்லை. அப்பாறாத் துணியிலிருந்து இரும்பு அம்பை எடுக்கிறான். அதை மார்பின் அருகே வைத்து இரு அங்கைகளாலும் திரிந்து சுற்றுகிறான். காந்த சக்தி மிகுந்த மார்பு அல்லவா? அங்கே வேகமாகச் சுழலும் அம்பும் இரும்புதானே? மின்சக்தி உண்டாகிறது. சுடரொளியாக மின்பொறி பறக்கிறது. அந்த வெளிச்சத்தில் இராமன் மற்றவர்களை அடையாளம் காணுகிறான்.

சில ஆண்டுகளுக்கு முன்பு உலகத் துக்குத் தெரிந்த புதிய சக்தி மின்சாரம், அன்றே இதிகாச காலத்திலேயே இராமாயணத்தில் மின்சக்தியைப் பற்றி அது உண்டாகும் விதத்தை உணர்த்தும் விதமாகக் குறிப்பு வருகிறது. சடாயுவிற்கு ஈமக்கிரியைகளைச் செய்து முடித்து இராமனும் லக்மணனும் புறப்படு கிறார்கள். இராமனுக்குத் தாகவிடாய் ஏற் படுகிறது. லக்மணன் அண்ணனுக்காகக் குடிக்கத் தண்ணீர் கொண்டு வரச் செல் கிறான். நீர்நிலைக்கு அருகே சென்ற லக்மண

னைப் பார்க்கிறாள். அந்த இராட்சதப் பெண் அழகு மிகுந்த அரசிளங்குமரனை மயக்கித் தூக்கிக் கொண்டு போய்விடுகிறாள். தனக்கு இன்பம் தரவேண்டுமென்று வேண்டி ஏங்குகின்றாள். ஆனால் லக்மணனோ அந்த இராட்சதப் பெண்ணின் மூக்கையும், மார்பகத்தையும் சிதைத்தது விட்டுத் திரும்பி வந்து விடுகிறான். அந்த அரக்கியின் பெயர் என்ன தெரியுமா? அயோமுகி! அவள் இரும்பினால் ஆன முகம் கொண்டவள். எத்தனை அம்புகள் தாக்கினாலும் இரும்பாலான அந்த முகம் ஒன்றும் பாழ்படாது. அத்தனை வலிமை உடைய கொடிய அரக்கி அவள். அயம் என்றாள் இரும்பு அதனாலேயே இரும்பு முகம் கொண்ட அந்த அரக்கி ''அயோமுகி'' என்று பெயர் அயம் என்பது ''அயர்ன்'' என்ற இரும்புக்கு உரிய ஆங்கிலச் சொல்லை ஒத்திருக்கிறது அல்லவா?

சூரியன் என்ற கிரகம் தான் நிலையானது மற்ற கோளங்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. தமது வட்டப்பாதைகளில் இது கோப்பர்னிகஸ் சித்தாந்தம் கி.பி. 1543 இற்கு முன் பூமியை மையமான நிலையான கிரகமாக கருதிக் கொண்டிருந்தார்கள். சூரியன் நிலையான மைய கோளம் என்ற சித்தாந்தம் அன்று இல்லை. நமது வேத நூல்கள் என்ன சொல்லுகின்றன? சூரியனைத்தான் நிலையான மைய சக்தி என்று நம்மை வழிபடச் சொல்லுகின்றன. மந்திரங்களைச் சூரியனை நோக்கி வணக்கம் செய்யும் போது சொல்கிறான். கம்பனும் இதைச் சொல்லுகிறான். எப்படி? பிறப்பையும், இறப்பையும் சூரியன் தோன்றுவதற்கும் மறைவதற்கும் ஒப்பிடுகிறான்.

சூரியன் காலையில் தோன்றுகிறது. இது பிறப்பைப் போல மீண்டும் மாலையில் மறைகிறது இது இறப்பைப் போல என்று குறிப்பிட்டு விட்டு அவனுக்குத் தோற்றமும் இல்லை. மறைவும் இல்லை. அதைப்போல பிறப்பு என்பதும் இறப்பு என்பதும் வெறும் மாயைதான் ஒரு தோற்றத்தைப் பார்த்து அழிவில்லாத நிலையான சூரியன் பிறப்பதாகவும் மறைவதாகவும் எண்ணிக் கொள்வதைப் போல அழிவில்லாத ஆன்மா உடம்புடன் பிறப்பதாகவும் இறப்பதாகவும் எண்ணிக் கொள்வது மாயை அல்லவா என்று உணர்த்துகிறான். அந்தப் பாடல் இது.

''இறக்குமாறு இது'' என்பான் போல்
முன்னை நாள் இறந்தான் பின்னால்
பிறக்குமாறு இரு என்பான் போல்
பிறந்தனன் பிறவா வெய்யோன''

''பிறவா வெய்யோன்'' சூரியன் தோன்றுவதும் இல்லை மறைவதும் இல்லை. சூரியன் என்றும் இருப்பது பூமியின் சுழற்சி (Rotation) சுற்றி வரல் (Revolution) இவைகளால் இரவு பகல் பருவங்கள் தோன்று கின்றன. சூரிய உதயம், சூரிய அஸ்தமனம் இவை பூமியில் உள்ளவர்களுக்கு ஒருவர் பிறப்பதும் இறப்பதும் தெரிகிறது. ஆனால் உடம்பு என்ன ஆகிறது என்று தெரிகிறதே தவிர உயிர் என்ன ஆகிறது என்பது தெரிவதில்லை. உயிர் அழிவற்றது என்பதையும் சூரியன் தான் மையக்கோளம் என்பதையும், ''ஐன்ஸ்டீன்'' போன்ற விஞ்ஞானிகள் விளக்க முன் நம் மவர்களும் அறிந்திருந்தனர் என்பதற்கு குறிப்புகள் கிடைக்கின்றன. கம்பனது இராமாயணத்திலே காணப்படுகிறது. ஆகவே இன்றைய விஞ்ஞானம் அன்றே கண்ட மெஞ்ஞானமல்லவா?

ஒழுக்கமுள்ள பெண் கணவனுக்கு
அரசன் அணியும் முடிக்கு ஒப்பானவள்
- பைபிள் -

திருவள்ளுவர்

செல்வி ம. றஜாந்தினி
தரம் 13 கலைப்பிரிவு

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு''

உலகிலே பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்ட நூல்களில் திருக்குறளும் ஒன்றாகும். காலத்தையும் வென்று கருத்துகளை வழங்கி வருவது திருக்குறள் பாலர்முதல் விருந்தினர் வரை குறட்பாக்களை அறியாதவர்கள் யாருமே இல்லை ஆனால் குறட்பாக்களை அறிந்தளவிற்கு வள்ளுவரைப் பற்றி அறிந்தவர்கள் மிகக் குறைவு என்றுதான் கூற வேண்டும்.

இந்த வகையில் திருவள்ளுவருடைய வரலாற்றுக்குரிய குறிப்புகள் சில திருவள்ளுவ மாலை ஞானாமிர்தம், கபிலர் அகவல், புலவர் புராணம் போன்றவற்றில் உள்ளன. திருவள்ளுவர் மாலையில் திரு வள்ளுவர் நான்முகன் அவதாரம் என்றும், கலைமகள் அவர் நாவிலிருந்து திருக்குறளைச் சொன்னார் என்றும் சொல்லப்படுகின்றது. சமண மதத்தவரிடையேயும் வள்ளுவர் பற்றிய கதை கூறப்படுகின்றது. இவை எல்லாவற்றையும் துணிந்து கூறமுடியவில்லையாயினும், வள்ளுவருடைய காலம் மதம் வழிபட்ட கடவுள் அவருடைய இலட்சியம் முதலானவற்றை அவருடைய நூலை வைத்துக் கொண்டே அறிய வேண்டியுள்ளது. ஆனாலும் வள்ளுவருடைய வாழ்க்கையை முழுமையாக அறிய முடியவில்லை இருப்பினும் திருவள்ளுவரின் வாழ்க்கை பற்றிய செவி வழிச் செய்திகள் சில கீழே தொகுத்துக் கூறப்பட்டுள்ளது.

திருவள்ளுவர்; ஆதி என்றும் புலை மடந்தைக்கும், பகவன் என்றும் அந்தணருக்கும் மகனாகப் பிறந்தார் இவரோடு ஔவை, கபிலர். வள்ளி, அதியமான், உப்பை, உறுவை என்பவர்களும் பிறர்ந்தார்கள் என்று சொல்லப் படுகின்றது. ஆதியும் பகவானும் திருவள்ளுவரைப் பெற்றெடுத்த தாய் தந்தை என்பதை அவர் தனது முதல் குறளிலேயே சொல்லியுள்ளார் என ஆய்வாளர் கூறுகின்றார். திருவள்ளுவர் வள்ளுவ குலத்தில் தோன்றியவர் அரசியல் செய்திகளை யானை மீது அமர்ந்து முரசறைந்து தெரிவிக்கும் தொழிலையுடையவர்கள் வள்ளுவ குலத்தவர்கள் அவர்கள் அரசனுக்குரிய பல கருமங்களைச் செய்பவர்கள் எனவே திருவள்ளுவரும் வள்ளுவ குலத்தை சேர்ந்ததால் ''வள்ளுவர்'' என்ற பெயர் உண்டாயிற்று என கருத்து நிலவுகின்றது.

திருவள்ளுவர் மயிலாப்புரில் வாழ்ந்தார் என்றும் மதுரையில் வாழ்ந்தார் என்றும் சொல்லப்படுகின்றது. இவர் மதுரையில் வாழ்ந்ததிற்கான தகவல்களே அதிகம் உண்டு ''பாண்டி மண்டல சதகம்'' இவரை பாண்டி நாட்டினர் என்று சொல்லப்படுகிறது இவர் பாண்டி நாட்டிலுள்ள 'உருனி, கேனி' என்னும் சொற்களை யாண்டிருப்பதாலும் இந்தகருத்து வெளிப்படுகின்றது. திருவள்ளுவர் வாசுகி என்ற பெண்மணியை மணந்து இல்லறத்தை நல்லறமாக நடாத்தினர். வாசுகியின் தந்தை மார்க்கசகாய முதலியர் என்று சொல்லப் படுகின்றது. வாசுகி அம்மை கற்பில் சிறந்த இல்லத்தரசியாக விளங்கினார். திருவள்ளுவரிற்கு குழந்தைகள் பிறந்ததைப் பற்றி செய்திகள் இல்லை. எனினும் புதல்வரை பெறுதல் என்னும் அதிகாரத்தில் அவருக்கு குழந்தைகள் மிதுள்ள பேரன்பு இனிது புலனாகும். குழந்தைகளை சிறந்த செல்வமாக மதித்திருக்கின்றது. இப்பேரறிஞர் உள்ளம்.

திருவள்ளுவர் மக்களோடு வாழ்ந்தவர் குடிகளின் அல்லலையும் அதற்காற்றாது அவர்கள் அழுத கண்ணீரையும் கண்டவர் ஆட்சியாளரினதும் அதிகாரவர்க்கத்தினரதும் கடுமொழி மக்கள் மேற்பாய்வதை அறிந்தவர் ஏழைமக்கள் அதிகார வர்க்கத்தின் சீற்றத்திற்கு இரையாவதை உணர்ந்தவர் குடிகள் நல் வாழ்க்கை நடாத்த அரசாட்சி அரணாக அமைய வேண்டும் என்ற அடிப்படை உண்மை யறிந்தவர். அவர் குடிகள் பக்கம் நின்று ஆட்சி யாளரையும் அதிகாரவர்க்கத்தினரையும் எதிர்த்தவர். பெண்விடுதலைக்காக போராடினார் சமுதாய உறவுகளை ஆராய்ந்தார் மக்களின் வாழ்க்கைச் சிக்கல்களை அடிமை உள்ளத் தாற் சிந்திக்கவில்லை அறிவுள்ளதால் ஆராய்ந்தார். அவ்வரிய ஆராட்சியின் பயனாய் உருவானதே திருக்குறள்.

திருவள்ளுவர் மதிநுட்பம் உடையவர் நூல்களை நன்றாகக் கற்று பல பெரியாரிடம் பலவற்றை கேட்டுச் செவிச் செல்வத்தையும் சிறக்கப் பெற்றவர் அக்காலத்தில் வழங்கிய அறநூல், பொருள்நூல் முதலியவற்றை நன்கு ஆராய்ந்தவர். இயற்கையாக அமைவது மதிநட்பம் முயற்சியினால் அமைவது நூல் அறிவு மேலும் முயன்று பெறுவது கேள்வி இவற்றையுடைய திருவள்ளுவர் நன்கு ஆராய்ந்து பார்க்கும் நுட்பமாகிய கூர்மை யையும் வரிந்த மன இயல்போடு பல நூல களையும் கற்றதனால் அமைந்த விரிவையும் உடையவர். இவருடைய நூலான திருக் குறளுக்கு தருமர் மணக்குடவா, நாமத்தர் நச்சர், பரிதி, பரிமேலழகர், திருமலையர், மல்லர், கலியபெருமாள், கலிங்கர் போன்றோர் முன்னைய காலங்களில் உரையெழுதி இருப் பினும் பின்னைய காலங்களிலும் பலர் உரை எழுதியுள்ளார் பலருடைய உரை முழுமையாக கிடைக்காத போதிலும் பரிமேலழகர் உரையே இன்னும் சிறந்ததாகக் கொள்ளப்படுகிறது. பல சமயக் கருத்துக்கள் இந்த நூலிற் கூறப் பட்டுள்ளன. பல சமயத்தவர்கள் இது தமக் குரிய நூல் என்றும் கூறிவருகின்றர். யாவரும் ஒருமித்து புகழும் மாண்பை இந்த நூலில் தான் காண்கின்றோம்.

அரசியல் ஞானி என்பவன் நாட்டின் சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் அரசியல் வாதி

அரசியல் வாதி என்பவன் தன்னுடைய நலனுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் அரசியல் ஞானி

சர்வதேசரீதியில் பெண்களும் அவர்களின் சமூகப் பணிகளும்

செல்வி ச. ருஜித்தா
தரம் 13 கலைப்பிரிவு

உலகில் உள்ள உயிர்கள் அனைத்திலும் சிறப்பாகக் கருதப்படுவது மனித குலமாகும் இத்தகைய மனித இனத்தில் பாதிப்பேர் பெண்களாவர். காலகாலமாக இன்னல்களுக்கு உட்பட்டு அடக்கு முறைகளுக்கு உட்பட்டு துண்புற்றோர் பெண்கள். தமிழர் வாழ்வில் சங்க காலத்திலேயே பெண்கள் சமவுடமையுடன் வாழ்ந்து வந்தனர் காக்கை பாடினியார், நச்செள்ளையார் முதலிய சங்க காலத்து பெண்கள் இதற்கு சான்றாவார்கள்.

இந்தியாவின் தமிழகம் பெண்களிற்குப் பெருமை கொடுத்த அளவிற்கு வேறு நாடுகள் தரவில்லை பெண்களால் வாழ்ந்த நாடு இந்த நாடு நீதி நெறிகளை வாழவைத்தவர் ஒளவையார் சைவ உலகிற்கு வாழ்வு கொடுத்தவர் மங்கையர்க்கரசியார் வைணவ உலகிற்கு வாழ்வு தந்தவர் ஆண்டாள் அம்மையார் மேலும் திலகவதியார் வெண்காட்டு நங்கையார் மாதவியார் இசைநானியார் போன்ற பல பெண்மணிகள் இந்த நாட்டை அலங்கிரித்தார்கள்.

''மங்கையராப் பிறப்பதற்கே - நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா''

என்று பாடி பெண்டிராய்ப் பிறப்பது பெருமைக்குரியது என்பதைக் குறிப்பிட்டார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

''பெண்ணிற் பெருந்தக்க யாவுள''

என்று, கேட்டான் தெய்வப் புலவன் திருவள்ளுவர் பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்''

என்று பெண்ணின் பெருமையைப் போற்றினார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். இன்று பெண்கள் சமூகத்தில் அடிமட்ட வேலைகளில் தொடங்கி அரசாளும் பணிகள் வரை அனைத்துத்துறைகளிலும் ஆண்களுக்கு சரிசமமாக முன்னேறி வருகின்றனர். இன்று கிராமங்கள் தோறும் பெண்கள் தங்கள் சேவைகளை முன்னெடுத்துச் செல்வதிற்காக நிறுவன ரீதியாக அணி திரண்டு வருகின்றனர். புழுதி படிந்த கிராம மக்கள் தோறும் மகளிர் அணிகள் மாதர் முன்னேற்றச் சங்கங்கள் என்பவற்றை நிறுவித் தமது பணிகளைப் பரவலாக்கி வருகின்றனர்.

நமது நாட்டில் சமூகத்திற்கு ஆரம்பக் கல்வி புகட்டுவதில் பெண்கள் ஈடுபடுவதைக் காணலாம். அன்பு, பொறுமை, கருணை, தியாகம் போன்ற நல்ல பண்புகள் பெண்களிடம் இயல்பாக அமைந்து காணப்படுவதால் இது மட்டுமல்லாமல் இன்று நமது நாட்டைக் காக்கும் பணிகளில் பெண்கள் போராளிகளாகச் சென்றுள்ளனர்.

மற்றும் இன்று கிராமிய வளர்ச்சியில் பெண்கள் பல பங்களிப்புக்களைச் செய்கின்றார்கள். சமூக பண்பாடுகள், கலைத்துறை வளர்ச்சியிலும் பெண்கள் தமது பங்களிப்பினைச் செய்து வருகின்றார்கள். இத்தோடு சமூக விழிப்புணர்வுக்கு வழிவகுத்தும் வருகின்றார்கள். இவ்வாறு பெண்களின் சமூகப் பணியை எடுத்து நோக்கும் அதே நேரம்

''நீறில்லா நெற்றி பாழ் நெய் இல்லா
உண்டி பாழ்
ஆற்றில்லா ஊருக்க அழகு பாழ் - மாறின்
உடன் பிறப்பில்லா உடம்பு பாழ் பாழே
மடக்கொடி இல்லா மனை''

என்று இல்லத்தின் மேன்மையை இல்லாளின் சிறப்பை பாடினார் ஔவையார்.

நிலவில்லா வானம் எப்படி இருக்கும், பெண்கள் இல்லாத வீடும் அப்படித்தான் இருக்கும். இவ்வாறு பெருமையும் வாழ்விற்கு உண்டாவதன் மூல காரணமே பெண்மைதான் இத்தகைய பெருமைக்குரிய பெண் சமுதாயம் இடைக்காலத்தில் சமூகத்தில் அடைக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு அடிமை வாழ்வு வாழ நேரிட்டது. வீட்டிற்குள்ளே பெண்ணைப் பூட்டி வைக்கும் விந்தை மனிதர் செயல் வெருண்டெழுந்தனர் பெண்கள் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்ற நிலை மாறி 'அடுப்போடு கிடந்த நெருப்புக்கள் நாங்கள், நாங்கள் எழுந்து விட்டோம் எரிப்பதற்கு என்று எதிலும் எல்லாத்துறைகளிலும் பெண்கள் முன்னேறத் தலைப்பட்டனர்.

பெண்கள் விடுதலைக்காக சம காலங்களில் சர்வதேசரீதியில் உருவான அக்கறையின் விளைவாக 1975ம் ஆண்டில் மெக்சிக்கோவில் இடம் பெற்ற மாநாட்டின் விளைவாக சர்வதேச பெண்கள் தசாப்தம். பிரகடனப்படுத்தப்பட்டது. இவற்றின் நோக்கம் உலகில் பரந்துள்ள நாடுகள் யாவும் பெண்களின் சமூக பொருளாராத மேம்பாடுகளில் ஆழ்ந்த அக்கறை கொள்ள வேண்டும் என்பதே. பலநாடுகள் பெண்விடுதலை தொடர்பாக நிறுவன ரீதியான அமைப்பியல் மாற்றங்களை மேற்கொண்டனர். இவ்வகையில் இலங்கையில் 1983இல் பெண்கள் விவகாரத்திற்கென ஓர் அமைச்சு நிறுவப்பட்டது வருடம் வருடம் பெண்கள் தினத்தைக் கொண்டாடுவதோடு எமது கடமை முடிந்து விட்டதா? ஏன் இத்தினத்தைக் கொண்டாட விளைகின்றோம்? இதன் உண்மையான அர்த்தம் என்ன இது பற்றி ஆழமாக சிந்திக்க வேண்டும். பெண்விடுதலை ரீதியாக சிந்திப்போர் ஊக்கம் பெறவும், நாடுதழுவிய ரீதியில் பெண்களின் பிரச்சினைகள் பரவலாக்குவதற்குப் பெண்கள் தினக் கொண்டாட்டங்கள் உதவி புரியலாம் எனினும் பெண்விடுதலை தொடர்பாக வெறும் கோஷங்களை எழுப்புவதை விடுத்து ஆக்க பூர்வமாக பணிகளில் நாம் ஈடுபடவேண்டும்.

பெண்களை சுற்றிப் பிணைக்கப்பட்டுள்ள அவளது உள்ளத்திற்கும் உடலுக்கும் துயரங்களை விளைவிக்கின்ற முட்கம்பிகள் அறுத்தெறிக்கப்பட வேண்டும். பொருளாதாரத்திற்கும் பாதுகாப்பிற்கும் ஏனையோரைச் சார்ந்திருக்கும் நிலையினை மாற்றியமைத்திட வேண்டும்.

அடிப்படை மாற்றங்கள் தேவை என்ற மந்திர கோஷங்களை விடுத்து பெண்களின் அடிப்படை மாற்றங்களை அடிமட்டங்களிலிருந்து உருவாக்க அடிமட்ட பெண்களை ஒன்று திரட்டி ஆயத்தம் செய்வோம். புழுதி படிந்த கிராம ஒழுங்கைகளினூடே நடந்து கிராமங்களிற்கும் அகதி முகாம்களிற்கும் சென்று அங்கே அடிமட்ட பெண்களைக் கண்டு பேசி பிரச்சினைகளை உணர்ந்து பெண்களின் எழுச்சிக்கும், விழிப்புக்கும் வழி காண்போம். பெண்கள் எழுச்சி, விழிப்புணர்வு அடிமட்டத்திலிருந்து உதயமாக வேண்டும் 83% ஆனோர் வாழும் கிராமங்களில் பெண்கள் எழுச்சியை தோற்றுவித்ததால் அது உண்மையான எழுச்சியாக பரிணமிக்கும் சக்தியாக உருவெடுக்கும் பெண்ணிலைவாதிகளே; கிராமங்களுக்கு சென்று உருவாக்குவோம்.



அழகு பெண்களுக்கு பெருமையைத் தருகிறது
கற்பு அவர்களுக்கு மதிப்பைத் தருகிறது
அடக்கம் அவர்களை செல்வமாக காட்டுகிறது

-யூரிபைடிஸ்-

இசைக்கலை பெறும் முக்கியத்துவம்

செல்வன் க. ஜெயகர்
தரம் 13 கலைப்பிரிவு

இந்துக் கலைகளிலே இசைக்கலையும் ஒன்றாகும். ''நாத விந்து கலாதி நமோ நம வேத மந்திர சொரூப நமோ நம" என்றார் அருணகிரிநாதர். இறைவன் நாதப்பிரமமாய் உள்ளான். அந்த நாதமே இசைக்கு அடிப்படையாகின்றது. ஒலியின் அடிப்படையில் தோன்றி விளங்கும் இசையானது ஒலி வடிவாய் எங்ஙனம் வியாபித்து சதா ஒலித்துக் கொண்டிருக்கும் இறைவனோடு இசையும் தன்மையுடையது. வேதம் இசையோடு ஓதப் படுகின்றது. குறிப்பாக சாமவேதம் இறைவனை இசைவிக்க இசைப்பாடலாய் அமைந்த வேத மாகும். ''வேதத்துள் நான் சாம வேதமாக உள்ளேன்'' என கீதையிலே கிருஸ்ணன் கூறியது கவனிக்கத் தக்கது. ஏழிசையாய். இசைப் பயனாய் விளங்கும் இறைவனை இசையால் இசைவிப்பது சுலபம். தமிழோடு இசை ஆகையால் தான் நித்தமும் சம்பந்த ருக்கு காசு நல்கினரோ என சுந்தரர் இறை வனைக் கேட்டமை இறைவன் இசைக்கு வச மாவான் என்பதைப் புலப்படுத்துவதாகும். ''நான் வைகுண்டலத்திலும் இல்லை யோக் கியர் தம் உள்ளத்திலும் இல்லை. சூரிய, சந்திர மண்டலத்திலும் இல்லை. பக்தர்கள் கானம் செய்யுமிடங்களில் உள்ளேன்" என்று நாராயணன் நாரதருக்குக் கூறியது கவனிக்கத் தக்கது. இராவணனது சாம கானம் நாத வடி வான சிவலோக நாதனை மகிழ்வித்தது. ஆகவே தான் இறையருளைப் பெற இசை சிறந்ததோர் சாதனதாகும்.

யாம் துதிக்கும் தெய்வம் பலவற்றுடன் இசையும் இசைக் கருவியும் தொடரும் பாங்கு சிந்திக்கப்பாலது. சிவபிரான் தமருகத்தை கையிலே ஏந்தியுள்ளார். வீணா தட்சணமூர்த்தி சங்கீத சாஸ்திர குருவாக திகழ்கின்றார். திருமால் வேணுகோபாலனாகி வேங்குழல் ஊதும் போது சாராசரம் அனைத்துமே அந்த மதுர கீதத்தை மாந்தி சொக்கித் திளைக் கின்றன. சரஸ்வதி வீணை மீட்டிய வண்ணம் இருக்கின்றாள். நந்திகேஸ்வரர் கையில் மத்தளம் உள்ளது. ஆகவே தான் இசை ஒரு தெய்வீகக் கலையாகும். இன்பக் கலையின் முடி என்கின்ற இவ் இசையானது மக்களை மட்டுமன்றி விலங்குகளையும் வசப்படுத்தும் ஆற்றல் கொண்டது. மகுடியின் இசை கேட்டு நாகம் மயங்கி நிற்கின்றது. வேங்குழலின் ஓசை கேட்டு பசு பால் சொரிக்கின்றது.

ஏழிசையாய் இசைப் பயனாய் விளங் கும் இறைவனை மகிழ்விக்க ஆலயங்களில் நாத உபாசனை நிகழும், தேவாரம், வேதம் என்பன பண்ணோடு உருக்கமாக ஓதப்படு கின்றன. அவ்வேளைகளில் குழல், யாழ், வீணை, தாளம் முதலிய இசைக் கருவிகளும் சேர்ந்தால் அங்கு தோன்றுவது பேரின்ப ஒலியாம். இக்காலத்தில் மேற்கூறிய கோயில் வாத்தியங்களில் அநேகமானவை அருக நாதஸ்வரமும், தவிலும் இன்று வரை உள்ளன. கெஞ்சிரா, உடுக்கு, சேமக்கலம் என்பன அண்மைக் காலத்தில் கோயில்களில் இடம் பெறுகின்றன. திருவிழாக் காலங்களில் சுவாமி உலாப்புறப்படும் போதும் ஆலயங்களில் புகும் போதும் நாதஸ்வரத்தில் மல்லாரி வாசிக்கப் படும். மல்லாரி என்பது நட்டைப் பண்ணில் பல தாளத்தில் அமைந்த ஒரு வகைப் பாடலாகும்.

வேதத்தில் போற்றப்பட்ட இசையானது சங்க காலத்திலும் செழித்தோங்கியிருந்த மையைக் காணலாம். பரிபாடல் முதலிய சங்க கால நூல்களில் கடவுளரை ஏற்றிப் போற்றும்

தமிழ் இசைப்பாடல்கள் காணப்படுகின்றன. சங்க காலத்தில் மன உணர்ச்சிகளை இசை முறையில் வெளிப்படுத்தக்கூடிய இசையும் அதற்குரிய துணைக்கருவிகளும் தோற்றம் பெற்றன. சங்க காலத்தில் அந்தந்த நிலத்துக் குரிய முல்லைப் பண், மருத பண், குறிஞ்சிப் பண், நெய்தல் பண், பாலைப் பண் என்ப வற்றைப் பாடி மகிழ்ந்தனர். இவ் ஐந்து பண்களி லிருந்தும் இந்தக் காலப் பண்கள் கிடைத்தன என்பர். சிலபதிகாரத்தில் அரங்கேற்று காதை யில் இசைக்கு இலக்கணம் கூறும் காதை யாகவே காணப்படுகின்றது. இசை நூல்கள் பல பழந்தமிழ் நாட்டில் இருந்தமையை சிலப பதிகார உரைகளால் அறிய முடிகின்றது. ஆயி னும் கி.பி. 4ம் நூற்றாண்டின் நடுப் பகுதி யிலிருந்து 6ம் நூற்றாண்டு வரை பழந்தமிழ் நாட்டில் இசைக்கலைக்கு இருண்ட காலம் எனலாம். பௌத்த சமண மத செல்வாக்கு அதிகரித்தமையால் மக்கள் இசை முதலிய கலை நலன்களை மறந்தனர். ஆயினும் அல்லல் மிகுந்த அக்காலத்திலும் காரைக் கால் அம்மையார் அருளிச் செய்த பாடல்களை வைணவர் தேவ கானம் என்பர்.

பல்லவர் காலத்தில் இசையின் முக்கி யத்துவத்தினைப் பார்க்கின்ற போது பல்லவ மன்னர்களில் 1ம் மகேந்திர வர்மன் இசை வளர்த்த நெறியில் தனியிடம் பெறுகின்றான். இவன் இசையிலே பெரு விருப்புடையவன் என்பதை அவனது கல்வெட்டுக்களிலிருந்து அறியலாம்.

வீணை மீட்டுவதில் இவன் பெரும் ஆற் றல் வாய்ந்தவன். இவனது கையில் இருந்த வீணை பரிவர்த்தினி என பெயர் பெற்றது. இராச சிம்மனும் இசையில் பெரும் வித்தகர். வாத்திய வித்தியா தரன், வீணாதரன் என்னும் அவனது விருதுப்பெயர்கள் இதனனை உணர்த் துகின்றன. இவனது கலைப்பற்றை காஞ்சி கைலாசநாதர் கோயில் காட்டுகின்றது. 2ம் 3ம் நந்திவர்மன் காலங்களில் கோயில்களில் திருப்பதிகாரங்கள் ஓதப்பட்டன.

சோழ மன்னன் காலம் தெய்வீக இசையின் வளர்ச்சிக் காலமாயிற்று. தேவாரப் பண்களை நாம் அறிவதற்கும் ஓதுவார்களின் தோற்றத்திற்கும் சோழர் காலமே காரண மாகும். இராஜ ராஜ சோழன் தஞ்சைப் பெரு வுடையார். கோயிலில் பெண்களை நியமித்துப் பாடல்களை பாடுவித்துள்ளான். இராஜேந்திர சோழனும் தேவாரப் பண்களை வளர்த்தான். 2ம் குலோதுங்க சோழன் பெரிய புராணம் பாட காரணமாய் இருந்தான்.

இவ்வாறாக இசைக் கலையானது பல்வெறு காலங்களிலும் வளர்ச்சி பெற்று வந்த போதும் இசைக்கலையின் முக்கியத்துவத்தை நாம் அறியக் கூடியதாக உள்ளது. மேற் கூறப்பட்ட கருத்துக்களைத் தொகுத்து நோக் கும்போது இசைக்கலையில் முக்கியத்துவம் புலனாகின்றது.



பிறப்பும் இறப்பும் எல்லோருக்கம் பொதுவானது
புகழும் பழியும் வந்தால் போகாது

உதைபந்துக் குழு



15 வயதின் கீழ்



17 வயதின் கீழ்



19 வயதின் கீழ்

இல்ல மெய்வல்லுனர் போட்டி



முதன்மை விருந்தினர்
திரு. நா. ரவிராஜ் பா.உ.



விருந்தினர்களுடன் அதிபர்



பெண்கள் மிதிவண்டி
ஓட்டப் போட்டி

வலைப்பந்துக் குழு



15 வயதின் கீழ்



17 வயதின் கீழ்



19 வயதின் கீழ்

கரப்பந்துக் குழு



15 வயதின் கீழ்



17 வயதின் கீழ்



19 வயதின் கீழ்

மகிழ்ச்சியான வாழ்விற்கு சாரணியம் வித்திடுகின்றது

செல்வன் யே. எட்வின் ஜெயராஜ்
தரம் 13 கலைப்பிரிவு

சாரணியத்தின் தந்தை றொபேட் ஸ்றிவன்சன் சிமித்பேடன் பவல் அவர்கள் ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்ற ஆன்றோரின் கருத்துக்கிணங்க தாம் வாழ்ந்து தாம் அனுபவித்த இன்பங்களை சிறார்கள் தொடக்கம் முதியோர்கள் வரை அனுபவித்து எல்லோரையும் சமூகத்தில் நற் பிரஜை ஆக திகழ வைப்பதற்காக உருவாக்கப்பட்ட இயக்கமே சாரணிய இயக்கம் ஆகும்.

இச் சாரணிய இயக்கமானது 1907ம் ஆண்டு இங்கிலாந்தில் உள்ள பிறவுன்றித்தீவில் 20 சிறார்களுடன் ஆரம்பிக்கப்பட்ட சாரணிய மானது இன்று உலகளாவிய ரீதியில் ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி பெரு விருட்சமாக விளங்குவதைக் காணும் போது வாழ்க்கைக்கு சாரணியப் பயிற்சிகள் உறு துணையும், பெரும் மகிழ்ச்சியையும் அளிக் கின்றது என்பதை உணர முடிகின்றது.

1910ம் ஆண்டு பேடன் பவலின் வாழ்க்கைத் துணைவியாகிய சீமாட்டி ஒவெவ் சென்கிளையர் ஆரம்பித்த பெண் சாரணியமும் மேலும் மெருகூட்டுவதை அறிகின்றோம்.

ஒரு சாரணனை எடுத்து நோக்கு வோமானால் அவள் கல்வியினதும் ஏனைய செயற்பாடுகளினாலும் பெற முடியாத உடல், உளரீதியாக மகிழ்ச்சியையும் மன ஆறுதலை யும் நற்பண்புகளையும் சாரணியப் பயிற்சி மூலம் பெற்றுக் கொள்கின்றான் என்றால் அது மிகையாகாது அதோடு மட்டுமல்லாது சமூக நோக்கு தலைமைத்துவம், பெரியோர்கட்கு மதிப்பழித்தல், கீழ்ப்படிவு, உயிர்களை நேசித்தல், திறமையாய் செயலாற்றும் திறன், நல்ல தீர்மானம் எடுக்கும் திறன், சிக்கனம் பிறர் நலன் கருதல், கடமை கண்ணியம் கட்டுப்பாடு, தன்னம்பிக்கை, துணிவு, உண்மை பேசுதல் போன்ற பற்பல விடயங்களை காரணிய இயக் கத்தின் மூலம்பெற்று நாட்டின் ஓர் நற்பிரஜையாகவும் தன்னிறைவு உள்ளவ னாகவும் சமூகத்திற்கு நல்லதொரு வழிகாட்டி யாகவும் மிளிருகிறான்.

சாதி மத பேதங்களுக்கு அப்பாற்பட்ட ஓர் அமைப்பாக இன்றுவரை நிலைத்து நிற்கின்றது. ஒரு சாரணன் இன்னொரு சாரணியனுக்கு சகோதரன் என்ற கருத்தை வலியுறுத்துகின்றது. இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பார்கள் ஓர் மாணவர் பாடசாலைப் பருவத்தில் இருக்கும் போது தன் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள முறையில் கழிப்பதற்காகவும், தனது ஆளுமையை விருத்தி செய்வதற்காகவும், தன் நாட்டிற்கு ஒரு நற்பிரஜை ஆகவும், மகிழ்வான வாழ்க்கையை நடத்தவும், வாழ்க்கைக்கு வேண்டிய பயிற்சிகள் பெற வேண்டும் என்ற குறிக்கோளோடு சாரணியத்தில் இணை கின்றான். அதில் இணைந்ததன் மூலம் அவன் ஏராளமான மகிழ்வான அனுவங்களையும் வாழ்க்கைக்கு வேண்டிய பயற்சிகளையும் அனுபவித்துக் கொள்கின்றான் என்பதற்கு இணங்க பின்வருவனவற்றை எடுத்து நோக்கலாம்.

வேட்டை ஆடுதல், படகு ஓட்டுதல், மலையேறுதல், மிருகங்களின் அடிச் சுவட்டை பின் தொடர்தல், நீந்துதல், ஓடுதல், பாய்தல், குதித்தல், பறவைகளை அவதானித்து ரசித்தல், ஆடல், பாடல் போன்ற புறக் கிருத்திய பயிற்சிகளில் ஈடுபடவும் சாரணியம் சந்தர்ப்பம் வழங்கி கல்வி புகட்டுகின்றது.

சாரணியம் என்பது வெறுமன பொழுது போக்காகவும் பாசறைகள் பயிற்சிகளுக்கு செல்வது மட்டும் அல்லாது மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு வழிகோலி நிற்கின்றது. இது ஒரு நெறி மனிதனை மனிதனாக வாழவைப்பது தான் சாரணியமாகும். குறிப்பாக இன்றைய கால கட்டத்தினை எடுத்து நோக்குவோமானால் மாணவர்க்கு பாடசாலை மற்றும் பிரத்தியேக வகுப்புக்கள் மூலம் சுமத்தப்படும் அதிகரித்த கல்விச் சுமை, வன்முறை, சுரண்டல், பாகுபாடு காட்டல், அடிமை நிலை, அகதி நிலை தினமொரு துக்க நிகழ்வுகள் என்று மாணவர்களது மன நிலையானது ஒவ்வொரு கோணங்களில் சென்று விடுகின்றது. இவ்வாறான மனநிலை உள்ள மாண்வர்களைக் கல்வி மற்றும் இதரச் செயற்பாடுகளின் மத்தியிலும் சமூகத்தை நேசிக்கவும், நோக்கவும் உடலுள அமைதியையும் மகிழ்ச்சியையம் பெறச் செய்வது இச் சாரணியம் ஒன்றே அகும்.

சாரணியம் என்பது ஓர் கல்வி சார்ந்த அமைப்பாகும். இளம் சிறார்களை தன்னம்பிக்கை உடையவர்களாகவும் பொறுப்புணர்ச்சி, கடமை கட்டுப்பாடு கண்ணியம் சிக்கனம் என்பவற்றை உணர்ந்து செயற்படக்கூடிய வர்களாக ஆக்குவதோடு இவ்வையகத்தில் அச்சம், சோம்பல், மடமை போன்றவற்றை அடியோடு அகற்றி சமுதாயத்துக்குத் தொண்டாற்றி அவர்களை ஓர் இறைமை உள்ள பூரணமான ஓர் மனிதனாய் ஆக்குவதே சாரணியத்தின் முக்கிய நோக்கமாகும். இதில் சமூக சேவை என்பது ஓர் முக்கிய பங்கை வளர்த்து சமூகத்தோடு அன்புடனும் மகிழ்ச்சிகரமான குடும்பமாகவும் ஒத்துழைக்கும் இயல்பையும் ஐக்கியத்தையும் கொடுக்கின்றது.

இச் சாரணிய இயக்கமானது ஒரு நாட்டில் நல்லபிரஜைகளையும், நல்ல சமூகத்தையும், உருவாக்குவதற்கு அஸ்திவாரமாக வித்திடுகிறது. சாரணியத்தின் உயர்ந்த பண்புகளாகிய உண்மை சகோதரத்துவம், அன்பு, இரக்கம் ஆகியவற்றை பண்புகளாக கடைப்பிடித்தவன் தான் ஒரு சாரணன் ஆவான். இவற்றை எல்லாம் கடைப்பிடித்தவர்தான் எம் ஸ்தாபர்.

குறிப்பாக மகிழ்வான வாழ்வுக்கு சாரணியம் வித்திடுகிறது என்பதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது இச்சாரணிய இயக்கத்தில் இணைந்து எல்லோரும் பயன்பெறுவோம்.

வாழ்க சாரணியம்
என்றும் வளர்க
சாரணியம்

சுதந்திரத்தை நசுக்குபவர்கள் அதை எப்போதும் சட்டம், ஒழுங்கு என்ற பெயரிலேயே செய்கின்றார்கள்

விஞ்ஞானம் எனும் சர்வாதிகாரி

செல்வி அர்ஜனா செல்வநேசன்
பழைய மாணவி

ஆதியில் ஆதாம், ஏவாள் பிறப்பில் ஆரம்பித்து பல யுகங்களைக் கடந்து பல சவால்களை சந்தித்து இன்று 21ம் நூற்றாண்டின் வாயில்படிகளை தாண்டி நிற்கின்றது மனிதம். அன்றிலிருந்து இன்றுவரை நோக்கும்போது எத்தன மாற்றங்கள், எத்தகைய வளர்ச்சி. அன்று கால்நடையாகவும் காட்டு மிருகங்களின் முதுகிலும் கட்டை வண்டியிலும் அலைந்து திரிந்த மனிதன். இன்று கப்பலிலும் விமானத்திலும் விண்கலத்திலும் அண்ட வெளியையே அங்குலம் விடாது அளக்கிறான். ஆனால் அன்றை மனிதனிற்கும் இன்றைய மனிதனுக்கும் பல வேற்றுமை கலந்த ஒற்றுமைகள் உள்ளன. அன்றைய மனிதன் நாகரிகம் வளராதலால் அரைகுறை ஆடையுடன் அலைந்தான். இன்று நாகரிகம் அளவு கடந்து வளர்ந்ததால் அரைகுறை ஆடையுடன் அலைகிறான். அன்றைய மனிதன் அறிவு வளராததால் எழுத்தறிவு இன்றி வாழ்ந்தான். இன்றைய மனிதன் அறிவுடன் அறிவியலும் வளர்ந்ததால் இவன் எழுதத் தேவையின்றி வாழ்கிறான். ஆனால் இவையெல்லாவற்றிற்கும் மேலாக தன்னிடம் உள்ளவற்றை தானே ஆண்டான். இன்றை மனிதன் தன்னிடம் இருப்பவற்றிற்கு தானே அடிமையாய் வாழ்கிறான்.

மனிதனின் அறிவுப்பசி வளர வளர பூமி என்னும் பொக்கிஷத்தில் தன் அளவிலடங்காத பசிக்கு உணவு தாராளமாக உண்டு என்பதை உணர்ந்தான். உடன் கொஞ்சம் கொஞ்சமாக தன் காலை ஊன்ற ஆரம்பித்தான். முதலாவதாக மனிதன் மனதில் ''அறிவு என்பது தோன்றிய போது தனக்கும் மிருகங்களிற்கும் இடையிலுள்ள வேறுபாட்டை உணர்ந்தான். படிப்படியாக அவனிற்கு பூமி புலப்பட்டது. சிந்தனை, பகுத்தறிவு எனும் ஆறாவது அறிவு விழித்துக் கொண்டது. தன்னைப் பார்த்தான். உணர்வுகளும் விழித்துக் கொண்டன. தன்னைத் திருத்திக் கொள்ள ஆரம்பித்தான். தன்னைத் தாண்டி பூமியைப் பார்த்த போது பசுமையும் பச்சையுமாக பூமித் தாயின் அழகு அவனை கொள்ளை கொண்டது. படிப்படியாக அவனது அறிவு வழிகாட்ட செயற்பட ஆரம்பித்தான். சாதாரணமாக உணவு, உடை, உறையுள் என்ற தேவைகள் நிறைவடைந்ததும் அவனது சிந்தனை ஒவ்வொன்றையும் நுண்ணியமாக ஆராயத் தோன்றியது. அன்று உருப்பெற்றதே ''விஞ்ஞானம்'' அன்றிலிருந்து இன்றுவரை மனிதனால் காணப்பட்டு மனிதனையே ஆட்டிப் படைக்கும் சர்வாதிகாரியாக மாறியுள்ளது.

மனிதனிற்கும் விஞ்ஞானத்திற்கும் உள்ள தொடர்பை முழுமையாக ஆராய்வோமாயின், மனிதனின் கண்டுபிடிப்புகள் பரிமாணம் எடுத்தது. 16ம் நூற்றாண்டிலேயே எனக் கூறலாம். முதலில் தன் வெற்றுக் கண்ணால் பார்க்க முடியாத விடயங்களே அவனை சுண்டியிழுத்தன. சிறிய பொருட்களும் பல்லாயிரக் கணக்கான மைல்களை தாண்டிக் காணப்படும் கோள்களும் நட்சத்திரங்களும் அவனது ஆராயும் திறனை தூண்டியது. அதன்விளைவாக ஏறத்தாழ 1590ம் ஆண்டு Z. ஜோனசன் என்பவரால் நுணுக்குக்காட்டியும் (Microscope), 1608ம் ஆண்டு ஹான்ஸ் லிப்பேர்சி என்பவரால் தொலைநோக்கி (Telescope) உம் கண்டுபிடிக்கப்பட்டன. அப்படியே படிப்படியாக மனிதனின் ஆவலும் அதிகரிக்க தான் பார்த்தவற்றை நெருங்கவும் உத்தேசித்தான். அதன் விளைவாக 1903ம் ஆண்டு ரைட்சகோதரர்களின் விமானத்தில் ஆரம்பித்து விண்கலங்கள் வரை கண்டு

பிடிக்கப்பட்டு உள்ளன. அன்று நிலவைப் பார்த்து பாட்டுப் பாடி, குழந்தைகளிற்கு உணவு ஊட்டிய காலம் மாறி இன்று நிலவில் காலடிவைத்துவிட்டு வந்தார்கள் எனின் விஞ்ஞானம் ஊட்டிய வேகம் அல்லவா?

வானையே வட்டமிட்ட மனிதன் நீரை விடுவானா? சாதாரணமாக அருவிகளில் விழும்நீரின் அழகை ரசித்தவன், அவற்றில் சக்கரங்களை வைத்து நீர்மின்சாரத்தை கண்டறிந்தான். அருவிகள் சென்றடையும் கடலையும் கடல் சென்றடையும் சமுத்திரத்தையும் பார்த்து மகிழ்ந்தவன் மனதில் அதன் ஆழத்தில் இருக்கக்கூடிய பொக்கிஸங்களை ஆராயத் தோன்றியதாலும் கடல்வழியே பிரயாணம் செய்து அக்கரையை அடையலாம் என்ற எண்ணம் வந்ததன் விளைவாகவும் தண்ணீரில் பிரயாணம் செய்ய Z.C. பேரியர் என்பவரால் 1775ம் ஆண்டு நீராவிக்கப்பலும் D. புஸ்நெல் என்பவரால் 1776லம் ஆண்டு நீர்முழ்கிக்கப்பலும் கண்டறியப்பட்டன.. முச்சை அடக்கி நீரில் முக்குளித்து ஆராய்ந்தவன் பிராணவாயுவை கலன்களில் அடைத்து அவற்றின் உதவியுடன் ஆராய்ந்தான். இப்படி அண்டவெளியிலும் ஆழக்கடலிலும் உள்ள வற்றை ஆராயப் பயன்பட்ட விஞ்ஞானத்தை தனக்கு உபயோகப்படுத்தினால் என்ன? என்ற எண்ணம் உருவானது. அந்த வரிசையில் பட்டியலிட்டுப் பார்த்தால்

கணிக்கும் பொறி	~ பிளையஸ் பாஸ்கல்	~ 1642
பாரமாணி	~ E. ரொறி செல்வி	~ 1644
ஊசல்கடிகாரம்	~ C. வேறகென்ஸ்	~ 1657
நீராவி எஞ்சின்	~ தோமஸ்	~ 1712
பலூன்	~ ஜே. செப்பவுன்ற்	~ 1907
பராசூட்	~ A.J. கனேரின்	~ 1791
கடிகாரம்	~ A.L. பிறிகேட்	~ 1792
மின்சார மோட்டார்	~ A.J. ஜக்கோபி	~ 1834
குளிர்ச்சாதனப்பெட்டி	~ J. போகின்ஸ்	~ 1834
ஒளிப்படவியல்	~ W.H. பொக்ஸ்ரல்	~ 1835
தந்தி	~ W. கூக்போட்	~ 1837
சைக்கிள்	~ K. மக்மிலன்	~ 1839
தீப்பெட்டி	~ J.E. லண்டஸ்ரோம்	~ 1855
தட்டச்சுஇயந்திரம்	~ மிற்றகோபர்	~ 1864
நகுக்குப்பன்னி	~ டேவிட்கக்கெஸ்	~ 1878
ரெலிபோன்	~ கிரகம்பெல்	~ 1876
X. Ray	~ வில்ஹேமட்ரண்ட்சன்	~ 1895
சினிமா	~ Z. லும்மியர்	~ 1895
வானொலி	~ C. மார்க்கோணி	~ 1901
தொலைக்காட்சி	~ ஜோண் லொயிக்பய்ட்	~ 1926
அணுகுண்டு	~ ஜே. ராபட் ஒப்பன்	~ 1945

அணுகுண்டு என்ற கண்டுபிடிப்பு நாட்டுக்குநாடு மனிதன் தன்பலத்தைக் காட்டுவதற்கு சரியானதாக பயன்படுத்தியுள்ளான். பல்லாயிரக் கணக்கான உயிர்களிற்கு உலைவைத்தது மட்டுமன்றி 1948ம் ஆண்டு ஜப்பானில் கீரோசீமா, நாகசாயி என்ற இருநகரங்களில் மேற்கொள்ளப்பட்ட அணுகுண்டு தாக்கதலின் காரணமாக இன்றுவரை அங்குபிறக்கும் குழந்தைகள் நீலநிறமாகவும் குறைபாடு உள்ளனவாகவும் இருத்தல் விஞ்ஞானத்தின் ஆதிக்க வெறிக்கு எடுத்துக்காட்டல்வா? அதுமட்டுமல்லாமல் வெடிகுண்டுகள், பலவிதமான போர்க்கருவிகள் போன்றவற்றின் கண்டுபிடிப்பால் உலகில் எத்தகைய அசம்பாவிதங்கள் நேர்ந்தன. நேர்ந்து கொணடிருக்கின்றன. என்பதை இலங்கைவாழ் மக்களாகிய எம்மால் மறுக்க முடியாது என்பது உண்மையல்லவா?

இவை எல்லாவற்றிற்கும் மேலாக விஞ்ஞானம் எனும் சர்வதிகாரியின் பிரதம மந்திரியான ''கணனி'' வானடேஸவ் எனும் அமெரிக்கரால் 1976ல் கண்டு பிடிக்கப்பட்டது. சாதாரண பாவனையில் ஆரம்பித்த கணனி இன்று பலவழிகளில் பல துறைகளில் பல வேலைகளிற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. அன்றைய 80 வயது பாட்டன் அறியாத விடயங்களை இன்றைய 10 வயது பேரன் கற்றுக் கொடுப்பதற்கு வழிவகுப்பதே கணனிதான் என்பதில் ஐயமில்லை. அத்துடன் இல்லாமல் மின் அஞ்சல் (E-Mail) கணனிகளிற்கு இடையிலான வலைப்பின்னல் (Internet) என

அமெரிக்காவில் உள்ள வரையும் எங்கோ உள்ள ஒரு கிராமத்தின் மூலையில் இருப்பவரையும் நண்பர்களாக்கி விளையாடுகிறது கணனி.

இப்படியாக கண்டுபிடிப்புகள் பயன் உள்ளதாக வேலையை இலகுவாக்குவதாக இருந்ததால் மனிதனின் நேரம் மிச்சப்பட்டு ஒரு நேரத்தில் பலமடங்கு வேலை செய் முடிந்தது. இந்த நேரத்தில் விஞ்ஞானத்தின் சர்வாதிகாரம் புலப்படுகிறது. இன்றைய மனிதனின் கைகளில் கணனி இல்லையேல் அவனது இயக்கம் ஸ்தம்பிதம் அடைந்து விடுகிறது. இதுதான் விஞ்ஞான ஆட்சியின் உச்சக்கட்டம். தன்னால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு பொருள் இல்லாமல் தன்வாழ்வை, தன் தொழிலை வழிநடத்த முடியாமல் திணறுவதில் இருந்து விஞ்ஞானத்தின் அடிமையாக அவன் வாழ்கின்றான் என்பது தெள்ளத்தெளிவாக விளங்குகிறது. இன்றைய கால இளைஞர் யுவதிகளின் மனங்களில் கணனியே வாழ்க்கை என்ற எண்ணம் பதிந்து தமது கல்வியை விட கணனியை முழுமையாக கற்பதே இந்த விஞ்ஞான் ஆட்சியின் கீழ் வாழமுடியும் என உணர்ந்து கணனியின் பின் அலைகின்றார்கள்.

இப்படியாக இவை ஒரு புறமிருக்க, வீடுகளில் கூட விஞ்ஞானத்தின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்படுகிறது. பெண்களும் ஆண்களும் தமது சக்தியை உபயோகித்து செயற்பட்ட காலங்களில் வாழ்ந்த ஆரோக்கியமான வாழ்வு இன்று இல்லை. சகலவேளைகளிலும் இயந்திரங்களின் ஆதிக்கம் மேலோங்கி காணப்படுவதால் மனித உடலிற்கு வேலையில்லாமல் உலகில் பேர்சொல்ல முடியாத நோய்கள் எல்லாம் உருவாக ஆரம்பித்து விட்டன. அதுமட்டுமல்லாமல் எந்தளவிற்கு விஞ்ஞானமும் மருத்துவமும் வளர்ந்துள்ளதொ அந்தளவிற்கு நோய்களும் வளர்ந்துள்ளன என்பது யாருமே மறுக்க முடியாத உண்மை. இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஜப்பானியரின் பாரிய கண்டுபிடிப்பான இயந்திர மனிதன், இன்றைய உலகின் ஒவ்வொரு மூலையையும் விஞ்ஞானம் அடிமைப்படுத்தப் போகின்றது என்பதற்கு ஒரு மிகப்பெரிய அறிகுறி, மனிதன் செய்யும் வேலைகளை அதுவும் செய்து மனிதனுக்கு வேலையில்லாத நிலையை அது உருவாக்கிவருகிறது.

இப்படியாக விஞ்ஞானம் தனது ஆட்சியின் கீழ் பலதரப்பட்ட நன்மைகளை உலகிற்கும் மனிதனுக்கும் செய்து வருகின்ற போதும் கொஞ்சம் கொஞ்சமாக மனிதனின் சக்திகளை முடக்கி இயந்திரங்களின் ஆதிக்கம் மேலோக்கி வருகிறது. அடுத்து வரும் நூற்றாண்டுகளில் மனிதனின் கட்டளைகளில் இயந்திரங்கள் செயற்பட்ட காலம் மாறி இயந்திரங்களின் அறிவுறுத்தலில் மனிதன் செயற்படும் காலம்வரக் கூடும் என்பது வெள்ளிடைமலை. அதுமட்டுமன்றி பச்சைப்பசேல் என்ற பசிய வயல்களும் பூத்துக் குலுங்கி நறுமணம் வீசும் மலர்ச்சோலைகளும் தோப்புகள், தோட்டங்கள் என இயற்கையான பூமித்தாயின் அழகு படிப்படியாக மங்கி செயற்கைப் பூச்சுகளில் மின்னும் சினிமா உலகப் பெண் போல் வானளாவிய கட்டடங்களும், இயந்திரங்களின் இரைச்சலும், வாகனப் புகையும், வாசனையுமாக வாழத் தொடங்கி விடுவான் என்பதும் கூட ஐயமற்ற விடயமே.

தவறு என்பது தவறுதலாகச் செய்வது
தப்பு என்பது தொடர்ந்து செய்வது

எமது சூழலைப் பாதுகாப்போம்

செல்வன் பொ. ஜினேஸ்வரன்
தரம் 13 கலைப்பிரிவு

நாம் வாழும் சூழல் இன்று பல வழிகளாலும் மாசடைகின்றது. இதனால் எமது சுத்தமும் சுகாதாரமும் கெட்டுப் போகின்றது. ''சுத்தம் சுகம் தரும்'' எனவே எமது சூழலைப் பாதுகாத்தும் எமது சுத்தத்தைப் பேணி எம் சுகத்தைப் பேண வேண்டியதும் எமது ஒவ் வொருவரதும் கடமை ஆகும்.

எமது சூழலில் நிலம், நீர், வளி மண்டலம் என்பன நவீன விஞ்ஞான கைத் தொழில் வளர்ச்சியாலும் மக்களது பழக்க வழக்கங்களாலும் மாசுபடுத்தப்படுகின்றன. பாரிய இயந்திரங்களை கொண்ட தொழிற் சாலைக் கழிவுகளால் நீர் மாசுபடுகின்றது குறிப்பாக கைத்தொழில் வசதிக்காக ஆற்றங் கரைகளில் தொழிற்சாலைகள் அமைக்கப் படுகின்றன. அவற்றின் கழிவுகள் ஆற்றினுள் ளேயே கலக்க விடப்படுகின்றன. இதனால் ஆற்று நீர் அழுக்கடைவதுடன் அதில் வாழும் மீன் போன்ற உயிரினங்கள் அழிந்து போகின்றன. அந்த ஆற்று நீர் கடலை அடையும் போது கடலும் மாசடைகின்றது.

தொழிற்சாலைகளில் இருந்து வரும் புகை, வாயுக்கள், தூசிகள் என்பனவும் வாக னங்களின் புகை மற்றும் புகைப்பவர்களின் புகை என்பனவும் வளிமண்டலத்தினைப் பாதிக் கின்றன. இதனால் நாம் சுவாசிக்கும் வாயு அசுத்தமடைகின்றது. இதனால் சூரியனிலிருந்து வரும் தோலைத் தாக்கக் கூடிய கதிர்களைத் தடுக்கும் ''ஓசோன் படை'' எனப்படும் வளிமண்டல மேற்பரப்பிலிலுள்ள படையில் கூட துவாரங்கள் ஏற்பட்டு அத்துவாரங்கள் ஊடாக நச்சுக் கதிர்கள் புவியை வந்தடைகின்றன. இதனால் மனிதரின் தோலில் பாரிய தோல் நோய்கள் ஏற்படும் என அச்சப்படுகின்றது.

விவசாயத்தில் அதிக ப்யன் பெறு வதற்காக பயன்படுத்தப்படும் நவீன வளமாக் கிகளும் இரசாயனப் பொருட்களும் அணு ஆயுதப்பரிசோதனை என்பவற்றாலும் நிலம் மாசடைகின்றது. இதனால் எதிர்காலத்தில் வளமற்ற நிலமே எஞ்சும் அபாயம் உள்ளது.

இவை மட்டுமன்றி வீதிகளில் குப்பை கூழங்கள் அகற்றப்படாமல் இருப்பதும் அழுகிய பழங்கள், பொருட்கள், இறந்த மிருகங்களின் உடல்கள் அகற்றப்படாது இருப்பதனாலும் அப்பகுதிகளில் துர்நாற்றம் வீசுவதும், பல தொற்றுநோய் கிருமிகள் பெருகி வளரவும் வாய்ப்பிருக்கின்றது. இவையும் எமது சூழலைப் பாதிப்பனவாகும் இத்தகைய பாதிப்புகளி லிருந்தும் எமது சூழலைப் பாதுகாப்பது எமது கடமை ஆகும்.

''உன்னை நீயே திருத்திக் கொள் உலகம் தானாகவே திருந்தும்'' என்பதும் ஆன்றோர் வாக்கு அதற்கிணங்க முதலில் நாம் ஒவ்வொருவரும் எம்மையும் எம் இல்லத் தினையும் · எமது சுற்றாடலையும் சுத்தமாக பேணிக் கொள்ள பழகவேண்டும். இதன் மூலம் நாடு முழுவதும் சுத்தமாக இருக்கும் வீதிகளில் குப்பைகளையும் தேவையற்ற கடதாசி களையும் வீசுதல் போன்றவற்றினைத் தவிர்க்க வேண்டும். இவற்றை நாம் சிறுவயதிலிருந்தே பழகிக் கொள்ள வேண்டும் மேலும் தொழிற் சாலைக் கழிவுகள் ஆறுகளிலும் கடல்களிலும் கலக்காது இருக்க ஆவன செய்ய வேண்டும் அணுவாயுதப்பாவனையினால் ஏற்படும் அழிவு களையும நீண்ட காலபாதிப்புக்களையும் மக் கள் ஒவ்வொருவரும் உணர வேண்டும். ஜப்பானின் கிரோசிமா, நாகசாஹி நகரங்களில் இரண்டாம் உலகப்போரில் போடப்பட்ட அணு

குண்டுகளின் தாக்கம் இன்றும் அப்பகுதிகளில் சூழலைப் பாதித்து வருவது நாமறிந்ததே.

சூழல் என்பது எமது வளம். எமது இயற்கை வளங்கள் பேணப்பட்டுள்ள இடம் எமது சூழலே ஆகும் காடழிப்பினால் மழை யின்மை, மண்ணரிப்பு, வரட்சி, கடும் வெப் பம் எனும் தாக்கங்களும் ஏற்படுவதுடன் வன விலங்குகளும் அழிந்து விடுகின்றன. எனவே சூழல் இயற்கை எமக்களித்த செல்வம். அதை அழியாது பாதுகாக்க வேண்டியது மானிடராகிய எம் அனைவரதும் கடமை ஆகும்.

ஓவியர்கள் வரிசையில்.....

செல்வன் உ. ஷாந்
தரம் 13 கலைப்பிரிவு

ஜோச்கீந்

இவர் 1901ம் ஆண்டு 4ம் மாதம் 17ம் திகதி பிறந்தார். கண்டி திருத்துவக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியை பயின்றார். பத்தாவது வயதில் யேசுநாதர் சிலுவையில் அறையப் பட்ட சம்பவத்தை சித்திரமாக வரைந்து சிறந்த சித்திரக் கலைஞனுக்கான விருதை கல்லூரி யில் பெற்றுக் கொண்டார்.

பொறளை கோதமி விகாரையில் தலதா பெரகரா, குயவன் வேலைத்தளம், சமச்சார பிரச்சனை, தியான இலட்சுமி போன்ற இவரது ஓவியங்களைக் காணலாம். இதில் சித்தார்த்தரின் பிறப்பு, மாயாதேவியின் கனவு, இயமனை வெற்றி கொள்ளல், புத்தர் ஞானம் பெறும் காட்சி, புத்தரின் துறவு நிலைக்காட்சி கிருஸ்ணரின் கதை என்பன சிறந்த படைப்புகள் ஆகும்.

இவரது படைப்புகளில் பாரம்பரிய சித்திரக் கலையுடனும் பிக்காசோவின் புதிய சித்திரப் பாணியுடனும் இணைந்த அமைப்பைக் காண முடிகின்றது. கோதமி விகாரையிலுள்ள இவரது இயமனை வெற்றி கொள்ளல் என்ற சித்திரம் பிக்காசோவின் குவர்ணிக்கா என்ற சித்திரத்துடன் ஒப்பிடப்பட்டு கலை விமர்சகர்களால் விமர்சிக்கப்படுகின்றது.

மேலும் இந்திய இசையில் வரும் இராகங்கள் தொடர்பான சித்திரங்களையும் படைத்தார். இவரின் சித்திரத்தின் சிறப்பம்சங் களாக கோடுகளால் வரைதல் சாதாரண வர்ணம் பூசுதல், உயிரோவிய பிரதிபலிப்பு என்பவற்றை காணலாம்.

சமயக் கதைகளை சித்திரங்கள் ஊடாக வெளிப்படுத்துவதில் கை தேர்ந்த வராகவும் காணப்பட்டார். இவரது காட்சிகளில் பெரும்பாலும் கண்டியின் காட்சிகளும் பௌத்த சூழ்நிலைகளுமே காணப்படுகின்றன. இக்கால ஓவியங்களை மல்வத்தைத் தொடர் என விமர்சகர்கள் கூறுவர். இதன் பின்வந்த காலம் நாயக்க தொடரென வழங்கப்படும். இக்கால பகுதியில் இவரது தனித்துவம் மிக்க சிறப்

போவியங்களைக் காணலாம். இதற்குப் பிற்பட்ட காலத்தில் அதிகளவு பெண் ஓவியங்களை வரைந்துள்ளார். ''திருமணம் நாடிக் காத லோடு'' எனும் ஓவியம் 1992ல் வரையப் பட்டது. இவர் இந்தியக் காவியக் கதை களையும் கருப்பொருளாகக் கொண்டு ஓவியங்களை வரைந்துள்ளார்.

சோலிபஸ் மெண்டோஸ்

27 - 05 - 1905இல் பிறந்தார் இவரது ஓவியங்களை கொழும்பு அசொகராமய, கோபிட்டிய தூபராமய, இந்து நவ்யாலகம விகாரை, கண்டி திருநெற்றி விகாரை போன்ற இடங்களில் காணலாம்.

இவர் ஓவியராக மட்டுமன்றி சிற்பி யாகவும் இனம் காணப்பட்டார். களனியில் காணப்பட்ட புதிய சுவரோவியம் மூலம் இவரது புகழ் மேலோங்கியது. தலதாவைத் தரிசித்தல் மகியங்கனை யக் சமானவிகாரையின் அரசி கடலுக்குள் பலியாதல், ஆங்கிலேயர் களனி விகாரையை அழித்தல் போன்ற சித்திரங்கள் தொனிப்பானவை. இவர் முப்பரிமாணத் தன்மையைக் காட்டுவதற்கு சிறந்த முறையில் வர்ணங்களை தீட்டியுள்ளார் மனித உடலுக்கும் உடைகளுக்கும் சிறந்த முறையில் வர்ணங் களைப் பிரயோகித்துள்ளார்.

புதிய களனி விகாரையில் இளவரசன் தத்தனும் இளவரசி மேமமாலாவும் என்னும் படைப்பு பார்ப்போர் கவனத்தை ஈர்த்துள்ளது. கொழும்பு ரஜமகாவிகாரையிலும் இறனனீகல்ல விகாரையிலும் ஓவியங்கள் வரைந்துள்ளார். இவர் வங்காள தேசத்தில் ஓவியத்தைப் பயின்றார். இவர் வரைந்த ஓவியங்களுள் பிரசித்தி பெற்றவையாக புத்தர் களனிக்கு வந்து நாகதீபம் செல்லும் காட்சி, புனித தந்தத்தை இலங்கைக்கு கொண்டு வரும் காட்சி, மகிந்தன் சங்கமித்தை விஜயம், மாயா தேவியின் கனவு ஆகியன இவரது சிறப்புச் சித்திரங்கள் ஆகும்.

J.D.E. பெரேரா

1897ல் பிறந்தார். வின்டர்லயன் விசிங்டற் என்பவருடன் சேர்ந்து ''சிலோன் ஆட்ஸ் சென்ரர்'' என்பதை நிறுவினார். அரச நுண்கலைக் கல்லூரி அதிபராக கடமையாற்றி னார் கல்வித் திணைக்களத்தில் சித்திரக்கலைப் பரிசோதகராக சேவை செய்த சீ. எவ். வின்சர் என்பவருடன் சித்திரக் கலைத்துறையை வளர்த்தார். உருவச் சித்திரக் கலைக்கு சிறப்பு பெற்றார். இவர் பெயர் ஓவியத்தில் மட்டுமல் லாது மேடை நாடகங்களிலும் சிறந்து விளங் கினார். இவர் பாட்லம் என்பவரிடம் சித்திரக் கலையை பயின்றார். 1946இல் அரசினால் வழங்கப்பட்ட புலமைப்பரிசிலைப் பெற்று வெளி நாடுகளிலும் கண்காட்சிகளை நடத்தினார்.

இந்திய ஓவியர்கள்

ரவீந்திரனாத் தாகூர்

1861இல் இவர் பிறந்தார். இந்திய சித்திரக் கலையில் சிரேஸ்ட சித்திரக் கலை ஞராக கருதப்படும் இவர் தேசிய உணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு கலையைப் பயன்படுத்தினார். இந்திய நவீன ஓவியத்தின் கலை இவரில் இருந்தே ஆரம்பமாகின்றது. இவர் தனது யையெழுத்துப் பிரதிகளில் உள்ள தவறுகளை வெவ்வேறு வர்ணமையால் திருத்தம் செய்த போது ஓர் குறியீட்டு ஓவியம் தோன்றுவதை அவதானித்தார். இதன் காரணமாக வினோத உருவங்களைத் தீட்டும் கலையைக் கற்றுக் கொண்டார். இவரது படைப்புகளில் மனித உரிமைகளைப் பற்றிய கருத்துக்கள் வெளிப் படுத்தப்படும் மான் குட்டியின் முறையீடுக் கவலை போன்ற சித்திரங்கள் இவரின் சிறந்த படைப்புகளாகும்.

இவர் 3000த்துக்கு மேற்பட்ட ஓவியங் களையும் கோட்டுச் சித்திரங்களையும் வரைந் துள்ளார். இவற்றினை தாமே தயாரித்த நிறங்களைக் கொண்டும் பேனாக்களாலும் வரைந்தார். இவர் ஓவியராக மட்டுமன்றி

கவிஞராயும் இந்திய தேசிய கீதத்தையும் இயற்றியவர் இவராவார் சாந்திநிகோதனில் கலைக் கல்லூரியை ஆரம்பித்த பெருமையும் இவரைச்சாரும்.

அபினேந்தர தாகூர்

இவர் 1881ல் பிறந்தார். இவர் சிறுவர் கதைகளை எழுதுவதிலும் அ:தற்கான ஓவியம் வரைவதிலும் விருப்பமுள்ளவர் தனது சகோதர னான கனேந்திரநாத் தாகூருடன் சேர்ந்து கீழ் நாட்டுக்கலை இந்திய சங்கத்தை நிறுவினார். 40வது வயதில் விகஸ் என்பவருடன் இணைந்து இந்திய சங்கத்தை நிறுவினார். 40வது வயதில் விகல் என்பவருடன் இணைந்து இந்திய ஓவிய மறுமலர்ச்சிக்கு அடி கோலினார். இவரது ஓவியங்கள் மேல் நாட்டு ஓவியமுறையை தழுவிய போதும் இந்தியப் பண்பை முழு மையாக இழக்கவில்லை.

சிறு விடயத்திலேயே பிரமாண்டமான விளைவைத் தரும் பண்பு ஓவியங்களில் காணலாம். இதனை இவரது பிரயாணத்தின் முடிவு எனும் ஓவியத்தில் சிறப்பாகக் காண முடிகின்றது. பண்டைய ஓவியக்கலையைத் தழுவிய மகாபாரதத்திலுள்ள ''கஜன் தெய்வயானி" என்ற கதையை சுவரோவியமாக வரைந்தார்.

பல கட்டடக்கலை சித்திர வரைஞர் களையும் உருவாக்கினார். அவர்களுள் பிரபல கட்டட ஓவியராய் விளங்கிய நந்தலால் போஸ் குறிப்பிடத்தக்கவர். தெளிவற்ற கோடுகளையும் வர்ணக்குளம்புகளையும் கொண்ட இந்தியப் பாணி ஓவியங்களை வரைந்தார்.

அமிரிதா ஷெர்கில்

இவர் 1913ம் ஆண்டு பிறந்தார். இவரது படைப்பில் போல் கெனகனின் பாதிப்பைக் காணலாம் பெருமளவு கிராமப்புறக் காட்சிகளை வரைந்தார் இவரது வர்ணப் பிரயோகம் தனிச் சிறப்பு வாய்ந்தது. இவை ஒரு மாயத் தோற்றம் கொண்டன.

மனித உருவங்களை வரைவதில் ஆர்வம் காட்டிய இவர் மொடல்களில் இருந்து ஓவியம் தீட்டினார். 1937இல் இவரால் வரையப்பட்ட ''பெண்களின் குழு" என்னும் சித்திரம் இந்து, ஐரோப்பிய கலையின் கலப் பிலான உயர்கலை வடிவமாகக் கலை விமர் சகர்களால் விமர்சிக்கப்படுகின்றது.

அஜந்தா ஓவியம் போன்ற கூட்டம் கூட்டமான மனித ஓவியங்களை வரைந் துள்ளார் இதை தென்னிந்திய மூவகை ஓவியங் கள் எனக் கூறினார். இதில் இந்தியர்களின் சமூகவாழ்க்கை சிறப்பாக தூரிகைகளால் வெளிப்படுத்தப்படுகிறது. இவரது சித்திரங் களுள் பிரமச்சாரிகள், மலைநாட்டு மனிதர்கள், மனைகளை அலங்கரித்தல் போன்றன உயர் படைப்புகளாகும் இவரது ஓவியப் பாணியும் உத்தியும் இம்பிறசனிச உத்தியோடு ஒத்துப் போகக் கூடியன. இவரது படைப்புகளில் இந்திய கிராமப்புற ஏழை மக்களின் பாத்தி ரங்கள் பெருமளவு இனங்காணப்படுகிறது.

இவர் இந்திய ஓவியங்களில் புதிய பாணியை புகுத்தி சிறந்த ஓவியங்களை வரைந்தார் மெலிந்த மனித உருவங்களையும் சோகமான முகம், கறுத்த மேனி போன்ற இயல்புடன் வரைந்தார். சிலுவையில் யேசு. இமயத்தில் ஈசன், பிருந்தாவனத்தில் கிருஷ்ணன், மணமக்கள் குளித்தல், சந்தைக்கு செல்லும் தென்னிந்திய கிராமத்தவர் என்பன இவரது படைப்புகளாகும்.

மேலத்தேய ஓவியர்கள்

ரபேல் சான்ஸியோ

இவர் மறுமலர்சிக்கால ஓவியர்களுள் ஒருவராவார். 1483 ஆம் ஆண்டு ஆர்பினோ நகரில் பிறந்தார். இவரது தந்தையார் ஜீயோ வானி சான்ஸியோ என்றும் ஓவியராவார் இவரது 11வது வயதில் தந்தையார் இறந்து விடவே பெருஜியா சென்று பெறாஸியோ என்னும் ஓவியரிடம் ஓவியம் பயின்றார்.

எனினும் இவரது ஓவியங்கள் தனித் தன்மை கொண்டு காணப்பட்டது. வாட்டிக்கான் தேவாலயத்தில் உள்ள கன்னி மேரியின் முடிசூட்டு விழா எனும் புளோரன்ஸ் மரபைப் பின்பற்றிய படைப்பு இவரது தனித்தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

புளோரன்ஸ் காலத்தில் இவரது ஓவியத்தில் புனிதத்தன்மையான பாத்திரங் களான ''கன்னி மேரியின் திருமணம்'' எனும் தலைப்பில் ரபேலும் பெரிசினோ என்பவரும் ஓவியம் வரைந்த போதும் ஒப்பீட்டளவில் ரபேலின் ஓவியம் சிறந்ததாக ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள் ''புனித இல்லம்'' என்னும் இவரது தொடர் படைப்பில் வர்ணங்களைக் கையாண்ட விதம் சிறப்பானது ஓவிய பாத்திரங் கள் ஆரோக்கியமான வசீகரமான அமைப்பு டனும் தெய்வீகத்தன்மையை வெளிக் கொண ரும் தன்மையிலும் அமைக்கப்பட்டுள்ளது. 1504 இல் ''கன்னிமேரியும் இரு புனிதக் குழந்தை களும்'' என்னும் சிறப்பான படைப்பையும் ஆக்கினார்.

இவரது கலைப் படைப்பின் இயல் புகள் பிற்கால ஓவியர்கள் படைப்பில் செல் வாக்கு செலுத்தியதையும் காண முடிகிறது அதே போல் இவரது சமகால கலைஞர்களின் பாதிப்பையும் இவரது படைப்பில் காண முடிகின்றது. மைக்கல்லேஞ்சலோவின் ''கன்னியும் குழந்தைகளும், புனித ஆனும்'' என்ற ஓவியங்கள் ரபேலின் ஆரம்பகால ஓவியங்களைப் பாதித்துள்ளமையை அறிய முடிகின்றது. டாவின்சியின் மோனலிசா என்னும் படைப்பில் இருந்து பிரதிமை ஓவிய முறையை கற்றுக் கொண்ட இவர் ''மடோனா டோனி'' என்னும் ஓவியத்தில் கைக்கொண்டுள்ளார்.

இவர் வாட்டிக்கன் நகர தேவாலய வழிபாட்டு அறைகளை அலங்கரிப்பதிலும் ஈடுபட்டார். இங்கு இவர் வரைந்த ஓவியங்களில் குறிப்பிடத்தக்கது ''எதென்சில் பள்ளி'' என்னும் பெயர் பெற்ற சுவரோவியமாகும். இதில் தத்துவ ஞானிகளான அரிஸ்டோ, சோக்கி ரட்டிஸ் மற்றும் அவர்களது மாணவர்களையும் சிறப்பாக சித்தரித்துள்ளது. இதில் வானம் காட்டும் பிளோட்டோவின் தெய்வ நம்பிக் கையும் எண்களிற்குமாகவும் புத்தகம் ஒன்றை கையில் எடுத்து அரிஸ்ரோட்டிலை இயற்கை நியதிகளை எடுத்துக் காட்டுவதற்காக இணைத்துக் கொண்டதாக நம்பப்படுகின்றது. இருபக்கக் குழுவும் இருதத்துவம் தொடர்பான விவாதத்தில் ஈடுபட்டிருப்பதாயும் நம்பப் படுகிறது. இச்சித்திரத்தில் அக்கால கலை ஞர்கள் அனுபவித்த துன்பங்கள் தொடர்பான வினாக்கள் இருப்பதாக ஆய்வாளர்கள் குறிப் பிடுவர். எதிர் சுவரில் தேவாலய மருத்துவர்கள் வரிசையாகக் காட்சி தருகின்றனர். ''டிஸ் யூட்டா'' என்னும் ஓவியத்தின் மேற்சுவரில் மதச்சாமியார்களும், போர்வீரர்களும் சித்தரிக் கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட சுவர் ஓவியங் கள் மனித அறிவின் மேம்பாட்டை விளக்கும் வகையில் முறையே தத்துவத்தையும் மதம் சம்பந்தமான விடயங்களையும் கருப்பொரு ளாகக் கொண்டிருந்தது என்பதைக் காண முடிகின்றது.

இதில் தத்துவம் வானசாஸ்திரம் பக்திமார்க்கம் என்னும் மூன்று நிலைகளும் உள்ளடங்குகின்றது. இப் படைப்பில் கவர்ச்சி யுற்ற போப் இவருக்கு பல சன்மானங்களைக் கொடுத்தார். சிஸ்ரையின் தேவாலயத்தில் மைக்கல் தீட்டிய சுவரோவியங்களைப் பொது மக்கள் பார்வைக்குத் திறக்கப்படுமுன் ரசிக்க விரும்பிய ரபேல் மைக்கல் இல்லா வேளையில் போப்புவின் உதவியுடன் அதைப் பார்க்கும் வாய்ப்புப் பெற்று அதைப் பார்த்த மறுகணமே ''சான் அகஸ்ரினோ'' ஆலயத்தில் முடிந்த ''இசைய்யாவின்'' ஓவியத்தை மாற்றியமைத்து மைக்கலினது ஓவியப்பாங்குடன் ஓவியம் படைத்தார்.

இவரது புகழ் எங்கும் பரவிய போது ஜேர்மனியில் புகழ் பெற்ற ஓவியர் ''அல்பிரட் டியூற்சர்'' ரபேல் மீது தனக்கிருந்த பெரு மதிப்பின் சின்னமாக லினன் துணியில் நீர்வர் ணத்தால் தீட்டிய தன் உருவப்படத்தை அன் பளிப்பாக வழங்கினார்.

சிஸ்ரையின் தேவாலயத்தில் தொங்க விடுவதற்கான திலைச்சீலை ஓவியங்களை அதென்ஸ் நகரக் கலாசாலையில் ''அஸ்பா மடோனா'' ''கதிரையில் மடோனா'' ''டிஸ்பீயூற்றர்'' ''மாதுமையுடன் மடோனா'' போன்றவற்றை வரைந்தார்.

''சகிகி'' தேவாலய சுவரோவியம், திரைச்சீலைகள், சிற்பம், தரை, கடைச்சல் வேலைகள் என ஓவியக்கலையின் அனைத்து பரிமாணங்களையும் கையாண்ட சிறப்பு பெறு கின்றார். இவை ஐரோப்பிய உள்ளலங்காரக் கலைக்கு ஓர் அழியாத சின்னமாகும். இவை பிற்கால அலங்கார வேலைகளுக்கெல்லாம் முன்னுதாரணமாக விளங்குகிறது.

∴பார்னேசினா மாளிகையில் காணப் படும் மேற்சுவரோவியங்களும் இவரின் திற மைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இவரது உழைப்பையும், திறமையையும் பாராட்டிய போப் 10லியோ இவருக்குச் சிவப்புத் தொப்பி அணிவித்து கௌரவித்தார். அக்காலத்தில் சிறப்பான கலைஞர்களுக்கும் ஆஸ்தான வித்தகருக்கும் சிவப்புத் தொப்பி அணிவது மிகப் பெரிய கௌரவமாகக் கணிக்கப்பட்டது.

இவர் வாழ்ந்த காலத்திலேயே இருந்து மாணவரான மார்க்கண்டோனியா என்பவர் இவரது பெருமையையும் சிறப்பையும் பரப்பக் காரணமாய் இருந்தார். இவர் ஓவியனாக மட்டுமல்லாது கட்டிடக் கலைஞனாயும் சிற்பி யாகவும் தொல்பொருள் ஆய்வாளனாகவும் கருதப்படுகின்றார். மிகச் சிறந்த இத்தாலிய ஓவியர் வரிசையில் இடம்பெறும் இவர் தனது 37 ஆண்டு வாழ்வில் அழகே உருவெடுத்த நூற்றுக்கணக்கான ஓவியங்களை வரைந்தார். டிரெஸ்டன் ஓவியக் காட்சிச் சாலையில் இருக்கும் சிஸ்டைன் மடோனா என்னும் ஓவியமும் உலகின் சிறந்த ஓவியங்களில் ஒன்றாக கருதப்படுகிறது.

வால்ட் டிஸ்னி

இவர் ஒரு அமெரிக்க கார்டூனிஸ்ட் ஓவியர். இவர் ஒரு ஓவியக் கம்பனி ஒன்றில் சேர்ந்து பணியாற்றும் போது கார்டூன் வரைவதில் மிகத் திறமை பெற்றிருந்தார். கார் நிறுத்தும் இடமொன்றை கலைக்கூடமாக்கி இரவு வெகுநேரம் சித்திரம் வரையும் போது அவருக்கு அருகே சுண்டெலிகளைக் கதா நாயகனாக வைத்துப் படங்களைத் தயாரித் தார். மிக்கி மவுஸ் இவர் உருவாக்கிய பிரபல பாத்திரமாகும். தி பாண்டு கான் சொட் என்னும் படத்தின் மூலம் ஒஸ்கார் விருது பெற்றார்.

குழந்தைகளுக்கான டிஸ்னி லாண்ட் என்னும் கண்காட்சியை உருவாக்கினார். மிருகங்களையும் பறவைகளையும் மனிதத் தன்மை ஊட்டி ஆடவும், பாடவும், பேசவும் நடமாடவும் உயிரோட்டம் செய்தார் குழந்தை களுக்கான நூல் ஒன்றையும் எழுதினார். பல கார்டூன் படங்களையம் தயாரித்துள்ளார்.

உலகம் அதன் கண் உள்ள எல்லாப்
பொருட்களும் மதிப்புள்ளவைகளே – ஆனால்
உலகிலுள்ள எல்லாப் பொருட்களையும் விட
கற்புள்ள பெண்களே பெரும் மதிப்புடையவர்

இணையம் INTERNET

செல்வி இ. நிர்மலா
தரம் 13 கலைப்பிரிவு

வலையமைப்பு

கணனி இன்று வீடு, கல்லூரி, அலுவலகம் என்று எல்லா இடங்களிலும் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. வீடுகளிலும் சிறு கடைகளிலும் அது தனித்து இயங்குகின்றது. அவை வேறெந்த கணனியுடன் இணைக்கப் படுவதில்லை. இத்தகைய கணனி தனித்தியங்கு கணனி (Stand - alone Computer) எனப்படும்.

கல்லூரிகளில் மற்றும் பெரிய அலுவலகங்களில் உள்ள கணனி ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டிருக்கும். அதனால் தகவல் ஒரு கணிப் பொறியிலிருந்து இன்னொன்றிற்கு செல்ல முடியும். இத்தகைய கணிப் பொறிகள் அருகருகே பெரும்பாலும் ஒரே அறையில் இருந்தால் அவற்றை கம்பிகள் மூலம் இணைக்கலாம். இப்படி உள்ள அமைப்பு குறும்பரம்பல் வலையமைப்பு (Local - area Network)(LAN) எனப்படும். இணைக்கப்பட்ட கணனிப் பொறிகளை பல இடங்களில் பலநாடுகளில் இருந்தால் தொலைபேசி இணைப்பு செயற்கைகோள்கள் மூலம் இணைக்கப்பட்டிருக்கும். அத்தகையது நெடும்பரப்பு வலையமைப்பு (Wide - area Net work) (WAN) எனப்படும்.

இணையம் என்பது வலையமைப்புக்கள் பல இணைந்த தொகுப்பு இது தற்போது உலகத்தின் பல மூலைகளில் இருந்தும் சுமார் 50 மில்லியன் கணிப் பொறிகள் இணைந்துள்ளன. இதை 100 மில்லியன் மக்களுக்கு மேல் பயன்படுத்துகின்றனர். இதில் இணைந்துள்ள எவரும் இதில் உள்ள கணிப்பொறிகள் எதையும் தொடர்பு கொண்டு தகவல் பெற முடியும்.

இணையத்தின் நன்மைகள்

இணையத்தின் கணனிகளில் பக்கத் தகவல் நிறைந்துள்ளன. எந்த தலைப்பாக இருந்தாலும் அதுபற்றிய தகவல் கிடைக்கும் இணையத்தின் மூலம் எந்த தகவல்களை எடுத்தும் நம் கணனிக்கு கொண்டு வந்து சேமித்து வைத்துக் கொள்ள முடியும். தகவல்களை இவ்வாறு நம் கணனிக்கு கொண்டு வருவது தரவு இறக்கம் (Down Loading) எனப்படும். இதை தகவல் பரிமாற்ற வரை முறை File tranfer Protpcal - (FIP)) மூலமாகவும் செய்யலாம். இணையத்தில் பல மென்பொருட்களும் கிடைக்கும். இவற்றையும் நம் கணனிக்கு கொண்டு வந்து பயன்படுத்தலாம். சில முற்றிலும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. இவை இலவசப் பொருட்கள் (Free ware) எனப்படும். இவற்றைப் பயன்படுத்த விலை எதுவும் கொடுக்க வேண்டியதில்லை.

சில மென் பொருட்களை சில நாட்கள் இலவசமாக சோதித்துப் பார்க்கலாம். தொடர்ந்து பயன்படுத்த முடிவு செய்தால் மட்டும் அதற்காக சிறு தொகை அனுப்பி பதிவு செய்து கொள்ள வேண்டும். இத்தகையது பகிர்வுப் பொருள் (Share ware) எனப்படும். டெல்நெட் (Tel Net) என்னும் கருவியின் துணையுடன் இணையத்தில் உள்ள வேறொரு கணனியுடன் தொடர்பு கொண்டு இதிலுள்ள தகவல்களைப் பெறலாம். மேலும் எந்தக் கணனியிலுள்ள ஒரு மென்பொருளையும் இயக்கலாம். இதில்

நம் கணனி அந்தக் கணனியின் ஒரு முனையம் (Traminal) போல் செயற்படும்.

மின்னஞ்சல் (E-mail)

மின்னஞ்சல் (E- mail) என்பது ஒரு கணனி மற்றொரு கணனிக்கு அனுப்பும் அஞ்சலாகும். இணையத்தில் உள்ள எவருக்கும் நாம் மின்னஞ்சல் அனுப்பலாம். இதுவும் சாதாரண தபால் போலத்தான் ஆனால் மிகவும் விரைவாக செயல்படும் யு-எஸ் இல் இருக்கும் கணனியாக இருந்தாலும், அடுத்த வீட்டுக் கணனிப் பொறியாக இருந்தாலும் ஒரு சில நிமிடங்களிலேயே போய்ச் சேர்ந்துவிடும். அத்துடன் செலவு மிகக் குறைவு. யு-எஸ் இலுள்ள ஒருவருடன் தொலைபேசியில் பேச நிமிடத்துக்கு சுமார் 75/= ஆனால் மின்னஞ் சலுக்கு சுமார் 11/= மட்டுமே ஆகும்.

அதாவது உளளூர் தொலைபேசிக் கட்டணம் மட்டுமே; உலகத்தில் யார் எங்கி ருக்கின்றார்கள் என்பதை பற்றி நினைப்பே இல்லாமல் பலரும் கலந்துரையாடுவதும் இணையத்தால் முடியும். கலந்துரையாடுவதும் இணையத்தில் பல தலைப்புக்களில் இவ்வாறு கலந்துரையாடல்கள் (Chat) நடைபெற்றுக் கொண்டிருக்கும். செய்திக் குழுமம் (News Group) என்பது பல தலைப்புக்களில் பலருடைய எண்ணங்களையும் பகிர்ந்து கொள்ளக் கூடிய ஒரு மேடை ஆகும். ஒவ்வொருவரும் தங்கள் கருத்துக்களை எழுதி வைக்கலாம். அவை தொகுக்கப்பட்டு பலருக்கும் வழங்கப் படும். இவ்வாறு ஒரு செய்தியானது பலருடைய கருத்துக்களை பெற்று முழு அளவிலான கருத்துக் கோவையாக மாறும் தன்மை பெறுகின்றது. உலகளாவிய வலை (www world wide web) இணையத்தில் பலருடைய கவனத்தையும் கவர்ந்த பகுதி உலகளாவிய வலை என்று அழைக்கப்படும். இது பலகோடித் தகவல்களைக் கொண்ட ஒரு பெரிய கட்ட மைப்பு. இதன் அடிப்படை வலைப் பக்கம் (way page) எனப்படும். இதில் உரை, படம், ஒலி, ஒளிக்காட்சி போன்றவை அடங்கியிருக் கும் ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத் திற்கு போக இணைப்பு வழிகள் இருக்கின்றன. தொடர்புடைய பல பக்கங்கள் சேர்ந்து இருப் பதை வலையகம் (Web site) என்கிறோம்.

ஒரு வலையத்தின் முதல் பக்கம் அதாவது தொடக்கப் பக்கம் (Home page) எனப்படும். இப்பக்கத்தில் வலையகத்தில் என்னென்ன தகவல்கள் உள்ளன. என்பது பற்றிய ஒரு சிறிய அறிமுகம் இருக்கும் இணைப் புக்களின மேல் கிளிக் (CLICK) செய்தாலே தேவையான பக்கம் திரையில் தோன்றும்.

ஒவ்வொரு பக்கத்திற்கும் ஒவ்வோர் தனிப்பெயர் இருக்கின்றது. இது (URL - Uniform Resoyrce Locator) எனப்படும். இது நம் அஞ்சல் முகவரியைப் போன்றது தான். இங்கு ஊர், தெரு, வீடு எண் என்பவற்றை வரிசை யாகக் குறிப்பிடுவோம். அதே போல் URL உலகத்தின் எந்தப் பகுதியில் உள்ள எந்த கணனியில் வலைப்பக்கம் உள்ளது என்பதை கூறுகின்றது.

உலகின் புகழ் பெற்ற சில இணையச் சேவையாளர்கள்

1.ஏடி அண்ட டி வோர்ள்ட் நெட் - (At & world Net)
2. மைக்றோ சொவ்ற் நெட் வொர்க் - (microsoft world Net)
3. அமெரிக்கா ஆன் லைன் - (America on Line)
4. இந்தியா விதோ ஹ சஞ்சார்நிகாம் லிமிடட் - (VSNL)
5. மஜா நார் பெலி கொம் லி·மிட்டட் - (MTNL)
6. மந்தரா ஆன் லைன் - (Mantra on Line)
7. சத்யம் ஆன் லைன் - (Satyam on Line)

உலகை உலுக்கும் உக்கிர நோய் சார்ஸ்

செல்வி ஸ். ஒஸ்கா எமில்ரா
தரம் 13 கலைப்பிரிவு

''அங்கு இங்கு என்னாதபடி எங்கும் பிரவாகமாய் ஆனந்த மூர்த்தியாகி அருளோடு நின்றது எது?'' என்பது ஆனந்தக் கூத்தின் அருளோ, ஊழிக் காலம் உதயமாகி விட்டதா எனத் திடுக்கிடும் வகையில் தோன்றிய மர்ம நோய்கள் சரித்திரம் படைத்து விடுகின்றன. பாரெல்லாம் புகழோங்கி பரந்து விரிந்து கிடக்கும் சீன தேசத்திலே 2002ம் ஆண்டு நவம்பர் மாதம் ''குவங்டொங்'' என்னும் பிரதேசத்திலே மிக வேகமாகப் பரவிய ஆட் கொல்லியே சார்ஸ். இந் நோயானது சீனாவை மட்டுமல்ல ஏனைய நாடுகளையும் தன் பிடிக்குள்ளே ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது.

நோயின் ஆரம்பம்:-

வியட்நாம் 'ஹனோய' நகரில் உள்ள பிரான்ஸ் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 48 வயதுடைய சீன-அமெரிக்க வர்த்தகர் ஒருவர் இம் மூச்சுத் திணறல் நோய்க்கு உட்பட்டிருந்தது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. அவ்வர்த்தகர் ஹாங்கொங்கில் இருந்து ஹனோய்க்கு வந்திருந்தார். சுகவீன முற்ற நிலையில் கடந்த பெப்ரவரி மாதம் 26ம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார். இவருக்கு கடும் காய்ச்சல், இருமல், வயிற்றுவலி மற்றும் மூச்சு எடுக்கச் சிரமம் ஆகிய அறிகுறிகள் ஏற்பட்டிருந்தன. அண்மைக் காலங்களில் 'குவாங்டொங்', 'மாகோஓ' ஆகிய பிரதேசங்களில் தங்கி இருந்துள்ளமை அறிய வந்துள்ளது. இந்நோயின் தன்மை கொண்ட பல ஊழியர்கள் இவ் வைத்திய சாலையில் இனம் காணப்பட்டமை இவர் களுக்கு சீன-அமெரிக்க வர்த்தகம் மூலமே நோய் தொற்றி இருக்க வேண்டும் என்று கருதுகின்றனர். இந் நோயின் குண இயல்புகள் கொண்ட நோயினால் பாதிப்புற்று அதுவரை யில் சீனாவில் 'குவாங்டோங்' மற்றும் ஹாங் கொங் ஆகிய பிரதேசங்களில் பலர் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டிருப்பது டாக்டர் கார்லோ உர்பானி என்னும் வைத்தியர் ஆய்வுகளின் மூலம் கண்டறிந்தார்.

உலக சுகாதார நிறுவனத்திற்குட்பட்ட குழு சீனாவின் குவாங்டொங் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட வைத்திய ஆய்வுகள் மூலம் இவ்வகை மூச்சுத்திணறல் நோய் சார்ஸ் நோய்த் தாக்கமே என சென்ற ஆண்டு மார்ச் மாதம் 26ம் திகதியே உறுதி செய்யப்பட்டது.

இந் நோய்க்கிருமி தொடர்பாக ஆய்வு களில் ஈடுபடுகின்ற வேளையில் டாக்டர் கார்லோ உர்பானியும் அந்நோய்க்கு உட் பட்டார். வியட்நாமுக்கு சார்ஸ் நோயினைக் காவிச் சென்ற சீன-அமெரிக்க வர்த்தகர் மார்ச் மாதம் 13ம் திகதி ஹாங்கொங்கில் மரணம் அடைந்தார். டாக்டர் கார்லோ உர்பானி மார்ச் மாதம் 24ம் திகதி பாங்கொங்கில் சார்ஸ் நோயினால் மரணமடைந்தார். நோயை இனங் கண்டவரையே பலி கொண்ட கொடிய நோய் 'சார்ஸ்'.

SARS என்றால் என்ன?

SARS என்பது Severe Acute Respiratory Syndrome என்பதின் சுருக்கமாகும்.. கடுமையான குறுகிய கால நுரையீரல் நோய் என்பது இதன் அர்த்தமாகும். இந்த நோயினால்

பீடிக்கப்பட்ட நோயாளிகள் மூச்சுத் திணறல் ஏற்பட்டு இறக்கின்றனர். நோயின் குணங் குறிகளை கொண்டு பெயர் சூட்டப்பட்டுள்ளது.

நோயின் அறிகுறிகள்

1. அதி உயர் காய்ச்சல் (38c/ 100.4 F க்கு மேல்)
2. காய்ந்த இருமல் (2-7 நாட்கள் பின்)
3. மூச்சு விடுவதில் அசௌகரியம்/திணறல்.
4. நெஞ்சறையின் எக்ஸ்ரேயில் அசாதாரண மான பொருட்கள் தெரிதல்/ அசாதார மாற்றங்கள்
5. கடும் தலையிடி
6. தசை நார்களின் இறுக்கம்
7. பசியின்மை
8. தேக அசௌகரியங்கள்
9. தடுமாற்றம்
10. வயிற்றோட்டம்
11. உடல் முழுவதும் கடி
12. மூக்கடைப்பு
13. தொடர்ச்சியான தும்மல்
14. குருதிச் சிறு தட்டுக்களில் குறைவு (Tow Platetet Count)
15. மூச்சு விடும் பொது நெஞ்சு நோ அதிகரிப்பு

SARS நோய்க்கான காரணம்?

சார்ஸ் நோயானது முன்பு எப்போதும் அறியப்படாத ஒரு வகை குறோனா (Corana) வைரசினால் உருவாவதை ஆய்வுகள் நிரூ பித்ததுடன் குறோனா வைரஸ் என்பது வைரசுக்களில் ஒரு குடும்பத்தின் பெயர். இதன் அங்கத்தவர்களை இலத்திரன் நுணுக்குக் காட்டியின் ஊடாக பார்க்கும் போது பண்டைய அரசர்களின் முடி (Crownlike) போன்று தோன்றும் இதனாலேயே இப்பெயர் ஏற்பட்டது.

இக் குறோனா வைரசுக்கள் மனிதர் களுக்கு புதியவையல்ல. சாதாரணமாகத் தடி மனை உருவாக்குபவை இவையே. சாதா ரணமாக மூன்று மணித்தியாலங்கள் வரை உலர்வளியில் தொற்றுத்தன்மையுடன் காணப் படக் கூடியவை. புற ஊதாக் கதிர்களினால் (Uvrays) இவற்றின் தொற்றுத்திறன் அழிக்கப் படும். இதனால் சூரிய ஒளி இவற்றை அழித்து விடும். இவற்றின் முக்கியமான இயல்பு என்ன வெனில் இலகுவில் பிறப்புரிமை விகாரம் (Genemutation) அடையக் கூடியவை.

குறோனா வைரஸ் கிருமிகள் சுவாசம் மற்றும் குடல் சம்பந்தமான நோய்களை ஏற்படுத்துகின்றன. இது மனிதரில் சாதாரண தடிமனையும் கோழிகளில் மார்புச் சளியையும் உருவாக்குகின்றன. மனிதரில் காணப்படும் குறோனா வைரசும், பறவைகளில் காணப்படும் குறோனா வைரசும் தமக்குரிய வேறுபட்ட மரபணுக்களை (Geneticcode) கொண்டிருக் கின்றன. சமகாலத்தில் இவ் இரு வைரசுக்கும் மனிதரில்/ விலங்குகளில் தொற்றுதல் அடைந்து தத்தமது மரபணுக்களை பரிமாற்றிக் கொள்கின்றன. இதன் விளைவாக உருவாகும் புதிய குறோனா வைரசு புதிய மரபணுக்களை கொண்டிருப்பதுடன் புதிய விருந்து வழங்கி கலத்தை தொற்றுதலடையும் ஆற்றலைக் கொண்டிருக்கும். புதிதாக உருவாகும் இந்த வைரசு அதிக வீரியத்தன்மை கொண்டதாயும் மருத்துவ சிகிச்சைக்கு எதிர்ப்புச் சக்தி கொண்ட தாகவும் காணப்படுகின்றது.

இப்புதிய வைரசு வழமைக்கு மாறாக நியூமோனியாவைத் (Atypical Peeumonia) தோற்றுவிக்கின்றது. நியூமோனியா கிருமியின் தொற்றுக் காரணமாக பாதிக்கப்படும் காற்றுச் சிற்றறைகள் சுரப்புகளால் நிரம்புகின்றன. இத னால் ஒட்சிசன் (O_2), காபனீரொட்சைட் ($C0_2$) பரிமாற்றம் தடைப்படுகின்றது. ஆனால் வழ மைக்கு மாறான நியூமோனியாவில் சிற்றறை களைச் சூழவுள்ள இழையங்கள் (Tissues) வீங்குதல் காரணமாக சிற்றறைகள் சுருங்கிப் போகின்றன. அத்துடன் அவற்றிற்கான குருதி விநியோகமும் தடைப்படுவதால் கலங்கள் (Cells) இறக்கின்றன. காற்றுப் பரிமாற்றம் தடைப்படுகின்றது. இதுவே **SARS** இல் அவதானிக்கப்பட்ட நோய் நிலையாகும்.

பரவும் காலம்

1. தொற்று ஏற்படும் காலம்
   02-10 நாட்கள் வரை சில நோயாளி களுக்கு 13 நாட்கள் வரை நீடிக்கும்
2. ஆரம்ப அறிகுறிகள் தோன்றும் காலம்
   01-02 நாட்களுக்குள் காய்ச்சல், உடல் அலுப்பு, காய்ந்த இருமல், தலையிடி
3. இறுதிக் கட்டம்
   03-04 நாட்கள் (பயங்கரமாகத் தொற் றும் காலம்) இக்கட்டத்தில் மூச்சு விடுவதில் அசௌகரியம், மூச்சுத் திணறல் ஏற்படும். இக்கட்டத்தில் 90% மான நோயாளிகள் தப்பிவிடுவர். 10% மான நோயாளிகள் மரணத்தைத் தழுவுகின்றனர்.

எவ்வாறு பரவுகின்றது?

1. SARS நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் தும்மும் போது, இருமும் போது வெளியில் விடப்படும் துணிக்கைகளை இன்னொருவர் உள்ளெடுக்கும் போது இந்நோய் பரவுகின்றது.

2. நேரடியான தொடுகை / மறைமுகத் தொடுகை (Direct of Indirect Contact) மூலமாகவும் பரவலாம்.

3. தும்மல், மூக்குநீர் ஆகியவற்றில் இருந்தும்

4. நோயாளி பாவித்த பொருட்கள் என்பவற்றில் இருந்தும்

5. மூச்சுக் காற்று (குறிப்பாக குளிரூட்டப்பட்ட விமானம் / கப்பல்களில் பயணம் செய்வோர் இதற்கு ஆளாகின்றனர்)

சார்ஸ் நோயின் பொதுவான இயல்புகள்:-

1. நெஞ்சக எக்ஸ்ரேயில் அசாதாரண மாற்றங்கள் காணப்படுதல்.
2. சுவாசக் குழாய்களும் நுரையீரல்களும் சந்திக்கும் இடத்திலும், நுரையீரல்களிலும் புள்ளிகள் தோன்றுதல்.
3. 5- 6 நாட்களுக்குப் பின் 90% நோயாளிகள் தப்பிக் கொள்வர்.

4. 10%மான நோயாளிகள் மாத்திரம் சுவாசச் சிக்கலுக்கு உள்ளாகி மரணிப்பர்.

பாதுகாப்பு நடவடிக்கை:-

1. சுகாதார பாதுகாப்பு தொழிலாளர்கள், நோயாளிகள், குடும்ப அங்கத்தவர்கள் அண் மித்த சினேகிதர்கள் ஆகியோரை உடனடி யாகத் தனிமைப்படுத்தி சகல பரிசோதனை களையும் செய்து வியாதி இருந்தால் நோயாளி களுக்கு என விசேடமாக அமைக்கப்பட்ட தொற்று நோய் தவிர்க்கும் வைத்தியசாலைக்கு அனுப்ப வேண்டும்.

2. வியாதி தோற்றியவர்களாகச் சந்தேகிக் கப்படுபவர்களை 20 நாட்களுக்கு தீவிர கண்காணிப்பில் வைத்திருத்தல் வேண்டும்.

3. சாதாரண பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டால் நோயாளியை மற்றைய நோயாளிகளுக்கு அண்மையில் இல்லாது தூர இடத்தில் வைத்திருந்து விசேடமாகப் பயிற்சி பெற்ற தாதிமார்களின் மேற்பார்வையில் இருக்க வேண்டும்.

வைத்தியர் மேற்கொள்ள வேண்டிய ஆரம்ப நடவடிக்கை

1. அவருக்குக் காய்ச்சல் உண்டா
2. காய்ந்த இருமல் மூச்சுத் திணறல் ஆகியன உண்டா
3. அவர் பயணம் செய்திருப்பின் 14 நாட் களுக்கு முன் எங்கிருந்து வந்தார்.
4. நோயாளி தெரிந்தோ தெரியாமலோ சார்ஸ் நோயாளியுடன் சேர்ந்து இருந்தாரா போன்ற விடையங்களை அறிதல் வேண்டும்
5. நோயாளியைத் தனிமைப்படுத்துதல்
6. அவரை பராமரிப்பவர்கள் Novs என்னும் விசேட முகமூடி அணிதல் வேண்டும்.

இந்நோயில் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள:-

1. சுவாசிக்கும் காற்றை வடிகட்டி அனுப்பும் முகக் கவசத்தை அணிந்து கொள்ளல்.

2. மற்றவர்களிடம் பேசும் போது 2,3 அடி தள்ளி நின்று பேசுதல்

3. அடிக்கடி கை கழுவதல்

4. **SARS** நோயாளி பயன்படுத்தும் கழிப்பறை (Toiletes) தாழி (Sink) என்பவற்றை அடிக் கடி தொற்று நீக்கல் வேண்டும்

5. **SARS** நோயாளியின் உணவுத் தட்டு, துவாய், போர்வை என்பவற்றை பகிர்ந்து கொள்ளக் கூடாது.

6. நோயாளிகளை பராமரிப்பவர்கள் கையுறை களை பயன்படுத்த வேண்டும் (Dispos--able gloves)

சார்ஸ் நோய்க்கான வைரசை கட்டுப் படுத்தும் மருந்துகள் ஆராயப்பட்டு உபயோகிக் கப்பட்டு வருகின்றன. விரைவில், இந்த நோய்க் கான தடுப்பூசி கண்டுபிடித்து விடலாம் என்ற நம்பிக்கையில் உலக சுகாதார ஸ்தாபனம் ஆய்வுகளை நடத்துகின்றது.

தற்போதைய மருத்துவ தொழில் நுட்பம். இந்த நூற்றாண்டின் பயங்கர சார்ஸ் நோயைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரும் என உலக மக்கள் நம்புகின்றனர். நோய் பற்றி அறிந்தால் அச்சம் கொள்ள வேண்டிய தில்லை.



❋ மனிதனின் முக்கிய கடமை மனிதனுக்கு
சேவை செய்வதுதான்

❋ உள்ளே நுழையமுன்
வெளியே வருவதைப் பற்றி சிந்தியுங்கள்

❋ செல்வாக்கு இல்லை என்றால்
சொல்வாக்கு இல்லை என்று அர்த்தம்

இலங்கையில் உல்லாசப் பிரயாணத்தின் முக்கியத்துவம்

செல்வி ச. சர்மிளா
தரம் 13 கலைப்பிரிவு

உலகிலுள்ள எந்த ஒரு பெரிய நாட்டிலோ அல்லது தீவிலோ சரி அவை பிரச்சினை இன்றி தன்னிறைவு பெற்றனவாக விளங்குகின்றன என்பதை காண்பதோ கேட்பதோ அரிது. நாட்டுக்கு நாடு, ஆண்டுக்கு ஆண்டு பிரச்சினைகள் எழுவதுடன் அவை மாற்ற மடைந்து கொண்டே இருக்கின்றன. இதே போன்று எமது நாடாகிய இலங்கையில் இன்று தலைதூக்கியுள்ள பிரச்சினை பெரும் பொருளாதார பிரச்சினையாகும். இதனை தீர்ப்பதற்கு அரசாங்கம் பல வழிவகைகளை கையாண்டு வருகிறது. இவ்வாறு கையாளப்படும் முறைகளில் ஒன்றுதான் உல்லாசப் பிரயாணத் துறையினை விருத்தி செய்வது.

உல்லாசப் பிரயாணமானது ஒரு நாட்டில் .உள்ளோர் பிறிதொரு நாட்டிற்கு அல்லது தம் நாட்டின் பிற பகுதிகளில் உள்ள இயற்கை வளங்களையும், கலைகலாசார இடங்களை பார்வை இடுவதுடன் நம்மிலும் வேறுபட்ட ஓர் இனத்தவருடன் பழகி தமது ஓய்வு நேரத்தை இன்பமாக கழிப்பதேயாம். இந்த உல்லாச பிரயாணத்தை உள்நாட்டில் உள்ள இடங்களுக்கு செல்லுதலை உள்நாட்டு உல்லாசப் பிரயாணமென்றும் வெளிநாடுகளிற்கு செல்லுதலை வெளிநாட்டு உல்லாசப் பிரயாணமெனவும் பிரித்துக் கூறலாம். உல்லாசப் பிரயாணிகளை கவர்வது அழகான இயற்கை காட்சிகள், சரித்திர சம்பந்தமான இடங்கள், நூதனசாலைகள் போன்ற கவர்ச்சி உள்ள இடங்களாகும். இவ்வாறு இவர்கள் வெளிநாடுகளுக்கு உல்லாசப்பிரயாணமாக செல்லும் போது தமது பணத்தை அந்நாட்டில் செலவு செய்வதால் அப்பணத்தினால் அரசாங்கம் நன்மையடைகின்றது.

இலங்கை அரசாங்கம், அரசாங்க துறையில் உல்லாசப் பிரயாணத்திற்கு முக்கிய இடம் கொடுத்துள்ளது. இதனாலேயே உல்லாசப்பிரயாண மந்திரி, உல்லாசப் பிரயாண சபை என்பன ஒதுக்கப்பட்டன. பல ஆண்டு காலமாக தேயிலை, றப்பர், தென்னை என்னும் மூன்று பொருள்களுமே இலங்கைக்கு அந்நிய நாட்டுச் செலாவணியை பெற்று கொடுப்பதில் நிரந்தர மானவையாக இருந்ததுடன் அரசாங்கமும் அந்த வருமானத்தைக் கொண்டே எமக்குத் தேவையான உணவுப் பொருள்களையும் மூலப்பொருள்களையும் இறக்குமதி செய்வதில் தங்கி நிற்கின்றது. எனினும் தற்போதுள்ள நிலையை நோக்கின் அதாவது இலங்கைத் தேயிலைக்கு உலக சந்தையில் விலை குறைவும், இந்தியா, சீனா முதலிய நாடுகளில் போட்டியும் இதே போன்று றப்பருக்கு போட்டியும் ரஷ்யா போன்ற நாடுகளின் செயற்கை றப்பர் உற்பத்தியும், தெங்கு பொருள்களின் விலை உலகசந்தையில் நிச்சயமின்மையும், இன்று எமது அந்நிய செலாவணியை குறைத்தலால் பெரும் பொருளாதார பிரச்சினையை ஏற்படுத்தி உள்ளது. இதனால் உல்லாசப் பிரயாணம் அந்நியச் செலாவணியை எட்டக் கூடிய ஒரு தொழிலாகவும் இருப்பதனாலும் இயற்கை வளங்களுடன் கூடி அழகாக காட்சி அளிக்கும் இலங்கைத் தீவு அந்நியர் பலரை கவர்வதாயுள்ளதாலும் இத் தொழில் அரசாங்கத்தின் கவனத்திற்கு உரித்தாக்கப்பட்டு அதைப் பல்வேறு வழிகளிலும் அபிவிருத்தி செய்ய முயற்சி எடுக்கத் தொடங்கினர். இலங்கைத்தீவு பண்டைக்காலம் தொட்டு இன்று வரை இந்து சமுத்திரத்தின் முத்தென பெயர் கொண்டு விளங்குவதை அந்நியர் யாவரும் அறிந்ததே. இலங்கையின் மத்தியில் அதன் முதுகெலும்பாகத் தோற்றமளிக்கும் மலை

நாடும் அதினின்றும் உற்பத்தி ஆகிவரும் சிற்றோரிகள், பேராறுகள், நீர்வீழ்ச்சிகளும் இவற்றிடையே பச்சைப்பசேலென தோற்ற மளிக்கும் தேயிலை, இறப்பர் தோட்டங்களும் இவையாவற்றிற்கும் சாதகமான காலநிலையை கொண்டு விளங்கும் மலைநாடும் இதனை சூழ்ந்து தென்னஞ் சோலைகளுடன் இயற்கை துறைமுகங்களுடனும் கூடிய தாழ்பிரதேசத்தை கொண்ட இலங்கை அந்நியர்கள் பலரைக் கவர்வது இயற்கையே.

இலங்கையை போன்ற வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் அந்நிய செலா வணியை உழைப்பது கடினம் எனினும் உல்லாசப் பிரயாணம் இதை ஈட்டித்தரவல்ல ஒரு தொழிலாகும். பிற நாடுகளுக்கு உல்லாச பிரயாணமாக செல்வோர் அந்நாட்டில் தமது நாட்டு பணத்தை மாற்றி செலவு செய்வதால் இவர்கள் அந்த நாட்டில் வருமானத்தை ஈட்டிக் கொடுப்பதில் உதவுகின்றனர். இலங்கை மேலே கூறிய இயற்கை வளங்கள் நிரம்பிக் காணப்படுவதால் பிரயாணிகள் ஆண்டு தோறும் வந்து செல்கிறார்களெனினும், சில வசதியீனக் குறைகளை நிவர்த்தி செய்யின் மேலும் பலரின் வரவை எதிர்பார்க்கலாம்.

இவர்களின் வசதிக்காக 1966ம் ஆண்டு உல்லாசப் பிரயாண சபை நிறுவப்பட்டது. இச் சபை உல்லாசப் பிரயாணிகளை உபசரிப்பதற் காக பல சேவைகளை புரியவேண்டுமென வலி யுறுத்துகிறது. எமது மக்கள் உல்லாசப் பிர யாணிகளுடன் மரியாதையாக பழக வேண்டி யதன் அவசியத்தையும் அவர்களுக்கு வேண் டிய வசதியான போக்குவரத்து வசதிகளையும் ஏற்படுத்துவதற்கு நவீன முறையிலான வாகன வசதிகளை ஏற்படுத்தல், அவர்களுக்கு தங்கு வதற்கு வேண்டிய வாடிவீடுகள், படுக்கை வசதி முதலியவற்றையும், உணவு பரிமாறல் போன்ற வற்றை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என மக்களுக்கு விளக்குதல் போன்றவற்றை விருத்தி செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

மேலும் இச்சபை உலகிலுள்ள முக்கிய நாடுகளிற்கும் விளம்பரம் செய்வதற் காக சஞ்சிகைகள், வரைபடங்கள் போன்ற வற்றை பிரசாரம் செய்வதிலும் ஈடுபட்டுள்ளது. இன்று இச்சபை இலங்கைக்கு வரும் ஓர் அந்நியருக்கு அவன் இறங்கிய இடத்தில் வைத்தே தேசப்படம், இலங்கையில் உல்லா சமாக கண்டு களிப்பதற்குரிய முக்கிய இடங் கள், உணவுவசதி, நாணயமாற்று வீதம் போன்ற குறிப்புகளைக் கொண்ட புத்தக மொன்றையும் இலவசமாக வழங்கி வருகிறது. இவ்வாறு செய்தல் உல்லாசப் பிரயாணி களுக்கு பெரிதும் உதவியாகின்றது. அதோடு அரசாங்கம் புள்ளி விபரங்களை எடுப்பதற்கு புள்ளி விபரப்பகுதியையும் ஏற்படுத்தி உள்ளது. இது உல்லாசப் பிரயாணிகள் இங்கு செலவு செய்யும் பணம் அவர்களிற்கு வேண்டிய வசதி, இத்தொழிலை விருத்தி செய்து வளர்த்தல் போன்றவற்றில் கவனம் செலுத்தி வருகின்றது. இந்த புள்ளிவிபரக் கணக்கெடுப்பின்படி தற் போது உல்லாசப் பிரயாணிகள் பெருமளவு வருவதாகவும் அதற்கேற்ப வருமானமும் அதிகரிப்பதாகவும் அறியப்படுகிறது.

மேலும் அரசாங்கம் இலங்கையிலுள்ள பழைய அழியும் நிலையில் இருக்கும் சரித்திர் சம்பந்தமான இடங்களை புதுப்பித்து அந்நியர் பலரை கவர வைப்பதற்கு வெளிநாட்டு வல்லு நர்களை அழைத்து திருத்தும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது.

எனவே இன்றைய நிலையில் எமது நாட்டிற்கு உல்லாசப் பிரயாணிகளால் வரும் வருமானம் அந்நியநாட்டு செலாவணி பற்றாக் குறையை ஓரளவு தீர்ப்பதாயுள்ளது. உல்லாசப் பிரயாணம் பொருளாதாரம் முன்னேற்றம் அடை வதற்கு முக்கிய காரணமாக இருப்பதுடன் நாடுகளிற்கிடையே நல்லுறவை ஏற்படுத்தும் ஒரு தொழிலாகவும் அமைந்திருப்பதால் அர சாங்கம் இதில் முயற்சி எடுப்பதில் தவறில்லை.

ஆரம்பக் கல்வியும் அதன் முக்கியத்துவமும்

செல்வன். மு. றஜீஸ்
தரம் 13 கலைப்பிரிவு

ஒருவரிடமுள்ள சகல ஆற்றல்களையும் வெளிக்கொண்டு வந்து அவ ஆற்றல்களை சமூக விருத்திக்கு பயனுள்ளதாக்கி சமூகத்தில் நற்பிரசையாக வாழவைப்பது கல்வியாகும். சமூக அரசியல் பொருளாதார பண்பாட்டு விழுமியப் பண்புகள் மக்களிடம் வளர்த்து பூரணத்துவம் அடையக் கல்வி ஊன்று கோலாகின்றது. மனிதனின் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களுக்கும் வயதுக்கும் ஏற்ப கலைத் திட்டம் தனித்தனியாகப் பிரித்து கற்பிக்கப் படுகிறது. அந்த வகையில் ஒன்றாகவே ஆரம்பக்கல்வி விளங்குகின்றது.

ஆரம்பக் கல்வி ஒவ்வொரு குழந்தைக்கும் முக்கியமுடையதாகும். இதன் அடிப்படையிலேயே இடைநிலைக் கல்வி உயர் கல்வி என்பன கட்டியெழுப்பப்படுகின்றது. இதன் காரணமாகத்தான் கல்வி உளவியல் அறிஞர் கள் ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவம் பற்றிய கருத்து வெளியிட்டுள்ளனர். ஜீன் ஜாகஸ் ரூசோ (Jean Jacks Rousseau) ஒரு பிள்ளை தன் வாழ்வில் ஒரு போதும் அடைய முடியாத தூரத்திலுள்ள குறிக்கோளுக்காக அப் பிள்ளையை விருத்தி பல கட்டுப்பாடுகளுக்கு உள்ளாக்கி நிலையில்லாத எதிர் காலத்துக் காக அப்பிள்ளையின் நிகழ்காலத்தை அர்ப் பணிப்பது தவறு. குழந்தையின் இயல்புக்கும் விருப்புக்கும் ஏற்ப கற்பிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார் பெஸ்ரலோஜி (Pestalozzi) என்பவர் குழந்தைகளுக்கு கல்வி புகட்டுவதில் அன்பும் ஆதரவும் இருக்க வேண்டும் என விளக்குகின்றார். புரோபல் (Froebel) இயற்கை வழியில் குழந்தைகளை வளர்த்து குழந்தை தம் விருப்பத்துக்கு ஏற்றபடி ஆடியும் பாடியும் விளையாடியும் தமது திறன்களை வளர்க்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்.

வீட்டுச் சூழலில் வழக்கப்பட்ட பிள்ளை ஆரம்பக் கல்வியைக் கற்க பாடசாலைக்கு வரும் போது அப்பாடசாலைச் சூழல் அவனுக்குப் புதிதாக இருப்பதுடன் பல புதிய அனுபவங்களையும் பெற்றுக் கொடுக்கும். இதனால் பாடசாலைச் சூழல் குழந்தைக்கு ஒத்திசைவுள்ளதாக இருத்தல் முக்கியமானதாகும். ஆரம்பக் கல்வி பிள்ளையின் இயல்பான வளர்ச்சிக்கு உதவி செய்வதாக அமைய வேண்டும். பிள்ளை தன் புலன்களால் அவதானித்து அனுபவம் பெற்று அவ் அனுபவத்தின் மூலம் அறிவை வளர்க்க வேண்டும்.

தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புக்கள் ஆகும். ஐந்து வயது தொடக்கம் பத்து வயதுவரையான பருவம் ஆரம்பக் கல்வி கற்கும் பருவமாகும். மனிதனின் வளர்ச்சிப் பருவத்தில் இப்பருவம் பிள்ளைப் பருவமாகும். ஆரம்ப பாடசாலைக்கு வரும் பிள்ளை உடல், உள, சமூக மனவெழுச்சி, வளர்ச்சி நிலைகளில் வேறுபட்டிருப்பர். அவரவர் வீட்டுச் சூழலுக்கு ஏற்ப தனக்கெனச் சொந்தமான பாரம்பரிய பண்புகளுடன் வருவர். இதனால் ஒவ்வொரு பிள்ளைகளின் தனித்தன்மையையும் அறிந்து அதற்கேற்ப கற்றல் - கற்பித்தல் செயற் பாட்டைத் திட்டமிட வேண்டும்.

ஆரம்பக் கல்வி கற்கும் இப்பருவம் குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சியில் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. குழந்தையின் ஆளுமை (Personality) வளர்ச்சி பெறக்கூடிய விதத்தில் ஆரம்பக் கல்வி அமைய வேண்டும். ஆரம்பக் கல்வியைக் கற்பிக்கும் போது வெற்றுரைகள் (கருத்தற்ற சொற்கள்) மூலம் கற்பிக்காது பிள்ளைகளின் கற்றலார் வத்தைத் தூண்டக் கூடியதாக கற்றல்

கற்பித்தல் செயற்பாடுகள் அமைய வேண்டும். அதாவது காட்சிநிலையத்திலிருந்து கருத்து நிலைக்கும் (Visuolisation Concepty - Valization) அறிந்ததிலிருந்து அறியாதவிடத் திற்கும் (From known to unknown) கற்க வழிகாட்ட வேண்டும்.

ஆரம்பக் கல்வி ஆசிரியர்களான பணி விரிவுரை முறையிலான கற்பித்தல் அல்ல. பிள்ளைகளின் வழிகாட்டியாக இருந்து கற்றலுக்கு ஊக்கமளிப்பதும் வழிகாட்டுவதுமே முக்கிய பணியாகும். பிள்ளைகளிடம் காட்சிப் பொருட்களைக் கொடுத்துக் குழந்தையின் சுய முயற்சிக்கு ஊக்கமளித்து அவ் ஊக்கத்தின் மூலம் அனுபவங்களைப் பெற வழிகாட்டி அவ் அனுபவத்தினூடே குழந்தை கற்க வேண்டும். ஆரம்பக் கல்வி கற்றல் - கற்பித்தல் பற்றிச் சிந்திக்கும் போது சீனப் பழமொழி ஒன்று நினை வில் வருகிறது. ''நான் காதால் கேட்கிறேன் மறந்துவிடுவேன், கண்களால் பார்க்கிறேன் நினைவில் வைத்திருப்பேன் செய்து பார்த்தேன் விளங்கிக் கொண்டேன் கண்டு பிடித்தேன் மகிழ்வடைந்தேன்" என்பது போலச் செயற் பாடுகள் மூலம் அனுபவங்களைப் பெறக்கூடிய வகையில் ஆரம்பக் கல்வியை கற்பித்தல் முக்கியமாகும்.

ஆரம்பக் கல்வி பாட விதானத்தில் பாட அலகுகள் ஒன்றிணைக்கப்பட்டு கற்பிக்கப் படுகின்றது. 1998ம் ஆண்டு இலங்கை அரசு கல்விச்சீர்திருத்தம் மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் பாடவிதானத்தில் சில மாற்றங்கள் செய் துள்ளது. அதாவது தரம் 1, 2 என்பன முதன்மை நிலை 1 எனவும், தரம் 3, 4 என்பன முதன்மை நிலை 2 எனவும் தரம் 5 முதன்மைநிலை 3 எனவும் பிரிக்கப்பட்டுள்ளது. நிலை ஒன்றில் விளையாட்டு வினோதச் செயல் கள் குறைவாகவும் எழுத்து வேலைகள் அதிக மாகவும் இருக்கும்.

மறுசீரமைப்புத் திட்டத்தில் ஆரம்பக் கல்வியில் தேர்ச்சி அடிப்படையிலான பாட விதானம் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் பாட விடயங்கள் நான்காக வகுக்கப்பட்டுள்ளது. அவையாவன. மொழி, கணிதம், சமயம், சுற்றாடல் சார் செயற்பாடுகள் என்பனவாகும். உடல் நலம், சுகாதாரம், ஒழுக்கச் செயற் பாடுகளைத் தனித்தனி பாட அலகுகள் மூலம் கற்பிக்கப்படுகின்றது. நாம் ஒன்றிலிருந்து செயற் பாடு சார்ந்த வாய்மொழி மூலம் ஆங்கிலம் (Class Room English Language Usage) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தரம் மூன்றி லிருந்து முறைசார் ஆங்கிலம் கற்பிக்கப்படும்.

அடுத்ததாக பாடரீதியாக ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவத்தினை நோக்கும் போது தாய்மொழி மிக முக்கியமான இடத் தினைப் பெறுகிறது. இது கேட்டல், பேச்சு, எழுத்து, வாசிப்பு என்னும் நான்கு திறன் களாகக் கொண்டது. இவற்றில் ஆரம்பக் கல்வி யின் போது ஓர் பிள்ளை எந்தளவிற்கு பயிற்சி யினை பெற்றுக் கொள்கிறதோ அந்தளவிற்கு பிள்ளையின் மொழி அறிவு எதிர்காலத்தில் கற்றல் ஆர்வத்தை ஏற்படுத்துகின்றது. இத னால் உயர்கல்வியைப் பெறுவதற்கும் சுயமான சிந்தனைத் திறனை வளர்த்தும் படைப்பாற் றலை (Creativity) விருத்தி செய்யவும் உதவு கிறது. இளமைக் காலத்தில் கேட்டல், பேச்சு, எழுத்து, வாசிப்பு என்பவற்றில் அதிக கவனம் செலுத்தி மொழியறிவை வளர்ப்பதனால் பிள்ளைக்கு எதையும் கேட்க வேண்டும் வாசிக்க வேண்டும் எழுத வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படும் இதனால் சமூகத்தில் சிறந்த ஓர் விமர்சகனையோ, பேச்சாளரையோ படைப் பாளியையோ உருவாக்க முடியும்.

மாறாக ஆரம்பக் கல்வி கற்கும் காலத் தில் இம்மொழித் திறன்களில் பூரண விருத்தி யைப் பிள்ளைகளிடம் வளர்க்காது விட்டால் அப் பிள்ளைகள் எதிர்காலத்தில் தொடர்ந்து கல்விகற்க முடியாது மொழித்திறன் விருத்தி யின்மை காரணமாக மாணவர்கள் பாடசாலை யிலிருந்து இடைவிலகுவதற்கும் தாய்மொழி அறிவில் பூரணத்துவம் இல்லாது இருப்பதற்கும் காரணமாகும். எனவே ஆரம்பக் கல்வியின் மொழித்திறன்களில் விருத்தியை ஏற்படுத்தல்

மிக முக்கியமாகும். எல்லாச் சமயமும் மனி தனின் நல்வாழ்வுக்கு வழிகாட்டுவதாகவே அமைந்துள்ளது. ஆரம்பக் கல்வியில் சமய நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள் பற்றிக் கற்பிக்கும் போது குழந்தைகளிடம் இறை நம்பிக்கை வளர்க்கப்படுவதுடன் அன்பு, கருணை, இரக்கம், கீழ்ப்படிவு, விட்டுக் கொடுப்பு, ஒற்றுமை, சமாதானம் போன்ற விழுமியப் பண்புகள் ஊட்டப்படுகிறது. மாறாக மத நம்பிக்கைகளையும் வழிபாட்டு முறை களையும் ஆரம்பக் கல்வியிலேயே கற்பிக்காது விட்டால் எதிர்காலத்தில் சமூகத்திற்கு ஒவ்வாத பிரசையாக குழந்தைகள் உருவாக வழி வகுக்கும் எனவே தான் ஆரம்பக்கல்வியிலே சமயக் கல்வியின் ஊடாக அறநெறிப் பண்பு களை ஊட்டுவது முக்கியமாக விளங்கு கின்றது.

ஆரம்பக் கல்வியில் சுற்றாடல் கல்வி யும் முக்கியமான ஓர் பாடமாகும். சுற்றாடல் கல்வியின் மூலம் அவதானிப்புத் திறனை வளர்க்க முடியும். இந்த அவதானிப்பத்திறன் பிள்ளைகளிடம் ஆராய்வு ஊக்கத்தை தூண்டு கிறது. இதனால் விஞ்ஞான பூர்வமாக சிந்திக் கவும், இயற்றை வளங்கள் பற்றி அறியவும் அவற்றைச் சிக்கனமாக பயன்படுத்தவும் குழந்தைகள் பயிற்றப்படுகின்றனர். மேலும் ஆரம்பக்கல்விப் பருவத்தில் சுற்றாடலைப் பற்றிக் கற்பதாலும் அவதானிப்புத் திறனை வளர்ப்பதாலும் எதிர்காலத்தில் நாட்டின் சமூக சிப்பிகளான விஞ்ஞானிகள் ஆய்வாளர்கள், கலைஞர்கள், படைப்பாளிகள் போன்றோரை உருவாக அடித்தளம் இடப்படுகின்றது.

ஆரம்பக் கல்வியில் கணிதம், கருத்து நிலைமிக்கதொரு பாடமாகும். கூட்டல், கழித் தல், பெருக்கல் பிரித்தல் ஆகிய நால்வகைச் செயற்பாடுகளும் மனித வாழ்க்கையில் முக்கிய மானதாகும். கணிதம் என்பது எண்களின் ஆரம்பம் மட்டுமல்ல கூட - குறைய, உயரம்-பள்ளம், சில-பல போன்ற கோலங்களுமாகும். சூழலிலுள்ள எல்லா நிகழ்ச்சிகளிலும் ஏதோ ஒரு கோலம் உண்டு. பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வியில் கணிதம் முறையாக போதிக்கப்படவேண்டும். அவ்வாறு கற்பிக்கப் பட்டாலே உயர்கல்வியில் கணிதத்தை விருப் புடன் கற்பதுடன் வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை கணித அறிவை பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் ஆக்கம், அழகியல், உடல் நலம், சுகாதாரம், விளையாட்டு போன்ற செயற்பாடுகளும் ஆரம்பக் கல்வியில் முக்கிய மானதாகும். ஆக்கம், அழகியல் தொழிற்பாடு களின் மூலம் குழந்தைகளிடம் மறைந்து கிடக்கும் எத்தனையோ திறன்கள் வெளிக் கொண்டுவரப்படுகின்றது. அத்துடன் குழந்தை களின் அறிவு, சிந்தனைசக்தி, உள இயக்கத் திறன்கள் விரிவடைகின்றது. இதனால் பயம், வெட்கம், பின் தயங்கும் தன்மை போன்றன குழந்தைகளிடம் இல்லாது மறைகின்றது ஆங்கிலக்கல்வியும், ஆரம்பக் கல்விப் பருவத் திலே விருத்தி செய்ய வேண்டும். சர்வதேச மொழியாக விளங்கும் ஆங்கிலமும் முக்கிய பாடமாகும்.

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஆரம்பக் கல்வியே கற்பிக்கும் ஆசிரியர்கள் தாய்மை நிறைந்தவர்களாக விளங்க வேண் டும். அன்னையைப் போன்று குழந்தைகளிடம் அதிக அக்கறை செலுத்த வேண்டும். அவர் களிடம் காணப்படும் தவறுகளையும் குறைக ளையும் திருத்தி நல்லொழுக்க பண்புகளை வளர்க்க வேண்டும். குழந்தைகளின் தனித் தன்மையை மதித்து கற்றல், கற்பித்தல் செயற் பாடுகளை திட்டமிடல் வேண்டும்.

இறந்தகாலத்தைப் பற்றி புலம்பாதே எதிர்காலத்தைப் பற்றி சிந்தி

மிதிவெடியிலிருந்து பாதுகாப்புப் பெறல்

செல்வன். தி. விஜயேந்திரன்
தரம் 13 கலைப்பிரிவு

(கோட்டமட்டத்தில் 2ம் இடம் பெற்ற கட்டுரை)

மிதிவடி என்றால் மிதிக்கும் போது வெடிக்கும் வெடி பொருட்கள் அனைத்தும் மிதிவெடி எனப்படும். இம் மிதி வெடிகளால் நாங்கள் பல்வேறு வகையில் விளைவுகளை எதிர்கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறோம் ஆகையினால் இம் மிதி வெடிகளிலிருந்து பாதுகாப்பு பெறுவது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

இம் மிதிவெடிகள் காணப்படும் இடங் கள் என்று கூறும்போது போர் நடந்த இடங்கள் இராணுவ காவலரண்களின் முன்னால் இராணு வத்தினர் பாவித்து விலகிய முகாம்கள் வேறு சிறிய காவலரண்கள் ஆகிய இடங்களில் மிதிவெடிகள் பெருமளவில் புதைக்கப்பட்டிருப் பதனைக் காணலாம்.

மேற்கூறப்பட்டுள்ள இடங்களில் புதைக் கப்பட்டுள்ள மிதிவெடிகள் பல்வேறு பெயர் களைக் கொண்டு அழைக்கப்படுகின்றன. உதா ரணமாக எடுத்து நோக்கின் ஜொனி மிதிவெடி யினைக் குறிப்பிடலாம். இவ்வாறான மிதி வெடிகள் பல்வேறு வடிவங்களைக் கொண்ட தாக காட்சியளிக்கின்றன. இங்கு குறிப்பிட்ட மிதிவெடியின் அமைப்பானது கடதாசி துளை யிடும் கருவியின் அமைப்பை ஒத்ததாகும்.

பல்வேறு இடங்களிலும் புதைக்கப்படும் மிதிவெடிகளால் நாங்கள் பல உறவுகளைப் பிரியவும் வேண்டியுள்ளது. இதன் விளைவாக உறவுகளிலே பெற்றோரை இழந்த பிள்ளை களாகவும் பிள்ளைகளை இழந்த பெற்றோர் களாகவும் உள்ள தனிமையான வாழ்விற்கு தள்ளப்படுகிறார்கள். இவ்வாறாக புதைக்கப் படும் மிதிவெடிகளினால் கால்களை இழந்த வர்களும் கைகளை இழந்தவர்களும் தங்களது அங்கங்களை இழந்து சமூகத்திலே அங்கவீனர் களாக தென்படுகிறார்கள்.

மிதிவெடிகள் சமூகத்தில் பாதிப்புக் களை உண்டு பண்ணுவதால் சமூகத்திலே உள்ள அங்கவீனர்கள் பலராலும் ஒதுக்கப் படுவார்கள். பலராலும் அவர்களின் குறை யினைக் கூறி இழிந்துரைக்கப்படுவார்கள் இதன் பயனாக சமூகத்திலே உள்ள அங்கவீனர்கள் மத்தியில் விரக்தி, தனிமை, வெறுப்பு, சலிப்பு ஆகியவை ஏற்படுவதற்கு இந்த மிதிவெடிகள் காரணமாக அமைகின்றன.

மிதிவெடிகள் காணப்படும் இடங்கள், அதன் அயற்புற சூழலை உபயோகித்தல் நல்லதன்று. இவ்வாறான இடங்களில் இருந்து விலகி எங்களை பாதுகாத்துக் கொள்வதற் காகவும் எங்கள் சுற்றத்தினரையும் கால்நடை களையும் பாது காத்துக் கொள்வதற்கான பாதுகாப்பான முடிவுகளை எடுத்தல் நன்றாகும். இதற்கு எடுத்துக்காட்டாக மிதிவெடிகள் காணப் படும் இடங்களை அறிந்தால் எமது கிராம அலுவலருக்கோ அல்லது மிதிவெடி அகற்றும் குழுவினருக்கோ அறிவித்து எங்களையும் சுற்றத்தையும் பாதுகாத்துக் கொள்ளல் ஏற்றதொன்றாகும்.

மிதிவெடிகள், வெடிக்கும் பொருள் போன்றவற்றின் முக்கியத்துவத்தினையும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் அறிந்து கொள்ளாத மக்களுக்கு இவற்றினை புகட்டும்

வகையில் ஏற்ற முயற்சிகள் மூலம் இவற்றை நிவர்த்தி செய்து கொள்ள முடியும். இவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் மிதிவெடி அபாயம் குறித்து கிராமப்புறங்கள், நகர்ப் புறங்கள் ஒவ்வொன்றிலுமுள்ள ஒவ்வொரு குடி மனைக்கும் சென்று அங்கு துண்டுப் பிரசுரங்கள் கொடுத்தலும் அவற்றுக்கான போதிய விளக்கங்களை அளித்தலும், மிதிவெடி அபாயம் குறித்து விழிப்புணர்வுகள் உண்டு பண்ணுவதனூடாகவும் சிறிய நாடகங்களை ஆற்றுகையின் ஊடாகவும் மிதிவெடியின் பாதிப்புகளையும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் நிவர்த்தி செய்து கொள்ள முடியம்.

மேலே கூறப்பட்ட விழிப்புணர்வு விடயங்களை கடைப்பிடித்து அவதானமாக வாழ்வோமானால் மிதிவெடியினால் எந்த ஒரு இழப்புக்களையும் தவிர்த்துக் கொள்ள முடியும். ''இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்" என்ற கூற்றுக்கிணங்க அவர்களுக்கு மிதிவெடியினால் எந்த ஒரு பங்கமும் ஏற்படாது பாதுகாத்து நல்லதொரு சமூதாயத்தை கட்டியெழுப்பலாம்.

உலகமயமாக்கமும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் (LDC) அதன் தாக்கமும்

செல்வன். வே. கோடீஸ்வரன்
தரம் 13 கலைப்பிரிவு

உலகமயமாக்கற் செயற்பாடு என்றால் என்ன? உலக மயமாக்கற் செயற்பாடானது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் (LDC) ஏற்படுத்தும் தாக்கங்கள் எவை?

உலக மயமாக்கல் அல்லது பூகோள மயமாக்கற் (Globalization) செயற்பாடானது 1990களில் எழுந்த புதிய சொற்பதமாகும். ஆனால் அதன் தொழிற்பாடு 19ம் நூற்றாண்டுகளில் தோற்றம் பெற்றது. அதாவது உலக முழுவதும் ஏக பண்பாடு, ஏக சமுதாயம், உருவாகும் நிலையாகும். முதலாளித்துவ பொருளாதாரச் சார்பானதாக உலக மயமாக்கம் அமைந்துள்ளது. தொலைத் தொடர்புகளின் வளர்ச்சி, தொழில்நுட்ப வளர்ச்சி என்பவற்றின் அபிவிருத்திகளினால் உலகமயமாக்கம் தீவிர வளர்ச்சி அடைந்து வருகின்றது. உலக மயமாக்கம் என்றால் ''நாடுகளின் அரசியல் எல்லைகளைத் தாண்டி முதலீடு, வர்த்தகம், நிதி, உழைப்பு போன்றவற்றின் கட்டுப்பாடுகளை நீக்கி உலக நாடுகளை ஒரு சந்தையின் கீழ் கொண்டு வருதல்" எனக் கூறப்படுகின்றது.

சர்வதேச நாடுகள் தேசிய பொருளாதாரத்தை உலக சந்தை வரை விஸ்தரிக்கும் நடவடிக்கையை உலகமயமாக்கல் எனப்படும். அல்லது பொருளாதாரங்களை உலக சந்தையுடன் இணைக்கும் நடவடிக்கையே உலக மயமாக்கல் பொருளாதார நடவடிக்கை என்பர். உலகமயமாக்கலை நாம் அரசியல், பொருளாதார, சமூக பண்பாடுகளின் அடிப்படையில் நோக்க முடியும். அரசியலின் அடிப்படையில் உலகமயமாக்கம் என்பது

''சனநாயகம் மனித உரிமைகள் அடிப்படை சுதந்திரங்கள் பால் சமத்துவம், ஒழிவு மறைவற்ற ஆட்சி, மற்றும் அரசு சாரா அமைப்புகளின் பெருக்கமே அரசியல் உலக மயமாக்கம் " என கருதப்படுகிறது.

பொருளாதார ரீதியில் உலக மயமாக்கலை நோக்கும் போது ''உற்பத்தி பரிமாற்றம், பகிர்வு, கொள்வனவு போன்ற வற்றுடன் தாராள மயமாக்கல் கொள்கை, உலக சந்தை, உற்பத்தி முறைமையின்

மாற்றம் என்பவற்றினால் பொருளாதாரத்தினை பெருமைப்படுத்தல் முதலாளித்துவ வளர்ச்சி போன்றவற்றின் அடிப்படை பொருளாதார உலகமயமாக்கம் அமைகின்றது" எனவும், உலக மயமாக்கலை சமூகரீதியில் நோக்கும் போது

"உலக மொழியாக English ஏற்றுக் கொள் வதும், பொப்பிசை, ஹொலிவுட் படங்கள், நவீன வாழ்க்கை முறைகள், சமூக சமுதாய ஒன்றிணைவு என்பவற்றின் அடிப்படையில் சமூக உலகமயமாக்கல் நோக்கப்படுகிறது.

பண்பாடு ரீதியான உலகமயமாக்கம் என்பதனை நோக்கும் போது
"மேலைத்தேய பண்பாடு, பழக்க வழக்கங்கள் தேசிய எல்லைகளை கடந்து சென்று உலக பண்பாடு தோற்றத்திற்கு துணைபுரிகிறது அல்லது ஓரின பண்பாட்டை உருவாக்குகிறது" எனவும் கூறுகின்றனர்.

உலக மயமாக்கல் செயற்பாட்டின் காரணமாக உள்நாட்டு பண்பாடு சரிவடைய உலக பண்பாடு மிளிர்கின்றது எனலாம். மேலும் Globalization is a Westernization என சமூகவியலாளர்கள் கூறுகின்றனர்.

உலக மயமாக்கல் மூன்று வழிகளில் இடம் பெறுகின்றது. அவை பின்வருமாறு:-

1. காலனித்துவ உலக மயமாக்கம் - USA, UK ஏகாதிபத்திய செயற்பாடுகளில் நோக்கலாம் (USA - Eraq யுத்தம்)
2. நிறுவன ரீதியான உலக மயமாக்கம் - IME, IBRD, WTO போன்றவற்றின் செயற்பாடுகள்.
3. திறந்த பொருளாதார சந்தை மயமாக்கம் - பல்தேசிய கம்பனிகளின் செயற்பாடுகள் 1990ற்கு பின்னர் உலக மயமாக்கத்தில் பாரிய செல்வாக்கை செலுத்தி வருகின்றது.

உலக மயமாக்கல் செயற்பாட்டின் அடிப்படையில் 4 கட்டமாக வகையீடு செய்யலாம்.

1. 1870 - 1913
2. 1919 - 1970
3. 1970 - 1990
4. 1990 - இன்று இறுதி கால கட்டமே மிகவும் முக்கியமான காலப்பகுதியாகும்.

உலகமயமாக்கத்தின் முகவர்களாக ஒருசில நாடுகளும் சில நிறுவனங்களும் செயற்படுகின்றன.

USA, France, Japan, Germany போன்ற நாடுகளும் IMF, IBRD, WTO, பல் தேசிய கம்பனி போன்றனவும் முகவர்களாக தொழிற்படுகின்றனர். இன்று 53, 000 மேற்பட்ட பல்தேசிய கம்பனிகள் உள்ளன. உலகமய மாக்கமானது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பல்வேறு தாக்கங்கள் உட்பட்டிருப் பதை அவதானிக்கலாம். மேற்கு நாடுகளின் கருத்துப்படி அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் (LDC) உலக மயமாக்கலுக்குள் பிரவேசித்தால் அபிவிருத்தியை ஏற்படுத்தலாம் எனக் கூறுகின்றனர். LDCகளில் ஏற்படுத்தும் நன்மைகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

நாடுகளின் எல்லைகள் சுருங்கியிருந் தமை அதாவது, வர்த்தக நோக்கத்திற்காகவும் தகவல் தொடர்புகளை உடனுக்குடன் அறியக் கூடியதாக உள்ளது. குறைந்த நேரத்தில் அதிகளவு வேலையைச் செய்யக் கூடியதாக உள்ளமை.

நாட்டின் அதிகளவான பொருட்கள் உற்பத்தி செய்யக்கூடியதாக காணப்பட்டது. அதாவது வெளிநாட்டு நிறுவனங்கள் உற்பத்தி யில் ஈடுபட்டமையினால் இயந்திர பண்பாடு அதிகரித்து உற்பத்தியும் அதிகரிக்கப்பட்டது.

விவசாய உற்பத்திக்கு விதையினங் கள் ஏனைய விவசாய பொருட்கள், களை கொல்லிகள், பசளைகள் போன்றன அறிமுகப் படுத்தப்பட்டமையினால் LDC விவசாயிகள் அதிகளவு நன்மைகளை பெறமுடிகின்றது.

மொத்த தேசிய உற்பத்தியின் வருமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால்

கொள்வனவு சக்தி முன்னரிலும் பார்க்க சில மக்களிடமாவது அதிகரித்துள்ளது.

உலகமயமாக்கலினால் பொருள் உற்பத்தி அதிகரிக்கப்பட்டமையினால் உள் நாட்டில் பொருளுக்கான கேள்வி குறை வடைந்து இதனால் நுகர்வோர் பல நன்மை களைப் பெற்றனர்.

உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி உறுதி வாய்ந்த முறையில் உற்பத்தி நடவடிக் கையில் ஈடுபட முடிந்தமை மேலை நாடுகளின் நிறுவனங்கள் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடுவதனால் மேலும் பல உள்ளூர்வாசிகள் தொழில் நடவடிக்கைகளைப் பெற முடிகின்றது. விரைவான பொருளாதார உற்பத்தியை இயந் திரங்களின் துணையுடன் உற்பத்தி செய்யக் கூடியதாக உள்ளமை.

கலாசார பண்பாட்டு மாற்றங்களும் பல நாட்டு நாகரீக முறைகளையும் LDC மக்கள் அறியக் கூடியதாக உள்ளன. இவ்வாறான நன்மைகளை LDC நாடுகள் பெற்றுக் கொண்ட வேளையிலும் நன்மைகளை விட அதிகமான தீமைகளைச் சந்திக்க வேண்டிய நிலையில் இந் நாடுகள் காணப்படுவது உலக மயமாக்கல் தேவையில்லாத ஒரு செயற்பாடு என விமர்சிக்கின்றனர்.

உலக மயமாக்கத்தினால் ஏற்பட்ட தீமைகளாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

1. உலகமயமாக்கலினால் அதிகள வான செல்வம் ஒரு சிலரின் கைகளில் குவியச் செய்துள்ளது.

இதனால் வறிய நாடுகளும் வறிய மக்களும் புறமொதுக்கபடுகின்றனர். வறிய மக்களும் வறியநாடுகளும் மேலும் வீழ்ச்சி யடைய செல்வந்த நாடுகளும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் மேலும் அபிவிருத்திப் பாதையை இட்டுச் செல்கின்ற நிலையே காணப்படுகின்றது. உலகின் பெரும் பணக் காரர்கள் அபிவிருத்தி அடைந்த நாடுகளி லேயே உள்ளனர்.

பண்டங்களின் விலைகள் வீழ்ச்சி அடைந்து வருகின்றமை பிரதான விளை வாகும். இந்நாடுகளில் உற்பத்தி செய்யும் பொருளுக் கான கேள்வி குறைவதனாலும் மேலும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் பதிலீட்டுப் பொருட்களை உற்பத்தி செய்து சந்தைக்கு அனுப்புவதால் தேசிய பொரு ளாதாரம் வீழ்ச்சியடைகின்றது. இதனால் வரவு-செலவு திட்டப்பற்றாக்குறை உள்நாட்டு தேவைக்கு மேலைநாட்டுப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. உ-ம் 1987-1997 காலப்பகுதியில் பொருட்களின் விலை 39% குறைவடைந்தது.

வருமான ஏற்றத்தாழ்வு அதாவது காலம் செல்லச் செல்ல இது அதிகரித்து வருகின்றது. அதாவது LDC க்கும் அபிவிருத்தி அடைந்த நாட்டுக்குமான இடைவெளி அதி கரித்து வருகின்றது செல்வந்தருக்கும் வறியோருக்குமான இடைவெளி 1960 இல் 30:1 என்னும் விகிதம் 1997ல் 70:1 என்னும் நிலை காணப்பட்டது. மேலும் உலக பொரு ளாதாரத்தில் 80% மக்கள் 20% பொருளா தாரத்தை அனுபவிக்கின்றனர்.

குற்றச் செயல்களின் பெருக்கம் அதிகரித்துள்ளது. அதாவது உலகமயமாக் கலைப் பயன்படுத்தி நிதிச் சந்தைகளின் வளர்ச்சி, கறுப்புப் பணம், போதைவஸ்து போன்றவற்றின் பயன்பாடு ஆயுதக்கடத்தல் விபச்சாரத் தொழில், பெண்களைக் கடத்தல் போன்ற பல்வேறு குற்றச் செயல்களின் நடவடிக்கைகள் இதன் மூலம் உருவாகி யுள்ளது. இதுவும் பாரிய விளைவை ஏற்படுத்தி யுள்ளது எனலாம்.

உள்நாட்டு கலாசார சீரழிவுகள் ஏற்பட்டமை ஒவ்வொரு நாட்டினதும் தேசிய கலாசாரம், பண்பாடுகள், மேலை நாட்டு கலாசாரத்தினால் பல்வேறு சீரழிவுகளைச் சந்திக்க வேண்டிய நிலையுள்ளது. விபசாரம், எயிட்ஸ், ஹொலிவூட் படங்கள் போன்ற தாக்கத்தினால் காலங்காலமாகப் பேணி வந்த கலாசாரம் அழிந்து வருகின்றது. சில நாடுகள்

திட்டமிட்ட ரீதியில் கலாசாரத்தையும், பண் பாட்டையும் அழிக்க முயற்சிக்கின்றது. இதனால் அந் நாடுகளில் முரண்பாடுகளும் போரும் வெடித்துள்ளது.

உ-ம்:- USA, ஈராக், ஆப்கானிஸ்தானில் இதனைக் காணலாம்.

உலக மயமாக்கலினால் சூழல் மாச டைவு போன்ற பிரச்சினைகள் எழுந்துள்ளது. அதாவது மீளப்பெற முடியாத வளங்கள் அழிந்து போகின்றன. இரசாயன பீடை கொல்லி களின் அதிகரிப்பு, நகர வளர்ச்சி கைத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி, உல்லாச பயணி களின் வருகை போன்றவற்றினால் நிலம் காற்று சூழல் போன்றன மாசடைகின்றது. கழிவுகளை வெளியேற்றுவது பற்றிய சிக்கல் தற்போது ஏற்பட்டுள்ளது. மேலும் பல்தேசியக் கம்பனிகளின் நோக்கம் லாபம் மட்டுமே ஆகும் இதுவும் பெரிய பிரச்சினையாகும்.

உள்நாட்டு விவசாயம் பாதிப்படைந் துள்ளது. அதாவது LDC நாடுகள் விவசாயப் பொருட்களை இறக்குமதி செய்வதனால் விவசாய செய்கை கைவிடப்படுகின்றது. அத் துடன் கிராமிய விவசாயத்தை மக்களும் ஆட்சியாளரும் புறக்கணிக்கும் நிலையும் உண்டு. மேலும் கிராமத்தை விட்டு நகரப் புறங்களுக்கு மக்கள் தொழில் தேடியும் வசிப் பிடத்திற்காகவும் வருவதனால் விவசாயம் புறக்கணிக்கும் நிலை காணப்படுகின்றது.

வேலையில்லாப் பிரச்சினையை உலக மயமாக்கம் ஏற்படுத்தியுள்ளது. ஏன் எனின் மேலைநாட்டு நிறுவனங்களினால் இயந் திரத்தை அதிகமாகப் பயன்படுத்துவதனாலும் மேலை நாட்டு தொழிற்சாலைகளினால் LDC களின் தொழிற்சாலைகள் மூட வேண்டிய நிலை ஏற்பட்டமையினாலும் பட்டதாரி மாணவர் கள் முதலாகப் பல்வேறு மக்கள் உழைப்பு இன்மையையும், கீழ் உழைப்பையும் அனு பவிக்க வேண்டியுள்ளது. இதனால் அரசுக்கு எதிரான போராட்டங்களும் வன்முறைகளும் ஏற்படுகின்றன.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடு களில் (LDC) தங்கியிருக்கும் நிலை தோன்றி யுள்ளது. இந்நாடுகள் தமது தேவைகளை நிறைவேற்ற மேற்கு நாடுகளை நம்பியிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. உற்பத்தி பொருட்களை இறக்குமதி செய்வதும் கடன்களை எதிர்பார்ப் பதும் இயல்பாகவே வளர்ந்து வருவதைக் காணலாம்.

மனித உரிமைகளை மதிக்காத நிலை மையை ஏற்படுத்தி உள்ளதை காணலாம். சாதாரணமாக இன்று கொலைகள், மிரட்டல், ஆட்கடத்தல், பாலியல் வல்லுறவு, விபச்சாரம் மோசடிகள், சர்வாதிகார ரீதியான ஆட்சி அமைப்பு, பாதுகாப்பு அற்ற தன்மைகள் LDCகளில் ஏற்பட்டு வருகின்றன. அது மட்டு மன்றி திட்டமிட்டு நோய்கள் போராட்டங்களைத் தூண்டும் நடவடிக்கைகளையும் இன்று காண லாம். இவைகள் உலக மயமாக்கத்தினால் ஏற்பட்ட நேரடியான விளைவுகளாக காணப் படுகின்றது.

உள்நாட்டில் இலாபகரமாகச் செயற் படும் நிறுவனங்கள் வெளிநாட்டு நிறுவனங் களால் வழங்கப்படல் அதாவது உள்நாட்டில் அதிகளவான வருமானத்துடன் இயங்கிய நிறு வனங்கள், மேலைநாட்டு நிறுவனங்கள் வருகையுடன் மூடவேண்டியநிலை ஏற்பட்டுள் ளது. ஏன் எனில் மேலைநாட்டு கம்பனிகள் குறைந்த விலையில் பொருட்களை உற்பத்தி செய்ய முடிகின்றமை அத்துடன் கவர்ச்சிகர மான கூலி மேலதிக வசதிகள் வழங்கப்படு கின்றமையால் அவைகளுடன் போட்டியிட முடியாத நிலை ஏற்படுகின்றது.

LDC களில் காணப்படும் அரசுகள் பல்தேசிய நிறுவனங்களின் கைப்பொம்மையாக காணப்படல். அதாவது சில பெரிய பல்தேசிய நிறுவனங்கள் மட்டுமல்ல LMF, IBRD போன்ற வற்றின் செல்வாக்கு காரணமாக அவற்றின் விருப்பத்திற்கு ஏற்ப உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளை LDC அரசுகள் தீர்மானிக்க முடியாத நிலையுள்ளது. பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை இந் நிறுவனங்களே மேற்கொள்

கின்றது. இதனால் தேசிய இறைமை பாதிப் படைந்துள்ளது. மேலும் சில கம்பனிகள் அர சாங்கங்களைக் கூட மாற்றியமைக்கும் நிலை யும் உண்டு.

உ-ம்:- யுனைட்டற் புரூட் கம்பனி இலத்தீன் அமெரிக்காவில் விரும்பாத அரசை கலைத்து விரும்பிய அரசை ஆட்சியிலிருந்து அமர்த்தியது.

மிகப்பெரிய முடிவுகள் மக்களுக்குத் தெரியாத வர்த்தக நிபுணர்களினால் மேற் கொள்ளப்படுகின்றன. அதாவது LDCகளில் தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த முடிவுகள். LIM, IMF, IBRD போன்றன தீர்மானித்து வருகின்றது. மேலும் தமது நலனை அடைவதையே நோக்கமாகக் கொண்டிருப்பதைக் காணலாம் இது சனநாயக் கத்திற்கு சாவுமணியாகவே கருதப்படுகின்றது.

சனநாயகத்தை வர்த்தக உலகம் வழங்கிவிட்டதாக கருதுகின்றனர், அதாவது சமத்துவம் சுதந்திரம் அரசியல் பொருளாதார சமூக சமய மொழி உரிமைகள் மறுக்கப்பட்டு திணிப்பின் பெயரில் சனநாயகம் செயற்படு வதனால் காணலாம்.

நாட்டின் உற்பத்தியின் இயலளவை விட நுகர்வின் தேவை அதிகமாகக் காணப்ப டுகின்றது. அதாவது மொத்த தேசிய உற்பத் தியின் அளவை விட நுகர்வின் கொள்ளளவு உயர்ந்து காணப்படுகின்றது. இது உலக மய மாக்கலின் பாரிய அழிவுநிலை எனக் கருது கின்றனர்.

பாதுகாப்பு இன்மையும் நிச்சயமற்ற தன்மையும் காணப்படுகின்றது அதாவது வருமானத்தில் ஏற்றத்தாழ்வான தன்மை, வருமானம், பாதுகாப்பற்ற தன்மை போன்ற னவும் ஆயுதப் பெருக்கம் போன்றவற்றினால் பாதுகாப்பு அற்ற தன்மை தோன்றியுள்ளது.

இயந்திரப் பாவனையின் அளவு தற் போது அதிகமாகக் காணப்படுவதனால் பல் வேறு சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி யுள்ளது. அதாவது நன்மைகளையும் விட தீமைகளை உயர்வாக காணப்படுகின்றமை.

இவ்வாறாக உலகமயமாக்கம் LDC களில் நன்மைகளை விட தீமைகளே அதிக மாகக் கொண்டுள்ளது. ஆனாலும் இச் செயற் பாட்டினாலும் LDCகள் நினைத்துப் பார்க்க முடியாதளவுக்கு அபிவிருத்தியையும் அடைந் துள்ளது. மேலும் தாராள மயமாக்கலின் உச் சக்கட்டம் உலகமயமாக்கம் எனவும் அல்லது உலகமயமாக்கலின் ஆரம்பக்கட்டமே தாராள மயமாக்கம் எனவும் குறிப்பிடுகின்றனர்.

ஆரம்ப காலங்களில் பொருளாதார நோக்கத்திற்காக திணிக்கப்பட்ட உலகமயமாக் கமானது இன்று பொருளாதாரத்தில் மட்டுமல்ல அரசியல் சமூக, கலாசார, பண்பாட்டு விழுமி யங்கள் போன்ற பல்வேறு அம்சங்களினூடாக LDCகளில் ஏற்படுத்தியதை காணலாம்.

முடிவாக நாம் உலகமயமாக்கம் என் பது பற்றியும், அரசியல், பொருளாதார, சமூக பண்பாட்டின அடிப்படையில் அதன் தலைமை யும் எவ்வழிகளில் உலகமயமாக்கம் ஏற்படுகின் றது எனவும் அதன் வளர்ச்சி நிலைகளையும் அதன் முகவர்கள் பற்றியும் ,உலகமயமாக் கத்தின் நன்மைகள், தீமைகள் போன்ற அடிப்படையில் அவதானிக்க முடிகிறது.

Referance:

1. பொருளியல் நோக்கு ஏப்ரல் - மே 2000- மக்கள் வங்கி வெளியீடு
2. யுனெஸ்கோ கூரியர் - உலகமயமாக்கலின் மறுபக்கம் நவம்பர் - 2000
3. பிரவாகம் N. சண்முகரத்தினம் ஜனவரி யூன் 2002
4. அபிவிருத்தி பொருளியல் - இதழ் 1 2000 யாழ் பல்கலைக்கழக பொருளியல் துறை
5. விருட்சம் இதழ் - 5 2000
6. சமூக ஒளி இதழ் - 6
7. யாழ்ப்பாணம் புவியியலாளர் இதழ் - 9 (1992- 1993)
8. World Development Reports.

எரிமலை பற்றிய சில தகவல்கள்

செல்வன் தே. டிக்சிற் அன்ரனிறாஜ்
தரம் 13 கலைப்பிரிவு

புவியின் உட்பகுதியில் உள்ள கோளவகத்தில் காணப்படும் பாறைக்குழம்பு (மக்மா) ஆனது புவியோட்டின் பலவீனப்பிளவினூடாக வெளியே வேகமாகப் பாயும்போது அவற்றை எரிமலை என்கின்றோம்.

புவி மேற்பரப்பு சிதைந்து செல்வதால் புவியோடு பலவீனம் அடைகிறது. சமுத்திரத் தையடுத்த பகுதிகளில் புவியோடு தடிப்புக் குறைவாக இருப்பதால் அப்பகுதிகளில் எரிமலைக் குகை அதிகமாக தோன்றுகின்றது. எரிமலை வெடிப்பு நிகழும்போது திண்ம, திரவ, வாயுப் பொருட்கள் வெளியேறுகின்றன.

திண்மப் பொருட்கள் - எரிமலைக் குழம்புப் பாறை, தணற்பாறைத் துண்டுகள், சாம்பல்.

திரவப் பொருட்கள் - பாறைக் குழம்பு, வாயு, கந்தகம், ஐதரசன், நீராவி, காபனீரொட்சைட், தூசு.

இன்று உலகில் மூன்று வகை எரிமலைகள் காணப்படுகின்றன

i. உயிர்ப்பு எரிமலை
ii. உறங்கு எரிமலை
iii. அவிந்த எரிமலை

உயிர்ப்பு எரிமலை :-

இன்றும் வெடித்துக் கக்கிக் கொண்டிருக்கின்ற எரிமலை உயிர்ப்பு எரிமலை எனப்படும்.

உறங்கும் எரிமலை :-

இன்று கக்குதலின்றி இருக் கின்றவை உறங்கு எரிமலை எனப்படும்.

அவிந்த எரிமலை :-

வெகு காலத்திற்கு முன் கக்குகைகளை நிகழ்த்தி இப்போது வெகு காலத்திற்கு தொழிற்படாது இருக்கின்ற எரிமலைகளை அவிந்த எரிமலை எனப்படும்.

எரிமலை ஏற்படும் பிரதேசங்களை மூன்று வகையாக பிரிக்கலாம்

i. பசுபிக் வலயம் :-

தென் அமெரிக்காவின் அந்தீஸ் வட ஆசியா கிழக்கு கரையோரத்தின் குறுலித் தீவிற்கும், நியூசிலாந்துக்கும் இடைப்பட்ட பிர தேசத்தினை உள்ளடக்கியதாக காணப்படு கின்றது. இதனை நெருப்பு வலயம் எனவும் அழைக்கப்படுகின்றது.

ii. ஐரோப்பாவும் ஆசியாவும் :-

இந்தோனேசியாவில் இருந்து பர்மா விற்கு ஊடாக எல்பேர்ஸ், கோக்கோஸ் மலைப் பகுதிகளை உள்ளடக்கி மத்திய தரைக்கடலின் மத்திய பகுதிவரை தொடர்ச்சியுற்றுச் செல்கின்றது.

iii. ஆபிரிக்க பள்ளத்தாக்கின் விளிம்புப் பகுதி:-

இது வேடிமுனை, கனாறிகிளி மஞ் சரோ, கென்யா என்பவற்றை உள்ளடக்கி காணப்படுகின்றது.

உலகின் பிரதான எரிமலைகள்

எரிமலைகளின் பெயர்கள்	எரிமலைகளின் உயரம்	எரிமலை காணப்படும் இடங்கள்
ஸ்கார்	5990m	சிலி
கோட்டா பாக்ஸி	5897m	ஈகுவடோர்
கயூச்சி வாஸ் காயா	4750m	ரஸ்யா
கோலிமா	4268m	மெக்சிக்கோ
மௌனலோவா	4170m	காவாய்
கமரூன்	4070m	கமரூன்
∴பயூகோ	3835m	குவாட்டமாலா
எரோபஸ்	3795m	அந்தாட்டிக்கா
நைரோ கொங்கோ	3475m	சயர்
எட்னா	3369m	சிசிலி
லைமா	3121m	சிலி
லிலியாம்னா	3076m	அலாஸ்கா
நாயாமுராகிரா	3056m	சயர்
செயின்ட் கெலன்ட்	2949m	ஐக்கிய அமரிக்கா
வில்லாரிக்கா	2840m	சிலி
ரூயாபிஹி	2291m	நியூஸ்லாந்து
அஸாமா	2530m	ஜப்பான்
நகுறுகோயா	2291m	நியூஸ்லாந்து.

சமூகம் இரண்டு வர்க்கங்களைக் கொண்டது

1. தங்கள் பசிக்கும் மேலாக விருந்துண்பவர்கள்
2. தங்களுக்கு கிடைக்கும் உணவிற்கு மேலாகப் பசித்திருப்பவர்கள்



இலங்கையின் தோற்றம்

செல்வி ஆ. ஜென்சி
தரம் 13 கலைப்பிரிவு

இலங்கையின் தோற்றம் பற்றி பல் வேறு அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். அவர்களில் F.D. அடம்ஸ், D.N. வாடியா, பேராசிரியர் K. குலரத்தினம், வித்தானகே ஆகியோரின் கருத்துக்கள் முக்கியம் பெறுகின்றன.

அடம்ஸ் என்ற அறிஞர் 1929ஆம் ஆண்டளவில் வெளியிட்ட இலங்கையின் தோற்றம் பற்றிய கருத்தானது ''திணிவு மெலுயர்தற் கொள்கை" என்பதாகும். அவரது இக்கருத்தின்படி கோடிக்கணக்கான ஆண்டு களுக்கு முன் கடலிலிருந்து மண் திணி வொன்று உயர்ந்து, நீண்ட காலமாக பல்வேறு பட்ட அரிப்புக்குள்ளாகியது. இந்நிலமே இலங்கையின் மத்திய மலைநாடாகும். அதாவது உயர் ஆறரித்த சமவெளியாகும். சில காலத்தின் பின் மீண்டும் கடலிலிருந்து 4400 அடி உயரத்திற்கு மண்திணிவொன்று உயர்த்தப்பட்டது. இது மத்திய மலை நாட்டைச் சூழ்ந்து காணப்பட்டது. இதுவும் பலவாறு அரிப்புகளுக்குள்ளாகி அண்சமவெளியாக உருவெடுத்தது. இது மத்திய ஆறரித்த சம வெளியாகும். இச்சமவெளி உருவாகிய சில காலங்களின் பின் கடலிலிருந்து 3வது மண்திணிவுயர்ச்சியும் இடம்பெற்றது. இது 1500 அடிவரை உயர்ந்து அரிப்புகளுக்குள்ளாகி கரையோரச் சமவெளியாக உருவெடுத்தது. இது தாழ் ஆறரித்த சமவெளியாகும். 4வது மேலுயர்ச்சியின் போது இலங்கையின் கடற்கீழ் மேட்டுநிலம் அல்லது கண்டமேடை உருவா கியது. இவ்வாறு கடல் மட்டத்திற்கு மேல் 3 ஆறரித்த சமவெளிகளையும் கடல் மட்டத்துக குக் கீழ் ஒரு ஆறரித்த சமவெளியையும் கொண்டமைந்த நிலப்பரப்பே இலங்கையாகும் என விளக்கியுள்ளார்.

இந்தியாவிலிருந்து 1943 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த, இந்திய புவிச்சரிய வியலாளரான D.N. வாடியா என்பவர் இலங் கையின் தோற்றம் பற்றி ஆராய்ந்து ''துண்டம் மேலுயர்தற் கொள்கை"யை வெளியிட்டார். இவர் அடம்ஸ் கூறிய அண்சம வெளிகளையும், குத்துச் சாய்வுகளையும் ஏற்றுக் கொண்டார். ஆனால் அவை உருவாகிய விதத்தில் மாற்றம் இருப்பதாகக் கருதினார். அதாவது வாடியாவின் கருத்துப்படி முதலில் புவியின் துண்டம் ஒன்று அசைவு காரணமாக கடலில் தோன்றியது. (இலங்கையின் பருமனுக்குச் சமமான நிலப் பகுதி) இந்த நிலப்பகுதி நீண்டகாலமாக வெளித்தாக்கத்திற்குட்பட்டு அண்சமவெளியாக மாறியது. சில காலத்தின் பின் இச்சமவெளியின் மத்தியிலிருந்து நிலத்துண்டமொன்று மேலுயர்த் தப்பட்டு பல்வேறுவிதமாக வெளித்தாக்கத்திற் குட்பட்டு நீண்டகாலத்தின் பின் ஒரு அண்சம வெளியாக மாறியது. இவ்வாறு முதன் முறை யாக மேலுயர்த்தப்பட்ட நிலத்துண்டம் கரை யோரச் சமவெளி என்றும் இரண்டாம் முறை யாக மேலுயர்ந்த நிலத்துண்டம் அண்சமவெளி என்றும் மூன்றாம் முறையாக மேலுயர்ந்த நிலத்துண்டம் மத்திய மலைநாடு என்றும் வாடியர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் தோற்றம் பற்றிய வாடியாவின் கருத்து இவ்வாறிருக்க இலங்கைப் பல்கலைக்கழகத்தில் புவியியல் ஆசிரியராக இருந்த பேராசிரியர் K. குலரத்தினம் அவர்கள் இலங்கையின் தோற்றம் பற்றி ''பன்முறைத் துண்டம் மேலுயர்த்தற் கொள்கை''யை வெளியிட்டார். பேராசிரியரது இக்கொள்கைப்படி இலங்கையானது, ஒன்றுக்கொன்று வேறுபட்டு நிலத்துண்டங்கள் உயர்ந்ததால் உருவாகி யுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

'அடம்ஸ்', 'வாடியா' போன்றோர் குறிப்பிட்டது போன்று மூன்று அண்சம வெளிகளும், இரண்டு குத்துச்சாய்வுகளும் இருப்பதாகக் குறிப்பிடுகிறார். இக்கோட்பாட்டை நிரூபிப்பதற்காக குலரத்தினம் அவர்கள் இலங்கையின் மேற்பரப்பிலுள்ள தரைத்தோற்ற வேறுபாடுகளை ஆதாரமாகக் காட்டியுள்ளார்.

இவ்வறிஞர்கள் ஒவ்வொருவரதும் தனிப்பட்ட கருத்துக்கள் இவ்வாறிருக்க இலங்கையின் தோற்றம் பற்றிய பொதுவான கருத்தொன்று காணப்படுகிறது. அதாவது ''கார்போனிபரஸ்'' காலத்து பஞ்சியாக் கண்டத்தின் தென்பாகமான 'கொண்டுவன லாந்தின்' ஒரு பகுதியாக இலங்கை காணப் பட்டதாகவும் பிற்பட்ட 'இயோசின்', 'பிளைத்தோசின்' காலங்களில் தென்பகுதியிலிருந்த ஆபிரிக்காக் கண்டம், அவுஸ்திரேலியாக் கண்டம், இந்திய உபகண்டம் ஆகியன பஞ்சியாக் கண்டத்திலிருந்து பிரிந்து சென்றதாகவும் ஆனால் இந்திய துணைக்கண்டத்தின் ஒரு பகுதியாக இருந்த இலங்கை அதிலிருந்து பிரிந்து செல்ல வில்லை என்றும் பிற்பட்ட 'மயோசின்' காலத்தில் இலங்கை தக்கணத்திலிருந்து சற்று விலகி தனிப்பட்ட அலகாக மாறியதாகவும் இலங்கையின் தோற்றம் பற்றிய பொதுவான கருத்து இருக்கிறது. இக்கருத்தை நிருபிப்பதற்காக அறிஞர்கள் இலங்கைக்கும் ஏனைய நாடுகளிற்கு மிடையில் காணப்படும் தரைத்தோற்றம், கால நிலை, பாறைகள், இயற்கைத் தாவரங்கள் தொடர்பான ஒற்றுமைகளை எடுத்துக் காட்டியுள்ளனர்.

ஆனாலும் இதுவரை இலங்கையின் தோற்றம் பற்றிய மிகவும் சரியான கொள்கை எதுவென்று யாராலும் அறிய முடியவில்லை.

பூகம்பம் எப்படி ஏற்படுகின்றது?

செல்வன் கு. ரமேஸ்குமார்
தரம் 13 கலைப்பிரிவு

கற்பாறைகளும் உலோகங்களும் இணைந்து உருகிய நெருப்புக் கோளமானது குளிர்ந்து அதனுடைய மேற்பாகம் மணற் பரப்புக்களும், சம வெளிகளும், மலைகளும், கடல்களும் சேர்ந்து உருவானதே பூமியாகும். பூமியின் மேற்பாகம் குளிர்ந்து வளமான பகுதியாக மாறியதால் உயிரினங்கள் உயிர்வாழ முடிகின்றது. ஆனால் பூமியின் அடிப்பாகம் இன்னும் கூட குளிராமல் நெருப்புக் குழம்பாகவே உள்ளது. இந்த நெருப்புக் குழம்பு சில நேரங்களில் பூமியின் உட்பாகத்தில் தங்க இடமில்லாது பூமியின் மென்மையான மேற்பரப்புக்களின் மூலம் வெளியேறி விடுகின்றது. அப்போது பூமி அதிர்ச்சி அடைந்து ''கிடுகிடு'' என்று நடுங்கும் இதுவே ''பூகம்பம்'' எனப்படும்.

சில நேரங்களில் பூமிக்குள்ளிருக்கும் நெருப்புக் குழம்பு பூமியின் தடிப்பான மேற் பரப்பினை தாக்கும் போது அப்பரப்பு நெருப்புக் குழம்பு வெளியேற அனுமதிக்காது. இதனால் அப்பரப்பு உயர்ந்து மேடான மலைகளாகின்றன. பூகம்பத்தின் போது வெளிவரும் குழம்பு நாளடைவில் குளிர்ந்து பாறைகளும், மலைகளும் தோன்றும் அவற்றின் இடையே நெருப்புக் குழம்பு வெளிவந்து துவாரம் இருக்கும்.

மீண்டும் ஒருமுறை பூகம்பம் ஏற்படும் போது அத்துவாரத்தின் வழியாக தணலும், பாறைகளும் கக்கப்படும். இதனையே நாம் ''எரிமலை'' என்கின்றோம். இவை ஜப்பான் நாட்டில் அதிகமாக உள்ளன.

கல்விச் சுற்றுலா



ஆரம்ப பிரிவு மாணவர்கள்



மடுத் திருப்பதியில்



கன்னியாவில்



தலதா மாளிகையில்





ஹெரோட்டகல சர்வோதயத்தில் ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் திருக்கோணேஸ்வரத்தில்



நிர்வாகக் குழு - பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
2003/2004



நிர்வாகக் குழு - பழைய மாணவர் சங்கம்
2003/2004



மெமோறியல் மலர் VII குழுவினர்



யாழ். கல்வியற் கல்லூரி பயிற்சி மாணவர்களுடன்
அதிபர். உபஅதிபர், இணை உபஅதிபர்

சமய வாழ்வு

செல்வி ம. சிறிமனோகரி
தரம் 12 கலைப்பிரிவு

''சமயமும் வாழ்வும் இணைந்திட்ட போது தான் உலகம் பிரகாசிக்கின்றது" என்பது ஒரு கவிஞன் கூற்று. உண்மைதான் சமயமும் வாழ்வும் இணைய வேண்டும். அதாவது தசையும் நகமுமாக வேண்டும். அப்போதே வாழ்வில் ஒளி உண்டாகும். மனம் தூய்மை யடையும். நம்பிக்கை உருவாகும். உண்மை கள் புரியும். அதற்காக மூட நம்பிக்கையினுள் மூழ்குமாறு கூறவில்லை. உண்மைகளைக் கண்டு தெளிந்து அதன் வழி நின்று ஒரு ஒழுங்கில் நின்று ஒழுகுதலே வாழ்வு. சமயம் என்னும் போது அது 'வழி' என்று பொருள் படும். 'இறைவனை அடையும் வழி என்று கூறுவர். அறிஞர் இரண்டும் உன்னத வழிகள் என்பர். உண்மையை துலங்கச் செய்யும் பாதைகள் இரண்டும் இணைகின்ற போது உலகம் ஓங்கும்.

சமயம் என்ற ரீதியில் பார்க்கின்ற போது உலகிலே எத்தனையோ வகைச் சமயங்கள் இருக்கின்றன. அவைகளும் பல வேத ஆகமங்களை கொண்டவை ஆயினும் அவை ஒன்றைத்தான் கூறுகின்றன. அதாவது அச்சமயங்கள் இறைவனை அடையும் வழியை கூறுகின்றன. அச் சமயங்கள் இறைவனில் முழு நம்பிக்கை வைத்தல் வேண்டும். அதாவது அவற்றில் பல கிளையாறுகள் உள்ளன. அவையெல்லாம் ஓடியோடி இறுதியில் சங்க மிக்கும் இடம் கடல் ஆகும். அது போன்று தான் இந்த சமயங்களும் பல உள்ளன. ''வாழ்க்கை என்பது வாழ்வதற்கே'' ஆம் வாழ்க்கையை சிலர் சீரழிக்கின்றனர் அதாவது நாங்கள் வெளிச்சத்துக்கு செல்கிறோம் என பூச்சிகள் விளக்கின் நெருப்பில் கருகுவது போல வாழ்கின்றார்கள்.

உண்மையான வாழ்விற்கு உரமிடுவது சமயம் தான். ''யானைக்கு தும்பிக்கை போல மனிதனுக்கு நம்பிக்கைதான். பிறப்புண்டேல் இறப்புண்டு" என்றும் அதாவது ஒளி உண் டெனில் இருளும் உண்டு என்றும் சமயம் கூறி நிலையாமையை அறிவுறுத்தி மக்களை நிலையான காரியம் செய்யத் தூண்டுகிறது. அந்த சமயமும் வாழ்வும் பிரிக்க முடியாதவை.

நீ மனிதர் யாரிடமாவது அன்பு செலுத்தினால்
அதற்காக துன்பப்பட்டே ஆக வேண்டும்

நட்பு

செல்வி ஜெ. சோபனா
தரம் 13 கலைப்பிரிவு

நட்பு என்பது விலைமதிக்க முடியாத ஒன்று. உள்ளங்களின் ஒருமித்த இணைப்பால் உருப்பெறுவதே நட்பு எனவே எம்மோடு பழகுகின்ற எல்லோரையும் நாம் நண்பிகள் என்று எண்ணிவிடக் கூடாது. அப்படி அவர் களை நாம் நண்பிகள் ஆகவும் ஆக்கி விடக்கூடாது.

அவர்களின் குணங்களை நன்றாக ஆராய்ந்து அவர்கள் நட்புக்கு ஏற்றவர்கள் தானா என்பதை தெளிவுபடுத்திக் கொண்ட பிறகே அவர்களுடன் நட்புக் கொள்ள வேண்டும். அவ்வாறன்றி ஆராயாமல் நட்புக் கொண்டால் அந்த நட்பு துயரத்தில் தான் முடியும். அந்தத் துயரமோ மரணத்தைத் தரத் தக்க துயரமாகவும் ஆகிவிடலாம். ஆகவே ஒருவருடன் நட்புக் கொள்ளும் போது அவரைப் பற்றி எல்லா விபரங்களையும் ஆராய்ந்த பிறகே நட்புக் கொள்ள வேண்டும்.

இதனையே வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழி வகுத்த தெய்வப் புலவர் திருவள்ளுவரும் ''ஆய்ந்தாய்ந்து கொள்ளா தான் கேண்மை கடைமுறை தான் சார்ந்துயரம் தரும்" என்று கூறியுள்ளார் நமக்கு நண்பிகளாக இருக்கக் கூடியவர்கள் நாம் தீய வழியில் செல்லும் போது அதிலிருந்து நம்மை விலக்கி, உலக நடைமுறைக்கு ஏற்றபடி புத்தி சொல்லி நல்ல பாதையில் அழைத்துச் செல்பவர்களாய் இருக்க வேண்டும். சிலர் ஆசை காட்டித் தீய வழிகளுக்கு எம்மைத் தூண்டிவிடுவார்கள். அவர்களால் ஏற்படும் துன்பங்களுக்கு அள வில்லை. உலகத்தின் நடைமுறைப் போக்கு களை அறிந்து தீயவைகளை விலக்கி நல்ல பாதையில் நம்மை அழைத்துச் செல்வதற்காக நம்மைக் கண்டிக்கின்ற நண்பிகளும் இருப் பார்கள். அவர்களுடைய செய்கை எமக்கு கோபமூட்டலாம். அவர்கள் எமக்கு வழிகாட்டக் கூடிய நல்ல நண்பிகள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நமக்கு கெடுதல் வரும்போது நம்மைக் கைவிட்டு விடுபவர்களின் நட்பானது நாம் மரணம் அடையும் காலத்தில் கூட நம் முடைய உள்ளத்தைச் சுட்டுக் கொண்டே யிருக்கும். நாம் நன்றாக வாழும் போது நம்மைச் சூழ்ந்து கொண்டும் உறவு கொண் டாடுவார்கள். ஆனால் நமக்கு கஷ்டம் வரும் போது அது பற்றிக் கொஞ்சமும் கவலைப் படாமல் எம்மை விட்டு விலகித் தூர ஓடி விடுவார்கள்.

இப்படிப்பட்டவர்களின் நட்பு தடாகத்தில் நீர் வற்றியவுடன் தடாகத்தை விட்டுப் பறந்து செல்லும் பறவைகளைப் போன்ற இவர்களை எந்தக் காரணத்தைக் கொண்டும் அருகில் வைத்துக் கொள்ளக்கூடாது. ஆபத்துக் காலத்தில் உதவாதவர்களின் நட்பு சாகும்வரை காலத்தில் நினைக்கும் போது கூட துன் பத்தையே தரும். ஒருவரைப் பார்க்கும் போது அவர் நமக்கு நண்பியாகி விடமாட்டார். வாய் சிரிக்கலாம். மனதில் நட்பு இல்லாமலும் இருக்கலாம். ஆகவே சிரித்துப் பேசுகிறவர்கள் எல்லோரும் நண்பிகள் ஆகிவிட மாட்டார்கள்.

''உடுக்கை இழந்தவன் கை போலாங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்ற சான்றோரின் கூற்றுக்கிணங்க நடந்து கொள்வார்கள். உள்ளத்தால் நேசிப்பவளே உண்மையான நண்பியாவாள். அத்தகைய

நண்பிகள் போலியாகப் பழக மாட்டார்கள். ஏமாற்ற மாட்டார்கள் நட்பின் மூலம் நண்பிகளாக காட்டி நண்பிகளைக் கண்ட மாத்திரத்தில் அவர்களுடைய உள்ளம் ஒட்டி உறவாடும். மனதால் நேசிக்கிறவர்கள் அவர்கள். அவர்களுடைய நட்பே உண்மையானதாக இருக்கும். நிலைத்து நீடிக்கும்.

ஆகவே அன்பாய் உள்ளம் கலந்து உறவாடுகின்றவர்களே உண்மையான நண்பிகள் .இதனையே வள்ளுவரும்

''முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு" என்றார்.

அன்பாய் உள்ளங்கலந்து உறவாடுகின்றவர்களே உண்மையான நண்பிகள் என்றார். எண்ணங்கள் இணக்கமாக இருந்தால் நட்பு எந்நிலையிலும் உறுதியாகவே இருக்கும். ஏனெனில் நட்பு என்பது நல்ல உள்ளங்களின் சங்கமமே.

நெப்போலியனின் தாய்ப் பாசம்

செல்வன் நளினிகாந்த் சண்முகலிங்கம்
தரம் 12 கலைப்பிரிவு

18ஆம் நூற்றாண்டிலே ஐரோப்பாக் கண்டத்தை ஆட்டிப்படைத்த மாவீரன் நெப்போலியன்.

ஒரு சமயம் ஆங்கிலேய வீரன் ஒருவன் நெப்போலியனிடம் சிறைப்பட்டான். அவன் ஒரு நாள் சிறையில் இருந்து தப்பி ஓடினான். பின்பு கடற்கரையில் கிடைத்த மரக் கிளையினால் படகு ஒன்றைச் செய்து கடலைக் கடந்து இங்கிலாந்து செல்ல உள்ளம் துடித்தான்.

ஆனால், பிரெஞ்சு வீரர்களிடம் பிடி படவே திட்டம் தோல்விகண்டது. நெப்போலியன் முன்பு ஆங்கிலேய வீரன் நிறுத்தப்பட்டான். நீ படகில் கடலைத் தாண்ட முயற்சித்தது உண்டா?

ஆம் அனுமதி தந்தால் கடல் கடந்து சென்று இறுதிக் காலத்திலாவது வயதுபோன தாயாரை மகிழ்சியோடு வைத்திருப்பேன் என்றான்?

தாய்ப் பாசத்தை அறிந்து மாவீரன் மனம் உருகியது. பிரஞ்சுச் சிறையில் இருந்து தப்பி ஓடிய குற்றத்தை மன்னித்தான்.

பொற்கிளி ஒன்றையும், படகு ஒன்றையும் வழங்கி வயதான தாயரைக் காப்பாற்ற அனுப்பி வைத்தான்.

அன்பு தொடங்குவதும் முடிவதும் பெண்மையில்தான்

- பிரஷனிஸ்-

கல்வியின் உறைவிடங்கள் பெற்றோர், ஆசிரியர்

செல்வி தினேஸ் கௌரி
தரம் 12 கலைப்பிரிவு

''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்ற கூற்றுக்கு இணைவாக இக்கால கட்டத்தில் கல்வி மிகமிக முக்கியமான ஒரு செல்வமாகும். திருவள்ளுவர் கல்விச் செல்வம் அழியாச் செல்வம் என்று தொடக்கத்தில் கூறியுள்ளார். கல்வியின் உறைவிடங்கள் பெற்றோர், ஆசிரியர் என்று கருதும் போது ஒரு குழந்தை பிறந்ததும் முதலில் தன் தாயை பார்க்கின்றது. அக்குழந்தை அழும் குரல் 'அ' என்று ஒலிக்கின்றது. உயிர்களுக்கெல்லாம் முதலெழுத்து 'அ' ஆகும். பின் அது படிப்படியாக வளரும் காலத்தில் தாயானவள் அந்நேரத்தில் ஆசானாக திகழ்கின்றாள். அப் போதே அப்பிள்ளைக்கு ஒவ்வொரு உச்சரிப்பு களுடன் ஒவ்வொரு சொற்களை உணவு போல் ஊட்டுகின்றாள். இந்த உலகத்தில் நாம் எதை வேண்டுமானாலும் பணத்தை கொடுத்து வேண்டலாம். ஆனால் கல்வி என்கின்ற மூன் றெழுத்தையும் விலை கொடுத்து வாங்க முடியாது.

ஒவ்வொரு சமுதாயத்துக்கும் கல்வி இன்றியமையாத கருவி. திருவள்ளுவர் ''கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்து இரண்டு புண் உடையர் கல்லாதவர்" அதாவது கண்ணுடையார் என்று உயர்வாகக் கூறப்படு கின்றவர் கற்றவரே ஆவார். கல்லாதவர் முகத்தில் இரண்டு புண்களை உடையவர் ஆவான் என்று கூறியுள்ளார். பணத்தால் எல்லாவற்றையும் செய்து விட முடியும் என்று நினைப்பவன் அப்பணம் எங்கிருந்து பெறப் படுகின்றது என்று ஒருகணம் சிந்திப் போமானால் கல்வியின் உறைவிடத்தினாலே பெறப்படுகின்றது எனத் தோன்றும். ஆகவே ஆரம்பக் கல்வியை பெறுவதற்கு ஒரு உறை விடம் தேவைப்படுகின்றது. பின் இறுதிக் கல்வியை பாடசாலைக்குச் சென்று ஆசிரியரிட மிருந்து பெற்றுக் கொள்கின்றோம்.

எல்லாப் பிள்ளையும் நல்லவர்களாகும் வல்லவர்களாகும் கல்வியை உரிய முறையில் கற்க வேண்டும் என்பதே ஒவ்வொரு ஆசிரி யரின் எதிர்பார்ப்புக்கள், ஆனால் பெற்றோரின் கருத்தின்படி தன் தன் பிள்ளை நன்றாக படிக்க வேண்டும் என்பதே ஆகும். ஆகவே ஆசிரியர் களை விட பெற்றோரே பிள்ளைகளின் கல்விக்கு உறுதுணையாக விளங்குபவர்கள் என்று கூறுவதில் ஐயமில்லை.

குழந்தைகளை இதயத்தால் கவருங்கள்

பொது அறிவுத் துளிகள்

செல்வி கி. பிரிய அனிதா
தரம் 12 கலைப்பிரிவு

1) இலங்கையின் பழைய விமான நிலையம் எது?
இரத்மலானை.

2) முதலாவது பெண் துணை வேந்தர் யார்?
பேராசிரியர். சாவித்திரி குணசேகர.

3) பறவைகளின் சரணாலயம் எது?
குமண.

4) பாக்கு நீரிணையை முதலில் கடந்தவர் யார்?
மு. நவரத்தினசாமி.

5) கண்டியின் புராதன காலப் பெயர் என்ன?
செங்கடகல.

6) வெடி மருந்தினை கண்டுபிடித்தவர்கள் யார்?
சீனர்.

7) ஐரோப்பாவின் நோயாளியான நாடு எது?
துருக்கி.

8) எழு குன்று நகரம் எது?
ரோம்.

9) இந்தியாவின் வாசல் எது?
பம்பாய்.

10) பொற்கோபுர நாடு எது?
மியன்மர் (பர்மா).

11) பெரிய நூதன சாலை எது?
பிரிட்டன் நூதன சாலை.

12) பூட்டானின் தலைநகரம் எது?
திம்பு.

13) துருக்கி நாட்டின் தேசிய விளையாட்டு யாது?
மல்யுத்தம்.

14) ஆங்கில நகைச்சுவை நடிகர் யார்?
சார்ளி சப்ளின்.

15) பொப்பிசை பாடகர் யார்?
மைக்கல் ஜக்சன்.

மெமோறியல் அன்னையவள் காருண்யம்

செல்வன் பா. சதீஸ்
தரம் 12 கலைப்பிரிவு

பாரினில் நல்ல பக்குவமாய்
பாவ வழிகளை களைந்திங்கு
பண்பில் சிறக்க வைத்திடுமே
பல்கலை ஊட்டும் மெமோறியல்

மெமோறியல் அன்னையவள் பெற்றெடுத்த
மென்மையான மாணவர் நாம்
ஆசான் அனைவரின் கவனிப்புடன்
ஆனந்தமாக கல்வி கற்றிடுவோம்

பூஞ்சோலை அழகுடன் தென்றலும் வீச
பூவை நாடிவரும் தேன் சிட்டுப்போல்
கல்வியை நாடிய அனைவருக்கும்
கலங்கரை விளக்கமாம் மெமோறியல்

மேன்மையான எம்மதிபர் அருணாசலம்
மெமோறியல் அன்னையவள் இங்கிதத்தை
அன்னையை கைவிட்டவர் சிலராகிலும்
அன்னையால் கைவிடப்பட்டவர் இவர் எமக்
அருமையாய் கூறுவது உண்மையுமாகும்.



சமாதான வேற்று

செல்வன் அ. விசித்திரன்
தரம் 11 C

ஒவ்வொரு மனிதனினதும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படும் அன்பு, மன்னிப்பு, புரிந்துணர்வு என்பவற்றின் வெளிப்பாடே சமாதானம் எனலாம். இச் செயற்பாடுகளானது அந்த மனிதனுக்கு ஒரு பூரணத்துவத்தை அளிப்பதோடு அவனது குடும்பம், சமூகம், நகரம், நாடு, சர்வதேசம் என பரந்துபட்டு விருத்தியடைவதற்கு ஊன்றுகோலாகவும் அமைந்து விடுகிறது. ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் அன்பு, மன்னிப்பு, புரிந்துணர்வு என்பன வேரூன்றி பெருவிருட்சமாக வளரு மாயின் அவ்விருட்சத்தின் கனிகளாக சமா தானம் மலரும். இன்று உலகில் சமாதானம் அற்றுப்போய் உலகமே யுத்தத்தால் மூழ்கி கிடப்பதற்கு மனிதனது உள்ளத்தில் இருக்கும் கறைகளே காரணம் என்பதில் ஐயமில்லை.

சமயம், மதம், சட்டம் என்பவற்றிற்கு கட்டுப்பட்டு வாழ்வது சமாதானத்திற்கு உடந் தையளிக்கும் செயல்களாகும். எவ்வாறெனில் எந்த ஒரு சமயமும் சரி மதமும் சரி அன் பையே போதிக்கின்றது கிறிஸ்தவ சமயத்திலே இயேசுநாதர் உன்னைப் போல் உன் அயலா னையும் நேசி என்று கூறியிருக்கின்றார். அதே போல இந்து சமயமும், பௌத்த சமயமும் பிராணிகளை வதைக்காதே என கூறுகின்றது. சமாதானம் பண்ணுகிறவர்கள் பேறுபெற்ற வர்கள் என இயேசுநாதர் கூறுகிறார். எனவே சமய மத கொள்கைகளைப் பின்பற்றி வாழ்தல் சமாதானத்திற்கு உடந்தையளிக்கும் சட்டங் களை பொறுத்தவரை களவு, கொலை, கொள்ளை என்பன சட்டத்தால் கண்டிக்கப் படுகின்றபடியால் சட்டத்தைப் பின்பற்றி வாழ்வதும் மனசாட்சிக்கு பணிந்து வாழ்வதும் சமாதானத்திற்கு உடந்தையளிக்கும்.

இன்று சர்வதேசத்தில் சமாதானத்தை நிறுவுவதற்கு பல்வேறு நிறுவனங்கள் செயற் பட்டுக் கொண்டிருக்கின்றபோதும் ஒரு முழுமை யான சமாதானம் நிலை நாட்டப்படாமைக்கு மனிதனது புரிந்துணர்வின்மை, மன்னிப்பின்மை, அன்பின்மை பழிவாங்கும் மனப்பான்மை போன்றனவையே காரணம் எனலாம். இன்று சர்வதேசத்தில் ஒரு பொது நிறுவனமாக மிளிர்ந்து கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையானது 2ம் உலக மகாயுத்தத்தின் பின்னர் உலகிலே மீண்டும் அவ்வாறு ஒரு யுத்தம் ஏற்படக்கூடாது என்ற மிகப்பெரிய நோக்கத் தோடு ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டுக் கொண்டி ருக்கின்றது. அவ்வாறான நிறுவனத்திற்கும் ஒத்துழையாது ஈராக், அமெரிக்க போர் நடந் துள்ளது என்றால் மனிதனது மனச்சாட்சி எங்கே போய்விட்டது. ஐக்கிய நாடுகள் சபை யால் என்ன செய்ய முடிந்தது. ஆப்கானிஸ் தான் - அமெரிக்க யுத்தம், இந்திய - பாகிஸ் தான் யுத்தம் எனப்பல யுத்தங்கள் நடந் துள்ளது. இதற்கெல்லாம் ஐக்கிய நாடுகள் சபை எங்கே மனிதன் மாறாவிட்டால் சமா தானம் மலராது. இந்நிறுவனங்களெல்லாம் சமாதானத்திற்கான ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ளதே தவிர சமாதானம் என்பது ஒவ்வொரு மனிதனதும் உள்ளத்தில் மலர வேண்டும்.

இன்று உலகில் அனேகமான நாடு களில் துப்பாக்கி ஏந்திய இராணுவ வீரர்கள மலிந்து காணப்படுகின்றனர். சமாதானத்தின் போது துப்பாக்கி தேவையில்லை இவை யெல்லாம் சமாதானத்தின் இடர்பாடுகளாகவே காணப்படுகின்றன. இன்று எமது நாட்டிலே நடைபெற்ற இனப்பிரச்சினைக்கு தற்காலிக

சமாதானம் ஏற்பட்டுள்ளது. நிரந்தர சமாதானம் ஏற்படுவதாயின் அது ஒவ்வொரு மனிதனினதும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்பட வேண்டும். இல்லாவிட்டால் அது வெறும் அர்த்தமற்ற சட்டமாக மாறிவிடும்.

இவ்வாறு சமாதானம் அற்று காணப்படு கின்ற போதும் ஒரு சில மனிதர்களால் சமாதானத்திற்கான முன் ஏற்பாடுகள் ஏற்பட்டு வருகின்றன. பல நிறுவனங்கள் இயங்கியும் வருகின்றன. மனித உரிமை ஆணைக்குழு, ஐக்கியநாடுகள் சபை, சிறுவர் உரிமை ஆணைக்குழு போன்றன செயற்பட்டு வரு கின்றன. சாரணியம் என்ற இயக்கமானது பேடன் பவல் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு இன்று உலகிலே சுடர் விட்டொளிர்கின்றது. யுத்த தளபதியாகிய பேடன் பவல் அவர்கள் யுத்தத்தால் எதையும் சாதிக்க முடியாது என்பதை உணர்ந்து யுத்தத்திற்கு எதிரான இயக்கமாக ஆரம்பிக்கப்பட்ட இயக்கமே சாரணிய இயக்கமாகும்.

இவ்வாறாக சமாதானத்தை முன் னெடுப்பதற்கு பல்வேறு நிறுவனங்கள் சர்வ தேசரீதியாகவும் நாட்டுரீதியாகவும் செயற்படு கின்ற போதும் முழுமையான சமாதானத்தை ஏற்படுத்த முடியாமைக்கு மனிதனது செயற் பாடுகளே காரணம் ஆகும். அன்பு, மன்னிப்பு, புரிந்துணர்வு, மனசாட்சி என்பன ஒவ்வொரு மனிதனது வாழ்விலும் கடைப்பிடிக்கப்படு மாயின் அதுவே சமாதானம் ஆகும்.

காலைக்காட்சி

செல்வன் சி. அல்போன்ஸ்ராஜ்
தரம் 11C

வண்டுகள் வண்ணத் தமிழ் பாட தேனிகள்
ரீங்காரம் செய்ய
காகங்கள் வானில் வட்டமிட
எழுந்தான் அடிவானில் பகலோன்

பூக்கள் ஒன்றுடன் ஒன்று மோதி
தம் பகவான் மகிழ்வால் குதித்தாட
அம்புஜம் அவனைக் கண்டு களித்திடவே
இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே

கதிரவனின் உதயத்தால்
கதிர்களெல்லாம் சிறகடிக்க
பூக்களும் கதிர்களைப் பற்றியது போல
சூரிய காந்தி பூவும் சிரித்ததுவே

நீ இன்றி நானில்லை
நானின்றி நீயும் இல்லை
உந்தனது வரவால் மகிழ்ந்தது
எந்தனது இதயம்

உன்னைக் கண்டதும்
மாணவர்கள் துள்ளி எழுந்தனர்
காலைக் கடனை முடித்தனர்
பாடசாலை விரைந்தனர்

அதிகாலை வெய்யில் உடலில்பட
இதமாக உடலும் இருந்ததுவே
நீல வானில் மேல் எழுந்தான்
சிறகடித்துக் கொண்டு பகலோன்

கட்டட அடிக்கல் நாட்டும் நிகழ்வுகள்





உயர்திரு. வீ இராசையா வ.க.ப. வலிகாமம் - 2002 திரு. க. துரைசிங்கம் ப.மா.ச. பொருளாளர்

புதிய கட்டடத் திறப்பு விழாக்கள்





"காராளசிங்கம்" கட்டடத் திறப்பு விழாவில் வள்ளல் இந்திரன் காராளசிங்கத்துடன் அதிபர்



வலி. வ.க.ப. திரு.வீ.இராசையா, வள்ளல் இந்திரன் காராளசிங்கம் மங்கள விளக்கேற்றுகிறார்கள்

SEMP திட்டத்தில் அமைக்கப்பட்ட கட்புல செவிப்புல சாதன கூடத் திறப்புவிழா நிகழ்வுகள்

கட்புல,செவிப்புல
சாதன கூடம்
AUDIO VISUAL
M



திரு. க.தனபாலசிங்கம் கோ.க.ப. சண்டிலிப்பாய் அவர்களுடன் அதிபர்



திரு. வீ. இராசையா, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் மங்கள விளக்கேற்றுகிறார்.



திருமதி றெ. இருதயநாதன் வலி.வ.க.ப. நாடாவை வெட்டுகிறார்



சண்டிலிப்பாய் கோ.க.ப. திரு. க. தனபாலசிங்கம் தொலைக்காட்சியை இயக்குகிறார்

காலத்தையும் மாற்றலாமே

நன்றி கலைக்கதிர்
செல்வன் ஜெ. வைஷ்ணவி
தரம் 11 C

''காலம் கெட்டுவிட்டது, காலம் கடந்து விட்டது" என நாம் அன்றாடம் காலத்தைப் பற்றி பல கதைகள் பேசுகின்றோம். சரி இந்தக் காலம் என்றால் என்னதான் என சிறிது கூட நாம் ஆராய்ந்து பார்த்ததில்லை. ஆனால் இன்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தலைசிறந்த பௌதீக விஞ்ஞானியும் இருபதாம் நூற்றாண்டின் சிறந்த மனிதனுமான அல்பேட் ஐன்ஸ்டீன் அவர்கள் காலம், இடம் என்பனபற்றி புரட்சிகரமான பல ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார். அவரது சிறப்பு, பொதுச் சார்புத் தத்துவங்கள் பௌதீக விஞ்ஞானத்தின் உயர்படிகள்.

நமது எண்ணப்படி காலம் என்பது இரண்டு தொடர் நிகழ்வுகளுக்கு இடைப்பட்ட இடைவெளி. கடிகார முள் ஒரு துடிப்பை நிகழ்த்தும் போது ஏற்படும் தாமதம், பூமியின் இயக்கத்தின் சிறு பகுதி நிகழ எடுக்கும் தாமதம், சீசியம் அணுவின் இலத்திரன் ஒன்று ஒரு சக்தி மட்டத்தில் இருந்து இன்னொரு சக்தி மட்டத்துக்குத் தாவ எடுக்கும் நேரவிரயம் எனவும் காலத்தை நாம் விவரணப்படுத்திக் கொள்ளலாம். இவை அனைத்தும் காலத்தை அளவு ரீதியாக வரையறுக்கின்றனவே தவிர பண்பு ரீதியாக விளக்கத் தவறிவிட்டன.

இக்கால வானவியல் அறிஞர்கள் காலம் என்பது தொடக்கமும் முடிவும் உள்ள ஒரு கதை போன்றது. எனவும் அதன் தொடக்கம் பெரு வெடிப்புத் தோன்றிய அந்தக் கணம் எனவும், அதன் முடிவு அண்டமெல்லாம் ஒடுங்கிக் கருந்துளையாகப் போகப்போகும் தருணம் எனவும் கூறுகின்றனர். அன்றியும் காலமானது இதுவரை கருதப்பட்டு வந்தது போல ஒரு சாராமாறியன்று. அது பின் நோக்கியும் நகரக் கூடியது எனவும் அவர்கள் சில பரிசோதனைகள் மூலம் நிறுவிக் காட்டி யுள்ளனர். இவர்களுடைய பரிசோதனை களுக்கு உறுதுணையாக இருந்தவர் அல்பேட் ஐன்ஸ்டீன் ஆவார். அவருடைய கண்டு பிடிப்புக்களே இவற்றுக்கு அடிக்கற்கள்.

இவ்வளவிற்கும் காரணமான அம் மேதை பணிபுரிந்த ஆய்வு கூடம் எவ்வளவு வசதியானதாய் இருந்திருக்கும் என நாம் எண்ணிக்கொள்ள முனைவோம். உண்மையில் அவ்வளவுக்கும் அவ்வாய்வு கூடம் அவரது மூளையே. கடற்கரையில் இருந்தவாறு வயலின் மீட்டிக்கொண்டிருந்த அந்த ஒழுங் கற்ற, பயந்த சுபாவம் உள்ள மனிதனது மூளையே ஆய்வு கூடம், கற்பனையே கருவி கள். அதிசயமாக இருக்கின்றதல்லவா?

ஐன்ஸ்டீன் அவர்களது பொதுச் சார்புத் தத்துவம் அதிகமான நிறையீர்ப்பு காலத்தை நீட்டும் எனவும் சிறப்புச் சார்பு தத்துவம் அதிக வேகம் காலத்தை நீடிக்கும் எனவும் கூறு கின்றது.

சிறப்புச் சார்புத் தத்துவத்தின்படி வேக வித்தியாசத்துடன் இயங்கும் இரு தளத்தில் உள்ள காண்போர்களுக்கு பௌதீக கணியங் களும், தத்துவங்களும் வேறுவேறாகத் தோன்றும் என நாம் தீர்மானிக்க முடியும். ஒளியின் வேகத்தில் பயணிக்கும் விண்கலம் ஒன்றில் பூமியில் உள்ளதைக் காட்டிலும் நேரம் மெதுவாகவே நகரும். இதனை மிகச் சிறிய துணிக்கைகளை விரட்டி விஞ்ஞானிகள் சோதித்துப் பார்த்துள்ளனர்.

அடுத்து பொதுச் சார்புத் தத்துவம் நிறையீர்ப்பானது அதிகரிக்கையில் அது சார்ந்த இடமும், காலமும் வளைக்கப்படுகின்றது என கூறுகின்றது. அதாவது நிறையீர்ப்பு புலம் வேறுபடும் இடங்களில் அதன் வேறுபாட்டுக்கு ஏற்றபடி கால வேறுபாடும் காணப்படும். பூமியின் மேற்பரப்பில் உள்ள ஒருவரைவிட அதிக நிறையீர்ப்பு மிக்க கருந்துளைக்குள் அகப்பட்டவர் மெதுவாகவே மூப்படைவர். இந்தக் கருதுகோளைக் கொண்ட பல விசித் திரமான புனைகதைகள் எழுதப்படுகின்றன.

இத் தோற்றப்பாடு நடைமுறையில் நிரூபிக்க முடியாது போனாலும் நிறையீர்ப் பிலான செம் பெயர்சி என்னும் விளைவு கொண்டு மறைமுகமாக நிரூபிக்க முடியாது போனாலும் அதற்கு முன் நாம் அணுக் கடி காரம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். நம் எல்லோருக்கும் தெரிந்த வகையில் இலத் திரன்கள் அணுவின் கருவை சுற்றி வருகின் றன. அவை ஒரு முழுச் சுற்றுசுற்ற எடுக்கும் காலத்தை ஒரு அளவுக் கோலாகக் கொண் டால் அணுவும் ஒருவகைக் கடிகாரமே ஆகும். சரி அது குறிப்பிட்ட காலத்தில் எவ்வளவு வேகமாகச் சுற்றுகின்றது என நாம் எவ்வாறு கண்டு கொள்வது? அதற்கு ஒரு வழியுண்டு. அணுக்கள் வென் சூடான நிலையில் ஒளிகாலுபவை. அவை காலும் ஒளியின் நிறம் அவற்றில் இலத்திரன் அசையும் வேகத்தைப் பொறுத்து மாறுபடும். எனவே, ஒரு அணு வெண் சூடான நிலையில் எமக்கு கடிகாரம் போல் உதவக் கூடியது. அவை காலும் ஒளியே அணுவின் ''கால" நிலையை எமக்குத் தெரிவிக்கும்.

இக்கடிகாரத்தைக் கொண்டு நம் பூமியிலும், அதிக ஈர்ப்புடைய சூரியனிலும் ஒரே தடவையில் காலத்தை அளந்து கொள்ள முடியும். சூரியனது மேற்பரப்பில் ஹீலியம் வாயு வென் சூடான நிலையில் ஒளியை வெளி விட்டவாறு உள்ளது. அவ்வொளியை நாம் நிறமாலைக் காட்டி மூலம் பகுத்தாராய்ந்து பூமியில் ஹீலியம் வாயுவை வென் சூடாக்கி அவதானித்து நிறமாலையுடன் ஒப்பு நோக்க, முந்நயதில் நிறமாலையானது சிவப்பு நிறத்தை அதிகம் கொண்டிருப்பதை அவதானிக்க முடியும். சிவப்பு நிற ஒளியே மீடிறன் (வேகம்) குறைந்த கதிர் எனவே, சூரியனில் காலம் நீண்டிருப்பதை இவ் விளைவு காட்டுகின்றது.

ஆக, காலத்துக்கு காலம் நாம் கருதி வந்ததுபோல் காலம் ஒரு சாராமாறியன்று. அது வேகம், ஈர்ப்பு என்பவற்றை பொறுத்து மாறுபடக் கூடியது. என்பது இப்போது தெளிவாகும்.

துன்பப் பறவை உனது தலைக்கு மேல் பறப்பதனை
உன்னால் தடுக்க முடியாது - ஆனால்
அவை உனது தலையில் கூடு கட்டுவதனை
உன்னால் தடுக்க முடியும்

தாயன்பு செய்

செல்வி சா. நீரோஜனனி
தரம் 11 C

''தாயிற் சிறந்ததொரு கோயிலு மில்லை தந்தை சொல் மிக்க மந்திரமில்லை'' என்ற வள்ளுவப் பெருமானின் வாக்கிற்கிணங்க. உலகிலே தாயின் அன்பு பெரிதும் மேன்மை யாகக் காணப்படுகின்றது. உலகிலே தாய்க்கு ஈடு இணையாக எதுவும் இல்லை. ஒரு தாயா னவள் குழந்தையை சீராகப் பெற்றெடுப்பதற் காக முந்தித்தவமிருந்து முந்நூறு நாள் சுமந்து அந்திபகலாய் வந்தித்து எமை ஈன்றவள் தாய். பத்து மாதங்களாக எதிர்கொண்ட துன்பங்கள் யாவும் ஒரு நொடிப்பொழுதில் அன்பு மழையில் நனைய விட்டவளாக தன் உதிரத்தையே பாலாக்கி அன்பு கலந்து எமக்கு ஊட்டுபவள் தாய் இப்படியாகவே தன் பிள்ளை நாட்டின் நற்பிரஜையாகவும் ஒழுக்க சீலராகவும் வாழ் வதற்கு வழிவகுப்பவள் தாய்.

ஒரு பிள்ளையின் எதிர்காலமானது தாயன்பினிலேயே தங்கியிருக்கின்றது. தன் பிள்ளை கல்வியிலே முன்னேற்றமடைவதற்கு கல்வி என்னும் ஏணியில் படிப்படியாக ஏற்றி வைத்து அழகு காண்கின்றாள். இவ்வாறே தன் அணிகலன்களையும் அணிவித்து அழகு காண்கின்றாள். பிள்ளை தூங்கும் போது எழும் பினால் உடனே துள்ளி எழுந்து பதறி அன் பாலே அரவணைப்பாள். இவ்வாறே எல்லா செயல்களிலும் அன்புடனும், பணிவுடனும காணப்படுவாள். பிள்ளைக்காக இரவு, பகல் பாராது அயராது வேலைகளைச் செய்வாள். பிள்ளை பிறந்தவுடனேயே ''அம்மா'' என்னும் அன்பு வார்த்தையைத் தான் முதலில் பேசும். பிள்ளை பாடசாலைக்குச் செல்ல முன் எழுந்து பாடங்களை சொல்லிக் கொடுத்து தேவையான பொருட்களை கொடுத்து உடை அணிவித்து, உணவு தயாரித்து உண்ணக் கொடுத்து பிள்ளைக்கு எல்லாவற்றையும் சீராக செய்து கொடுத்து அனுப்புவாள். பிள்ளை பாடசாலை விட்டு பாதி வழிக்கு வந்ததும் ஓடிப்போய் அன்பாலே கட்டி அரவணைத்து வீடு சென்று உணவளித்து மகிழ்வாள்.

பிள்ளைக்கு நோய் ஏற்பட்டால் வைத் தியசாலைக்கு கூட்டிச் சென்று மருந்து வாங்கிக் கொடுத்து பிள்ளையின் நோயை மாற்றுவிப்பாள். தன் பிள்ளை நல்லவனாக வாழ வேண்டும் என்று நினைத்து கடவுளை தினமும் பிரார்த்தனை செய்வாள். பிள்ளை இளமைப் பருவத்தை அடைந்ததும் நல்ல அறிவுரைகள் கூறியும் எதுசரி எதுபிழை என்றும் தன் பிள்ளையின் வாழ்க்கைக்காக தினம் தினம் ஏங்கிக் கொண்டிருப்பாள். பிள்ளையை ஒழுங்காக வளர்த்தெடுப்பதில் நல்ல ஆர்வமாக காணப்படுவாள்.

''ஈன்ற பொழுதில் பெரிதுவப்பாள் தன் மகனை சான்றோன் எனக் கேட்ட தாய்'' என்ப தைப் போல. குழந்தை பிறந்தவுடன் உள்ள சந்தோசத்தை விட தன் பிள்ளை சான்றோன் எனக் கேட்டதும் ஆனந்தக் கண்ணீர் சிந்தி மகிழ்ச்சியடைவாள். இவ்வாறாக பிள்ளை ஒழுக்கமாக வளர்ந்து கல்வியை நல்ல முறை யில் கற்று சித்தியடைந்ததும் மகிழ்ச்சியடைவாள்.

தன் பிள்ளை பெரியவனாகி வேலைக்கு செல்லத் தொடங்கியதும். தன் மகனை வாசலில் கொண்டு வந்து விட்டு அவன் சென்று மறையும் வரை பார்த்து இன்புறுவாள். பின்னர் அவன் எப்போது விட்டிற்கு திரும்புவான் என எண்ணி எண்ணி தயங்குவாள் அவன் வந்ததும் முகமலர்ந்து வரவேற்று உணவளிப்பாள். இவ் வாறே தன் பிள்ளைகளின் இன்பங்களில் மகிழ்ந்து, துன்பங்களில் துவண்டும் கொள்ளும் தாய்க்குறிகளின் அன்பு காணப்படுகின்றது.

ஈராறு வீட்டுக் குறிப்புகள்

செல்வன் சி. நிரோசன்
தரம் 11 C

1. சோறு சமைக்கும் போது கூடுதலாக வெந்துவிட்டால் ஒன்றோடு ஒன்று ஒட்டாமலிருக்க எலுமிச்சம்புளி விட்டு வடித்தால் ஒன்றோடு ஒன்று ஒட்டாது.

2. கொய்யா இலையுடன் உப்பு சேர்த்து அவித்து அந்நீரில் வாயை நன்கு கொப்பளித்து வந்தால் பற்சூத்தை ஏற்படாது.

3. தேங்காய் உடைக்கும் போது வரி போல் அமைந்துள்ள இடத்தில் அடித்தால் தேங்காய் இலகுவாக உடையும்.

4. அறுகம் புல்லை அவித்து குடித்து வந்தால் அல்சர் குறையும்.

5. காலையில் எழும்பியதும் வெறும் வயிற்றில் சதைகரச்சான் இலையை அவித்து அரை டம்ளர் குடித்து வர சிறுநீரகத் தொற்று அகலும்.

6. தோசை மா, இட்லி மா, அப்பமா போன்றவை புளிப்படையாவிட்டால் கரைத்த மாவை புதினப்பத்திரிகையால் மூடி பின் மூடியால் மூடி வைக்க அவை புளிப்படையும்.

7. தூதுவளை, துளசி இரண்டையும் இரண்டு மிளகு வைத்து அரைத்து தேனுடன் சாப்பிட்டு வர சளி அகலும்.

8. பிள்ளைக் கற்றாளையை தோல் நீக்கி உள்ளிருப்பதை சிறிது எடுத்து ஏழு நீரில் கழுவி வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர மூலவியாதி நீங்கும்.

9. சிகைக்காயை அரைக்கக் கொடுக்கும் போது கூடுதலான தேசிக் கோதுகளை கலந்து அரைத்து முழுகி வந்தால் தலையில் பேன் வருவதை தடுக்கலாம்.

10. ஒரு இருண்ட பகுதிக்கு சூரிய ஒளிபடும் இடத்தில் முகம் பார்க்கும் கண்ணாடியை வைத்தால் இருண்ட பகுதி ஒளிமயமாகும்.

11. இலை வகைகள் மறுநாள் வரை வாடாதிருக்க அவற்றை நீரில் நனைத்து பானைக்குள் வைத்து மண் தரையில் கவிழ்த்துவிட வேண்டும். மறுநாள் எடுக்கும் போது புதிதாக தோற்றமளிக்கும்.

12. கரட், பீற்றூட், முள்ளங்கி போன்றவற்றை மண்ணில் புதைத்து விட்டால் ஒரு கிழமைக்கு புதிதாக இருக்கும். நீர் கூடுதலாக உள்ள இடத்தில் புதைக்கக் கூடாது.

உங்களுக்குத் தெரியுமா?

செல்வன் பா. சுபாஸ்கரன்
தரம் 11 B

01. யாதும் ஊரே யாவரும் கேளீர் என்று சொன்னவர் - ''**கணியன் பூங்குன்றனர்**''
02. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று சொன்னவர் - ''**திருமூலர்**''
03. வினையே ஆடவர்க்கு உயிரே - ''**இகு குறுந் தொகை**''
04. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்று கூறியவர் ''**மணிமேகலை**''
05. அன்பே சிவம் என்று சொன்னவர் - ''**திருமூலர்**''
06. பெண்மை வாழ்க வென்று கூந்திடுவோம்டா என்று பாடியவர் - ''**பாரதியார்**''
07. தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்று பாடியவர் - ''**நாமக்கல் கவிஞர்**''
08. இப்படை தோற்பின் எப்படை வெல்லும் என்று பாடியவர் ''**மனோன்மணியம் சுந்தரனார்**''
09. ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம் என்று உரைக்கும் நூல் - ''**உலகநீதி**''
10. புதியதோர் உலகு செய்வோம் என்று பாடியவர் - ''**பாரதிதாசன்**''
11. கல்வி கரையிலே கற்பவர் நாள் சில என்றுரைத்த நூல் - ''**நாலடியார்**''
12. ஆருயிர்க்கெல்லாம் அன்பு செயல் வேண்டும் என்று பாடியவர் - ''**வள்ளலார்**''
13. உள்ளம் பெரும் கோயில் ஊனுடம்பு ஆலயம் என்று பாடியவர் - ''**திருமூலர்**''
14. எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே என்று பாடியவர் - ''**தாயுமானவர்**''
15. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள் என்பது - ''**நாமக்கல் கவிஞரின் பாட்ல்**''
16. செய்யும் தொழிலே தெய்வம் அதில் திறமைதான் எமது செல்வம் என்று பாடியவர் - ''**பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்**''
17. பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் என்று பாடியவர் - ''**பாரதியார்**''
18. மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா என்று பாடியவர் - ''**கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**''
19. நாமார்க்கும் குடியல்லோம் யமனை அஞ்சோம் என்று பாடியவர் - ''**திருநாவுக்கரசர்**''
20. மனித சாதியில் துன்பம் யாவும் மனதினால் வரும் நோயடா என்றவர் - ''**கவிஞர் கண்ணதாசன்**''

கண்ணை நம்பாதே...

செல்வன் பா. அஜந்தன்
தரம் 11 II

பார்வை என்பது வெறுமனே விழித் திரையில் உண்டாகும் விம்பம் மாத்திரமல்ல. அது அவ் விம்பத்தை உடனுக்குடன் புரிந்து கொள்வதும் அறிந்து கொள்வதுமாகும். எனவே கண்ணை விட மூளை தான் நிஜமாகக் காட்சியைக் காண்கிறது. அருகு, தூரம், காட்சியின் பின்புலம், பொருளின் நிறம், அதன் அசைவு, பார்ப்பவரின் தலை அசைவு, ஒளி வரும் திசை போன்ற எண்ணற்ற விடயங்களை மூளை சீர் தூக்கிப் பார்த்து அதனை விம்பத்துடன் ஒப்பீடு செய்த பின்னர் இறுதி விளைவே நாம் காணும் காட்சிகள். இவ்வளவு செயற்பாடுகளையும் ஒரு நொடியில் மூளை செய்கின்றது. எனின் அது இதற்கென பல கலப வழிகளை வைத்திருக்க வேண்டும்.

அருகிலிருக்கும் பொருட்கள் பெரிதா னவை. தூரத்தில் இருப்பவையோ சிறிதாக தோன்றுபவை. ஒளி பொருட்களின் மேலிருந்து விழும். (சூரியன், விளக்கு) நிழல்கள் இருட்டா கவே இருக்கும். நிழல்கள் பொருளின் கீழா கவே விழும் போன்ற பல சித்தாந்தங்களை மூளையானது இயல்பாகவே அனுபவ வாயி லாக குழந்தைப் பருவத்திலிருந்து அறிந்து கொள்கின்றது. இதனை ஆழ உழப்பட்ட சுயவிதி எனவும் கூறலாம். அவற்றைக் கொண்டே மூளை தெளிவில்லாத காட்சி களையும் தெளிவாகக் காண்கிறது. இதனா லேயே "பேய்" பற்றி பிழையான தகவல்களை அறிந்து கொண்டவர்க்கு முன்னால் "பேய்" தோன்றுவது போல இருக்கின்றது. உண்மை யில் அவர் முன்னால் தெரிந்த அவ்வுருவம் மூளையின் சிருஷ்டிப்பே ஆகும்.

மிகச் சாதாரணமாக நாம் பார்க்கும் காட்சிகளில் மூளையின் அசாதாரண சாமர்த் தியங்கள் பலவற்றை நாம் காணலாம். குறித்த தூரத்தில் உள்ள பொருளின் விம்பத்தைப் பெற கண்விழையின் வளைவை நொடியில் சீர் செய்வது. இரண்டு கண்களிலும் விழும் விம்பங்களை பொருத்தமாகத் தொகுத்து ஒரே விம்பமாகக் காணச் செய்தல், விழித்திரையில் தோன்றும் இருபரிமாண வடிவங்களை முப்பரிமாணமாக இனம் காண்பது, விழித்திரை யில் குருட்டுத்தனத்தில் விம்பங்களைத் தானாக இட்டு நிரப்புதல், எமது பார்வையில் குறுக்கிடும் மூக்கு, இரத்தக் குழாய்கள் போன்றவற்றை சமார்த்தியமாக நீக்கி விடுவது போன்ற பல செயல்கள் மூளையை சிறப்பான ஒரு படப்பிடிப் பாளனாக்குகிறது.

இப்படியான சிக்கலான செயற்பாடு களை மேற்கொள்ள நமது பார்வைப் புலனா னது விஷேடமாகப் பல வகைகளிலும் சிறத்தல் அடைந்துள்ளது. விழித்திரையில் 150 மில் லியன் அளவில் காணப்படும் கூம்பு, கோல் கலன்கள் உணர்திறன் மிக்க நரம்பு முனை களாகும். மூளையத்தில் (செரிபிரல் கார் டெக்ஸ்) கிட்டத்தட்ட 30% மான பகுதி பார்வை புலனுக்கே ஒதுக்கப்பட்டுள்ளது. இதனுடன் ஒப்பிடும் போது 8% தொடுகை உணர்விற்கும், 3% கேள்வி உணர்விற்குமாக காணப்படு கின்றது. கண் மிகவும் அத்தியாவசியமான புலன் என்றதனாற் தான் அது மூளைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ளதோ!

விழித்திரையின் ஒளி உணர் கலங் களில் காணப்படும் Visual Purple என்னும் பொருள் சூரியஒளி கலங்களில் பட்டதும் புர தமாகவும், விற்றமின் A ஆகவும் பிரிகை அடையும். அப்போது அது சக்தியை அதாவது மின்னை வெளிவிடும். இது ஒளி உணர் கலங் களில் மின்னிரசாயன மாற்றங்களை ஏற்படுத்தி கணத்தாக்கத்தை பார்வை நரம்பு வழியாக

முதலில் ஜெலிகுலேட் திரள் என்னும் மூளையின் பகுதிக்கு எடுத்துச் செல்லும். பின் அக் கணத்தாக்கம் செய்திகளை இனம் பிரிக்கும் தலாமஸிற்கு கடத்தப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து அக் கணத்தாக்கம் மண்டையோட்டின் பின்னுள்ள மூளையத்தின் பகுதியான கார்டெகஸ் vi, vii ஆகிய பகுதி களுக்கு அனுப்பப்பட்டு அங்கு விம்பம் பற்றிய அலகிடற் செய்தியானது அதன் நிறம், பருமன், அசைவு போன்ற பல்வேறு இயல்புகள் ஆராயப் பட்டு படத் தொகுப்பு செய்யப்பட்டு முழுமை யான விம்பமாக மூளை காண்கின்றது.

இப்படியாகப் பெறப்பட்ட முழுமையான விம்பம் அசையும் விம்பம் எனின், அது இன்னொரு தனிப் பிரிவினால் ஆராயப்படும். இப்பகுதியிலுள்ள நியூரோன்கள் தமது செயற்பாட்டை வேகமாக்க சில தேவையற்ற விடையங்களைப் புறக்கணித்து விம்பத்தின் பிரகாச வேறுபாடு, மாறும் விளிம்புகள் என்பவற்றையே கவனிக்கிறது. உதாரணமாக துடுப்பாட்டத்தில் பந்தை எதிர் கொள்பவர் பந்தின் நிறத்தை அந்தக் கணத்தில் உணர மாட்டார். ஆனால் பந்து பயணிக்கும் வேக வேறுபாட்டை இனங்காண பிரகாசத்தையே கவனிப்பார். சேலைக்குப் பொருத்தமான சட்டைத் துணி எடுக்கும் போது நிறமே கவனிக்கப்படும். ஏனையவை உதாசீனப் படுத்தப்படும்.

"ஒரு மனிதன், அவனுக்குப் பின்னால் பஸ் வண்டி அதற்குப் பின்னால் மரம்....." என ஒரு காட்சி அமையுமிடத்து ஒவ்வொரு விம்பத்திலும் நாம் வரையும் படங்களைப் போன்று வெளிக் கோடுகள் இல்லை. ஆனால் நாம் அவற்றை தெளிவாக இனங்காண முடிகின்றது. இதற்கு காரணம் மூளை ஒவ் வொரு விம்பத்தின் எல்லையெனில் காணப் படும் ஒளி, இருட்டு, பரப்பின் நயம் போன்ற வற்றைக் கொண்டு மூளை வெளிக் கோடு களை கற்பனை செய்து விடுகின்றது. இதனை அறிய ஒரு எளிய சோதனை படம் - 1 இல் காணப்படும் சித்திரத்தைப் பார்க்கவும். சிறிது தூரத்திற்குப் பின்னால் அசைக்கவும் THE என்ற எழுத்து முப்பரிமாணமாகத் தெரியும். இங்கு எஞ்சிய வெளிக் கோடுகளைக் கொண்டு மூளை ஏனையவற்றையும் கண்டு விடுகின்றது.



படம் - 1

மூளையின் கற்பனையில் உருவாகும் கற்பனைத் தோற்றம்

நாம் காணும் காட்சி எந்த இடை வெளியும் இன்றி தொடர்ச்சியாகத் தோன்று கின்றது. எனினும் எமது விழித்திரை முழுமை யானதல்ல. பார்வை நரம்புகள் அனைத்தும் ஒன்று சேருமிடமான குருட்டிடத்தின் எவ்வித ஒளி உணர் கலங்களோ இல்லை. எனவே இதன் மேல் விழும் விம்பங்கள் எமக்குப் புலப் படாதவை. இக் குருட்டிடம் கையளவு தூரத்தில் இருக்கும் மென் புலக்காட்சியைக் கொண்டே நிரவி விடுகின்றது. இதனையும் நாம் எளிதாக சோதித்து அறிந்து விடலாம். படம் - 2 ஐ பத்து அங்குலத்துக்கு அப்பால் வைத்து அதன் வலப்பக்கத்தில் உள்ள நட்சத்திரத்தை அவதா னித்தவாறு கண்ணை நோக்கிக் கொண்டு வாருங்கள். ஒரு கட்டத்தில் இடப் பக்கமுள்ள பொட்டு மறைந்து விடும். ஆனால் அதன் பின்புலம் தெளிவாகத் தெரியும். இதற்கு காரணம் அப் பொட்டு குருட்டிடத்தில் தென்பட அதை உணராத நமது மூளை பின்புலக் காட்சியைக் கொண்டு அதன் இடத்தை நிரவி விடுகின்றது.

குருட்டிடத்தை காட்சியால் நிரவும் பகுதியில் நோய் ஏற்படல் "சார்லஸ் போன்னே நோய் குறித்த தொகுப்பு" என அழைக்கப்படும். இந்நோயை உடையவர்க்கு உண்மையில்

இல்லாத காட்சிகள் அவர் விழித்திருக்கும் போதே மூளையின் கற்பனையில் தோன்றும். வைத்தியரைப் பார்க்கும் போது அவரது தலைப்பகுதி நோயாளியின் குருட்டிடத்தில் விம்பமாக விழும்போது மூளை தனது விருப்பப்படி குரங்கினதோ, நாயினதோ அல்லது வேறு மனிதரது தலையையோ இட்டு அவ்விடத்தை நிரவிவிடும். இப்போது நோயாளிக்கு பித்தே பிடித்து விடும் அன்று ஆன்றோர் ''கண்ணை நம்பாதே'' எனக் கூறியதன் அர்த்தம் இப்போது புரிகின்றதா?



படம் - 2

இலங்கை ஓவியர்கள்

செல்வன் சி. மெடிஸ்ரன்
தரம் 11 C

ஸ்ரான்லி அபயசிங்க

இவர் களனி பல்கலைக்கழகத்தில் அழகியல் பிரிவில் கடமை ஆற்றினார். இது மட்டுமன்றி கலா மண்டபத்தில் உபதலை வராகவும் விளங்கினார். இவரால் செய்யப்பட்ட ஓவியங்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் யானை ஊர்வலம் என்னும் ஓவியம் இவரின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது.

திஸ்ஸ ரணசிங்காவின் சிற்பங்கள்

இவர் இங்கிலாந்தில் செல்சிபா, சொசைட்டி ஒப் ஆட்ஸ் என்னும் நிறுவனத்தில் சிற்பக்கலையை பயின்றார். இவருடைய ஆக்கங்கள் ஐரோப்பிய நாடுகளிலும் பிரசித்தி பெற்று வருகின்றது. இலங்கையில் இவருடைய சிறந்த ஆக்கமாக தலைநகரமாகிய கொழும்பில் அமைந்த ஜனாதிபதியின் செயலகத்தின் முன்னால் அமைக்கப்பட்ட முதலாவது பிரதமரான D.S. சேனநாயக்காவின் உலோக நிலை மிகவும் தத்துவமும் நுட்பமும் பொருந்திய வழியில் அமைக்கப்பட்டதாகும்.

L.D.P. மஞ்சு சிறி

சாந்தி நிகேதனத்தில் ஓவியக் கலையை பயின்றார். பழைய சுவரோவியங்களை பிரதி எடுத்ததிலிருந்து கூடிய ஆர்வத்தைக் காட்டினார். புதிய பாராளுமன்றத்தில் காணப்படும் ஓவியங்கள் இவரால் வரையப்பட்டது.

முதலியார் அமர சேர்

இவர் எண்ணை வர்ணத்தைக் கொண்டு நீலவர்ணத்தை கொண்டு ஓவியங்களை ஆக்குவதில் சிறப்புப் பெற்றவர். 1892இல் கொழும்பு கலாபவர்த்தை அமைப்பதற்கு முன்னோடியாக இருந்தார். இவர் ஓவியமாக மட்டுமின்றி சிறந்த மந்திரவாதியாகவும் காணப்பட்டார்.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றுவனாகும்

(பேச்சு வழக்கு நாடகம்)

தமிழ்த்தினப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம்
மாகாண மட்டத்தில் மூன்றாவது இடத்தினையும் பெற்ற ஆக்கம்

செல்வன் கஜேந்திரன்
தரம் 11

பாத்திரங்கள் :- கந்தசாமி, கார்திகேசு, இராமலிங்கம். (எம்.பி)

நேரம் :- காலை ஒன்பது மணியளவு.

இடம் :- யாழ்ப்பாணம், பிள்ளையார் கோவிலடி.

காட்சி - I

(கந்தசாமியும் கார்திகேசுவும் ஏதோ யோசித்தபடி வந்து ஒருவரோடு ஒருவர் மோதுப்படல் பின் இருவரும் கைகளைப் பிடித்து)

கந்தசாமி :- என்ன கார்திகேசு அண்ணை, ஏதோ யோசிச்சுக் கொண்டு வந்தியளோ?

கார்திகேசு :- யோசிக்காம என்னத்தச் செய்யிறது. நேற்றைய செய்தியை நீ கேக்கேல்லையோ!

கந்தசாமி :- ஓ... செ... அதை நான் கேட்டனான்தான். அதனால் தான் ஒண்டுமே செய்யேலாம நிக்கிறேன். எல்லோரையும் இடம் பெயர்ந்து தென் மராட்சிக்கெல்லே போகட்டாம்.

இராமலிங்கம் :- என்ன... இரண்டு பேரும் யோசிக்கிறியள்... கவலைப்படுகிற மாதிரியெல்லோ தெரியுது.

கார்திகேசு :- லிங்கம் அண்ணை, எல்லோரையும் இடம் பெயர்ந்து தென்மராட்சிக்கு செல்ல வேண்டுமென்று சொல்லிவிட்டாங்களாம். ஆமி வரப்போறானாம்.

இராமலிங்கம் :- அதுக்கென்ன... எனக்குத் தென்மராட்சியில ஒரு வீடு இருக்குது தானே. நான் அங்க போய் இருப்பன்.

கந்தசாமி :- அப்ப நாங்கள் எங்க போறது?

இராமலிங்கம் :- எங்கையாவது போங்கோவன் நானென்ன மறிச்சனானே?

கந்தசாமி :- கோபப்படாதேங்க எம்.பி. ஐயா நீங்கள் கனக்க வாகனங்கள் வைச்சிருக்கிறீங்க. அதுதான் ஒண்டில எங்கட சமான்களையும் ஏத்திக் கொண்டு போறதுக்கு... கேட்கிறோம்.

இராமலிங்கம் :- அதென்ன கதை, நான் என்ர மனிசீன்ர, பிள்ளைகளின்ர சாமான்களை யெல்லாம் வைக்கவே அது பத்தாது. நீங்க வேற வழியைப்பாருங்கோ.

(அப்பொழுது ஷெல் விழும் சத்தங்கள் மிகமிக அதிகமாகக் கேட்கத் தொடங்குதல்)

கந்தசாமி :- அது சரி, நாங்க அங்க போயும் எங்கு தங்கிறது.

கார்த்திகேசு :- ''படைச்சவன் படியளப்பான் தானே" நீ ஏன் பயப்பிடுகிறாய். ஆண்டவனை நினைச்சுக் கொண்டு வெளிக்கிடுவோம்.

இராமலிங்கம் :- ஷெல்லும் பக்கத்தில் விழத் தொடங்கிவிட்டது. நானும் வெளிக்கிடப்போறன்

கந்தசாமி :- நாங்களும் வெளிக்கிடுவம்.

(எல்லோரும் மேடையை விட்டு அகலுதல்)

காட்சி - II

பாத்திரங்கள் :- கமலம் (மனைவி), கந்தசாமி, மகன், கார்த்திக்கேசு, மனைவி பாக்கியம், மகன் (2குடும்பம்)

நேரம் :- மாலை 5.00 மணியளவு

இடம் :- சாவகச்சேரி வீதியோரம்

(எல்லோரும் மூட்டை முடிச்சுக்களுடனும் இடம் பெயர்ந்து சாவகச்சேரிக்கு வந்து சேர்தல்)

கமலம் :- அப்பா... இஞ்சருங்கோ.. நாங்கள் எம்.பி. இராமலிங்கம் வீட்டில இடங்கேட்டுப் பார்போமா?

பாக்கியம் :- கேட்டா, அவர் இடம் தருவார். இல்லாட்டி அடுத்த தேர்தலிலே அவரைக் கவனிக்கலாம்.

கந்தசாமி :- அவர் ஒருக்காலும் இடம் தரவே மாட்டார். எனென்டால், யாழ்ப்பாணத்திலேயிருந்து அவற்ற வானில் எங்கள ஏத்திவரவே மாட்டேன் எண்டவர்.

கார்திகேசு :- அதுதானே, அவர்கள் எல்லாம் சுயநல வாதிகள்தான். தேர்தல் நேரத்தில மட்டும் சொந்தம் பந்தம் ஓட்டுப் போடுங்கோ என்டு வந்து நிற்பினம். உவையள யார் நம்புறது.

மகன் :- உவருக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேணும். ஒண்டுமில்லாமல் நடுத் தெருவில நின்றாத்தான் உவருக்கு எங்கட நிலைமையும் சரியாக விளங்கும்.

மகள் :- உவையளைத் திட்டி என்ன பயன். எல்லா மனுசரும் உப்படித்தான். இறைவன் பார்த்துக் கொள்ளட்டும்.

கமலம் :- அது சரி அப்ப நாம எங்கபோய் இருக்கிறது. ஒரு இடமும் இல்லையா?

பாக்கியம் :- உப்பிடிக் கஸ்ரப்படுகின்ற நேரம் அங்கேயே இருந்து செத்துப் போயிடலாம்.

கார்த்திகேசு :- ஒருத்தரும் கவலைப்படாம போய் அகதி முகாமில இருப்பம். அங்கையாவது நிம்மதியாய் இருப்பம்.

கந்தசாமி :- அகதி முகாமிலையும் எவ்வளவு நாளைக் கொண்டு இழுக்க முடியும். அங்கேயும் ஒரே அரியண்டம்தான்.

மகன் :- அப்பா அப்பிடி அங்க ஒரு பிரச்சினையும் இல்லையாம். அங்க நல்ல துப்பரவாம் அதோட சாப்பாடும் எல்லோருக்கும் கொடுக்கினமாம்.

மகள் :- அப்ப என்ன பிரச்சனை. நாம எல்லோரும அங்கு போய் இருந்துவிட்டு பேந்து ஆறுதலா வீட்ட உடன் வீட்டுக்கு போவமென்ன.

(எல்லோரும் அகதி முகாமுக்கு சென்று அங்கே வசித்தல்)

சில நாட்களுக்குப் பின்.

காட்சி - III

பாத்திரங்கள் :- கந்தசாமி, கார்த்திகேசு, மகன், மகள்.

இடம் :- சாவகச்சேரி அகதிமுகாம்.

நேரம் :- காலை எட்டு மணியளவில்.

கந்தசாமி :- கார்த்திகேசு அண்னை, இண்டைக்காம் அரசாங்கத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரணம் வந்திருக்குதாம். அதெல்லாம் எம்.பி. இராமலிங்கம் வீட்டிலதானாம் இருக்குதாம். போய் எடுத்துக் கொண்டு வருவமோ?

கார்த்திகேசு :- என்ன சொல்றா.. கந்தா, நிவாரணம் வந்திட்டுதோ? அப்ப போய் எடுத்துக் கொண்டு வருவமென்ன, ஆனா...

கந்தசாமி :- என்ன? ஆனா...

கார்திகேசு :- இல்லை கந்தா, அந்த எம்.பி. இராமலிங்கத்தான் எல்லாத்தையும் எடுத்துக் காசாக்கிக் போடுவான் போல் கிடக்குது. அதனால எங்களை ஏமாத்திப்போட்டு தாங்கள் எல்லாத்தையும் எடுத்துடுவான்.

மகன் :- என்ன சொல்லுறியள். அவர் அப்படிச் செய்ய ஏலுமோ. நாங்கள் சும்மாவோ? போய் அடிச்சு முறிச்சு போட்டு வருவமென், விடுவமே.

கந்தசாமி :- கோபப்படாதயடா தம்பி. அவங்களுக்கெல்லாம் அரசாங்கச் செல்வாக்கு இருக்கு. அதனால் நாங்கள் ஒண்டுமே செய்ய இயலாது.

மகள் :- கடவுள் ஒருத்தன் இருக்கிறான்தானே. ஏன் கவலைப்பட வேணும், பயப்படாம இருப்பமென்.

மகன் :- சும்மா கடவுள் கடவுள் என்று நம்பி காலத்தைக் கடத்தாத. எங்களுக்குரியதை எப்படியும் நாங்கள் தானே எடுக்கவேணும். மற்றவன் சூறையாட பார்த்துக்கொண்டு நிற்கிறதே.

கார்திகேசு :- ஏன்ரா கோபப்படுறா? கடவுள்ள நம்பிக்கை வைச்சா தான் அவர் நம்மை கைவிடவேமாட்டார்.

கந்தசாமி :- ஏன்ரா கோபப்படுறா? கடவுள்ள நம்பிக்கை வைச்சாத்தான் அவர் நம்மை கைவிடவே மாட்டரர்.

கந்தசாமி :- எதுக்கும் நாங்கள் அவரிட்ட போய் கேட்டுப்பார்ப்பம். தந்தா தரட்டும். இல்லாட்டி விடட்டுமென்.

மகள் :- அப்படியென்ன சாமானுகள் வந்திருக்குது.

கார்திகேசு :- சும்மா உந்த உடுப்புகள், சாப்பாட்டுச் சாமானுகள், சட்டி பானைகள், பாய் உந்தச் சாமானுகள் தான்.

மகன் :- இஞ்ச எங்களுக்கு படுக்கப் பாயில்லாமல் கஸ்ரப்படுகிறம். அந்தப் பாயை வேண்டிவந்தாலாவது வடிவாய்படுத்து நித்திரை கொள்ளலாம்.

மகள் :- அப்பதான் விடிய எழு மணிமட்டும் படுக்கலாம்.

கந்தசாமி :- சும்மா சண்டை பிடிக்காதயுங்கோ. நாங்கள் போய் பார்த்துக் கொண்டு வருவம்.

(இருவரும் சைக்கிளில் இராமலிங்கம் எம்.பி. வீட்டிற்குச் செல்லுதல்)

காட்சி - IV

பாத்திரங்கள் :- இராமலிங்கம், மகன், மனைவி, பொன்னம்மா, கார்த்திகேசு, கந்தசாமி.

இடம் :- இராமலிங்கன் எம்.பி. வீடு.

நேரம் :- காலை பதினொரு மணியளவில்.

இராமலிங்கம் :- என்ன பொன்னம்மா? வந்த நிவாரணச் சாமானுகள் எல்லாம் எங்க?

பொன்னம்மா :- அதெல்லாம் உவையளுக்கு குடுக்கத் தேவையில்லை. ஏனெண்டா இரண்டு பேருக்கு கொஞ்சத்தக் கொடுத்துட்டு நாங்கள் மிச்சத்த வித்துப்போடலாம்.

மகன் :- வந்த உடுப்புக்களில் எனக்களவானதுகளை எனக்கு எடுத்துத்தாங்கோ?

இராமலிங்கம் :- உனக்கு விரும்பின எல்லாத்தையும் நீயே எடு. மிச்சத்த நாங்கள் விப்பம்.

மகன் :- அது சரி அப்பா, எங்கு என்ர மோட்ட சைக்கிள்?

(மகன் தனது மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்படுதல்)

பொன்னம்மா :- அப்பா...' இஞ்சருங்கோ நிவாரணத்துக்கெண்டு யாரும் வந்தால் நான் இல்லையெண்டு சொல்லி அனுப்பிவிடுகிறேன்.

இராமலிங்கம :- அப்படியே செய்வம். அது சரி பொன்னம்மா, ஏதும் பிரச்சினை வந்து பிடிபட்டா என்ன செய்யிறது.

பொன்னம்மா :- நீங்க, பயப்படாதேங்க. இந்தக் காலத்தில் இவ்வளவு சனத்தோட ஆரயெண்டு பிடிப்பினம். நாங்கள் என்ன செய்தாலும் பிரச்சனையில்லை.

பொன்னம்மா :- அது சரி அப்பா... இனியும் நாங்கள் இஞ்சயிருந்து கஸ்டப்பட ஏலாது. கொழும்புப் பக்கம் போய் இருப்பமென்.

இராமலிங்கம் :- அதுக்குத்தான் நானும் யோசிச்சனான். எதுக்கும் கொஞ்சநாள் போக நிலைமை மோசமானால் அங்கபோய் இருக்கிறதுதான் நல்லது.

(அப்பொழுது கந்தசாமியும், கார்த்திகேசுவும் இராமலிங்கம் வீட்டிற்கு வருதல்)

கந்தசாமி :- இராமலிங்கண்ணை !..இராமலிங்கண்ணை...

பொன்னம்மா :- ஆரது கந்தசாமி அண்ணையும், கார்த்திகேசு அண்ணையுமே. என்ன விஷயமாய் வந்தனியள்?

கார்த்திகேசு :- அதொண்டுமில்லை. எங்களுக்கு ஏதோ நிவாரணச் சாமானுகள் வந்ததாம். அதுதான் வேண்டிக்கொண்டு போவமெண்டு வந்தநாங்கள்.

பொன்னம்மா :- (சிரித்துக்கொண்டு) ஆர் சொன்னது அப்படியெண்டு, அது முதலொருக்கா வந்து நாங்க எல்லோருக்கும் குடுத்து விட்டிட்டம். அதுக்குப்பிறகு ஒன்றும் வரவில்லை உங்களுக்கு ஆர் சொன்னது?

கந்தசாமி :- அது நேற்றையான் பேப்பரில்லயெல்லோ வந்தது.

கார்திகேசு :- எங்க? இராமலிங்கண்ணை. அவர் தருவார். நீங்கள் முதல் அவரைக் கூப்பிடுங்கோ.

இராமலிங்கம் :- என்ன வேணும் உங்களுக்கு.

கந்தசாமி :- எங்களுக்கு நிவாரணம் வந்ததாம். அத நீங்கள் எங்களுக்குத் தாங்கோ?

இராமலிங்கம் :- அப்படியொண்டும் வரவில்லையே.

கார்த்திகேசு :- என்ன சுத்திறியளோ. எங்கட சாமான்களை எங்களுக்குத் தாறதுக்கு உமக்கென்ன பஞ்சி.

இராமலிங்கம :- அப்படி இஞ்சயொண்டும் இல்லை. கெதியா வெளியால போங்கோ.

கந்தசாமி :- இப்படி ஏழையளுக்கு வந்த சாமான்களை நீங்கள் சூறையாடுகிறியளே. கடவுள் உங்களை தண்டிக்காம விடவே மாட்டார்.

கார்திகேசு :- இதுகளோட பேசிப் பயனில்லை. நாங்கள் வீட்ட போவம். வா.. நான் அப்பவே சொன்னனானெல்லே. உதுகள் கள்ளப் பரம்பரையள்.

(இருவரும் முணுமுணுத்தபடி தங்கள் வீட்டுக்குத் திரும்புகின்றனர்.)

காட்சி - V

பாத்திரங்கள் :- பொன்னம்மா, மகன், இராமலிங்கம்.

இடம் :- சாவகச்சேரி.

நேரம் :- காலை.

பொன்னம்மா :- அப்பா... இஞ்சே. காலமை இப்பவே போய் பிளேன் ரிக்கற்றுக்கு பதிஞ்சு போட்டு வாங்கோ. நாங்கள் கொழும்பில போய் இருப்பம்.

மகன் :- அப்பாவும் நானும் மோட்டார் சைக்கிளில் போய் எடுத்துக்கொண்டு வாறம்.

இராமலிங்கம் :- சரிசரி எங்கட வான் நிக்குது தானே. அதில் ஏறு நானும் நீயும் போய் எடுத்துக்கொண்டு வருவோம்.

பொன்னம்மா :- போய் வெற்றியோட ரிக்கற் எடுத்துக் கொண்டு வரவேணும் என்ன.

மகன் :- ஓமம்மா. நாங்கள் எடுத்துக் கொண்டே வருவம்.

(இருவரும் வானில் ஏறி ரிக்கற் எடுக்கப் புறப்படுகின்றனர்)

(நேரம் செல்கின்றது. நெடு நேரமாகியும் சென்ற இருவரையும் காணவில்லை)

பொன்னம்மா :- என்னடா இது சோதனை. போன இரண்டு பேரையும் கன நேரமாய் காணவில்லை. ஷெல் வேற வந்து விழுந்து ஆக்களைச் சாகடிக்குது.

எனக் கெண்டாய்ப் பயமாய் இருக்குது. இந்த நேரத்தில் எனக்கு இனி ஆர்தான் உதவி செய்வினமோ? கடவுள் தான் எங்கட அக்கிரமங்கள் எல்லாத்தையும் மன்னிச்சு எங்களக் காப்பாத்தணும்.

ஒருவன் :- (வேகமாக ஓடிவந்து) அம்மா, வானுக்கு மேல ஷெல் விழுந்து இரண்டு பேர் செத்துப்போய் இருக்கினமாம். ஒருக்கா உங்கட ஆக்களோ எண்டு வந்து பாருங்கோ.

(பொன்னம்மா கதறிக் கொண்டு அவனுக்குப் பின்னால் ஓடுதல்)

(தெருவோரத்தில் வான் நெளிந்து சிதறிக் கிடத்தல். அருகே இராமலிங்கமும், மகனும் இறந்து கிடத்தல்)

(சனமெல்லாம் கூடிவருதல் கந்தசாமி, கார்த்திகேசு குடும்பங்களும் வருதல்)

பொன்னம்மா :- இனி எனக்கு யார்தான் துணையோ. ரிக்கற் எடுக்கப்போய் இரண்டு பேரும் என்ன விட்டிட்டுப் போட்டியளே. நான் இனி என்ன செய்யிறது.

கமலம் :- கவலைப்படாதீங்க, பொன்னம்மா. நீங்கள் எங்களோட வந்து இருங்கோ. செத்தவ இனி திரும்பி வராயினம்.

பாக்கியம் :- அது சரிதான், நீங்க கவலையை விட்டிட்டு செய்ய வேண்டியதை எல்லாரும் சேர்ந்து செய்துவிட்டு சந்தோசமாய் ஒண்டா இருப்பம்.

பொன்னம்மா :- நாங்கள் செய்த அக்கிரமங்களுக்கு இறைவன் எங்களைத் தண்டிச்சுட்டார்.

மகள் :- கடவுள் ஒருத்தரையும் சும்மா விடுவதில்லை. எல்லாருக்கும் நல்ல தண்டனை கொடுப்பான். பிறரை ஏமாத்தி வாழக் கூடாது.

கமலம் :- சும்மா இரு பிள்ள அவ எவ்வளவு வேதனையோட இருக்கிறா தெரியுமே.

(அனைவரும் எழுந்து ஒன்றாய் நிற்கும் போது பின்வரும் பாடல் ஒலிக்கு திரை மூடுகிறது.)

அன்பே இறைவன் என்று நீ அறிவாய்
அன்பாய் எல்லோருடனும் பழகி நீ வாழ்வாய்
அப்போ சுகமாய் நீ வாழ
இறைவன் உனக்கு வழி தருவார்.

ஒடுக்குமுறைக்கு எதிராக மௌனமாக இருக்கும் மனிதன்
அனைத்து அம்சங்களிலிருந்தும் இறந்து விடுகின்றான்

தித்திக்கும் திருவாசகம்

செல்வி நா. கௌசல்யா
தரம் 11 C

திருவாசகம் வாசிக்கும் நெஞ்சங் களை உருக்கும் பேறுபெற்றது. இதன் காரணம் பற்றியே எம்மிடையே ''திரு வாசகத்திற்கு உருகாதோர், ஒரு வாசகத் திற்கும் உருகார்" என்ற மூதுரை தோன்றி யுள்ளது. தமிழிற்கு அமுதாக விளங்கும் திருவாசகம் பசவையர் என்ற கிறிஸ்தவப் பாதிரியாரையே நொக்கு உருகச் செய்த தாகும். தமிழே கற்றியாத தேவர்களிற்கு தமிழைக் கற்பிக்க விரும்பிய இறைவன் ''செந்தமிழ்க் கன்பு மிக்கார் சென்று நம் மன்றில் எய்தி அந்தரத்தவரை மால் அயன் நன்குணந்தவனை அடிமை பூண்டு நயந்தவன் பாடல் கேண்மின்" என்று தாம் எழுதிய கைப்பிரதியை தேவர்கள் முன் சமர்ப்பித்தார் என திருவாதவூரர் புராணம் கூறுகின்றது. இது மணிவாசகத்தின் வாக்கின் விளப்பத்தை எடுத் துக் காட்டுகின்றது. ''கடையூழி வருந் தனிமை கழிக்கவன்றோ உடையார் உன் வாசகத்தின் ஒரு பிரதி கருதினதே" என இக்கால அறிஞர் கள் கூறுவது ''பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக" எனக் கேட்டு திருவாசகத்தை இறைவன் தம் கைப்பட எழுதியதின் காரணத் தைக் கூறுகின்றது.

இத்தன்மைகளைப் பெற்ற திருவாசகம் எம் வாழ்வுக்கு வழிகாட்டும் அரும் பெரும் கருத்துக்களைக் கொண்டமைந்தது. அன்று பெருகிய வைகை ஆற்றினை அடக்கியது. இன்று எம் அறியாமைப் பெருக்கை வற்ற வைக்க வல்லது.

தாயினைப் பாடாத கவிஞன் இல்லை. நாம் எமது தந்தையிடம் சாதிப்பதை விட தாயிடம் அதிகமாக சாதிக்க முடியும். எனவே தான் எந்தவொரு உயிரும் தாயினைத் தெய்வ மாகப் போற்றுகின்றது. அதுபோலவே அன்பால் அரவணைத்த இறைவன் மாணிக்கவாச கருக்கு தாயினை ஞாபகம் ஊட்டுகின்றார். ஆனால் மாணிக்கவாசகருடைய உள்ளமோ பிள்ளை அழுததும் குறிப்பறிந்து பாலூட்டும் தாயினை விட இறைவனை மேலான பொருளாக எண்ணுகின்றது. அதனாலேயே அவர் ''தாயிற் சிறந்த தயவான தத்துவன் என்றார். மேலும் அவர் ''தாயேயாகி வளர்த் தனை போற்றி" என்றும் ''தாயுற்று வந்தெனை ஆண்டு கொண்டதன் கருணை" என்றும் ''செய் பணிகள் கொண்டருளும் தாயான ஈசற்கே" என்றும் ''தாயிற் பெரிதும் தயவுடைய பெருமான்"என்றும் தாயே என்று தாளடைந் தேன்" என்றும் தாயினைப் போற்றுவதை நாம் அவதானிக்க முடியும்.

மாணிக்கவாசகருடைய பக்தி வைராக் கியம் மிக வன்மை மிக்கது. தமக்குப் பல துன்பங்கள் நேர்ந்த பொழுதும் அவற்றை இறை செயலாகப் போற்றிப் புகழ்ந்தார். என்றா லும் அவர் அத்துன்பங்களை இறுதியில் பொறுக்க முடியாது போகவே சிறிது கோபமாக ''நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகம்" என இறைவனைக் கேட் கின்றார். அந்த அளவுக்கு மாணிக்கவாச கருடைய அன்பின் நேர்மை உயர்ந்த தன்மை யாகக் காணப்படுகின்றது. என்றாலும் அவர் ''அம்மை நீ, அப்பன் நீ" என்று ஊர் வேண்டாம் பேர் வேண்டாம் அவனே கதி என இறைவனை அடைந்தவரல்லவா இறைவனைப் பகைக்கலாமா? இல்லை. உடனே தமது துன்பத்தைக் கனிவாக எடுத்துக் கூறுகின்றார்.

''யாரோடு நோகேன் யார்க் கெடுத் துரைப்பேன் ஆண்ட நின் அருள் இல்லை யானால்" என்கிறார். இது நமதெண்ணத்தில் ஆண்மகன் மீது ஊடல் கொண்டு பின் அது தணிய கூடுவதை ஞாபகப்படுத்துகின்றது. ஆக, மணிவாசகருடைய இறைபக்தி மானிடக் காதலை கடந்த காதலாகும்.

அரியதற்கரிதான இம்மானிட உடல் மகத்தான உறுப்புக்களையும் பொறிகளையும் உடையது. அதனைப் பலரும் பல முறைகளில் உபயோகித்து நன்மைகளையோ, தீமை களையோ ஆற்றுகின்றனர். அவற்றுள் நாவா னது அடக்கம் இன்றி இருக்குமானால் அதுபல துன்பங்களைச் செய்யவல்லது. எம் உறுப்புக் களை இறை பணியில் ஈடபட வைத்து பேரின்பம் பெறுவதை விடுத்து சிற்றின்பத்தை நோக்காகக் கொண்டு அவற்றைச் சிதைக் கலாமா மணிவாசகரும் தம் உறுப்புக்களையும் புலன்களையும் கட்டுப்படுத்தி அவற்றை இறை பணியில் இலயிக்கச் செய்ததன் காரண மாகவே அவர் மணிவாசகன் ஆனார். அதனை அவர்

''வணங்கத் தலை வைத்து வார் கடில்
வாய் வாடித்து வைத்து
இணங்கத் தன் அடியார் கூட்டம்
வைத்து எம்பெருமான்
அணங் கோடு அணிதில்லை ஆடுகின்ற"

- இறைவனைப் பூக் கொண்டு துதிப் போம் என்கிறார்.

ஒழுக்கமே எவர்க்கும் உயரிய இடத்தை கொடுக்க வல்லது. மணிவாசகரும் ஒழுக்கத் தைப் பொன்போல போற்றுகின்றார். - தாம் போக வாழ்வை விரும்பி தேவ வாழ்வை இழந் தமை பற்றி வருந்துகின்றார். ஒழுக்கப் பிறழ் வால் ஏற்பட்ட துன்பங்களை எண்ணும் போது அவர் வருந்துவதை

''நெறியல்லா நெறி தன்னை நெறியாக
நினைவோனை
சிறுநெறி சேராமே திருவருளே சேரும்
வண்ணம்
குறியொன்றுமில்லா கூத்தன்
தன் கூத்தை எனக்கு
அறியும் வண்ணம் அருளிய வாறு ஆர்
பெறுவார் அச்சோவே என்கின்றார்.

ஒரு கணவனது குறையை அவனது மனைவியே நன்றாக அறிவார். அது போல இறைவனது பலவீனத்தை தன்னைக் காதலி யாகவும், இறைவனைக் காதலனாகவும் கொண்ட மணிவாசகரே நன்றாக அறிவர். அதனைத் தம் பாடல்களிற் குறிப்பிட்டுள்ளார். ''அன்றே எந்தன் ஆவியும், உடலும், உடமை யெல்லாம் குன்றே அணையாய் யெனை ஆட் கொண்டபோதே கொண்டிலையோ" எனத் தம்மை இறைவன் ஆட்கொண்டு விட்டதைக் கூறுகின்றார். உடனே அவர் மனம் என்னை அவன் ஆட்கொண்டதால் என்ன பயன் பெற் றார்? பிட்டுக்காய் மண் சுமந்து பின் புண் சுமந்தார். ஆனால் நான் அவரைப் பெற்றத னால் அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற் றேனே. ஆக, என்னிடம் இறைவன் ஏமாளியாய் இருக்கின்றார் என எண்ணுகின்றது. அடுத்த கணம் ''தந்தது என்தன்னை கொண்டது உன் தன்னைச் சங்கரா யார் கொல் சதுரர்கள்?" எனப்பாடுகின்றார். என்ன புரிந்துணர்வு!

எனவே நாம் இவ்வரிய வாசகத்தை என்றும் பூசனை விடாது செய்து தொழுகை தலைமேல் ஏறத்துளும்பு கண்ணீருள் மூழ்கி அழுதபடி ஐயன் அடியினை அடைவோமாக!

பெண் இல்லாத வீட்டிற்கும்,
வீரு இல்லாத பெண்ணிற்கும் சிறப்பு ஏற்படாது

-கார்லி-



மாதா பீதா குரு தெய்வ வழிபாடு
ஆசி வழங்குவோர்



மாதா பீதா குரு தெய்வ வழிபாடு
ஆசி பெறுவோர்

மெமோரியல் சேவைக் கழகம்
2001 / 2002



"என்னை நானாக வாழவிடுங்கள்"
பாலர் நிகழ்வு 2003



நூலகக் கண்காட்சியை
கலாநிதி க. குணராசா
ஆரம்பித்து வைக்கின்றார்
அருகில் எழுத்தாளர் "புத்தொளி"



புத்தகக் கண்காட்சியில்
விருந்தினர்களுடன் அதிபர்



சேவைநலம் பாராட்டு விழாவில் ஓய்வு பெற்ற ஆசிரியர்
திரு. சி. இராசரத்தினம் தம்பதிகள்



பரிசு பெறும் சிரேஷ்ட மாணவர் தலைவன்
செல்வன் தி. விஜிஜேந்திரன்

தெரிந்து கொள்ளுங்கள்

உடற்கல்வி மாணவர்கள்

தரம் 11 A,B,C

1. எமது உடலில் காணப்படும் தசைகள் எத்தனை? **656**
2. ஒருதடவை காலடி எடுத்து வைக்கும்போது ஏறத்தாழ எத்தனை தசைகள் தொழிற்படுகின்றன? **200**
3. எமது புலன் நரம்புத் தொகுதியின் பிரதான அலகு எது? **மூளை**
4. பிரதான போசனைக் கூறுகள் எவை? **காபோவைதரேற்று, புரதம், கொழுப்பும் எண்ணெயும்.**
5. A,B,C செயற்பாடு என்றால் என்ன?
   - **A - Air way** - **மூச்சுப்பாதை**
   - **B - Breathing** - **சுவாசம்**
   - **C - Circulation** - **குருதிச் சுற்றோட்டம்**
6. HIV என்பதன் விரிந்த பதம் யாது? **HUMAN IMMUNE DEFICIENCY VIRUS**
7. உடலுக்கு கட்டாயமாகத் தேவைப்படும் அமினோ அமிலங்கள் எத்தனை? **9**
8. பெண் பிள்ளைகள் எவ்வயதில் துரித வளர்ச்சியேற்றத்தை காட்டுவர்? **11-12 வரை**
9. ஆண்பிள்ளைகளின் வளர்ச்சி ஏற்றம் எவ்வயதில் ஆரம்பிக்கும்? **14 வயதில்**
10. எமது நாட்டில் பிறக்கும் குழந்தைகளின் சராசரி எடையாது? **2.5 Kg**
11. சிறுநீரில் காணப்படும் நீரின் அளவு யாது? **96%**
12. சராசரியாக நாளொன்றுக்கு எமது உடலிருந்து வெளியேறும் நீரின் அளவு யாது? **2-3 லீற்றர்**
13. ஒரு நாளில் ஏறத்தாழ எமது தலையிலிருந்து உதிரும் மயிர்கள் எத்தனை? **40 - 60**
14. சட்டவேலி ஒன்றின் நிறை யாது? **10 Kg**
15. 15 வயது ஆண் / பெண் இருபாலாருக்குமான பரிதி வட்டத்தின் நிறை யாது? **4 Kg**
16. 15,17,19, 21 வயதின் கீழ் பெண்களுக்கான பரிதி வட்டத்தின் நிறை யாது? **1Kg**
17. 15, 17 வயதின் கீழ் ஆண்களுக்கான பரிதி வட்டத்தின் நிறை யாது? **1Kg**
18. 19 வயதின் கீழ் ஆண்களுக்கான பரிதி வட்டத்தின் நிறை யாது? **1.5 Kg**
19. 21 வயதின் கீழ் ஆண்களுக்கான பரிதி வட்டத்தின் நிறை யாது? **2 Kg**
20. 17 வயதின் கீழ் ஆண்களுக்கான போடு குண்டின் நிறை யாது? **4.53 Kg**
21. 19 வயதின் கீழ் ஆண்களுக்கான போடு குண்டின் நிறை யாது? **5.43 Kg**
22. 21 வயதின் கீழ் ஆண்களுக்கான போடு குண்டின் நிறை யாது? **7.260 Kg**
23. கோலூன்றிப் பாய்தல் குறுக்குச் சட்ட நிறை யாது? **2.25 Kg**
24. உயரம் பாய்தல் குறுக்குச் சட்ட நிறை யாது? **2 Kg**
25. 15, 17, 19, 21 வயதின் கீழ் பெண்களுக்கான ஈட்டியின் நிறை யாது? **600g**
26. 15, 17 வயதின் கீழ் ஆண்களுக்கான ஈட்டியின் நிறை யாது? **600g**
27. 19, 21 வயதின் கீழ் ஆண்களுக்கான ஈட்டியின் நிறை யாது? **800g**
28. இலங்கைச் சந்தையிலுள்ள பொருட்களுக்கு அரசினால் வழங்கப்படும் தரக்குறியீடு யாது? **S.L.S**
29. வெப்பத்தை கட்டுப்படுத்தும் மூளையின் பகுதி எது? **பரிவகக்கீழ்**
30. விளையாட்டு வீரனின் அன்றாட உணவில் எவ்வளவு மாப்பொருள் இருத்தல் வேண்டும்? **50g - 60g வரை**

திருட்டுப் போன கத்தரிக்காய்

(சிறுகதை)

செல்வி மு. சுபத்திரா
தரம் 11^{c}

ஒரு முறை கிருஸ்ண தேவராயரின் அரண் மனைத் தோட்டத்தில் கத்தரிக்காய் நாற்றுக் களை நட்டு வளத்தார்கள். அந்தச் செடியும் செழிப்பாக வளர்ந்தது. கத்தரிக்காய் காய்க்க ஆரம்பித்தது. அந்தக் கத்தரிக்காய்களை உபயோகித்து கறி செய்து அரசருக்கு பரி மாறினர். அந்தக் கறி மிகவும் ருசியாக இருந் தது. ''அரசர் கத்தரிக்காய் எங்கே வாங்கப் பட்டது'' என வினாவினார். அதற்கு பணியா ளர்கள் ''அவை அரண்மனைத் தோட்டத்தில் விளைந்தவை'' எனச் சொன்னார்கள்.

''இந்தக் கத்தரிக்காய் மிகவும் பிரமாதமாக இருக்கிறது. எனவே, இதையாரும் பறிக்காதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். மீறியாராவது பறித்தால் ' அவர்களுக்கு கடுமையான தண்டனை கிடைக்கும்'' என்று மன்னர் கட்டளையிட்டார் அரசரின் இந்த ஆணை அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது.

பிறகு ஒரு நாள் கிருஸ்ண தேவராயர் தெனாலிராமனை தன்னுடன் சாப்பிட அழைத் தார். அன்று உணவில் கத்தரிக்காய் பரிமாறப் பட்டது. தெனாலிராமன் அதைச் சாப்பிட்டுவிட்டு புகழ்ந்தான். அரசர் அந்தக் கத்தரிக்காய்களை அரண்மனைத் தோட்டத்தில் விளைந்தவை என்று சொன்னார்.

அன்று இரவு வீடு திரும்பிய தெனாலி ராமன் கத்தரிக்காய் சுவையைப் பற்றி தன் மனைவியிடம் புகழ்ந்து சொன்னான். ''இன் றைக்கு அரண்மனையிலே கத்தரிக்காய் கறி சாப்பிட்டேன். இது வரைக்கும் அந்த மாதிரி ஒரு கத்தரிக்காயை நான் சாப்பிட்டதேயில்லே தெரியுமா? பிரமாதம் இப்ப கூட அந்த ருசி என் நாக்கிலேயே இருக்கு'' இதைக் கேட்ட தெனாலிராமன் மனைவி கோபித்துக் கொண்டாள்.

''நீங்க மட்டும் சாப்பிட்டுட்டு வந்திட்டீங் களா? எனக்கு கொஞ்சம் எடுத்து வந்திருக்கக் கூடாதா. ''அரசரோட நான் உட்கார்ந்து சாப் பிடறதே பெரிய விஷயம். கத்தரிக்காய் கறியை கேட்டு வாங்கிட்டு வர முடியுமா? ''அதெல்லாம் எனக்குத் தெரியாதுங்க அந்தக் கத்தரிக்காயை நீங்க எனக்கு இன்னைக்கே கொஞ்சம் பறிச் சிட்டு வந்து தந்தேயாகணும். மனைவி தெனா லிராமனிடம் தீர்மானமாய்ச் சொல்லிவிட்டார்.

அன்று மாலை சற்று இருட்டியதும் தெனாலிராமன் தோட்டத்திற்கு போய் யாருக் கும் தெரியாமல் கொஞ்சம் கத்தரிக்காய்களை பறித்து தனது தலைப்பாகைக்குள் மறைத்து வைத்துக் கொண்டான். அதை வீட்டிற்கு கொண்டு வந்து தன் மனைவியிடம் கொடுத் தான். அன்று இரவு அவன் மனைவி அதை சமைத்தாள். வாசனை மூக்கைத் துளைத்தது. இருவரும் ருசித்துச் சாப்பிட்டார்கள்.

அவர்களின் மகன் தூங்கிக் கொண்டி ருந்தான். ''என்னங்க நம்ம பையனை விட்டிட்டு சாப்பிடுறோமே? அவனுக்கும் கொஞ்சம் தரலாங்க'' வேறவம்பே வேணாம். அவன் காலையிலே போய் இந்தக் கத்தரிக்காய் விசயத்தை எல்லார்கிட்டையும் சொல்லிடுவான். அப்புறம் நான் ராஜாக்கிட்டம் மாட்டிப்பேன். வம்பாயிடும் ஆனால், தெனாலிராமனின் மனைவி தங்கள் மகனுக்கு கத்தரிக்காய் கறியை தந்தே ஆகவேண்டும் என்று அடம் பிடித்தாள். தெனாலிராமன் யோசித்தான்.

ஒரு பாத்திரத்தில் தண்ணீர் குடித்து அதை தன் பையன் மேல் நன்றாகத் தெளித்தான். பையன் கண்விழித்தான். ''டே பையா மழை பெய்யுது வீட்டுக்குள்ளே வாடா. பையன் குழப்பத்தில் இருந்தான. அப்பா சொன்னதை உண்மை என்று நினைத்துக் கொண்டான்.

தன் பையனை எழுப்பி துண்டை எடுத்து அவன் சட்டையைக் கழற்றி தலையைத் துடைத்துவிட்டான். பிறகு அவனுக்கு கத்தரிக்காய் கறியைக் கொடுத்தான். மகன் ருசித்துச் சாப்பிட்ட பின் துங்கிவிட்டான். அடுத்த நாள் காலை அரண்மனைத் தோட்டக்காரன் அரசரிடம் வந்து யாரோ கத்தரிக்காய்களைத் திருடிவிட்டதாக தெரிவித்தான்.

அரசன் தன் மந்திரி அப்பாஜியை அழைத்து திருடனைக் கண்டு பிடித்து கடுமையான தண்டனை கொடுக்கச் சொன்னார். மந்திரி அவர்களின் மகனை விசாரித்து திருடனைக் கண்டுபிடித்தான்.

கண்டு பிடித்தவர்கள் யார்?

செல்வன் ப. அன்ரனி சார்ள்ஸ்
தரம் 11[c]

நீர் மூழ்கிக் கப்பலை	- புஸ்வெல்
அச்சிடும் இயந்திரத்தை	- ஜோண் கார்பன் பேக்
சையிக்கிளை	- மாக்மிலன்
தட்டச்சு இயந்திரத்தை	- சோல்ஸ்
ஹெலி கொப்டரை	- பிரிகட்
மோட்டார் காரை	- கார்ப் பென்ஸ்
சையிக்கிள் டயரை	- ஜே.பி. டலைப்
நுணுக்குக் காட்டியை	- ஜே.ஜோண்சன்
தொலைபேசியை	- கிரகாம் பெல்
ரேரிடயத்தை	- மேடம் கியூரி
ரேடியோவை	- மார்க்கோணி
ஆகாய விமானத்தை	- ரைட் சகோதரர்கள்
புகை வண்டியை	- ஆல்பர்ட் ஜலைடின்
மின்கலத்தை	- மைக்கல் பரடே
தந்திக்கருவியை	- மோர்ஸ்
திரைப்படத்தை	- தோமஸ் அல்வா எடிசன்
சீமேந்து	- ஜோண் கிமிற்றன்
இலத்திரன்	- ஜே.ஜே. தொம்சன்
பென்சிலின்	- அலெக்ஸ்சாண்டர் பிளமிங்
றேடர்	- ஜோ பொபேட்
நீராவிக் கப்பல்	- பொபேற் புற்தன்த
கல்குலேற்றர்	- பைனற்
நீராவி இயந்திரம்	- ஜேம்ஸ்வாட்

மாணவ சமுதாயத்தினரிடையே பொது அறிவின் முக்கியத்துவம்

செல்வி கி. விக்கினேஸ்வரி
தரம் 11 II

இன்றைய கணனி யுகத்திலே பொது அறிவுக் கல்வியானது மாணவ சமுதாயத் தினரிடையே நிலவுவது மிகவும் முக்கியமான தொன்றாகும். பொது அறிவு என்றால் என்ன? என நாம் சிந்திப்போமானால் சகல துறைகளும் அடங்கிய பரவலான அறிவே பொது அறிவு எனப்படுகின்றது. பொது அறிவு என்ற சொல்லி னுள்ளே பல பொருட்கள் பொதிந்துள்ளன. பொது என்பது அனைத்து விடயங்களையும் அடக்கிய பரந்தது என்றும், அனைத்திற்கும் சிகரமாக விளங்குகின்ற வல்லமை என்றும் பொருள் கொள்ளலாம். ஒரு நாட்டிலே பல் வேறு நகரங்கள் அமைந்து விளங்குகின்றன. எனினும் அவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் அந்நாட்டினுடைய தலை நகரம் சிறந்து விளங்குவது கண்கூடு. அவ்வாறே எம்மிடையே பரந்துள்ள, விரிந்துள்ள சகல துறைசார் அறிவிற்கெல்லாம் மணிமுடியாக விளங்குவது பொது அறிவு என்றால் மிகையாகாது.

இன்றைய யுகத்தில் விஞ்ஞானத்தின் விரிவாற்றலால் நாளுக்க நாள் பல புதுப்புதுக் கருவிகள் கண்டு பிடிக்கப்படுகின்றன. அக் கருவிகள் மானிட சமுதாயத்தை ஆக்க வழிக்கும், அன்றியும் அழிவுப் பாதைக்கும் இட்டுச் செல்கின்றது. பூமியில் தனது ஆதிக் கத்தை நிலைநாட்டிய மானிடனானவன், இன்று பூமியை விட்டு வெவ்வேறு கோள்களிலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதில் முனை கின்றான். இன்று விஞ்ஞானத்தின் விந்தையால் உலகமானது ஒரு சிறு கிராமமாகச் சுருங்கி யுள்ளது. உலகனைத்தையும் ஒரே பார்வையில் நோக்கத்தக்க '' உலகமயமாதல்" வெகு வளர்ச்சியைக் கண்டுள்ளது.

இவ்வாறெல்லாம் உலகத்தில் பல் வேறு மாற்றங்கள் உருவாகி உலகமானது வெற்றிப் பாதையில் நடைபயில்கின்றது. இவ் வேளையிலே எமது மாணவ சமுதாயத்தி னரிடையே நிலவவேண்டிய பொது அறிவைப் பற்றிச் சிந்திப்பது சாலப் பொருத்தமானது. எமது மாணவ சமுதாயமானது விஞ்ஞான தொழில்நுட்ப சாதனங்களின் பயன்பாடு, பொது அறிவு ஆகியவற்றில் பல ஆண்டுகள் பின் நோக்கிய காலப்பகுதியிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இவ்வாறு எமது மாணவ சமுதாயம் பின்நோக்கிய காலப்பகுதியில் வாழ்ந்து கொண்டிருப்பதற்கு பல்வேறு காரணிகள் வழிகோலுகின்றன.

எமது யாழ் குடாநாட்டு மக்களிடையே திடீரெனப் பரவிய சினிமா மோகமும், ஆரம்ப வாழ்க்கைக் கோலமும் மாணவர்களிடம் காணப்படுகின்ற அறிவுத்திறனை அழித்துச் செல்வதில் பங்காளியாகின்றன. பாடசாலை செல்லும் மாணவர்கள் சினிமா மோகத்திற்கு அடிமையாவதால் எதிர்நோக்கும் பின் விளைவு கள் எண்ணிலடங்காதவை ஆகும். ஒரு பாடசாலை மாணவன் பாடசாலையில் கல்வி பயிலும் நேரம் தவிர்த்தவிடத்து, தனது நேரத் தைத் தொலைக்காட்சிப் பெட்டி முன்னாலே சினமாப் படங்களைக் கண்டு களிப்பதிலே செலவிடுகின்றான். இதனால் அவன் காலப் போக்கிலே சினிமா மோகத்திற்கு அடிமை யாகிக் கல்வியை இழக்க வேண்டிய துர்ப் பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றான்..

சினிமா மோகத்தால் பாடசாலையில் கற்பிக்கப்படும் கல்வி கூட மாணவர்களுடைய மனதில் ஆழமாகப் பதிவதில்லை. பாடசாலை

களில் ஆசிரியர்களால் கொடுக்கப்படும் செயற் பாடுகளைச் செய்து முடிப்பதற்குக் கூட நேரங் கிடைப்பதில்லை. இதனால் சில மாணவர்கள், சாதாரண மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் கல்வியைக்கூடப் பெறத் தவறுகின்றார்கள். அவர்களால் எவ்வாறு உலகிலே நாளாந்தம் நடைபெறும் பொதுஅறிவு விடயங்களை நூல்களை வாசித்தோ, தொலைத் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தியோ, இலத்திர னியல் கருவிகளைப் பயன்படுத்தியோ அறிந்து கொள்ள முடியும்? இதனால் மாணவ சமுதா யத்தினர் பொது அறிவு என்ற ஊற்றிலிருந்து அப்பால் தூக்கியெறியப்படுகின்றார்கள்.

வேறு சில மாணவர்களிடம் காணப் படும் முக்கிய குறைபாடாகப் பாடத்திட்டத்திற்கு அமைவான பாடநூல்களைத் தவிர வேறு நூல்களையோ, சஞ்சிகைகளையோ, செய்தித் தாள்களையோ வாசிக்க முன்வராமை என்பது காணப்படுகின்றது. மாணவர்கள் பாடநூல்களை மட்டும் கற்று அதனுடன் தொடர்பான அறிவை மட்டும் பெறுவதால் அவர்களுடைய ''வாழ்க் கைக் கல்வி" என்ற அரிய விடயமானது தடைப் படுகின்றது. அவர்களால் கிணற்றுத் தவளை களாகவே இப்பூவுலகில் வாழ முடிகின்றது.

கடந்த சில வருடங்களாக இலங்கை அரசினால், கல்விச் செயற்பாடுகளில் புகுத்தப் பட்ட கணிப்பீட்டுக் கல்வி என்ற ஒரு திட்ட மானது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இக்கல்வித் திட்டத்தின் கீழ் கற்பிக்கும் செயற் பாடுகளிலே ஆசிரியர்களால், மாணவர்களுக்கு ஒவ்வொரு பாடங்களிலும் உள்ள அலகு களைக் கற்பிக்கும் பொழுது அவ் அலகின் சாராம்சம் வலியுறுத்தப்படுகின்றது. இவ்வாறு வலியுறுத்தப்படும் சாராம்சத்தைக் கொண்டு ஏனைய விடயங்களை நூல் நிலையங்களுக் குச் சென்று நூல்களை வாசித்தோ, இலத் திரனியல் கருவிகளைப் பாவித்தோ விரிவாக அறியுமாறு வலியுறுத்தப்படுகின்றது. இக்கணிப் பீட்டுக் கல்வித் திட்டத்தைச் சரியான முறையில் மாணவர்கள் இடையே பொது அறிவானது ஊற்றெடுக்கின்றது.

இன்றைய மாணவ சமுதாயத்தினரிடம் அருகி வரும் பொது அறிவு பற்றிப் பல்வேறு மட்டத்தினரும், பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். இலங்கை அரசும் மாணவ மட்டத்தினர்களிடம் பொது அறிவை வளர்க்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கா. பொ. த உயர்தர மாணவர் களுக்கு இறுதிப் பரீட்சையுடன், பொது அறிவையும் ஒரு பாடவிதானமாக ஏற்றுப் பரீட் சைகளை நடாத்தி வருகின்றது. இப் பரீட்சை யில் பொது அறிவுக்கு குறிப்பிட்ட புள்ளி களுக்கு கூடுதலான புள்ளிகளைப் பெற்ற ஒரு வரே, ஏனைய பாடங்களில் சித்தியடைந்தால் பல்கலைக்கழக அனுமதியைப் பெற முடி கின்றது. பொது அறிவுப் பாடத்தில் குறிப்பிட்ட வெட்டுப் புள்ளிகளுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறாத மாணவர்கள், க.பொ.த உயர்தரத்திலே காணப்படுகின்ற ஏனைய பாடங்களிலே வெட்டுப்புள்ளிகளுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றாலும், பல்கலைக்கழக அனுமதியானது எட்டாக்கனியாக மாறிவிடுகின்றது. இதிலிருந்து பொது அறிவானது மாணவ சமுதாயத்தினரி டையே எத்தகைய செல்வாக்கைச் செலுத்து கின்றது என்பது கட்புலனாகின்றது.

''உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவிலாதார்" என்ற திரு வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுக்கு இணங் கப் பாடவிதானக் கல்விகளில் தரமான சித்தி யைப் பெறுபவன், பொது அறிவுக் கல்வியிலும் சிறந்த, திறன் உடையவனாகத் திகழ்ந்ததன் மூலமே அவனால் ''வாழ்க்கைக் கல்வி" என்ற உயரிய பதத்தை வாழ்க்கையில் வெற்றி கரமாக ஏற்று நடக்க முடிகின்றது. பொது அறிவு விடயங்களை அறிவதன் மூலம் பூமியின் செயற்பாட்டிலே, நம்முடைய செயற்பாடுகளை மகத்தானது ஆக்க முடிகின்றது. மனித வாழ்க் கையை உலக நீரோட்டத்தின் முன்னேற்றப் பாதையின் பால் திசை திரும்பிக் கொள்ள முடிகின்றது. பொது அறிவு விடயங்களில் பரந்த அறிவுடையவர்கள் தமது நாட்டினுடைய முன்னேற்றப் பாதைக்கும் திட்டமிட்டு வழி கோலுகின்றார் என்றால் மிகையாகாது.

பொது அறிவு என்பது மகா சமுத்திரம்; இந்த மகாசமுத்திரத்தை எமது வாழ்க்கைக் காலத்தில் பருகிவிடுவது என்பது இலகுவான காரியமல்ல; ஆனாலும் பொது அறிவு என்னும் அரிய பொக்கிஷமானது எம்மை அறியாமலே எம்முள் ஐக்கியமாகின்றது. எவ்வாறு பொது அறிவு எம்முள் ஐக்கியமாகின்றது என்பதை எடுத்து நோக்குவோமானால், பெரியோரின் அறிவு பூர்வ அறிவுரைகள், கல்விமான்களுடன் சேர்ந்து வாழல், அறிவுடையோர் சேர்க்கை அன்றாட வாழ்க்கையில் நாம் தொழிற்படும் தொழிற்பாடுகள் என்பவற்றால் கூட எம்முள் பொது அறிவானது வளர்க்கப்படுகின்றது.

ஒரு குழந்தையானது மண்ணிலே அவதரித்து, மரணதேவனை அரவணைக்கும் காலம் வரை மனிதனுடைய வாழ்க்கையிலே பொதுஅறிவானது பின்னிப் பிணைந்து காணப் படுவது காணப்படுகின்றது. ஒரு குழந்தை கருவிலிருக்கும் பொழுது தாய் நல்ல நூல் களை வாசிப்பதன் மூலமும், சீரிய நற்கருத் துக்களைக் கேட்பதன் மூலமும் குழந்தைக் குக் கருவிலேயே பொது அறிவானது ஊட்டப் படுகின்றது.

ஒரு குழந்தையினுடைய பிறப்பி லிருந்து, இறப்புவரை அக்குழந்தையினுடைய வாழ்க்கை முறையில் கல்வி எவ்வாறு முக் கியத்துவம் வாய்ந்ததோ, அவ்வாறே அக்கல்வி என்னும் பிரிவினுள் அடங்குகின்ற பொது அறிவும் அத்தன்மை வாய்ந்தது. ஒரு குழந்தை யினுடைய வாழ்க்கைக் காலத்திலே வாசிப்புப் பழக்கத்தைக் குழந்தையிடம் ஊட்டுவதன் மூலம், அக்குழந்தை வாசிப்புத்திறனைப் பெற்றுப் பல்வேறு நூல்கள், சஞ்சிகைகள், செய்தித்தாள்களை வாசிக்கும் ஆற்றலைப் பெற்று வளர்ச்சியடைகின்றது. இவ்வாறு வளர்ச் சியடைந்த குழந்தை இலத்திரனியல் கருவி களையும், பயன்படுத்துமானால் சீரிய, செம்மை யான வழியில் வாழ்க்கையை நடாத்துவதற் குரிய ''பொதுஅறிவை''ப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆகவே மாணவ சமுதாயத்தினராகிய நாம், சிறு வயதிலிருந்தே பொது அறிவுத் திறனை வளர்த்து, எமது நாட்டின் வளர்ச்சிக்கு ஆவன செய்ய பல்வேறு நுட்பங்களையும், கண்டு பிடிப்புக்களையும் உருவாக்கி எமது நாட்டை அபிவிருத்தி நோக்கிய பாதைக்கு இட்டுச் செல்ல உறுதி பூண வேண்டும்.

எல்லாமே முன்பு கூறப்பட்ட விடயங்கள் தான்
ஆனால் யாருமே அவற்றைக் கேட்காததனாலேயே
மீண்டும் பின்னாலே சென்று முதலிலிருந்து
அவற்றை கூற வேண்டியுள்ளது

நூலகம் ஒரு மனிதனை முழு மனிதனாக ஆக்குகின்றது

செல்வன் யே. யேசுராஜா
தரம் 11[c]

இன்றைய தகவல் உலகத்திலேயே அறிவினைப் பெற்றுக்கொள்ள முடியாத அறிவினை விருத்தி செய்யாத எந்தவொரு சமூகமும் சிறந்த வாழ்க்கைத் தரத்தினைக் கொண்டிருக்க முடியாது. ஒருவன் தனக்கு வேண்டிய அறிவினைப் பெற்றுக்கொள்ள விளைகின்ற போதெல்லாம். அறிஞர் பெரு மக்களை தேடிச்செல்லவோ அவர்களை பேட்டி காணவோ முடியாது. அவர்களது அறிவின் பரம்பலை நினைத்த மாத்திரத்திலே நாம் பெற்றுக் கொள்ள நூல்கள் மாத்திரமே உதவுகின்றன.

வாசிப்பதால் மனிதன் பூரணமடை கிறான் என்பது சான்றோர் வாக்கு. ஒரு மனிதன் வாசிப்பதற்கு நூல்களே பயன்படுகிறன. பசித்து வருபவனுக்கு உணவு எவ்வளவு முக்கிய மானதோ அதேபோல் அறிவின் பசியைத் தீர்ப்பதற்காக நூல்கள் விளங்குகின்றன. அறிவின் தேடல் நூல் என்பது அறிஞர்களின் சிந்தனைக்கு கலைக் கோயில்களாக விளங்கும் நூலகங்களே.

சிந்திக்கும் ஆற்றலைக் கொண்ட ஒரே ஒரு இனம் மனித இனமே. இந்த மனித சிந்தனைகளை சீர் செய்து கொள்ளவும் இவ் மனிதனை முழு மனிதனாக்கும் நூல்களே எமக்கு பயன்படுகின்றன. ஒரு சமுதாயத்தின் அறிவுசார் பெறுமானத்தை நூல்களும் நூலகங் களும் வெளிப்படுத்துவதனாலே அந்த சமூகத் தினை அழிக்க நினைப்பாரின் இலக்குகளாக நூல்கள் விளங்குகின்றன.

ஒரே தேசம் என்பது அங்குள்ள மக்கள் தொகையையோ பௌதீக வளத்தையோ, நிலத்தையோ குறிக்கும் ஒன்றன்று ஒரே தேசத் தின் பெருமை என்பது அங்குள்ள மக்கள் தொகையின் ஆற்றலைக் கொண்டே கணித் தறியப்படும். நூல் என்பது ஒரு மனிதனை எவ்வளவு முழு மனிதனாக மாற்றுகின்றது. என்பதற்கு இந்தியாவின் முதற் பிரதமரான ஜவகர்லால் நேரு சிறந்த எடுத்துக் காட்டா கும். அவர் கூறினார் நான் புத்தகங்கள் நிறைய வாசிப்பேன் நிறையப் புத்தகம் வாசிப்பதற்கு அதிகமான பணத்தை செலவிடுகிறேன். இத னால் சிலர் என்னை ஊதாரி என்று கூறுகின் றார்கள். நான் நூல்களிற்குத்தான் அதிக பணம் செலவிடுகிறேன். இதனால் நான் ஊதாரியாக இருக்க விரும்புகின்றேன். ஒருவன் அறிவுத் தாகத்தினை நிறுத்த முடியாது என்றார்.

இவர் நூல்களிற்கு மதிப்பளித்ததன் காரணமாக இந்தியாவின் முதற் பிரதமர் எனப் புகழ் பெற்று விளங்கினார். இப்படிப்பட்ட பெருமைகளையும் அரசியல் அம்பலங்கள், சமய, சாரம்சங்கள், விஞ்ஞானத்தின் விந்தை போன்ற சிறந்த நல்ல செயற்பாடுகளை நூல் களையும் நூல் என்பது ஒரு மனிதனை எவ் வளவு முழு மனிதனாக்குகின்றது. என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

நாளை என்பதே இல்லை என்பதே

சுவாமி ஞானப்பிரகாசர்

செல்வி ஸ்ரீ. றொஷாணி
தரம் 11

சுவாமி ஞானப்பிரகாசர் இலங்கையில் பிறந்த பேரறிஞர்களுள் ஒருவராவர். இவர் யாழ்ப்பாணத்திலுள்ள மானிப்பாய் என்ற ஊரிலே 1875ஆம் ஆண்டு ஆவணி மாதம் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்த மன்னர்களுள் 6வது பரராஜசேகரன் பரம் பரையில் ஓர் இந்துக் குடும்பத்தில் பிறந்தார். தந்தையார் பெயர் இராஜசிங்கம் சாமிநாதப் பிள்ளை தந்தையார் ஓர் ஆசிரியராக விளங் கினார். தாயார் பெயர் தங்கமுத்து. இவர் பிறந்த பொழுது அவருக்கு வைத்தியலிங்கம் எனப் பெற்றோர் பெயர் சூட்டி வளர்த்து வந்த னர். இவரது செல்லப் பெயர் கனகரத்தினம் ஆகும்.

ஞானப்பிரகாசருக்கு ஐந்து வயது நடக்கும் பொழுது அவரது தந்தையார் இறந்து விட்டார். அவருடைய தாயார் அச்சு வேலியில் அச்சுக்கூடம் வைத்து நடத்திவந்த தம்பிமுத்து என்ற கத்தோலிக்கரை மறுமணம் செய்து கொண்டனர். எனவே தங்கமுத்துவும், மகனும் திருமுழுக்குப் பெற்று கத்தோலிக்க மதத்தைத் தழுவினார்கள். அப்போது அவருக்கு ஞானப் பிரகாசர் எனப் பெயர் சூட்டினார்கள்.

ஞானப்பிரகாசருக்கு மானிப்பாயில் உள்ள மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை யில் ஆரம்பக் கல்வியைக் கற்றுள்ளார். இதற்குச் சான்றாக அவரது வாழ்க்கைக் குறிப்பொன்று காட்டப்படுகிறது. அதில் அவர் தனது மைத்துனருக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். ''பதினொரு வயதளவில் எள்சனை ஊராகிய மானிப்பாயில் பிறந்த மனையிலே தானே என் தந்தையின் சகோதரிமாரின் ஆதரவில் இருந்து கொண்டு தந்தையாருடைய பள்ளிக் கூடத்திலேயே (மெமோறிய ஆங்கிலப் பாடசாலை) இங்கிலீசு படிக்க அனுப்பப்பட்டேன். அப்போது சிறிய தந்தையார் எனக்கு வீட்டிலிருந்து அதி விலை பெற்ற பட்டுத் துணிகளை உடுத்தி அனுப்பியது மட்டுமன்றி, தனது வயிரக் கணையாழியையும் எனக்கு அணிந்துவிட்டார். அது தளதளத்துக் கொண்டிருந்தபடியால் பின்னொரு நாள் அது என் கைக்கு அளவாக வந்தது. இவ்வாறன பட்சத்தில் அடையளங்களே சிறுவர் மனதில் பதிந்து கொள்ளுமாதலால் இன்றைக்கும் இது போன்ற பல அன்பின் செயல்கள் என் மனதில் இருக்கின்றன. மானிப்பாய் பள்ளிக் கூடம் அக் காலம் அமெரிக்கன் புறொட்டஸ்லாந்து மிஷனோடு ஒரு சிறிது சம்பந்தப்பட்டிருந்தது. மாணக்கர் சுவிசேஷ வாக்கியங்களை வாய்ப் பாடமாக்கிக் கொடுக்க வேண்டும் என்பதும். ஒய்வு நாள் பள்ளிக் கூடத்திற்குப் போக வேண்டும் என்பதும் பள்ளிக் கூட ஒழுங்குகள் சிறிய தந்தையார் புதுச்சேரியில் பதிப்பித்த சத்திய வேத சுவிசேஷமொன்று வாங்கித் தந்து அதிலிருந்து பாடங் கொடுக்கும்படி செய் தார்" என தனது வாழ்க்கைக் குறிப்புப் புத்தகத் தில் எமது அன்னையைப் பற்றி மேற்கண்ட வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஞானப்பிரகாசரின் வளர்ப்புத் தாயா ரான தம்பிமுத்து நல்ல தமிழ் அறிஞர் ஆனபடி யால் ஞானப்பிரகாசருக்கு அவர் தமிழ் அறிவை ஊட்டினார். அச்சுக்கலையில் பயிற்சி அளித்தார். அதனால் ஞானப்பிரகாசர் சிறு வயதிலேயே இலக்கணப் பிழையின்றி தமிழ் எழுதப் பழகிக் கொண்டார். தமிழ் இலக்கியங் களை மிகுந்த ஆர்வத்தோடு கற்றார். அத னால் கவிதை இயற்றும் ஆற்றல் உடைய வராக விளங்கினார். சங்கீத ஞானம் உள்ள வராக விளங்கிய ஞானப்பிரகாசர். வயலின்

வாசிப்பதோடு ஒரே சமயத்தில் பல வாத்தியக் கருவிகளை மீட்டக் கூடிய திறமை பெற்றிருந் தார். ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்து யாழ் நகரிலிலுள்ள புனித பத்திரிசியார் கல்லூரியிலே கல்வி பயின்றார். தமது சொந்த முயற்சியால் அறிவை வளர்த்துக் கொண்ட ஞானப்பிரகாசர் தமது படிப்பை முடித்துக் கொண்டு 1893ஆம் ஆண்டில் புகையிரதப் பகுதி லிகிதர் பரீட்சை யில் திறமையாக தேர்ச்சியடைந்து கடிகமுவை புகையிரத நிலையத்தில் வேலைக்கமர்ந்தார்.

இவருடைய திறமையான வேலை யைக் கவனித்த மேலிடம் அவரை கொழும் பிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு இட மாற்றம் செய்தது. ஆனால் அவர் வேலையில் மூன்று வருடங்களே சேவை புரிந்தார். பின்னர் கத்தோலிக்கக் குருவாக மாற விரும்பி குரு மடத்தில் சேர்த்து கொண்டார். 1907ஆம் ஆண்டு மார்கழி மாதம் 1ஆம் திகதி அவர் குருவானவராக திருநிலைப்படுத்தப்பட்டார். குருவானபின் அவர் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதிலும் சமயத்தைப் பற்றிய தெளிவை ஏற்படுத்துவதிலும் ஆர்வமாக ஈடுபட்டு உழைத் தார். வேறு எந்தக் குருவானவரும் செய்திராத அளவுக்குப் பல கத்தோலிக்கத் தேவாலயங் களைக் கட்டுவித்தார். கிட்டத்தட்ட முப்பத்தேழு தேவாலயங்களைக் கட்டுவித்தார். மக்களி டையே அறிவை வளர்ப்பதற்காக வாசிகசாலை களையும் உடன் ஏற்படுத்தினார். எழுத்தாளரா கவும், பேச்சாளராகவும், ஆராச்சியாளராகவும் விளங்கிய ஞானப்பிரகாசர் வீரமாமுனிவருக்குப் பின் தமிழுக்குத் தொண்டாற்றியவர்களுள் முதன்மையானவராகக் கருதப்பட்டார்.

தொன்மைவாய்ந்த தமிழ் மொழியை மிக ஆர்வத்தோடு ஆழமாகப் படித்ததோடு பிறமொழிகளை ஆசிரியரிடத்திலன்றி பல் கலைக்கழகத்தில் கற்கவில்லை. தமது சொந்த முயற்சியால் அறிவை வளர்த்தார் எழுபத் திரண்டு மொழிகளை அவர் அறிந்திருந்தார். சமஸ்கிருதம், ஜேர்மன், கிரேக்கம், எனப் பன்னிரண்டு மொழிகளைத் திறம்படக் கற்று பாண்டித்தியம் பெற்று விளங்கினார்.

தொன்மை வாய்ந்த மொழிக ரில் மாத்திரமன்றி சமயம், தத்துவம், சரித் ரம் போன்றவற்றிலும் ஆழ்ந்த ஞானம் பெற்று விளங்கினார். இவர் தாம் எழுதியவற்றை பத்திரிகை வாயிலாக மக்களுக்கு புத்துணர்சி யூட்டினார். யாழ்ப்பாணச் சரித்திரத்தை முதலில் வெளியிட்டவர். சுவாமிகளே ஞானப்பிரகா சருடைய கட்டுரைகள் மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடான 'செந்தமிழ்' என்ற சஞ்சிகையில் வெளிவந்துள்ளது. இவர் எழுதிய வேறு சில கட்டுரைகள் ''கலைமகள்'', ''சத்தியநேசன்'', ''கலாநிலையம்'' என்ற தமிழ் நாட்டுப் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. தமிழ், சமயம், இந்துமதம், யாழ்ப்பாண இராச்சியம் என்பன போன்ற பலதரப்பட்ட கட்டுரைகள் ஈழகேசரியில் வெளிவந்துள்ளன.

தமிழின் தொன்மையையும், அதன் தனித்துவத்தையும் உலகுக்கு உணர்த்தியவர் ஞானப்பிரகாசர் ஆவார். தனித்து நின்று ஒப்புயர்வற்ற ''சொற்பிறப்பு ஒப்பியம்'' என்ற தமிழ் அகராதியை பன்னிரண்டு ஆண்டுகளாக ஆராய்ந்து இருபது பாகங்களாக எழுதி முதல் ஆறு பாகங்களை வெளியிட்டார். எஞ்சிய பாகங்கள் கையெழுத்துப் பிரதிகளாக இருந் தன. அவற்றை வெளியிடுவதற்கு முன் அவர் இறைவனடி சேர்ந்துவிட்டர். துரதிஷ்டவசமாக அவை சரியான முறையில் பாதுகாக்கப்பட வில்லை. அகராதி தமிழ்ச் சொற்கள் பற்றிய ஓர் ஆராய்ச்சி நூலாகும் தமிழ் கற்கும் மாணவர் களுக்கு அவர்தம் ஆய்வுகள் நன்கு உதவுகின்றன.

1896ஆம் ஆண்டிலிருந்து 1906ஆம் ஆண்டுவரை ''அமலோற்பவ இராக்கினித் தூதன்'' என்னும் மாத சஞ்சிகையின் ஆசிரிய ராக சுவாமிகள் விளங்கினார். ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் அவர் பல தொண்டுகள் புரிந் துள்ளார். தமிழ்மொழி தொன்மையான மொழி யென்றும் பல பிற மொழிகளுக்கு தாயாக உள்ளதும் என்றும் ஆராய்ந்து கூறியவர் ஞானப்பிரகாசர் அவர்களே. ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தின் உப தலைவராக இருந்தார்.

ஆசிய அரசவையின் இலங்கை கிளைத் தலைவராகவும் தொண்டு புரிந்துள் ளார். சுவாமிகள் ஆராய்ச்சி செய்த காலத்தில் தற்கால பிரயாண வசதிகள் வாய்ப்புகள் இல்லை. கால் நடையாகவும், மாட்டு வண்டி களிலும், சைக்கிளிலும் பிரயாணம் செய்து உடல் வருத்தத்தையும் பாராது பழைய தமிழ்ச் சுவடுகளைத் தேடி எடுத்து குப்பி விளக்கிலே படித்து தமிழ் தொண்டு செய்த பெரும் அறிஞராவார்.

தான் பிறந்த ஊராகிய மானிப்பாயில் உள்ள வைத்தியசாலையில் நோய்வாய்ப் பட்டிருந்த ஞானப்பிரகாசர் 1947ஆம் ஆண்டு தை மாதம் 22ஆம் திகதி காலை தமது 72ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார். அவர் மரணமானது தமிழ் மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத ஒரு பெரும் இழப்பாகும். அவருடைய புகழ் இலங்கையில் மட்டுமன்றி பிற நகரிலும் பரவியிருந்தது. 1981ஆம் ஆண்டு வைகாசி மாதம் 22ஆம் திகதி இலங்கையின் அரசு அவரது உருவம் பொறித்த தபால் முத்திரை ஒன்றை வெளியிட்டு அவரைக் கௌரவித்தது. ஞானப்பிரகாசர் மறைந்தாலும் அவர் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டுகள் அழியாது நிலைத்து இருக்கும்.

நியூட்டனின் இயக்க விதிகள்

செல்வன் அ. விசித்திரன்
தரம் 11^c

விதி - I

பொருளின் மீது புறவிசை தாக்கா விட்டால் அது ஓயிவில் அல்லது நேர்கோடு வழியே சீரான வேகத்துடன் இயங்கிக் கொண்டிருக்கும்.

விதி - II

நியம அலகுகளில் அளக்கப்படும் போது பொருளின் திணிவினதும் ஆர்முடு கலினதும் பெருக்கம் ஆர்முடுகலின் திசையில் பிரயோகிக்கப்படும் விசைக்கம் சமனாகும்.

விதி - III

யாதாயினும் ஒரு பொருள் இரண்டாம் பொருளின் மீது விசையை பிரயோகிக்குமாயின் அப்பொருள் அதற்குச் சமனானதும் எதிரானது மான விசையே முதலாம் பொருளின் மீது பிரயோகிக்கப்படும்.

ஓமின் விதி

வெப்பநிலையும் ஏனைய பௌதீக நிபந்தனைகளும் மாறாதிருக்கும் போது கடத்தியொன்றினூடாகப் பாயும் மின்னோட்டம் அதன் இரு அங்கங்களினதும் அழுத்த வித்தியாசத்துக்கு நேர்விகித சமனாகும்.

பஸ்காலின் விதி

ஒரே திரவத்தில் ஒரே கிடை மட்டத்தில் உள்ள எல்லாப்புள்ளிகளிலும் அமுக்கம் சமனாகும்.

ஆக்கிமிடீஸ் விதி

ஓய்விலள்ள பாயி ஒன்றினுள் சுயாதீன மாக பொருள் ஒன்று முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அமிழும் போது பாயியினால் உருவாக்கப்படும் மேலுதைப்பு பொருளினால் இடம் பெயர்க்கப்படும் பாயியின் நிறைக்குச் சமனாகும்.

ஒளி முறிவு விதி

படுகதிர் முறிகதிர் செவ்வன் ஒரே தளத்தில் அமையும் படுகோணத்தின் sini கும் முறிகோணத்தின் sirகும் இடையிலான விகிதம் ஒரு மாறிலியாகும்.

திணிவுக் காப்பு

மூடிய தொகுதியில் நிகழும் இரசாயனத்தாக்கம் ஒன்றில் தாக்கிகளின் மொத்த திணிவு விளைவுகளின் மொத்த திணிவுக்குச் சமனாகும்.

மச்சுவலின் வலக்கை உள்ளங்கை விதி

கடத்தியில் மின்னோட்டம் பாயும் திசையை நோக்கிப் பெருவிரலை நீட்டியவாறு கடத்தியை வலது கையால் பற்றிப் பிடிப்போ மாயின் ஏனைய விரல் நுனிகள் காட்டும் திசை மின்புலக் கோடுகளின் திசையாகும்



வீஞ்ஞான வீளக்கம்

செல்வன் யே. யேசுராஜா
தரம் 11

1) சாதாரண வளி நிரம்பிய பலூன் கைவிடப் படும் போது கீழ் நோக்கிச் செல்கின்ற போதிலும் ஐதரசன் வாயு நிரம்பிய பலூன் கைவிடப்படும் போது மேல் நோக்கிச் செல்கின்றது.

விளக்கம்:- ஐதரசன் இலேசான ஒரு வாயு வாகும். அதன் (நிறை) அடர்த்தி வளியைவிட குறைவாகும்.
ஐதரசன் நிரம்பிய பலூன் மேலே செல்கின்றது. ஆயினும் வளி நிரம்பிய பலூன் ஒன்றின் நிறை வளியை விட அதிகமானதால் கீழ் நோக்கிச் செல்கின்றது.

2) சம நீர்க் கனவளவுகளில் உப்புக் கட்டி யைக் காட்டிலும் மிகக் குறுகிய நேரத்தில் அதே திணிவுள்ள உப்புத் தூள் கரைந்து விடுகின்றது.

விளக்கம்:- உப்புக் கட்டிகளை விட உப்புத் தூளினது மேற்பரப்பளவு அதிகம் இதனால் கட்டிகளை விட தூளுடன் தொடுகையுறும் நீரின் அளவு அதிகமாகும்.
உப்புத் தூள் உப்புக்கட்டிகளை விட விரைவில் கரைகிறது.

3) புவி மீது உள்ள எல்லா அங்கிகளினதும் நிலைத்திருக்கை பச்சை நிறத் தாவரங்களில் தங்கியிருக்கிறது.

விளக்கம்:-பச்சைத் தாவரங்கள் உணவு உற்பத்தியின், போது ஒட்சிசனை வெளியிடு கின்றன.
எல்லா அங்கிகளினதும் சுவாசத்துக்கு ஒட்சிசன் பயன்படுகின்றது.இதனால் புவியிலுள்ள எல்லா அங்கிகளினதும் பச்சைத் தாவரங்களில் தங்கியுள்ளது.

4) அரிசியில் மணல் கலந்திருக்கும் போது அரிப்பதன் மூலம் அவற்றை வேறாக்கலாம்.

விளக்கம்:-அரிசியைவிட மணலின் அடர்த்தி அதிகமாகும்.
அரிக்கும் போது அடர்த்தி குறைந்த அரிசி முதலில் நீக்கப்படுகின்றது. அடர்த்தி கூடிய மணல் பாத்திரத்தில் தங்குவதால் அதை வேறாக்குதல் இலகுவாகிறது.

Do You Know These Words?

செல்வி ச. சோபனா
தரம் 11[c]

TEACHER

T - Tactful - சாமர்த்தியம்
E - Education - கல்வியறிவு
A - Ability - திறமை
C - Character - நன் நடத்தை
H - Health - ஆரோக்கியம்
E - Enthusiasm - ஊக்கம்
R - Regularity - ஒழுங்குமுறை

STUDENT

S - Searcher - தேடுபவர்
T - Truthful - உண்மையானவர்
U - Ultra - தீவிரமானவர்
D - Disciple - பின்பற்றுபவர்
E - Efficient - ஊக்கமுடைமை
N - Noble - உயர் குணசாலி
T - Trustworthy - நம்பகத் தன்மை

SCHOOL

S - Sincerity - உண்மை
C - Capacity - ஆற்றல்
H - Honesty - நேர்மை
O - Obedience - கீழ்படிதல்
O - Orderliness - ஒழுங்கான நிலை
L - Learning - கல்வியறிவு

SPORTS

S - Sincerity - உண்மை
P - Perseverance - விடாமுயற்சி
O - Orderliness - நேர்மை
R - Righteousness - நேர்மை
T - Tact - சாதுரியம்
S - Spirit - தைரியம்

கணனி கலைச் சொற்கள்

01 Software - மென்பாகம்/மென்பொருள்
02 Central processing unit (cpu) - மையச் செயலகம்
03 ROM - அழியா நினைவகம்
04 RAM - நிலையா நினைவகம்
05 Monitor - காட்சித்திரை
06 Key Board - விசைப் பலகை
07 Scanner - வருடி / நகலெடுப்பான்
08 Mouse - சுட்டி / சொடுக்கி
09 User - பயனாளர்
10 Floppy Disk - நெகிழ்வட்டு
11 Compack Disk - குறுவட்டு
12 Disk Drive - வட்டு இயக்கி
13 File - கோப்பு
14 Directory - கோப்பகம்
15 Printer - அச்சுப்பொறி
16 Pass Word - கடவுச்சொல்
17 Multiple page preview - பலபக்க முன்காட்சி
18 Input devices - பயப்பு / உள்ளீட்டுச் சாதனங்கள்
19 Output devices - பெயர்ப்பு / வெளியீட்டுச்சாதனங்கள்
20 Hardware - வன்பாகம் / வன்பொருள்
21 Home page - தகவல் வீடு
22 Internet - இணையம்
23 Web page - இணையத்தளம்
24 Wordprocessor - சொல்லாளர்
25 Operating system - இயக்கத் தொகுப்பு
26 Intenet web browser - இணையத்தள உலாவி
27 Keys - அழுத்தி விசை
28 Digital Data - துடிமத் தகவல்
29 CD ROM drive - குறுவட்டு இயக்கி
30 Video disk - ஒளித்தோற்ற வட்டு
31 Netware - வலைப்பொருள்
32 Macros - ஆணைத் தொகுப்பு
33 Grammar Checker - இலக்கணத் திருத்தி
34 Language checker - மொழிதிருத்தி

சுவாமி விவேகானந்தர்

செல்வி செ. தர்சினி
தரம் 11c

காலங்கள் தோறும் உலகின் மகான் கள் பலர் உருவாகுகின்றார்கள். உலகினை நல்வழிப்படுத்துகின்றார்கள். வளம் மிகுந்த வையகத்தை உருவாக்கத் தமது வாழ்வை அர்ப்பணிக்கின்றார்கள். செயற்கரிய செயல்கள் செய்து மக்களின் சிந்தைகளிலெல்லாம் நிறைந்திருக்கின்றார்கள். இம்மேன்மை மிகு மகான்களின் வரிசையில் தன்னம்பிக்கையின் சிகரம் எனப் பலராலும் போற்றப்படுகின்ற சுவாமி விவேகானந்தரே என் மனங்கவர்ந்த பெரியார் ஆவார்.

இவர் 1865ஆம் ஆண்டு தை மாதம் 12ம் நாள் மண்ணுலகின் தவப்பயனாய்க் கல்கத்தாவில் வந்துதித்தார். இவரது பெற்றோர் விசுவநாதத்தரும், புவனேஸ்வரி அம்மையாரும் ஆவர். நரேந்திரர் என்பது இவரது இளமைப் பெயர் ஆகும். நரேந்திரனின் தந்தையார் நிகரில்லாக் கொடையாளியாக விளங்கினார். வரையறையற்று அனைவருக்கும வாரிவழங் கினார். இதனால் அவரது குடும்பம் வறுமை யின் எல்லைக் கோட்டைத் தொட நேர்ந்தது. எனினும் வறுமையிலும் செம்மை நரேந்திரர் வளர்ந்தார்.

சின்னஞ்சிறு வயதின் கருவத்திலேயே, நரேந்திரர் நிறைந்த ஆளுமைப் பண்புகளை உடையவராயிருந்தார். சிறுவர்கள் கூட்டத்தின் தலைவராக விளங்கினார். இள வயதிலேயே அறிவின் தெளிவும் அபார ஆற்றலும் இவரது உடைமைகளாக இருந்தன. எந்நூலையும் இரு முறை படித்ததால் அவற்றை மிகுந்த விளக் கத்துடன் வரிபிசகாது மனனம் ஆக்கிவிடும் இயல்பு இவரிடத்திலிருந்து இதனாலே தனித் திறமையுடன் இவர் சிலம்பம், வாள், மல்யுத்தம் போன்ற பயற்சிகளிற் சிறந்து விளங்கினார்.

உயிரினங்கள் மீது இதய பூர்வமான அன்பு கொண்டவர் இவர். சிறுவயதிலேயே மனத்தை ஒரு முகப்படுத்தும் தியானம் இவருக்க இலகுவான கலையாக இருந்தது. இத்தகைமைகளை பிற்காலத்தில் மனித குலத்திற்கும் சமயத்துக்கும் அளப்பெரும் சேவைகளின் மூலமாக அமைந்தன.

இளம் வயதில் இராமகிருஷ்ண பரமஹம்சருடனான இவரது சந்திப்பு ஆன்மீக வரலாற்றின் முக்கிய நிகழ்வாகும். இராமகிருஷ் ணரைக் குருவாக கொண்டதனால் இவரது ஆன்மீக ஒளியும் அறிவொளியும் கூடர்விட்டு பிரகாசிக்க ஆரம்பித்தது. நிர்க்குமிழியன்ன நிலையற்ற வாழ்வில் நிலையான சக்தியிடம் தம்மை அர்ப்பணித்தார். குருவானவர் சிவபத மெய்தியபின் சிஷ்யர் கூட்டத்தை வழிப்படத்தும் தலைவராக விளங்கினார்

இவர் நாவன்மையில் ஈடிணையற்று விளங் கினார். இந்து மதத்தின் புகழ் நலிந்திருந்த காலத்தால் இவர் நிகழ்த்திய சொற்பொழிவுகளால் இந்து சமய மறுமலர்ச்சி ஏற்பட்டது. தமிழ்ப்பண்பாட்டின் செழுமையம் இந்து மதத்தின் இறைமையும் செழிக்க பல்வேறு தேசங்களுக்கும் யாத்திரை செய்தார். வேதாந்தம் போதிக்கும் நல்லாசானாய் உல கெங்கும் உரைகள் நிகழ்த்தினார்.

1893ம் ஆண்டு சர்வமத மகாசபையில் இவர் ஆற்றிய உரை இவரை உலகப்புகழ் பெற்ற போதகராய் மாற்றியமைத்தது. பெருந் தொகையான மதபோதகர்களும் மக்களும் நிறைந்த அரங்கிலே சுவாமி விவேகானந்தர் ''அமெரிக்க நாட்டுச் சகோதர சகோதரிகளே'' என்று விளித்து தனது சொற்பொழிவை

ஆரம்பித்தார். அவ்வார்த்தை யில் இனமத நிற வேறுபாடுகள் அழிந்து போயின. சகோதரத் துவம் சிறந்து பொலிந்தது. வேற்றுமை காட் டாத இந்துமதத்தின் சீரிய பண்பு உந்நதமாக உணர்த்தப்பட்டது. சுவாமிஜியின் பேச்சாற்றல் பலரையும் இந்து மதத்தின் பால் தீவிரமாகக் கவர்ந்து இந்தியாவின் பண்பாடும் ஆன்மீக உயர்வும் தேசமெங்கும் புகழப்பட்டன. தமிழ்த் தாயின் தவப்புதல்வனால் இந்துமதப் புகழ் விரியத் தொடங்கியது.

இவர் பெருந்தொகையான இந்துமத முன்னேற்றக்கழகங்கள், ஆச்சிரமங்கள் என்பவற்றை நிறுவினார். ஆன்மீக ஒளி அகிலமெங்கும் பரவும்படி பல நன்நூல்களைச் செய்தார். ''ஞானதீபம்'' கீதை சொல்லும் பாதை'' என்பன இதற்குச் சிறந்த சான்றுகளா கும்.. ''எழுந்து கொள்ளுங்கள்; விழித்துக் கொள்ளுங்கள்; தீமைகளுக்கு எதிராகத் துணிந்து போர் புரியுங்கள்'' என்று மக்கள் சமுதாயத்திற்கு அறைகூவல் விடுத்தார். ''உள்ளம் தளராதே; முயற்சி செய்; வெற்றி உனதே'' என இளஞ்சமூகத்தை உற்சாகப் படுத்தினார். 'அஞ்சாதே! அச்சம் உன்னை இழிவுபடுத்தும் அதை உதறி எறி. வாழும் காலம் யாவும் துணிச்சலுடன் வாழ்க' என்று முழங்கினார். இவரது சொற்களில் இளைய சமூகம் நிமிர்ந்து கொண்டது. உலகின் ஞானக் கண்கள் திறந்து கொண்டன. ஆன்மீகப் பேரொளி பேரழகுடன் விமர்சிக்கத் தொடங்கியது.

இவரது நன்நோக்கப் பயணங்களில் ஒன்றாக 1899ம் ஆண்டு ஜனவரி மாதம் 5ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்தார். ''பரி சுத்த பாரதபூமி'' ''இந்துமதம்'' ''சமய வாழ் வில் சகிப்புத்தன்மை'' என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினார். இந்நிகழ்வின் நூற் றாண்டு நிறைவையொட்டி 1997ம் ஆண்டு இலங்கை அரசு விவேகானந்தரின் உருவ முத்திரை வெளியிட்டு அவரை கௌரவித்தது. 1902ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4ம் திகதி இப்பூவுலக வாழ்வை நீத்தார்.

அவனது புகழோ தினமும் ஓங்கிக் கொண்டே இருக்கின்றது. நிமிர்ந்த கம்பீரமான இவரது தோற்றம்! கூர்ந்த அறிவினை விளக்கும் தெளிந்த விழிகள்! உயிரினம் மீது கொண்ட பேரன்பு! இவையெல்லாம் என் றென்றும் பசுமையான எம்மிடையே வாழும்.

''அறிவிலே தெளிவு; நெஞ்சிலே உறுதி
அகத்திலே அன்பினோர் வெள்ளம்....''

என்று பாரதியின் கூற்றுக்கு வரை விலக்கணமான இவரது வீரமும் ஞானமும் தன்னம்பிக்கையும் என்றென்றும் எம்மை ஊக்கு விக்கும்!



தர்மம் தலை காக்கும்

செல்வி ஸ்ரீ. றொஷாணி
தரம் 11

காட்சி I

	இடம்	:- ரவி வீடு
பாத்திரங்கள	தகப்பன்	:- ரவி
	தாய்	:- கமலம்
	மகள்	:- துளசி

ரவி :- கமலம்... கமலம் இஞ்சயொருக்கால் வந்திட்டுப் போ.

கமலம் :- என்னப்பா கூப்பிடுறியள் ஒரு வேலையும் செய்ய விட மாட்டியள்.

ரவி :- கமலம் எங்கட வீட்டு வேலைக்காரி இருக்கிறாள் வாணி, அவளின்ர அம்மாவுக்கு காய்ச்சலாம் மருந்தெடுக்க ஒரு நூறு ரூபா கொண்டு வந்து குடன்.

கமலம :- என்ன காசு கொடுக்கிறதோ எந்த நாளும் ஆக்களுக்குக் கொடுத்துக் கொடுத்து ஆண்டியாகிக் கொண்டு போகிறோமே தவிர உய்வதற்கு வழியொன்றுமில்லை. நான் காசு கொடுக்க மாட்டேன். அவரை வேறு எங்கேயும் போய் காசு வாங்கச் சொல்லுங்கோ.

ரவி :- சரி... சரி நீ போ நான் உன்னைக் கேட்டேனே என்ர புத்தியைச் செருப்பால் அடிக்க வேண்டும்.

(வாணியின் அப்பா நின்ற இடத்திற்கு போகின்றார் அங்கு 'அவரைக் காணவில்லை.)

சீ என்ன வாழ்க்கையப்பா மனிதனுக்கு மனிதன் உதவி செய்ய முடியாத வாழ்க்கை உவள் கமலத்தை நான் கலியாணம் கட்டின நேரம் ஒரு கழுதையைக் கட்டியிருக்கலாம்.

துளசி :- அப்பா... அப்பா தர்மம் என்றால் என்ன அப்பா அதைப்பற்றி எனக்குச் சொல்லித் தாறீங்களே.

ரவி :- இல்லையென்று சொல்லாமல் கேட்பவர்க்கெல்லாம் மனமிரங்கி தூய மனதுடன் கொடுப்பது தர்மம். இந்த தர்மம் தான் எங்களுடைய வாழ்வை தீர்மானிக்கும்.

காட்சி II

	இடம்	:- வாணியின் வீடு
பாத்திரம்	வாணியின் தகப்பன்	:- ரகு
	வாணியின் எசமான்	:- ரவி

ரவி :- ஐயா... ஐயா

ரகு :- ஓம்... வாங்கோ ஆ... நீங்களே வாங்கோ வாங்கோ என்ன ஐயா விஷயம் வாணி ஐயாவுக்கு தேத்தண்ணி ஊத்திக் கொண்டுவா

ரவி :- இப்பதான் வீட்ட குடிச்சிட்டு வந்தனான். அப்போது நீங்கள் வீட்ட வந்து காசு கேட்டதற்கு மனைவி பேசிப் போட்டா. மன்னிச்சுக் கொள்ளுங்கோ. இப்ப நான் உங்களுக்கு காசு கொண்டு வந்தனான் மறுக்காமல் வாங்கிக் கொள்ளுங்கோ.

ரகு :- நான் நீங்கள் செய்த உதவியை என்றைக்கும் மறக்கமாட்டேன். நீங்கள் தான் ஐயா என் மனைவியை கடவுளைப் போல்வந்து காப்பாற்றினீங்கள். உங்களை என்ர வாழ் நாளில் ஒரு நாளும் மறக்க மாட்டேன்.

ரவி :- இதெல்லாம் என்ன பெரிய உதவியா? மனிதனுக்கு மனிதன் தனது உயிரையே கொடுக்கிறான். அவர்கள் செய்யிற அத்தியாகத்திலும் பார்க்க நான் செய்யிற இந்த உதவி பெரிய உதவியே.

ரகு :- ஐயா ''காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனிலும் அது ஞாலத்தின் மானப் பெரிது" என்று திருவள்ளுவர் கூறவில்லையா. அது அவர் அறிந்து தான் ஐயா சொல்லியிருக்கிறார்.

ரவி :- இப்ப நீங்கள் முதலில் போய் உங்கள் மனைவியை கொண்டு போய் ஆஸ்பத்திரியில் காட்டி மருந்து எடுங்கோ நான் போயிற்றுவாறன்.

காட்சி III

இடம் :- ரவி வீடு

பாத்திரம்

கணவன் :- ரவி

மனைவி :- கமலம்

மகள் :- துளசி

பிச்சைக்காரன்

கமலம் :- போ எண்டால் வெளியில போ உனக்கு இந்த காசும் சாப்பாடும் தர என்னால் முடியாது. நீ போய் வேறு யாருடைய வீட்டையும் போய் வாங்கு. .

பிச்சைக்காரன் :- அம்மா கொஞ்ச சாப்பாடாவது தாங்கோ அம்மா பசி வயிற்றக் கிள்ளுது. இந்த மத்தியான வெய்யிலில நடந்து போகவும் ஏலாது. தயவு செய்து மனம் இரங்கி எனக்கு கொஞ்சம் சாப்பாடாவது தாங்கோ.

கமலம் :- போ எண்டால் போ இல்லாட்டி நாயைத் தான் அவிட்டு விடுவேன்.

ரவி :- என்ன கமலம் உங்க சத்தம் என்ன பிரச்சனை?

கமலம் :- காசு தரட்டாம், போ என்று சொன்னாலும் போறானில்லை. இவனால் இங்கு பெரிய தொல்லையாய் இருக்குது.

ரவி :- நீ உள்ளுக்கை போ நான் நிம்மதியா இதில இருக்க.

(பிச்சைக்காரனுக்கு 20 ரூபா காசு கொடுக்கிறார். இதை ஒளித்து நின்று பார்த்த கமலம் சண்டை செய்ய வருகிறாள்.)

கமலம :- என்னை நீங்கள் ஏமாத்தப் பாக்காதையுங்கோ. என்ன என்னை விசரி என்று நினைத்துக் கொண்டிருக்கிறீங்கள். உங்களுக்கு நான் நல்ல பாடம் படிப்பிக்காமல் விடமாட்டேன். இண்டைக்கு உங்களுக்கு சாப்பாடு இல்லை.

(குசினிக்குள் காஸ் வெடித்து பெரும் சத்தம் கேட்கிறது)

ரவி :- என்னப்பா கமலம் உங்க சத்தம் கேட்டது காஸ் வெடித்த சத்தமே.

கமலம் :- ஓமப்பா நான் குசினிக்க போறதுக்கு முதலே வெடிச்சிட்டுது.

நடேசர் ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வுகள்



மகாகும்பாபிஷேகம் 05-11-2003
அருள்பாலிக்கும் நடேசர்



மகா கும்பாபிஷேக கிரியைகளில்
மருதடி விநாயகர் ஆலய பிரதமகுரு
சிவஸ்ரீ ப. ஜெயக்குமாரக் குருக்கள் உடன்
நடேசர் ஆலயக்குரு இ. வாசுதேவன்



ஆசீ வழங்கும் நல்லைக் குருமணி அவர்களுடன்
திரு. சிவமகாலிங்கம்



நடேசர் ஆலய மகா கும்பாபிஷேகம்



அன்னதான நிகழ்வு

உயர்தர மாணவர் மன்றம் விருந்துபசாரம்



2001



2003



2004



2004

ரவி :- பாத்தியே கமலம் நீ இப்ப குசினிக்குள் நின்றிந்தால் உனது உயிரும் போயிருக்கும். அந்தப் பிச்சைக்காரன் வடிவில் வந்து கடவுள் காப்பாற்றிவிட்டார். ஆனால், கடவுள் ஏன் அப்படி வந்தாரெண்டு உனக்குத் தெரியேலை. நான் அந்தப் பிச்சைக்காரனுக்கு தர்மம் செய்ததை அறிந்துதான் பிச்சைக்காரக் கடவுள் உன்னைக் காப்பாற்றினார். தர்மம் தலை காக்கும் என்பதை மட்டும் மறந்துவிடாதை கமலம்.

காட்சி IV

இடம் :- வைத்தியசாலை

பாத்திரம்

கணவன் :- ரவி
மனைவி :- கமலம்
வாணியின் தகப்பன்:- ரகு
வைத்தியர்
மகள் :- துளசி

கமலம் :- என்னவாம் அப்பா பிள்ளைக்கு என்ன வருத்தமாம். எனர குஞ்சை எப்படியாவது காப்பாற்றுங்கோ.

ரவி :- ஒன்றுமில்லையப்பா. ஒரு பக்க இரத்தம் அப்படியே எடுக்க வேண்டும் அதுதான் இப்ப என்ன செய்யிறது என்று தெரியவில்லை.

கமலம :- என்ன ஒரு பக்க இரத்தம் மாற்றவேணுமோ நல்லூர்க் கந்தனே நீதான் என் பிள்ளையின் உயிரைக் காப்பாற்று.

ரவி :- வெளியில ஆரும் இரத்தம் கொடுக்கிறதுக்கு நிப்பாங்கள் நான் போய் கூட்டிக் கொண்டுவாறன்.

ரகு :- என்ன ஐயா இந்தப் பக்கம் யாருக்கும் வருத்தமோ?

ரவி :- ஓம் என்னுடைய மகளுக்கு ஒரு பக்கம் இரத்தம் வெளியில எடுக்க வேண்டும். ஏற்றுவதற்கு இரத்தம் தேவை.

ரகு :- ஏன் ஐயா கவலையை விடுங்கோ நான் இரத்தம் கொடுக்கிறேன்.

ரவி :- (கட்டியணைத்து ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்) சரி வாங்கோ வைத்தியரிடம் போவோம்.

ரவி :- டாக்டர் இவருடைய இரத்தத்தைப் பரிசோதித்து பாருங்கோ.

வைத்தியர்:- சரி வாங்கோ ஐயா. உங்களுக்கு என்ன பெயர்? முதல் உங்களுக்கு ஏதாவது வருத்தம் இருக்கா?

ரகு :- என்னுடைய பெயர் ரகு. எனக்கு ஒரு வருத்தமும் இல்லை.

(டாக்டர் இரத்தம் எடுத்து பரிசோதிக்கிறார்)

வைத்தியர்:- உங்களுடைய இரத்தம் துளசிக்கு ஏற்றலாம்.

(இரத்தம் எடுத்து துளசிக்கு ஏற்றப்படுகின்றது. துளசி சுகமாகி வெளியே வருகிறாள்)

கமலம :- என்ர குஞ்சு (என்று கட்டியணைத்து கொள்கிறாள்)

ரவி :- பாத்தியே கமலம் நீ அன்றைக்கு காசு கொடுக்க மாட்டேன் என்றாய் ஆனால், நான் உனக்கு தெரியாது ரகுவிற்கு காசு கொடுத்தேன். அந்த தர்மம் தான் துளசியை இப்போது காப்பாற்றியுள்ளது. தர்மம் தலைகாக்கும் என்பதை மறந்து விடாதே கமலம்.

காட்சி V

ரவி :- ஆ ரகு நீங்களே வாங்கோ... வாங்கோ கமலம் தேத்தண்ணி ஊத்திக் கொண்டு வர ரகு வந்திருக்கிறார்.

கமலம் :- ஆ இந்தாங்கோ தேத்தண்ணி குடியுங்கோ.

(கதவு தட்டும் சத்தம் கேட்கிறது)

ரவி :- கமலம் ஆரோ கதவு தட்டினம்.

(கமலம் ஓடிப்போய் பார்த்துவிட்டு காசு கொண்டு போய் கொடுகிறாள்)

என்ன கமலம் பிச்சைக்காரனே என்ன நான் சொல்வதற்கு முந்தி நீயே கொண்டு போய் கொடுத்திட்டாய். பட்டுப் பார்த்தால்தான் ஒவ்வொருவருக்கும் தெரியும்.

ரகு :- சொல்லிச் செய்தாலும் சொல்லாமல் செய்தாலும் தர்மம் தலைகாக்கும் என்பது மட்டும் உண்மை.

முற்றும்

"அ" முதல் "ஔ" வரை வாழ்க்கைக்கு உகந்த பொன் மொழிகள்

செல்வி கு. றெமினா
தரம் 11

அரண்மனை அடிமைகளை விட குடிசை வாழ் ஏழை உயர்ந்தவன்
ஆண்பாதி, பெண்பாதி என்பது வாழ்வின் நியதியாகும்.
இனாம் எதிர் பார்ப்பவன் ஒரு போதும் முன்னேற மாட்டான்
ஈன்ற தாயும் நாடும் போற்ற நட
உன் வீடாயினும் கொல்லை வழி நுழையாதே
ஊக்கம் என்பது வெற்றியின் முதற்படி
எது நீ செய்யினும் விளைவு நலம் தரணும்
ஏனென்ற கேள்வியுடன் எதையும் ஆராய்ந்து பார்
ஐக்கியம் இல்லா வீட்டால் வெட்கித் தலை குனிவாய்
ஒழுக்கம் குறைந்தவர் இழுக்கை அடைவர்.
ஓய்வற்று இயங்கும் இயந்திரம் விரைவில் தேய்ந்து விடும்.
ஔடதம் என்பது கசந்த பின் இனிக்கும்

இயற்கை

செல்வி இ. உஷாயினி
தரம் 11C

கரம் கொண்டு வரைகின்றேன்
கவி ஒன்று
வானமும் இயற்கையே
சந்திரனும் இயற்கையே
கருமுகிலும் இயற்கையே
வானவில்லும் இயற்கையே
சூரியனில் நாம் காணும் வெப்பமும் இயற்கையே
மழையும், இடியும், மின்னலும்
நிஜமான இயற்கையே
வையமும், இயற்கையே
மலையும் இயற்கையே
மடுவும் இயற்கையே
அதில் காணும் அழகும் இயற்கையே
கடலும் இயற்கையே
குளமும் நதியும் இயற்கையே
அதில் காணும் நீரும் இயற்கை
அதில் வாழும் மீன்களும் முத்துக்களும்
இயற்கையே
மீனது அழகுக் கண்கள் பூவாக மிதக்குது இங்கு
இவையும் இயற்கையே
தானாகத் தோன்றிய கானகமும்
மரமும் இயற்கையே
கொடியும் இயற்கையே அதனை
தாலாட்டும் தென்றலும் இயற்கையே
அதில பூத்துக் காய்த்து, மலர்ந்து கனியாகி
விதையாகும் விதையும் இயற்கையே
மலரில் இருந்து உருவாகும் பானமும்
இயற்கையே

சமாதானம் தேடிவரும்

செல்வன் திலீஸ்குமார்
தரம் 10A

நான் என்ற ஆணவம் ஒழிய வேண்டும்.
நாம் என்ற தத்துவம் மேலோங்க வேண்டும்
சுயநல வாதிகள் அழிய வேண்டும்.
பிறாநல வாதிகள் வாழ வேண்டும்.

கல்வியிலே மாணவர் உயர வேண்டும்.
கற்றறிந்தோர் தொகை பெருக வேண்டும்.
உலகினிலே ஊழல் தலை மறைய வேண்டும்.
உலகமதில் உண்மை தலை தூக்க வேண்டும்

ஜாதி மத பேதங்கள் அழிய வேண்டும்.
ஏழை செல்வன் வேற்றுமை ஒழிந்து
ஒன்றே குலம் என்று பாட வேண்டும்.
ஒருவனே தேவன் என்று போற்ற வேண்டும்.

பூ மியிலே யுத்த அனர்த்தம் நீங்க வேண்டும்.
தலை தூக்கும். வேதனைகள் ஓடவேண்டும்.
என்று இந்த கொடுமை அனைத்தும் நீங்குகின்றதோ
அன்று காலை சாமாதனம் தேடிவரும்.

எங்கள் பாடசாலை

செல்வி ஜெ. கலாரூபி
தரம் 10^

மானியூரெனப் போற்றப்படும்
மாண்புறு மண்ணிலே
பதினெட்டாம் நூற்றாண்டளவில்
பள்ளியாக உருவெடுத்தாள் மெமோறியல் அன்னை

ஆணித்தரமாய் உதித்த எம் அன்னை
ஆண்மைகும் பெண்மைக்கும் இடமளித்து
இரு சாதிக்கும் பேதமை காட்டிடாது
இருப்பிடத்தே கலவன் பள்ளியாக மாற்றினாள் மெமோறியல் அன்னை

பசுமையான தருக்களின் மத்தியில்
பாலர் மாணவர் முதல்
பல்கலை செல்லும் மாணவர் ஈறாக
படியேற்றி வைக்கும் கல்வியை, ஊட்டி வருகின்றாள் மெமொறியல் அன்னை

அமெரிக்க மிஷனரி ஞாபகர்த்தமாக
அவனியில் எழுந்த எம் அன்னை
நிகழ் காலத்தில் பணிபுரியும் அதிபராக
நிறைவான அருணாசலம் அவர்களை உயர்த்திவிட்ட - மெமொறியல் அன்னை

ஒன்றரை ஆயிரம் மாணவர்க்கு இன்று
ஒழுக்க நெறிதனைக் கற்பிக்க வல்ல
பெருந்தொகை ஆசான் இல்லாத வெற்றிடம்
பெருமிதம் இழந்த தாய் மனம் போலவே - எம் மெமோறியல் அன்னைக்கு

இருப்பினும்.....

எட்டுத் திக்கெங்கும் சான்றோரை உருவாக்க
எண்ணும் எழுத்தும் தினம் தினம் கற்பித்து
தானும் சமூகமும் பெருமையைத் தேடுவதில்
தனியாக நின்றுழைத்த எம் பள்ளி - மொமோறியல் அன்னை

இயேசுவின் அருளும், நடேசரின் அருளும்
இருபுறத்தாலும் ஒருங்கே அமையப் பெற
அறநெறி துறக்க வழிகோலும் வகையில்
ஆன்மீக வழிபாட்டிற்கு முதலிடம் வகத்துள்ள எம்பள்ளி - மெமோறியல் அன்னை

நிறைவாழ்வு எனும் வாசகத்தை தனதாக்கிக் கொண்டு
நிறைவான கல்விச் செல்வத்தை வாரி நல்கிடும்
மாசுக்களை களைந்து நேர்வழி இட்டுச் செல்லும்
மானியூரில் கிடைத்ததோர் பொக்கிஷமன்றோ - மெமோறியல் அன்னை

மானி, என யாவரும் இயம்பிடும்
மாசற்ற மண்ணின் மத்தியில் அமைந்திருந்த
கண்நோக்குதலை எங்கும் மேற்கொண்டும்
கலிகளைத் துடைத்து மாண்புறு எம் பள்ளி - மெமோறியல் அன்னை

எத்துணையாளும் எம் அன்னையவள் பெருமைகளை
எடுத்துரைக்க இயலாது இருப்பினும் - என்
ஆர்வத்தின் வளர்ச்சிக்கு வித்திட்ட காரணத்தால்
அன்னையவள் தாய்மடியில் ஓர் அருங்கவிதை புனைய வந்தேன்

பொது அறிவு

செல்வி ம. கம்சா
தரம் 10^B

1. பற்சக்கரம் எந்த ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது?
   1840ஆம் ஆண்டு
2. குறைந்த எண்ணிக்கையில் துறைமுகங்கள் அமைந்த பெருங்கடல் எது?
   பசுபிக் பெருங்கடல்
3. ஜப்பான் நாட்டின் தேசிய விளையாட்டு என்ன?
   ஜூ.ஜிட்சு.
4. இத்தாலி நாட்டின் தேசிய சின்னம் என்ன?
   வெள்ளை அல்லி மலர்
5. புத்தர் எந்த நாட்டில் எங்கு பிறந்தார்?
   நேபாள நாட்டில் லும்பினி என்ற இடத்தில்
6. ஐக்கிய நாடுகள் சபையின் கொடியின் நிறம் என்ன?
   வெள்ளை
7. இலண்டன் கோபுரத்தைக் கட்டியவர் யார்?
   1ஆம் வில்லியம் மன்னன்
8. எந்த நாட்டில் 3 1/2 கோடி மக்கள் குகையில் வாழ்கின்றனர்?
   சீனா
9. யுரேனியம் அதிகமாகக் கிடைக்கும் நாடு எது?
   நமீபியா
10. தபாலட்டை முறையை கண்டுபிடித்தவர் யார்? அவர் அந்த நாட்டைச் சேர்ந்தவர்?
    இமானுவேல் ஹோமன், ஆஸ்திரியா.

கருநாகமும் கஸ்டகாலமும்

செல்வன் சி. சிவகுமார்
தரம் 10^A

அதுவொரு விவசாயக் கிராமம். அதைச்சுற்றிப் பற்றைக் காடுகள் வளந் திருந்தன. அங்குள்ள விவசாயிகள் கோழி வளர்ப்பிலும் ஈடுபட்டிருந்தனர். அப்பற்றைக் காட்டிலே கீரிகள் நடமாட்டம் அதிகமாய் இருந் தது. அவை கோழிகளைக் களவாகப் பிடித்து உண்டு மகிழ்ந்தன. அப்படியிருந்தும் அங் கொரு கருநாகம் வசித்து வந்தது. அது மிக அவதானமாக தனது காரியங்களை செய்தமை யால் கீரிகள் கண்ணில் படாமல் பலகாலம் வசித்து வந்தது.

எவ்வாறாயினும் நிம்மதியற்ற வாழ்க்கையினையே அது வாழ்ந்து வந்தது. இதனால் அந்த ஊரை விட்டு ஓடி வேறு ஊருக்கு செல்லத் தீர்மானித்து. கீரிகளின் கண்ணுக்குள் எப்படி பஞ்சை வைப்பது? அதன் கண்கள் கூர்மையானவை. சுறுசுறுப்பானவை. அத்துடன் கீரி தனியாக வாழாது அவர்களி டமிருந்து தப்பிச் செல்வதென்பது மறுபிறவி எடுப்பதை போலாகுமென்று எண்ணிக் கொண்டது.

அன்றொரு நாள் எதிர்பாராத பெரும் மழை! கருமுகில்கள் புடைசூழத் தொடங்கின. பெரும் காற்று எதிரும் புதிருமாய் வீசியது. மரங்களெல்லாம் தமது கொப்புக்களை காற்று வந்த திசையெல்லாம் கட்டாயம் விட நேரிட்டது. எங்கும் ஒரே சோ என்ற சத்தம். மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடிச் சென்றனர். பறவைகள் மிருகங்க லெல்லாம் உறைவிடம் தேடி விரைந்தது. சொற்ப நேரத்திலே வெள்ளம் கரைபுரண்டு ஓடத் தொடங்கியது. கடும் தாகத்திற்கு தண்ணீர் கிடைத்து போல நிம்மதி ஏற்படவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திய நாகம் வெள் ளத்தினுள் துள்ளிக் குதித்தோடியது. கீரிகள் எதுவும் காணாத நிலையில் தலையை மாத்திரம் வெள்ளத்தின்மேல் நீட்டிக் கொண்டு நல்ல இடம் வரும்வரை வெள்ளத்தோடு வெள்ளமாக நீந்திக் கொண்டு சென்றது. ஒருவயற்கரையை அடைந்ததும் மெதுவாகத் தண்ணீரில் இருந்து வெளியே வந்து ஒரு வரம்படியில் சற்று இளைப்பாறியது.

இக்கிராமம் எப்படிப்பட்டதோ தெரியாது என்ற சிந்தனையுடன் எப்படியும் முதலில் தப்பித்து கொள்வதற்கு பாதுகாப்பான இடமொன்றைத் தெரிவு செய்யச் சுற்றும் முற்றும் அவதானத்துடன் பார்த்தது. மழை வந்த அதிஸ்டம் போலும் பெரிய கறையான் புற்று வரம்பின் முடிவில் இருப்பதைக் கண்டு அங்கு சென்று அது பலவழிகளிலும் வசதியாய் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தது.

நூல் - சிந்தனை செய் மனமே

அடிமையாக இருக்க எப்படி எனக்கு விருப்பமில்லையோ அதைப் போல எஜமானாக இருக்கவும் எனக்கு விருப்பமில்லை

பெற்றோரை பேணி அவர் பெருமை சொல்வோம்

செல்வி சே. ஜனார்த்திகா
தரம் 11C

உற்ற பிறவியல் உயர்ந்தோராய் வாழ்வழிக்கும்
பெற்றோரின் பெருமை சொலின் பேருலகில் நிகருண்டோ
கற்பத்திலேந்தி கருத்துடனே சுமை தாங்கி இத்தரைக்கு
எமை ஈன்ற அன்னையே என் தெய்வம்
கண்கண்ட கடவுளாம் அவளின்றேல் இத்தரையில்
பண் கொண்ட வாழ்வை பழகிடவும் வாய்ப்புண்டோ
கற்பத்தில் சுமந்த நம் தெய்வம் தாயானால் - கருதி
எமக்குயிரளித்த பெற்றவள் பேறு சொலின்
இத்தரைக்கு எமை ஈய இங்கிதமாய் நல்ல
உத்தமனாம் தந்தை அவன் உயர்வான உணர்வில் வந்த
சித்தர்கள் நாம் செல்வச் சிறார்களாய்ப் பரிநமித்தோம்
பெற்றவர்கள் இவர்கள் என்றால் முதற் பெரியவர் யார் என்ற
வித்தகக் கேள்விகட்கு வீண் கதைகள் பேசுவோர்க்கு
பத்தியமாய் ஒன்று சொல்வேன் பாரில் இந்த
பத்தரை மாத்துத் தங்கங்கள் இருவருமே பெரியவர்தாம்
அன்னையவள் தான் சுமக்க அவள் வயிற்றில் உயிர்ந்த
கண்ணனைய தந்தை புகழ் பெரிதன்றோ
பத்து மாதம் பண்போடு எமைச் சுமந்து பாருக்க எமை
ஈய்ந்த பெண்மையின் பெருமையதோ!
பெற்றோர்கள் இருவரும் பிள்ளை எந்தன் இரு கண்கள்
நற்றவத்தாள் நமக்கு பிறவி தந்த பெற்றோரை
பணிந்திடுவோம் பெற்றோரைப் போற்றிடுவோம் அவர் பதம் பணிந்திடுவோம்
பெற்றோர் எமை வளர்க்க எத்தனை இன்னல்களும்
துன்பங்களும் அனுபவித்தார்கள்
பாரில் நான் பிள்ளையாயப் பாய்ந்து வந்தவுடன்
பாலோடு அமுதமும் பாங்காய்க் கரைத்தூட்டி
பக்குவமாய் பகல் மதியம் இரவெல்லாம் பகிர்ந்தளித்து
சித்தம் மகிழ சிங்கார உடை சேர்த்து
உத்தமராய் உலகினில் உலாவிட உண்மைப் பண்பும்
நல் ஒழுக்கங்கள் எல்லாம் அருகிருந்தூட்டி அருங்
குணங்கள் கூட்டி இங்கிதமாய் நாம் வாழ
வழிகாட்டும் தெய்வம் அம்மா
அத்தகைய அன்னைக்கு அருமந்த பிள்ளையாய்
ஆகினோமா நாமென்று அவள் அளித்த அன்புக்கு
பதில் கொடுத்துப் பண்பாய் ஆதரவு கொண்டோமா?

வாய் நிறைய வாங்கி உண்டோம் வளர்ந்து
நன்றாய் வடிவெடுத்தோம்
ஈய்ந்த பிறவிக்காய் நன்றி சொல்லி வாழ்வோமா?
இல்லை இல்லை நயவஞ்சகர்கள் நாம்
பெற்ற தாயைப் புறக்கணித்து பெண்மை நலத்தை
பிறிதொன்றாய்க் கருதி தாய்மை
உண்மைத் தரிசனத்தை உதறியே எறிந்து விட்டோம்
ப்பால் தந்த முலைக்குப் பண்பில்லா பாதகர்கள்
பரிதாப வியாக்கியானம்
அன்னை அன்பை அவள் - அன்போடு ஒப்பிட்டு
வீண் வம்புக் கதை பேசும் வாலிபராய் வளர்த்து விட்டோம்
அன்னை சொற் கேட்கும் பழக்கத்தை
அரிவரியில் மறந்து விடும் பாதகர்
பெத்த பிதாமகனை பித்தன் என்று பேசிவிட்டு
உத்தம பிள்ளை ஒன்று உதைத்து விடும் காலாலே
உன்னைப் பிதாவாகப் பெற்றதால் வாழ்வழிந்தேன் நான் என்று
பித்தனே என் சுதந்திரத்தை ஏன் தடுக்கின்றாய் - என
பெற்றோரை மதிக்காத மைந்தர் தாம் எத்தனை பேர்?
அணைத்து அன்பு காட்டி ஆதரவாய் வளர்த்த அன்னை
இளைத்து விடும் போது ஆதரிக்க மகளில்லை
அத்தானைக் கண்டவுடன் அன்னையை எடுத்தெறிந்து
அலட்சியமாய் வாழும் எத்தனை மகள் மாரை
இத்தரையில் காண்கின்றோம்?
அடுக்களை வாழ்வாய் தன்னைச் சருகாக்கி - அம்மா
கறபூரம் எனத் தேய்ந்தும் ஒளிகாட்டும் அன்னையை
அன்போடு எப்போதும் பேணும் பண்பமைப்போம்
அயராமல் இருந்த எங்கள் அம்மாவும் அப்பாவும்
அடுசிடையாய் ஆதரவு தனை நாடி வீழ்ந்திடும் போது
அவர்களுக்கு அன்பளித்து ஆதரவாய்க் காத்திடுவோம்
அரும் மருந்தாய் உதவிடுவோம்
படுக்கையில் விழுந்தாலும் பாரினில் அணு வந்தாலும்
உடுக்க உடையின்றி உலகில் சிதைந்தாலும்
அவர்கள் புகழ் என்றுமே மறவோம்
செத்து மடிந்து சீரழிய நினைத்தாலும் வித்தகனாய்
எமை வாழ சித்தம் தந்த எம்மிறைவன்
இத்தரையில் பிதா என்றும் உத்தமராம் இவ்விருவர்
பாதம் பணிந்து போற்றிடுவோம்
இத்தனையும் சொன்ன என்னை பெற்ற தாய்
பார் மகிழ எனை வளர்த்த உத்தமனாம் என்
தந்தை இத்தரையில் வாழும் வரை சத்தியமாய்
அவர் பாதம் பணிந்து
வாழ்ந்திடுவேன் நான் என்று இக்கவியில்
செப்பி நின்று நீங்கிடுவேன் என் வணக்கம்

"வள்ளுவன் புவி நோக்கி மீண்டும் காலடி வைத்தால்"

செல்வன் செ. பர்மிலன்
தரம் 10A

திருவள்ளுவர் உலகின் வழிகாட்டி தமிழகத்தில் பிறந்தவர். ஈடு இணையற்ற இலக்கியம் தந்தவர். சமநோக்குடைய சமரச ஞானி. தமிழ் நாட்டிற்கு மட்டுமல்ல உலகிற்கே நீதியை வழங்கிய நல்லவர். இவருடைய புலமையைப் புகழாத புலவர்கள் இல்லை. உலகிற்கு சூரியன் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் திருக்குறள். திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப் பெரும் பிரிவுகளை உடையது. 133 அதிகாரங்களையுடையது. ஒவ்வோரு அதிகாரத்திலும் பத்து (10) குறள்கள் வீதம் 1330 குறள்கள் உடையது.

இத்தகைய ஒப்பற்ற திருக்குறளை தந்த திருவள்ளுவர் ஒரு நாள் பூவுலகிற்கு விஜயம் செய்கிறார். திருவள்ளுவர் என்ற பெயருடன் பல விளம்பரப் பலகைகள், அறிவிப்புப் பலகைகளைக் காண்கிறார். வள்ளுவர் நகரம், வள்ளுவர் அங்காடி, வள்ளுவர் அச்சகம், வள்ளுவர் புத்தக நிலையம் வள்ளுவர் போக்குவரத்து வண்டி, வள்ளுவர் தெரு, வள்ளுவர் கல்வி நிலையம், வள்ளுவர் கணனி நிலையம் போன்ற விளம்பரப் பலகைகளை வள்ளுவர் கண்ணுற்றார். தன் பெயரைச் சொல்லி எத்தனை பேர் வயிற்றுப் பிழைப்பு நடத்துகின்றார்கள் எனத் தன் மனதுக்குள் சொல்லிச் சிரிக்கின்றார்.

வள்ளுவர் ஒவ்வொரு நாளும் இரவில் பி.பி.சி. தமிழ்ச் செய்திகளைக் கேட்கிறார். பி.பி.சி. வானொலியிலி நிகழ்ச்சி தொடங்க முன்னர் ஒரு குறளும் அதற்கான பொழிப் புரையும் கூறப்படுவதைக் கேட்கிறார். ''தேம துரத் தமிழோசை" வானொலி மூலம் பரப்பு வதற்குத் தான் ஆக்கிய திருக்குறள் அறிவுரை யாகப் கூறப்படுவதைக் கேட்டுப் புளகாங்கிதம் அடைகிறார். தனது மனைவியர் வாசுகியும், தன்னையும் போல வாழ்வு வாழ வேண்டும் எனப் பலர் வாழ்த்துவதையும் கேட்கிறார். இயக்குனர் பாலச்சந்தர் தனது கவிதாலய நிறுவன சினிமாவுக்கு வள்ளுவர் இலட்சினையைத் தேர்ந்தெடுத்து தொலைக்காட்சியிலும், பெரிய திரையிலும் காண்பிப்பதைக் கண்டு மகிழ்கின்றார். முதலாம் வகுப்பு தொடக்கம் பல்கலைக் கழகக் கல்வி வரை தமிழ் மொழிப் பாடத்தில் ,திருக்குறள் இணைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறார்.

''தன்னைத் தான் காதலன் ஆயின் எனைத் தொன்றுந்
துன்னற்றக தீவினைப் பால்"

ஒருவன் தன்னிலே தான் பற்றுள்ளவனாய் இருக்க வேண்டும் அதாவது சுயநலம் உள்ளவனாக இருக்க வேண்டும். இதையே இன்றுள்ள மனிதர்கள் கடைப்பிடிப்பதைக் கண்டு வள்ளுவர் மனம் கவலைப்படுகின்றார். எத்துணைச் சிறிய ஒரு தீமையையும் பிறருக்குச் செய்யக் கூடாது என்பதை ''மனிதர்கள் கடைப்பிடிக்காததைக் கண்டும் கவலைப்படுகிறார்.

பாரதியார் ''வள்ளுவனை தந்தனை உலகினுக்கே தந்து" வான்புகழ் கொண்ட தமிழ் நாடு"

ன்ற கருத்துச் செறிவோடு பாடியதைக் கேட்டுப் புளகாங்கிதம் அடைகிறார். ''ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி''. இங்கு இரண்டு என்பது ஈரடியாய் அமைந்த திருக்குறளைக் குறிக் கின்றதைக் கேட்டு மனமகிழ்கிறார். தனது நூலிற்கு பலர் உரை எழுதிய போதும் பரிமேலழகர் உரை சிறந்ததாக இன்றும் போற்றப்படுவதைக் கண்ணுறுகிறார்.

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்''

''உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு''

ஆகிய குறள்கள் இன்றும் மதிப்புப் பெறுவதைக் காண்கின்றார்.

திருக்குறள் பொருட்பகுதியில் அரசர், அமைச்சர், படைத்தலைவர் முதலியோரின் இலக்கணங்களாகக் கூறப்பட்டனவும் பிறவும் யாண்டும் காண்டற் கரியனவாம். ஒற்றும் நீதி நூலும் ஆகிய இரண்டும் அரசர்களுக்கு இரு கண்களாகும் என்று கூறப்பட்டுள்ளது. நாட்டின் இலக்கணம் கூறுங்கால் ஒரு நாட்டில் வாழ்வோர் தேடி வருந்தாமல் வேண்டுவன எல்லாம் அங்கே பெறத்தக்கதாக இருத்தல் வேண்டும். என்னும் கருத்தமைய ''நாடென்ப நாடாவளத்தன'' என்கிறார். பிணியின்மையும், நிரம்பிய செல்வமும், விளைவும், இன்பமும், காவலும் ஆகிய இவ்வைந்தும் நாட்டுக்கு அழகு செய்வன. எனக் கூறப்பட்டுள்ளன. இதனால் அரசன் தன் நாட்டை இத்தகுதி களுக்கு உரியதாக அமைத்துக் கொள்ள வேண்டும். திருவள்ளுவரது இக் கூற்றுக்கள் இன்று அவமதிப்புப் பெறுவது கண்டு கவலைப்படுகிறார்.

பன்னாட்டு மொழிகளில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதைக் காண்கின்றார். குறள் பலராலும் மேற்கோள்களாக எடுத்தாளப் பட்டுப் போற்றப்படுவதைக் காண்கிறார். தன்குறட் பாக்களுக்குப் புதுப்பாக்கங்கள் புனையப்பட்டுள்ளமை கண்டு வள்ளுவர் மனம் கலங்குகிறார். தான் கூறிய சமூக, பொருளாதார, அரசியற் கருத்துக்களுக்கு இன்றைய சமூகம் அளிக்கின்ற அவமதிப்புக் கண்டு மனம் கலங்குகின்றார். சுவாமி விபுலாநந்தர் தான் இயற்றிய ''கங்கையில் விடுத்த ஓலை'' என்ற நூற் பகுதியில் சந்திர னுடன் உரையாடுகிறார். ஒருவன் ஒரு பிறவியில் கற்ற கல்வி அவனுடன் மறைந்து விடுமோ என்று சுவாமி சந்திரனை வினாவு கின்றார். அதற்குச் சந்திரன் குறளை மேற் கோளாகக் காட்டுகின்றான்.

''ஒருமைக்கண் தான் கற்ற கல்வி
எழுமைக்கும் ஏமாப் புடைத்து''

என்ற திருக்குறளை உதாரணம் காட்டுகின்றான். இவற்றை எல்லாம் கேட்டுத் திருவள்ளுவர் புளகாங்கிதம் அடைகிறார்.

''நெருப்பைக் கண்டால் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்'' என்பது நல்ல புத்திமதி ''பேசும் வார்த்தையில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்'' என்பது அதைவிடப் பலமடங்கு மேலானது. எண்ணங்களைச் சொல்லாமல் இருந்தால் சில சமயம் அவை மடிந்துவிடும் ஆனால் சொன்ன வார்த்தையை அழிக்க முடியாது.

-எம். ஹென்றி

தமிழ் அன்னையின் தவிப்பு

செல்வன் செ. சதீஸ்குமார்
தரம் 11[C]

தமிழ் அன்னை தவிக்கிறாள்
தலை குனிந்து நிற்கிறாள்
வளமான வாழ்வை எண்ணி கண்கள்
குளமாகி நிற்கிறாள் கடுந்துயரோடு

நித்தம் நித்தம் அலைகிறாள்
பீத்துப் பிடித்து ஓடுகிறாள்
சத்தம் கேட்டு அரற்றுகிறார்
புத்தம் புது வாழ்வை எண்ணி

நித்திரையின்றி வாடுகிறாள்
இத்தரையை எண்ணி ஏங்குகிறாள்

பத்தரை மாற்றுத் தங்க மலரை
பரிதவிக்க விடல் தகுமா சொல்லுங்கள்

போரினால் ஏற்பட்ட அனர்த்தங்களால்
சீரழிந்து போயுள்ள தம் மக்கள்
ஊருராய் அலைவது கண்டு
சோர்ந்து துவண்டு துடிக்கிறாள்

இடப் பெயர்வில் எம் மக்கள்
இடம் பெயர்ந்து பெயர்ந்தே
சமமாக மாறி விட்டனரே மனத்
திடமும் குன்றி விட்டனரே மண்ணில் .....

வீதி விதிகள்

செல்வன் செ. பர்மிலன்
தரம் 10[A]

பள்ளி செல்லும் பிள்ளையே
பாடம் ஒன்று கற்றுக்கொள்
நல்ல சாலை விதிகளை
நன்கு மனத்தில் வைத்துக்கொள்.

நடக்கும் பாதை வழியிலே
நாளும் நீயும் கற்றுக்கொள்
கடக்கும் இடத்தில் கவனமாய்க்
கடந்து போகத் தெரியணும்.

உரத்துப் பேசி மகிழ்ச்சியாய்
சேர்ந்து நல்லவர் சாலையை
மறித்துச் செல்லல் நல்லதோ?
மனத்தில் எண்ணிப் பாருங்கள்.

வளைவில் பிறரை முந்தினால்
வந்து நிற்கும் விபத்துமே
அளவில்லாத வேகத்தால்
ஆபத்துண்டு தெரிந்துகொள்.

பாதையில் பந்து பம்பரம்
பட்டம் போன்ற விளையாட்டு
வேதனை தருமே யாருக்கும்
வேண்டாம் அவற்றைத் தவிர்த்திரு.

வீதி விதிகள் பேணி நிதம்
விரும்பும் இடமே போய்வரலாம்
ஏதினி வீதியில் விபத்துக்கள்
எல்லாம் தவிர்த்தே மகிழ்வோமே.

வண்ண வண்ண மலர்கள்

செல்வி செ. தர்சினி
தரம் 10

வண்ண வண்ண மலர்கள்
வகை வகையாய் மலர்ந்து
கன்னங்கரிய விழிகளை
கொள்ளை கொள்ளும் மலர்கள்

வண்ண வண்ண மலர்களாம்
வடிவில் எம்மை மயக்குமாம்
கண்ணுக்கழகு தந்திடுமாம்
பார்த்து இன்பம் பெற்றிடுவோம்

சின்னஞ்சிறிய பென்னம் பெரிய மலர்களாம்
சிறந்த நல்ல நல்ல மலர்களாம்
எந்த நிறங்கள் இருந்தாலும்
கண்ணைக் கவரும் மலர்கள்

பணம் இல்லாமல் பெற்றுக் கொள்ளும்
வாசம் மிக்க மலர்கள்
இலகுவில் பெற்றுக் கொள்ளும்.
கடவுள் முதல் மனிதன்வரை சூடிடும் மலர்கள்.

வண்ண வண்ண அழகு
இயற்கை என்னும் அழகு
பார்த்து இன்பம் பெற்றிடுவோம்
கண்களை கொள்ளை கொள்ளும்

இயற்கை அன்னை அழகில்
மகிழ்ச்சிக் கடலில் தூங்க
இயற்கை அன்னை எம்மை பெற்றாய்
அவளை என்றும் வாழ்த்திடுவோம்.

நல்ல நண்பன்

செல்வன் செ. சுரேஸ்நாத்
தரம் 10A

நல்ல நல்ல நண்பன்
நன்றியுள்ள நண்பன்
கை கொடுக்கும் நண்பன்
கனிவு காக்கும் நண்பன்

துன்பத்தின் போதினில்
ஆறுதல் தரும் நண்பன்
துக்கமான சுமைகளையும்
சுகமாய் இறக்கும் நண்பன்

கெட்ட வழியில் செல்பவனையும்
நல்ல வழியில் செலுத்துபவன் நண்பன்
கடைசி வரையில் எமக்கு
உயிர் கொடுக்கும் நண்பன்

முக்கோணியின் பரம்பலைத் துணிவோம்

செல்வி சர்மிளா
தரம் 10

செயல்முறை:-

படி I:- முக்கோணி ABC யில் C என்னும் புள்ளியை BCயின் மீது இருக்கத் தக்கவாறு உச்சி A இனூடு மடிக்குக





படி II:- மடித்த பின் விரிக்குக:



படி III:- D மீது A ஐத் தொடுமாறு மடிக்குக



படி IV:- விரிக்குக



படி V:- MN, AH வழியே வெட்டி எடுத்து BM; CN உடன் பொருத்தி செவ்வகமாக்குக:



செவ்வகத்தின் பரப்பு = BC x DH
1/2 AD = DH
∴ செவ்வகத்தின் பரப்பு = முக்கோணத்தின் பரப்பு
= BC x DH
= BC x 1/2 AD
∴ முக்கோணத்தின் பரப்பு = 1/2 x அடி x செங்குத்து உயரம்

கூர்ங்கோண முக்கோணிகள், விரிகோண முக்கோணிகள், சமனில் முக்கோணிகள் எல்லாவற்றிற்கும் இம்முறையில் துணியலாம்

கம்பனின் கவிச் சிறப்பு

செல்வன் எ. அறிக்சன்
தரம் 10^

உவமைகளைக் கையாள்வதில் இணையற்ற சிறப்பு வாய்ந்தது கம்பனின் கவிச் சிறப்பு. இராமனின் அழகை வியந்து பாடுகையில் அவனது கண்களைச் ''சிரித்த பங்கயம் ஒத்த செங்கணார் இராமன்" என்றான். எல்லோரும் அறிந்த - பங்கயம் - தாமரையைக் கொண்டு நாம் கண்டு அறியாத இராமனின் கண்களின் அழகைக் வர்ணிக்க நினைத்தான். அதுவும் தாமரையை சிரிக்க வைத்தான். சிரித்த தாமரையைப் போன்ற கண்கள், என்றான். சிரிக்கும் இயல்பை அந்த தாமரைக்கு ஏற்றிவிட்டான். (தாமரை போன்ற கண்கள் சிரிக்கும் என்றான்.) தாமரை போன்ற கண்கள் என்று கூறினால் அதற்கு விரிதல், மலர்தல், வாடுதல், கூம்புதல் முதலிய நிலைகள் இருப்பதால், இராமபிரானின் கண்கள் இந்நிலைகளில் எந்த நிலையில் உள்ள தாமரையை ஒத்தது எனச் சந்தேகம் எழலாம் அல்லவா? அதனால்தான் கம்பன் சந்தேகம் இன்றிப் புதிதாக மலர்ந்த தாமரை மலரை ஒத்த மலர்ந்த மகிழ்சியுடன் கூடிய கண்களைக் கொண்ட இராமன் என்று கூறி இராமபிரானின் அழகை வியந்தார்.

•

மேலும் இராமபிரானின் அழகைக் கூற வந்த சொல்லிற்கு அப்பாற்பட்ட நிலையில் அழகைக் கூற முடியாது என்ற நிலையைக் காண முடிகின்றது. காட்டிலே இராமன் தன் தம்பி இலக்குவனோடும் மனைவி சீதையுடனும் நடந்து செல்கின்ற காட்சியை வர்ணிக்கத் தொடங்கி மாலை வெயில் இராமனின் நீல மேனியில் பட்டுத் தெறித்த காட்சி கம்பனின் கற்பனையில் வரவே அதனை ''மையோ, மரகதமோ, மறிகடலோ, மழை முகிலோ ''ஐயோ" என்ற சொல் இரக்கக் குறிப்பை உணர்த்தியது. தனது ஆற்றாமையைக் கூறி மேலும் இராமனின் அழகை வியக்கத் தக்கதாக்கி . வர்ணிக்க . முடியாததாக்கி விடுகின்றார் கவிச்சக்கரவர்த்தி.

இலக்குவனது கோபத்தைக் கூறவந்த கம்பர் ''மூட்டாத காலக் கடைத்தீ" என்று குறிப்பிட்ட காரணத்தைப் பார்கையில் - தாழ்ந்த ஓர் உவமையை கையாள்கிறார். இங்கு கல்வி வேள்விகளில் சிறந்த இலக்குமனையே சினம் கொண்ட நிலையில் பேசவைக்கிறார். கம்பர் தமையனிற்கு கிடைக்க வேண்டிய முடியை ஏமாற்றி பறித்தமையின் விளைவே இலக்குமணனின் ''மூட்டாத காலக் காட்டுத் தீ". இத் தீ மேல் உலகத்தையும் சுட்டெரிக்கக் கூடிய கொடுமையானது இங்கு இந்த உதாரணத்தைக் கையாளாது விட்டிருப்பின் இலக்குமணனது கோபம் வாசகர்களுக்கு இத்தனை கொடுமையானது என்பது புலனாகி இருக்காது.

குணநலம், அறிவு நலம் மிக்க இலக்குமணனது மனோநிலை ''கனல்போல் எழுந்த சினம்" காரணமாக மிகவும் தாழ்ந்த நிலைக்குச் சென்று விட்டதனால் அவன் வாயிலிருந்து வந்த வார்த்தைகளும் அவ்வாறு தாழ்வானவையாய் அமைதல் பொருத்தம் என்றே கம்பர் கையாண்டுள்ளார். வாசகருக்கு அவ்வார்த்தைதான் இலக்குமணன் கோபத்தை உணர உதவியது.

இராமனுக்குக் கிடைக்க வேண்டிய முடியை பரதனிற்கு கைகேயி பெற்று வைத்த நிகழ்வும் கம்பருக்கும் பெரும் துன்பத்தை விளைவித்தோ என்னவோ! அதனை ''சிங்க குருளைக்கும் இரு தீம் சுவை ஊனை தாயின் வைங்கண் சிறு குட்டனை ஊட்ட விரும் பினாளே"

என்று குறிப்பிட்டார் பலராலும் பலவிதமாகப் போற்றி பேசப்பட்ட பரதனை இலக்குவன் வாயிலாக ''பொறாமை பாட்ட சொறி நாய்'' என்று கூறவைத்த கம்பனின் கல்வித் திறமையை வியக்கத்தான் வேண்டும். குலம், கல்வி, குணநலங்கள் யாவும் பெற்ற பரதனை இவ்வாறு மிக மிக தாழ்வாகக் குறிப்பிட்டுக் கூறியதன் மூலம் மட்டும் தான் இலக்குவனது கோப உணர்வு வெளிக்காட்டப்பட்டுள்ளது. வாசிப்பவர்கள் இவ் உவமை மூலம் உண்மையாகவே இலக்கணமானது மனநிலையை உணரக் கூடியதாக உள்ளது. இத்தகைய உவமைகள் மூலம் கூற வந்த விடயங்களைத் தத்ரூபமாக காட்டும் திறமை கவிச் சக்கரவர்த்தி கம்பனுக்கே உரிமையானது எனலாம்.

அம்மா! பாருங்கள் அங்கே ...

செல்வி. கு.றெமினா
தரம் 11

அம்மா பாருங்கள் அங்கே - நண்பர்கள்
சும்மா நிற்காது விளையாடுகிறார்கள்
நானும் விளையாடப் போறன் - அம்மா
வீணே இதில் நீங்க தலையிட வேண்டாம்.

கூட்டாகச் சேருவோம் நாங்கள் - நல்ல
பாட்டோடு கைதட்டி பகிடிகள் சொல்வோம்
கூத்தொன்றில் பாடுற பாட்டு - நண்பன்
கொச்சையாய்ப் பாடிட பொறுமையாய்க் கேட்டு

படிப்புக்கு முதலிடம் கொடுப்போம் - ஆசான்
பகிர்கின்ற பாடத்தை காதினில் மடுப்போம்.
அடிதடி சண்டைகள் இல்லை - எங்கள்
அன்பென்ற வீட்டுக்கு வானமே இல்லை.

பழம் பறிக்கத் தாண்டி - சட்டை
கிழியவே அயல் வீட்டார் அடியையும் வேண்டி
அழுது கொண்டோடி வருவோம் - அன்று
நடந்ததை எண்ணி நாளுமே சிரிப்போம்.

கெந்தி கிளித்தட்டு கபடி - எல்லே
விளையாட களைப்பேதும் எமக்கினி இல்லை
அந்தி சாயும் பொழுது மட்டும் - நண்பர்
ஆர்ப்பாட்ட கூச்சல்கள் வானையுமே எட்டும்.

சக்கரை போல் கல்வி இனிக்கும் - நாளை
சாதனை செய்யவே நம்முள்ளம் கொதிக்கும்
அக்கறையுடனே எம் பள்ளி - சென்று
அதிகமாய்க் கற்று வருவோமே துள்ளி.

எங்கள் ஸ்தாபகர்

செல்வன் தெ.திலக்சன்
தரம் 10A

எங்கள் ஸ்தாபகர் றொபேட் ஸ்டீ வின்சன் சிமித் பேடன் பவுல் பிரபு. இவர் 1857ஆம் ஆண்டு மாசி மாதம் 22ஆம் திகதி இங்கிலாந்தில் பிறந்தார். இவரது தந்தையின் பெயர் F.G. பேடன் பவுல் இவர் ஒரு மதகுரு அத்துடன் ஒக்ஸ்பேட் பல்கலைக்கழகப் பேராசிரியரும் ஆவார். இவருடைய தாயின் பெயர் ஹனறியேற்றா குறேஸ்மித் ஆவார். இவருக்கு மூன்று வயதில் தந்தையை இழந்தார். இவரும் இவருடைய குடும்பமும் எழ்மையை அறியமாட்டாது தாய் பிள்ளை ஒற்றுமையாகவும், சகோதர ஒற்றுமையாகவும் மகிழ்சியுடன் வாழ்ந்தார்.

பேடன் பவல் அவர்கள் 1870ஆம் ஆண்டு உபகாரச் சம்பரம் பெற்று உயர் கல்லூரியில் உயர்கல்வி கற்கத் தகுதியானார். இவர் நடிப்பு, விளையாட்டு, ஓவியம், சங்கீதம், வெட்ட வெளி வாழ்க்கை, படகு ஓட்டுதல், ஆகிய புறக் கல்விகளில் ஆர்வம் மிகுந்த வராகத் திகழ்ந்தார். தனது பத்தொன்பதாவது வயதினிலே பட்டப்படிப்பினை முடித்து விட்டு நாட்டுப் பற்றோடு இராணுவத்தில் சேர்ந்தார். இவர் தன் இராணுவச் சேவையிலே இந்தியா, ஆப்கானிஸ்தான், ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் பணி புரிந்தார். இவர் தனது இருபத்தாறாவது வயதில் தளபதி ஆனார். அப்போது காட்டுப் பன்றி வேட்டையாடி பரிசு பெற்றார். கலு வம்சத்தாருடன் நடைபெற்ற போரிலே ''இம்பிசா'' என்ற பெயர் இவருக்கு கிடைத்தது. அந்தப் போரிலே இவர் வெற்றி நாட்டினார்.

1895இல் கேணல் ஆனார். இரு நூற்று இருபத்தேழு நாட்களாக சிறு படையின் உதவியுடன் மேப்கிந் நகரைக் கைப்பற்றிப் பெரு வெற்றி ஈட்டினார். இதனால் மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு பெற்றார். 1901ஆம் ஆண்டு பெரும் வெற்றி வீரராகத் தன் தாய் நாடு திரும்பினார். 1903இல் சாரணியத்தின் துணை என்னும் நூலைப் பகுதி பகுதியாகப் வெளியிட்டார். அந்நூல் சகலரிடமும் பெரும் ம்திப்பைப் பெற்று விளங்கியது.

விக்டோரியா மகா இராணியாரின் வேண்டுகோளுக்கிணங்க 1907ஆம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள பரீட்சாத்த சாரணர் பாசறையை 20 சாரணர்களுடன் நடத்தினார். இதிலே பெரும் வெற்றியும் ஈட்டினார். 1908இல் அவரது சகோதரி ''சுக்னஸ்'' முதலாவது பெண் சாரணியராகச் சேர்ந்து கொண்டார். இவர் 1910இல் பெண் சாரணிய இயக்கத்தினை ஆரம்பித்தார் பேடன் பவல் அவர்கள் இராணு வத்திலிருந்து ஓய்வு பெற்றார்.

1912இல் உலக சாரணிய சுற்றுலாவை மேற்கொண்டார். 30.12.1912 இல் றுவன் என்பவரை திருமணம் செய்து கொண்டார். இவரும் புறக் கலைகளிலே மிகவும் ஆர்வம் உடையவர்களாக காணப்பாட்டார்கள். 22.02.1882 றுவன் பிறந்தார். இவர்களுக்கு பீற்றர் என்ற ஒரு மகனும் கீதா, பெற்றி எனும் மகளும் பிறந்தனர்.

பேடன் பவல் பிரபு அவர்கள்

1916 - குருளைச் சாரணரையும்
1918 - திரி சாரணியத்தையும்
1919 - கில் வெல்லுங்காவையும். ஆரம்பித்தார்.
1920 - உலக பிரதம சாரணியராக 1வது உலக ஜம்பொறியில் பிரகடனப்படுத் தப்பட்டார்.
1928 - 5ஆம் ஜோர்ச் மன்னனால் பிரவுப் பட்டம் பெற்றார்.

1950 - சீமாட்டி பேடன் பவல் உலகப் பிரதம சாரணியராகப் பிரகடனப்படுத்தப்பட்டார்.

1938இல் பேடன் பவல் தனக்குப் பிடித் தமான ஆபிரிக்காவிலுள்ள கென்யாவிற்குச் சென்று வாழ்ந்தார். திருமதி பேடன்பவல் 11 நாடுகளுக்கு 13 மில்லியன் Km தூரம் 654 விமானப் பயணங்களை மேற்கொண்டார். 1974இல் சகயீனம் காரணமாக ஓய்வு பெற்றார். இவர் 8.1.1941 இல் காலமானார். ஆனால், நாட்டுக்கு உழைத்த உத்தமர் என்றும் அழிவதில்லை.

****

புண்படப் பேசாதே (சிறுகதை)

செல்வன் இ. உதயகுமார்
தரம் 10A

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டில், சரிந்தர் என்ற அறிஞர் இருந்தார். நகைச் சுவை உணர்வும் அறிவுக் கூர்மையும் நிறைந்திருந்த அவர் சமயத்திற்கு ஏற்றபடி பேசும் ஆற்றலும் பெற்றிருந்தார். ஆனால், அவர் தோற்றத்தில் குள்ளமாக இருந்தார்.

ஒரு நாள் அந்த நாட்டு அரசர் அண்டை நாட்டிற்குத் தூதராக சரிந்தரை அனுப்பினார். அண்டை நாட்டு அரசன் பிறர் உள்ளம் புண்படும்படி குத்தலாகப் பேசுவதில் விருப்பம் உடையவன் சரிந்திரரைத் தூதராக அனுப்பியதை நினைத்து மகிழ்ந்தான்.

''தூதனாக அனுப்ப உன்னை விடச் சிறந்த ஆள் கிடைக்கவில்லையா? உன்னைப் போய் அனுப்பி இருக்கிறார்களே'' என்று கேலியாகக் கேட்டான் அண்டை நாட்டு அரசன்.

குத்தலான பேச்சைக் கேட்ட சரிந் தருக்குக் கோபம் தலைக்கேறியது. தான் இருக்கும் சூழ் நிலையை அறிந்து கோபத்தை அடக்கிக் கொண்டார். ''அரசே! எங்கள் நாட்டில் பெருமிதமான தோற்றமுடையவர்கள் எண்ணற்றவர்கள் உள்ளனர். அவர்கள் உருவத்தைப் பார்த்தால் எல்லோரும் வியப் படைந்து நிற்பார்கள். அவர்கள் எழுந்தால் அவர்களின் தலை கதிரவனை மறைக்கும். ஓர் அடி வைத்தால் ஒரு காத தூரம் போவார் கள்'' என்றார் சரிந்தர்.

இதைக் கேட்ட அரசன் ''அப்படிப் பட்டவர்கள் உங்கள் நாட்டில் இருப்பது உண்மையானால், உன்னைப் போன்ற குள்ளனை ஏன் இங்கு தூதனாய் அனுப்பி வைத்தார்கள்? என்று கேட்டான்.

இந்தக் கேள்வியில் மிடுக்கும், தற் பெருமையும், கேலியும் இருப்பதை உணர்ந் தார். சரிந்தர். ''அரசே! எங்கள் நாட்டிற்கு ஒரு வழக்கம் உண்டு. அந்த வழக்கத்திற்கு ஏற்ப என்னை இங்கே அனுப்பியுள்ளார்கள்.'' என்றார் சரிந்தர்.

''என்ன உங்கள் நாட்டு வழக்கம்?'' என்று குத்தலாகக் கேட்டான் அரசன். அரசே! ஒவ்வொரு நாட்டின் இயல்பிற்கும் ஏற்ப பொருத் தமான தூதர்களை அனுப்புவது எங்கள் நாட்டு வழக்கம். அறிவுள்ள அரசர் ஆளும் நாட்டிற்கு அறிவுள்ள தூதர்களை அனுப்புவார்கள். முட்டாளான அரசரின் நாட்டிற்கு முட்டாளையே அனுப்புவார்கள். எங்கள் நாட்டிலேயே நான் தான் வடிகட்டிய முட்டாள் அதனால் என்னை இந்த நாட்டிற்கு தூதனாக அனுப்பியுள்ளார்கள் என்று சொன்னார் சரிந்தர்.

இதைக் கேட்டதும் அவமானத்தால் அந்த அரசன் தலை கவிழ்ந்தான். எனவே பிள்ளைகளே! பிறரது உருவ அமைப்பைக் கேலி செய்யக் கூடாது. இது இறைவனது கொடை. அதை ஏளனம் செய்யலாகாது.

பலசாலி எறும்புகள்

செல்வி. கு. கோபிகா
தரம் 10

சிறிய சில எறும்புகள் சேர்ந்து தம்மிலும் விட பாரமான சில பொருள்களை இழுத்துச் செல்வதைக் காண்கிறோம். எறும்பு தன்னைப் போல் ஐம்பது மடங்கு எடையுடைய பொருட்களையும் சுமக்க வல்லது. ஆச்சரிய மாக இருக்கிறதா?

மனித உடலில் தசைகள் வெறும் எண்ணூறுதான் ஆனால், எறும்பில் அதைப் போல் பல மடங்கு எண்ணிக்கையில் நுண்ணிய தசைகள் உண்டு. அவை நமது தசைகளைப் போல எளிதில் களைப்பதில்லை. எறும்புக்கு ஆறுகால்கள் இருப்பதால் அது இழுத்துச் செல்லும் எடை அதன் உடல் முழுவதும் பரவுகின்றது. மனிதனைப் பொறுத்தவரை நமது இரண்டு கால் அமைப்பே கனமான சுமையை நாம் சுமப்பதற்கு தடையாக உள்ளது. உருவம் பெரிதாக இருந்தால் பலம் அதிகமாக இருக்கும். என எண்ணுவது தவறு. உடல் பருமன் கூடும்போது அதே விகிதத்தில் உடலின் எடை மட்டுமே கூடுகின்றது. ஆற்றல் அதே விகிதத்தில் கூடுவதில்லை. எறும்பின் உடலோடு ஒப்பிடும் போது மனிதனின் அல்லது யானையின் எடை பல லட்சம் மடங்கு அதிகம். ஒரு கற்பனைக்கு, மனிதன் அளவுக்கு அல்லது யானை அளவுக்கு - எறும்பு வளர்ந்து விட்டால், இப்போது உள்ளது போல தன்னை விட ஐம்பது மடங்கு எடையுடைய பொருளை அதனால் நகர்த்த நிச்சயமாக முடியாது. உடலின் எடை ஒரு வரம்புக்கு மேல் அதி கரிக்கும் போது பலத்தின் அளவு கூடுவ தில்லை. மாறாக குறையவே செய்கின்றது.

ரோசாப் பூ

செல்வன். வீ. பிரசாத்
தரம் 10 A



காலை வேளையிலே பகலோனின் கதிர்பட்டு
பல்லிதழ் பல கொண்டு பசுங்கிளி போல் – நீ மலர்ந்தாய்
உன்னருகே நான் வரவே என் மனதை நீ இழுத்தாய்
உன் சிரிப்பில் நான் நயந்து என் சிரிபை பறி கொடுத்தேன்.

இச்சையுடன் நான் வரவே இன்ப இதழ் பொளிந்திடுவாய்
இசையுடன் நான் பாட திருநடனமாடிடுவோம்.
திருமணங்கள் வந்திடவே கூந்தல்களில் நீ இருப்பாய்
மங்கையர்கள் பார்த்ததனை மனமகிழ்ந்து மூச்சிழுப்பார்.

என் வீட்டுத் தோட்டத்திலே பூத்த நல்ல ரோசாவே
நான் ஊற்ற நீ குடித்து என் மனதை மகிழ வைத்தாய
என்னருமை ரோசாவே – உன்னருமை வாசனைதான்
என் மனதைக் கிழித்ததடி.

சொர்க்கத்துக்குச் சுருக்க வழி

செல்வன் நோய் டிலக்ஷன்
தரம் 10[A]

ரிஷிகேஷ் என்ற பெரியவர் தீவிர கடவுள் பக்தர் விசேட நாட்களில் கோவில் களில் கதாகாலட்சேபம் செய்வதில் வல்லவர்.

அதாவது கதாகாலட்சேபம் என்றால், கோவில்களில் கூட்டம் நிரம்பி வழியும். அவரது பேச்சு மக்களை வசப்படுத்தி இருந்ததுக்குக் காரணம் அவர் தனது சொற்பொழிவின் இடையிடையே நகைச்சுவை கலந்த உதார ணங்களையும் சொல்வதுதான். சிரிக்காதவர் கூட அவரது நகைச்சுவையைக் கேட்டு சிரித்துவிடுவர்.

ஒரு நாள் இரவு கோவில் ஒன்றில் அவர் கதாகாலட்சேபம் நடத்திக் கொண்டிருக்க ''எள் விழுந்தால் எடுக்க முடியாத அளவுக்கு'' கூட்டம் நிரம்பி அவரது கதாகாலட்சேபத்தை கேட்டுக் கொண்டிருந்தது.

ஒரு சிறிய கருத்தைச் சொல்லி முடித்தவுடன் சொர்க்கம் நரகம் பற்றி பேசினார். ரிஷிகேஷ் . மனிதர்களாப் பிறந்த அனைவருக் கும் சொர்க்கம் செல்ல வேண்டும் என்ற ஆசை ஏன்? என்றார். அங்கே அங்கே கூடியிருந்த திருமணமான ஆண்களிடம் ஒரு கேள்வியைக் கேட்டார். உங்களில் யார் யாருக்கு தன் மனைவியுடன் சொர்க்கத்துக்குச் செல்ல ஆசை என்று கேட்டார். அப்போது அங்கிருந்தவர்கள் எல்லாம் கையை உயர்த்தினார்கள். அதில் ஒருவர் மட்டும் உயர்த்தவில்லை. ரிஷிகேஷ் அவனைப் பார்த்து ஏன் கையை தூக்கவில்லை உனக்கு திருமணம் ஆகவில்லையா என்று கேட்டார். ஆகிவிட்டது என்றார். உன் மனைவி இங்கு வரவில்லையா என்று கேட்டார். அவன் இல்லை என்றான். உனக்கு உன் மனைவி யுடன் சொர்க்கம் செல்ல ஆசையில்லையா என்றார். அவன் கூறினான் மனைவி சொர்க்கம் சென்றால் நான் சொர்க்கம் சென்ற மாதிரி இருக்கும் என்றான்.

தங்கத் தமிழ்த் தாயே

செல்வன் ந. குஷ்யந்தன்
தரம் 9[A]

குறளும் சிலம்பும் குணமாய் ஏந்தி,
குதூகலமான உருவம் தாங்கி,
குவலயம் போற்றும் செந்தமிழ்த் தாயே,
குறைவின்றி வாழ அருள் புரிவாயே.

மன்னார் கோவிலில் மகிழ்ந்திருந்தாயே,
மறவரின் வீரத்தைக் கேட்டிருந்தாயே,
கவிதையில் இருக்கும் கண்மணித் தாயே,
கன்னித் தமிழே அருள் புரிவாயே!

எனது அன்னை தந்தை

செல்வன் சி. சர்வானந்தன்
தரம் 10A

''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது முது மொழி ஆகும். ஆம்! இவ்வுலகில் நாம் அறியும் முதல் தெய்வங்கள் தாயும் தந்தையுமே. எம் பெற்றோர். இவ் வுலகில் நாம் பூஜிக்கும் தெய்வங்கள் எம்மை இவ்வுலகிற்கு கொண்டு வந்த புண்ணியர்கள் அவர்களேயாகும். இதற்காக மட்டுமன்றி பிறந்த பின் எம்மை ஒழுக்கமானவர்களாக, சிறந்த சீலர்களாக வளர்த்து சமூகத்தில் மற்றவர்கள் மதிக்கும் ஒரு சிறந்த மனிதனாக உருவாக்கி யமைக்காக நாம் அனைவரும் அவர்களைத் துதிக்க வேண்டும்.

அன்னை என்பவர் உயிர் கொண்டு லாவும் தெய்வம் என்பார்கள். ஆம்! எனக்காக அல்லும் பகலும் தன் நலம் மறந்து தன்னை எமக்காக அர்ப்பணிக்கும் எமது தெய்வம் எம் அன்னையே ஆகும். தான் பசியோடிருந்தும். எம்பசி வேளையில் எமக்கு வயிறார உணவு தந்து வளரவும் கல்வி கற்கவும் வழிகாட்டுபவர் எமது அன்னையே ஆகும். ''தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" என்பர். இரவு வேளையில் தன் தூக்கம் மறந்து எமக்காக எம் நலனிற்காக பாடுபடும் என் அன்னையை நினைந்து நான் பெருமைப்படுகின்றேன்.

தந்தை என்பவர் எம்மை சிறந்த மனிதனாக்கி பெற்ற அன்னையுடன் சேர்த்து எமக்கு நல்லுணவு, நல்லுடை, நல்லறிவு ஊட்டி நாம் நற்பிரஜைகளாக வாழ வழிவகுத்த பெரியோன். தந்தை நாம் தவறு விடும்பொழுது திருத்தி நம்மை நேர்வழி நடக்க வைப்பார். இதனாலேதான் ''தந்தை சொல்மிக்க மந்திர மில்லை" என்பர். இவ்வுலகில் நாம் அடையும் பெருமைகள் யாவற்றிற்கும் வழிகாட்டி களாகவும் ஒளியூட்டிகளாகவும் இருக்கும் எம்முடைய தாய், தந்தை எமக்கு இரு கண் களைப் போன்றவர்களாவர். எனது அன்னை தந்தையை தந்த இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

மலரே...

செல்வி மா. தீபிகா
தரம் 7B



காலைப் – பொழுதினில்
நீ மலர்ந்து மணம் பரப்பி
காண்போர் மனதினில் மணம் பரப்பி
உன்னை மணந்தவர்கள்
உளமார ரசித்தவர்கள்
இயற்கை நியதி முன்னே
மாலையானதும் வாடிவிட்டால்
மற்றவர்கள் உன்னைப் பாராக்கள்.

நவீன விஞ்ஞானத்தில் கணனிக் கல்வியின் முக்கியத்துவம்

செல்வன் கி. பிரதீபன்
தரம் 10

மண்ணுலகில் மகத்தான சாதனைகள் பல செய்த மனிதன் இன்று விண்ணுலகிலும் வாகை சூடி வருகின்றான். உயர் மனித சக்தி மூலம் உருவாகும் சாதனைகள் பல இன்று கைக்குள் அடக்கமான கருவிகள் மூலம் செயற்படுத்தப்படுகின்றன. இருபத்தொராம் நூற்றாண்டில் மனிதன் காலடி வைத்து விட்டான். உலகம் சுருங்கிவிட்டது. மனிதனுடைய தேவைகளும் அதிகரித்துள்ளன. இத்தேவைகளை தனது விருப்பங்களை மனிதன் நிறைவு செய்ய வேண்டும். இத்தகைய திறன்மிக்க கருவிகளில் இன்று முதலிடம் வகிப்பது கணனி ஆகும்.

இன்றைய உலகத்தின் இயந்திரங்கள் மனிதர்களை இயக்குகின்ற காலம் மிகமிக நெருங்கிக் கொண்டே செல்கின்றது. இத் தகைய எண்ணங்களை நிறைவு செய்வதற்கு ஒரு சமாதானம் தோன்றுமா? என மனிதன் எதிர்பார்த்தான். இத்தகைய எண்ணத்தை மெய்ப்பிப்பதாக கணனிகள் ஆற்றும் பணிகள் அமைகின்றன. இன்றைய காலத்தில் ஒவ வொரு மனிதனும் கணனிக் கல்வி பெறுதல் வேண்டும். அப்பொழுதுதான் அவனுடைய அறிவு வளர்ச்சி அடைந்து கணனி தொடர்பான பூரண அறிவினைப் பெறுவான்.

இன்று அலுவலகங்கள் தோறும் கணனிகள் காணப்படுகின்றன. கணனியின் மூலம் தமது தேவைகளை பூரணமாக்கி தமது வேலைகளை இலகுவாக்குகின்றான் மனிதன். விஞ்ஞானம், வர்த்தகம், மருத்துவம், முகாமைத்துவம், கல்வி, அரசியல், தொடர்பாடல் போன்ற துறைகளில் கணனியின் பயன்பாடு அளவற்றது. இன்று உலக நாடுகள் பல அபிவிருத்தி அடைந்து வருகின்றன. அவ் நாடுகளில் வாழும் மக்களுக்கு கணனிக் கல்வி அளித்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுகின்றது. இதன் மூலம் வேலை யற்றுத் திரியும் மக்கள் வருமானம் பெறுகின் றனர். இதன் மூலம் அவர்களுடைய அறிவு விரிவடைகின்றது.

இன்று சர்வதேச நாடுகள் பலவற்றிலும் பேசப்படும் மொழி ஆங்கில மொழி ஆகும். ஆங்கில மொழி அறிவுக்கு கணனியின் பங்கு மிகப் பெரியது. ஆங்கிலத்தில் பேச, ஆங்கிலத்தில் கட்டுரைகள் எழுத, ஆங்கிலத்தில் உரையாட கணனிக் கல்வி அவசியம். இன்று பல நாடுகளில் ஆங்கில மொழி அறிவு மந்த நிலை அடைந்துள்ளது. இவற்றிற்கு கணனிப் பயன்பாடு இன்மையே காரணமாகும்.

இன்று நாம் பயன்படுத்தும் கணனி களுக்கு வித்திட்டவர்கள் இருவர் ஆவர். நவீன கணனிகளுக்கு வித்திட்ட ஆரம்பப் பொறி யானது கி.பி. 1617இல் ஜான் நாப்பியர் என்பவ ரால் அமைக்கப்பட்டது. இவ் இயந்திரம் படிப் படியாக கணித்தல்களுக்கு ஏற்றதாக விருத்தி செய்யப்பட்டது. பொறிநுட்பம் மிக்க கணனி அமைப்பு 1828ஆம் ஆண்டு சார்லஸ் பாபேஜ் என்பவரால் அமைக்கப்பட்டது. லேடி அடா என்ற பெண்மணி இப்பொறியில் செயற்படுத்தப் படுவதற்கேற்ப நிகழ்ச்சிகளை வழங்கிய முதல் நபர் ஆவார்.

ஆரம்ப காலங்களில் கணனிகள் மிகப் பருமனானவையாக இருந்தன. அதே சமயம் அவற்றின் தொழிற்பாடு ஒப்பீட்டளவில் மந்த மாகவும் இருந்தது. 1944ஆம் ஆண்டில்

முதலாவது வினைத்திறன் மிக்க இலத்திரனியல் கணனி உருவாக்கப்பட்டது. இதன் பின்னர் கணனிகள் சிறிய பருமனுடையனவாக அமைக்கப்படக் கூடியதாக இருந்தன.

இன்று கணனி கற்போரின் கற்றல் தேவைகளை நிறைவேற்றுவதற்காகப் பருமன் குறைந்த கணனிகள் உற்பத்தி செய்யப் படுகின்றன. கையடக்கமான சிறிய கணனி களும் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. இதன் மூலம் கொண்டு செல்வதில் சிரமங்கள் ஏற்பட வில்லை. கணனிகளை செல்லும்போது இலகு வாக கொண்டு செல்லக் கூடியதாக இருந்தது. இன்றைய கணனியின் பகுதிகளாக Cpu, Key board, Mouse, Monitor, Printer போன்றன கணனியின் முக்கிய பகுதிகளாகும். தற் பொழுது கணனித் தொடர்பாடல் போன்றன உண்டு. கணனியுடன் வலைப்பின்னல் InterNet வசதியும் தற்பொழுது இணைக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் பரீட்சை முடிவுகளை பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு உடனடியாகப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. கணனித் தொடர்பாடல் என்பது இரு வேறு நாட்டில் இருப்பவர்கள் கணனி மூலம் தமது இணைப்பை உருவாக்கி தமது முகங்களை கணனியில் விழுத்தி பார்ப்பதாகும். இதன் மூலம் தொடர்பாடல் இலகுவாகின்றது. கணனித் தொழில் நுட்பம் காரணமாக இன்று பல்வேறு வணிகச் சந்தர்ப்பங்கள் உருவாகி யுள்ளன. Hard ware (கணனி வன் பகுதி உற்பத்தி), Soft ware (கணனி மென்பகுதி உற்பத்தி) கணனி வலைத்திட்டம், கணனி பயிற்சித் திட்டம், கணனிகளை திருத்தலும் பராமரித்தலும் போன்ற வணிகச் சந்தர்ப்பங்கள் இன்று அதிகரித்து வருகின்றது. Modmm இன்ரநெற் இணைப்பைப் பெற முக்கியமாக ஒரு கருவி ஆகும். உலக வையக விரிவலை என்பது உலகக் கணனிகளை இணைக்கும் ஒரு வலை ஆகும். இது W.W.W என சுருக்கமாகக் கூறப்படும்.

பிற்காலங்களில் பலர் கணனியின் பொறியில் படிப்படியான மாற்றங்களை ஏற்படுத் தினர் கணனியின் பயன்பாடு உலகப்போர் நிகழ்ந்த காலங்களில் கணிசமாக அதிகரித்தது. பிறநாடுகளின் போர் நடவடிக்கைகளை பின்னடிக்கவும் தம் தேசத்தின் இராணுவ நடவடிக்கைகளை மேம்படுத்தவும் பல நாடுகள் கணனிகளைப் பயன்படுத்தின.

இன்றைய கணனி அதிகளவு ஆற்றல் களை உடையதாக இருக்கின்றது. வேடிக்கை, விநோதங்கள் முதல், விண்வெளிப் பயணங்கள் வரை சகல துறைகளிலும் கணனிகள் தம் ஆற்றலை நிருபித்துள்ளன. கண்ணிமைக்கும் நேரத்தில் பணியை நிறைவேற்றும் தன்மையும் நம்பகத்தன்மையுமே கணனியின் மிக முக்கிய அனுகூலங்களாகக் கருதப்படுகின்றன. கணனி களிடையில் வலைத் தொடர்புச் செயற்பாடு உலகினை உள்ளங்கையளவாக குறுக்கவல்ல தாக உள்ளது நினைவுக்கு எட்டாத விரைவுடன் உலகின் சகல பாகங்களையும் தொடர்புபடுத்தக் கூடியதாக இவ்வலை அமைப்பு அமைகின்றது.

கணனிகளால் உலகம் பெறும் நன்மை கள் கணக்கற்றவை. ஆயினும் இது சில பிரதி கூலமான விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது. வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரித்த துடன் இயல்பான மனித சிந்தனைத்திறனைக் குறைவடையச் செய்கின்றது. சுவரஸ்யமிக்க கணனி வலையமைப் புக்கள் மூலம் இளம் சமுகத்தினர் தவறாக வழிநடத்தப்படவும் வாய்ப்புண்டு. எவ்வாறாயினும் இருபத்தோராம் நூற்றாண்டின் ஈடிணையற்ற கருவி கணனி என்பதில் ஐயமில்லை.



அன்பு

செல்வி த.தர்ஷிக்கா
தரம் 10[A]

அன்பு என்ற முன்றெழுத்தினுள்ளே இந்த அகிலமே அடங்கியிருக்கின்றது. அன்பு தான் இன்ப ஊற்றாகும். இவ் அன்பினூடாகவே தான் அண்ட சராசரங்கள் எல்லாம் இயங்கு கின்றன. அம்மா என்ற மூன்றெழுத்துக்கு மிடையே நெருங்கிய பிணைப்புண்டு. ஒரு குழந்தையானது பிறந்தவுடன் கூறுகின்ற முதல் அன்பு வார்த்தை அம்மா என்பதே ஆகும். இவ்வுலகமே இயங்குவதற்கு அன்பு பிரதா னமாக இருப்பதால்தான் பொய்யா மொழிப் புலவர். தமது குறட் பாக்களில் அன்புடமை என்ற அதிகாரத்தைப் படைத்துள்ளார்.

அரிது அரிது மானிடராகப் பிறத்தலரிது என்ற கூற்றிற்கிணங்க மானிடராக பிறந்ததே யாம் பெற்ற புண்ணியமாகும். எனவே நாம் மானிடனுக்குரிய மனிதப் பண்புகளை மனதார பின்பற்றுதல் வேண்டும். நம் உறவினர்கள், நண்பர்கள், பெரியோர்கள், சிறியோர்கள் யாவருடனும் அன்பாக பழகுதல் வேண்டும். நாம் செய்கின்ற ஒவ்வொரு செயற்பாடுகளும் அன்பினூடாக நிகழ்த்தப்பட வேண்டும் பெரி யோர்கள் கூறி நிற்கின்ற அன்பு வார்த்தை களைக் கேட்டு அதன்படி நடக்க வேண்டும். நாம் பிற உயிரினங்களை எம்முயிரிலும் மேலாக மதிக்க வேண்டும். இரக்கம் காட்ட வேண்டும். நாம் அன்புடையவர்களாக வாழ்ந் தால் எமக்கு நண்பென்னும் நாடாச் சிறப்புக் கிடைக்கும். இதனையே வள்ளுவர் பெருமான்.

''அன்பீனும் ஆர்வமுடைமை அது ஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு'' என்று குறிப் பிடுகின்றார். எனவே மானிடனுக்குரிய மனித இயல்புகளில் அன்பே பிரதானமானது என்பது யாவரும் அறிந்திருக்க வேண்டிய ஒன்றாகும்.

அன்பாலே இப் பாரை ஆளலாம். நாம் ஒவ்வொருவரும் பேசுகின்ற போதும் அன்பு வார்த்தைகளையே பேச வேண்டும். கேட்கின்ற போதும் அன்பு வார்த்தைகளையே கேட்க வேண்டும். நாம் செய்கின்ற ஒவ்வொரு காரி யங்களும் அன்பினூடாக ஆற்றப்பட வேண்டும். நாம் கூறுகின்ற அறிவுரைகள் அன்பினாலே நிரப்பப்பட வேண்டும். அன்பின் வழி நின்று அகிலத்தை வென்ற பெரியோர்கள் பலர் இம் மண்ணில் வாழ்ந்து காட்டியுள்ளனர்.

சிபிச் சக்கரவர்த்தி மன்னன் புறாவின் மீது கொண்ட அன்பினால் தான், தன்னுடலை ஈர்த்தார். ஷாஜகான் மும்தாஜ் ஆகியோர் ஊடாக அன்பானது இன்றுவரை நிலைத்து நிற்கின்றது. கண்ணகி தன் கணவன் மீது அன்பு கொண் டிருந்தமையால் தன் கணவனைக் கள்வன் என்று கூறிய மன்னனை அழித்து மதுரையை யும் எரித்தாள். ஏகலைவன் தன் குரு மீது கொண்ட பக்தியினாலே தனது விரலையே ஒடிந்தான். கர்னன் துரியோதனன் மேல் கொண்ட அன்பினால் இறுதிவரை துரியோ தனன் பக்கம் நின்று போராடினான். இவ்வாறாக பலவுதாரணங்களைக் கூறிக் கொண்டே போகலாம்.

அன்பானது பெற்றோர், பிள்ளைகள், ஆசிரியர்கள், மாணவர்கள், முதலாளி, தொழி லாளி, வைத்தியர், நோயாளி, நண்பர்கள், பெரியோர்கள் என்பவர்களினூடாக ஏற்படு கின்றது. இவ் அன்பு எல்லோர் மனங்களிலும் ஏற்படுத்தப்பட வேண்டும். ஒருவர் அன்புடை யவராக இருந்தால், தன்னலமின்றி வாழ்வார் உலகத்தில் யாவரும் இன்பமாக வாழ அன்பு தேவை மனிதர்களிடம் அன்பு செலுத்துவது போன்று அன்பாலே எதையும் சாதிக்க முடியும்.

எனவே அன்புதான் அகில ஜோதி அதுவே மகா சக்தி. இவற்றை நாமுணர்ந்து இந்து தருமம் காட்டியுள்ள அன்பு பாதையில் புத்தரின் அகிம்சை நெறியில் கிறீஸ்துவின் அன்பு வழியில் முகமது நபியின் சகோதரத்துவ வழிகாட்டலில் இன்றைய உலகம் செல்லுமா யின் ''அன்பே இவ்வுலக மகா சக்தி'' என்ற அறிவு விளக்கு ஏற்பட்டு எல்லோரும் நலமாக வாழ முடியும்.

''அன்புதான் இன்பமூற்று
அன்புதான் உலக மகா ஜோதி''

விற்றமின்கள்

செல்வி த.சந்திரகலா
தரம் 9B

வாழ வைக்கும் உயிர்ச்சத்து
''விற்றமின்'' என்று பெயர் பெறுமே!
ஏழை செல்வர் எல்லோருக்கும்
என்றும் தேவை இது நிஜமே!

''ஏ,பி,சி,டி,ஈ'' என்னும்
இன்னோர் விற்றமின் 'கே' என்றும்
என்பது இவற்றின் பெயராகும்
குறையா நலத்தை இவை காக்கும்

கண்கள் ஒளிபெற 'ஏ' வேண்டும்
''கரட்'' பச்சைக்காய் உண்பாய்
உன்னைப் ''பெரிபெரி'' வாட்டாமல்
தோலில் ''பி''யின் துணைவேண்டும்!

கையால் குத்திய அரிசியிலே
நிறைய விற்றமின் ''பி''உண்டு!
கையில் நெல்லி ஆரேஞ்சா?
காண்பாய் விற்றமின் ''சீ'' அவற்றில்

ஈறும் பல்லும் நலம் பெறுமே
இனிதாய்ப் பேச எலுமிச்சம் சாறில்

நிறைவாய்க் காண்பாய் இச்சத்து
''ஸ்கேவி'' நோயைப் போக்கிடலாம்.

திடமாய் எலும்பு வளர்ந்திடவே
தினமும் விற்றமின் ''டி'' வேண்டும்
கடல்மீன் எண்ணெய் நீ உண்டு
''என்புருக்கி'' நோயை நீ போக்கு

மலட்டுத் தன்மை போக்கிடவே
அறிவாய் விற்றமின் ''ஈ'' வேண்டும்
முளைத்த தானியம் ஈஸ்டினிலே
முழுதாய் பெறலாம் இச்சத்தை!

கடிதில் இரத்தம் நின்றிடவும்
காயம் பட்டால் ஆறிடவும்
நல்ல விற்றமின் ''கே'' வேண்டும்
நலமாய் என்றும் வாழ்ந்திடவே

பாலில் பழத்தில் கீரைகளில்
பச்சை மிகுந்த காய்களிலே
பலவாம் ''விற்றமின்'' சத்துண்டு
பலரும் உண்போம் நலம் பெறுவோம்.

ரோஜா

செல்வன் ஞா. துஸ்யந்தன்
தரம் 9B



சின்னச் சின்ன ரோஜாவே
சிறந்த நல்ல ரோஜாவே
வண்ண வண்ண ரோஜாவே
வடிவான ரோஜாவே

கண்ணைப் பறிக்கும் ரோஜாவே
காதலர் அள்ளும் ரோஜாவே

குட்டிக் குட்டி ரோஜாவே
குழுகுழுக்கும் ரோஜாவே

அம்மா கூந்தலில் வைத்திடவே
மகிழ்வாய் என்றும் பூப்பாய் - நீ
மனதைக் கலக்கும் ரோஜாவே
உனக்கு எங்கும் நிகருண்டோ

முரண்பாடுகள்

செல்வன் ப.சபேசன்
தரம் 9B

சண்டை போட்டு வாக்குவாதம் செய்திடும்
மானிடனே ~ நீ முரண்பாடுகள்
செய்வதேன்?

அயல் வீட்டைப் பார்த்து பொறாமைப்பட்டு
எரிச்சல்பட்டு உன் முரண்பாட்டை
தீர்க்கலாமா? இல்லை கவலையைத் தீர்க்கலாமா?
இல்லைத் தீர்க்கவே முடியாது.

கொட்டில் தன்னில் சென்று குடமாய்
குடித்துவிட்டு மனைவியோடு சண்டை
செய்து சிறார்களைக் கற்க விடாது அழித்து
அயலோடு சண்டை செய்வதேன் மானிடா?

தெருவில் வாக்குவாதம் கோயில்களில் சண்டை
சந்தையிலே சமனில் பொறாமை ~ தோட்டங்களிலே
வரம்புச் சண்டை பஸ்ஸில் இடச் சண்டை
கடைகளில் விலைச் சண்டை ~ வீடுகளில்
வேலிச் சண்டை இவ்வாறு மானிடனே
வாக்குவாதம் செய்வதேன்?

குடித்துக் கொண்டு சண்டை செய்து
பொறாமைப்பட்டு உன்னை நீயே
அழிக்காதே உன் வாழ்விலே
ஓர் ஒளியை ஏற்றி சந்தோஷமாக
வாழ்வாயாக?

மரமும் மாடும்

செல்வன் யோ. கமில்ரன்
தரம் 9B

மரமே மாடே என்றெல்லாம்
மனிதர் திட்டிக் கொள்கின்றார்
மரமும் மாடும் உதவுதல் போல்
மனிதர் எங்கே உதவுகிறார்.

நிழலைத் தந்து களைப்பெல்லாம்
நீக்குதல் அந்த மரமாகும்
பழத்தைத் தந்து உடலுக்கு
பலத்தைத் தருவது மரமாகும்.

விறகைத் தந்து அரிசியினை
வேகச் செய்வது மரமாகும்
பறவை கூடு கட்டி இனம்
பரவச் செய்வது மரமாகும்.

வயலை உழுது பயிர்களையே
வளரச் செய்வது மாடாகும்
வெய்யிலில் மழையில் வண்டிகளை
விரைந்து இழுப்பது மாடாகும்.

மனித வாழ்வில் கணனி

செல்வன் கு. பார்த்தீபன்
தரம் 8

புரண்டு கொண்டிருக்கும் இவ்வுலகம் புரட்சிகள் பலவற்றால் வளர்ச்சிகள் பலவற்றைக் கண்டு கொண்டிருக்கிறது. அணுவைத் துளைத்து ஆழ்கடல் தாண்டி அண்ட சராசரங்கள் எல்லாம் கால் பதித்து சாதனை படைத்து வெற்றிக் கொடி நாட்டிய பெருமை இன்றைய மனிதனுக்குண்டு.

நாளுக்கு நாள் ஏற்படும் தொழில்நுட்ப மாற்றம், மருத்துவ மாற்றம் காலநிலை மாற்றம் போன்ற பல்வேறு மாற்றங்களை எதிர் கொண்டு வீறுநடை போடும் மனிதனுக்கு வீரியம் பெற்று நின்று காரியம் பலவற்றைக் கச்சிதமாய் முடிக்க கைகொடுத்து நிற்பது கணனியே.

தொடர்பாடல் துறையில் ஏற்பட்ட விருத்தி காரணமாக உலக மக்களிடையே உறவுகளும் தொடர்புகளும் நெருங்கிவிட்டன. பேச்சு, காட்சிப் படங்கள், புள்ளிவிபரக் கொத்துக்கள் போன்றவற்றை ஒரு சில செக்கனில் உலகின் எப்பாகத்திற்கும் அனுப்பக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. பரபரப்பான இந்த யுகத்தில். கணனியை அடிப்படையாகக் கொண்டே தகவல் தொடர்பு வலைப்பின்னலும் இலத்திரனியல் தபாலும் விரைவாகவும் சிறப்பாகவும் பரிமாறும் நவீன தொடர்பு சாதனங்களாக அமைகின்றன.

இன்று கணனியின் பயன்பாடு அளப்பரியது. இதன் மூலம் சர்வதேச ரீதியில் வர்த்தக தொடர்புகளை மேற்கொள்ளலாம். கற்றல் கற்பித்தல், மருத்துவ ஆலோசனைகள் இராணுவ புலனாய்வுகள் போன்ற பல நுட்பங்களைப் பெறலாம். பதிவுகளை நீண்ட காலம் சேமித்து வைக்கலாம். பத்திரிகை வாசிக்கலாம் திரைப்படம் பார்க்கலாம் பாட்டுக் கேட்கலாம் விரும்பிய விளையாட்டுக்களை விளையாடலாம்.

நாடளாவிய ரீதியில் வலைப்பின்னல் மூலம் கணனிகள் இணைக்கப்படும் போது ஓரிடத்தில் இருந்து கொண்டு தூர இடத்தில் உள்ள உறவினருடனோ நண்பருடனோ அல்லது குறித்ததுறை நிபுனருடனோ தொடர்பு கொள்ளலாம். உலகத் தலைவர்களின் படங்கள் பார்க்கலாம் ஓவியங்கள், ஆலயங்கள், உலக அதிசயங்கள் என்றெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

இவ்வாறு இன்று மனிதருள் மனிதனாக ஒவ்வொரு வீட்டிலும் கணனி கலந்து குடும்பத்தில் மகிழ்சியையும் அறிவையும் அள்ளித் தந்து கொண்டிருப்பதை நாம் அனுபவத்தில் காண்கிறோம். அடுத்த கணனித் தலைமுறை எமக்கு எதைத்தரப் போகிறது என்பதை கணனி உலகவியலாளர்கள் அங்கலாய்ப்பாக இருக்கிறது.

உண்மை கனமானது ஆகவே அதைச் சுமப்பவர்கள் சிலரே

உயிர் காத்த அன்னை

செல்வன் இ. இளதாரம்
தரம் 7A

சுரேஸ் நல்ல பக்தியுள்ள சிறுவன். மகிழூர் கிராமத்தில் வசித்து வந்தான். 12 வயதான அச் சிறுவனுக்கு ஊரிலுள்ள மனோன்மணியம்மன் மீது அளவிலா அன்பு பூண்டான். தினமும் காலை, மாலை ஆலயஞ் சென்று அம்பிகையைத் தொழுவதை வழக்க மாகக் கொண்டிருந்தான். 1990ஆம் ஆண்டு வைகாசித் திங்களில் ஊரில் பெருங் குழப்பம் ஏற்பட்டது. திடீரென ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக ஊர் மக்கள் அனைவரும் வேறு ஊருக்குச் சென்றுவிட்டனர். சுரேஸ் பாவம் என்ன செய்வான்? அவனும் தன் பெற்றோருடன் வேறூர் சென்றான். மனோன்மணியம்மனை வழிபட முடியவில்லையே எனக் கவலைப் பட்டான். சில நாட்கள் கழிந்தன. சுரேசின் பெற்றோர்கள், உறவினார் சிலருடன் தமிழகம் செல்லத் தீர்மானித்தனர்.

ஒரு பூரண தினத்தன்று இயந்திரப் படகொனறில் எல்லாமாக நூறு பேர் புறப்பட் டனர். ''திக்கற்றவர்களுக்குத் தெய்வம் துணை" என்ற துணிவுடன் அவர்களின் பயணம் தொடங்கியது. பாலை தீவு, மன்னார் தீவு தாண்டி படகு நடுக்கடலை அடைந்த வேளை படகில் சிறு துவாரம் ஏற்பட படகினுள் நீர் உட்புகத் தொடங்கியது. படகோட்டிகள் நீரை அள்ளி ஊற்றியும் குபீர் குபீர் எனப் பாயும் நீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. படகு ஆட்டம் காணத் தொடங்கியது.

படகோட்டிகள் களைத்து வீட்டனர். படகில் இருந்தோர், ''குய்யோ முறையோ" என அலறினர். ஒரு மணி நேரமாக படகு கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தது. சுரேஸ் மட்டும் மனங்கலங்கவில்லை. அன்னை மனோன்மணி அம்மாள் மனம் வைத்தால் தம்மைக் காப்பாற்ற முடியும் என எண்ணினான். மற்றவர்கள் ''ஐயோ ஐயோ" என்ற அவலக் குரல் எழுப்ப சுரேஸ் மட்டும் மனோன்மணி யம்மனை மனதார துதித்து வேண்டிக் கொண்டிருந்தான். என்ன அதிசயம் அதிகாலை நான்கு மணியளவில் பிரமாண்டமான படகொன்று அருகே வந்து அனைவரையும் ஏற்றிச் சென்றது. அன்னை மனோன்மணி யம்மையே தம்மை எல்லாம் காப்பாற்றினார் என சுரேஸ் அனைவரிடமும் கூறினான். அன்னையை வாயார வாழ்த்தினான். கூப்பிட்ட குரலுக்கு தாயாக வந்து காப்பாற்றிய அம்மையை மனதார நினைத்துருகினான்.

அம்பிகையைச் சரண் அடைந்தார் அல்லல் உறுவதில்லை என்பதனை இச் சிறுகதை விளக்குகின்றது.

மனித மூளை மிக வினோதமானது மனிதன் பிறந்த உடனே அது வேலை செய்யத் தொடங்கிவிடுகின்றது. ஆனால் அவன் எப்போது பொது மேடையில் பேச ஆரம்பிக்கின்றானோ அப்போது மூளை செய்வதை நிறுத்தி விடுகின்றது.

..டிரடனி..

அர்த்தமற்ற நட்பு

சிறுகதை

செல்வன் ந. மதனிசன்
தரம் 7B

ஒரு நாள் இரண்டு நண்பர்கள் காட்டுக்குள் நாவற்பழம் பொறுக்கச் சென்றிருந்தார்கள். ஒருவனுடைய பெயர் கண்ணன். மற்றவனுக்கு பெயர் கமலன். கண்ணன் கரடியைக் கண்டான். கமலன் கரடியைக் காணவில்லை. கண்ணன் கூறினான் கமலன் அதோ கரடி வருகிறது நான் மரத்திலே ஏறப் போகிறேன். நீ என்னவாவது செய் என்று சொல்லிவிட்டு கண்ணன் மரத்தில் ஏறினான். கமலன் என்ன செய்வதென்று தெரியாமல் யோசித்துக் கொண்டிருந்தான். உடனே இறந்தவர் போல் கண்ணை மூடிக் கொண்டு நிலத்தில் படுத்துவிட்டான். கரடி வந்து மணந்து பார்த்து விட்டு சென்றது. கண்ணன் மரத்திலிருந்து இறங்கினான். கண்ணன் கமலனைக் கரடி காதுக்குள் என்ன கூறியது என்று கேட்டான். அவன் அதற்குக் கூறினான். உன்னைப்போல் ஆபத்துக்குதவாத நண்பனோடு சேர வேண்டாம் என்று கமலன் கூறினான். இருவரும் பிரிந்து இரண்டு பக்கமாகச் சென்றனர்.

''ஆபத்தில் ஒருவனுக்கு உதவுதல் வேண்டும்"

ஏட்டிலும் வீட்டிலும்

முதியோரைப் பேணுவோம்
பத்திரிகையிலும், கட்டுரையிலும்.....
அன்னை, பிதா வணக்கம்
ஊர்ப் பொது மேடையில்.....
பெடியன் நல்லவன்.
கண்போல் காப்பான்
தாய் தகப்பனை.
ஊராரின் புகழ்சிகள்.....
எங்குமே நிறைந்த அன்பு.
எழுந்தார் விழாவின்.....
அட.....!
வீட்டில்,
பெரியவர் பாடாய்க் கிடக்கிறார்.
இடுக்கண் இன்னும் எவ்வளவு
காலம் இழுக்கப் போகுதுகளோ?
ஏக்கம் எம்முள் மகனே!

செல்வி ஜே. நிரோஜினா
தரம் 7D

நாளை மலரும் பூக்கள்

நாளை மலரும் பூக்களே
நல்ல பிள்ளைச் சிறுவரே,
நாளை பூமி உம்மிடம்
நல்லாய்ப் படித்து வாருங்கள்

உண்மை என்றும் பேசிடு
உலகைக் காக்கத் துணிந்திடு
அழிவை விட்டு வந்திடு
ஆக்கத்தோடு உழைத்திடு

அறிவை நீயும் வளர்த்திடு
ஆசானை நியும் மதித்திடு
அன்பை நீயும் பெருக்கிடு
அடைவாய் உயர்ச்சி நீயுமே.

செல்வன் வ. ஜெசிந்தன்
தரம் 6B

கல்வியின் சிறப்பு

செல்வங்களில் சிறந்த செல்வம் கல்விச் செல்வம். இச் செல்வம் நீரால், நெருப்பால், கள்வர்களால் அழிக்க முடியாது. கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு. கல்வி கொடுக்கக் கொடுக்கக் கூடுமே அன்றி குறையாது. நாம் சிறந்த பண்புள்ள மனிதர்களாக வாழ வழிகாட்டும். பல செல்வங்களைக் கொண்ட மன்னனைவிட கற்றோன் செல்லும் இடமெல்லாம் சிறப்புடையான் மற்றைய செல்வங்களை நல்ல வழியில் அனுபவிக்க கல்விச் செல்வமே வழி காட்டும். இல்லையே விழலுக்கு இறைத்த நீர் ஆகிவிடும். அதனால் வள்ளுவன் ''கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்று கூறியுள்ளார். நாமும் இச் செல்வத்தைப் பெற்று நானிலம் போற்றும் மனிதர்களாக வாழ்வோமாக.

செல்வி ஜெ. தர்ஷிகா
தரம் 7[D]

வாழைமரம்

வாழைமரம் வாழைமரம்
வழுவழுப்பாய் இருக்கும் மரம்
சீப்புகளாய் பல பழங்கள்
தின்றிடவே கொடுக்கும் மரம்
பந்தி வைக்க இலையெல்லாம்
தந்திடுமாம் அந்த மரம்
காயும் பூவும் தண்டுகளும்
கறிசமைக்க உதவும் மரம்
கலியாணப் பந்தலிலே
குலையோடு நிற்கும் மரம்
நிலையாக நின்றிடவே
நிலை நிலையாய்க குட்டி தரும்.

செல்வி பா. பார்த்தி
தரம் 5[A]

இயற்கை

இறைவன் தந்த வரங்களிலே
இயற்கை அன்னையும் ஒன்றாகும்
இனிய வாழ்வு வாழ்ந்திடவே
இன்றும் பேணிக் காத்திடுவோம்

காலைக் கதிரவன் ஒளி பரப்ப
காலைக் கடன்களை நாம் முடிக்க
மலர் தர்மும் மணம் வீச – அந்த
மணத்தினில் மனம் மகிழ்வோம்.

பசுமையான மரத்தினிலே
படுத்துறங்கும் பறவைகளே
புற் தரைகளில் பனித்துளிகள்
புதுமையாகக் காட்சி தரும்.

பூமித் தாயே நீ தந்த
புதுமையான கொடை வரமே
பார்த்து நாமும் மகிழ்ந்திடவே
பாரில் இயற்கையை வளர்த்திடுவோம்.
நேற்றைய நிகழ்வுகளுக்காய்
இன்று கண்ணீர் வடிக்கும்

செல்வி ம. கம்ஷா
தரம் 6[A]

மீனவனின் வாழ்க்கை

அலைமோதும் கடல் அக்கடலில் செல்லும் கட்டுமரம் கட்டுமர வீதியிலே புயல் காற்றுடன் போராடி தன் ஜீவன உபதேசத்துக் காக ஏதோ உழைத்து வருவதற்காக சென்ற மீனவன் புயல் காற்று என்ற அசுரன் மீது கடல்காற்று கொந்தளித்து கடலில் சிக்கிவிட்ட வேளை அவனது உள்ளம் தனது மனைவி, மக்களை எண்ணி எண்ணி வேதனையும் சோதனையும் தான் என்ன. நடுக்கடலில் சிக் குண்ட வேளை உணவுமின்றி உயிர் ஊச லாடுவதை கண்டோர்கள் கேட்டோர்கள் மனம் கலங்க வைத்த சேதி. இங்கு உணவு இல்லை ஆறுதல் கூற உறவும் இல்லை. உண்மை நிலையை யார் தான் காண்பார். காத்திருக்கும் மனைவிக்கு சேதி ஒன்று கூற இக் கடலிலே பறந்து செல்லும் பறவைகளும் இல்லை என எண்ணி எண்ணி கடலிலே தவிக்கும் ஓர் அப்பாவி வாழ்ககை.

இறப்பின் தறுவாயில் தவித்திருந்த கணவனை விடி வெள்ளி நேரம் வெள்ளி எழ வழியனுப்பி வைத்த மனைவி கடலில் தொழில் புரிந்த தொழலாளர்கள் எல்லாம் வீடு வந்து சேரும் போது அவள் மனம் தவித்து ஏங்க, துன்பமடைந்து மனம் பாகாய் உருகியது. வாய் புலம்பி அழுது புலம்புவதும் அவளது சோகம் கலந்த கவலைக்கு இறைவன் தான் காப்பு. என்று ஏங்கிய போது வழிமேல் விழி வைத்து கண்கலங்கி கண் இழந்த வேளை கும்பிட்ட தெய்வம் குறுக்கே வந்தது போல் கணவன் கதிகலங்கி உருக்குலைந்து ஐம்புலன்களும் அடங்கிய வேளை யாதும் இல்லாது வந்து சேரும் போது மனைவி கண் இழந்து கண் பெற்று எழுவது போல உயிர்ப்புற்றாள்.

செல்வி கு. பிரதீபா
தரம் 6 B

ஆதியும் நீரே அந்தமும் நீரே

ஆதியும் நீரே அந்தமும் நீரே
சிருஸ்டியும் நீரே ஜீவனும் நீரே
ஆக்கலும் நீரே காத்தலும் நீரே
ஒளியும் நீரே வழியும் நீரே

இளகும் இதயம் நீரே இரக்கத்தின் சுரப்பும் நீரே
மொழியும் நீரே வீழியும் நீரே
சுபாவமும் நீரே சுவாசமும் நீரே
தூயவரும் நீரே தூய்மையடையச் செய்வரும் நீரே
தேவைகளை அறிந்தவரும் நீரே
தெரியாமல் அளிப்பவரும் நீரே
கருணைக் கடலும் நீரே கரைகாண அன்பும் நீரே
சர்வலோக சஞ்சீவியும் நீரே சரணடைந்தோர்
அடைக்கலமும் நீரே

மனித குலம் மீடபுப் பெற மனுவுருவும் நீரே
மனுக்குலம் மனம் மாற மாற்று வழி கூறியவரும் நீரே
சுதனை அனுப்பி நற்செய்தி சொன்னவரும் நீரே
தூய ஆவியினால் இதயங்கள் நிரப்பியீவரும் நீரே
புதுமைகள் புனைந்து புரிய வைத்தவரும் நீரே
உவமைகள் சொல்லி உணர வைத்தவரும் நீரே
மானிடர் மேல் வைத்த அன்பினால்
மரணத்தை ஏற்றவரும் நீரே
மரணத்தை வெற்றி கொண்டு உயிர்த்தவரும் நீரே

செல்வன் டுவின்சன்
தரம் 5 A

நாடும் சமாதானமும்

செல்வி யோ. கெஸ்மியா
தரம் 5 A

நேற்றைய நிகழ்வுகளுக்காய்
இன்று கண்ணீர் வடிக்கும்
நம் நாட்டில்
சமாதானம் என்பது
சந்திக்வே முடியாத
சொர்ப்பனமாகியதோ.

நேற்றைய சமாதானப் பேச்சுக்கள்
இன்று முற்றுப் புள்ளியை
முத்தமிடும் தூரத்தில்
மூக்கை நீட்டுகிறது.

யுத்த மேகங்கள்
நாட்டை மட்டுமன்றி
எம்மையும் தாக்கிடுமோ
என்ற அச்சத்தில் மீண்டும்
ஆமையாய்த் தம்மை
அடக்கி கொள்கிறார் மாந்தர்
சமாதானத்தை சீர் குலைக்க
சதிகள் சராமாரியாய்
என பத்திரிகைகள் பல
பக்கமிடுகின்றன.

சமாதானம் வந்ததென்று
சந்தோச வானில்
சிறகடித்த சிட்டுக் குருவிகள்
நாளை மீண்டும்
சிறகொடிந்த பறவையாய்
சிறைக்கு சுருங்கிடுமா?

நாட்டுச் சமாதானம்
பாத யாத்திரை சென்று
எம் சங்கடத்தை பேக்குமா
அல்லது சஞ்சலத்தில் ஆழ்த்துமா?

காலம் மாறிப் போச்சு

கட்டை வண்டி ஏறிப்போன
காலம் மாறிப் போச்சு - மேக
மூட்டந்தனை மோதித் தாவி
விரைந்து போகலாச்சு
கட்டு மரங் கட்டிக் கடல்
தாண்டிப் போனோம் அன்று - நீர்
முட்டி நிற்கும் கடலினுள்ளே
கப்பல் விடலாச்சு
கண்ணாடி காட்டி நிலவைப்
பிடித்துப் பார்த்த மனிதன்
மண்ணிலிருந்து நிலவில் இறங்கி
நடந்து வந்தான் பாரும்
விரலை மடக்கி கணக்குப் படித்த
காலம் மாறிப் போச்சு - இப்ப
தரவு கொண்ட ''கல்குலேற்றர்''
கணிதப் பாடம் ஆச்சு
விஞ்ஞானத்தின் விந்தை தன்னை
வியந்து போற்றுவோம்
மெஞ்ஞானத்தை மறந்திடாது
வாழப் பழகுவோம்

செல்வன் ச. கிரிசாந்
தரம் 5 A

நான் செய்த நன்றிக் கடன்

செல்வி ஜெ. நிந்துஜா
தரம் 5 A

நான் ஒவ்வொரு நாளும் ஆற்றில் குளிப்பது வழக்கம். எனது நண்பர்களும் என்னுடன் குளிப்பார்கள். ஒரு நாள் நான் ஆற்றின் ஆழமான பகுதிக்கு நீந்திச் சென்று விட்டேன். அப்பொழுது நான் ஒரு சுழியில் அகப்பட்டு விட்டேன். மூச்சுத் திணறினேன். அப்பொழுது ஒரு கரம் எனது தலைமயிரைப் பற்றிப் பிடித்தது சிறிது நேரத்தில் நான் கரை சேர்க்கப்பட்டேன் நான் உயிர் தப்பினேன் என்னைக் காப்பாற்றி கரைசேர்த்தவருக்கு நன்றி கூறினேன். ''உப்பிட்டவரை உள்ளளவும் நினை'' என்பது போல நானும் என்னைக் காப்பாறியவருடைய பேருதவியை என் வாழ் நாளில் ஒரு போதும் மறக்கமாட்டேன். அவர் என்னுயிரைக் காப்பாற்றியிருக்காவிடில் இன்று நான் உயிருடன் இருக்கமாட்டேன். இது ஆண் டவன் கட்டளை போலும் ஒரு நாள் நான் வீதி வழியே சென்று கொண்டிருந்தேன். அப் பொழுது சனக் கூட்டம் நின்று கொண்டிருந்தது. அங்கே விரைந்து சென்று பார்த்தேன். விபத்து ஒன்று நிகழ்ந்திருந்தது. விபத்துக்குள்ளானவர் என்னைக் காப்பாற்றியவர் என்பதைக் கண் டேன். உடவே அவரை வாகனத்தில் ஏற்றி வைத்தியசாலையில் சோத்தேன். அவர் மயக்கம் தெளியாமல் இருந்தார். மயக்கம் தெளியும் வரை அவருக்குப் பக்கத்திலேயே இருந்தேன். அவருக்குச் சிகிச்சையளிக்கப் பட்டது. சில மணி நேரத்தின் பின் அவர் கண் விழித்தார். நான் அவரது வீட்டுக்காரரின் விலாசத்தைக் கேட்டறிந்து அவரது வீட்டாருக்கு அறிவித்தேன். அவர் சுகம் அடைந்து வீட்டுக்கு திரும்பினார். நான் அவரைச் சந்தித்து கதைத் தேன் என்னைக் காப்பாற்றியவருக்கு உதவிய தையிட்டு மனம் மகிழ்ந்தேன்.

பறவையைக் கண்டான் விமானம் படைத்தான்

செல்வன் ச. கிரிசாந்
தரம் 5 A

ஆதியிலே மனிதன் மண்ணிலே பிறந்து மண்ணிலே தவழ்ந்து மண்ணையே உண்டு வாழ்ந்தான். ஒவ்வொரு இயற்கைக்கும் பதிலாக ஆற்றல் கொண்ட செயற்கையைப் படைத்து வந்தான். இரும்பைக் கத்தியாகவும் மரவுரிகளை ஆடையாகவும் விலங்குகளை உணவாகவும் புசித்து வந்தவன். தனது அறிவு வளர்சியாலும் விடாமுயற்சியாலும் ஒவ்வொரு செயலிலும் வெற்றி காணத்தவறவில்லை.

அந்த வகையில் பறவையைக் கண் டான் விமானம் படைத்தான் எனக் கூறினான். ஒரு கவிஞன். உண்மையில் ஒரு பறவையைக் கண்டான். அது தன் சிறகுகளை விரித்துப் பறப்பதையும் உற்று நோக்கிய மனிதன் அதற்குப் பதிலாக ஒன்றைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று எண்ணி பறவையைப் போன்றே ஓர் உருவில் விமானத்தை உரு வாக்கி அதற்கு இயந்திர சாதனங்களைக் கண்டு பிடித்து, இணைத்து மேலே பறக்க விட்டான். ஒரு முறை பிழைத்தாலும் அவனு டைய விடாமுயற்சியின் காரணமாக அடுத்த முறை வானிலே பறக்கத் தொடங்கியது. அன்று படைத்த விமானத்தை இன்று வெவ்வேறு விதமாக படைத்து வருகின்றான். இவ்வாறே பறவையைக் கண்டான் விமானம் படைத்தான் என்பது சாலப் பொருத்தமான கூற்றாக காணப்படுகின்றது.

பிறருக்கு உதவி செய்வோம்

செல்வி மு. தனுஜா
தரம் 5 A

''அன்புடையார் என்பும் பிறர்க்குரியார்'' என்பது பொய்யா மொழிப் புலவரின் அமுத மொழி. ஒருவன் மற்றவனுக்கும், பிற உயிர் களுக்கும் செய்யும் சேவையே மிக உயர்ந்த இறை பூசையும் ஆன்மீகமும் ஆகும். முந்தித் தமிழ் வளர்த்து மூவுலகும் போற்றி செய்த எந்தைத் தமிழ்க் குலமும் இதையே வலி யுறுத்தி வந்தமை கண்கூடு. சமயங்களிலும் மட்டுமன்றி பண்டைய வாழ்க்கை முறை களிலும், நெறிகளிலும், நீதிகளில் பிறருக் குதவும் சேவைக்கு மாண்புறு இடம் வழங்கப் பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

காலை நீரிலே கழனிப் பாசனம் நடத்துவது போல இன்று புழுதி அடங்காத வீதி ஓரங்களிலும் காற்றாடாத கல் கோபுரங் களின் கீழும் எத்தனை ஜீவன்கள் துடித்துக் கொண்டிருக்கின்றன. ஊரிழந்து, உறவிழந்து, உணவின்றி, உறக்கமின்றி, உணர்விழந்து பரிதவிக்கும் நடைப் பிணங்கள் எத்தனை? எத்தனை? கண்களிலே எரியும் ரணங்களைத் தேக்கிக் கொண்டு விஞ்ஞானம் தயாரிக்காத வெடி குண்டை நெஞ்சிலே தேக்கிக்கொண்டு வீதி வலம் வருபவர்கள் எத்தனை போ. தன் ரகசிய ரணங்களை வெளியே சொல்ல முடியாது முனகிக் கொண்டிருக்கும் மூல விக்கிரகங்கள் எத்தனை எத்தனை. அங்கம் இழந்து அடுத்தவரின் அரவணைப்பிற்காக ஏங்கும் இதயங்கள் எண்ணிலடங்கா. விழிகளிலே நீர் தேங்க ஒட்டிய வயிற்றுடன் கால் வயிற்றுக் கஞ்சிக்காய் ஏங்கும் பட்டினி மாந்தர்கள் பல்லாயிரம் பல்லாயிரம். அவலங் களைச் சுமந்து கொண்டு புன் முறுவல் மறந்து தன் முகவரியையும் தொலைத்து விட்டு மௌனத்தில் உறங்குபவர்கள் எத்தனை பேர்.

இவ்வாறு எமது பூமிப் பந்தில் முளைத்து நெளிந்து வளைந்து செல்லும் நெருப்புக் கொழுந்துகள் பல்லாயிரம் பல் லாயிரம். இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு அசையாமல் இருந்தால் அவை களும் கூட தீப்பிடிக்கும். இவர்கள் அனை வருக்கும் தேவைப்படுவது அன்பு ஆதரவு அரவணைப்பு. அறங்களைப் பின் கோடிக்குள் தள்ளிய நிலையில் மற்றவர் சுக துக்கங்களைப் பகிராமல் வாழ்பவன் மனிதனல்ல. அவன் விலங்கு. அடுத்த மனிதன் மீது அன்பு செலுத்துவதும் உதவி செய்வதும் உடுக்கை இழந்தவன் கைபோல பேருதவியாக இருக்கும்.

அவலங்களைச் சுமக்கின்ற அத்தனை ஜீவன்களுக்கும் கூட்டாகவும், தனியாகவும் உதவி செய்து அவர்கள் கண்ணீரைத் துடைப்போம். அவர்களுக்குத் தக்க வழிகாட்டி மன நம்பிக்கையை ஊட்டி, மன உறுதியோடு தலை நிமிர்ந்து வாழ வழிகாட்டுவோம். வெறும் புகழுக்கும் பெருமைக்கும் செய்யும் உதவி சிறப்புப் பெறாது. முழுமை பெறாது. உள்ளங் களின் தேவையுணர்ந்து தானம், தர்மம், நீதி காத்து, உடல், பொருள், ஆவி அத்தனையும் அர்ப்பணித்து உதவி செய்வதிலே பெருமை யுண்டு சிறப்புண்டு.

தெளிவான பேச்சு தூய்மையான உள்ளத்தின் எதிரொலி

வேடனும் பாம்பும்

செல்வன் சீ. பானுசாந்
தரம் 5 A

பனி உறையும் கடுங்குளிர் காலம் வேடன் ஒருவன் ஆற்றங்கரை வழியே சென்று கொண்டிருந்தான். அங்கே ஒரு பாம்பு பனியின் மேலே கிடந்தது. அதன் வாலைச் சுற்றி பனி உறைந்திருந்தது. ''அன்புள்ள ஐயா'' பாம்பு வேடனை அழைத்தது. தயவு செய்து என்னைக் காப்பாற்றுங்கள் என்றது. வேடன் பனிக்கட்டியை வெட்டி அகற்றினான். பாம்பை விடுவித்தான். ''என் உடலைச் சூடாக்கி விடுங்கள் என்று பாம்பு வேண்டியது. வேடன் பாம்பை தனது மார்போடு அணைத்துக் கொண்டான். பாம்பின் உடல் சூடானது. அது உயிர் பெற்றது. ''ஐயா நீங்கள் என்னைக் காப்பாற்றி விட்டீர்கள். இனி நான் உங்களைக் கடிப்பேன். அன்புக்கு கை மாறாகக் கொடுமை செய்ய வேண்டும் என்று பாம்பு வேடனிடம் கூறியது.

மாணவர்கள் மத்தியில் இலைமறை காயாக மறைந்திருக்கும் பல்வகையான மொழிசார் திறன்களை வெளிக்கொணரும் நோக்குடன் முத்தமிழ் மன்றம் செயற்பட்டு வருகின்றது. மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கை விருத்தியடையச் செய்யும் நோக்குடன் எம் முத்தமிழ் மன்றம் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும். கடந்த காலங்களில் எம் முத்தமிழ் மன்றம் பெரியார்களின் தினம், பேரறிஞர்களுக்கான விழாக்கள் போன்றவற்றை சிறப்பாக நடத்தியதன் மூலம் மாணவர்களின் திறன்களை அறிய வாய்ப் பளித்தது.

மேலும் பேச்சுத்திறன், தலைமை தாங்கும் பண்புகளை வளர்க்கும் நோக்கில் எமது மன்றச் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. மாணவர்கள் மத்தியில் கவிதை, கட்டுரை, பேச்சு, இலக்கணம், தனிநடிப்பு, திறனாய்வு, இசை போன்ற போட்டிகளை நடாத்தி வெற்றிபெற்ற மாணவர்களுக்கு முத்தமிழ் விழா தினத்தன்று பரிசில்களை வழங்கி ஊக்குவிப்பதன் மூலம் மாணவர்களிடம் சிறந்த தேர்ச்சியை உண்டு பண்ணி வருகின்றது. மற்றும் தமிழ் மொழித் தினப் போட்டிகளை பாடசாலை ரீதியாக நாடாத்தி மாணவர்களுக்கு பயிற்சியளித்தும் வருகிறது. அந்த வகையில்

இப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர் களுக்கு பரிசில்களும் சான்றிதல்களையும் வழங்கி கௌரவித்து வருகின்றது.

2002ஆம் ஆண்டில் முத்தமிழ் மன்றத்தின் தலைவராக செல்வன் தி.நிறோசன் அவர்களும், உப - தலைவராக செல்வி செள.லாவாண்யா, செயலாளராக செல்வி சி.வலன்ரின், பொருளாளராக செல்வன் ம.பிரசன்னாவும் மன்றத்தை சிறப்பாக வழிநடத்தி யுள்ளனர். இம் மன்றம் 2001ஆம் - 2002ஆம் ஆண்டுக்கான முத்தமிழ் விழாவை சிறப்பாக நடத்தி முடித்திருக்கின்றது. இந்தப் பெரு விழாவில் பிரதம விருந்தினராக கலாநிதி எஸ்.சிவலிங்கராசா (தமிழ்த் துறை யாழ். பல்கலைக்கழகம்) அவர்களும், சிறப்பு விருந்தி னராக திரு கலைஞான கேசர் மரபுக் கலை ஞானி செல்லையா மெற்றாஸ் மெயில் (செய லாளர், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்) அவர்களும், கௌரவ விருந்தினராக திரு க.தனபாலசிங்கம் (கல்விப் பணிப்பாளர் சண்டிலிப்பாய் கோட்டம்) அவர்களும் மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி சிவலிங்கராசா அவர்களும் வழங்கி கௌர வித்து முத்தமிழ் விழாவை சிறப்பித்தனர். இவ்வாறாக வருகை தந்த விருந்தினர்கள் முத்தமிழ்விழாவில் சிறப்பு சொற்பொழிவுகள் ஆற்றுவதால் மாணவர்கள் சிறந்த அறி வையும், பல்வேறான விடயங்களையும் கற்றுக் கொள்ளுட் வாயப்பு வழங்கப்படு கின்றது. இவ்வாறான நிகழ்வுகள் பாடசாலை யில் நடைபெறுவது மாணவர்களின் வளர்ச் சிக்கு ஊன்றுகோலாக அமைகின்றது.

இந்த வகையில் முத்தமிழ் மன்ற பெருவிழாவில் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகப் பிரதியாக்கம் போன்ற பல்வேறான போட்டிகளை வகுப்பு ரீதியாக நடாத்தி அதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதல் களை வழங்குவதன் மூலம் இனிவரும் நிகழ்வு களிலும் எம் மாணவர்களை மென்மேலும் வளர்க்க கைகொடுத்து உதவுகின்றது. சிறப் பாக நடாத்தப்பட்ட இம் முத்தமிழ் விழாவிலே பல்வேறான நிகழ்வுகள் அரங்கேறின. புஸ் பாஞ்சலி, அபிநயப்பாடல், மெல்லிசைப் பாடல், சிறுவர் நாடகம், இசை நாடகம், சமூக நாடகம், நாட்டிய நாடகம், போன்ற பல்வகையான நிகழ் வுகள் நடைபெற்றன. இவ்வாறான இயல், இசை, நாடக முத்தமிழ் நிகழ்வுகள் இவ் முத் தமிழ் விழாவில் இடம் பெற்றமை குறிப்பிடத் தக்கதாகும். இவ்வாறான முத்தமிழ் விழாவை நடத்துவதால் மாணவர்களுக்கு முத்தமிழின் பொருளை உணர வைத்திருக்கின்றது.

2003ஆம் ஆண்டில் முத்தமிழ் மன்றத் தின் தலைவராக செல்வன் ப. சுதர்சன் அவர் களும் உப தலைவராக செல்வன் த.விக்னேஸ் வரனும், செயலாளராக செல்வி ச.விஜிதாவும் பொருளாளராக செல்வி பூ.தனுஜாவும் முத் தமிழ் மன்றத்தை சிறப்பாக வழிநடத்தினர். இக்காலங்களில் மாதாந்த தமிழ் மன்ற கூட்டங் களை நடத்தி மாணவர்களிடம் பேச்சு, கவிதை, நகைச்சுவை நாடகம், தனி நடிப்பு போன்ற பல சிறப்பு வாய்ந்த நிகழ்வுகளை நிகழ்த்து வதால் பார்வையாளர்களையும் பங்காளி களாக்கும் திறன் வாய்ந்ததாக அமைந் திருந்தது. விவேகானந்தர் விழா, பாரதிவிழா, தனிநாயகம் , அடிகளாரின் விழா போன்ற பெரியோர்களின் நிகழ்வுகளை நினைவு கூர்ந்து மாணவர்கள் மத்தியில் பெரியோர்களின் வரலாறு, அவர்கள் தமிழுக்காற்றிய பணிகள் என்பவற்றை அறிய வாய்ப்பளித்தது. இவ்வா றாக எம் முத்தமிழ் மன்றம் தமிழறிவினை மாணவர் மத்தியில் வளர்க்கும் நோக்கில் செயற்பட்டுவருகிறது.

2004ஆம் ஆண்டில் தற்போது எம் முத்தமிழ் மன்றம் சிறப்பாக இயங்கி வருகிறது. மன்றங்கள் தோன்றியது மாணவர்களின் வளர்சிக்கே என்ற கோட்பாட்டின் அடிப்படையில் எம் முத்தமிழ் மன்றம் இயங்கி வருவது குறிப் பிடத்தக்கதாகும். இனிவரும் காலங்களிலும் முத்தமிழ் விழா, பெரியோர்களின் விழா மாதாந்த தமிழ் மன்ற பொதுக்கூட்டம். தமிழ் மொழித்தினம் போன்ற நிகழ்வுகளை நடாத்து வதனால் மாணவர்கள் மத்தியில் அவ் இனிய

தமிழ் மொழியை அழியாது பாதுகாப்பது தமிழ் மாணவர்களாகிய எமது கடமையே ஆகும். அந்த வகையிலே எம் தாய்மொழியின் சிறப்பை மாணவர்கள் மத்தியில் மேலோங்க வைப்ப தற்கு எம் மன்றம் என்றென்றும் செயற்பட்டு வரும் என்பது திண்ணம் ஆகும்.

செயலாளர்,
முத்தமிழ் மன்றம்.

J/ MANIPAY MEMORIAL ENGLISH SCHOOL
HINDU UNION
யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை
இந்துமா மன்றம்

காப்பாளர்:-	திரு.அ.மு.அருணாசலம்
உப காப்பாளர்:-	திருமதி வி.ஜெ.பை.மூர்த்தி
தலைவர் :-	செல்வன் ந.கர்சன்
செயலாளர்:-	செல்வி செ.அனுசகுமாரி
பொருளாளர்:-	செல்வன் ஈ.கிருஸ்ணகுமார்

எமது இந்துமா மன்றத்தின் 2001ஆம் ஆண்டின் அங்கத்தவர்களின் தலைவராக ஞா.ஐங்கரன், செயலாளர் செல்வன் செ.சிவ ரூபன், பொருளாளர் ஐ.மன்சியா என்போர் தெரிவு செய்யப்பட்டனர். பொறுப்பாசிரியர்களாக திருமதி சி.சோமநாதன், திருமதி வி.ஜெ.பை. மூர்த்தி, திரு.சி.இராஜரட்ணம், திரு.இ.வாசு தேவன் போன்றோர் கடமையாற்றினர். இக்காலத்தில் நடேசர் ஆலயத்தின் நித்திய நைமித்திய கிரியைகள் சிறப்பாக கொண்டாடப் பட்டது. விசேடமாக குரு பூசைத் தினங்களும், நவராத்திரி விழாவும் சிறப்பாக நடைபெற்றது. அத்துடன் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெற்றது. இக்காலத்தில் நவராத்திரி விழாவை முன்னிட்டு சமய அறிவுப் போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டது.

2002ஆம் ஆண்டின் இந்து மாமன்ற தலைவராக து.சுகந்தனும் செயலாளராக ம.பிரகாஷ் அவர்களும் பொருளாளராக செ.பிரதீபன் அவர்களும் தெரிவு செய்யப் பட்டனர். பொறுப்பாசிரியர்களாக் திரு.சி. இராஜரட்ணம், திருமதி வி.ஜெ.பை.மூர்த்தி, திரு.இரா.வாசுதேவன், திருமதி சி.சோமரதன், திரு. து. சிவஞானம் என்போர் கடமையாற் றினர். இக்காலத்திலும நித்திய, நைமித்திய கிரியைகள் சிறப்பாக இடம் பெற்றது. விசேடமாக குருபூசைத் தினங்களும், நவ ராத்திரி விழாவும் சிறப்பாக நடைபெற்றது. இக்காலத்தில் எமது பாடசாலையினாலும், ஏனைய நிறுவனங்களினாலும் நடாத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிகள், பண்ணிசைப் போட்டி கள், பேச்சுப் போட்டிகள் என்பவற்றில் மாணவர் கள் வெற்றியீட்டி தங்கப் பதக்கங்களைப் பெற்றனர்.

2003ம் ஆண்டு இந்துமாமன்றத்தின் தலைவராக து. சுகந்தனம், செயலாளராக செல்வி த. கவிதாவும், பொருளாளராக செல்வி சரண்யாவும் கடமையாற்றினர். பொறுப்பாசிரியர்

களாக திரு சி இராஜரட்ணம், திருமதி வி. ஜெ. பை. மூர்த்தி, திரு து. சிவஞானம், திரு இ. வாசுதேவன், திருமதி மங்களேஸ்வரி, செல்வி வ. தர்மராஜா திருமதி கா. சர்வேஸ்வர சர்மா, திருமதி சி. சோமநாதன் ஆகியயோர் கடமையாற்றினர். இக்காலப்பகுதியின் இறுதி யில் திரு. சி. இராஜரட்ணம் அவர்கள் இளைப் பாற திருமதி வ. குகபாலன் அவர்கள் தலை மைப் பொறுப்பை ஏற்று நடாத்தினார்.

இந்து மாமன்றத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டினை நாம் நோக்கும் போது எமது ஆலயத்தில் மட்டுமன்றி மருதடி ஆலயத்திலும் மாணவர்களின் பணி தொடர்ந்தது. இங்கு சிரமதானம், தொண்டர்பணி போன்றனவும் இடம் பெற்றது. இதைவிட மாணவர்களை களப்பயிற்சியில் ஈடுபடுத்தும் முகமாக யாழ் குடாநாட்டிலுள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்கள் பலவற்றையும் மாணவர்கள் நேரடியாகத் தரிசித்து பயனடைந்தனர். அத்துடன் கீரிமலை சிவன் கோவிலுக்கு மாணவர்கள் கூட்டுப் பிரார்த்தனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு பங்கேற்றனர். இணுவில் இளம் தொண்டர் சபை, இணுவில் திருநெறி தமிழ்மறைக் கழகம், பொதுநூலகம், சைவபரிபாலனசபை, யாழ் மாநகரசபை, சமய அறிவுப் போட்டி, சாந்தையர் மடம் விநாயகர் ஆலய பரிபாலன சபையினால் நடாத்தப்படுகின்ற பண்ணிசை கலைப் போட்டிகளில் எமது மாணவர்கள் பல்வேறு பரிசில்களைப் பெற்றுக் கொண்டனர்.

எமது பாடசாலை பெற்ற தங்கப்பதக்கங்களின் விபரம்

2001

1) கி. பிரதிபன்
2) கி விக்கினேஸ்வரி - யாழ்மாநகரசபை 1ம் இடத்தைப் பெற்றமைக்கான தங்கப் பதக்கம்
3) ஜெ. வைஷ்ணவி - இணுவில் இளம் தொண்டர்சபை - பண்ணிசை வெள்ளிப்பதக்கம்

2002

4) சே. கோபிகா - பரராஜசேகரப்பிள்ளையார் பண்ணிசை - தங்கப்பதக்கம்
5) ர. சுகிர்தா - இணுவில் இளம் தொண்டர் சபை - எழுத்துப் பரீட்சை - தங்கப்பதக்கம்

2003

6) ஜெ. வைஷ்ணவி - இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் திருநெறி தமிழ் மறைக் கழகம் வெள்ளிப்பதக்கம்.
7) சே. கோபிகா - சைவபரிபாலன சபை வெள்ளிப்பதக்கம்.

2003 அகில உலக இந்துமாநாடு பண்ணிசைப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் சே. கோபிகா 2ம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். செல்வி ஜெ. வைஷ்ணவி அகில உலக இந்துமகா நாட்டுப் பண்ணிசைப் போட்டியில் தேசிய மட்டத்தில் தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

இதற்கு மேலாக பாடசாலை நடேசர் ஆலயத்தின் சிவகாமி அம்பிகை சமேத சிவ சிதம்பரேஸ்வர சுவாமி அலயம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு புனராவர்த்தன பிரதிஷ்ட மகா கும்பாபிஷேகம் 05-11-2003 அன்று ஐப்பசி மாதட் 19ம் நாள் உத்திரட்டாதி நட்சத்திரம் கூடிய வேளையில் கும்பாபிஷேகம் இடம் பெற்றது. அன்றைய தினம் அன்னதான வைபவ மும் இடம் பெற்றது. இக்கிரியைகளை சிவசிறி பரமேஸ்வர ஜெயக்குமார குருக்கள் அவர்கள் வெகுவிமரிசையாக நடாத்தினார். இவருக்கு உறுதுணையாக திரு கி. வாசுதேவன் அவர்களும் கடமையாற்றினார்.

இவ்வாலயத்தின் புனர்நிர்மாண வேலைகளை முன்னின்று முழுமனதுடன் செய லாற்றிய அதிபருடன் திரு. சு. இராஜ ரட்ணம் அசிரியரும் நினைவு கூறத்தக்கவர். இதைவிட நடேசர் ஆலயப் புணர்நிர்மாண வேலை களுக்கு பல்வேறு வகையில் நிதி உதவி களையும் பொருளுதவிகளையுந் தந்துதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மன மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

-செயலாளர்

J/ MANIPAY MEMORIAL ENGLISH SCHOOL SCIENCE & MATHEMATICS ASSOCIATION

யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை

கணித விஞ்ஞான மன்றம்

காப்பாளர்:-	திரு. அ.மு. அருணாசலம்
உப காப்பாளர்:-	திரு கு. சோமஸ்கந்தமூர்த்தி
தலைவர் :-	செல்வன் ர. நிசாந்
உப தலைவர் :-	செல்வன் கி. பிரதீபன்
செயலாளர்:-	செல்வி நா. கோபினா
பொருளாளர்:-	செல்வன் செ. யசிந்தன்

எமது பாடசாலையின் விஞ்ஞான கணித மன்றம் தனது செயற்பாடுகளின் ஊடாக பாடசாலை மாணவர்களது உடல் உள ஆற்றல்களை வளர்ப்பதில் முனைப்பாகவுள்ளது. கல்விச் சுற்றுலாக்களை ஏற்பாடு செய்தல், கற்பித்தல் சாதனங்களை ஆக்கல் பாடசாலை மட்டத்தில் வினாடி வினாப் போட்டிகளை ஒழுங்கு செய்தல் என்பன இதனது செயற் பாடுகளாக உள்ளன. நடப்பு ஆண்டில் மாண வர்களது கல்வி மேம்பாட்டிற்காக உழைக்கும் நோகுடன் செல்வன் ர. நிசாந் தலை மையில் விஞ்ஞான கணித மன்றம் அமைக்கப் பட்டுள்ளது. சென்ற ஆண்டில் செல்வன. கை. சுபாகரைத் தலைவராகவும், 2002ம் ஆண்டில் செல்வன் சி. பகிரதனைத் தலைவர்ராகவும், 2001ம் ஆண்டில் செல்வி க. பிரதிபாவைத் தலைவராகவும் கொண்டு எமது மன்றம் செயற்பட்டு வந்தது. அதிபர் ஆசிரியர் களின் வழிகாட்டலில் எமது மாணவர்கள் கணித விஞ்ஞான பாடங்களில் சிறப்புத் தேர்ச்சிகளைப் பெற்று உயர்தர வகுப்புக்களில் கற்பதற்காக வேறு பாடசாலைகளுக்குச் சென்றுள்ளனர். கணித விஞ்ஞான வினாடி வினாப் போட்டிகளில் எமது மாணவர்கள் கோட்ட மட்டத்திலும், வலய மட்டத்திலும் சிறப்பான இடங்களைப் பெற்று தமது திறன்களை வெளிக்காட்டி யுள்ளனர். 2002ம் வருடம் பாடசாலை மட்டத் தில் கண்காட்சி ஒன்றை ஒழுங்கு செய் துள்ளோம். இது கற்றலில் எமக்குத் தூண்டி யாக அமைந்துள்ளது. கணித விஞ்ஞான பாடங்களில் 2003ம் ஆண்டின் பெறுபேறும் மாணவர்களினது கற்றல் ஆர்வமும் எமது வளர்ச்சிக்கு குறிகாட்டியாக அமைந்துள்ளது. சென்ற ஆண்டில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 43% மாணவர்கள் விஞ்ஞான பாடத்திலும், 49% மாண்வர்கள் கணித பாடத்திலும் சித்தி பெற்றுள்ளனர். கணித பாடத்தில் கோட்டமட்டத்தில் எமது மாணவர்கள் இரண்டாவது இடத்தில் உள்ளனர். தொடர்ந் தும் எமது மன்றம் மாணவர்களது மேம் பாட்டிற்கு ஊக்கமுடன் உதவும் என்பதில் நாம் உறுதி பெறுவோம்.

-செயலாளர்

வாக்குக் கொடுப்பதை விட
கொடுத்த வாக்கினை காப்பாற்றுவதே கடினம்

J/ MANIPAY MEMORIAL ENGLISH SCHOOL SOCIAL UNION

யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை

சமூகவியல் மன்றம்

காப்பாளர்:- திரு. அ.மு. அருணாசலம்

பொறுப்பாசிரியர்கள்:- திரு நா. பாலகிருஸ்ணன்
திரு. மு. ஸ்ரீஸ்கந்தராஜா
திருமதி பு. பாலசுந்தரம்
திருமதி சி. லோகதாசன்

தலைவர் :- செல்வன் குணரட்ணம் ரமேஸ்குமார்
உப தலைவர் :- செல்வன் யேசுபாலன் யேசுராசா
செயலாளர்:- செல்வி றேமினா துரைராஜா
உபசெயலாளர்:- செல்வன் கிருஸ்ணபிள்ளை பிரதீபன்
பொருளாளர்:- செல்வி கோபிதா குணசேகரம்
பத்திராதிபர்:- செல்வன் செல்வராசா மயூரன்
செல்வி கோவர்த்தனி புஸ்பராசா

எமது சமூகவியல் மன்றம் மாணவர் களின் அறிவை மேம்படுத்த அரும் பாடுபட்டு வருகின்றது. 2001ஆம் ஆண்டு முதல் கடந்த வருடம் வரை திரு. சி. இரசரத்தினம் அவர் களின் வழிகாட்டலில் இம் மன்றம் பாராட்டக் கூடிய வகையில் செயற்பட்டுவந்துள்ளது. எமது மாணவர்கள் கோட்ட, வலய மட்ட சமூகக் கல்வி பொது அறிவு, ஆக்கப் போட்டிகள் என்பவற்றில் பங்குபற்றி சான்றிதழ்களை பெற்றுள்ளனர்.

போட்டியாளர் பெயர்	பிரிவு
கி. பிரதீபன்	06-07
ஜெ. கலாரூபி	06-07
செ. பர்மிலன்	06-07
வை. சுபாகர்	08-09
வே. கஜேந்திரன்	08-09
க. பிரதீபா	10-11
தி. நிரோஜன்	10-11
அ. சுவர்ணா	10-11
தி. முகுந்தன்	12-13
மா. கவிச்செல்வன்	12-13

2003ம் ஆண்டு கோட்டமட்ட பொது அறிவுப் போட்டியில் பங்குபற்றி சான்றிதழ் களையும் பெற்றுள்ளனர்.

போட்டியாளர்	பிரிவு	நிலை
கு. பார்த்தீபன்	08-09	02
வி. விஜயகுமாரி	08-09	02
ஜே. தாட்சரயினி	08-09	05
ப. அஜந்தன்	10-11	01
வே. கஜேந்திரன்	10-11	02
கை. சுபாகர்	10-11	03
சை. பற்றிக் சசிகரன்	12-13	01
சோ. சுகன்யா	12-13	03
சி. சிவஸ்ரீ	12-13	05

2003 கோட்டமட்டத்தில் நடைபெற்ற ஆக்கத்திறன் போட்டியில் பின்வரும் மாணவர் கள் பங்குபற்றி பரிசில்களை பெற்றுள்ளனர்.

விடயம்	போட்டியாளர்	பிரிவு	நிலை
1. ஆக்கக்குறிப்புக்கள்			
	சி. லணுஜன்	06-07	01
	அ. தனுஜா	06-07	03
	வி. விஜயகுமாரி	08-09	04

2. சித்திரம், ஓவியம்

க. விக்கினேஸ்வரன்	12-13	02
க. பிரதீபா	10-11	03
ச. சர்வானந்தன்	10-11	05

3. செதுக்கல் வேலை

யே. எட்வின் ஜெயராஜ்	12-13	02
ப. வினோபா	10-11	04
இ. மயூரன்	10-11	05

4. வரலாற்றுக் குறிப்புக்கள்

சி. றொசானி	10-11	04
இ. உசாயினி	10-11	05

5. புதிய ஆக்கத் தொழில்நுட்பம்

யே. எட்வின் ஜெயராஜ்	12-13	01
ஜெ. நிரோசன்	10-11	04

2003 வலயமட்டத்தில் பொது அறிவுப் போட்டியில் பங்குபற்றி சான்றிதழ்களை பெற்ற மாணவர்கள் பின்வருமாறு:-

போட்டியாளர்	பிரிவு	நிலை
சி. பிரணவன்	07-08	04
பா. அஜந்தன்	10-11	01

2003 வலய மட்டத்தில் நடைபெற்ற ஆக்கத்திறன் போட்டியில் பங்குபற்றி சான்றிதழ்களை பெற்ற மாணவர்கள் பின்வருமாறு:

விடயம்	போட்டியாளர்	பிரிவு	நிலை
சித்திர ஓவியம்	க. விக்கினேஸ்வரன்	12-13	01
செதுக்கல் வேலை	யே. எட்வின் ஜெயராஜ்	12-13	02
தொழில்நுட்பம்	யே. எட்வின் ஜெயராஜ்	10-11	01

மேற்படி போட்டிகளில் பங்குபற்றி சான்றிதழ்களையும் பெற்றதன் மூலம் பாடசாலைக்கும் மன்றத்திற்கும் பெருமை தேடித்தந்துள்ளனர்.

மேலும் மாணவர்கள் பொது அறிவு, ஆக்க போட்டிகளில் பங்கு பற்றி சான்றிதழ்கள், பரிசுகளை பெற எமது மன்றம் அதற்கான வழிவகைகளை முன்னெடுக்கும் என்பதையும் இம்மன்றம் மூலம் மாணவருடைய சமூகக் கல்வி சம்பந்தமான வாண்மை விருத்திக்கான பல்வேறு ஆக்க செயற்பாடுகளை மேற் கொண்டு அவர்களது வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று செயற்படும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

-செயலாளர்

J/ MANIPAY MEMORIAL ENGLISH SCHOOL ADVANCED LEVEL STUDENTS' UNION

யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை

உயர்தர மாணவர் மன்றம்

காப்பாளர்:-	திரு. அ.மு. அருணாசலம்
பொறுப்பாசிரியர்:-	திரு மு. சிறிதங்கராசா
தலைவர் :-	செல்வன் சை. பற்றிக் சசிகரன்
உப தலைவர் :-	செல்வி சி. சிவசிறி
செயலாளர்:-	செல்வன் ரா. பிரதீபன்
உப செயலாளர்:-	செல்வன் சி. ரஜித்
பொருளாளர்:-	செல்வன் செ. புஸ்பராசா

உயர்தர மாணவர்களின் அறிவு, ஆளுமை விருத்தியினை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட மன்றங்களில் உயர்தர மாணவர் மன்றமும் ஒன்றாகும். இத்தேவை யினை உணர்ந்து 1977ம் ஆண்டு முதல் முதலாக 7 அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப பட்ட எமது மன்றம் இன்று 200ற்கும் மேற்பட்ட கலை, வாத்தகப்பிரிவு மாணவர்களை அங்கத்த வர்களைக் கொண்டு பல சாதனைகளைப் புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது. எமது மன்ற அங்கத்தவர்கள் பலர் காலத்திற்கு காலம் பல்கலைக்கழகம் புகுந்து வெளியேறி உலகின் பல திசைகளிலும் மெமோறியல் அன்னையின் நாமத்தினை போற்றி வாழ்ந்து கொண்டிருப்பது யாவரும் அறிந்த உண்மை இவ்வாறு தமது அறிவு, ஆளுமை என்பவற்றை விருத்தி செய்வதற்குக் காலத்திற்கு காலம் களம் அமைத்துக கொடுத்து வந்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும். அதாவது கருத்தரங்குகள் நடாத்தி மாணவர்களின் பாடரீதியான அல்லது பொதுவான நடைமுறை விடயங்களினை மாணவர்களுக்கு புகுத்துவதில் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. இப்பணியை வழி நடத்துவதற்கு 2001, 2002ம் ஆண்டுகளில் எமது மன்றத்தின் பொறுப்பாசிரியராக திரு. சொ. ஜெயவீரசிங்கம் கடமையாற்றினார். 2001ம் ஆண்டு தலைவராக செல்வன் M. ரமேஸ் உம் செயலாளராக செல்வி ச. கனேசியாவும், செயற்பட்டனர். இக்காலப்பகுதியில் அங்கத் தவர்களின் ஆக்கங்களைத் தாங்கி ''மாற்றம்" என்ற சஞ்சிகை தவழ விடப்பட்டது. இப்பணி களைத் தொடர 2002ம் ஆண்டின் தலைவராக செல்வன் சி. டனிஸ்ரனும் செயலாளராக செல்வி செள. லாவண்னியாவும் கடமையாற்றி மன்றத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டனர். இப்பணி மேலும் தொடர இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

-செயலாளர்

J/ MANIPAY MEMORIAL ENGLISH SCHOOL

ENGLISH UNION

Patron:	*Mr. A.M. Arunasalam*
Teachers – in – charge:	*Mr. E.J. Leslie*
	Miss S, Sivayogan
	Miss S. Selladurai
President:	*Miss S. Roshany*
Secretary:	*Mas. K, Piratheepan*
Treasurer:	*Miss N. Gowsalya*
Editor:	*Miss V. Vijayakumary*

With great enthusiasm, I submit the annual report of the Union for the year 2002 and 2003

The principal's objective of this Union is to provide opportunities to the learners to use the language meaningfully and confidently.

In doing so, we arrange monthly forums with a variety of activities such as singing story telling, Quiz contests, Dramas,

speeches, etc. I am very proud to say that almost all the students take part in this monthly forum.

Our Union also arrange Video – shows for the students. The active participation in the English Day competitions give us remarkable results. Miss Thanuja Murugathas and Miss V. Vijayakumary won first place in copy writing for grade three and grade nine respectively in the Zonal Level competition, in 2002. Last year's G.C.E. (O/L) results gave us good results. Mas. B. Ajanthan got an "A" in English.

Finally. I wish to thank our staff and students for their fullest support given at all times.

Secretary

J/ MANIPAY MEMORIAL ENGLISH SCHOOL CHRISTIAN UNION

யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை

கிறிஸ்தவ மன்றம்

அதிபர்/ காப்பாளர்:-	திரு. அ.மு. அருணாசலம்
உப காப்பாளர்:-	செல்வி செ. சத்தியறாஜி
	செல்வி ஜே. யூடித் சுஜிதா
	திரு. இ. ஜெ. லெஸ்லி
தலைவர் :-	செல்வன் கு. சார்ள்ஸன்
உப தலைவர் :-	செல்வன் யே. எட்வின் ஜெயராஜா
செயலாளர்:-	செல்வி செ. சர்மிளா
உப செயலாளர்:-	செல்வி ஞா. மேரி மெற்றில்டா
பொருளாளர்:-	செல்வன் தி. விஜிஜேந்திரன்

எமது மன்றம் முப்பது ஆண்டுகளுக்கு முன் 1964ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. மாணவர்களை ஆன்மீக ரீதியிலும், சமயக் கல்வி, ஒழுக்கம் போன்ற விடயங்களினூடேயும் வளர்ப்பது இம்மன்றத்தின் முக்கிய குறிக்கோள் களாகும். அந்த வகையில் இம்மன்றம் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை இறைவனின் அருளுடன் செவ்வனே செய்து வருவது குறிப்பிடத்தக்கது. பாடசாலையின் முன்றில் ஒரு பங்கு மாணவர்களை, அதாவது முந்நூறு மாணவர்களை அங்கத்தவர்களாக் கொண்டுள்ள இம்மன்றம் வருடா வருடம் மறைக்கல்வி நடுநிலையம், தென் இந்தியத் திருச்சபை ஆகிய நிறுவனங்கள் நடாத்தும் மறைக்கல்வித் தேர்வுப் பரீட்சைகளுக்கு மாணவர்களை முழுமையாக தயார்படுத்தி நல்லபெறுபேறுகளைப் பெற நடடிக்கை எடுப்பது சிறப்பம்சமாகும். அத்துடன் ஆண்டு தோறும் ''ஒளி விழா''வினைச் சிறப்பாகக் கொண்டாடவும் செய்கின்றது. அருள்மனை சிறுவர் இல்லம், ஏலிம் சிறுவர் இல்லம், பெத்தானியா சுவிசேஷி சபை, மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயம் ஆகியன ஒளிவிழாவினை எமது மன்றத்துடன் இணைந்து

நடாத்துகின்றன. க.பொ.த (சா.த), (உ.த)ரப் பரீட்சைகளில் எமது மாணவர்கள் தொண் ணூறு சதவீதத்துக்கு மேல் சித்தி பெறு கின்றனர். இம் மன்றத்தை வழிநடத்தும் அதிபர், ஆசிரியர்கள், சமயக் குரவர்களைக் நன்றி யுணர்வுடன் நோக்கும் அதே நேரம் எல்லோர்க்கும் மேலாக தந்தையாக இருந்து வழிநடத்தும் இறைவனைப் போற்றுகின்றோம்.

-செயலாளர்

J/ MANIPAY MEMORIAL ENGLISH SCHOOL FINE ARTS ORGANISATION

யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை

நுண்கலை மன்றம்

காப்பாளர்:-	திரு. அ.மு. அருணாசலம்
பொறுப்பாசிரியர்கள்:-	திருமதி வி. ஜெ.பை. மூர்த்தி
	திருமதி ச. கௌரிகாசன்
	திருமதி கா. சர்வேஸ்வரசர்மா
	திருமதி ம. இளமுருகன்
	திரு இ. ரமணன்
தலைவர் :-	செல்வன் அ. ரஜீவ்காந்தன்
உப தலைவர் :-	செல்வி தெ. சாமிளா
செயலாளர்:-	செல்வன் வ. சசிகரன்
உப செயலாளர்:-	செல்வி ர. நிஷாந்தி
பொருளாளர்:-	செல்வன் அ. விஜித் டிலக்சன்

2001ஆம் ஆண்டு தொடங்கி இன்று வரை நுண்கலை மன்றத்தினூடாக மாணவர் கள் சீததிரம், சங்கீதம், நடனம் போன்ற துறைகளில் சாதனைகள் நிலை நாட்டி யுள்ளனர். கோட்டம், வலயம், மாவட்டம், மாகாண மட்டங்களில் மாணவர்கள் பங்கு கொண்டு சிறப்பான பெறுபேற்றையும் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

செல்வன் அ. மனோகரன் மகாணமட்ட ஓவியப்போட்டியில் முதலாம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இளங்கலைஞர் மன்றம் நடாத்திய இசைப்போட்டியில் 2003இல் செல்வி ஜெ. வைஷ்ணவி 2ம் இடத்தைப் பெற்றுள்ளார். 2004ம் ஆண்டு கீழ்ப்பிரிவில் செல்வி சே. கோபிகா முதலாம் இடத்தையும் மத்தியபிரிவில் செல்வி ஜெ. வைஷ்ணவி முதலாம் இடத்தை யும் பெற்று தங்கப்பதக்கப் பரிசை பெற்றுள் ளனர்.

எமது கிராமத்திலுள்ள ஆலயங்களில் விஷேட தினங்களில் இன்னிசைக் கச்சேரிகள் நடைபெறுவது வழமை. அவற்றிலும் எமது நுண்கலை மன்றத்தினூடாக மாணவர் பங்கு பற்றுவது குறிப்பிடத்தக்கது.

மாணவரின் கலை ஆற்றலையும், திறமைகளையும் வெளிக்கொணர்வதற்கான

பாடசாலை இல்லரீதியாக மாலைக்கட்டல், கோலம்போடுதல், இசை, நடனம், சித்திரம் போன்ற கலைத்திறன் போட்டிகளையும் நுண்கலைமன்றம் வருடந்தோறும் நடாத்தி வருகின்றது.

பல்வேறுபட்ட நிறுவனங்களால் நடாத்தப்படும் கலைத்திறன் போட்டிகளிலும் நுண் கலைமன்றத்தினூடாக மாணவர் பங்கு கொண்டு திறமைகளை வெளிக்கொணர்ந்து சாதனைகள் பல பெற்றமை குறிப்பிடத் தக்கவை.

2003 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட இசைநாடகம், சிந்து நடைக்கூத்துப் போட்டிகளில் எமது பாடசாலை முன்றாம் இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. இப் போட்டிகளில் சிறந்த நடிகர்களாக செல்வி ஜெ. வைஷ்ணவி பெண் நடிகர்களில் சிறந்த நடிகருக்கான சிறப்பு விருதைப் பெற்றுள்ளார். கிராமிய இசை தனி நிகழ்வில் செல்வி ஜெ. வைஷ்ணவி முதலாம் இடம் பெற்றுள்ளார். கிராமிய இசை குழுவில் எமது பாடசாலை முதலாம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்படி போட்டியில் காவடி நடனத்தில் செல்வன் செ. பிரதீபன் முதலாம் இடம் பெற்றுள்ளார். கரக ஆட்ட நிகழ்வில் செல்வன் த. விக்னேஸ்வரன் முன்றாம் இடம் பெற்றுள்ளார். கோலாட்டம் குழு நிகழ்வில் எமது பாடசாலை இரண்டாம் இடம் பெற்றுள்ளது. நுண்கலை மன்றமானது மாணவரின் ஆற்றல்களையும் திறன்களையும் வெளிக் கொணர செயலாற்றுகின்றது.

செயலாளர்

J/ MANIPAY MEMORIAL ENGLISH SCHOOL SCOUT ASSOCIATION

யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை

சாரணர் குழு

Principal: *Mr. A.M. Arunasalam*

Group Scout Leader: *M. Priyanthan*

''தயாராய் இரு" என்பது எமது மகுட வாக்கியம் பல தசாப்தங்கள் மெமோறியல் சாரணர் அணி காங்கேசன்துறை மாவட்ட அளவில் கொடி கட்டிப்பறந்த காலம் 01-07-2003ல் இருந்து இச் சாரணச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் பணி என்னிடம் ஒப்படைக் கப்பட்டது தொடக்கம் புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளல், பயிற்சி வழங்கல், சின்னம் சூட்டுதல் என தற்போது நிகழ்வுகள் தொடர்ந்து கொண்டே போகின்றது. தற்போது நாற்பத்தி ஐந்து சாரணச் சிறார்கள் எமது அணியை அலங்கரிக்கின்றனர். எமது பணியிலே முதலுதவி, சமுதாய் சேவை, சாரணியத்தின் ஊடாக மாணவர் திறன் விருத்தி, சிரமதானம், பொதுச்சேவை என்பவற்றுடன் பாடசாலை சார்பான நிகழ்வுகளின் போது தேவைக்கேற்ப சாரணர்கள் கடமைகளைச் சரிசெய்து பலரின் பாராட்டுக்களைப் பெறுகின்றனர்.

பரிசுகளும் சாதனைகளும்

2001 ஆண்டிற்கு பின்பு இதுவரை நான்கு காங்கேசன்துறை மாவட்ட சாரணர் பாசறை விழா நிகழ்வைச் சந்தித்து இருக்கின் றோம். பல முன்னணிப் பாடசாலைகளுடன் போட்டியிட்டுத் தீப்பாசறை நிகழ்வில் 28-06-2002 முதல் 30-06-2002 வரை யாழ் ராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற காங்கேசன்துறை பாசறை விழாவில் குழுப்பதிவேட்டில் முதல் இடத்தையும் சகல போட்டிகளிலும் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் மூன்றாம் இடத் தையும் அணி நடையில் முதலாம் இடத்தையும் பெற்றது.

21-09-2001இலிருந்து 23-09-2001 வரை யாழ் ராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற காங்கேசன்துறை மாவட்ட பாசறை விழாவில் தீப்பாசறை நிகழ்வில் (நாடகம்) 2ம் இடத்தை யும், அணி நடையில் 1ம் இடத்தையும் சமூக சேவையில் 1ம் இடத்தையும், ஒழுக்கத்தில் 1ம் இடத்தையும் பெற்ற புள்ளிகளின் அடிப் படையில் எமது பாடசாலை 3ம் இடத்தையும் பெற்றது.

16-08-2003ல் யா/சங்கானை சிவப்பிர காச மகா வித்தியாலத்தில் அணித்தலைவர் அறுவர் தலைவர் பயிற்சியில் எமது பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

19-09-2003ல் இருந்து 21-09-2003 வரை நடைபெற்ற காங்கேசன்துறை மாவட்ட பாசறை விழாவில் நாடகத்தில் 1ம் இடத்தையும், அணிநடையில் 2ம் இடத்தையும், ஆவணங்கள் பேணலில் 2ம் இடத்தையும், தீப்பாசறையில் 1ம் இடத்தையும், விளையாட்டுப் போட்டியில் 1ம் இடத்தையும், பாசறை வழிநடத்தலில் 4ம் இடத்தையும், சமூகசேவையில் 3ம் இடத்தை யும் வெற்றி பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் 3ம் இடத்தையும் எமது பாடசாலை அணி பெற்றுக் கொண்டது.

22-02-2004 யாழ் சிம்மிய பாரதி வித்தியாலயத்தில் நடைபெற்ற காங்கேசன் துறை மாவட்ட பேடன் பவல் நிகழ்வில் வினாடி வினா போட்டியில் 1ம் இடத்தையும், நாடகத்தில் 1ம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளது.

நிதி

வேலை, வார அட்டை சாரணியர் கூட்டங்களில் போது பெறப்படும் நிதி அன்பளிப்புகள் மூலம் ஓரளவு நிதியை எமது அணி வங்கியில் வைப்பு செய்து வைத் துள்ளது. சாரணர் செயற்பாடுகளுக்கு இந்நிதி பயன்படுத்தப்படுகின்றது. இலங்கை வங்கி மானிப்பாய் கிளையில் சேமிப்பு கணக்கில் இல 14792 என்ற கணக்கு ஆரம்பிக்கப்பட்டு இக் கணக்கின் ஊடாக சாரணர்நிதி நடைமுறைப் படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

பயிற்சிகளும் விருதுகளும்

எமது சாரணர்களும் காங்கேசன்துறை மாவட்ட சாரணர் ஆணையாளர் திரு S. சிவபாதரட்ணம், உதவி மாவட்ட ஆணையாளர் திரு A. சற்குணராஜா, பயிற்றுனர் தலைவர் திரு நா. போஜன் ஆகியோர் பயிற்சி வழங் கலில் பெரிதும் உதவுகின்றனர். காலத்துக்கு காலம் அணித்தலைவர் பயிற்சிக்கும் சின்னங் களை பெறும் பயிற்சிக்கும் சென்று உயர்வடை கின்றனர். பாடசாலை மட்டத்தில் வேண்டிய பயிற்சிகள் சாரணத் தலைவர் (ஆசிரியரால்) அணித்தலைவர்களினால் வழங்கப்படுகின்ற சாரணர்களை அணிகளாக பிரித்து அணித் தலைவர்களினால் பயிற்சி வழங்கப்படுகின்றது. 2001ம் ஆண்டின் பின் இதுவரை பிரதம ஆணையாளர் விருதினை எட்வின் ஜெயராஜ், புஸ்பராஜ் ஆகியோர் பெற்றுள்ளனர். மாவட்ட ஆணையாளர் கட்டிழையை பொ. ஜினேஸ் வரன், செல்வன் சுகிர்தன், செல்வன் அயந்தன், செல்வன் சுபாகர், செல்வன் சாயிசங்கர், செல்வன் திலக்சன் ஆகியோர் பெற்றுள்ளனர். ஏனையவர் பலர் சாரணர் விருது பெற் றுள்ளனர்.

2004ம் ஆண்டு மாவட்ட ஆணையாளர் கட்டிழை பெறுவதற்காக சி. ரகீந்திரராஜ், ச.

நிரோஜன், ச. சுகிர்தன், ச. ஜமிலன், இ. கயானந்தன் ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.

சேவை

மானிப்பாய் மருதடி விநாயகர், சீரணி நாகம்பாள் கோவில், நுணசை முருகன் ஆலயம், துர்கை அம்மன் ஆலய உற்சவ காலங்களில் கணிசமான சாரணர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர். அதே போல் பொது நிறுவனங்கள் அழைக்கும் போது சென்று தமது பணிகளை ஆற்றிவருகின்றனர்.

2004ம் ஆண்டு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய உற்சவ காலத்தில் காலை, மாலை ஆகிய இருவேளைகளிலும் கூடிய சாரணர்கள் சேவையில் ஈடுபட்ட பாடசாலைகளில் எமது பாடசாலையும் ஒன்றாகும்.

சாரணர் செயற்பாடுகட்கு பாடசாலை அதிபர் திரு அ.மு. அருணாசலம் அவர்களும், உப அதிபர் ஏனைய ஆசிரியர்களும் காட்டி வரும் ஆதரவிற்கும் உதவிகளுக்கும் நன்றி. எமது சாரணர்கள் ஜனாதிபதி விருது வரை பெற்றுச் சிறந்தோங்க வேண்டும். இவ்வாண்டு எமது பாடசாலை மணவராகிய எட்வின் ஜெயர்ராஜ் ஜனாதிபதி விருதுக்கு தகுதி பெற்றுள்ளார்.

2003-07-01க்கு முன்னர் சாரணர் துருப்பிற்கு சாரண ஆசிரியர் திரு. சிவராஜன் அவர்கள் சிறப்பாக பயிற்சிகளை வழங்கி முன்னேற்றப்பாதையில் இட்டுச் சென்று 2003-07-01 அன்றில் இருந்து இப்பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. அன்றிலிருந்து தொடர்ந்து சாரணப் பணியானது முன்னேற்றகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குழு சாரணர் தலைவர்

J/ MANIPAY MEMORIAL ENGLISH SCHOOL INTERACT CLUB

யா/ மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலை

சேவைக் கழகம்

அதிபர்/ காப்பாளர்	:-	திரு. அ.மு. அருணாசலம்
தலைவர்	:-	செல்வன் சி. றஜித்
உப தலைவர்	:-	செல்வன் அ. அம்புஜன்
செயலாளர்	:-	செல்வன் தி. விஜஜேந்திரன்
பொருளாளர்	:-	செல்வன் அ. றஜீவ்காந்

கடந்த மூன்றாண்டுகளில் எமது கழகம் மாணவர்களிடையே சேவை மனப்பாங்கை வளர்க்கும் முயற்சிகளில் முன்னின்று உழைத்துள்ளதை யாவரும் உணர முடிகின்றது. எமது அங்கத்தவர்கள் தாய்க்கழக வழிகாட்டலுடன் தமது செயற்திட்டங்களை முன்னெடுத்து சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர். எமது மாணவர்களின் நிதி சேகரிப்தற்காக முன்னெடுக்கப்பட்ட செயற்திட்டங்களில் முதன்மையானது மருதடி

விநாயகர் திருவிழாக்கால வாகனப்பாதுகாப்புச் சேவையாகும். இதன் மூலம் திரட்டிய பணத் திலிருந்து பாடசாலைக்கான உபகரணங்களை பெற முடிந்துள்ளது. இவ்வருடம் திரட்டப்பட்ட நிதி பாடசாலை வளவைப் பாதுகாக்கும் மதில் சுவரை நிறுவுவதற்கு ஒருபகுதியாகப் பயன் படுத்தப்படவுள்ளது. சென்ற வருடத்தில் ஒலி பெருக்கிச் சாதனங்கள் பெற எமது நிதி உதவியுள்ளது.

பாடசாலை மட்டத்தில் பரீட்சைக் காலங்களில் மண்டப ஒழுங்குபடுத்தலிலும் மாணவர்களின் ஒழுக்கம் பேணலிலும் எமது மாணவர்கள் தம்மால் இயன்றளவு உதவிகள் புரிந்து வருகின்றனர். கடந்த காலங்களில் எமது தாய் நிறுவனத்தினாலும் வேறுநிறுவனங் களாலும் நடாத்தப்பட்ட பயிற்சிக் கருத்தரங்கு களிலும், போட்டி நிகழ்வுகளிலும் எமது மாணவர்கள் பங்குபற்றி தமது உளப்பாங்கு விருத்தியை மேம்படுத்தியுள்ளனர். இவ்வருடம் செல்வன் சி. றஜித் தலைமையில் எமது கழகம் சிறப்பாகத் தொழிற்பட்டு வருகின்றது. இவ்வருடத்தில் முன்னெடுப்பதற்காக சுற்றாடல் சுகாதாரம் பேணல், வீதி ஒழுங்கைப் பரா மரித்தல், பாடசாலைச் சூழலை அழகுடன் வைத்திருத்தல் போன்ற செயற்திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. கடந்த காலத் தவறு களைப் பாடமாகக் கொண்டு நிகழ்காலத்தில் தொழிற்படுவதற்காக எம்மாற் தீட்டப்பட்ட எதிர்காலத்திட்டங்கள் மாணவ சமூகத்திற்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என நம்புகின்றோம்.

செயலாளர்

J/ MANIPAY MEMORIAL ENGLISH SCHOOL GIRLS GUIDE

யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை

பெண்கள் சாரணியம்

காப்பாளர்:-	திரு. அ.மு. அருணாசலம் (அதிபர்)
வழிகாட்டுனர்கள்:-	திருமதி வி.ஜே.பை. மூர்த்தி
	திருமதி தா. விஷ்ணுகாந்தன்
	திருமதி ம. இளமுருகன்
உதவி ஆசிரியர்கள்-	திருமதி ம. நகுலேஸ்வரன்
	செல்வி சி. முத்துலிங்கம்
குழாம் தலைவர்கள்:-	செல்வி ப. வினோபா
	செல்வி சோ. கார்த்திகா
	செல்வி கி. விக்கினேஸ்வரி
	செல்வி வி. மயூரா
	செல்வி கு. நிசந்தியா

இவ் இயக்கமானது கல்வி பெறும் மாணவர்களது அறிவு, திறன், மனப்பாங்கு, தலைமைத்துவம் ஆகியவற்றை விருத்தி செய்யும் நோக்குடன் நன்கு திட்டமிட்டு செயற் பட்டு வரும் ஒரு மன்றமாகும்.

இம் மன்றமானது பாடசாலையில் நடைபெறும் பல்வேறுவகையான விழாக்களில் தனது நிறைவான பணியை ஆற்றி வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

சாரணிய தலைவர்களிற்கான பயிற்சிப் பாசறையில் பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தியதுடன் பல அனுபவங்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சிரேஸ்ட சாரணியர்கள் எமது பாட சாலையில் இருந்து யாழ்மாவட்ட சாரணிய மன்றத்தில் இணைந்து பல துறைகளிலும் பயிற்சிகளைப் பெற்று பல சேவைகளை ஆற்றி வருகின்றார்கள்.

இவ்வாறு எமது மன்றம், யாழ் மாவட் டம் நிகழ்த்தும் Drill, Camp, Rally போன்ற நிகழ்வுகளில் பங்குபற்றி பல பயிற்சிகளையும் பண்புகளையும் பெற்று வருகின்றமை சிறப் பாகக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இந்த வகையில் எமது மன்றம் வளர்வதற்கு ஆக்கமும், ஊக்கமும் தந்தவர் களாக விளங்குபவர்கள் அமது அதிபர், யாழ்மாவட்ட சாரணிய ஆணையாளர் திருமதி கி. சிவராஜா, எமது மாணவ உறுப்பினர்கள் அனைவருக்கும் இம் மன்றம் நன்றியைத் தெரிவித்து இப்பணியினூடாக எதிர்காலத்தில் சிறந்த சாரணியர்களை உருவாக்கி நாட்டின் நற்பிரஜைகளாக வாழ வழிவகுக்க முடியும் என்ற நம்பிக்கையை தெரிவிக்கின்றோம்.

பெண்கள் சாரணிய மன்றம்

J/ MANIPAY MEMORIAL ENGLISH SCHOOL
HOME SCIENCE UNION
யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை

மனைப்பொருளியல் மன்றம்

காப்பாளர்:- திரு. அ.மு. அருணாசலம்
துணைக்காப்பாளர்:- திருமதி பி. சபாநாதன்
தலைவர்:- செல்வி ஜெ. வைஷ்ணவி
செயலாளர்:- செல்வி சா. நிரோஜனனி
பொருளாளர் :- செல்வன் சி நிரோஜன்

எமது பாடசாலையின் செயற்பாடு களில் பல்வேறு மன்றங்கள் அரும்பணியாற்றி வருகின்றன. அந்த வகையில் தொழில் முன்னி லைப் பாட நெறியில் ஒன்றாக காணப்படும் மனைப்பொருளியல் என்ற பாடம் ஒரு அத்தியா வசியப்பாடமாக விளங்குகின்றது. ஏனெனில் இப்பாடத்தைக் கற்கும் மாணவர்கள் தம் வாழ்க் கைக்குத் தேவையான திறன்களையும், ஆற் றல்களையும் விருத்தி செய்து சுமூகமான ஒரு வாழ்க்கையை அமைப்பதற்கு இப்பாடம் உதவி செய்கிறது.

இதன் பயனாக மாணவர்கள் கற்கும் காலத்திலேயே உணவு சமைத்தல், வீட்டு அலங்காரங்கள், மலர் அலங்கார்ரங்கள், தையல் வேலைகள், கழிவுப் பொருள் பயன் பாடு, சுகநலம் பேணல் போன்ற செயற்பாடு களில் ஈடுபட பெரும் உதவி அளிக்கின்றது. அத்துடன் சுய தொழில் முயற்சியில் திறமை யுடையவர்களை சுய தொழிலில் ஈடுபடு வதற்கும் (உதாரணமாக தையல் வேலைகள், அதிக பலகார வகைகளை உற்பத்தி செய்த லும், விற்பனை செய்தல்) போன்றவற்றை கற்க வழிசமைக்கின்றது. எமது பாடசாலையில் மகுட வாசகமான ''வாழக்கல்'' என்ற வாக்கியத்திற் கேற்ப சமுதாயத்துடன் இணைந்து வாழ இம் மன்றம் வழி சமைக்கின்றது. அத்துடன் மதிய போசனங்களிலும், ஏனைய விழாக்களின் போதும் தமது பங்களிப்பினை முழுமையாக நிறைவேற்றி பாடசாலைக்கும், சமூகத்திற்கும் அருந் தொண்டாற்றுகிறது.

இம் மன்றம் சிறப்புற பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், சேவைக்கால ஆசிரியர் களின் பேருதவியும் எமக்குக் கிடைக்கின்றது. எனவே இம் மன்றச் செயற்பாடுகளை சிறப்புற நடாத்த உதவிய அனைவருக்கும் இம் மன்றம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

-செயலாளர்

J/ MANIPAY MEMORIAL ENGLISH SCHOOL CHILDREN'S LITERARY UNION

யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை

குழந்தை இலக்கிய மன்றம்

காப்பாளர்:- திரு. அ.மு. அருணாசலம்
பொறுப்பாசிரியர்கள்:- திரு து. சிவஞானம்
திருமதி க. பாலகிருஷ்ணர்
திருமதி பா. உதயகுமார்
தலைவர்:- செல்வி மு. தனுஜா
செயலாளர்:- செல்வன் டா. யோனதன் பிரகாஷ்
பொருளாளர் :- செல்வன் அ. ரெரன்ஸ்

குழந்தை இலக்கிய மன்றம் மாதந் தோறும் தனது செயற்பாடுகளைச் சிறப்பாகச் செய்துவருகிறது. ஆரம்பக் கல்வி மாணவரி டையே மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொண்டுவரும் முகமாக இயங்கி வருகிறது. மாணவருடைய நிகழ்ச்சிகள் ஆசிரியர்களால் சிறப்பாக வழிகாட்டப்படு கின்றது. இம் மன்றச் செயற்பாடு மூலம் தமிழ்த் தினப் போட்டிகளில் 2000, 2003ல சிறுவர் அரங் கில் கோட்ட மட்டத்தில் முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டு வலயப் போட்டிக்குத் தெரிவாகி யது என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு ''அழகெல என்ற நிகழ்ச்சித் திட்டத்தில் தேசிய கல்வியில் கல்லூரியில் நடைபெற்ற சிறுவர் அரங்கில் இரண்டாவது இடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. குழந்தை இலக்கிய மன்றத் தின் மூலம் எமது குழுச்செயற்பாடுகளில் சிறப்பாக இயங்குவதுடன் தங்களது ஆளுமை விருத்தியைப் பெற்று சிறந்த அறிவு, திறன், மனப்பாங்குகளைப் பெறுகிறார்கள் என்பது சிறப்பிற்குரியதாகும்.

J/ MANIPAY MEMORIAL ENGLISH SCHOOL

SCHOOL CO-OPERATIVE SUPPLY SOCIETY - Reg. No.1568

யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை

பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம்

காப்பாளர் :- திரு. அ.மு. அருணாசலம் (அதிபர்)
ஆசிரிய ஆலோசகர்:- திரு. சொ. ஜெயவீரசிங்கம்
திரு. மு.ஸ்ரீ. தங்கராஜா
செல்வி ப. ரதிதேவி

''கூட்டுறவு நாட்டுயர்வு''
''கூடி உழைத்தால் கோடி நன்மை''

என்பதற்கமைய ''மக்கள் தமது சமூக பொருளாதார, கலை, கலாச்சார வளர்ச்சி கருதி சம உரிமையும், கடமையும் என்ற அடிப்படையில் தாமாக முன்வந்து ஒன்று சேருதல்'' கூட்டுறவு ஆகும். இத்தத்துவத்தின் பிரகாரம் உருவாக்கப்படுகின்ற நிறுவனங்கள் கூட்டுறவு நிறுவனங்கள் ஆகும். இவை நோக்கம் கொண்டவை.

அந்த வகையில் எமது கல்லூரி மாணவர்களது தேவைகளை நிறைவு செய்யும் சேவை நோக்குடன் 1964ஆம் ஆண்டு எமது பாடசாலை முன்னை நாள் ஆசிரியர் திரு. W.G. அன்னப்பா அவர்களது உன்னத முயற்சியினால் இப்பாடசாலைக் கூட்டுறவு விநியோகச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை இச் சங்கம் தனது செயற்பாட்டை திருப்திகரமாகச் செய்துவருகின்றது. மாணவர்களுக்கான கற்றல் சம்பந்தமான அனைத்து உபகரணங்களையும் தனியார் வியாபார நிறுவனங்களைவிட மிகக் குறைந்த விலையில் வழங்குவதோடு மாத்திரமன்றி, பாடசாலை அலுவலகப் பாவனைக்கென காகிதாதிகள் எழுது கருவிகளையும் இச்சங்கம் வழங்கி சேவையாற்றி வருகின்றது. 1995ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வின்போது சங்கத்தினுடைய சொத்துக்கள் இழக்கப்பட்டன. இருப்பினும் அதிபரினதும், ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் பெருமுயற்சியினால் இழப்புக்கள் மீண்டும் ஈடுசெய்யப்பட்டு மீண்டும் சிறப்பாக சேவையாற்றி வருவது கண்கூடு. 2001, 2002, 2003 ஆகிய காலப்பகுதிகளில் ஆசிரியர்கள் திரு.சி. இராசரட்ணம், திரு.சொ. ஜெயவீரசிங்கம், திரு. மு. சிறி. தங்கராஜா ஆகியோர் ஆசிரிய ஆலோசகர்களாக இருந்து சிறந்த முறையில் வழிநடத்தினர். அத்துடன் 10 மாணவ அங்கத்தவர்கள் வருடந்தோறும் இச் சங்கத்தை நிர்வகித்து வருகின்றனர். இந்த வகையில் 2001ஆம் ஆண்டில் மாணவன் சி.சுரேஸ், 2002ஆம் ஆண்டில் மாணவன் அ. விஜித்திலக்சன் 2003ஆம் ஆண்டில் மாணவன் செ.யசின்குமார் ஆகியோர் கூட்டுறவுப் பணியாளர்களாக இருந்து சிறப்பாக சேவையாற்றினர். அந்த வகையில் இனிவரும் காலங்களிலும் இச் சங்கம் கூட்டுறவுக் கொள்கைக்கமைய சிறப்பான சேவைகளை ஆற்றி அங்கத்தவர்களது தேவைகளை பூர்த்தி செய்யும் என்பது வெள்ளிடைமாலையாகும்.

-பொறுப்பாசிரியர்

J/ MANIPAY MEMORIAL ENGLISH SCHOOL OLD STUDENTS ASSOCIATION

யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை

பழைய மாணவர் சங்கம்

எமது பழைய மாணவர் சங்கம் கடந்த நான்கு ஆண்டுகளாக மிகவும் தொலைநோக்குடன் பாடசாலையின் பௌதீக வளங்களை மேம்படுத்துவதில் மெமோறியல் அன்னையின் மைந்தன் அதிபர் திரு. அ.மு. அருணாசலம் அவர்களின் அயராத முயற்சிகளிற்கு தோள் கொடுத்து உறுதுணையாக இணைந்து செயலாற்றி வருகிறது. ஐரோப்பிய நாடுகளிலும் கனடாவிலும் தனது கிளைச் சங்கங்களை நிறுவியமை தாய்ச் சங்கத்தின் செயற்பாட்டை மேலும் வலுவூட்டியது.

பாடசாலையின் நீண்ட கால வளர்ச்சிக்கு ஓர் பாரிய தடைக்கல்லாக இருந்த இட வசதிக் குறைபாட்டை நீக்குவதற்காக எமது பழைய மாணவர் சங்கமும் வெளிநாடுகளில் உள்ள கிளைச்சங்களும் இணைந்து மேற் கொண்ட காணிக்கொள்வனவுகள் யாவுமே மெமோறியல் அன்னையின் வரலாற்றில் ஒரு வரலாற்றுக் கடமைகள் என்றால் மிகையாகாது. 2001ல் பாடசாலையின் வடகிழக்கு முலையில் அமைந்துள்ள 14 பரப்புக் காணி கொள்வனவு செய்வதற்காக பழைய மாணவர் சங்கமானது மானிப்பாய் பிரதேச சபையின் கலையரங்கில் ''ஞானசவுந்தரி'' நாடக நிகழ்வினை நடாத்தியது. இந்த நிதி சேகரிப்பில் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் எனப் பல்தரப்பட்ட மக்களிடம் இருந்தும் நிதி சேகரிக்கப்பட்டது. இந்த நிதி சேகரிப்பில் மக்கள் மனமுவந்து நிதியுதவி செய்து, பாடசாலையின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக இருந்தமை ஓர் சிறப்பம்சமாகும். மேற்படி காணி கொள்வனவிற்கு மெமோறியல் அன்னையின் ஆசிரியர் குழாம் மனமுவந்து முற்பண உதவி நல்கியமை. இங்கு சிறப்பாகக் குறிப்பிட வேண்டிய தொன்றாகும். இதற்கு பழைய மாணவர் சங்கம் மேற்படி ஆசிரியர்களிற்கு சிரம் தாழ்த்தி நன்றி கூறுகின்றது.

அடுத்ததாக மெமோறியல் அன்னையின் மடியில் வளர்ந்து இன்று சுவிஸ் நாட்டில் தொழிலதிபராக விளங்கும் திரு. மகாராஜா மகாவேந்தன் அவர்களின் பேருதவியை நன்றியுடன் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். மெமோறியல் அன்னையின் எல்லையில் அமைந்திருந்த திருமதி ச. யோகரட்ணம் அவர்களிற்கு சொந்தமான 10 பரப்புக்காணியை கொள்வனவு செய்ய ரூபா பதினைந்தரை இலட்சத்தை திரு. ம. மகாவேந்தன் அவர்கள் தந்துதவினார்கள். 2002 ஆம் ஆண்டில் நடைபெற்ற வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தில் திரு. ம. மகாவேந்தன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வளவு பெருந் தொகையை தந்துதவிபுரிந்த அன்னையின் மைந்தனிற்கு மெமோறியல் அன்னையின் குடும்பத்தினரின் உளப்பூர்வமான நன்றிகள்.

அடுத்ததாக் சிம்மக்குரலோன் முன்னாள் அதிபர் அமரர் சுந்தரதாஸ் அவர்களின் மனைவி திருமதி ருக்மணி சுந்தரதாஸ் அவர்களைப் பற்றி குறிப்பிட வேண்டும். திருமதி ருக்மணி சுந்தரதாஸ் அவர்கள் பாடசாலைக்கு வழங்கிய தொலைபேசிச் சேவையானது எப்பொழுதும் அமரர் சுந்தரதாஸ் அவர்களின் குரலாகவே ஒலித்துக் கொண்டிருக்கிறது. அத்துடன் திருமதி சுந்தரதாஸ் அவர்கள் கனடா பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் பாடசாலை மைதானத்தின் கிழக்குப் புறமாக 2 ½ பரப்புக் காணியை கொள்வனவு செய்து தந்துள்ளார். இவ்விடத்திலேயே கனடா பழைய மாணவர் சங்கத்தினால் ''சுந்தரதாஸ்

ஞாபகார்த்த விளையாட்டரங்கு" அமைக்கப்பட வுள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது. திருமதி ருக்மணி சுந்தரதாஸ் அவர்களிற்கும் கனடா பழைய மாணவர் சங்கத்திறகும் எமது மனப் பூர்வமான நன்றிகள்.

மெமோறியல் அன்னையின் மைந்தன் அதிபர் திரு. அ.மு. அருணாசலம் அவர்களைப் பற்றிக் குறிப்பிடவிட்டால் இவ்வறிக்கை நிறைவுறாது. அதிபர் அவர்களின் தலைசிறந்த தலைமைத்துவத்தின் கீழ் மெமோறியல் அன்னையின் மாணவர்கள் கல்வித்துறையிலும் விளையாட்டுத்துறையிலும் கலைத்துறையிலும் பதித்து வரும் முத்திரைகள் எண்ணிலடங்கா. பாடசாலைககு G.T.Z. ஆல் வழங்கப்பட்ட மலசலகூடத் தொகுதிகள் அமைத்தல், விளையாட்டு மைதானத்தின் வடக்கு, கிழக்கு புற மதில்களை கட்டி முடித்தல் போன்ற செயற்பாடுகள் அதிபர் அவர்களால் ஆச்சரியப்படக்கூடிய வகையில் நிறைவு கண்டிருப்பதை குறிப்பிட விரும்புகிறேன். அதிபர் அருணாசலம் அவர்களின் சேவைகள் யாவுமே மெமோறியல் அன்னையின் அத்தியாத்தின் வரலாற்றுப் பொக்கிசங்கள் என்றால் மிகையாகாது.

எமது பழைய மாணவர்சங்கத்தின் காப்பாளர்களில் ஒருவரும் பதில் நீதிபதியுமான சட்டத்தரணி இரா. வசந்தசேனன் அவர்கள் மெமோறிலிற்கு இதுவரை எழுதப்பட்ட நான்கு காணிகளின் எழுத்துக்கான ஊதியம் எதுவும் பெறாது எமது சங்க வளர்ச்சிக்கு பெரும் துணையாக இருந்து வருகிறார். அவர் மெமோறியலின் வாழ்விலும் வளத்திலும் பின்னிப் பிணைந்திருக்க இறையருள் துணையிருக்கட்டும்.

இறுதியாக பழைய மாணவர் சங்கத்தின் வளர்ச்சிக்கு உருதுணையாக இற்றை வரை இருந்த , இருந்து வருகின்ற அனைத்து அன்பு உள்ளங்களிற்கும் நன்றி கூறி எமது செயற்பாடுகளிற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து தேவையான பொழுது அறிவுரை நல்கி வரும் நிர்வாக உறுப்பினர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், அனைவருக்கும், மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் மெமோறியல் அன்னையின் புகழ் வானளவு உயர எம்மை முழுமையாக அர்ப்பணிக்க இறை ஆசி வேண்டி செயலறிக் கையை நிறைவு செய்கிறேன்.

நன்றி

செயலாளர்

திரு. இரா வாசுதேவன்

J/ MANIPAY MEMORIAL ENGLISH SCHOOL SCHOOL DEVELOPMENT ASSOCIATION

யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

மானிப்பாய் மெமோறியல் நவோதயா கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கமானது கல்லூரியின் ''மெமோறியல் மலர் 7"ற்கு தனது செயலறிக்கையை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றது. பாடசாலை அபிவிருத்திச் சங்கமானது மெமோறியல் அன்னையின் வளர்ச்சியில் தன்னை முற்றாக அர்ப்பணித்துள்ளது. அத்துடன் அதிபரின் அயராத முயற்சிகளிற்கு தோள் கொடுத்து பூரண ஒத்துழைப்ப நல்கி வருகின்றது.

கடந்த 4 வருடங்களில் பாடசாலையின் தேவைகளை பூர்த்தி செய்வதில் தன்னால் இயன்ற உதவிகளை அபிவிருத்திச் சங்கம்

செய்து வருகிறது. வடகிழக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்பட்ட 6 இலட்சம் ரூபா நிதியைக் கொண்டு இரண்டு தளங்களைக் கொண்ட மாடிக்கட்டிடத்தின் கீழ்ப்பகுதி முற்றாக கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறே பாடசாலை மாணவர்களின் நீண்ட நாள் குறைபாடான மலசல கூடவசதியின் மையை நீக்கும் பொருட்டு G.T.Z. அமைப்பின் உதவியுடன் ஆண்களிற்கும், பெண்களிற்குமாக தனித்தனியாக ரூபா ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் செலவில் இரு மலசலகூடத் தொகுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

பாடசாலையின் நீண்டநாள் தேவை யான ஒலிபெருக்கிச் சாதனங்களை ரூபா எண்பதாயிரம் செலவில் கொள்வனவு செய்து மெமோரியல் அன்னைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள் ளது. அதிபர் அலுவலகத்தில் அதிபருக்குரிய அலுவலக மேசை, கதிரை என்பன ரூபா இருபதாயிரத்துக்கு கொள்வனவு செய்யப்பட்டு அலுவலகம் அழகூட்டப்பட்டுள்ளது. பாடசாலை அபிவிருத்திச் சங்கமானது மாணவர்களின் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு அவ்வவ் போது தேவையான விளையாட்டு உபகரணங் களை மாணவர்களிற்கு வழங்கி வருகிறது. அதே போல் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் இடம் பெற்ற தமிழ்மன்ற விவாதப் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களின் போக்குவரத்து செலவினை பாடசாலை அபி விருத்திச் சங்கமே பொறுப்பேற்றுக் கொண்டது. பாடசாலை பரிசளிப்பு விழா, பாடசாலைத் தினம், இல்ல மெய்வல்லுனர் போட்டி, ஆசிரியர் தினம் ஆகிய நிகழ்வுகளில் அபிவிருத்திச் சங்கமானது சகல வழிகளிலும் தன்னால் இயன்ற சேவைகளை ஆற்றிவருகின்றது.

எல்லாவற்றிற்கும் மேலாக 2002, 2003, 2004ம் ஆண்டுகளில் பொதுச்சபைக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக ஒரு குடும்பத்தில் இருந்து தவணை ஒன்றிற்கு ரூபா இருநூறு வீதம் சேகரிக்கப்பட்டு பெறப்படும் கல்வி அபிவிருத்தி நிதியில் இருந்து மெமோ றியல் அன்னையின் மடியில் தவழும் மாணவர் களுக்கு தன்னலம் கருதாது சேவையாற்றி வரும் தொண்டராசிரியர்களுக்கு தன்னால் இயன்ற சிறு தொகையை மாதம் தோறும் உபகாரப்படியாக பாடசாலை அபிவிருத்திச்சங் கம் வழங்கி வருகிறது. இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கும் அனைத்து மெமோறியல் அன்னையின் பெற்றோர் சமூகத்திற்கு பாட சாலை அபிவிருத்திச் சங்கமானது சிரம் தாழ்த்தி நன்றியறிதலைத் தெரிவிக்கின்றது.

நவோதயா பாடசாலைகள் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட எமது பாடசாலைக்கு தன்னலம் கருதாது இன்று வரை சேவையாற்றி வரும் அதிபர் அ.மு. அருணாசலம் அவர்கள் தனது பதவியின் இறுதிக்காலத்தில் உள்ளார். அவர் இப்பாடசாலையில் ஒரு மாணவனாக, ஆசானாக, உப அதிபராக, தன்னிகரில்லா அதிபராக இருந்திருக்கிறார். அதிபர் அவர்கள் இப்பாடசாலைக்கு ஆற்றிய பணிகள் எண்ணி லடங்கா. அவை யாவுமே மெமோறியல் அன்னையின் வரலாற்றின் ஒரு பொக்கிசங்கள். அவரை மெமோறியல் அன்னையின் பாட சாலை அபிவிருத்திச் சங்கம் மனமார வாழ்த்து கின்றது. அவரின் சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் செயலாற்றிவரும் உப அதிபர், இணை உப அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் நன்றியுடன் சிரம் தாழ்த்தி நன்றி தெரிவிக்கின்றது.

இறுதியாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயற்பாடுகளிற்கு உறுதுணையாக நின்றுவரும் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரிற்கும் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன் நவோதயாக் கல்லூரியாகத் திகழவுள்ள மெமோறியல் அன்னையின் செயற் பாடுகள் அனைத்திற்கும் உறுதுணையாக என்றென்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இருக்கும் என உறுதிகூறி எனது செயலறிக் கையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி

செயலாளர்

க. துரைசிங்கம்

பேஜ் இல்லம் - 2004

காப்பாளர்	:-	திரு. அ.மு. அருணாசலம்
பொறுப்பாசிரியர்கள்	:-	திரு. இரா.வாசுதேவன்
		திருமதி சு. அருள்வதனன்
		திருமதி கி. லோகதாசன்
		திருமதி ஜெ. வரதராஜன்
இல்லத் தலைவன்	:-	செல்வன் த. கஸ்ரோ
இல்லத் தலைவி	:-	செல்வி சி. சிவசிறி
விளையாட்டுத் தலைவன்	:-	செல்வன் ரா. பிரதீபன்
விளையாட்டுத் தலைவி	:-	செல்வி செ. அனுசகுமாரி

பேஜ் இல்லமானது பாடசாலையில் காணப்படும் நான்கு இல்லங்களிலும் ஒன்றாகும். பேஜ் இல்லம் 245 மாணவர்களைக் கொண்டு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. மாணவர்கள் வெற்றி தோல்வியைக் கண்டு சளைக்காது ஒவ்வொரு ஆண்டும் எல்லா நிகழ்வுகளிலும் பங்கு பற்றி தமது திறனை வளர்த்து கொள் கின்றார்கள். மைதான, சுவட்டு, கலை நிகழ்வுகளிலும் பங்குபற்றி வெற்றியீட்டி தமது ஆளுமைகளையும், திறமைகளையும் வெளிப படுத்தி கொண்டிருக்கின்றார்கள்.

2001ஆம் ஆண்டு செல்வன் செ.கணேந் திரன் இல்லத் தலைவனாகவும், செல்வி ம.மஞ்சுளா இல்லத் தலைவியாகவும், செல்வன் அ.டெசியந்தன் விளையாட்டுத் தலைவனாகவும், செல்வி ச. கணேசியா அவர்கள் விளையாட்டுத் தலைவியாகவும், பொருளாளராக செல்வி ச.சிறிஜெனனி அவர்களும் கடமையாற்றி னார்கள். பேஜ் இல்லமானது வலைப்பந்து, கரப்பந்து, உதைபந்தாட்டம் போன்ற விளை யாட்டுக்களால் சிறப்பான இடங்களையும் மற்றும் கலைத்திறன் நிகழ்சிகளில் பங்கு பற்றி சிறப்பான இடங்களையும் பெற்றது. மைதான, சுவட்டு, நிகழ்சிகளில் வீர வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டதுடன். இல்லம் சிறப்பான இடத்தைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

2002ஆம் ஆண்டு செல்வன் ம.பிரசன்னா அவர்கள் இல்லத்தலைவ னாகவும், செல்வி ம.சர்மிளா அவர்கள் இல்லத் தலைவியாகவும் செல்வன் அ. அருள் நேசன் விளையாட்டுத் தலைவனாகவும், செல்வி த.றமீனா பொருளாளராகவும் கடமை யாற்றினார்கள். இக்காலத்தில் கலைத்திறன் நிகழ்ச்சிகளில் சிறப்பாக இடங்களைப் பெற்றுக் கொண்டதுடன் இல்லங்களிற்கிடையே நடாத் தப்பட்ட நாடகப் போட்டிகளிலும் வெற்றி பெற்றது. அத்துடன் இல்ல அலங்காரத்திலும் சிறப்பான இடத்தைக் தட்டிக் கொண்டது மற்றும் மைதான சுவட்டு நிகழ்சிகளிலும் பங்குபற்றி வெற்றியீட்டியது குறிப்பிடத்தக்கது.

2003ஆம் ஆண்டு இல்லத் தலை வனாக செல்வன் சை.பற்றிக்சசிகரன் அவர் களும், இல்லத் தலைவியாக செல்வி ப.பவித்திரன் அவர்களும், விளையாட்டுத் தலைவனாக செல்வன் ந.கபிலேஷ் அவர் களும், விளையாட்டுத் தலைவியாக செல்வி நா. வேலரசி அவர்களும் பொருளாராக து.சுகந்தன் அவர்களும் கடமையாற்றினார்கள் இல்ல மெய்வல்லுனர் போட்டியை ஒட்டி நடாத் தப்பட்ட கரப்பந்து, வலைப்பந்து, உதைபந்து ஆகிய விளையாட்டுக்களில் சிறப்பான இடங் களைப் பெற்றுக் கொண்டனர். இதனைவிட

அணிநடை உடற்பயிற்சி இல்ல அலங்காரம் மற்றும் இல்ல நிலை என்பவற்றில் சிறப்பான இடத்தை எய்தி வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டதுடன், வீதி ஓட்டம், மரதன் ஓட்டம் ஆகிய நிகழ்வுகளில் பங்குபற்றி வெற்றியும் ஈட்டிக்கொண்டது அத்துடன் பேஜ் இல்லம் 2003ஆம் ஆண்டு சிறபான ஓர் இடத் தைப் பெற்றுக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

இல்லத் தலைவர்கள்

அழகர் இல்லம் - 2004

காப்பாளர்:-	திரு. அ.மு. அருணாசலம்
பொறுப்பாசிரியர்கள்:-	திரு. கு. சோமஸ்கந்தமூர்த்தி
	திருமதி ம. நகுலேஸ்வரன்
	திருமதி சி. சோமநாதன்
	திரு. இ.யோ. லெஸ்லி
இல்லத் தலைவன்:-	செல்வன் தி. விஜயேந்திரன்
இல்லத் தலைவி:-	செல்வி தெ. சரிமிளா
விளையாட்டுத் தலைவன்:-	செல்வன் யோ. அன்ரனி ஜெயச்சந்திரன்
விளையாட்டுத் தலைவி:-	செல்வி வை. வர்சிகா
பொருளாளர்:-	செல்வி ஸ்ரீ. றொசானி

எமது இல்லம் பாடசாலையிலுள்ள நான்கு இல்லங்களுள் ஒன்றாக விளங்கு கின்றது. பாடசாலையில் நடைபெறும் இல்ல விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி மாண வர்கள் பெறுவதில் எமது இல்லம் கருத்தூன்றி யுள்ளது. எமது இல்லத்தில் 350ற்கு மேற்பட்ட மாணவர்கள் அங்கம் வகிக்கின்றார்கள். வருடா வருடம் நடைபெறும் விளையாட்டுப் போட்டி களில் அழகர் இல்லத்தைச் சார்ந்த மாண வர்கள் தோல்விகளைக் கண்டு சளைக்காது போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.

2001ஆம் ஆண்டு அழகர் இல்லத்தில் செல்வன் சி.மயூரன் இல்லத்தலைவனாகவும், செல்வி செ.ரூபினி இல்லத் தலைவியாகவும், செல்வன் ச. நிர்மலன் விளையாட்டுத் தலைவ னாகவும் செல்வி ரேணுகா விளையாட்டுத் தலைவியாகவும் அங்கம் வகித்தனர். இந்தக் காலத்தில் எம்து இல்லமானது கலைத்திறன் போட்டிகள், மெய் வல்லுனர் நிகழ்சிகள் மற்றும் ஏனைய நிகழ்சிகள் எல்லாவற்றிலும் பங்கு கொண்டு மாணவர்களை வெற்றிவாகை சூட வைத்து உயர் திறமை காட்டிய நிகழ்வாக நாடகப் போட்டி காணப்படுகின்றது.

2002ஆம் ஆண்டு செல்வன் த.றெஜிக் குமார் இல்லத் தலைவனாகவும் செல்வி சி. வசந்தி இல்லத் தலைவியாகவும். செல்வன் து. கோபிகிருஷ்ணன் விளையாட்டுத் தலை வனாகவும், செல்வி யே. அனற்றொசானி விளையாட்டுத் தலைவியாகவும், செல்வன் உ. ஐங்கரன் அவர்கள் பொருளாளராகவும் கடைமை ஆற்றினார். இக் காலகட்டத்தில் எமது இல்லமானது கலைத்திறன் போட்டி களிலும் மெய்வல்லுனர் சுவட்டு நிகழ்வு களிலும் சிறப்பிடம் வகித்திருப்பது குறிப் பிடத்தக்கதாகும்.

2003ஆம் ஆண்டு செல்வன் இ. றொமியஸ் நியூட்டன் அவர்கள் இல்லத்தலைவனாகவும் செல்வி ஜெ. விஜிதா அவர்கள் இல்லத் தலைவியாகவும், செல்வன் செ. பிரதீபன் அவர்கள் விளையாட்டுத் தலைவனாகவும். செல்வி பா. சங்கீதா அவர்கள் விளையாட்டுத் தலைவியாகவும் செல்வன் த. விக்கினேஸ்வரன் அவர்கள் பொருளாளராகவும் கடமையாற்றினார். இக் காலகட்டத்தில் அழகர் இல்லமானது கலைத்திறன் போட்டிகளில் சிறப்பிடத்தைப் பெற்றபோதும் விளையாட்டுக்களிலும் எமது இல்லம் சிறப்பிடம் வகித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். தோல்விகளைக் கண்டு துவண்டு போகாமலும் வெற்றிகளால் இறுமாப்பு அடையாமலும் எமது மாணவர்களிடையே விளையாட்டு மனோபாவத்தை வளர்த்து பன்முக ஆளுமையை விருத்தி செய்ய எமது இல்லம் தொடர்ந்தும் செயற்பட்டுவரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இல்லத் தலைவர்கள்

பிக்னல் இல்லம் - 2004

காப்பாளர்:-	திரு. அ.மு. அருணாசலம்
பொறுப்பாசிரியர்:-	திரு. நா. பாலகிருஷ்ணன்
	திரு. சிறி. தங்கராசா
	திருமதி ப. முருகதாஸ்
	திருமதி கா. சர்வேஸ்வரசர்மா
	திருமதி க. பாலகிருஷ்ணர்
	செல்வி க. செல்லத்துரை
	திருமதி தி. தவராசா
	திருமதி கு. சிவநடராஜா
இல்லத் தலைவன்:-	செல்வன் கு. ரமேஸ்குமார்
இல்லத் தலைவி :-	செல்வி ஆ. டர்சிகா
விளையாட்டுத் தலைவன்:-	செல்வன் மு. ரஜீவ்
விளையாட்டுத் தலைவி:-	செல்வி ம. நிசாமதனி
பொருளாளர்:-	செல்வி ச. சர்மிளா

